[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவினாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட ராஜ்யத்தின் கீழோ அதன் ஆட்சிப் பரப்பில் உள்ள ஸ்தல அல்லது மற்றைய அதிகார நிலையத்தின் கீழோ" என்பதற்கும் "அந்த ராஜ்யத்திற்குள் இருப்பிடம் இருக்க வேண்டியது பற்றிய எவ்விதியையும்" என்பதற்கும் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவு 19.

சுதந்திர உரிமை

பேச்சுச் சுதந்திரம் வகையரா பற்றிய உரிமைகளின் பாதுகாப்பு.

[1] 19. (1) குடிகள் எல்லோரும்—

(அ) பேச்சு, பிற வெளியீடு இவற்றில் சுதந்திரத்திற்கும்,

(ஆ) அமைதியாகவும், ஆயுதமின்றியும் கூட்டம் கூடவும்,

(இ) கழகங்களும், சங்கங்களும் அமைக்கவும்,

(ஈ) இந்தியாவின் ஆட்சிப்பரப்பு முழுவதிலும் தடையின்றிச் செல்லவும்,

(உ) இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் எந்தப் பாகத்திலும் வசிக்கவும், தங்கி வாழவும்,

(ஊ) சொத்துக்களைச் சம்பாதிக்கவும், வைத்திருக்கவும், வினியோகப்படுத்தவும்,

(எ) எத் தொழிலையும் மேற்கொள்ளவும், எந்த அலுவலையும், வியாபாரத்தையும், வேலையையும் நடத்தவும்,

உரிமை உடையவர் ஆவார்.

[2][(2) (1)-ம் பகுதியின் (அ) உட்பகுதியில் உள்ளது எதுவும், அந்த உட்பகுதியிலுல் அளிக்கப்பட்ட உரிமையை ஆளுதல் பற்றி, ராஜ்யத்தின் உறுதி நிலை அந்நிய ராஜ்யங்களுடன் தேச உறவுகள், பொதுஜன அமைதி, நல்லொழுக்கம் அல்லது நன்னெறி இவற்றின் பொருட்டாவது அல்லது நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது குற்றம் செய்யத் தூண்டுதல் இவை விஷயமாகவாவது நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கும் அளவில் இப்போதுள்ள எச் சட்டத்தின் பிரயோகத்தையும் பாதிக்காது, அத்தகைய சட்டத்தை ராஜ்யம் செய்வதைத் தடுக்கவும் மாட்டாது].

(3) மேற்சொன்ன பகுதியின் (ஆ) உட்பகுதியில் உள்ளது எதுவும், அந்த உட்பகுதியிலுல் அளிக்கப்பட்ட உரிமையை ஆளுவது பற்றி, பொது ஜன அமைதியின்பொருட்டு நியாயமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் இப்போதுள்ள

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்துக்குப் பிரயோகப்படுகையில், 19-வது பிரிவு 1954-ம் வருஷம் மே மாதம் பதினன்காம் தேதியிலிருந்து ஐந்து வருஷ கால அளவுக்கு அடியிற்கண்ட மாறுதல்களுக்கு உட்பட்டிருக்கும் :—

"(i) (3)-ம், (4)-ம் பகுதிகளில் "பொதுஜன அமைதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ராஜ்யத்தின் உறுதி நிலை அல்லது" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும் ;

(ii) (5)-ம் பகுதியில், "அல்லது ஓர் அனுபந்த மலைஜாதியினரின் நலனகளைப் பாதுகாத்தற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது ராஜ்யத்தின் உறுதி நிலை நலத்திற்காக" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும் ;

(iii) அடியிற் கண்ட புதிய பகுதியைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

'(1), (2), (3), (4), (5)-ம் பகுதிகளில் வருகிற "நியாயமான கட்டுப்பாடுகளை" என்னும் சொற்களுக்குப், "பொருத்தமான சட்டமன்றம் நியாயமெனக் கருதுகிற கட்டுப்பாடுகளை" என்று அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்."

[2] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவினுல் பிரதம (2)-ம் பகுதிக்குப் பதிலாக (முன்னதான தேதியிலிருந்தே) அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவு 19.

எச் சட்டத்தின் பிரயோகத்தையும் பாதிக்காது ; அத்தகைய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் சட்டத்தை ராஜ்யம் செய்வதையும் அது தடைப்படுத்தாது.

(4) மேற்சொன்ன பகுதியின் (இ) உட்பகுதியில் உள்ளது எதுவும், அந்த உட்பகுதியினால் அளிக்கப்பட்ட உரிமையை ஆளுவது பற்றி, பொது ஜன அமைதி அல்லது நல்லொழுக்கத்தின் பொருட்டு, நியாயமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் இப்போதுள்ள எச் சட்டத்தின் பிரயோகத்தையும் பாதிக்காது ; அத்தகைய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் எச் சட்டத்தையும் ராஜ்யம் செய்வதை அது தடைப்படுத்தவும் மாட்டாது.

(5) பொது ஜனங்களின் நலத்திற்காக அல்லது ஓர் அனுபந்த மலைஜாதியினரின் நலன்களைப் பாதுகாத்ததற்காக, அந்த உட் பகுதிகளினால் அளிக்கப்பட்ட உரிமைகளில் எதையேனும் ஆளுவதுபற்றி நியாயமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் இப்போதுள்ள எச்சட்டத்தின் பிரயோகத்தையும் மேற்சொன்ன பகுதியின் (ஈ), (உ), (ஊ) உட்பகுதிக்களில் உள்ளது எதுவும் பாதிக்காது ; அத்தகைய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் எச் சட்டத்தையும் ராஜ்யம் செய்வதை அது தடைப்படுத்தவும் மாட்டாது.

(6) பொது ஜனங்களின் நலத்திற்காக அந்த உட்பிரிவால் அளிக்கப்பட்ட உரிமையை ஆளுவதுபற்றி நியாயமான கட்டுப் பாடுகளை ஏற்படுத்தும் இப்போதுள்ள எச் சட்டத்தின் பிரயோகத்தையும் மேற்சொன்ன பகுதியின் (எ) உட்பகுதியில் உள்ளது எதுவும் பாதிக்காது ; அத்தகைய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் எச் சட்டத்தையும் ராஜ்யம் செய்வதை அது தடைப்படுத்தவும் மாட்டாது ; குறிப்பாக, [1][மேற்சொன்ன உட்பகுதியில் உள்ளது எதுவும்—

(i) எத்தொழிலையும் மேற்கொள்வதற்கோ எந்த அலுவல், வியாபாரம் அல்லது வேலையை நடத்துவதற்கோ அவசியமான தொழில் முறையை அல்லது கைத்திறனைப்பற்றிய தகுதிகளையேனும், அல்லது

(ii) ராஜ்யமோ அல்லது ராஜ்யத்திற்குச் சொந்தமான அல்லது அதன் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு கார்ப்பொரேஷனே, குடிகள் எல்லோரையுமாவது அல்லது அவர்களில் ஒரு பகுதியினரை மட்டுமாவது விலக்கியோ மற்றப்படியோ, எந்த வியாபாரம், வேலை, கைத்தொழில் அல்லது சேவையையும் நடத்துவதையேனும்,

பொறுத்த அளவில் இப்போதுள்ள எச் சட்டத்தின் பிரயோகத்தையும் பாதிக்காது, அல்லது அவை சம்பந்தமான எச் சட்டத்தையும் ராஜ்யம் செய்வதைத் தடுக்கவும் மாட்டாது.]

---

[1] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவினால், சில பிரதம சொற்களுக்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப் பட்டது.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவுகள் 20–22.

குற்றப்படுத்தப்படுவது பற்றிப் பாதுகாப்பு.

20. (1) குற்றம் எனச் சாட்டிய எச் செயலேயாவது செய்யும் காலத்தில் அமுலிலுள்ள சட்டத்தை மீறியதற்காகவன்றி எவரும் குற்றப்படுத்தப்படலாகாது ; அன்றியும் குற்றம் செய்த காலதில் அமுலிலுள்ள சட்டத்தின்கீழ் விதித்திருக்கக் கூடிய தண்டனையை விட அதிகமான தண்டனைக்கு எவரும் உள்ளாக்கப்படலாகாது.

(2) ஒரே குற்றத்திற்காக ஒரு முறைக்கு மேல் எவரும் வழக்குத் தொடரப்பட்டுத் தண்டிக்கப்படலாகாது.

(3) குற்றம் சாட்டப்பட்ட எவரும் தமக்கு விரோதமாகச் சாட்சியாயிருக்கும்படி கட்டாயப்படுத்தப்படலாகாது.

உயிருக்கும் சுவாதீனத்திற்கும் பாதுகாப்பு.

21. சட்டத்திலுல் ஏற்படுத்திய நடைமுறைப்படியன்றி ஒருவருடைய உயிரையோ சுவாதீனத்தையோ பறிக்கலாகாது.

கைது செய்யப்படுதல் பாதுகாவலில் வைக்கப்படுதல் இவற்றினின்றும் பாதுகாப்பு.

22. (1) கைது செய்யப்பட்ட எவரும் அப்படிக் கைது செய்ததன் காரணங்களை இயன்ற விரைவில் அறிவிக்கப் பெறுமல் பாதுகாவலில் வைக்கப்படலாகாது ; அன்றியும் தாமே தேர்ந்தெடுத்த சட்டவாதி ஒருவரைக் கலந்து கொள்ளவும் அவரைக்கொண்டு எதிர்வாதம் செய்யவும் உள்ள உரிமை எவருக்கும் மறுக்கப்படலாகாது.

(2) கைது செய்து பாதுகாவலில் வைக்கப்பட்ட எவரும், கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து மாஜிஸ்டிரேட்டுக் கோர்ட்டுக்குச் செல்வதற்கான காலம் நீங்கலாகக் கைது செய்ததிலிருந்து இருபத்து நான்கு மணி நேரத்திற்குள், மிக அருகிலுள்ள மாஜிஸ்டிரேட்டின் முன்பு கொண்டு வரப்பட வேண்டும் ; அத்தகைய எவரும் மாஜிஸ்டிரேட்டு ஒருவரின் உத்தரவின்றி மேற்சொன்ன நேரத்திற்கு மேல் பாதுகாவலில் வைக்கப்படலாகாது.

(3) (1)-ம், (2)-ம் பகுதிகளில் உள்ளது எதுவும்—

(அ). அச்சம்யம் பகை-அந்நியராயுள்ள எவருக்கும், அல்லது

(ஆ). தடைப் பாதுகாவலுக்காக இயற்றப்பட்ட எச்சட்டத்தின் கீழாவது கைதுசெய்யப்பட்ட அல்லது பாதுகாவலில் வைக்கப்பட்ட எவருக்கும் பிரயோகப்படமாட்டாது.

[1](4) தடைப் பாதுகாவலுக்காக இயற்றப்பட்ட எச் சட்டமும்—

(அ) ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளாய் இருப்பவர்கள் அல்லது இருந்தவர்கள் அல்லது நியமிக்கத் தகுதியுள்ளவர்கள் அடங்கிய ஓர் ஆலோசனை போர்டு, மேற்சொன்ன மூன்று மாத காலம் முடியுமுன்னே தனது அபிப்பிராயத்தில் அத்தகைய பாதுகாவலுக்குப் போதிய காரணம் இருப்பதாக அறிக்கை செய்திருந்தாலன்றி, அல்லது

[1]ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில் 22-வது பிரிவின் (4)-ம் பகுதியில் "பாலிமெண்டால்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ராஜ்யச் சட்டமனறத்தால்" என்று அமைத்துக் கொள்ளவும்.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவு 22.

(ஆ) (7)-ம் பகுதியின் (அ), (ஆ) உட்பகுதிகளின்படி பார்லிமெண்டால் செய்யப்பட்ட எச் சட்டத்தின் ஷரத்துக்களின்படியும் அவர் பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்தாலன்றி,

எவரையும் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குப் பாதுகாவலில் வைப்பதை அனுமதித்தல் ஆகாது :

எனினும், (அ) உட்பகுதியில் உள்ளது எதுவும் (7)-ம் பகுதியின் (ஆ) உட்பகுதியின்கீழ்ப் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தில் விதித்திருக்கும் உச்ச காலத்திற்கு மேல் ஒருவரைப் பாதுகாவலில் வைப்பதற்கு அனுமதி அளிக்க மாட்டாது.

(5) தடைப் பாதுகாவலுக்காக இயற்றப்பட்ட சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட உத்தரவைப் பின்பற்றி, எவராவது பாதுகாவலில் வைக்கப்பட்டால், அந்த உத்தரவை இடும் அதிகாரி, இயன்ற விரைவில், அந்த உத்தரவை இடுவதற்கான காரணங்களை அவருக்குத் தெரிவிக்கவேண்டும்; அந்த உத்தரவுக்கு மாறுக முறையீடு செய்வதற்கு அதி சீக்கிரமான வாய்ப்பை அவருக்குக் கொடுக்கவும் வேண்டும்.

(6) (5)-ம் பகுதியில் உள்ளது எதுவும், அதில் குறிப்பிட்ட உத்தரவை இடும் அதிகாரி பொதுநலனுக்கு விரோதம் எனக் கருதும் விஷயங்களை வெளியிடும்படி அவரைக் கட்டாயப்படுத்தாது.

[1](7) பார்லிமெண்டு—

(அ) (4)-ம் பகுதியின் (அ) உட்பகுதியின் ஷரத்துக்களின்படி ஆலோசனை போர்டின் அபிப்பிராயத்தைப் பெறுமல், தடைப் பாதுகாவலுக்கான சட்டத்தின்கீழ் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு ஒருவர் பாதுகாவலில் வைக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களைப் பற்றியும், நிலைமைகளின் வகை அல்லது வகைகளைப் பற்றியும்,

(ஆ) தடைப் பாதுகாவலுக்கான சட்டத்தின்கீழ் எவ்வகை அல்லது வகைகளின் நிலைமைகளிலும் ஒருவர் பாதுகாவலில் வைக்கப்படக்கூடிய உச்ச காலத்தைப் பற்றியும்,

(இ) (4)-ம் பகுதியின் (அ) உட்பகுதியின்கீழ் நடத்தும் விசாரணையில் ஆலோசனை போர்டு பின்பற்றுதற்கான நடைமுறையைப் பற்றியும்

சட்டத்தினால் நிர்ணயிக்கலாம்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்துக்குப் பிரயோகப்படுகையில், 22-வது பிரிவின் (7)-ம் பகுதியில் "பார்லிமெண்டு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ராஜ்யச் சட்ட மன்றம்" என்று அமைத்துக்கொள்ளவும்.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவுகள் 23—25.

சுரண்டப்படாமலிருப்பதற்கான உரிமை

மனித வாணிபத்திற்கும் பலவந்த வேலைக்கும் தடை.

23. (1) மனிதரை வாணிபப்பொருள் ஆக்குதலும் "பேகாரும்" அது போன்ற ஏனைய பலவந்த வேலை முறைகளும் தடைசெய்யப்படுகின்றன; இந்த ஷரத்தை எவ்விதத்திலும் மீறுதல், சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் ஆகும்.

(2) பொதுக் காரியங்களுக்காக ராஜ்யம் கட்டாயச் சேவை விதிப்பதை இப் பிரிவில் உள்ளது எதுவும் தடை செய்யாது; அத்தகைய சேவையை விதிப்பதில் மதம், இனம், ஜாதி அல்லது வகுப்பு இவைகாரணமாகவேனும் இவற்றில் எவை காரணமாகவேனும் ராஜ்யம் வேற்றுமை பாராட்டலாகாது.

தொழிற்சாலை வகையராவில் பிள்ளை வேலைத் தடை.

24. பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட எந்தப் பிள்ளையும் ஒரு தொழிற்சாலையிலோ சுரங்கத்திலோ வேலைக்கு வைக்கப்படலாகாது; அல்லது அபாயகரமான வேறெந்த வேலையிலும் அமர்த்தப்படலாகாது.

மத சுதந்திர உரிமை

மனச்சாட்சிச் சுதந்திரம், தடையின்றி மதத்தைத் தழுவுதல், அனுஷ்டித்தல், பரப்புதல்.

25. (1) பொது அமைதி, நல்லொழுக்கம், ஆரோக்யம் இவற்றிற்கும் இந்தப் பாகத்திலுள்ள மற்றைய ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, மக்கள் அனைவரும், மனச்சாட்சிச் சுதந்திரத்திற்கும், தடையின்றி எம் மதத்தையும் தழுவுதல் அனுஷ்டித்தல், பரவச் செய்தல் இவை பற்றிய உரிமைக்கும் சமமான பாத்தியதை உடையவர் ஆவார்.

(2) இப் பிரிவில் உள்ளது எதுவும்—

(அ) மத அனுஷ்டானத்தோடு சம்பந்தப்படலாகும் பொருளாதார, நிதியாதார, ராஜீய, அல்லது மதச்சார்பற்ற பிற செய்கைகளை முறைப்படுத்தவோ கட்டுப்படுத்தவோ,

(ஆ) சமூக நலத்திற்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் ஏற்பாடு செய்யவோ, பொதுத் தன்மை வாய்ந்த இந்து மத ஸ்தாபனங்களை இந்துக்களில் எல்லா வகுப்பினருக்கும் பிரிவினருக்கும் திறந்து விடவோ

இப்போதுள்ள எச் சட்டத்தின் பிரயோகத்தையும் பாதிக்காது; அதற்கான சட்டம் எதையும் ராஜ்யம் செய்வதை அது தடை செய்யாது.

விளக்கம் I.—"கிர்ப்பான்களை" அணிதலும் எடுத்துச் செல்லுதலும் சீக்கிய மத ஆசாரத்தில் அடங்கியதாகக் கருதப்படும்.

விளக்கம் II.—(2)-ம் பகுதியின் (ஆ) உட்பகுதியில், 'இந்துக்கள்' என்று குறிக்கப்படுவதில் சீக்கிய, சமண அல்லது பௌத்த சமயத்தைச் சார்ந்தவரைக் குறிப்பதும் அடங்கியதாக அர்த்த விளக்கம் செய்யப்பட வேண்டும்; 'இந்துமத ஸ்தாபனங்கள்' என்று குறிக்கப்படுவதும் அவ்வாறே அர்த்த விளக்கம் செய்யப்படவேண்டும்.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவுகள் 26—29.

மத விவகாரங்களில் நிர்வாகச் சுதந்திரம்.

26. பொது அமைதி, நல்லொழுக்கம், ஆரோக்கியம் இவற்றிற்கு உட்பட்டு, ஒவ்வொரு மதப்பிரிவும் அல்லது அதன் எப் பகுதியும்—

(அ) மத விஷயங்களுக்கும் தரும விஷயங்களுக்குமான ஸ்தாபனங்களை நிறுவவும் பராமரிக்கவும்,

(ஆ) மத விஷயங்களில் தன் விவகாரங்களைத் தானே நிர்வகிக்கவும்,

(இ) ஸ்தாவர ஜங்கம சொத்துக்களைச் சுவாதீனம் செய்யவும் சம்பாதிக்கவும்,

(ஈ) அச் சொத்துக்களைச் சட்டப்படி பரிபாலிக்கவும்

உரிமை உடையதாகும்.

குறிப்பிட்ட எம் மதத்தையேனும் வளர்ப்பதற்கான வரிகள் செலுத்துவதுபற்றிய சுதந்திரம்.

27. குறிப்பிட்ட எந்த மதத்தையாவது அல்லது மதப் பிரிவையாவது வளர்ப்பதற்காக அல்லது பராமரிப்பதற்காகச் செலவு செய்வதற்கென எவ் வரிகளின் வருவாய் தனிப்பட ஒதுக்கப்படுகிறதோ, அவ் வரிகளைச் செலுத்தும்படி எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது.

கல்வி ஸ்தாபனங்களில் மத போதனை அல்லது மத வழிபாடு இவற்றிற்குச் செல்லுதல் பற்றிய சுதந்திரம்.

28. (1) ராஜ்யத்தின் நிதிகளிலிருந்து முழுதும் பராமரிக்கப்படும் எக் கல்வி ஸ்தாபனத்திலும் மத போதனை அளிக்கப்படலாகாது.

(2) ராஜ்யத்தினால் பரிபாலிக்கப்படுவதாயும், மத போதனை அளிக்கப்படவேண்டும் என்று விதிக்கும் நிதி வைப்பு அல்லது டிரஸ்டின்படி நிறுவப்பட்டதாயுமுள்ள ஒரு கல்வி ஸ்தாபனத்திற்கு (1)-ம் பகுதியில் உள்ளது எதுவும் பிரயோகப்படமாட்டாது.

(3) ராஜ்யத்தால்அங்கீகரிக்கப்பட்டஅல்லதுராஜ்யத்தின் நிதிகளிலிருந்து உதவி பெருகின்ற கல்வி ஸ்தாபனத்தில் கற்கச் செல்லும் எவரும் அவர் அல்லது அவர் மைனராயிருந்தால் அவருடைய கார்டியன் சம்மதம் கொடுத்திருந்தாலன்றி, அந்த ஸ்தாபனத்தில் அளிக்கப்படக்கூடிய எந்த மதபோதனையிலும் ஈடுபடவேண்டும் என்றே அந்த ஸ்தாபனத்திலேனும் அதைச் சார்ந்த எந்த இடத்திலேனும் நடத்தப்படலாகும் எந்த மத வழிபாட்டிற்கும் வந்திருக்கவேண்டும் என்றே கட்டாயப்படுத்தப்படலாகாது.

பண்பாடு, கல்வி இவை பற்றிய உரிமைகள்

சிறுபான்மையினரின் நலன்களின் பாதுகாப்பு.

29. (1) தனிப்பட்ட மொழி, லிபி அல்லது பண்பாடு இவற்றை ஏற்கனவே உடையவராய், இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் அல்லது அதன் ஒரு பாகத்தில் வசிக்கும் குடிகளின் எப் பிரிவினரும், அவற்றைச் சிதையாமல் காக்க உரிமை உள்ளவர் ஆவார்.

(2) மதம், இனம், ஜாதி, மொழி இவை காரணமாக அல்லது இவற்றுள் எவையேனும் காரணமாக, ராஜ்யத்தினால் பராமரிக்கப்பட்ட அல்லது ராஜ்ய நிதிகளிலிருந்து உதவி பெருகின்ற எந்தக் கல்வி ஸ்தாபனத்திலும் சேர்வதற்கு எக் குடியும் மறுக்கப்படலாகாது.

கல்வி நிலையங்களை நிறுவவும் பரிபாலிக்கவும் சிறுபான்மையினருக்கு உள்ள உரிமை.

30. (1) மதத்தினாலோ மொழியினாலோ சிறுபான்மையினராக இருப்பவர் எல்லோரும் தாம் விரும்பும் கல்வி ஸ்தாபனங்களை நிறுவவும் பரிபாலிக்கவும் உரிமை உள்ளவர் ஆவார்.

(2) கல்வி ஸ்தாபனங்களுக்கு உதவி அளிக்கையில், ஒரு கல்வி ஸ்தாபனம் மதத்தினாலோ மொழியினாலோ சிறுபான்மையினராக உள்ளவரின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது என்னும் காரணத்தால், ராஜ்யம் அதற்கு மாறாக வேற்றுமை பாராட்டலாகாது.

சொத்துரிமை

சொத்தை வலிந்து அடைதல்.

[1] 31. (1) சட்டத்தின் அதிகாரப்படி யன்றி எவருடைய சொத்தும் பறிக்கப்படலாகாது.

[2] [(2) எந்தச் சொத்தையும் பொதுக்காரியத்துக்காக அன்றியும், கைப்பற்றிய அல்லது தாற்காலிகமாகக் கைப்பற்றிய சொத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி ஏற்பாடு செய்வதுடன் அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை நிச்சயித்துக் கூறும் அல்லது அந்த நஷ்ட ஈட்டை நிர்ணயிப்பதற்கும் கொடுப்பதற்குமான கோட்பாடுகளையும் வகையையும் குறிப்பிடும் ஒரு சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் அன்றியும் அவ்வாறு கட்டாயமாகக் கைப்பற்றலாகாது அல்லது தாற்காலிகமாகக் கைப்பற்றலாகாது. அச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நஷ்ட ஈடு போதுமானதாயில்லை என்னும் காரணம் பற்றி அத்தகைய சட்டம் எதுவும் எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கப்படலாகாது.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்துக்குப் பிரயோகப்படுகையில், 31-வது பிரிவில், (3), (4), (6)-ம் பகுதிகளை விட்டுவிட வேண்டும். (5)-ம் பகுதிக்குப் பதிலாக அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"(5) (2)-ம் பகுதியில் உள்ளது எதுவும்—

(அ) இப்போதுள்ள எச் சட்டத்தின் ஷரத்துக்களையாவது, அல்லது

(ஆ) (i) எவ்வரியையோ அபராதத் தீர்வையையோ விதிக்கும் அல்லது வசூலிக்கும் பொருட்டும், அல்லது

(ii) பொதுஜன சுகாதாரத்தை வளர்ப்பதற்கோ, உயிருக்கு அல்லது சொத்திற்கு உள்ள அபாயத்தைத் தடுப்பதற்கோ, அல்லது

(iii) அகதிச் சொத்தென்று சட்டத்தால் அறிவிக்கப்பட்ட சொத்தைப் பற்றியோ

ராஜ்யம் இனிச் செய்யும் எச் சட்டத்தின் ஷரத்துக்களையாவது பாதிக்காது."

[2] 1955-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (நான்காம் திருத்தச்) சட்டத்தினால் அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவு 31.

(2) (அ) ஒரு சட்டம் யாதொரு சொத்தின் உடமையை அல்லது சுவாதீன உரிமையை ராஜ்யத்திற்கு அல்லது ராஜ்யத்தின் உடமையாயுள்ள அல்லது அதன் மேலாதிக்கத்திலுள்ள ஒரு கார்ப்பரேஷனுக்கு மாற்ற ஏற்பாடு செய்யாதிருந்து அது எவருடைய சொத்தினைப் பறித்தபோதிலும் சொத்தினைக் கட்டாயமாகக் கைப்பற்றுவதற்கு அல்லது தாற்காலிகமாகக் கைப்பற்றுவதற்கு அது ஏற்பாடு செய்திருப்பதாகக் கருதப்படலாகாது].

(3) ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்டதும் (2)-ம் பகுதியில் குறிக்கப்பட்டதுமான எச் சட்டமும் ராஷ்டிரபதியின் பரிசீலனைக்கென ஒதுக்கி வைக்கப்பட்டு, அவருடைய அனுமதியைப் பெற்றிருந்தாலன்றிப் பயனுடையதாகாது.

(4) இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் முடிவடையாதிருக்கும் மசோதா எதுவும் அச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிறகு, ராஷ்டிரபதியின் பரிசீலனைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டு அவருடைய அனுமதியைப் பெற்றிருந்தால், அவ்வாறு அனுமதி பெற்ற சட்டம் இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், (2)-ம் பகுதியின் ஷரத்துக்களை மீறுகிறது என்ற காரணத்தால் எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கப்படலாகாது.

(5) (2)-ம் பகுதியில் உள்ளது எதுவும்—

(அ) (6)-ம் பகுதியின் ஷரத்துக்கள் பிரயோகமாகும் சட்டத்தைத் தவிர இப்போதுள்ள எச் சட்டத்தின் ஷரத்துக்களையாவது, அல்லது

(ஆ) (i) எவ் வரியையோ அபராதத் தீர்வையையோ விதிக்கும் அல்லது வசூலிக்கும் பொருட்டும், அல்லது

(ii) பொதுஜன சுகாதாரத்தை வளர்ப்பதற்கோ, உயிருக்கு அல்லது சொத்திற்கு உள்ள அபாயத்தைத் தடுப்பதற்கோ, அல்லது

(iii) அதிகச் சொத்தென்று சட்டத்தால் அறிவிக்கப்பட்ட சொத்தைப்பற்றி, இந்திய டொமினியன் சர்க்காருக்கும் அல்லது இந்தியச் சர்க்காருக்கும் வேறொரு நாட்டின் சர்க்காருக்கும் இடையே செய்யப்பட்ட ஒரு கருர் நாமாவை அனுசரித்தோ அல்லது மற்றப் படியோ

ராஜ்யம் இனிச் செய்யும் எச்சட்டத்தின் ஷரத்துக்களையாவது பாதிக்காது.

(6) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முந்திய பதினெட்டு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்குள் இயற்றப்பட்ட ராஜ்யத்தின் சட்டம் எதுவும், அத் தொடக்கத்திலிருந்து மூன்று மாதத்திற்குள் ராஷ்டிரபதியின் சரியொப்பத்திற்காகச் சமர்ப்பிக்கப்படலாம்; அதன்பேரில், ராஷ்டிரபதி பொது விளம்பர மூலமாக அவ்வாறு சரியொப்பமிட்டால், அச் சட்டம் இப் பிரிவின் (2)-ம் பகுதியின் ஷரத்துக்களை மீறுகிறது அல்லது 1935-ம் வருஷத்திய இந்

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவு 31-அ.

தியச் சர்க்கார் சட்டத்தின் 299-வது பிரிவின் (2)-ம் உட் பிரிவின் ஷரத்துக்களை மீறியுள்ளது என்ற காரணத்தால் எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கப்படலாகாது.

எஸ்டேட்டுகள் வகையராவைப் பெறுவதற்காக ஏற்பாடு செய்யும் சட்டங்களுக்கு நிவாரணை.

[1][*31 அ* [2][*(1) 13-வது பிரிவில் என்ன கண்டிருந்தபோதிலும்—*

(அ) எந்த எஸ்டேட்டையாவது அதிலுள்ள எந்த உரிமைகளையாவது ராஜ்யம் அடைவதற்காக அல்லது அத்தகைய எந்த உரிமைகளையேனும் இறுதி செய்வதற்காக அல்லது மாற்றுவதற்காக, அல்லது

(ஆ) பொது நலனைக் கருதியோ அல்லது யாதொரு சொத்தினைத் தகுந்த விதத்தில் நிர்வகிப்பதன் பொருட்டோ குறிப்பிட்ட கால அளவுக்கு அச் சொத்தின் நிர்வாகத்தை ராஜ்யம் மேற்கொள்வதற்காக, அல்லது

(இ) பொது நலனைக் கருதியோ அல்லது எவையேனும் கார்ப்பொரேஷன்களைத் தகுந்த விதத்தில் நிர்வகிப்பதன் பொருட்டோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கார்ப்பொரேஷன்களை ஒன்றுக இணைப்பதற்காக அல்லது

(ஈ) கார்ப்பொரேஷன்களின் நிர்வாக ஏஜெண்டுகள், காரியதரிசிகள், பொக்கிஷதாரர்கள், நிர்வாக டைரெக்டர்கள், டைரெக்டர்கள், நிர்வாகிகள் ஆகியவர்களின் எவ்வுரிமைகளையேனும் அல்லது அவற்றின் பங்குதாரர்களின் வோட்டு உரிமைகளையேனும் இறுதி செய்வதற்காக, அல்லது மாற்றுவதற்காக அல்லது

(உ) யாதொரு கனிப் பொருள் அல்லது கனி எண்ணெய் கண்டுபிடிப்பதற்கான அல்லது எடுப்பதற்கான ஒப்பந்தம், குத்தகை அல்லது லீசென்ஸ் காரணமாகச் சேர்ந்து வரும் உரிமைகளை இறுதி செய்வதற்காக அல்லது மாற்றுவதற்காக அல்லது அத்தகைய ஒப்பந்தம் குத்தகை அல்லது லீசென்ஸைக் காலாவதிக்கு முன்னரே இறுதி செய்வதற்காக அல்லது ரத்து செய்வதற்காக ஏற்பாடு செய்யும் எச்சட்டமும் 14-வது பிரிவு, 19-வது பிரிவு, அல்லது 31-வது பிரிவுடன் பொருத்தமற்றதாயிருக்கிறது அல்லது அவைகளிலுல் அளிக்கப்பட்ட உரிமைகளில் எவற்றையேனும் எடுத்து விடுகிறது அல்லது சுருக்குகிறது என்னும் காரணத்திலுல் வியர்த்தமானதென்று கருதப்படமாட்டாது.

எனினும், அத்தகைய சட்டம் ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டமாயிருந்தால், அத்தகைய சட்டம் ராஷ்டிரபதி கவனித்தாராய்வதற்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருந்து அவருடைய அனுமதியைப் பெற்றிருந்தாலன்றி இப் பிரிவின் ஷரத்துக்கள் அதற்குப் பிரயோகப்படமாட்டா.]

---

[1] *1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 4-வது பிரிவினுல் (முன்னதான தேதியிலிருந்தே) செல்திறன் உள்ளதாக அமைத்துக் கொள்ளப்பட்டது.*

1955-ம் வருஷத்திய அரசியல அமைப்பு நான்காம் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவினுல் (முன்னதான தேதியிலிருந்தே செல்திறன் உள்ளதாக) கொள்ளப்பட்டது.

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவு 31-அ.

(2) இப் பிரிவில்,—

[1](அ) "எஸ்டேட்டு" என்னும் பதம், ஒரு ஸ்தலப் பிரதேசம் சம்பந்தமாக, அப் பிரதேசத்தில் நில உரிமைத் திட்டங்கள் பற்றி அமுலிலுள்ள இப்போதைய சட்டத்தில் அப் பதத்திற்கு அல்லது அதற்குப் பதிலாக அந்தப் பிரதேசத்தில் வழங்கும் பதத்திற்கு என்ன பொருள் உண்டோ அதையே உடையதாகும்; மேலும், அதில் ஜாகீர், இனம் அல்லது மூவர்பி அல்லது அத்தகைய மற்றைய நன்கொடை என்பதும் [1]சென்னை [2][கேரளா] ராஜ்யங்களில் யாதொரு ஜன்மம் உரிமை என்பதும் அடங்கும்;]

(ஆ) "உரிமைகள்" என்னும் பதத்தில், ஒரு எஸ்டேட்டு சம்பந்தமாக, சுவான்தார், கீழ்ச் சுவான்தார், அடிச்

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்துக்குப் பிரயோகப்படுகையில், 31-அ பிரிவைச் சேர்ந்த (1)-ம் பகுதியின் விளக்கு நிபந்தனையை விட்டுவிடவேண்டும்; அப் பிரிவின் (2)-ம் பகுதியின் (அ) உட்பகுதிக்குப் பதிலாக அடியிற்கண்ட உட் பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

'(அ) "எஸ்டேட்டு" என்பது விவசாய காரியங்களுக்காக அல்லது விவசாயத்திற்கு அனுகூலமான காரியங்களுக்காக அல்லது மேய்ச்சல் தரைக்காக சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள அல்லது விடப்பட்டுள்ள நிலம் என்று பொருள்படும்; மேலும், அதில் அடியிற் கண்டவையும் அடங்கும்:—

(i) கட்டிட மனைகளும், அந்த நிலத்தின் மேலுள்ள இதர கட்டுகோப்புகளும்;

(ii) அந்த நிலத்திலிருக்கும் மரங்கள்;

(iii) காட்டு நிலமும், தோப்பு தரிசும்;

(iv) தண்ணீரின் கீழுள்ள பிரதேசமும், தண்ணீருக்கு மேல் மிதக்கும் புலங்களும்;

(v) ஜண்டார், காரட்டு மனைகள்;

(vi) ஜாகீர், இனம், முவாலி, முகர்ரி அல்லது அத்தகைய மற்றைய நன்கொடை; ஆனால், அடியிற்கண்டவை அதில் அடங்கமாட்டா:—

(i) யாதொரு பட்டணத்தில் அல்லது பட்டணப் பிரதேசத்தில் மனை அல்லது கிராமக் குடியிருப்பிலுள்ள யாதொரு கட்டிடத்தின் அல்லது அத்தகைய கட்டிடம் அல்லது மனையை ஒட்டியுள்ள யாதொரு நிலம்;

(ii) ஒரு பட்டணம் அல்லது கிராமத்தின் மனையாக அமைந்துள்ள யாதொரு நிலம்;

(iii) ஒரு முனிசிபாலிடியில் அல்லது அறிக்கையிட்ட பிரதேசத்தில் அல்லது கண்டோன்மென்டில் அல்லது பட்டணப் பிரதேசத்தில் கட்டிடக் காரியங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள யாதொரு நிலம் அல்லது பட்டண அமைப்பு திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ள யாதொரு பிரதேசம்

[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவினாலும், ஷெட்யூலினாலும், "திருவாங்கூர்-கொச்சி" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

சுவான்தார், காணியாட்சியாளர் [ரயத்து, அடிரயத்து] அல்லது மற்றைய இடையுரிமையாளர்கள் இவர்களிடம் நிலவெறும் உரிமைகளும், நில அரசிறை பற்றிய உரிமைகள் அல்லது விசேஷ உரிமைகளும் அடங்கும்.]

குறிப்பிட்ட சட்டங்களையும் ரெகுலேஷன்களையும் செல்லுபடியாக்குதல்.

[31 ஆ. 31 அ பிரிவில் அடங்கிய ஷரத்துக்களின் பொதுத் தன்மைக்குப் பாதகமின்றி, ஒன்பதாவது தபசிலில் குறிப்பிட்ட சட்டங்கள், ரெகுலேஷன்கள் இவற்றில் எவையும் அல்லது இவற்றின் ஷரத்துக்களில் எவையும், அத்தகைய சட்டமாவது ரெகுலேஷனுவது ஷரத்தாவது இப் பாகத்தின் ஷரத்துக்களோடு பொருத்தமற்றதாயிருக்கிறது அல்லது அந்த ஷரத்துக்களினுல் அளிக்கப்பட்ட உரிமைகளில் எவற்றையேனும் எடுத்துவிடுகிறது அல்லது சுருக்குகிறது என்னும் காரணத்தினுல் வியர்த்தமானதாகவோ எப்போதேனும் வியர்த்தமாகிவிட்டதாகவோ கருதப்படமாட்டாது ; மேலும் இதற்கு விரோதமாய் ஒரு நீதிமன்றமோ அல்லது நியாய சபையோ தீர்ப்பு டிக்கிரி அல்லது உத்தரவைப் பிறப்பித்திருந்தபோதிலும், மேற்படி சட்டங்கள், ரெகுலேஷன்கள் இவற்றில் ஒவ்வொன்றும், அதை ரத்து செய்யவோ திருத்தவோ அதிகார மூள்ள ஒரு சட்டமன்றத்தின் சக்திக்கு உட்பட்டு, தொடர்ந்து அமுலிலிருந்து வரும்.]

அரசியல் அமைப்புத் தரும் பரிகார உரிமை.

இப் பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளை நிறைவேற்றும் முறைகள்.

32. (1) இப் பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தக்க நடவடிக்கைகளின் மூலமாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் உரிமை உத்தரவாதமாக அளிக்கப்படுகிறது.

(2) இப்பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளில் எதையேனும் நிறைவேற்றுவதற்காக, ஹேபியஸ் கார்ப்பஸ், மாண்டேமஸ், ப்ரொஹிபிஷன், கோ-வாரண்டோ, ஸெர்ஷியோரேரை போன்ற தாக்கீதுகள் உள்ளிட்ட கட்டளைகள் அல்லது உத்தரவுகள், அல்லது தாக்கீதுகளில் எது பொருத்தமோ அதைப் பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

[1](3) (1)-ம், (2)-ம் பகுதிகளில் உச்ச நீதி மன்றத்திற்கு அளிக்கப்பட்ட சக்திகளுக்குப் பாதகமின்றி, (2)-ம் பகுதியின் கீழ் உச்ச நீதிமன்றத்தால் செலுத்தப்படக்கூடிய சக்திகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதையும் மற்றெந்த நீதிமன்றத்திற்காவது அதன் விசாரணை-அதிகாரத்தின் எல்லைகளுக்குள் செலுத்துவதற்குப் பார்லிமெண்டு சட்டத்தினுல் சக்தி அளிக்கலாம்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 22-வது பிரிவின் (3)-ம் பகுதியை விட்டுவிடவேண்டும் ; (2)-ம் பகுதிக்குப் பிறகு, அடியில் இண்ட புதிய பகுதியை இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"2 (அ) (1)-ம், (2) பகுதிகளில் உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட சக்திகளுக்குப் பாதகமின்றி, உயர்நீதிமன்றம் விசாரணை அதிகாரம் செலுத்தும் பிரதேசங்கள் முழுவதிலும், இப் பாகத்தினுல் அளிக்கப்பட்ட உரிமைகளில் எதையேனும் நிறைவேற்றுவதற்காக, அப்பிரதேசங்களுள் உரிய இடங்களில் எவருக்கோ எந்தச் சர்க்காரும் உட்பட எந்த அதிகாரிக்கோ ஹேபியஸ் கார்ப்பஸ், மாண்டேமஸ், ப்ரொஹிபிஷன், கோ-வாரண்டோ ஸொஷியோரேரை போன்ற தாக்கீதுகள் உள்ளிட்ட கட்டளைகளாவது உத்தரவுகளாவது தாக்கீதுகளாவது, அல்லது அவைகளில் எவற்றையாவது பிறப்பிக்க அந்த உயர் நீதி மன்றம் சக்தியுடையதாகும்."

(4) இந்த அரசியல் அமைப்பினுல் வேறு விதமாக ஏற் பாடு செய்துள்ளபடியன்றி, இப் பிரிவினுல் உத்தரவாதமாக அளிக்கப்பட்ட உரிமை நிறுத்திவைக்கப் படலாகாது.

இப் பாகத் தால் அளிக் கப்பட்ட உரிமைகள் படையினருக்குள்ள பிரயோகப்படுகையில், அவற்றை மாற்றப் பார்லிமெண்டுக்குள்ள சக்தி.

33. இப் பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளில் எது வும் ஆயுதப்படையினருக்காவது அல்லது பொது அமைதி யைப் பாதுகாக்கும் பொறுப்புடைய படையினருக்காவது பிர யோகிக்கப்படுகையில் அவர்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்து முடிப்பதன் பொருட்டும் அவர்களிடையே நெறி முறையை நிலை நிறுத்தும் பொருட்டும் அதை எந்த அளவுக் குக் கட்டுப்படுத்தலாம் அல்லது நீக்கலாம் என்று பார்லி மெண்டு சட்டத்தினுல் நிர்ணயிக்கலாம்.

ராணுவச் சட்டம் ஒரு பிரதேசத்தில் அமுலிலிருக்கையில் இப் பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகள் பற்றிய கட்டுப்பாடு.

34. இப் பாகத்தின் மேற்கூறிய ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டு சட்டத்தினுல், யூனியன் அல்லது ராஜ்யத்தின் சேவையிலுள்ள ஒருவரையோ, அல்லது மற் றெவரையோ, இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் ராணுவச் சட் டம் அமுலிலிருந்த எந்தப் பிரதேசத்திலும் அமைதியைப் பாதுகாத்தல் அல்லது மீண்டும் நிலைநாட்டுதல் பற்றி அவர் செய்த எச் செயல் குறித்தும் அபயம் அளிக்கலாம் அல்லது அப்பிரதேசத்தில் ராணுவச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட தண்டனைத் தீர்ப்பு, நிறைவேற்றிய தண்டனை, உத்தரவான பறிமுதல், நிகழ்த்திய மற்றச் செயல் இவற்றை முறைப்படுத் தலாம்.

இப்பாகத் தின்ஷரத் துக்களை நிறைவேற்று வதற்காகச் சட்டம் செய்தல்.

[1] *35. இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும்,—*

(அ) (i) 16-வது பிரிவின் (3)-ம் பகுதி, 32-வது பிரிவி வின் (3)-ம் பகுதி, 33-வது பிரிவு, 34-வது பிரிவு இவற்றின்கீழ், பார்லிமெண்டு சட்டம் செய்யக் கூடிய விஷயங்களில் எது பற்றியும்,

(ii) இப் பாகத்தின்கீழ்க் குற்றங்கள் என அறிவிக் கப்படும் செயல்களுக்குத் தண்டனையை நிர்ண யிக்கவும்

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 35-வது பிரிவில்,

(i) அரசியல் அமைப்பின் தொடக்கத்தைப் பற்றிக் குறிக்கும் இடங்களில் (1954-ம்வருஷம் மேமாதம் 14-ம்தேதியாகிய) 1954-ம்வருஷத்திய அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படுவது பற்றிய) உத்தர வின் தொடக்கத்தைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்.

(ii) (அ) (1)-ம் பகுதியில் "16-வது பிரிவின் (3)-ம் பகுதி, 32-வது பிரிவின் (3)-ம் பகுதி" என்னும் சொற்களையும், தக வலையும் குறிகளையும், இலக்கங்களையும் விட்டுவிட வேண்டும்;

(iii) (ஆ) பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதாவது:—

"(இ) 1954-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படுவது பற்றிய) உத்தரவின் தொடக்கத்திற்கு முன்போ அல்லது பிறகோ ஜம்மு-காஷ்மீர் ராஜ்ய சட்டமன்றத்தினுல் செய்யப்பட்ட தடை பாதுகாவல் சம்பந்தமான எச் சட்டமும் இப் பகுதியின் எவையேனும் ஷரத்துக் களுடன் முரண்படுகிறது என்னும் காரணத்தினுல் வியர்த்தமாகாது. ஆனல், அத்தகைய எச் சட்டமும், அவ்வாறு முரண்படுகிற அளவுக்கு அவ் உத்தரவின் தொடக்கத்திலிருந்து ஐந்து வருஷ காலம் முடிவடைந்ததும்—அக்காலம் முடி வடைவதற்கு முன் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட காரியங் கள் சம்பந்தமாகவன்றி, அமுலற்றுப் போகும்."

பாகம் III.—அடிப்படையான உரிமைகள்—பிரிவு 35.

சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு ; ராஜ்யத்தின் சட்டமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது ; மேலும் பார்லிமெண்டு இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்குப்பின் இயன்ற விரைவில் (i)-ம் உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட செயல்களுக்குத் தண்டனை நிர்ணயிப்பதற்கான சட்டங்கள் செய்யவேண்டும் ;

(ஆ) (அ) பகுதியின் (i)-ம் உட்பகுதியில் குறிக்கப்பட்ட விஷயங்களில் எதுபற்றியோ அல்லது அப்பகுதியின் (ii)-ம் உட்பகுதியில் குறிக்கப்பட்ட எச் செயலுக்கோ தண்டனை ஏற்படுத்தவோ இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் அமுலிலுள்ள எச் சட்டமும், அதன் நிபந்தனைகளுக்கும், 372-வது பிரிவின்கீழ் அதில் செய்யக்கூடிய எந்த இனைக்கங்களுக்கும் மாற்றங்களுக்கும் உட்பட்டுப் பார்லிமெண்டால் மாற்றமோ ரத்தோ திருத்தமோ செய்யப்படும் வரை, தொடர்ந்து அமுலிலிருந்து வரும்.

விளக்கம்.—இப் பிரிவில், "அமுலிலுள்ள சட்டம்" என்னும் பதம் 372-வது பிரிவில் உள்ள பொருளையே உடையதாகும்.[1]

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 35-வது பிரிவுக்குப் பிறகு, அடியிற்கண்ட புதிய பிரிவை இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ள வேண்டும் ; அதாவது :—

"35-அ. நிலையான குடிகள், அவர்கள் உரிமைகள் இவை சம்பந்தமாக சட்ட நிவாரணை.—இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறிருப்பினும், அடியிற் கண்டவை விஷயமாக ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தில் தற்போது அமுலிலுள்ள எச் சட்டமும் ராஜ்யச் சட்ட மன்றம் இனி இயற்றுகிற எச் சட்டமும் இப் பாகத்தின் ஷரத்துக்களுடன் முரண்படுகிறது அல்லது அந்த ஷரத்துக்களினால் இந்தியாவின் இதர குடிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை எடுத்துவிடுகிறது அல்லது சுருக்குகிறது என்னும் காரணத்தினால் வியர்த்தமாகாது ; அவ் விஷயங்களாவன :—

(அ) ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தின் நிரந்தர வாசிகளின் வகையினை அல்லது அப்படி இருக்க வேண்டியவர்களின் வகையினை வரையறுப்பது ; அல்லது

(ஆ) அத்தகைய நிரந்தர வாசிகளுக்கு—

(i) ராஜ்ய சர்க்காரின் கீழ் வேலை,

(ii) ராஜ்யத்தில் ஸ்தாவர சொத்தினை அடைவது,

(iii) ராஜ்யத்தில் குடியேறுவது, அல்லது

(iv) ராஜ்ய சர்க்கார் ஏற்படுத்தித் தருகிற உபகாரச் சம்பளங்கள், அத்தகைய இதர உதவிகள் விஷயமாக உரிமைகள், அல்லது விசேஷ உரிமைகள் அளிப்பது அல்லது மற்றவர்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பது."

பாகம் IV

ராஜ்ய நிர்வாகத்தின் நெறிமுறைக் கோட்பாடுகள்

பிரிவுகள் 36—39.

வரையறை.

36. இப் பாகத்தில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித் தாலன்றி, "ராஜ்யம்" என்பது III-ம் பாகத்தில் அதற் குள்ள பொருளையே உடையதாகும்.

இப் பாகத்தில் அடங்கிய கோட்பாடுகளின் பிரயோகம்.

37. இப் பாகத்தில் அடங்கிய ஷரத்துக்கள் எந்த நீதி மன்றத்தாலும் நிறைவேற்றத்தக்கனவல்ல ; எனினும், இதில் குறிக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் நாட்டின் ஆட்சிமுறைக்கு அடிப்படையானவை ஆகும் ; மேலும், சட்டங்கள் செய்கை யில் இக் கோட்பாடுகளைப் பிரயோகித்தல் ராஜ்யத்தின் கட மையாகும்.

பொது மக்களின் நலத்தைப் பேணி வளர்ப்பதற் காகச் சமூக அமைப்பு ஒன்றை ராஜ்யம் நிலைபெறச் செய்தல்.

38. ராஜ்யமானது, தேச-சமுதாய வாழ்க்கையின் சகல நிலையங்களிலும் சமூக, பொருளாதார, ராஜிய நீதி நிரம் பிய சமூக அமைப்பை இயன்ற அளவு திறம்பட நிலைபெறச் செய்தும் பாதுகாத்தும் பொது மக்களின் நலத்தைப் பேணி வளர்க்க முயல வேண்டும்.

ராஜ்யம் அனுசரிக்க வேண்டிய கோட்பாடு கள்.

39. ராஜ்யம், முக்கியமாக,—

(அ) குடிகள், ஆண்களும் பெண்களும் சரிசமமாக, போதிய ஜீவனோபாயத்திற்கு உரிமை உள்ளவரா தல் ;

(ஆ) சமூகத்தின் பொருட்சாதனங்களின் உடமையும் அவற்றின் ஆட்சியும் சிறந்த முறையில் பொது நல னுக்குப் பயன்படும் வகையில் பகிர்ந்தளிக்கப்படு தல் ;

(இ) பொருளாதார முறை பிரயோகப்படுவதன் விளை வாகப் பொது நலத்திற்குத் தீங்கு இழைக்கும் வகை யில், செல்வமும் உற்பத்திச் சாதனங்களும் சிலரிடம் செறிவு பெறுதிருத்தல் ;

(ஈ) ஆண்மக்கள் பெண்மக்கள் ஆகிய இரு பாலாரும் ஒத்த வேலைக்கு ஒத்த சம்பளம் உடையராதல் ;

(உ) ஆண், பெண் வேலையாளரின் உடல் நலமும் வலி மையும், பிள்ளைகளின் இளமைப் பருவமும் மிதமிஞ் சிப் பயன்படுத்தப்படாதிருத்தல் ; பொருளாதார அவசியத்தால் குடிகள் தம்முடைய வயதுக்கோ அல் லது வலிமைக்கோ ஒவ்வாத வேலைகளில் புகும்படி கட்டாயப் படுத்தப்படாதிருத்தல் ;

---

1 ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்கு இது பிரயோகப்படாது.

பாகம் IV.—ராஜ்ய நிர்வாகத்தின் நெறிமுறைக் கோட்பாடுகள்—பிரிவுகள் 39—45.

(ஊ) பிள்ளைப் பருவமும் வாலிபப் பருவமும் சுரண்டலுறுமலும், ஒழுக்க நெறியும் பிழைக்க வழியும் இன்றிக் கைவிடப்படாமலும் காக்கப்படுதல் ;

இவை நிலைபெறுமாறு செய்வதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைத்தல்.

40. ராஜ்யமானது கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்க ஏற்பாடுகள் செய்து, சுய ஆட்சியின் உறுப்புக்களாக அவை வேலை செய்வதற்கு அவசியமான சக்திகளையும் அதிகாரங்களையும் அளிக்கவேண்டும்.

வேலை, கல்வி பொது உதவி பெறுதல்—இவைபற்றிய உரிமைகள்.

41. ராஜ்யமானது தனது பொருளாதார சக்தி அபிவிருத்தி இவற்றின் அளவுக்கு உட்பட்டு, வேலை செய்வதற்கும் கல்வி கற்பதற்கும், வேலையின்மை, முதுமை, நோயுடைமை, ஊனமுடைமை ஆகிய நிலைகளிலும் ஏனைய தகா-வறுமை நிலைகளிலும் பொதுவிலிருந்து உதவி பெறுவதற்கும் உள்ள உரிமைகளை உறுதியாய் அடைவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும்;

நியாயமான, பண்பான வேலை வசதிகளும், கருவுற்றவர்களுக்குச் சகாயமும் கிடைப்பதற்காக ஏற்பாடு செய்தல்.

42. ராஜ்யமானது நியாயமான, பண்பான வேலை வசதிகளும் கருவுற்றவர்களுக்குச் சகாயமும் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்.

வேலையாளர்களின் பிழைப்புக்குப் போதிய சம்பளம் வகையாரா.

43. ராஜ்யமானது விவசாயிகள், தொழிலாளர்கள் அல்லது மற்றைய வேலையாளர்கள் அனைவருக்கும் வேலையும், பிழைப்புக்குப் போதிய சம்பளமும், செம்மையான வாழ்க்கைத் தரம், ஓய்வு நேரத்தை நன்கு அனுபவிக்கும் நிலை இவற்றை உறுதியாக அளிப்பதற்கான வேலை வசதிகளும் சமூக கலாசார வாய்ப்புக்களும் கிட்டுமாறு தக்க சட்டம் செய்வதால் அல்லது பொருளாதார அமைப்பால் அல்லது வேறு செயலால் முயலவேண்டும் ; மேலும், ராஜ்யமானது முக்கியமாக கிராமத் தொழில்களைக் கிராமப் பிரதேசங்களில் தனிப்பட்ட முறையிலோ கூட்டுறவு முறையிலோ வளர்க்க முயல வேண்டும்.

குடிகளுக்கு ஒரு படித்தான சிவில் சட்டத் தொகுப்பு.

44. ராஜ்யமானது இந்தியாவின் ஆட்சிப்பரப்பு முழுவதிலும் ஒருபடித்தான சிவில் சட்டத் தொகுப்புக் குடிகளுக்குக் கிடைக்குமாறு செய்ய முயலவேண்டும்.

பிள்ளைகளுக்கு இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி அளிக்க ஏற்பாடு.

45. ராஜ்யமானது, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்து வருஷ காலத்திற்குள், எல்லாப் பிள்ளைகளுக்கும் பதினான்கு வயது நிரம்பும் வரை இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி அளிக்க ஏற்பாடு செய்ய முயல வேண்டும்.

பாகம் IV.— ராஜ்ய நிர்வாகத்தின் நெறிமுறைக் கோட்பாடுகள்— பிரிவுகள் 46—50.

46. ராஜ்யமானது மக்களில் திறங் குறைந்த வகுப்பினர் களுடைய—முக்கியமாக அனுபந்த ஜாதியினர் அனுபந்த மலை ஜாதியினர் இவர்களுடைய—கல்வி நலன்களையும் பொருளா தார நலன்களையும் நன்கு கவனித்து வளர்க்க வேண்டும்; அவர்களைச் சமூக அநீதியிலிருந்தும் எல்லாவிதமான சுரண் டல்களிலிருந்தும் பாதுகாக்கவும் வேண்டும்.

அனுபந்த ஜாதியினர், அனுபந்த மலைஜாதி யினர், சக்தி குறைந்த ஏனைய வகுப்பினர் —இவர்களு டைய கல்வி, பொருளா தார நலன் களை வளர்த் தல்.

47. ராஜ்யமானது தன் மக்களுடைய போஷணைத் தரத் தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதையும், பொதுச் சுகாதாரத்தை விருத்தி செய்வதையும் தனது முதற் கடமை களைச் சேர்ந்தவையாகக் கருதவேண்டும்; மேலும், போதை தரும் பானங்களும் ஆரோக்கியத்திற்குத் தீங்கிழைக்கும் மாகிரிப் பொருள்களும் மருந்துப் பொருள்களா யன்றி வேறு வகையாய் உட்கொள்ளப்படுவதைத் தடை செய்வதற்கு ராஜ் யம் முக்கியமாக முயலவேண்டும்.

போஷணைத் தரத்தை யும் வாழ்க்கைத் தரத் தையும் உயர்த்தவும், பொதுச் சுகா தாரத்தை விருத்தி செய்யவும் ராஜ்யத்திற் குள்ள கடமை.

48. ராஜ்யமானது விவசாயத்தையும் பிராணிகளின் வளர்ப் பையும் நவீன விஞ்ஞான முறைகளில் அமைக்க முயலவேண் டும்; மேலும், முக்கியமாகப் பசுக்கள், கன்றுகள், கறக்கும் அல்லது இழுக்கும் மற்றையக் கால்நடைகள் இவற்றின் இனங் களைப் பேணி விருத்தி செய்வதற்கும் அவற்றின் கொலையைத் தடை செய்வதற்கும் ராஜ்யம் ஏற்பாடு செய்ய முயல வேண்டும்.

விவசாயத் தையும் பிராணி களின் வளர்ப்பை யும் அமைத் தல்.

49. தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததென்று [1][பார்லி மெண்டு செய்த சட்டத்தினால் அல்லது அதன்படி அறிவிக் கப்பட்ட] கலை அல்லது சரித்திரச் சிறப்பு வாய்ந்த ஸ்மாரகச் சின்னம் அல்லது இடம் அல்லது பொருள் ஒவ்வொன்றையும் பாழ் செய்தல், உருக்குலைத்தல், அழித்தல், அப்புறப்படுத்தல், பராதீனப்படுத்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் ஆகிய இவற் றினின்றும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, பாதுகாத்தல் ராஜ்யத் தின் கடமையாகும்.

ஸ்மாரகச் சின்னங் களையும் தேசிய முக்கியத் துவம் வாய்ந்த இடங்களை யும் பொருள் களையும் பாதுகாத் தல்.

50. சர்க்கார் சேவைவர்க்கங்களில் நிர்வாக இலாகாவி லிருந்து நீதி இலாகாவைப் பிரிப்பதற்கு ராஜ்யம் ஏற்பாடு செய்யவேண்டும்.

நீதி நிர் வாகப் பிரிவினை.

---

[1] 1950-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 27-வது பிரிவினால், "பார்லிமெண்டால் சட்டத்தினால் அறிவிக்கப்பட்ட" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் IV.—ராஜ்ய நிர்வாகத்தின் நெறிமுறைக் கோட்பாடுகள்—
பிரிவு 51.

51. ராஜ்யமானது—

சர்வ தேசங்களிடையே சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் வளர்த்தல்.

(அ) சர்வ தேசங்களினிடையே சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் வளர்க்கவும்,

(ஆ) சர்வ தேசங்களினிடையே நியாயமும் கண்ணியமும் வாய்ந்த உறவுகள் நிலைபெறச் செய்யவும்,

(இ) ஒழுங்குபட்ட ஜன சமூகங்கள் தம்மிடையே நிகழ்த்தும் நடவடிக்கைகளில் சர்வதேச-சட்டத்திற்கும் உடன்படிக்கைப் பொறுப்புக்களுக்கும் நன்மதிப்பைப் பேணவும்,

(ஈ) சர்வதேச விவகாரங்களை மத்தியஸ்தத்தினால் தீர்த்துக் கொள்வதற்கு ஊக்கமளிக்கவும்

முயலவேண்டும்.

பாகம் V

யூனியன்

அத்தியாயம் I—நிர்வாகம்

ராஷ்டிரபதியும் உப-ராஷ்டிரபதியும்
பிரிவுகள் 52—55

இந்தியாவின் ராஷ்டிரபதி.

52. இந்தியாவின் ராஷ்டிரபதி என்று ஒருவர் இருக்க வேண்டும்.

யூனியனின் நிர்வாகச் சக்தி.

53. (1) யூனியனின் நிர்வாகச் சக்தி ராஷ்டிரபதியிடம் நிலை பெற்றிருக்கும் ; அது அவரால் நேராகவேனும் தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களின் மூலமாகவேனும் இந்த அரசியல் அமைப்பிற்கு இணங்கப் பிரயோகிக்கப்பட வேண்டும்.

(2) மேற்கூறிய ஷரத்தின் பொது இயல்பிற்குப் பாதக மின்றி, யூனியனுடைய பாதுகாப்புப் படைகளின் நிலைமைச் சேனாதிபத்தியம் ராஷ்டிரபதியிடம் நிலைபெற்றிருக்கும்; அதன் பிரயோகம் சட்டத்தினால் முறைப்படுத்தப்படும்.

(3) இப் பிரிவில் உள்ளது எதுவும்—

(அ) எந்த ராஜ்யத்தின் சர்க்காருக்காவது மற்றைய அதிகாரிக்காவது இப்போதுள்ள எச் சட்டத் தாலும் அளிக்கப்பட்ட அலுவல்களை ராஷ்டிர பதிக்கு மாற்றுவதாகக் கருதப்படலாகாது ; அல்லது,

(ஆ) ராஷ்டிரபதி அல்லாத மற்றைய அதிகாரிகளுக் குப் பார்லிமெண்டு சட்டத்தினால் அலுவல்கள் அளிப்பதைத் தடை செய்யாது.

ராஷ்டிர பதியின் தேர்தல்.

[1] 54. ராஷ்டிரபதி

(அ) பார்லிமெண்டின் இரு சபைகளிலும் தேர்ந்தெடுக் கப்பட்ட அங்கத்தினர்களும்,

(ஆ) ராஜ்யங்களின் சட்டசபைகளில் தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்களும்

அடங்கிய வாக்காளரது மன்றத்தின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

ராஷ்டிர பதியைத் தேர்ந் தெடுக்கும் விதம்.

55. (1) ராஷ்டிரபதியின் தேர்தலில், வெவ்வேறு ராஜ் யங்களின் பிரதிநிதித்துவ விகிதம், முடிந்த வரை, ஒருபடித் தாக இருக்கவேண்டும்.

---

1 ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 54-வது 55-வது பிரிவுகளில், மக்கட் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களையும் அத்தகைய ஒவ்வோர் அங்கத்தினரையும் பற்றிய குறிப்பீட்டில், அச்சபையி லுள்ள ஜம்மு-காஷ்மீர் ராஜ்யப் பிரதிநிதிகள் பற்றிய குறிப்பீடும் அடங்கும் ; அந்த ராஜ்யத்தின் ஜனத்தொகை நாற்பத்து நான்கு லக்ஷத்து பதினாயிரம் ஏனக் கருதப்படும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 55—56

(2) ராஜ்யங்களின் இடையே அத்தகைய ஒருபடித்தான தன்மையையும், ராஜ்யங்கள் முழுமைக்கும் யூனியனுக்கும் இடையே சமத்துவத்தையும் ஏற்படுத்துவதன்பொருட்டு, பார்லிமெண்டானும் ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டசபையாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் அங்கத்தினரும் அத்தகைய தேர்தலில் கொடுக்க உரிமையுள்ள வோட்டுக்களின் எண்ணிக்கை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட வேண்டும் :—

(அ) ஒரு ராஜ்யத்தின் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் ஒவ்வொருவரும், அந்த ராஜ்யத்தின் ஜனத் தொகையை அச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுத்துக் கிடைக்கும் ஈவில் ஆயிரத்தின் மடங்குகள் எத்தனை உண்டோ அத்தனை வோட்டுக்கள் உடையவர் ஆவார் ;

(ஆ) மேற்சொன்ன ஆயிரத்தின் மடங்குகளை எடுத்த பிறகு உள்ள மீதம் ஐந்நூற்றுக்குக் குறையாமல் இருந்தால், அப்போது (அ) உட்பகுதியில் குறிப்பிட்ட ஒவ்வோர் அங்கத்தினரின் வோட்டும் மேலும் ஒன்றால் அதிகப்படுத்தப்படும் ;

(இ) பார்லிமெண்டுச் சபை எதற்கேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் ஒவ்வொருவரும், (அ), (ஆ) உட்பகுதிகளின்கீழ், ராஜ்யங்களுடைய சட்டசபைகளின் அங்கத்தினர்களுக்கு அளிக்கப்படும் வோட்டுக்களின் மொத்த எண்ணிக்கையைப் பார்லிமெண்டின் இரு சபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுத்து—பாதிக்கு மேற்பட்ட பின்னங்களை ஒன்றெனக்—கணக்கிட்டும் மற்றைய பின்னங்களை நிராகரித்தும்—கிடைக்கும் எண்ணிக்கை உள்ள வோட்டுக்களை உடையவர் ஆவார்.

(3) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வோட்டு மூலமாய் ராஷ்டிரபதியின் தேர்தல் நடத்தப்படவேண்டும் ; அத்தகைய தேர்தலில் வோட்டு அளிப்பது ரகசிய வோட்டு முறைப்படி இருக்கவேண்டும்.

விளக்கம்.—இப் பிரிவில், "ஜனத்தொகை" என்னும் பதம் பொருத்தமான புள்ளி விவரங்கள் பிரசுரிக்கப்பட்ட தாயும் முந்திய கடைசி ஜன சங்கியையில் கண்டறிந்ததாயும் உள்ள ஜனத்தொகை என்று பொருள்படும்.

ராஷ்டிரபதியின் பதவிக் காலம்.

56. (1) ராஷ்டிரபதி தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஐந்து வருஷ காலம் பதவி வகிப்பார்

எனினும்—

(அ) ராஷ்டிரபதி, தாம் கையெழுத்துச் செய்து உப-ராஷ்டிரபதியின் விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலமாகத் தமது பதவியை ராஜிநாமாச் செய்யலாம் ;

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 56—59.

(ஆ) ராஷ்டிரபதி, இந்த அரசியல் அமைப்பை மீறி நடந்ததற்காக 61-வது பிரிவில் ஏற்படுத்தியபடி பெருங் குற்றச்சாட்டு மூலமாக உத்தியோகத் திலிருந்து நீக்கப்படலாம் ;

(இ) ராஷ்டிரபதி, தமது பதவிக் காலம் முடிவடைந் திருந்தாலும், தமக்குப் பின்வருபவர் பதவி ஏற் கும் வரை தொடர்ந்து பதவி வகித்து வர வேண்டும்.

(2) (1)-ம் பகுதியின் விலக்கு-நிபந்தனையின் (அ) பகு தியின் கீழ், உப-ராஷ்டிரபதிக்கு விலாசமிட்டு அனுப்பிய எந்த ராஜிநாமாவும் அவரால் மக்கட்சபையின் சபாநாய கருக்கு உடனே அனுப்பப்படவேண்டும்.

மீண்டும் தேர்ந் தெடுக்கப் படுவதற்கு அருகதை.

57. ராஷ்டிரபதியாகப் பதவி வகிக்கும் அல்லது வகித்த ஒருவர் இந்த அரசியல் அமைப்பின் மற்றைய ஷரத்துக்களுக்கு உட்பட்டு அப்பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட அருகர் ஆவார்.

ராஷ்டிர பதியாகத் தேர்ந்- தெடுக்கப் படுவதகுத் தகுதிகள்.

58. (1) ஒருவர்—

(அ) இந்தியக் குடியாகவும்,

(ஆ) முப்பத்தைந்து வயது நிரம்பியவராகவும்,

(இ) மக்கட்சபையின் அங்கத்தினராகத் தேர்ந் தெடுக்கப்படத் தகுதி உள்ளவராகவும்

இருந்தாலன்றி, அவர் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு அருகர் ஆகார்.

(2) ஒருவர், இந்தியச் சர்க்காரின் கீழாவது அல்லது ஒரு ராஜ்ய சர்க்காரின் கீழாவது மேற்சொன்ன எந்தச் சர்க் காரின் ஆதிக்கத்திற்கும் உட்பட்ட ஒரு பிரதேச அல்லது மற்றைய அதிகாரியின் கீழாவது லாபம் தரும் உத்தியோகம் எதையும் வகித்தால், அவர் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக் கப்படுவதற்கு அருகர் ஆகார்.

விளக்கம்.—இப் பிரிவைப் பொறுத்தவரை, ஒருவர், யூனியனின் ராஷ்டிரபதியாகவோ, உப-ராஷ்டிரபதியாகவோ அல்லது ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலராகவோ [1] ** அல்லது யூனியனுக்காவது ஒரு ராஜ்யத்திற்காவது மந்திரியாகவோ இருப்பதால் மட்டும், அவர் லாபம் தரும் உத்தியோகம் வகிப்பவராகக் கருதப்படமாட்டார்.

ராஷ்டிர பதியின் பதவி பற்றிய நிபந் தனைகள்.

59. (1) ராஷ்டிரபதி பார்லிமெண்டுச் சபை எதிலும் அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை எதிலும் அங்கத்தினராய் இருத்தலாகாது ; மேலும், பார்லிமெண்டின் இரு சபைகளில் எதிலும் அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்ட

1 "ராஜ்யப் பிரமுகராகவோ அல்லது உப-ராஜ்யப் பிரமுகராகவோ" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

மன்றத்தின் சபை எதிலும் அங்கத்தினராயுள்ள ஒருவர் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ராஷ்டிரபதியாகத் தமது பதவியை ஏற்கும் தேதியன்று அச்சபையில் தமது ஸ்தானத்தைக் காலி செய்து விட்டதாகக் கருதப்படுவார்.

(2) ராஷ்டிரபதி லாபம் தரும் மற்றெந்த உத்தியோகத்தையும் வகித்தலாகாது.

(3) ராஷ்டிரபதி தமது பதவிக்குரிய இருப்பிடங்களை வாடகை செலுத்தாமல் உபயோகித்துக்கொள்ள உரிமை உள்ளவர் ஆவார்; மேலும், பார்லிமெண்டால் சட்டத்திஞல் நிர்ணயிக்கப்படும் ஊதியங்கள், படிகள், விசேஷ உரிமைகள் ஆகியவற்றிற்கும் அப்படி அவற்றிற்கான ஏற்பாடு செய்யப்படும் வரை, இரண்டாம் தபசிலில் குறிக்கப்பட்ட ஊதியங்கள், படிகள், விசேஷ உரிமைகள் ஆகியவற்றிற்கும் உரியவர் ஆவார்.

(4) ராஷ்டிரபதியின் ஊதியங்களையும் படிகளையும் அவருடைய பதவிக் காலத்தில் குறைத்தலாகாது.

ராஷ்டிரபதியின் பிரமாணம் அல்லது உறுதிமொழி.

60. ராஷ்டிரபதி ஒவ்வொருவரும் ராஷ்டிரபதியாக வேலை பார்க்கும் அல்லது ராஷ்டிரபதியின் அலுவல்களைச் செய்துவரும் ஒவ்வொருவரும், தமது பதவியை ஏற்பதற்குமுன், இந்தியாவின் பிரதம நீதிபதியின் முன்னிலையிலாவது அவர் இல்லாதிருந்தால் உச்ச நீதிமன்றத்து நீதிபதிகளாய் அங்குள்ளவர்களில் சேவையிலே மூத்தவரின் முன்னிலையிலாவது பின்வரும் முறையில் ஒரு பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்து கையெழுத்திடவேண்டும்: அதாவது—

"(அ), (ஆ) ஆகிய நான் இந்தியாவின் ராஷ்டிரபதிப் பதவியை நெறிமுறையாக, நிர்வகிப்பேன் (அல்லது ராஷ்டிரபதியின் அலுவல்களை நிறைவேற்றுவேன்) என்றும், அரசியல் அமைப்பையும் சட்டங்களையும் என்னுடைய முழுத் திறமையுடன் பேணி, ஆதரித்துப் பாதுகாப்பேன் என்றும், இந்தியாவின் மக்களுடைய சேவைக்கும் நல் வாழ்வுக்கும் என்னை அர்ப்பணம் செய்வேன் என்றும்

கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்
மனப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்."

ராஷ்டிரபதியின் மீது பெருங் குற்றச்சாட்டுக்கான நடைமுறை.

61. (1) அரசியல்அமைப்பை மீறி நடந்ததற்காக ராஷ்டிரபதியைப் பெருங் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கவேண்டுமானால், பார்லிமெண்டுச்சபை ஒன்றுல் அக் குற்றச்சாட்டு கொணரப்படவேண்டும்.

(2) அத்தகைய குற்றச்சாட்டு எதுவும்—

(அ) அத்தகைய குற்றச்சாட்டைக் கொணருவதற்கான கோரிக்கை அடங்கியுள்ள தீர்மானத்தைப் பிரேரேபித்தலைப் பற்றிய தங்கள் உத்தேசத்தை அச்சபையின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் கால் பங்குக்குக் குறையாதவர்கள் கையெழுத்திட்டு எழுத்து மூலமாகக் குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னதாக அறிவித்த பிறகு, அப்படிப் பிரேரேபிக்கப்பட்ட தீர்மானத்தில் அடங்கியிருந்தாலன்றியும்,

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 61—64

(ஆ) அச் சபையின் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக் குறையாத பெரும்பான்மையோரால் அத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றியும்

கொணரப்படலாகாது.

(3) பார்லிமெண்டுச் சபை ஒன்றுல் ஒரு குற்றச்சாட்டு அப்படி கொணரப்பட்டிருந்தால், மற்றையச் சபை அக் குற்றச் சாட்டை விசாரிக்க வேண்டும், அல்லது அந்தக் குற்றச் சாட்டை விசாரிக்கும்படி செய்ய வேண்டும் ; ராஷ்டிரபதி அத்தகைய விசாரணையில் ஆஜராகவும் பிரதிநிதி அமர்த்தவும் உரிமை உள்ளவர் ஆவார்.

(4) அவ் விசாரணையின் விளைவாக, அந்தக் குற்றச் சாட்டை விசாரித்த அல்லது விசாரிக்கும்படி செய்த சபையில் உள்ள அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையோரால், ராஷ்டிரபதியின்மீது கொணரப்பட்ட குற்றச்சாட்டு மெய்ப் பிக்கப்பட்டதென்று அறிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டிருந்தால், அப்படி நிறைவேற்றப்பட்ட தேதியி லிருந்து ராஷ்டிரபதியை அவர் பதவியிலிருந்து நீக்கிவிடும் பயனை அத் தீர்மானம் உடையதாகும்.

ராஷ்டிர பதியின் பதவியில் நேரிடும் காலி ஸ்தானத்தை நிரப்புவ தற்காகத் தேர்தல் நடத்தும் காலமும், இடையில் நேரிடும் காலி ஸ்தானத்தை நிரப்பு வதற்காகத் தேர்ந் தெடுக்கப் பட்டவ ருடைய பதவிக் காலமும்.

62. (1) ராஷ்டிரபதியின் பதவிக் காலம் முடிவடை வதனுல் ஏற்படும் காலி ஸ்தானத்தை நிரப்புவதற்கான தேர்தல் அக் காலம் முடிவடைவதற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(2) ராஷ்டிரபதியின் மரணம், ராஜிநாமா அல்லது நீக்கம் காரணமாக அல்லது வேறுவிதமாக அவருடைய பதவியில் காலி ஏற்பட்டால், அதை நிரப்புவதற்கான தேர்தல் அக் காலி ஏற்பட்ட தேதிக்குப் பிறகு இயன்ற விரைவிலும், எப்படியும் அதிலிருந்து ஆறு மாதத்திற்கு மேற்படாமலும் நடத்தப்படவேண்டும் ; அக் காலி ஸ்தானத்தை நிரப்பத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 56-வது பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து பதவிக் கால மாகிய ஐந்து வருஷம் முழுவதும் பதவி வகிக்க உரிமை உள்ளவர் ஆவார்.

இந்தியாவின் உப-ராஷ் டிரபதி.

63. இந்தியாவின் உப-ராஷ்டிரபதி என்று ஒருவர் இருக்க வேண்டும்.

உப-ராஷ் டிரபதி தம் உத்தியோக முறைமை யில் ராஜ்யப் பரிஷத்தின் அக்கிராச னராக இருத்தல்.

64. உப-ராஷ்டிரபதி தம் உத்தியோக முறைமையில் ராஜ்ய பரிஷத்தின் அக்கிராசனராயிருப்பார் ; அவர் லாபம் தரும் வேறெந்த உத்தியோகமும் வகிக்கலாகாது :

எனினும், உப-ராஷ்டிரபதி 65-வது பிரிவின்கீழ் ராஷ்டிர பதியாக வேலை பார்க்கும் அல்லது ராஷ்டிரபதியின் அலுவல் களைச் செய்து வரும் காலத்தில், அவர் ராஜ்யப் பரிஷத்தின்

அக்கிராசனப் பதவியின் கடமைகளைச் செய்யலாகாது; மேலும், 97-வது பிரிவின்கீழ் ராஜ்யப் பரிஷத்தின் அக்கிராசனருக்கு அளிக்கப்படும் சம்பளம் அல்லது படி எதற்கும் அவர் உரியவர் ஆகார்;

ராஷ்டிரபதிப் பதவியில் இடையில் நேரிடும் காலியிலும் அல்லது ராஷ்டிரபதி இல்லாத போதும் உப-ராஷ்டிரபதி ராஷ்டிரபதியாக வேலை பார்த்தல் அல்லது அவருடைய அலுவல்களைச் செய்தல்.

65. (1) ராஷ்டிரபதியின் மரணம், ராஜிநாமா அல்லது நீக்கம் காரணமாக, அல்லது வேறுவிதமாக அவருடைய பதவியில் காலி ஏற்பட்டால், அதை நிரப்புவதற்கு இந்த அத்தியாயத்தின் ஷரத்துக்களின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ராஷ்டிரபதி ஒருவர் தமது பதவியை ஏற்கும் தேதி வரை உப-ராஷ்டிரபதியே ராஷ்டிரபதியாக வேலை பார்ப்பார்.

(2) ராஷ்டிரபதி தமது இடத்தில் இல்லாததாலோ, நோயுற்றதாலோ அல்லது வேறெக்காரணத்தாலோ தம் அலுவல்களைச் செய்ய முடியாமலிருந்தால், மீண்டும் அவர் கடமைகளை மேற்கொள்ளும் தேதி வரை உப-ராஷ்டிரபதி அவருடைய அலுவல்களைச் செய்ய வேண்டும்.

(3) உப-ராஷ்டிரபதி அப்படி ராஷ்டிரபதியாக வேலை பார்க்கும் அல்லது அவருடைய அலுவல்களைச் செய்யும் காலத்திலும் அது சம்பந்தமாகவும், அவர் ராஷ்டிரபதியின் எல்லாச் சக்திகளையும், பாதுகாப்புக்களையும் உடையவர் ஆவார். மேலும், பார்லிமெண்டால் சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் ஊதியங்களுக்கும் படிகளுக்கும் விசேஷ உரிமைகளுக்கும், அப்படி அதற்கென ஏற்பாடு செய்யும் வரை, இரண்டாவது தபசிலில் குறிக்கப்பட்ட ஊதியங்களுக்கும் படிகளுக்கும் விசேஷ உரிமைகளுக்கும் அவர் உரியவர் ஆவார்.

உப-ராஷ்டிரபதியின் தேர்தல்.

66. (1) பார்லிமெண்டின் இரு சபைகளின் அங்கத்தினர்கள் ஒருங்கு கூடிய கூட்டம் ஒன்றில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வோட்டு மூலமாய் உப-ராஷ்டிரபதி தேர்ந்தெடுக்கப்படவேண்டும்; அத் தேர்தலில் வோட்டு அளிப்பது ரகசிய வோட்டு முறைப்படி இருக்க வேண்டும்.

(2) உப-ராஷ்டிரபதி பார்லிமெண்டுச் சபை எதிலும் அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையில் அங்கத்தினராக இருக்கலாகாது; மேலும், பார்லிமெண்டுச் சபைகளில் ஒன்றில் அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையில் அங்கத்தினராயுள்ள ஒருவர் உப-ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் அச்சபையில் தமது ஸ்தானத்தை உப-ராஷ்டிரபதியாகத் தமது பதவி ஏற்கும் தேதியன்று காலி செய்துவிட்டதாகக் கருதப்படுவார்.

(3) ஒருவர்—

(அ) இந்தியாவின் குடியாகவும்,

(ஆ) முப்பத்தைந்து வயது நிரம்பியவராகவும்,

(இ) ராஜ்யப்பரிஷத்தின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவராகவும்

இருந்தாலன்றி, அவர் உப-ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அருகர் ஆகார்.

(4) ஒருவர் இந்தியச் சர்க்காரின் அல்லது ஒரு ராஜ்யத்தின் சர்க்காரின் கீழாவது அந்தச் சர்க்கார்களில் யாதொன்றின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் ஒரு பிரதேச

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 66–68.

அதிகாரி அல்லது வேறு அதிகாரியின் கீழாவது லாபம் தரும் உத்தியோகம் எதையேனும் வகித்தால், அவர் உப-ராஷ்டிர பதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அருகர் ஆகார்.

விளக்கம்.—இப்பிரிவின் விஷயங்களுக்காக, ஒருவர் யூனியனின் ராஷ்டிரபதியாகவோ, உப-ராஷ்டிரபதியாகவோ, அல்லது ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலராகவோ, [1] * * * * * * * * * * * * * * * அல்லது யூனியனுக்காவது ஒரு ராஜ்யத்திற்காவது மந்திரியாகவோ இருப்பதால் மட்டும் அவர் லாபம் தரும் உத்தியோகத்தை வகிப்பவராகக் கருதப்பட மாட்டார்.

67. உப-ராஷ்டிரபதி தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஐந்து வருஷக் காலம் பதவி வகிப்பார் : உப-ராஷ்டிரபதியின் பதவிக் கால அளவு.

எனினும்—

(அ) உப-ராஷ்டிரபதி தாம் கையெழுத்துச் செய்து ராஷ்டிரபதியின் விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலம் தமது பதவியை ராஜிநாமாச் செய்யலாம் ;

(ஆ) ராஜ்யப் பரிஷத்தில் அப்போதைய அங்கத்தினர் அனைவரின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப் பட்டு, மக்கட்சபையால் ஒத்துக்கொள்ளப்பட்ட அப்பரிஷத்தின் தீர்மானத்தால் உப-ராஷ்டிரபதி அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாம்; ஆனால், இப்பகுதியின் விஷயத்துக்காகத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும் உத்தேசத்தைக் குறித்துக் குறைந்தது பதினைந்து நாள் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய தீர்மானம் எதுவும் பிரேரேபிக்கப் படலாகாது ;

(இ) உப-ராஷ்டிரபதி, தமது பதவிக் காலம் முடிவடைந்திருந்தாலும், தமக்குப் பின்வருபவர் தமது பதவி ஏற்கும் வரை தொடர்ந்து பதவி வகித்து வரவேண்டும்.

68. (1) உப-ராஷ்டிரபதியின் பதவிக் காலம் முடிவடைவதால் ஏற்படும் காலி ஸ்தானத்தை நிரப்புவதற்கான தேர்தல் அக்காலம் முடிவடைவதற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். உப-ராஷ்டிரபதியின் பதவியில் நேரிடும் காலியை நிரப்புவதற்காகத் தேர்தல் நடத்தும் காலமும், இடையில் நேரிடும் காலியை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருடைய பதவிக் காலமும்.

(2) உப-ராஷ்டிரபதியின் மரணம், ராஜிநாமா அல்லது நீக்கம் காரணமாக, அல்லது வேறு விதமாக அவருடைய பதவியில் காலிஏற்பட்டால், காலி ஏற்பட்ட தேதிக்குப் பிறகு இயன்றவிரைவில் அதை நிரப்புவதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் ; அக்காலி ஸ்தானத்தை நிரப்பத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 67-வது பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து பதவிக் காலமாகிய ஐந்து வருஷம் முழுவதும் பதவி வகிக்க உரிமை உள்ளவர் ஆவார்.

---

[1] "ராஜப் பிரமுகராகவோ, உப-ராஜப் பிரமுகராகவோ" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 68–72.

உப-ராஷ்டிரபதியின் பிரமாணம் அல்லது உறுதி மொழி.

69. உப-ராஷ்டிரபதி ஒவ்வொருவரும் தமது பதவியை ஏற்பதற்குமுன் ராஷ்டிரபதியின் அல்லது அதற்கென அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரின் முன்னிலையில் பின்வரும் முறையில் ஒரு பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்து கையெழுத்திடவேண்டும் ; அதாவது—

"அ. ஆ. ஆகிய நான், சட்டத்தினுல் ஏற்படுத்தப் பட்ட இந்திய அரசியல் அமைப்பில் உண்மையான நம்பிக்கையும், பக்தியும் கொண்டிருப்பேன் என்றும், நான் ஏற்கப்போகும் கடமையை நெறிமுறையில் நிறைவேற்றுவேன் என்றும்
கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்"
மனப் பூர்வமாக உறுதி கூறுகிறேன்."

தற்செயலாய் நேரக்கூடிய மற்றையச் சந்தர்ப்பங்களில் ராஷ்டிரபதியின் அலுவல்கள் செய்யப்படுதல்.

70. இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்படாததும் தற்செயலாய் நேரிடக்கூடியதும் ஆகிய எந்தச் சந்தர்ப்பத்திலும் ராஷ்டிரபதியின் அலுவல்கள் நிறைவேற்றப்படுவதற்காகப் பார்லிமெண்டு தனக்குத் தகுதியாகத் தோற்றும் எத்தகைய ஏற்பாட்டையும் செய்யலாம்.

ராஷ்டிரபதியின் அல்லது உப-ராஷ்டிரபதியின் தேர்தலைப் பற்றிய அல்லது அது சம்பந்தமான விஷயங்கள்.

71. (1) ராஷ்டிரபதியின் அல்லது உப-ராஷ்டிரபதியின் தேர்தலிலிருந்தாவது அது சம்பந்தமாகவாவது எழும் எல்லாச் சந்தேகங்களும் விவாதங்களும் உச்ச நீதிமன்றத்தால் விசாரித்துத் தீர்மானிக்கப்படவேண்டும். அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

(2) ஒருவர் ராஷ்டிரபதியாகவோ உப-ராஷ்டிரபதியாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டது வியர்த்தமானது என்று உச்ச நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டிருந்தால், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் தேதியன்றுவது அதற்கு முன்னுவது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அவர் ராஷ்டிரபதியின் அல்லது உப-ராஷ்டிரபதியின் பதவிக்குரிய அதிகாரங்களையும் கடமைகளையும் கையாளுகையிலும், செய்கையிலும், அவரால் செய்யப்பட்ட காரியங்கள் அந்த அறிவிப்பினுல் செல்லாதனவாக ஆக்கப்படமாட்டா.

(3) இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ராஷ்டிரபதியின் அல்லது உப-ராஷ்டிரபதியின் தேர்தலைப்பற்றிய அல்லது அது சம்பந்தமான எவ்விஷயத்தையும் பார்லிமெண்டு சட்டத்தினுல் முறைப்படுத்தலாம்.

மன்னித்தல் வகையரா அளிக்கவும், குற்றத் தீர்ப்புக்களை நிறுத்தவும், தவிர்க்கவும் அல்லது மாற்றவும் ராஷ்டிரபதிக்குள்ள சக்தி.

72. (1) ராஷ்டிரபதி—

(அ) ஒரு ராணுவ நீதிமன்றத்தால் தண்டனை அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும் போதெல்லாம்,

(ஆ) யூனியனின் நிர்வாக சக்தி வியாபிக்கும் ஒரு விஷயத்தைப் பற்றிய எச்சட்டத்தையும் மீறிய குற்றத்திற்காகத் தண்டனை அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும் போதெல்லாம்,

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 72–73

(இ) குற்றத்தீர்ப்பு மரணத்தீர்ப்பாக உள்ள போதெல்லாம்,

தண்டனையை மன்னித்தல், தடுத்தல், நிறுத்தல் அல்லது தவிர்த்தல் செய்யவும், குற்றப்படுத்தப்பட்ட ஒருவருடைய குற்றத்தீர்ப்பை நிறுத்தவும் தவிர்க்கவும் மாற்றவும் சக்தி உடையவர் ஆவார்.

(2) ஒரு ராணுவ நீதிமன்றத்தால் செய்யப்பட்ட குற்றத்தீர்ப்பை நிறுத்தவும் தவிர்க்கவும் அல்லது மாற்றவும், யூனியனின் ஆயுதப் படைகளைச் சேர்ந்த எந்த உத்தியோகஸ்தருக்கேனும் சட்டத்திஞல் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை (1)-ம் பகுதியின் (அ) உட்பகுதியில் உள்ளது எதுவும் பாதிக்காது.

(3) அச்சமயம் அமுலிலுள்ள எச்சட்டத்தின் கீழேனும் மரணத்தீர்ப்பை நிறுத்தவும், தவிர்க்கவும் அல்லது மாற்றவும் ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலரால் [1] * * * * * * செலுத்தப்படக்கூடிய அதிகாரத்தை (1)-ம் பகுதியின் (இ) உட்பகுதியில் உள்ளது எதுவும் பாதிக்காது.

யூனியனின் நிர்வாகச் சக்தியின் வியாபகம்.

[2] 73. (1) இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, யூனியனின் நிர்வாகச் சக்தி—

(அ) பார்லிமெண்டு சட்டம் செய்ய அதிகாரம் உடைய விஷயங்களுக்கும்

(ஆ) ஓர் உடன்படிக்கை அல்லது கரூர்நாமா காரணமாக இந்தியச் சர்க்காரால் செலுத்தப்படக்கூடிய உரிமைகளையும், அதிகாரத்தையும், விசாரணை-அதிகாரத்தையும் செலுத்துவதற்கும்

வியாபிக்கும் :

எனினும், [3] * * * * * * ஒரு ராஜ்யத்தில், அந்த ராஜ்யத்தின் சட்டமன்றமும் சட்டங்கள் செய்ய அதிகாரம் பெற்றுள்ள எந்த விஷயங்களுக்கும் (அ) உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட நிர்வாகச் சக்தி, இந்த அரசியல் அமைப்பிலாவது பார்லிமெண்டால் செய்யப்பட்ட எச்சட்டத்திலாவது வெளிப்படையாக ஏற்பாடு செய்தவாறன்றி, வியாபிக்காது.

(2) பார்லிமெண்டால் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்படும்வரை, ஒரு ராஜ்யமும் ஒரு ராஜ்யத்தின் உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரி எவரும், இப்பிரிவில் எவ்வாறு இருப்பினும், அந்த ராஜ்யத்துக்காகச் சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உள்ள விஷயங்களில், இந்த

---

[1] "அல்லது ராஜ்யப் பிரமுகரால்" என்னும் சொற்கள், 1956-ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 73-வது பிரிவின் (1)-ம் பகுதியைச் சேர்ந்த விலக்கு நிபந்தனையில், "இந்த அரசியல்அமைப்பிலாவது பார்லிமெண்டால் செய்யப்பட்ட எச் சட்டத்திலாவது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இந்த அரசியல்அமைப்பில்" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

[3] "முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது, (ஆ) பாகத்திலாவது சொல்லப்பட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 73–76.

அரசியல்அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அந்த ராஜ்யமாவது அல்லது அதன் உத்தியோகஸ்தராவது அதிகாரியாவது செலுத்தக்கூடிய நிர்வாகச் சக்தியையேனும் அலுவல்களேயேனும் நடத்திவரலாம்.

மந்திரிச பை

ராஷ்டிரபதிக்கு உதவி புரிவதற்கும் ஆலோசனை கூறுவதற்கும் மந்திரி சபை.

74. (1) ராஷ்டிரபதி தம்முடைய அலுவல்களைச் செய்கையில் அவருக்கு உதவி புரியவும் ஆலோசனை கூறவும் பிரதான மந்திரியைத் தலைவராக உடைய மந்திரி சபை ஒன்று இருக்க வேண்டும்.

(2) ராஷ்டிரபதிக்கு மந்திரிகளால் ஆலோசனை ஏதேனும் அளிக்கப்பட்டதா, அப்படியானால் அந்த ஆலோசனை யாது என்ற விஷயம் எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படலாகாது.

மந்திரிகளைப் பற்றிய மற்றைய ஷரத்துக்கள்.

75. (1) பிரதான மந்திரி ராஷ்டிரபதியால் நியமிக்கப்படுவார்; மற்றைய மந்திரிகள் பிரதான மந்திரியின் ஆலோசனையின் பேரில் ராஷ்டிரபதியால் நியமிக்கப்படுவார்கள்.

(2) ராஷ்டிரபதிக்கு விருப்பமுள்ள காலம்வரை மந்திரிகள் பதவி வகிப்பார்கள்.

(3) மந்திரிசபை மக்கள்சபைக்குக் கூட்டுப் பொறுப்பு உள்ளதாக இருக்கும்.

(4) மந்திரி ஒருவர் பதவி ஏற்பதற்குமுன், அப்பதவியையும் அந்தரங்கத்தையும் பற்றிய பிரமாணங்களை அதற்கென மூன்றாவது தபசிலில் கண்ட நமூனாக்களின்படி அவருக்கு ராஷ்டிரபதி வழங்கவேண்டும்.

(5) மந்திரி ஒருவர் பார்லிமெண்டுச்சபை எதிலும் தொடர்ச்சியாக ஆறுமாத காலம் அங்கத்தினராயிராவிட்டால் அவர் அந்தக்காலம் முடிவடைந்ததும் மந்திரியாக இருக்க மாட்டார்.

(6) மந்திரிகளின் சம்பளங்களும் படிகளும் பார்லிமெண்டு அவ்வப்போது சட்டத்தினால் நிர்ணயித்தவாறும், அப்படிப் பார்லிமெண்டு நிர்ணயிக்கும்வரை, இரண்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்டவாறும் இருக்கவேண்டும்.

இந்தியாவின் அட்டர்னி—ஜெனரல்.

இந்தியாவின் அட்டர்னி-ஜெனரல்.

76. (1) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமனம் பெறத் தகுதியுள்ள ஒருவரை இந்தியாவின் அட்டர்னி-ஜெனரலாக ராஷ்டிரபதி நியமிக்கவேண்டும்.

(2) அட்டர்னி-ஜெனரல் அவ்வப்போது ராஷ்டிரபதியால் தமக்கு அனுப்பப்பட்ட சட்ட விஷயங்களைக் குறித்து இந்திய சர்க்காருக்கு ஆலோசனை சொல்லவும் தமக்கு இடப்பட்ட சட்ட சம்பந்தமான மற்றைய கடமைகளைச் செய்யவும் இந்த அரசியல் அமைப்பினாலாவது அதன்கீழாவது அச்சமயம் அமுலிலிருக்கும் வேறெந்தச் சட்டத்தினாலாவது அதன்கீழாவது தமக்கு அளிக்கப்பட்ட அலுவல்களைச் செய்யவும் கடமைப்பட்டவர் ஆவார்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 76–79.

(3) அட்டர்னி-ஜெனரல் தம்முடைய கடமைகளைச் செய்கையில், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள எல்லா நீதிமன்றங்களிலும் ஆஜராகி வாதிப்பதற்கு உரிமை உள்ளவர் ஆவார்.

(4) ராஷ்டிரபதிக்கு விருப்பமுள்ள காலம்வரை அட்டர்னி-ஜெனரல் பதவி வகிப்பார்; அவர் ராஷ்டிரபதி நிர்ணயித்தபடி சன்மானம் பெறுவார்.

சர்க்கார் அலுவல் நடைமுறை

இந்தியச் சர்க்காரின் அலுவல் நடைமுறை.

77. (1) இந்தியச் சர்க்காரின் நிர்வாகச் செயல்கள் எல்லாம் ராஷ்டிரபதியின் பெயரால் நடத்தப்படுவனவாகக் கூறப்படவேண்டும்.

(2) ராஷ்டிரபதியின் பெயரால் செய்யப்பட்டதுவும், பிறப்பிக்கப்பட்டவுமான உத்தரவுகளும் மற்றையச் சாசனங்களும் ராஷ்டிரபதியால் செய்யப்படும் [1]விதிகளில் குறிப்பிட்ட விதமாக மெய்ப்பிக்கப்பட வேண்டும்; அப்படி மெய்ப்பிக்கப்பட்ட உத்தரவோ அல்லது சாசனத்தின் செல்திறனே அது ராஷ்டிரபதியால் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அல்லது சாசனம் அன்று என்னும் காரணம் பற்றி ஆட்சேபிக்கப்படலாகாது.

(3) இந்தியச் சர்க்காரின் அலுவலை மேலும் சௌகரியமாக நடத்தவும், அந்த அலுவலை மந்திரிகளினிடையே பகிர்ந்து கொடுக்கவும் ராஷ்டிரபதி விதிகள் செய்யவேண்டும்.

ராஷ்டிரபதிக்குத் தகவல் கொடுத்தல் வகையாசம்பந்தமாகப் பிரதான மந்திரியின் கடமைகள்.

78. பிரதான மந்திரியின் கடமைகள்—

(அ) யூனியனின் காரிய நடைமுறை, சட்டம் செய்வதற்கான பிரேரணைகள் இவைபற்றிய மந்திரி சபையின் சகல தீர்மானங்களையும் ராஷ்டிரபதிக்கு அனுப்புதலும்.

(ஆ) யூனியனின் காரிய நடைமுறை, சட்டம் செய்வதற்கான பிரேரணைகள் இவைபற்றி ராஷ்டிரபதி கேட்கும் தகவலைக் கொடுத்தலும்,

(இ) மந்திரி ஒருவரால் முடிவு செய்யப்பட்டதாயும், மந்திரி சபையால் ஆலோசிக்கப்படாததாயும் உள்ள எந்த விஷயத்தையும், ராஷ்டிரபதி கோரினால், அச் சபையின் ஆலோசனைக்குச் சமர்ப்பித்தலும் ஆகும்.

அத்தியாயம் II—பார்லிமெண்டு

பொது

பார்லிமெண்டின் அமைப்பு.

79. யூனியனுக்குப் பார்லிமெண்டு ஒன்று இருக்க வேண்டும். அது ராஷ்டிரபதியும் முறையே ராஜ்யப்பரிஷத்து என்றும் மக்கட்சபை என்றும் பெயர் வழங்குதற்குரிய இரண்டு சபைகளும் கொண்டதாக இருக்கவேண்டும்.

---

[1] 1950-ம் வருஷம் ஜூன் மாதம் 19-ம் தேதியன்று பிறந்து இந்தியா கெஜட் II-ம் பாகம், 3-ம் பிரிவின் 173-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டு அவ்வப்போது திருத்தப்பட்டுள்ள S.R.O. 167-ம் எண்ணுள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 80–81.

ராஜ்ய பரிஷத்தின் அமைப்பு.

80. (1) ராஜ்யப்பரிஷத்து—

(அ) (3)-ம் பகுதியின் ஷரத்துக்களின்படி ராஷ்டிர பதியால் நியமிக்கப்படும் பன்னிரண்டு அங்கத்தினர்களையும்,

(ஆ) ராஜ்யங்கள் [1] [யூனியன் ஆட்சிப்பரப்புகள் இவற்றின்] பிரதிநிதிகள் இருநூற்றுமுப்பத்தெட்டு பேருக்கு மேற்படாதவர்களையும் கொண்டதாக இருக்கவேண்டும்.

(2) ராஜ்யப்பரிஷத்தில் ராஜ்யங்கள் [1] [யூனியன் ஆட்சிப் பரப்புகள் இவற்றின்] பிரதிநிதிகளால் நிரப்பப்படவேண்டிய ஸ்தானங்களின் பகிர்வுமுறை நான்காம் தபசிலில் இதற்கென அமைத்துள்ள ஷரத்துக்களின்படி இருக்கவேண்டும்.

(3). (1)-ம் பகுதியின் (அ) உட்பகுதியின்கீழ் ராஷ்டிர பதியால் நியமிக்கப்படும் அங்கத்தினர்கள் இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூக சேவை இவை போன்ற விஷயங்களில் விசேஷ அறிவு அல்லது செயல் முறை அனுபவம் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

(4) [2] * * * * ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ராஜ்யப்பரிஷத்தில் உள்ள பிரதிநிதிகள் அந்த ராஜ்யத்தின் சட்ட சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களால் விகிதாசாரப் பிரதிநித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வோட்டு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(5) [3] [யூனியன் ஆட்சிப் பரப்புகளுக்கு] ராஜ்யப் பரிஷத்தில் உள்ள பிரதிநிதிகள் பார்லிமெண்டு சட்டத்தினால் வகுக்கும் முறைப்படி தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

மக்கட் சபையின் அமைப்பு.

(1) 331-வது பிரிவில் உள்ள ஷரத்துக்களுக்கு உட்பட்டு, மக்கட் சபை—

(அ) ராஜ்யங்களில் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளிலிருந்து நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் ஐந்நூற்றுக்கு மேற்படாதவர்களையும்,

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவால் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

[2] "முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது குறிப்பிடப்பட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும் 1956-ம் வருஷத்திய அரசியல் (அ) அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவால் விட்டு விடப்பட்டன.

[3] "முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ராஜ்யங்களுக்கு" என்பதற்குப் பதிலாக, ஷை சட்டத்தின் 3-வது பிரிவால் அமைத்துக் கொள்ளப்பட்டன.

[4] 81-வது, 82-வது பிரிவுகளுக்குப் பதிலாக, ஷை சட்டத்தின் 4-வது பிரிவால் அமைத்துக்கொள்ளப்பட்டன.

குறிப்பு.—அரசியலமைப்பு (முட்டுப்பாடுகள் நிவர்த்தி) VIII-ம் தெ. உத்தரவின் 2-வது பாராவில் அடியிற்கண்டவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது:—

இந்த அரசியலமைப்பின் ஆறுவது தபசிலின் 20-வது பாராவுடன் சேர்த்துள்ள அட்டவணையின் (ஆ) பாகத்தில் குறிப்பிட்ட மலை ஜாதிப் பிரதேசங்கள் அல்லது அவற்றின் எவையேனும் பாகங்கள் அத்தபசிலின் 18-வது பாராவின்

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 81–82.

(ஆ) யூனியன் ஆட்சிப் பரப்புகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக, பார்லிமெண்டு சட்டத்தினால் ஏற்பாடு செய்யக் கூடிய விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இருபதுக்கு மேற்படாதவர்களையும் கொண்டதாக இருத்தல்வேண்டும்.

(2) (1)-ம் பகுதியின் (அ) காரியங்களுக்காக,—

(அ) ராஜ்யம் ஒவ்வொன்றுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் ஸ்தானங்களின் எண்ணிக்கைக்கும் அந்த ராஜ்யத்தின் ஜனத்தொகைக்கும் உள்ள விகிதமானது இயன்றவரையில் எல்லா ராஜ்யங்களுக்கும் சமமாய் இருக்கும் விதத்தில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் மக்கட் சபையில் ஸ்தானங்கள் பிரித்துக் கொடுக்கப்படவேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு தேர்வுத் தொகுதியின் ஜனத்தொகைக்கும் அதற்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள ஸ்தானங்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமானது இயன்றவரையில் ராஜ்யம் எங்கணும் சமமாய் இருக்கும் விதத்தில் ஒவ்வொரு ராஜ்யமும் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளாகப் பிரிக்கப்படவேண்டும்.

(3) இப் பிரிவில், "ஜனத்தொகை" என்பது பொருத்தமான புள்ளி விவரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ள அடுத்து முந்திய ஜனசங்கியையில் கண்டறியப்பட்ட ஜனத்தொகை என்று பொருள்படும்.

ஒவ்வொரு ஜன சங்கியைக்குப் பிறகும் திருத்தி அமைத்தல்.

82. ஒவ்வொரு ஜனசங்கியையும் முடிவடைந்ததும், ராஜ்யங்களுக்கு மக்கட் சபையில் ஸ்தானங்கள் பிரித்துக் கொடுப்பதும் ஒவ்வொரு ராஜ்யத்தையும் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளாகப் பிரிப்பதும் பார்லிமெண்டு சட்டத்தினால் நிர்ணயிக்கும் அதிகாரியாலும், விதத்திலும் திருத்தியமைக்கப்படவேண்டும்.

எனினும், அப்படித் திருத்தியமைப்பது அப்போதுள்ள மக்கட் சபையின் கலைப்புவரை அச் சபையிலுள்ள பிரதிநிதித்துவத்தைப் பாதிக்காது.]

---

(2)-ம் உப-பாராவினால் ராஷ்டிரபதியால் நிர்வகிக்கப்படும் கால அளவில் இந்திய அரசியல்அமைப்பு கீழ்க்கண்ட இணக்கங்களுக்கு உட்பட்டுச் செல்தினால்தாகும் :—

81-வது பிரிவில்,—

(அ) (1)-ம் பகுதியின் (ஆ) உட்பகுதியில், "யூனியன் ஆட்சிப் பரப்புகளை" "என்னும் சொற்களுக்குப் பதிலாக, யூனியன் ஆட்சிப் பரப்புகளையும் ஆறுவது தபசிலின் 20-வது பாராவுடன் சேர்த்துள்ள அட்டவணையின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட மலை ஜாதிப் பிரதேசங்களையும்" என்னும் சொற்களையும் எழுத்தையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும் ;

(ஆ) (2)-ம் பகுதியுடன் கீழ்க்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் ; அதாவது :—

"அஸ்ஸாம் ராஜ்யத்தில் பிரித்துள்ள தேர்வுத் தொகுதிகளில், ஆறுவது தபசிலின் 20-வது பாராவுடன் சேர்த்துள்ள அட்டவணையின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட மலை ஜாதிப் பிரதேசங்கள் அடங்க மாட்டா."

மக்கட் சபையில் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குள்ள பிரதிநிதிகள் அந்த ராஜ்ய சட்டமன்றத்தின் சிபார்சின் பேரில் ராஷ்டிரபதியால் நியமிக்கப்பட வேண்டும் என்னும் மாற்றத்துக்கு உட்பட்டு, 81-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகிக்கப்படும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 83–85.

பார்லி மெண்டுச் சபைகள் நீடித்திருக்கும் காலம்.

83. (1) ராஜ்யப்பரிஷத்து கலைக்கப்படமாட்டாது ; ஆனால், பார்லிமெண்டால் இதற்கெனச் சட்டத்தினால் செய்யப்பட்ட ஏற்பாடுகளின்படி ஒவ்வோர் ஈராண்டின் முடிவிலும் இயன்ற விரைவில் ராஜ்யப்பரிஷத்தின் அங்கத்தினர்களில் கிட்டிய அளவு மூன்றிலொரு பகுதியார் விலகிக் கொள்ளவேண்டும்.

(2) மக்கட்சபையானது அதன் முதல் கூட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருஷ காலம், அதற்கு இடையே கலைக்கப்பட்டாலன்றி, நீடித்திருக்கும் ; அதற்குமேல் இருக்கலாகாது ; மேற்சொன்ன ஐந்து வருஷ காலத்தின் முடிவே அச் சபையின் கலைப்பை விளைக்கும் திறனுடையதாகும்.

எனினும், ஆபத்து நிலைப் பிரகடனம் ஒன்று அமுலில் இருக்கும்போது, ஒரு தடவைக்கு ஒரு வருஷத்துக்கு மேற்படாமலும் அப் பிரகடனம் அமுலற்றுப்போனதிலிருந்து எப்படியும் ஆறுமாத காலத்திற்கு மேற்படாமலும் பார்லிமெண்டு சட்டத்தினால் மேற்சொன்ன காலத்தை நீட்டித்துவைக்கலாம்.

பார்லி மெண்டு அங்கத்தினரின் பதவிக்குரிய தகுதி.

84. ஒருவர்—

(அ) இந்தியாவின் குடியாகவும்,

(ஆ) ராஜ்யப்பரிஷத்தின் ஸ்தானமானால் முப்பது வயதுக்குக் குறையாதவராகவும், மக்கட் சபையின் ஸ்தானமானால் இருபத்தைந்து வயதுக்குக் குறையாதவராகவும்,

(இ) பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தினாலோ அல்லது அதன் கீழோ இதற்கென விதிக்கப்படும் மற்றைய தகுதிகளை உடையவராகவும்

இருந்தாலன்றி, பார்லிமெண்டில் ஒரு ஸ்தானம் வகிப்பதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவர் ஆகார்.

பார்லி மெண்டின் நடைக் காலமும் அதை ஒத்திப் போடுதலும் கலைத்தலும்.

[1][85. (1) ராஷ்டிரபதி பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றையும் தாம் தகுதியெனக் கருதும் காலத்திலும் இடத்திலும் கூடும்படி அவ்வப்போது அழைக்கவேண்டும். ஆனால், ஒரு நடைக் காலத்தில் அதன் கடைசிக் கூட்டத்திற்கும் அடுத்த நடைக் காலத்தில் அதன் முதல் கூட்டத்திற்காக நியமிக்கப்படும் தேதிக்கும் நடுவே ஆறுமாத காலம் இடைப்படலாகாது—

(2). ராஷ்டிரபதி அவ்வப்போது—

(அ) அச்சபைகளையோ அவற்றில் ஒரு சபையையோ காலவரையின்றி ஒத்திப்போடலாம்.

(ஆ) மக்கட் சபையைக் கலைக்கலாம்.]

---

[1] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 6-வது பிரிவினால், அமுல் பிரிவுக்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 86-89.

சபைகளில் உரையாற்றவும் அவைகளுக்கு நிருபங்கள் அனுப்பவும் ராஷ்டிரபதிக்குள்ள உரிமை.

86. (i) பார்லிமெண்டுச் சபை எதிலாவது அல்லது ஒருங்கு கூடிய இரு சபைகளிலாவது ராஷ்டிரபதி உரையாற்றலாம் ; அதன்பொருட்டு அங்கத்தினர்கள் வந்திருக்கவேண்டுமென்று அவர் பணிக்கலாம்.

(2) பார்லிமெண்டில் அப்போது முடிவுபெறாதிருக்கும் ஒரு மசோதா விஷயமாகவேனும் மற்றைய வகையிலேனும் பார்லிமெண்டுச் சபை எதற்கும் ராஷ்டிரபதி நிருபங்கள் அனுப்பலாம் ; அப்படி நிருபம் அனுப்பப் பெற்ற சபை அந்நிருபத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணித்த எந்த விஷயத்தையும் சௌகரியக் குறைவின்றி அதிவிரைவில் ஆலோசித்தல்வேண்டும்.

ராஷ்டிரபதியின் விசேஷ உரையாற்றல்.

87. (1) [1][மக்கட் சபைக்காக நடக்கும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கும் பின்னதான முதல் நடைக்காலத்தின் தொடக்கத்திலும் ஒவ்வொரு வருஷத்தின் முதல் நடைக்காலத்தின் தொடக்கத்திலும்] ராஷ்டிரபதி பார்லிமெண்டின் ஒருங்குகூடிய இரு சபைகளிலும் உரையாற்றல் வேண்டும் ; பார்லிமெண்டை அழைத்த காரணங்களை அதற்குத் தெரிவிக்கவும் வேண்டும்.

(2) இரு சபைகளில் எதன் நடைமுறையையும் ஒழுங்குபடுத்தும் விதிகளால், அந்த உரையில் குறித்த விஷயங்களைச் சர்ச்சை செய்வதற்காக நேரம் அளித்ததைப்பற்றி [2] * * * ஏற்பாடு செய்யவேண்டும்.

சபைகள் சம்பந்தமாக மந்திரிகளுக்கும் அட்டார்னி-ஜெனரலுக்கும் உள்ள உரிமைகள்.

88. ஒவ்வொரு மந்திரியும் இந்தியாவின் அட்டார்னி-ஜெனரலும் இரு சபைகளில் எதிலும், அச் சபைகள் ஒருங்கு கூடிய கூட்டத்திலும், அவர் அங்கத்தினராக நியமிக்கப்படும் பார்லிமெண்டின் எந்தக் கமிட்டியிலும் பேசவும், மற்றப்படி அவற்றின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவும் உரிமை உள்ளவர் ஆவார் ; ஆனால், இப் பிரிவின் காரணமாக வோட்டுச் செய்ய உரிமை உள்ளவர் ஆகார்.

பார்லிமெண்டின் உத்தியோகஸ்தர்கள்.

ராஜ்யப் பரிஷத்தின் அக்கிராசனரும் உப-அக்கிராசனரும்.

89. (1) இந்தியாவின் உப-ராஷ்டிரபதி தம் உத்தியோக முறைமையில் ராஜ்யப்பரிஷத்தின் அக்கிராசனராக இருப்பார்.

(2) ராஜ்யப்பரிஷத்து, இயன்ற விரைவில், அதன் அங்கத்தினர் ஒருவரை உப-அக்கிராசனராகத் தெரிந்தெடுக்க வேண்டும் ; உப-அக்கிராசனரின் பதவி காலியாகுந்தோறும் பரிஷத்து மற்றோர் அங்கத்தினரை அதன் உப-அக்கிராசனராகத் தெரிந்தெடுக்க வேண்டும்.

---

[1] "ஒவ்வொரு நடைக்காலத்தின் தொடக்கத்திலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 7-வது பிரிவால் அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] "நேரம் அளிப்பதைப் பற்றியும் அச் சர்ச்சைக்கு அந்தச் சபையின் மற்றைய அலுவல்களுக்கு முன்னதாக இடம் தருவதைப் பற்றியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக மேற்படி சட்டத்தின் 8வ பிரிவால் அமைத்துக் கொள்ளப்பட்டது.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 90–92.

உப-அக்கிராசனரின் பதவியில் காலி ஏற்படுதலும், அப்பதவியை ராஜிநாமாச் செய்தலும், அதிலிருந்து நீக்கப்படுதலும்.

90. ராஜ்யப்பரிஷத்தின் உப-அக்கிராசனராகப் பதவி வகிக்கும் ஓர் அங்கத்தினர்—

(அ) அப் பரிஷத்தின் அங்கத்தினராக இராமற் போனால் தமது பதவியைக் காலி செய்யவேண்டும்;

(ஆ) தாம் கையெழுத்துச் செய்து அக்கிராசனருக்கு விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலம் தமது பதவியை எச் சமயத்திலும் ராஜிநாமாச் செய்யலாம்; மேலும்,

(இ) அப் பரிஷத்தில் அப்போதுள்ள மொத்த அங்கத்தினரின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட பரிஷத்தின் தீர்மானம் ஒன்றால் அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாம்;

எனினும், (இ) பகுதியின் விஷயத்துக்கான தீர்மானத்தைப் பிரேரேபிக்கும் உத்தேசத்தைக் குறித்துக் குறைந்தது பதினான்கு நாள் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் பிரேரேபிக்கப்படலாகாது.

அக்கிராசனரின் பதவிக்குரிய கடமைகளைச் செய்யவோ அக்கிராசனராகச் செயலாற்றவோ உப-அக்கிராசனருக்கு அல்லது வேறு ஒருவருக்கு உள்ள சக்தி.

91. (1) அக்கிராசனரின் பதவி காலியாயிருக்கும் போதோ, உப-ராஷ்டிரபதி ராஷ்டிரபதியாக வேலை பார்க்கும் அல்லது அவருடைய அலுவல்களைச் செய்துவரும் காலத்திலோ, அப் பதவிக்குரிய கடமைகள் உப-அக்கிராசனராலாவது, அல்லது உப-அக்கிராசனரின் பதவியும் காலியாயிருந்தால், ராஷ்டிரபதி அதன் பொருட்டு நியமிக்கும் ராஜ்யப் பரிஷத்தின் எந்த அங்கத்தினராலாவது செய்யப்படவேண்டும்;

(2) ராஜ்யப்பரிஷத்தின் எக் கூட்டத்திற்காவது அக்கிராசனர் வராதிருந்தால் உப-அக்கிராசனரோ, அவரும் வராதிருந்தால் பரிஷத்தின் நடைமுறை விதிகளால் நிர்ணயிக்கப்படும் எவரோ, அத்தகைய எவரும் வந்திராவிட்டால் அப் பரிஷத்தால் தீர்மானிக்கப்படும் மற்றொருவரோ அக்கிராசனராகச் செயலாற்ற வேண்டும்,

அக்கிராசனரையாவது உப-அக்கிராசனரையாவது பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஆலோசிக்கப்படும்போது, அவர் அக்கிராசனம் வகித்தலாகாது.

92. (1) ராஜ்யப் பரிஷத்தின் கூட்டத்தில், உப-ராஷ்டிரபதியை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது அக்கிராசனரும், உப-அக்கிராசனரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது உப-அக்கிராசனரும், வந்திருப்பினும், அக்கிராசனம் வகிக்கலாகாது; மேலும், அத்தகைய ஒவ்வொரு கூட்டத்தின் சம்பந்தமாகவும் 91-வது பிரிவின் (2)-ம் பகுதியின் ஷரத்துக்கள் அக்கிராசனரோ, அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உப-அக்கிராசனரோ வராத ஒரு கூட்டம் சம்பந்தமாகப் பிரயோகிக்கப்படுவது போலவே பிரயோகப்படும்.

(2) உப-ராஷ்டிரபதியை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ராஜ்யப் பரிஷத்தில் ஆலோசிக்கப்படும்போது, அக்கிராசனர் அப் பரிஷத்தில் பேசவும் அதன் நடவடிக்கைகளில் மற்றப்படி கலந்துகொள்ளவும்

உரிமை உடையவராவார் ; ஆனால், 100-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், அத்தீர்மானத்தின் பேரிலாவது அந்த நடவடிக்கைகள் நிகழும்போது வேறெந்த விஷயத்தின் பேரிலாவது வோட்டுச் செய்ய அவர் உரிமை உடையவர் ஆகார்.

மக்கட் சபையின் சபாநாயகரும், உப-சபாநாயகரும்.

93. மக்கட்சபை, முறையே அதன் சபாநாயகராகவும் உப-சபாநாயகராகவும் இருப்பதற்கு அச் சபையின் இரண்டு அங்கத்தினர்களை இயன்ற விரைவில், தெரிந்தெடுக்க வேண்டும் ; சபாநாயகருடைய அல்லது உப-சபாநாயகருடைய பதவி காலியாகுந்தோறும், அச் சபை, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, சபாநாயகராகவோ அல்லது உப-சபாநாயகராகவோ இருப்பதற்கு வேறோர் அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

சபாநாயகர் உப-சபாநாயகர் இவர்களின் பதவிகள் காலியாதலும், அவற்றை ராஜிநாமாச் செய்தலும், அவற்றிலிருந்து நீக்கப்படுதலும்.

94. மக்கட் சபையின் சபாநாயகராகவோ உப-சபாநாயகராகவோ பதவி வகிக்கும் அங்கத்தினர் ஒருவர்—

(அ) மக்கட்சபையின் அங்கத்தினராக இராமற் போனால் தமது பதவியைக் காலி செய்யவேண்டும் ;

(ஆ) அந்த அங்கத்தினர் சபாநாயகராக இருந்தால் உப-சபாநாயகருக்கும் அந்த அங்கத்தினர் உப-சபாநாயகராக இருந்தால் சபாநாயகருக்கும் தாம் கையெழுத்துச் செய்து விலாசமிட்டு அனுப்பிய எழுத்துமூலம் தமது பதவியை எக் காலத்திலும் ராஜிநாமா செய்யலாம் ; மேலும்,

(இ) மக்கட்சபையில் அப்போது உள்ள மொத்த அங்கத்தினரின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றால் அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாம் :

எனினும், (இ) பகுதியின் விஷயத்துக்கான தீர்மானத்தை பிரேரேபிக்கும் உத்தேசத்தைக்குறித்துக் குறைந்தது பதினான்கு நாள் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் பிரேரேபிக்கப்படலாகாது.

மேலும், மக்கட்சபை கலைக்கப்படும்போதெல்லாம், சபாநாயகர் அக் கலைப்புக்குப் பிறகு மக்கட் சபையின் முதல் கூட்டத்திற்கு அடுத்து முன்னதாக உள்ள காலம் வரை தமது பதவியைக் காலி செய்யலாகாது.

சபாநாயகருடைய பதவிக்குரிய கடமைகளைச் செய்யவோ, சபாநாயகராகச் செய்லாற்றவோ உப-சபாநாயகர் அல்லது வேறு ஒருவருக்கு உள்ள சக்தி.

95. (1) சபாநாயகருடைய பதவி காலியாயிருக்கும்போது அப்பதவிக்குரிய கடமைகள் உப-சபாநாயகராலாவது அல்லது உப-சபாநாயகரின் பதவியும் காலியாயிருந்தால் அதன் பொருட்டு ராஷ்டிரபதி நியமிக்கும் மக்கட்சபையின் எந்த அங்கத்தினராலாவது செய்யப்படவேண்டும்.

(2) மக்கட்சபையின் எக்கூட்டத்திற்காவது சபாநாயகர் வராதிருந்தால் உப-சபாநாயகரோ, அவரும் வராதிருந்தால் அச் சபையின் நடைமுறை விதிகளால் நிர்ணயிக்கப்படும் எவரோ, அல்லது அத்தகைய எவரும் வந்திராவிட்டால் அச் சபையால் தீர்மானிக்கப்படும் மற்றொருவரோ சபாநாயகராக செயலாற்ற வேண்டும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 96–98.

சபாநாயகரையாவது உப-சபாநாயகரையாவது பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஆலோசிக்கப்படும்போது, அவர் அக்கிராசனம் வகித்தலாகாது.

96. (1) மக்கட்சபையின் கூட்டத்தில், சபாநாயகரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது சபாநாயகரும், உப-சபாநாயகரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது, உப-சபாநாயகரும், வந்திருப்பினும், அக்கிராசனம் வகித்தலாகாது; மேலும், அத்தகைய ஒவ்வொரு கூட்டத்தின் சம்மந்தமாகவும் 95-வது பிரிவின் (2)-ம் பகுதியின் ஷரத்துக்கள் சபாநாயகரோ, அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, உப-சபாநாயகரோ வராத ஒரு கூட்டம் சம்மந்தமாகப் பிரயோகிக்கப்படுவதுபோலவே பிரயோகப்படும்.

(2) சபாநாயகரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று மக்கட்சபையில் ஆலோசிக்கப்படும்போது, சபாநாயகர் அச் சபையில் பேசவும் அதன் நடவடிக்கையில் மற்றப்படி கலந்துகொள்ளவும் உரிமை உடையவர் ஆவார்; மேலும், 100-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், அத் தீர்மானத்தின் பேரிலாவது அந்த நடவடிக்கைகள் நிகழும்போது வேறெந்த விஷயத்தின் பேரிலாவது முதல் முறை மட்டும் வோட்டுச் செய்ய அவருக்கு உரிமை உண்டு; வோட்டுகள் சமமாயிருப்பின் வோட்டுச் செய்ய உரிமை இல்லை.

அக்கிராசனர், உப-அக்கிராசனர், சபாநாயகர், உப-சபாநாயகர் இவர்களுடைய சம்பளங்களும், படிகளும்.

97. ராஜ்யப் பரிஷத்தின் அக்கிராசனருக்கும் உப-அக்கிராசனருக்கும், மக்கட் சபையின் சபாநாயகருக்கும் உப-சபாநாயகருக்கும் முறையே பார்லிமென்டால் சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் சம்பளங்களும் படிகளும், அதற்கென அப்படி ஏற்பாடு செய்யும் வரை இரண்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட சம்பளங்களும் படிகளும் கொடுக்கப்படவேண்டும்.

பார்லிமெண்டின் காரியச் சிப்பந்தி.

98. (1) பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியான காரியச் சிப்பந்தி இருக்கவேண்டும்:

எனினும், பார்லிமென்டின் சபைகள் இரண்டுக்கும் பொதுவாக உள்ள உத்தியோகப் பதவிகளை உண்டாக்குதலை இப் பகுதியில் உள்ளது எதுவும் தடுப்பதாக அர்த்தவிளக்கம் செய்யலாகாது.

(2) பார்லிமெண்டுச் சபை ஒன்றின் காரியச் சிப்பந்திக்குச் சேவையாளரைச் சேர்த்தல் பற்றியும், நியமிக்கப்பட்டவர்களின் சேவை நிபந்தனை பற்றியும் பார்லிமெண்டு சட்டத்தினால் முறைப்படுத்தலாம்.

(3) (2)-ம் பகுதியின் கீழ் பார்லிமெண்டால் வகை செய்யப்படும் வரை, ராஷ்டிரபதி, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மக்கட்சபையின் சபாநாயகருடன், அல்லது ராஜ்யப்பரிஷத்தின் அக்கிராசனருடன் கலந்தாலோசித்த பிறகு, மக்கட்சபை அல்லது ராஜ்யப்பரிஷத்தின் காரியச் சிப்பந்திக்குச் சேவையாளரைச் சேர்த்தலையும் நியமிக்கப்பட்டவர்களின் சேவை நிபந்தனைகளையும் முறைப்படுத்த விதிகள் செய்யலாம்; அப்படிச்செய்யப்பட்ட எவ் விதிகளும் மேற்சொன்ன பகுதியின் கீழ்ச் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு அமுலுடையனவாகும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 99–101.

அலுவல் நடைமுறை.

அங்கத்தினர்கள் பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்தல்.

99. பார்லிமெண்டுச் சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவரும், தமது ஸ்தானத்தில் அமர்வதற்கு முன், ராஷ்டிரபதியின் முன்னிலையிலாவது, அல்லது அதற்கென அவராஸ் நியமிக்கப்பட்ட ஒருவரின் முன்னிலையிலாவது, இதன்பொருட்டு மூன்றுவது தபசிலில் கண்ட நமூனுபடி ஒரு பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்து கையெழுத்திடவேண்டும்.

சபைகளில் வோட்டுச் செய்தலும், காலி ஸ்தானங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் செயலாற்றச் சபைகளுக்குள்ள சக்தியும்.

100. (1) இந்த அரசியல் அமைப்பில் வேறு விதமாக ஏற்பாடு செய்திருந்தாலன்றி, இரு சபைகளில் ஒன்றின் எக் கூட்டத்திலாவது இரு சபைகளும் ஒருங்கு கூடிய கூட்டத்திலாவது எழும் பிரச்னைகள் யாவும், சபாநாயகர் அல்லது அக்கிராசனராகவாவது சபாநாயகராகவாவது வேலே பார்ப்பர் நீங்கலாக, அங்கே வந்திருந்து வோட்டுச் செய்யும் மற்றைய அங்கத்தினர்களின் பெரும்பான்மையான வோட்டுகளால் நிர்ணயிக்கப்படவேண்டும்.

அக்கிராசனராவது, சபாநாயகராவது, அவ்வாறு வேலே பார்ப்பவராவது முதலில் வோட்டுச் செய்யலாகாது ; ஆனல், வோட்டுகள் சமமாயிருப்பின் அவருக்கு நிர்ணய வோட்டு ஒன்று உண்டு ; அவர் அதைச் செலுத்தவும் வேண்டும்.

(2) பார்லிமெண்டுச் சபையின் அங்கத்தினர் ஸ்தானங்களில் காலி இருந்தபோதிலும், அச் சபை செயலாற்றும் சக்தி உள்ளதாகும் ; மேலும், பார்லிமெண்டில் அமர்ந்திருக்கவோ, வோட்டுச் செய்யவோ, அல்லது நடவடிக்கைகளில் மற்றப்படி கலந்துகொள்ளவோ உரிமையற்ற ஒருவர் அப்படிச் செய்தார் எனப் பின்பு தெரியவந்தபோதிலும், அந்த நடவடிக்கைகள் செல்லுபடியுள்ளவையாகும்.

(3) பார்லிமெண்டுச் சட்டத்தினுல் வேறுவிதமாக ஏற்பாடு செய்யும்வரை, பார்லிமெண்டுச் சபையின் கூட்டம் அமைவதற்கு வேண்டிய கோரம் அச் சபையின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் பத்திலொரு பாகமாக இருக்கும்.

(4) ஒரு சபையின் கூட்டம் நடைபெறும்போது எப்போதாகிலும் கோரம் இல்லாவிட்டால், சபையை ஒத்திப் போடுதல் அல்லது கோரம் ஏற்படும் வரை கூட்டத்தை நிறுத்தி வைத்தல் அக்கிராசனர் அல்லது சபாநாயகர் அல்லது அவ்வாறு வேலே பார்ப்பவரின் கடமையாகும்.

அங்கத்தினர்களின் தகுதியின்மைகள்

ஸ்தானங்கள் காலியாதல்.

101. (1) எவரும் பார்லிமெண்டின் இரு சபைகளிலும் அங்கத்தினராயிருக்கலாகாது ; இரு சபைகளுக்கும் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுபவர் ஒரு சபையிலோ அல்லது மற்றதிலோ தனது ஸ்தானத்தைக் காலி செய்வதற்காகப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 101—102.

(2) பார்லிமெண்டிலும், [1] * * * ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் ஒரு சபையிலும் ஆக இரண்டிலும் எவரும் அங்கத்தினராயிருக்கலாகாது ; பார்லிமெண்டு, [2] ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் ஒரு சபைக்கும் ஆக இரண்டுக்கும் அங்கத்தினராக எவராவது தெரிந்தெடுக்கப்பட்டால், அப்போது, ராஷ்டிரபதியால் செய்யப்பட்ட [3] விதிகளில்குறித்த காலம் முடிவடைந்ததும், ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் தமது ஸ்தானத்தை முன்னதாகவே அவர் ராஜிநாமாச் செய்திருந்தாலன்றி, பார்லிமெண்டில் அவருடைய ஸ்தானம் காலியாகிவிடும்.

(3) பார்லிமெண்டுச் சபை ஒன்றின் அங்கத்தினர்—

(அ) 102-வது பிரிவின் (1)-ம் பகுதியில் சொல்லப்பட்ட தகுதியின்மைகளில் எதற்கேனும் உட்படுவாராஞல், அல்லது,

(ஆ) சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அக்கிராசனருக்கோ சபாநாயகருக்கோ தமது கையெழுத்துச் செய்து விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலமாகத் தமது ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்வாராஞல்,

அப்போது அவருடைய ஸ்தானம் காலியாகிவிடும்.

(4) பார்லிமெண்டுச் சபையின் அங்கத்தினர் ஒருவர் அச்சபையின் அனுமதியின்றி அறுபது நாள் அளவும் அதன் கூட்டங்கள் எல்லாவற்றிற்குமே வராமலிருந்தால், அவருடைய ஸ்தானம் காலியாகி விட்டது என்று அச் சபை அறிவிக்கலாம் :

எனினும், அந்த அறுபது நாள் அளவைக் கணக்கிடுகையில் அச் சபை காலவரையின்றி ஒத்திபோடப்படும் அல்லது தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்குமேல் ஒத்திவைக்கப்படும் எக்காலத்தையும் கணக்கில் சேர்த்தலாகாது.

அங்கத்தினர் பதவிக்குத் தகுதியின்மைகள்.

102. (1) ஒருவர்—

(அ) எப் பதவியை வகிப்பதனுல் தகுதியற்றவர் ஆகார் எனப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அப் பதவி நீங்கலாக இந்தியச் சர்க்காரின்கீழ் அல்லது ஒரு ராஜ்யச் சர்க்காரின் கீழ் லாபம் தரும் ஒரு பதவியை வகித்தால்,

(ஆ) சித்தவிகாரப்பட்டவராயும் அப்படிப்பட்டவர் என்று தக்க நீதிமன்றம் ஒன்றினுல் அறிவிக்கப்பட்டவராயும் இருந்தால்,

---

[1] "முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது குறிப்பிடப்பட்ட" என்னும் சொற்களும், எழுத்துக்களும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[3] "அத்தகைய ராஜ்யத்தின்" என்பதற்குப் பதிலாக, ஷெ சட்டத்தின் ஷெ பிரிவாலும், தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] சட்ட மந்திரி காரியாலயத்தில் 1950-ம் ஜனவரி மாதம் 26-ம் தேதியன்று பிறந்த F. 46-50-C ஷ் விளம்பரத்துடன் இந்தியா கெஜட் விசேஷ வெளியீட்டின் 678-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட 1950-ம் வருஷத்திய ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் ஒரே சமயத்தில் அங்கத்தினர் ஆவதைத் தடுக்கும் விதிகளைப் பார்க்கவும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 102-104.

(இ) திவாலாகி விடுதலே பெறுதவராயிருந்தால்

(ஈ) இந்தியக் குடியாக இராவிட்டால், அல்லது ஓர் அந்நிய ராஜ்யத்தின் குடிமையைத் தாமே விரும்பிப் பெற்றிருந்தால், அல்லது ஓர் அந்நிய ராஜ்யத்தின் மீது விசுவாசம் அல்லது பற்று உடையவர் என்று ஒப்புக்கொண்டிருந்தால்,

(உ) பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தினுல் அல்லது அதன் கீழ் தகுதியற்றவராக்கப்பட்டிருந்தால்,

அவர் பார்லிமெண்டுச் சபை எதிலும் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கும் இருந்து வருவதற்கும் தகுதியற்றவர் ஆவார்.

(2) இப் பிரிவைப் பொறுத்தவரை ஒருவர் யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் மந்திரியாயிருக்கும் காரணத்தினுல் மட்டும் இந்தியச் சர்க்காரின்கீழ் அல்லது அந்த ராஜ்யச் சர்க்கரின்கீழ் லாபம் தரும் பதவி ஒன்றை வகிப்பவராகக் கருதப்படமாட்டார்.

அங்கத்தினர்களின் தகுதியின்மைகளைப் பற்றிய பிரச்சினைகளைத் தீர்த்தல்.

103. (1) பார்லிமெண்டுச் சபை ஒன்றின் அங்கத்தினர் 102-வது பிரிவின் (1)-ம் பகுதியில் சொல்லப்பட்ட தகுதியின்மைகளில் எதற்கேனும் உள்ளாகிவிட்டாரா என்பது பற்றிய பிரச்சினை ஏதேனும் எழுமானுல், அப் பிரச்சினையை ராஷ்டிரபதியின் தீர்ப்புக்கு அனுப்பவேண்டும்; அவருடைய தீர்ப்பே முடிவானதாகும்.

(2) அத்தகைய பிரச்சினை எதுபற்றியேனும் தீர்ப்பு அளிப்பதற்கு முன், ராஷ்டிரபதி தேர்தல் கமிஷனின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டும்; அதன்படி நடக்கவும் வேண்டும்.

99-ம் பிரிவின் கீழ்ப் பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்வதற்கு முன்னே அல்லது தகுதியற்றவராக்கப்பட்டிருக்கும் போது அல்லது தகுதியற்றவராக்கப்படும் போதோ அமர்ந்திருந்து வோட்டுச் செய்தால் அபராதம்.

104. ஒருவர் 99-வது பிரிவின் நிபந்தனைகளின்படி நடப்பதற்கு முன்னே, அல்லது பார்லிமெண்டுச் சபை ஒன்றின் அங்கத்தினராயிருக்கத் தமக்குத் தகுதியில்லே என்றேனும், தாம் தகுதியற்றவராக்கப்பட்டிருக்கிறார் என்றேனும், அல்லது அதன் அங்கத்தினராக அமர்ந்திருக்கவாவது வோட்டுச் செய்யவாவது பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்களினுல் தடுக்கப்பட்டிருக்கிறார்என்றேனும்தெரிந்திருக்கும் போதோ, அவர் அவ்வாறு அமர்ந்திருந்தாலும் வோட்டுச் செய்தாலும், அப்படி அமர்ந்திருந்த அல்லது வோட்டுச் செய்த ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாய் அபராதம் செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்; அந்த அபராதம் யூனியனுக்குச் சேரவேண்டிய ஒரு கடனைப் போல் வசூலிக்கப்படும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 105–107.

பார்லிமெண்டுக்கும் அதன் அங்கத்தினர்களுக்கும் உள்ள சக்திகளும், விசேஷ உரிமைகளும், பாதுகாப்புக்களும்.

பார்லி மெண்டுச் சபைகள், அவற்றின அங்கத் தினர்கள், கமிட்டிகள் ஆகிய இவை களுக்குள்ள சக்திகள், விசேஷ உரிமைகள் வகையரா.

105. (1) இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கும் பார்லிமெண்டின் நடைமுறையை ஒழுங்குபடுத்தும் விதிகளுக்கும் நியூயுத்தரவுகளுக்கும் உட்பட்டு பார்லிமெண்டில் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

(2) பார்லிமெண்டின் அங்கத்தினர் எவரும் பார்லி மெண்டிலாவது அதன் கமிட்டியிலாவது பேசிய எந்தப் பேச்சைப் பற்றியோ கொடுத்த எந்த வோட்டைப் பற்றியோ எந்த நீதிமன்றத்திலும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் உள்ளாக மாட்டார்; மேலும், பார்லிமெண்டுச் சபை ஒன்முலாவது அதன் அதிகாரத்தின் கீழாவது எந்த ரிப்போர்ட்டையோ காகிதத்தையோ வோட்டுக்களையோ நடவடிக்கைகளையோ பிரசுரம் செய்தது பற்றி எவரும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் உள்ளாகமாட்டார்.

(3) மற்றைய விஷயங்களில், பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு சபையின் அங்கத்தினர்களுக்கும் கமிட்டிகளுக்கும் உள்ள சக்திகளும் விசேஷ உரிமைகளும் பாதுகாப்புக்களும் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அவ்வப்போது வரையறுத்தபடி இருக்கும்; அப்படி வரையறுக்குமளவும் இந்த அரசியல்அமைப்பின் தொடக்கத்தில் யூனைட்டட் கிங்டத்துப் பார்லிமெண்டின் காமன்ஸ் சபை, அதன் அங்கத்தினர்கள் கமிட்டிகள் ஆகியவற்றிற்கு உள்ள சக்திகள், விசேஷ உரிமைகள், பாதுகாப்புக்கள் ஆகியவை இவற்றிற்கும் உள்ளனவாகும்.

(4) (1)-ம், (2)-ம், (3)-ம் பகுதிகளின் ஷரத்துக்கள் பார்லிமெண்டின் அங்கத்தினர்கள் சம்பந்தமாகப் பிரயோகப்படுவது போலவே, இந்த அரசியல் அமைப்பின் காரணமாக, பார்லிமெண்டுச் சபை ஒன்றிலோ அதன் கமிட்டியிலோ பேசவும், மற்றப்படி அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும் உரிமை உள்ளவர்கள் சம்பந்தமாகவும் பிரயோகப்படும்.

அங்கத்தினர் களின் சம்பளங் களும் படிகளும்.

106. பார்லிமெண்டுச் சபை ஒன்றின் அங்கத்தினர்களுக்குப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் சம்பளங்களையும் படிகளையும் பெற உரிமை உண்டு; மேலும், அது விஷயமாய் அப்படி ஏற்பாடு செய்யும் வரை, இந்த அரசியல்அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்திய டொமினியனின் அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினர்கள் விஷயத்தில் பிரயோகித்துவந்த வீதங்களின்படியும் ஷரத்துக்களின்பேரிலும் படிகளைப் பெற உரிமை உண்டு.

சட்டநிரூபண நடமுறை

மசோதாக் களைக் கொணருதல் பற்றியும் நிறை வேற்றுதல் பற்றியும் ஆன ஷரத் துக்கள்.

107. (1) பண மசோதாக்கள் இதர நிதி மசோதாக்கள் இவை விஷயமாக 109-வது, 117-வது பிரிவுகளின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, பார்லிமெண்டுச் சபை எதிலும் ஒரு மசோதா எழலாம்.

(2) 108-வது, 109-வது பிரிவுகளின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு மசோதாவைப் பார்லிமெண்டின் இரு சபைகளும் திருத்தம் இல்லாமலோ இரு சபைகளும் ஒத்துக்கொண்ட

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 107—108.

திருத்தங்களோடு மட்டுமோ ஒத்துக்கொண்டிருந்தாலன்றி, அச் சபைகளால் அம் மசோதா நிறைவேற்றப் பட்டதாகக் கருதப்படலாகாது.

(3) பார்லிமெண்டில் முடிவுபெறுத மசோதா அச் சபைகளைக் காலவரையின்றி ஒத்திவைத்ததன் காரணமாகச் செல்லுபடியற்றதாகாது.

(4) ராஜ்யப்பரிஷத்தில் முடிவு பெறுததும் மக்கட் சபையால் நிறைவேற்றப்படாததுமான ஒரு மசோதா மக்கட் சபையின் கலைப்பினால் கழிந்துவிடாது.

(5) மக்கட் சபையில் முடிவுபெறுமலோ அல்லது மக்கட் சபையால் நிறைவேற்றப்பட்டு ராஜ்யபரிஷத்தில் முடிவுப் பெறுமலோ இருக்கும் ஒரு மசோதா, 108-வது பிரிவின்ஷரத்துக்களுக்கு உட்பட்டு, மக்கட் சபையின் கலைப்பினால் கழிந்து விடும்.

குறிப்பிட்ட விஷயங்களில் இரு சபைகளின் ஒருங்கிய கூட்டம்.

108. (1) மசோதா ஒன்று ஒரு சபையால் நிறைவேற்றப் பட்டு மறு சபைக்கு அனுப்பப்பட்ட பிறகு—

(அ) அந்த மறு சபையால் அம் மசோதா நிராகரிக்கப் பட்டால், அல்லது

(ஆ) அந்த மசோதாவில் செய்யவேண்டிய திருத்தங்களைக் குறித்து அச் சபைகளுக்கிடையே முடிவாகக் கருத்து வேற்றுமை இருந்தால், அல்லது

(இ) மறு சபை அந்த மசோதாவைப் பெற்ற தேதியிலிருந்து அதை நிறைவேற்றுமல் ஆறு மாதத்திற்கு மேல் கடந்துவிட்டால்,

மக்கட் சபையின் கலைப்பின் காரணமாக அம் மசோதா கழிந்து போயிருந்தாலன்றி, அம் மசோதாவைப் பற்றி ஆலோசனை செய்து வோட்டுக் கொடுப்பதற்கு ஒருங்கிய கூட்டமாகக் கூடுமாறு சபைகளை அழைப்பதுபற்றிய தமது கருத்தை ராஷ்டிரபதி, அவைகள் கூடியிருந்தால் நிரூப மூலமாகவும் கூடாதிருந்தால் பொது அறிவிப்பு மூலமாகவும், அச் சபைகளுக்கு அறிவிக்கலாம் :

எனினும், இப் பகுதியில் உள்ளது எதுவும் பண மசோதாவுக்குப் பிரயோகப்படமாட்டாது.

(2) (1)-ம் பகுதியில் குறித்த ஆறு மாத காலத்தைக் கணக்கிடுகையில், அப் பகுதியின் (இ) உட்பகுதியில் குறிப்பிட்ட சபை காலவரையின்றி ஒத்திப்போடப்படும் அல்லது தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்குமேல் தள்ளி வைக்கப் படும் எக் காலத்தையும் கணக்கில் சேர்த்தலாகாது.

(3) ஒருங்கிய கூட்டமாகக் கூடுமாறு அச் சபைகளை அழைத்தல்பற்றிய தம் கருத்தை ராஷ்டிரபதி (1)-ம் பகுதியின் கீழ் அறிவித்திருந்தால், அச்சபைகளில் எதுவும் அம் மசோதாவை மேல் நடத்தலாகாது. ஆனால், தம் அறிவிப்புத் தேதிக்குப் பிறகு எக்காலத்திலேனும், அந்த அறிவிப்பில் குறித்த காரியத்திற்காக ஒருங்கிய கூட்டம் ஒன்று கூடுமாறு ராஷ்டிரபதி அச் சபைகளை அழைக்கலாம் ; அவர் அப்படிச் செய்தால், அச் சபைகள் அவ்வாறே கூடவேண்டும்.

(4) அந்த இரு சபைகளின் ஒருங்கிய கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் எவையேனுமிருந்தால், அவற்றோடு அந்த மசோதா அக் கூட்டத்திற்கு வந்திருந்து வோட்டுச் செய்யும் இரு சபைகளின் அங்கத்தினர்களின் மொத்தத் தொகையினரின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்படுமாயின், அது இந்த அரசியல் அமைப்பைப் பொறுத்தவரை இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும் :

எனினும், ஒருங்கிய கூட்டம் ஒன்றில்—

(அ) அம் மசோதாவானது அது எழுந்த சபையால் நிறைவேற்றப்பட்டு மறுசபையால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுத் திருப்பியனுப்பப்படாமலிருந்தால், அம் மசோதா நிறைவேறுகையில் ஏற்பட்ட தாமதத்தால் அவசியமாயிருக்கும் திருத்தங்கள் (எவையேனுமிருந்தால் அவை) தவிர வேறு திருத்தம் எதையும் அம் மசோதாவில் பிரேரேபித்தலாகாது ;

(ஆ) அம் மசோதா அப்படி நிறைவேற்றப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டிருந்தால், மேற்சொன்னதிருத்தங்களேயும் சபைகளிடையே ஒற்றுமை ஏற்படாத விஷயங்களுக்குப் பொருத்தமான மற்றையத் திருத்தங்களேயும் மட்டுமே அம் மசோதாவில் பிரேரேபிக்கலாம் ;

மேலும், இப் பகுதியின்கீழ்க் கொண்டுவரத்தக்க திருத்தங்களேப்பற்றி அக்கிராசனம் வகிப்பவரின் தீர்ப்பே முடிவானதாகும்.

(5) சபைகளே ஒருங்கிய கூட்டமாகக் கூடுமாறு அழைக்கும் தம் கருத்தை ராஷ்டிரபதி அறிவித்தபிறகு, மக்கட்சபையின் கலேப்பு இடைப்பட்டிருந்தாலும், இப் பிரிவின் கீழ் ஒருங்கிய கூட்டம் ஒன்றை நடத்தி அதில் மசோதாவை நிறைவேற்றலாம்.

பண மசோதாக்கள் விஷயத்தில் விசேஷ நடைமுறை.

109. (1) ராஜ்ய பரிஷத்தில் பண மசோதா எதையும் கொணரலாகாது.

(2) பண மசோதா ஒன்று மக்கட்சபையால் நிறைவேற்றப்பட்டபிறகு, ராஜ்யப்பரிஷத்திற்கு அதன் சிபார்சுகளுக்காக அனுப்பப்படவேண்டும் ; ராஜ்யப்பரிஷத்து அம் மசோதாவைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினுன்கு நாட்களுக்குள் தன் சிபார்சுகளுடன் மசோதாவை மக்கட்சபைக்குத் திருப்பி யனுப்பவேண்டும் ; அதன் பேரில் மக்கட்சபை ராஜ்யப்பரிஷத்தின் சிபார்சுகள் எல்லாவற்றையுமோ அல்லது அவைகளில் எதையேனுமோ ஒப்புக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.

(3) ராஜ்யப்பரிஷத்தின் சிபார்சுகளில் எதையேனும் மக்கட்சபை ஒப்புக் கெண்டால் அந்தப் பண மசோதா ராஜ்யப்பரிஷத்தால் சிபார்சு செய்யப்பட்டு மக்கட்சபையால் ஒப்புக்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள். 109–110.

(4) ராஜ்யபரிஷத்தின் சிபார்சுகளில் எதையேனும் மக்கட்சபை ஒப்புக்கொள்ளாவிட்டால், அந்தப் பண மசோதா ராஜ்யபரிஷத்தால் சிபார்சு செய்யப்பட்ட திருத்தங்களில் எதுவுமின்றி மக்கட்சபையால் நிறைவேற்றப் பட்ட உருவத்திலேயே இரு சபைகளாலும் நிறைவேற்றப் பட்டதாகக் கருதப்படும்.

(5) மக்கட்சபையால் நிறைவேற்றப்பட்டு ராஜ்யபரிஷத்திற்கு அதன் சிபார்சுகளுக்காக அனுப்பப்பட்ட பண மசோதா ஒன்று மேற்சொன்ன பதினான்கு நாட்களுக்குள் மக்கட்சபைக்குத் திருப்பியனுப்பாவிட்டால், அக்காலம் முடிவடைந்ததும் அது மக்கட்சபையால் நிறைவேற்றப்பட்ட உருவத்திலேயே இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

110. (1) இந்த அத்தியாயத்தைப் பொறுத்த வரை, அடியிற்கண்ட விஷயங்களில் எல்லாவற்றையுமோ அல்லது எதையேனுமோ பற்றிய ஷரத்துக்கள் மட்டும் ஒரு மசோதாவில் அடங்கியிருந்தால், அது பண மசோதாவாக கருதப்படும்; அவையாவன :— "பண மசோதாக்கள்" என்பதன் வரையறை.

(அ) எந்த வரியையும் விதித்தல், ஒழித்தல், தவிர்த்தல், மாற்றல் அல்லது முறைப்படுத்தல் ;

(ஆ) கடன் கொள்வதை முறைப்படுத்தல், அல்லது இந்தியச் சர்க்கார் உத்தரவாதம் அளித்தல், அல்லது இந்தியச் சர்க்கார் ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றக்கொள்ளும் நிதிப் பொறுப்புக் களைப் பற்றிய சட்டத்தைத் திருத்துதல் ;

(இ) இந்தியாவின் சஞ்சித நிதியை அல்லது எதிர்பாராச் செலவு நிதியை வைத்திருத்தல், அத்தகைய நிதி எதிலும் பணம் போடுதல் அல்லது அதிலிருந்து பணம் எடுத்தல் ;

(ஈ) இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கி வைத்தல் ;

(உ) எச் செலவையும் இந்தியாவின் சஞ்சித நிதியின் பேரில் சுமத்தப்பட்ட செலவு என்று அறிவித்தல் அல்லது அத்தகைய செலவுத் தொகையை அதிகப் படுத்தல் ;

(ஊ) இந்தியாவின் சஞ்சித நிதிக்காகவோ இந்தியாவின் பொதுக் கணக்குக்காகவோ பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது அத்தகைய பணத்தை வைத்திருத்தல் அல்லது கொடுத்தல் அல்லது யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் கணக்குகளை தணிக்கை செய்தல் ; அல்லது

(எ) (அ) முதல் (ஊ) வரையுள்ள உட்பகுதிகளில் குறிப்பிட்ட விஷயங்களில் எதையும் சார்ந்த ஒரு விஷயம்.

(2) ஒரு மசோதாவானது அபராதங்களையோ மற்றையப் பணத் தண்டனைகளையோ விதிப்பதற்காக, அல்லது லைஸென்சுகளுக்கான கட்டணங்களையோ அல்லது சேவை புரிந்ததற்கான கட்டணங்களையோ கேட்பதற்காக அல்லது கொடுப்பதற்காக அதில் ஏற்பாடு செய்துள்ள காரணத்தால் மட்டுமாவது, ஸ்தல காரியங்களுக்காக ஒரு ஸ்தல அதிகாரியோ அல்லது நிலையமோ எவ்வரியையேனும் விதித்தல், ஒழித்தல், தவிர்த்தல், மாற்றல் அல்லது முறைப்படுத்தல் இவற்றிற்காக ஏற்பாடு செய்துள்ள காரணத்தாலாவது ஒரு பண மசோதாவாக்க கருதப்படமாட்டாது.

(3) ஒரு மசோதா பண மசோதாவா அல்லவா என்பது பற்றிய பிரச்சினை ஏதேனும் எழுமாஞல், அதுபற்றி மக்கட் சபையின் சபாநாயகர் அளிக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

(4) 109-வது பிரிவின்கீழ் ராஜ்யபரிஷத்திற்கு அனுப்பப்படும்போதும், 111-வது பிரிவின்கீழ் ராஷ்டிரபதியிடம் சம்மதத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும்போதும், பண மசோதா ஒவ்வொன்றின் பேரிலும் அது பண மசோதா என்று மக்கட் சபையின் சபாநாயகர் கையெழுத்திட்ட சரியொப்பம் எழுதப்படவேண்டும்.

மசோதாக்களுக்குச் சம்மதம்.

111. ஒரு மசோதா பார்லிமெண்டுச் சபைகளால் நிறைவேற்றப்பட்டதும், ராஷ்டிரபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அம்மசோதாவுக்குச் சம்மதம் அளித்ததாகவோ அல்லது அதற்குச் சம்மதம் மறுத்ததாகவோ ராஷ்டிரபதி அறிவிக்க வேண்டும்.

எனினும், ராஷ்டிரபதியின் சம்மதத்திற்காக ஒரு மசோதா சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அது ஒரு பண மசோதாவாக இராவிட்டால், இயன்ற விரைவில், அம் மசோதாவையாவது அல்லது குறிப்பிட்ட அதன் எந்த ஷரத்துக்களையாவது புனராலோசனை செய்யும்படியாகவும் குறிப்பாக, தமது நிருபத்தில் தாம் சிபார்சு செய்யும் திருத்தங்கள் எவற்றையேனும் கொணர்தலின் உசிதத்தைப் பற்றி அச் சபைகள் ஆலோசிக்கும்படியாகவும் வேண்டிக்கொள்ளும் ஒரு நிருபத்துடன் அம் மசோதாவைத் திருப்பியனுப்பலாம்; அப்படி ஒரு மசோதா திருப்பியனுப்பப்பட்டால் அச்சபைகள் அம் மசோதாவை அவ்வாறே புனராலோசனை செய்யவேண்டும்; மறுமுறை அம் மசோதா திருத்தத்துடனே திருத்தமில்லாமலோ அச் சபைகளால் நிறைவேற்றப்பட்டு, ராஷ்டிரபதியின் சம்மதத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டால், ராஷ்டிரபதி அம் மசோதாவிற்குத் தமது சம்மதத்தை மறுத்தலாகாது.

நிதி விஷயங்களில் நடைமுறை

வருஷாந்தர நிதி விவரணம்

112. (1) ராஷ்டிரபதி ஒவ்வொரு நிதி வருஷத்திற்கும் அவ் வருஷத்தில் இந்திய சர்க்காரின் உத்தேச வரவுகளையும் செலவுகளையும் பற்றிய விவரணம் ஒன்றைப் பார்லிமெண்டின் இரு சபைகளின் முன்னிலையிலும் வைக்கும்படிச் செய்ய வேண்டும்; அது "வருஷாந்தர நிதி விவரணம்" என்று இப் பாகத்தில் குறிப்பிடப்படும்.

பாகம் V.—யூனியன்—பிரிவு 112.

(2) வருஷாந்திர நிதி விவரணத்தில் அடங்கிய செலவுகளின் உத்தேச மதிப்புக்கள்—

(அ) இந்தியாவின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்பட்டசெலவுகள் என்று இந்த அரசியல் அமைப்பில் விவரிக்கப்பட்ட செலவுகளைச் செய்வதற்கு வேண்டிய தொகைகளையும்,

(ஆ) இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து செய்யக்கருதிய மற்றைய செலவுகளைச் செய்வதற்கு வேண்டிய தொகைகளையும்

தனித்தனியாகக் காட்ட வேண்டும்; அன்றியும், வருமானக் கணக்கிலிருந்து செய்யப்படும் செலவுகளை மற்றைய செலவுகளினின்றும் வேறுபடுத்திக் காட்டவேண்டும்.

(3) கீழ்க்கண்ட செலவுகள் இந்தியாவின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்பட்ட செலவுகள் ஆகும்—

(அ) ராஷ்டிரபதியின் ஊதியங்களும் படிகளும் அவருடைய பதவி சம்பந்தமான மற்றையச் செலவுகளும்;

(ஆ) ராஜ்யபரிஷத்தின் அக்கிராசனர் உப-அக்கிராசனர், மக்கட் சபையின் சபாநாயகர் உப-சபாநாயகர் இவர்களின் சம்பளங்களும் படிகளும்;

(இ) வட்டியும் நிக்ஷேப நிதிச்செலவுகளும் விமோசனச் செலவுகளும் உட்பட இந்தியச் சர்க்கார் பொறுப்பாளியாக உள்ள கடன் செலவுகளும், கடனுகப் பணங்கள் திரட்டல் கடனுக்குப் பணம் செலுத்துதல் கடன் விமோசனம் இவற்றைப் பற்றிய மற்றையச் செலவுகளும்;

(ஈ) (i) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கோ அவர்களின் பொருட்டோ கொடுக்கவேண்டிய சம்பளங்களும் படிகளும் பென்ஷன்களும்;

(ii) பெடரல் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கோ அவர்களின் பொருட்டோ கொடுக்க வேண்டிய பென்ஷன்கள்;

(iii) இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் அடங்கிய எந்தப் பிரதேசம் சம்மந்தமாகவேனும் அதிகாரம் செலுத்தும், அல்லது [1][இந்திய டொமினியனின் ஒரு ராஜ்யபாலர் மாகாணத்தில்] அடங்கிய எந்தப் பிரதேசம் சம்பந்தமாகவேனும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்குமுன் எப்போதாகிலும் அதிகாரம் செலுத்திய ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்காவது அவர்கள் பொருட்டாவது கொடுக்க வேண்டிய பென்ஷன்கள்;

(உ) இந்தியாவின் மாபெருங்கணக்கர்—பரிசோதகருக்காவது அவர் பொருட்டாவது கொடுக்கவேண்டிய சம்பளங்களும் படிகளும் பென்ஷனும்;

---

1 "முதலாவது தபசிலின் (அ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு ராஜ்யத்திற்கு நிகரான மாகாணத்தில்" என்பதற்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபஸாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 112–114.

(ஊ) ஒரு நீதிமன்றத்தின் அல்லது மத்தியஸ்த மன்றத்தின் தீர்ப்பு அல்லது டிக்கிரி அல்லது தீர்மானத்தின்படி செலுத்துவதற்கு வேண்டிய தொகைகள் ;

(எ) இந்த அரசியல் அமைப்பினுல் அல்லது பார்லிமெண்டால் சட்டத்தினுல் அப்படிச் சாட்டப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட மற்றையச் செலவுகள்.

உத்தேச மதிப்புக்கள் விஷயமாய்ப் பார்லிமெண்டில் நடைமுறை.

113. (1) அந்த உத்தேச மதிப்புக்களில் இந்தியாவின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்பட்ட செலவுசம்பந்தமாயுள்ள பகுதி பார்லிமெண்டின் வோட்டுக்குஉட்படுத்தலாகாது; ஆனல், பார்லிமெண்டுச் சபை எதிலும் அந்த உத்தேச மதிப்புக்களில் எதைப் பற்றியும் சர்ச்சை செய்வதை இப் பகுதியில் உள்ளது எதுவும் தடுப்பதாக அர்த்த விளக்கம் செய்யலாகாது.

(2) மேற்சொன்ன உத்தேச மதிப்புக்களில் மற்றையச் செலவுகள் சம்பந்தமாயுள்ள பகுதி மக்கட்சபைக்கு கிராண்டுக் கோரிக்கை முறையில் சமர்ப்பிக்கப்படவேண்டும் ; கோரிக்கை எதற்கும் சம்மதி அளிக்கவோ, அல்லது சம்மதி மறுக்கவோ, அல்லது கோரிக்கையில் குறித்த தொகையைக் குறைத்து அதற்குச் சம்மதி அளிக்கவோ மக்கட்சபைக்கு சக்தி உண்டு.

(3) ராஷ்டிரபதியின் சிபார்சின் பேரிலன்றி, கிராண்டுக் கோரிக்கை எதுவும் செய்யப்படலாகாது.

ஒதுக்க மசோதாக்கள்.

114. (1) மக்கட் சபை 113-வது பிரிவின்கீழ்க் கிராண்டு களைச் செய்த பிறகு இயன்ற விரைவில்—

(அ) அப்படி மக்கட்சபை செய்த கிராண்டுகளுக்கும்,

(ஆ) இந்தியாவின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்பட்டவையும், ஆனல் முன்னரே பார்லிமெண்டுக்குச் சமர்ப்பித்த விவரணத்தில் கண்ட தொகைக்கு எப்படியும் மேற்படாதவையுமான செலவுகளுக்கும்

வேண்டிய பணங்களையெல்லாம் இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து ஒதுக்கிவைக்க. ஏற்பாடு செய்வதற்கான மசோதா ஒன்று கொணரப்படவேண்டும்.

(2) அப்படிச் செய்யப்பட்ட கிராண்டின் தொகையை மாற்றும் அல்லது அதன் நோக்கத்தை வேறுக்கும் அல்லது இந்தியாவின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்பட்ட ஒரு செலவின் தொகையை மாற்றும் தன்மைவாய்ந்த எத் திருத்தத்தையும் பார்லிமெண்டுச் சபை எதிலும் அத்தகைய மசோதாவில் பிரேரேபித்தலாகாது ; ஒரு திருத்தம் இப் பகுதியின் கீழ்வரத் தகுதியற்றதா என்பது பற்றி அக்கிராசனம் வகிப்பவருடைய தீர்ப்பே முடிவானதாகும்.

(3) 115-வது, 116-வது பிரிவுகளின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இப் பிரிவின் ஷரத்துக்களின்படி நிறைவேற்றப்பட்ட சட்டத்தினுல் செய்த ஒதுக்கத்தின்படியன்றி, இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து பணம் எதையும் எடுத்தலாகாது.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 115–116.

அதிகப்படியான அனுபந்தமான அல்லது கூடுதலான கிராண்டுகள்.

115. (1) ராஷ்டிரபதி—

(அ) நடப்பு நிதிவருஷத்தில் குறிப்பிட்ட ஒரு சேவைக்காகச் செலவு செய்வதற்கு 114-வது பிரிவின் ஷரத்துக்களின்படி செய்யப்பட்ட எச் சட்டத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை அவ்வருஷத்துக் காரியங்களுக்குப் போதாதென்று தெரியவந்தாலும், அவ்வருஷத்துக்குரிய வருஷாந்தர நிதி விவரணத்தில் உத்தேசித்திராத புதிய சேவைக்காக அனுபந்தமாக வோ கூடுதலாகவோ செலவிடுவதற்கான தேவை அந்த நடப்பு நிதி வருஷத்தில் ஏற்பட்டாலும்,

(ஆ) ஒரு நிதிவருஷத்தில் ஏதாவது ஒரு சேவைக்காக அவ் வருஷத்தில் அச் சேவைக்கென அளிக்கப்பட்ட தொகைக்கு அதிகப்படியாக ஏதேனும் பணம் செலவழிக்கப்பட்டிருந்தாலும்,

சந்தர்ப்பத்திற்கேற்ப அச் செலவின் உத்தேசத் தொகையைக் காட்டும் மற்றொரு விவரணத்தைப் பார்லிமெண்டின் இரு சபைகளின் முன்னிலையிலும் வைக்கும்படிச் செய்ய வேண்டும் அல்லது அத்தகைய அதிகத் தொகைக்கான கோரிக்கை ஒன்றை மக்கட்சபையில் கொணருமாறு செய்ய வேண்டும்.

(2) வருஷாந்தர நிதி விவரணமும் அதில் சொல்லப்பட்ட செலவுகளும் அல்லது கிராண்டுக் கோரிக்கையும் அச் செலவுகளுக்காவது கிராண்டுகளுக்காவது வேண்டிய பணங்களை இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து ஒதுக்குவதற்கு அதிகாரம் அளிப்பதன் பொருட்டுச் செய்யப்படும் சட்டமும் சம்பந்தமாக 112-வது, 113-வது, 114-வது பிரிவுகளின் ஷரத்துக்கள் பிரயோகப்படுவது போலவே, அத்தகைய விவரணமும் செலவுகள் அல்லது கோரிக்கையும் அச் செலவுகளுக்காவது அல்லது அக் கோரிக்கை விஷயமான கிராண்டுகளுக்காவது வேண்டிய பணங்களை இந்தியாவின் சஞ்சித நிதியிலியிருந்து ஒதுக்குவதற்கு அதிகாரம் அளிப்பதன்பொருட்டுச் செய்யப்படும் சட்டமும் சம்பந்தமாக அவை பிரயோகப்படும்.

அக் கௌண்ட் வோட்டுக்களும், கிரெடிட் வோட்டுக்களும் அசாதாரண கிராண்டுகளும்.

116. (1) இந்த அத்தியாயத்தின் மேற்சொன்ன ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், மக்கட்சபை—

(அ) நிதி வருஷத்தின் ஒரு பகுதிக்கு மதிப்புச் செலவு விஷயமாகக் கிராண்டு ஒன்றை வோட்டுச் செய்வதற்கு 113-வது பிரிவில் வகுத்த நடை முறையைப் பூர்த்திசெய்து, அச் செலவு சம்பந்தமாக 114-வது பிரிவின் ஷரத்துக்களின்படி சட்டம் நிறைவேற்றும் வரை, முன்னதாகவே ஒரு கிராண்டைச் செய்யவும்,

(ஆ) ஒரு சேவையின் மிக்க அளவிலோ நிர்ணயிக்க இயலாத தன்மையாலோ வருஷாந்திர நிதி விவரணத்தில் சாதாரணமாகக் கொடுக்கப்படும் விபரங்களுடன் கோரிக்கை இன்னதென்று கூற இயலாத போது இந்தியாவின் பொருட் சாதனங்களின்மேல் ஏற்படும் எதிர்பாராப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஒரு கிராண்டைச் செய்யவும்,

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 116–118.

(இ) நிதி வருஷத்தின் நடப்புச் சேவையின் பகுதியல் லாத அசாதாரணக் கிராண்டைச் செய்யவும்

சக்தி வாய்ந்ததாகும் ; மேலும், மேற்சொன்ன கிராண்டு களின் காரியங்களுக்காக இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து பணங்களை எடுப்பதற்குச் சட்டத்தினல் அதிகாரம் கொடுக்கப் பார்லிமெண்டு சக்தி வாய்ந்ததாகும்.

(2) வருஷாந்தர நிதி விவரணத்தில் சொல்லப்பட்ட செலவின் பொருட்டு கிராண்டைச் செய்தல் சம்மந்தமாகவும் அச் செலவுக்கு வேண்டிய பணங்கள் இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து ஒதுக்க அதிகாரம் கொடுப்பதன் பொருட்டு செய்யப்படும் சட்டம் சம்மந்தமாகவும் 113-வது, 114-வது பிரிவுகளின் ஷரத்துக்கள் பிரயோகப்படுவதுபோலவே (1)-ம் பகுதியின் கீழ் ஒரு கிராண்டைச் செய்தல் சம்மந்தமாகவும் அப் பகுதியின் கீழ்ச் செய்யப்படும் சட்டம் சம்மந்தமாகவும் அவை பிரயோகப்படும்.

நிதி மசோதாச்கள் பற்றிய விசேஷ ஷரத்துக்கள்.

117. (1) 110-வது பிரிவின் (1)-ம் பகுதியின் (அ) முதல் (உ) வரையிலுள்ள உட்பகுதிகளில் குறிப்பிட்ட விஷயங்களில் எதற்காகவேனும் ஏற்பாடு செய்யும் ஒரு மசோதாவையாவது திருத்தத்தையாவது ராஷ்டிரபதியின் சிபார்சின் பேரிலன்றிக் கொணரவோ பிரேரேபிக்கவோ கூடாது ; அத்தகைய ஏற்பாடு செய்யும் ஒரு மசோதாவை ராஜ்யபரிஷத்தில் கொணரலாகாது :

எனினும், வரி ஒன்றைக் குறைப்பதற்காவது ஒழிப்பதற் காவது ஏற்பாடு செய்யும் ஒரு திருத்ததைப் பிரேரேபிப்பதற்கு இப்பகுதியின் கீழ்ச் சிபார்சு வேண்டுவதில்லை.

(2) ஒரு மசோதாவில் அல்லது திருத்தத்தில், அபராதங்களை அல்லது மற்றையப் பணத் தண்டனைகளை விதிப்பதற் காக அல்லது லைசென்சுகளுக்கான கட்டணங்களையோ அல்லது சேவை புரிந்ததற்கான கட்டணங்களையோ கேட்பதற்காக அல்லது கொடுப்பதற்காக ஏற்பாடு செய்துள்ள காரணத்தால் மட்டுமாவது அல்லது ஸ்தல காரியங்களுக்காக ஒரு ஸ்தல அதிகாரியோ அல்லது நிலையமோ எவ்வரியையேனும் விதித்தல், ஒழித்தல், தளர்த்தல், மாற்றல் அல்லது முறைப்படுத்தல் இவற்றிற்காக ஏற்பாடு செய்துள்ள காரணத்தாலாவது அம் மசோதா அல்லது திருத்தம் மேற்சொன்ன விஷயங்களில் எதற் காகவேனும் ஏற்பாடு செய்வதாகக் கருதப்படமாட்டாது.

(3) மசோதா ஒன்றைச் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவந்தமையால் இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து செலவு செய்யவேண்டி வருமானல் அம் மசோதாவை ஆலோசனை செய்யவேண்டும் என ராஷ்டிரபதி அதற்குச் சிபார்சு செய்திருந்தாலன்றி, பார்லிமெண்டுச் சபை எதனலும் அம் மசோதா நிறைவேற்றப்படலாகாது.

பொதுவான நடைமுறை

நடைமுறை விதிகள்.

118. (1) பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றும் இந்த அரசியல்அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, தன்னு டையநடைமுறையையும் ஒழுங்குபடுத்த விதிகள் செய்யலாம்,

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 118–120.

(2) (1)-ம் பகுதியின்கீழ் விதிகள் செய்யப்படும்வரை, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்திய டொமினியன் சட்டமன்றம் சம்மந்தமாக அமுலிலிருந்த நடைமுறை விதிகளும், நிலையுத்தரவுகளும், ராஜ்ய பரிஷத்தின் அக்கிராசனரால் அல்லது மக்கட்சபையின் சபாநாயகரால் அவற்றில் சந்தர்ப்பத்திற்கு ஏற்பச் செய்யலான மாறுதல்களுக்கும் இணக்கங்களுக்கும் உட்பட்டுப் பார்லிமெண்டுச் சம்மந்தமாகப் பிரயோகப்படும்.

(3) ராஷ்டிரபதி ராஜ்யபரிஷத்தின் அக்கிராசனரையும் மக்கட் சபையின் சபாநாயகரையும் கலந்தாலோசித்த பிறகு, இரு சபைகளின் ஒருங்கிய கூட்டங்களைப்பற்றியும் அவைகளினிடையே நிகழும் செய்திப் போக்கு வரவுகளைப்பற்றியும் நடைமுறை விதிகள் செய்யலாம்.

(4) இரு சபைகளின் ஒருங்கிய கூட்டம் ஒன்றில் மக்கட் சபையின் சபாநாயகரோ, அவரில்லாவிட்டால் (3)-ம் பகுதியின்கீழ்ச் செய்த நடைமுறை விதிகளிலுல் நிர்ணயிக்கப்படும் ஒருவரோ அக்கிராசனம் வகித்தல் வேண்டும்.

நிதிக்காரியங்கள் சம்பந்தமாகப் பார்லிமெண்டு நடைமுறையைச் சட்டத்திலுல் முறைப்படுத்தல்.

119. நிதிக்காரியங்கள் உரிய காலத்தில் முடிவடையும் பொருட்டு, நிதி விஷயமோ அல்லது இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து பணங்களை ஒதுக்குவதற்கான ஒரு மசோதாவோ சம்மந்தமாகப் பார்லிமெண்டின் சபை ஒவ்வொன்றின் நடைமுறையையும் காரிய முறையையும் பார்லிமெண்டு சட்டத்திலுல் முறைப்படுத்தலாம்; அப்படிச் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்து எதுவும் 118-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ் பார்லிமெண்டுச் சபை ஒன்றுல் செய்யப்பட்ட எந்த விதிக்காவது அல்லது அப் பிரிவின் (2)-ம் பகுதியின் கீழ்ப் பார்லிமெண்டு சம்பந்தமாகப் பிரயோகப்படும் எந்த விதி அல்லது நிலையுத்தரவுக்காவது பொருத்தமற்றதாயிருந்தால், அந்த அளவுக்கு அத்தகைய ஷரத்தே மேலோங்கும்.

பார்லிமெண்டில் உபயோகிக்கப்பட வேண்டிய பாஷை.

120. (1) XVII-வது பாகத்தில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டின் அலுவல்களை 348-வது பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இந்தியில் அல்லது இங்கிலீஷில் நடத்த வேண்டும்.

எனினும் அங்கத்தினர் ஒருவர் தமது கருத்தை இந்தியில் அல்லது இங்கிலீஷில் வெளியிடப் போதிய திறமையற்றவராயிருந்தால், அவர் அச் சபையில் தமது தாய் மொழியில் உரையாற்றுதற்கு, ராஜ்ய பரிஷத்தின் அக்கிராசனரோ, மக்கட்சபையின் சபாநாயகரோ அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அப்படி வேலை பார்க்கும் ஒருவரோ அவருக்கு அனுமதி கொடுக்கலாம்.

(2) பார்லிமெண்டு வேறு விதமாகச் சட்டத்திலுல் ஏற்பாடு செய்தாலன்றி, இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பதினைந்து வருஷகாலம் முடிவடைந்த பின்னர், இப் பிரிவிலிருந்து "அல்லது இங்கிலீஷில்" என்னும் சொற்கள் விடப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே இப் பிரிவு பிரயோகப்படும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 121—123.

பார்லி மெண்டில் நடை பெறும் சர்ச் சையைப் பற்றிய வரையறை.

121. உச்ச நீதிமன்றத்தின் அல்லது ஓர் உயர் நீதிமன்றத் தின் நீதிபதி ஒருவரை நீக்கவேண்டும் என்று கோரி இதற்குப் பின்னே ஏற்பாடு செய்துள்ளபடி ராஷ்டிரபதிக்கு ஒரு விஞ் ஞாபனம் செய்துகொள்வதற்கான பிரேரேபணையின் பேரி லன்றி, அந்த நீதிபதி தம்முடைய கடமைகளை நிறைவேற்று கையில் நடந்துகொண்ட முறையைக் குறித்துப் பார்லிமெண் டில் எவ்விதமான சர்ச்சையும் நிகழலாகாது.

பார்லி மெண்டின் நடவடிகை களைக் குறித்து நீதிமன் றங்கள் விசாரித்தல் கூடாது.

122. (1) நடைமுறையில் ஒழுங்குப்பிசகு இருப்பதாகக் கூறும் காரணத்தால் பார்லிமெண்டு நடவடிக்கைகளின் செல் திறன் ஆட்சேபிக்கப்படலாகாது.

(2) பார்லிமெண்டில் நடைமுறையையோ காரியமுறை யையோ நெறிப்படுத்துவதற்காக, இந்த அரசியல் அமைப்பினால் அல்லது அதன் கீழ் சக்திகள் கொடுக்கப்பெற்ற பார்லிமெண் டின் ஓர் உத்தியோகஸ்தர் அல்லது அங்கத்தினர் அந்தச்சக்தி களைச் செலுத்துதல் சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தின் விசாரணை-அதிகாரத்திற்கும் உள்ளாக்கப்படலாகாது.

அத்தியாயம் III. சட்டம் இயற்ற ராஷ்டிரபதிக்கு உள்ள சக்திகள்

பார்லி மெண்டின் கூட்டங்கள் நடைபெறுத இடைக் காலத்தில் அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்ய ராஷ்டிர பதிக்குள்ள சக்தி.

123. (1) பார்லிமெண்டின் இரு சபைகளின் நடைக்காலம் தவிர வேறெந்தக் காலத்திலும் தாம் அவசியமாக உடனடி யான நடவடிக்கை நடத்தவேண்டிய சந்தர்ப்பங்கள் இருப்ப னவாக ராஷ்டிரபதிக்கு விளங்கினால், அவர் அச் சந்தர்ப்பங் களுக்குத் தேவையாகத் தோற்றும் அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்யலாம்.

(2) இப் பிரிவின்கீழ்ப் பிரகடனம் செய்யப்பட்ட அவ சரச் சட்டம், பார்லிமெண்டின் சட்டத்தையொத்த திறனும் பயனும் உடையதாகும்; ஆனால் அத்தகைய ஓர் அவசரச் சட்டம்—

(அ) பார்லிமெண்டின் இரு சபைகளின்முன்னிலையிலும் வைக்கப்படவேண்டும்; பார்லிமெண்டு மறுமுறை கூடுவதிலிருந்து ஆறு வாரம் முடிவடைந்த வுடன் அல்லது அக் காலம்முடிவடைவதற்குமுன் அதை ஒத்துக் கொள்ளலாகாது என்னும் தீர்மானங் கள் இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டிருந் தால் அவற்றில் இரண்டாவது தீர்மானம் நிறை வேறியவுடன், அந்த அவசரச் சட்டம் அமுலற்றுப் போகும்; மேலும்,

(ஆ) எச் சமயத்திலும் ராஷ்டிரபதியால் வாபீஸ் செய்யப்படலாம்.

விளக்கம்.—பார்லிமெண்டுச் சபைகள் வெவ்வேறு தேதி களில் மறுமுறை கூடுமாறு அழைக்கப்பட்டால் அந்த, ஆறுவார காலம் இப் பகுதியைப் பொறுத்தவரை அத் தேதிகளில் பிந்தி யதிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 123–124.

(3) இப் பிரிவின்கீழ்ச் செய்த அவசரச் சட்டமானது இந்த அரசியல் அமைப்பின் கீழ் பார்லிமெண்டுக்குச் செய்ய அதிகாரமில்லாத ஷரத்து ஒன்றை இயற்றினால், அந்த அளவுக்கு அது வியர்த்தமாகும்.

அத்தியாயம் IV—யூனியனின் நீதிபதிகள்

உச்ச நீதிமன்றத்தை ஏற்படுத்தலும் அதன் அமைப்பும்.

124. (1) இந்தியப் பிரதம நீதிபதி ஒருவரையும் பார்லிமெண்டு சட்டத்தினால் அதிக எண்ணிக்கையை விதிக்கும் வரை, எழுவருக்கு மேற்படாத மற்றைய நீதிபதிகளையும் கொண்ட இந்திய உச்ச நீதிமன்றம் ஒன்று இருக்கவேண்டும்.

(2) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒவ்வொருவரும், உச்ச நீதிமன்றம் ராஜ்யங்களின் உயர் நீதிமன்றங்கள்—இவற்றிற்றின் நீதிபதிகளில் எவருடன் இதன் பொருட்டுக்கலந்தாலோசித்தல் அவசியமென்று ராஷ்டிரபதிக்குத் தோன்றுகிறதோ அவருடன் கலந்தாலோசித்த பின்னர், ராஷ்டிரபதியின் கையெழுத்தும் முத்திரையும் கொண்ட அதிபத்திரத்தினால் நியமிக்கப்பட வேண்டும்; அவர் அறுபத்தைந்து வயது நிரம்பும் வரை பதவி வகிப்பார்;

எனினும், பிரதம நீதிபதியல்லாத மற்றைய நீதிபதிகளின் நியமன விஷயத்தில், இந்தியாவின் பிரதம நீதிபதி எப்பொழுதும் கலந்தாலோசிக்கப்படவேண்டும்

அன்றியும்—

(அ) ஒரு நீதிபதி தாம் கையெழுத்திட்டு ராஷ்டிரபதிக்கு விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலமாகத் தமது பதவியை ராஜினாமாச் செய்யலாம்;

(ஆ) ஒரு நீதிபதி (4)-ம் பகுதியில் ஏற்பாடு செய்த விதமாகத் தமது பதவியிலிருந்து நீக்கப்படலாம்;

(3) ஒருவர் இந்தியாவின் குடியாயிருந்து —

(அ) குறைந்தது ஐந்து வருஷமாவது ஓர் உயர் நீதிமன்றத்திலோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய நீதிமன்றங்களிலோ தொடர்ச்சியாக நீதிபதியாக இருந்திருந்தாலன்றியும்,

(ஆ) குறைந்தது பத்து வருஷமாவது ஓர் உயர் நீதிமன்றத்திலோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய நீதிமன்றங்களிலோ தொடர்ச்சியாக அட்வொகேட்டாக இருந்திருந்தாலன்றியும்,

(இ) ராஷ்டிரபதியின் அபிப்பிராயத்தில் ஒரு சிறந்த சட்டக்கலைவாணராயிருந்தாலன்றியும்,

உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெறத் தகுதியுள்ளவர் ஆகார்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 124–125.

விளக்கம் I.—இப் பகுதியில் "உயர் நீதிமன்றம்" என்பது இந்தியாவின் ஆட்சிப்பரப்பின் எப் பாகத்திலும் அதிகாரம் செலுத்தி வரும், அல்லது இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்குமுன் எப்போதேனும் அதிகாரம் செலுத்திவந்த ஓர் உயர் நீதிமன்றம் எனப் பொருள்படும்.

விளக்கம் II.—இப் பகுதியைப் பொறுத்த வரை ஒருவர் அட்வொகேட்டாயிருந்த காலத்தைக் கணக்கிடுகையில், அவர் அட்வொகேட் ஆனபிறகு ஜில்லா நீதிபதிப் பதவிக்குக் குறையாத நீதிப் பதவியை வகித்துவந்த காலத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(4) நிரூபிக்கப்பட்ட நடத்தைப் பிசகு அல்லது திறமையின்மை காரணமாக உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் நீக்கப்படவேண்டும் என்று பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றிலும் ஒரே நடைக்காலத்தில் அச் சபையின் மொத்த அங்கத்தினர்களில் பெரும்பான்மையோராலும், அச் சபையின் அங்கத்தினர்களில் அங்கு வந்திருந்து வோட்டுக் கொடுப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையோராலும் ஆதரிக்கப்பட்ட அச் சபையின் விஞ்ஞாபனம் ஒன்று ராஷ்டிரபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அவரால் செய்யப்பட்ட ஓர் உத்தரவுப்படியன்றி, அப் பதவியிலிருந்து அவர் நீக்கப்படலாகாது.

(5) (4)-ம் பகுதியின்கீழ் ஒரு விஞ்ஞாபனம் சமர்ப்பிப்பதைப்பற்றியும், நீதிபதி ஒருவரின் நடத்தைப் பிசகு அல்லது திறமையின்மையைக் குறித்து விசாரணை செய்தல், நிரூபித்தல் இவைபற்றியும் ஆன நடைமுறையைப் பார்லிமெண்டு சட்டத்தினுல் ஒழுங்குபடுத்தலாம்.

(6) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரும், தமது பதவியை ஏற்பதற்கு முன் ராஷ்டிரபதியின் அல்லது அதற்கென அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரின் முன்னிலையில், அதன்பொருட்டு மூன்றாவது தபசிலில் காட்டப்பட்டுள்ள நமூனாப் பிரகாரம், ஒரு பிரமாணம் அல்லது ஓர் உறுதிமொழி செய்து கையெழுத்திடவேண்டும்.

(7) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பதவி வகித்திருந்த எவரும், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் எந்த நீதிமன்றத்திலாவது, எந்த அதிகாரியின் முன்னிலையிலாவது வாதிக்கவோ அல்லது செயல்புரியவோ கூடாது.

நீதிபதிகளின் சம்பளங்கள் வகையரா.

125. (1) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கு இரண்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட சம்பளங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

(2) நீதிபதி ஒவ்வொருவரும், பார்லிமெண்டால் செய்யப்படும் சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விசேஷ உரிமைகளையும், படிகளையும், ரஜா, பென்ஷன் இவைபற்றிய உரிமைகளையும் பெறுவதற்கும், அப்படி நிர்ணயிக்கப்படும் வரை, இரண்டாம் தபசிலின் குறிப்பிட்ட விசேஷ அதிகாரங்களையும், படிகளையும், உரிமைகளையும் பெறுவதற்கும் பாத்தியதை உள்ளவர் ஆவார்;

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 125–128.

எனினும், ஒரு நீதிபதியின், விசேஷ அதிகாரங்களையாவது படிகளையாவது, ரஜா, பென்ஷன் இவைப்பற்றிய உரிமைகளையாவது அவருடைய நியமனத்திற்குப் பிறகு அவருக்குப் பாதகமாக மாற்றலாகாது.

பதிலாக வேலை பார்க்கும் பிரதம நீதிபதியின் நியமனம்.

126. இந்தியாவின் பிரதம நீதிபதியின் பதவி காலியாயிருக்கும்போதும், அல்லது பிரதம நீதிபதி, தமது இடத்தில் இல்லாமையாலாவது வேறு காரணத்தாலாவது, தம்முடைய உத்தியோகக் கடமைகளை நிறைவேற்ற இயலாதவராயிருக்கும்போதும், அதன் பொருட்டு ராஷ்டிரபதியால் நியமிக்கப்படும் அந்த நீதிமன்றத்தின் மற்றைய நீதிபதிகளில் ஒருவரால் அந்த உத்தியோகக் கடமைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

நிமித்த நீதிபதிகளின் நியமனம்.

127. (1) உச்ச நீதிமன்றத்தைக் கூட்டவோ அல்லது நடத்திவரவோ, அந்த நீதிமன்றத்தின் நீதிபதிகளின் கோரம் எப்பொழுதேனும் இல்லாவிட்டால், இந்தியாவின் பிரதம நீதிபதி, ராஷ்டிரபதியின் முற்சம்மதத்துடனும் அதற்குரிய உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியுடன் கலந்தாலோசனை செய்த பின்னரும், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமனம்பெறப் போதிய தகுதி வாய்ந்தவரும் இந்தியாவின் பிரதம நீதிபதியால் குறிப்பிடப்பட்டவருமான அந்த உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை, அவசியமான காலத்துக்கு, நீதிமன்றம் கூடுகையில் நிமித்த நீதிபதியாக இருந்துவர வேண்டும் என எழுத்துமூலமாகக் கேட்டுக்கொள்ளலாம்.

(2) அப்படிக் குறிப்பிடப்பட்ட நீதிபதி, உச்ச நீதிமன்றம் கூடுகையில், அவருடைய வருகை வேண்டப்படும் நேரத்திலும், காலத்திற்கும் தமது பதவிக்குரிய மற்றைய அலுவல்களுக்கு முற்பட அங்கு வந்திருக்கக் கடமைப்பட்டவர் ஆவார். அவர் அப்படி வந்திருக்கையில், உச்ச நீதிமன்ற நீதிபதியின் அதிகார வரம்பு, சக்திகள், விசேஷ உரிமைகள்—இவற்றையெல்லாம் தாம் உடையவராகி, அந்த நீதிபதியின் கடமைகளைச் செய்வார்.

ஓய்வு பெற்ற நீதிபதிகள் உச்ச நீதிமன்ற கூட்டங்களில் அமர்ந்திருத்தல்.

128. இந்த அத்தியாயத்தில் எவ்வாறு இருப்பினும்; வேண்டும் போதெல்லாம், இந்தியாவின் பிரதம நீதிபதி, ராஷ்டிரபதியின் முற் சம்மதத்துடன், உச்ச நீதிமன்றத்தில் அல்லது பெடரல் நீதிமன்றத்தில் ஒரு நீதிபதிப் பதவியை வகித்திருந்த ஒருவரை, உச்ச நீதிமன்ற நீதிபதியாக அமர்ந்து வேலை பார்க்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளலாம்; அப்படிக் கேட்டுக்கொள்ளப்பட்ட ஒவ்வொருவரும், அப்படி அமர்ந்து வேலை பார்க்கையில், ராஷ்டிரபதி தமது உத்தரவினுல் நிர்ணயிக்கும் படிகளைப் பெறுவதற்கு உரிமை உள்ளவராகவும், அந்த நீதிமன்ற நீதிபதியின் அதிகார வரம்பு, சக்திகள், விசேஷ உரிமைகள் இவற்றையெல்லாம் உடையவராகவும் இருப்பார்; ஆனுல், அவர் மற்றப்படி அந்த நீதிமன்றத்தின் நீதிபதி எனக் கருதப்படமாட்டார்:

எனினும், மேற்சொன்ன ஒருவர், அந்த நீதிமன்றத்தின் நீதிபதியாக அமர்ந்து வேலைபார்க்கச் சம்மதித்தாலன்றி, அவர் அப்படிச் செய்யவேண்டும் என்று இப் பிரிவில் உள்ளது எதுவும் கட்டாயப்படுத்துவதாகக் கருதப்படமாட்டாது.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 129–132.

உச்ச நீதி மன்றம் ரிக்கார்டு நீதிமன்றமும் ஆகும்.

129. உச்ச நீதிமன்றம், ஒரு ரிக்கார்டு நீதிமன்றமாகும்; தன்னை அவமதித்தற்காகத் தண்டிக்கும் சக்தி உட்பட, அத் தகைய நீதிமன்றத்திற்குரிய சகல சக்திகளையும் உடைய தாகும்.

உச்ச நீதி மன்றத்தின் இருப்பிடம்.

130. உச்ச நீதிமன்றம் டெல்லியிலாவது, ராஷ்டிரபதியின் அங்கீகாரத்துடன் இந்தியாவின் பிரதம நீதிபதி அவ்வப்போது நியமிக்கும் வேறு இடத்தில் அல்லது இடங்களிலாவது கூடவேண்டும்.

உச்ச நீதி மன்றத்தின் அசல் விசாரணை-அதிகாரம்.

131. இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்றம்—

(அ) இந்தியச் சர்க்காருக்கும் ஒரு ராஜ்யம் அல்லது பல ராஜ்யங்களுக்கும் இடையிலாவது,

(ஆ) ஒரு கட்சியில் இந்தியச் சர்க்காரும் ஒன்று அல்லது பல ஆன ராஜ்யமும் மறுகட்சியில் ஒன்று அல்லது வேறு பல ஆன ராஜ்யமும் இவற்றிற்கு இடையிலாவது,

(இ) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட ராஜ்யங்களுக்கு இடையிலாவது,

ஒரு சட்ட உரிமை இருத்தலியோ அதன் அளவையோ, பொறுத்த (சட்டம் அல்லது விஷயத்தைக் குறித்த) பிரச்சினைக் கொண்ட விவாதம் எழுந்தால், அந்த அளவுக்கு அசல் விசாரணை-அதிகாரம் உடையதாயிருக்கும்; வேறெந்த நீதி மன்றத்திற்கும் அந்த அதிகாரம் கிடையாது:

[1][எனினும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன் செய்துகொள்ளப்பட்டிருந்து அல்லது இயற்றப்பட்டிருந்து அத் தொடக்கத்திற்குப் பின்னரும் அமுலிலிருந்து வருகிற அல்லது மேற்சொன்ன விசாரணை-அதிகாரம் அத்தகைய விவாதத்திற்கு வியாபிக்காது என்று ஏற்பாடு செய்யும் ஓர் உடன்படிக்கை, கரூர், ஷரா, வாக்குறுதி, சன்னது அல்லது இவை போன்ற மற்றையச் சாஸனத்திலிருந்து எழும் விவாதத்திற்கு மேற்சொன்ன விசாரணை-அதிகாரம் வியாபிக்காது.]

குறிப்பிட்ட விஷயங்களில் உயர் நீதி மன்றங்களிலிருந்து செய்யப்படும் அப்பீல்களில் உச்ச நீதி மன்றத்தின் அப்பீல் விசாரணை-அதிகாரம்.

132. (1) இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள ஓர் உயர் நீதிமன்றம் ஒரு சிவில், கிரிமினல் அல்லது வேறு நடவடிக்கையில் செய்த தீர்ப்பு, டிக்கிரி அல்லது முடிவான உத்தரவின் மேல், இந்த அரசியல்அமைப்புக்கு அர்த்தவிளக்கம் செய்வதில் சாரமான சட்ட விஷயம் அந்தக் கேசில் அடங்கியிருப்பதாக அந்த உயர் நீதி மன்றம் சரியொப்பம் செய்தால், உச்ச நீதி மன்றத்திற்கு அப்பீல் உண்டு.

---

1. அசல் விலக்கு நிபந்தனைக்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 5-வது பிரிவால் அமைத்துக் கொள்ளப்பட்டது.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 132–133

(2) அந்த உயர் நீதி மன்றம் அத்தகைய சரியொப்பம் செய்ய மறுத்தால், அவ் வழக்கில் இந்த அரசியலமைப்பிற்கு அர்த்த விளக்கம் செய்வதில் சாரமான சட்ட விஷயம் ஒன்று அடங்கியிருப்பதாக உச்ச நீதிமன்றத்திற்கு விளங்கினால், அம் மன்றம் அத்தகைய தீர்ப்பு, டிக்கிரி அல்லது முடிவான உத்தரவின்மேல் அப்பீல் செய்துகொள்ள விசேஷ அனுமதி அளிக்கலாம்.

(3) அத்தகைய சரியொப்பம் செய்யப்பட்டால், அல்லது அத்தகைய அனுமதி அளிக்கப்பட்டால், இருகட்சியாரில் எவரும் மேற்சொன்ன பிரச்சினை ஏதாவது தவருகத் தீர்மானிக்கப்பட்டது என்ற காரணத்தாலும் உச்ச நீதி மன்றத்தின் அனுமதியுடன் வேறெந்தக் காரணத்தாலும், உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யலாம்.

விளக்கம்.—இப் பிரிவைப் பொறுத்தவரை, "முடிவான உத்தரவு" என்னும் பதத்தில், எந்த விவாத அம்சம் அப்பீல் செய்தவருக்குச் சாதகமாகத் தீர்க்கப்பட்டால் அவ் வழக்கை முடிவாகத் தீர்ப்பதற்குப் போதியதாகுமோ அந்த விவாத அம்சத்தைத் தீர்மானிக்கும் உத்தரவும் அடங்கும்.

சிவில் விவகாரங்கள் சம்பந்தமாக உயர் நீதி மன்றங்களிலிருந்து செய்யப்படும் அப்பீல்களில் உச்ச நீதி மன்றத்திற்குள்ள அப்பீல் விசாரணை-அதிகாரம்.

133. (1) இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் சிவில் நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்ப்பு, டிக்கிரி அல்லது முடிவான உத்தரவின் பேரில்—

(அ) முதல் கோர்ட்டில் விவாதத்திற்கு உள்ளானதும் அப்பீலில் விவாதிக்கப்படுவதுமான விஷயத்தின் தொகை அல்லது மதிப்பு இருபதினாயிரம் ரூபாய்க் கேனும், இதுவிஷயமாய்ப் பார்லிமெண்டால் சட்டத்தினால் குறிப்பிடும் வேறு தொகைக்கேனும் குறையாமல் இருந்தது என்றும் குறையாமல் இருக்கிறது என்றும், அல்லது,

(ஆ) அத் தீர்ப்பு, டிக்கிரி அல்லது முடிவான உத்தரவில் அதே தொகை அல்லது மதிப்பு உள்ள சொத்தைப் பற்றிய ஒரு தாவா அல்லது பிரச்சினை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ அடங்கியிருக்கிறது என்றும், அல்லது

(இ) உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ள அவ் வழக்குத் தகுதி உடையது என்றும்

அந்த உயர் நீதிமன்றம் சரியொப்பம் செய்தாலும், (இ) உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட வழக்கு நீங்கலாக வேறெந்த வழக்கிலும், அப்பீல் செய்யப்பட்ட தீர்ப்பு, டிக்கிரி அல்லது முடிவான உத்தரவானது அடுத்த கீழ்க்கோர்ட்டின் முடிவை உறுதிப்படுத்தினால், அந்த அப்பீலில் சாரமான சட்ட விஷயம் ஒன்று அடங்கியிருக்கிறது என்று அந்த உயர் நீதிமன்றம் மேற்கொண்டு சரியொப்பம் செய்தாலும், உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் உண்டு.

(2) 132-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், (1)-ம் பகுதியின் கீழ் உச்ச நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யும் எக்கட்சியாளரும் இந்த அரசியல் அமைப்பிற்கு அர்த்த விளக்க

செய்வதுபற்றிய சாரமான சட்ட விஷயம் ஒன்று தவருக முடிவு செய்யப்பட்டது என்பதை அந்த அப்பீலின் காரணங்களில் ஒன்றாக எடுத்துக் கூறலாம்.

(3) இப் பிரிவில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டு சட்டத்தினால் வேறு விதமாய் ஏற்பாடு செய்தாலன்றி, ஓர் உயர் நீதி மன்றத்து நீதிபதியின் தீர்ப்பு, டிக்கிரி அல்லது முடிவான உத்தரவு இவற்றின்பேரில் உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் கிடையாது.

கிரிமினல் விஷயங்கள் சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்திற்குள்ள அப்பீல் விசாரணை—அதிகாரம்.

[1] 134. (1) இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் கிரிமினல் நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்ப்பு அல்லது முடிவான உத்தரவு அல்லது தண்டனையின்பேரில், அந்த உயர் நீதிமன்றம்—

(அ) அப்பீலில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை விடுதலை செய்ய உத்தரவை மாற்றி அவருக்கு மரண தண்டனை விதித்திருந்தாலும், அல்லது

(ஆ) தன்னுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்ட எந்த நீதி மன்றத்திலிருந்தேனும் ஒரு வழக்கைத் தன் முன்பு விசாரணைக்காக வரவழைத்து அத்தகைய விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி என்று தீர்த்து, அவருக்கு மரண தண்டனை விதித்திருந்தாலும், அல்லது

(இ) அவ் வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ளத் தகுதியானதென்று சான்றொப்பம் செய்தாலும்,

உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் உண்டு :

எனினும், 145-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ் இதற்கெனச் செய்யப்படும் ஷரத்துக்களுக்கும் உயர் நீதிமன்றம் ஏற்படுத்தும் அல்லது தேவையெனக் கூறும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, (இ) பகுதியின்கீழ் அப்பீல் உண்டு.

(2) இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள ஓர் உயர் நீதி மன்றத்தின் கிரிமினல் நடவடிக்கையில் ஒரு தீர்ப்பு அல்லது முடிவான உத்தரவு அல்லது ஒரு தண்டனையின் பேரில், சட்டத்தில் குறிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, அப்பீல்களை ஏற்றுக்கொள்வதற்கும் விசாரிப்பதற்கும் மேலும் அதிகமான சக்திகளை உச்ச நீதிமன்றத்திற்குப் பார்லிமெண்டு சட்டத்தினால் அளிக்கலாம்.

---

1 ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 134-வது பிரிவின் (2)-ம் பகுதியில், "பார்லிமெண்டு" என்னும் சொல்லுக்குப் பிறகு, "ராஜ்ய சட்டமன்றம் கேட்டுக் கொள்வதன் பேரில்" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 135—138.

அப்போதுள்ள சட்டத்தின் கீழ்ப் பெடரல் நீதிமன்றத்திற்குள்ள விசாரணை-அதிகாரத்தையும் சக்திகளையும் உச்ச நீதிமன்றம் செலுத்தல்.

[1]*135.* பார்லிமெண்டு சட்டத்தினால் வேறு விதமாக ஏற்பாடு செய்யும்வரை, *133*-வது பிரிவின் அல்லது *134*-வது பிரிவின் ஷரத்துக்கள் பிரயோகப்படாத எந்த விஷயத்திலும் பெடரல் நீதிமன்றத்தால் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அப்போதுள்ள எச் சட்டத்தின் கீழும் செலுத்தப்படக்கூடிய விசாரணை-அதிகாரத்தையும் சக்திகளையும் செலுத்துவதற்கும் உச்ச நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

அப்பீல் செய்து கொள்ள உச்ச நீதிமன்றம் விசேஷ அனுமதி அளித்தல்.

[1]*136.* (1) இந்த அத்தியாயத்தில் எவ்வாறு இருப்பினும், உச்ச நீதிமன்றம், ஒரு வழக்கு அல்லது விஷயத்தில் இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை செய்த அல்லது அளித்த ஒரு தீர்ப்பு, டிக்கிரி, நிர்ணயம், தண்டனை அல்லது உத்தரவின்பேரில், தனக்கு அப்பீல் செய்து கொள்ள உசிதம்போல் விசேஷ அனுமதி அளிக்கலாம்.

(2) ஆயுதப் படைகள் சம்பந்தமான ஒரு சட்டத்திலோ அதன் கீழோ அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றமேனும் நியாயசபையேனும் செய்த அல்லது அளித்த ஒரு தீர்ப்பு, நிர்ணயம், தண்டனை அல்லது உத்தரவுக்கு (1)-ம் பகுதியில் உள்ளது எதுவும் பிரயோகப்படமாட்டாது.

உச்ச நீதிமன்றம் தீர்ப்புக்களையாவது உத்தரவுகளையாவது புனராலோசனை செய்தல்.

137. பார்லிமெண்டால் செய்யப்பட்ட எச் சட்டத்தின் ஷரத்துக்களுக்கும் *145*-வது பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட எவ் விதிகளுக்கும் உட்பட்டு, உச்ச நீதிமன்றம் தான் கூறிய தீர்ப்பையோ செய்த உத்தரவையோ புனராலோசனை செய்ய அதிகாரம் உடையதாகும்.

உச்ச நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரத்தை மிகுதிப் படுத்தல்

138. (1) யூனியன் ஜாபிதாவிற் கண்ட விஷயங்களில் எது பற்றியும் பார்லிமெண்டு சட்டத்தினால் மேலும் அளிக்கும் அதிகப்படியான விசாரணை-அதிகாரத்தையும் சக்திகளையும் உச்ச நீதிமன்றம் உடையதாகும்.

(2) எவ் விஷயத்தைப் பற்றியும் இந்தியச் சர்க்காரும் ஒரு ராஜ்யத்தின் சர்க்காரும் விசேஷக் கரூர்நாமாவினால் அளிக்கும் மேலும் அதிகப்படியான விசாரணை-அதிகாரத்தையும் சக்திகளையும், உச்ச நீதிமன்றம் பிரயோகம் செய்வதற்குப் பார்லிமெண்டு சட்டத்தினால் ஏற்பாடு செய்திருந்தால், அந்த அதிகாரத்தையும் சக்திகளையும் உச்ச நீதிமன்றம் உடையதாயிருக்கும்.

---

[1] *135*-வது, *136*-வது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 139—142.

குறிப்பிட்ட தாக்கீதுகளைப் பிறப்பிக்கும் சக்திகளை உச்ச நீதிமன்றத்திற்கு அளித்தல்.

[1]139. 32-வது பிரிவின் (2)-ம் பகுதியில் கூறப்பட்டவற்றைத் தவிர மற்றெந்த விஷயங்களுக்கும் ஹேபியஸ் கார்ப்பஸ், மாண்டேமஸ், ப்ரொஹிபிஷன், கோ-வாரண்டோ, ஸெர்ஷியோரேரை போன்ற தாக்கீதுகள் உட்பட, கட்டளைகளையாவது, உத்தரவுகளையாவது, தாக்கீதுகளையாவது அல்லது அவற்றுள் எதையாவது பிறப்பிக்கும் சக்தியைப் பார்லிமெண்டு சட்டத்தினுல் உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கலாம்.

உச்ச நீதிமன்றத்தின் சாதக சக்திகள்.

140. இந்த அரசியலமைப்பினுல் அல்லது அதன்கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட விசாரணை-அதிகாரத்தை அம்மன்றம் மேலும் திறம்படச் செலுத்துவதற்குச் சாதகமாயிருக்கும் பொருட்டு, அவசியமாகவோ உசிதமாகவோ தோன்றும் கூடுதலான சக்திகளை இந்த அரசியலமைப்பின் ஷரத்துக்களில் எதனுேடும் முரண்படாத வகையில் அதற்கு அளிக்கப் பார்லிமெண்டு சட்டத்தினுல் ஏற்பாடு செய்யலாம்.

உச்ச நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட சட்டம் எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தல்.

141. உச்ச நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் சட்டம் இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

உச்ச நீதிமன்றத்தின் டிக்கிரிகளையும் உத்தரவுகளையும் நடை பெறுத்தலும் தஸ்தவேசுக்களை வெளிப்படுத்தல் வகைய ராவைப் பற்றிய உத்தரவுகளைப் பிறப்பித்தலும்.

[2]142. (1) உச்ச நீதிமன்றம் தன்னுடைய விசாரணை-அதிகாரத்தைச் செலுத்துகையில் தன் முன்னே நடை பெறும் எந்த வழக்கு அல்லது விஷயத்திலும் பூரண நியாயம் வழங்குவதற்கு அவசியமான டிக்கிரியை அல்லது உத்தரவைப் பிறப்பிக்கலாம்; அப்படிப் பிறப்பிக்கப்பட்ட டிக்கிரி அல்லது உத்தரவு இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுவதிலும், பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் விதிக்கப்படும் விதமாகவும், இதற்கென அப்படி ஏற்பாடு செய்யும் வரை, ராஷ்டிரபதி தமது உத்தரவினுல் வகுக்கும் விதமாகவும் நடைபெறுத்தத்தக்கதாகும்.

(2) பார்லிமெண்டால் இது விஷயமாய்ச் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்றம் இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுவதையும் பொறுத்தவரை, ஏ வரையும் வருவிக்கவும் எந்தத் தஸ்தவேசுக்களையும் வெளிப்படுத்தவும் அல்லது தருவிக்கவும், தன்னே அவமதித்ததான விஷயத்தை விசாரிக்கவும் அல்லது அதற்குத் தண்டனே விதிக்கவும் வேண்டிய உத்தரவு செய்வதற்கான சக்திகள் எல்லாவற்றையும் அவற்றுள் ஒவ்வொன்றையும் உடையதாகும்.

---

[1] 139-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்துக்குப் பிரயோகப்படாது.

[2] சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1954-ம் வருஷம் ஜூனவரி மாதம் 14-ம் தேதியன்று பிறந்த C.O. 47-ம் விளம்பரத்துடன் இந்தியா கெஜெட் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட 19 4-ம் வருஷத்திய உச்ச நீதி மன்ற (டிக்கிரிகள், உத்தரவுகள்) நிறைவேற்ற உத்தரவைப் பார்க்கவும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 143—145.

உச்ச நீதிமன்றத்தைக் கலந்தாலோசிக்க ராஷ்டிரபதிக்குள்ள சக்தி.

143. (1) சட்டம் அல்லது விவகார விஷயம் பற்றிய பிரச்சினை ஒன்று ஏற்பட்டிருந்து அல்லது ஏற்படும்போலிருந்து, அதன் இயல்பினாலும் பொது-முக்கியத் தன்மையாலும் அதைக்குறித்து உச்ச நீதி மன்றத்தின் அபிப்பிராயத்தைப் பெறுதல் உசிதமென்று ராஷ்டிரபதிக்கு எச் சமயத்திலேனும் தோற்றினால், அவர் அப் பிரச்சினையை ஆலோசிப்பதற்காக அந் நீதிமன்றத்திற்கு அனுப்பலாம்; அம் மன்றம், தனக்கு உசிதம் எனத் தோற்றும் விசாரணை செய்த பிறகு, அதைப் பற்றிய தன் அபிப்பிராயத்தை ராஷ்டிரபதிக்குத் தெரிவிக்கலாம்.

(2) ராஷ்டிரபதி, 131-வது பிரிவின் [1]விலக்கு நிபந்தனையில் எவ்வாறு இருப்பினும் [2]அவ் விலக்கு நிபந்தனையில் கூறிய வகையைச் சேர்ந்த எந்த விவாதத்தையும் உச்ச நீதி மன்றத்தின் அபிப்பிராயத்திற்கு அனுப்பலாம்; அம் மன்றம், தனக்கு உசிதம் எனத் தோற்றும் விசாரணை செய்த பிறகு, அதைப்பற்றிய தன் அபிப்பிராயத்தை ராஷ்டிரபதிக்கு தெரிவிக்கவேண்டும்.

சிவில் அதிகாரிகளும் நீதி அதிகாரிகளும் உச்ச நீதிமன்றத்திற்கு உதவியாகச் செயலாற்ற ல.

144. இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள சிவில் அதிகாரிகள் நீதிஅதிகாரிகள் ஆகிய அனைவரும் உச்ச நீதிமன்றத்திற்கு உதவியாகச் செயலாற்ற வேண்டும்.

நீதி மன்றம், வகையறா பற்றிய விதிகள்.

145. (1) பார்லிமெண்டால் செய்யப்பட்ட எச் சட்டத்தின் ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, உச்ச நீதிமன்றம், ராஷ்டிரபதியின் அங்கீகாரத்துடன், பொதுவாக அம் மன்றத்தின் காரிய முறையையும் நடைமுறையையும் ஒழுங்குபடுத்துவதற்கு, அடியிற்கண்டவை உள்ளிட்ட விதிகளை அவ்வப்போது செய்யலாம்:—

(அ) அந் நீதி மன்றத்தின் முன்னே வாதத் தொழில் புரிபவர்களைப் பற்றிய விதிகள்;

(ஆ) அப்பீல்களை விசாரிப்பதற்கான நடைமுறையையும், அந் நீதி மன்றத்தில் அப்பீல்கள் எக் காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது உட்பட அப்பீல்களைக் குறித்த இதர விஷயங்களையும் பற்றிய விதிகள்;

(இ) III-ம் பாகத்தில் அளிக்கப்பட்ட உரிமைகளில் எதையேனும் நடைபெறுத்துவதற்கு அந் நீதி மன்றத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய விதிகள்;

---

[1] "விலக்கு நிபந்தனையின் (1)-ம் பகுதியில்" என்பதற்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துகொள்ளப்பட்டது.

[2] "அப் பகுதியில்" என்பதற்குப் பதிலாக மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக் கொள்ளப்பட்டது.

பாகம் V.—யூனியன்—பிரிவு 145.

(ஈ) 134-வது பிரிவின் (1)-ம் பகுதியின் (இ) உட் பகுதியின்கீழ் அப்பீல்களை ஏற்றுக்கொள்வதைப் பற்றிய விதிகள் ;

(உ) அந்த நீதிமன்றத்தால் கூறப்பட்ட தீர்ப்பையோ செய்யப்பட்ட உத்தரவையோ புனராலோசனை செய்வதற்கான நிபந்தனைகளையும், அப்படிப் புனராலோசனை செய்வதற்கான விண்ணப்பங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டிய காலம் உட்பட அப் புனராலோசனைக்கு உரிய நடைமுறையையும் பற்றிய விதிகள் ;

(ஊ) அந்த நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கும் அவற்றைச் சார்ந்தவைகளுக்கும் இவற்றுக்கான செலவுகளையும் அம் மன்றத்தின் நடவடிக்கைகள் விஷயமாய் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்களையும் பற்றிய விதிகள் ;

(எ) ஜாமீனில் விடுவதைப் பற்றிய விதிகள் ;

(ஏ) நடவடிக்கைகளை நிறுத்திவைத்தலைப் பற்றிய விதிகள் ;

(ஐ) துச்சமானது என்றோ வீண் தொல்லை கொடுப்பது என்றோ காலம் கடத்துவதற்காக கொணரப்பட்டது என்றோ அந்த நீதிமன்றத்திற்குத் தோற்றும் எந்த அப்பீலையும் சுருக்க முறையில் தீர்க்க ஏற்பாடு செய்வதற்கான விதிகள் ;

(ஒ) 317-வது பிரிவின் (1)-ம் பகுதியில் குறிப்பிட்ட விசாரணைகளுக்கான நடைமுறையைப் பற்றிய விதிகள்.

(2) எக் காரியத்துக்காகவேனும் அமர்ந்திருக்கவேண்டிய நீதிபதிகளின் குறைவெண்ணிக்கையை, இப் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் (3)-ம் பகுதியின் ஷரத்துகளுக்கு உட்பட்டு, நிர்ணயிக்கலாம் ; தனித்தனி நீதிபதிகளுக்கும் பிரிவு-நீதி மன்றங்களுக்கும் உள்ள சக்திகளைக் குறித்தும் ஏற்பாடு செய்யலாம்.

(3) இந்த அரசியல் அமைப்பிற்கு அர்த்த விளக்கம் செய்வது சம்மபந்தமாகச் சாரமான சட்டப் பிரச்சினை அடங்கியிருக்கும் ஒரு வழக்கில் தீர்ப்புச் சொல்லும் பொருட்டோ, 143-வது பிரிவின்கீழ் ஆலோசனைக்கு அனுப்பப்பட்ட ஒரு விஷயத்தை விசாரிக்கும் பொருட்டோ அமர்ந்திருக்கவேண்டிய நீதிபதிகளின் குறைவெண்ணிக்கை ஐந்து ஆகும்:

எனினும், இந்த அத்தியாயத்தின் 132-வது பிரிவு நீங்கலாக மற்றைய ஷரத்துக்கள் எவற்றின்கீழும் அப்பீல் விசாரிக்கும் நீதிமன்றத்தில் நீதிபதிகள் ஐவருக்குக் குறைவாயிருந்தால், அந்த அப்பீலை விசாரணை செய்துவருகையில் அதில் இந்த அரசியலமைப்பிற்கு அர்த்த விளக்கம் செய்வது சம்பந்தமாகச் சாரமான சட்டப் பிரச்சினை ஒன்று அடங்கியிருக்கிறது என்றும், அந்த அப்பீலை முடிவு செய்வதற்கு அப்பிரச்சினையைத் தீர்மானிப்பது அவசியம் என்றும் அந்த நீதிமன்றத்திற்கு விளங்கினால், அத்தகைய பிரச்சினை அடங்கிய வழக்கில் தீர்ப்பளிப்பதற்காக இப் பகுதியில் கூறியபடி

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 145—146.

அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தின் அப்பிராயத்தைப் பெறும்பொருட்டு அப் பிரச்சினையை அது அனுப்பவேண்டும்; அதன் அபிப்பிராயத்தைப் பெற்றவுடன் அதற்கு இணங்க அந்த அப்பீலை முடிவு செய்யவேண்டும்.

(4) உச்ச நீதிமன்றம் பகிரங்க மன்றத்திலன்றி எந்தத் தீர்ப்பையும் சொல்லலாகாது; அவ்வாறே, பகிரங்க மன்றத்தில் சொல்லப்பட்ட அபிப்பிராயத்தின்படியன்றி 143-வது பிரிவின்கீழ் அறிக்கை எதையும் செய்யலாகாது.

(5) ஒரு வழக்கை விசாரித்துவந்த நீதிபதிகளில் பெரும்பான்மையோருடைய சம்மதத்தின் பேரிலன்றி எத் தீர்ப்பையும் அத்தகைய எந்த அபிப்பிராயத்தையும் உச்ச நீதிமன்றம் சொல்லலாகாது; ஆனால் அதை ஒத்துக்கொள்ளாத நீதிபதி தமது வேறுபட்ட தீர்ப்பையோ அபிப்பிராயத்தையோ சொல்லுவதை இப் பகுதியில் உள்ளது எதுவும் தடைசெய்வதாகக் கருதப்படமாட்டாது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்களும் சேவையாளர்களும் அதன் செலவுகளும்.

146. (1) இந்தியாவின் பிரதம நீதிபதியாவது அல்லது அவர் நிர்ணயிக்கும் உச்ச நீதிமன்றத்தின் வேறு நீதிபதியாவது உத்தியோகஸ்தராவது அந் நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்களையும் சேவையாளர்களையும் நியமனம் செய்ய வேண்டும்:

எனினும், ராஷ்டிரபதி ஒரு விதி செய்து அதில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், ஏற்கெனவே அந் நீதிமன்றத்தைச் சேர்ந்திராத எவரையும், அந் நீதிமன்றத்தைச் சேர்ந்த பதவிக்கு யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனுடன் கலந்தாலோசித்த பின்னரே யன்றி நியமிக்கலாகாது என்று அவ் விதியின் மூலமாகக் கட்டளையிடலாம்.

(2) பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இந்தியாவின் பிரதம நீதிபதியினுலோ அல்லது இதன் பொருட்டு விதிகள் செய்ய அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற அந் நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியினுலோ அல்லது உத்தியோகஸ்தராலோ செய்யப்படும் விதிகளில் வகுக்கப்பட்டபடி உச்ச நீதி மன்றத்தின் உத்தியோகஸ்தர்கள், சேவையாளர்கள் இவர்களின் சேவை முறைகள் இருக்கவேண்டும்:

எனினும், சம்பளங்கள், படிகள், ரஜா, பென்ஷன் இவைகளைப் பொறுத்தவரை இப்பகுதியின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் ராஷ்டிரபதியின் அங்கீகாரம் பெறவேண்டும்.

(3) உச்ச நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்களுக்கோ, சேவையாளர்களுக்கோ அல்லது அவர்களின்பொருட்டோ கொடுக்கவேண்டிய சகல சம்பளங்களும், படிகளும், பென்ஷன்களும் உட்பட, உச்ச நீதிமன்றத்தின் நிர்வாகச் செலவுகள் இந்தியாவின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்பட வேண்டும்; மேலும், அம் மன்றம் பெற்றுக்கொள்ளும் கட்டணங்களும் வேறு பணங்களும் அந்நிதியில் ஒரு பாகமாய்ச் சேரும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 147—148

அர்த்த விளக்கம்.

147. இந்த அத்தியாயத்திலும் VI-ம் V-ம் பாகத்தின் அத்தியாயத்திலும், இந்த அரசியல் அமைப்பிற்கு அர்த்த விளக்கம் செய்வதில் 'சாரமான சட்டப் பிரச்சினை' என்று குறிக்கும் இடங்களில் எல்லாம், 1935-ம் வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டம் (அச் சட்டத்தைத் திருத்துவதற்கோ நிறைவு செய்வதற்கோ இயற்றப்பட்ட சட்டம் உட்பட) பிரிவி கௌன்ஸிலில் செய்யப்பட்ட ஆர்டர் அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட உத்தரவு அல்லது 1947-ம் வருஷத்திய இந்தியச் சுதந்திரச் சட்டம் அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட உத்தரவு, இவைகளுக்கு அர்த்த விளக்கம் செய்வதில் எழும் சாரமான சட்டப் பிரச்சினையைக் குறிக்கும் இடங்களும் அடங்கியவாக அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

அத்தியாயம் V

இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர்

இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர்.

148. (1) ராஷ்டிரபதியால் தமது கையெழுத்தும் முத்திரையும் கொண்ட அதிபத்திரம் மூலமாக நியமிக்கப்பட்ட இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் என ஒருவர் இருக்கவேண்டும்; உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை எவ்வகையிலும் எக்காரணங்களுக்காகவும் பதவியிலிருந்து நீக்கலாமோ அவ்வாறே அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

(2) இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகராக நியமிக்கப்படும் ஒவ்வொருவரும், தமது பதவியை ஏற்பதற்கு முன்பு, ராஷ்டிரபதியின் அல்லது இதற்கென அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரின் முன்னிலையில் 'இதன் விஷயமாக மூன்றுவது தபசிலில் கண்ட நமூனாப் பிரகாரம் பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்து கையெழுத்திடவேண்டும்.

(3) மாபெருங் கணக்கர்-பரிசோதகரின் சம்பளமும் மற்றைய சேவை நிபந்தனைகளும் பார்லிமெண்டு சட்டத்தினால் நிர்ணயிக்கிறபடியும், அவைகள் அப்படி நிர்ணயிக்கப்படும் வரை, இரண்டாவது தபசிலில் குறிப்பிட்டிருக்கிறபடியும் இருக்கவேண்டும்:

எனினும், மாபெருங் கணக்கர்-பரிசோதகரின் நியமனத்தின் பிறகு அவருடைய சம்பளத்தையோ அல்லது ரஜா, பென்ஷன், அல்லது வேலையிலிருந்து ஓய்வுபெறும் வயது பற்றிய உரிமைகளையோ அவருக்குப் பாதகமாக மாற்றலாகாது.

(4) மாபெருங் கணக்கர்-பரிசோதகர் தமது பதவியிலிருந்து நீங்கிய பிறகு இந்தியச் சர்க்காரின்கீழோ ஒரு ராஜ்யத்தின் சர்க்காரின் கீழோ பின்னும் பதவி வகிக்க அருகர் ஆகார்.

(5) இந்த அரசியல் அமைப்பிலும் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்திலும் உள்ள ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இந்தியத் தணிக்கை கணக்கு டிபார்ட்மெண்டில் வேலை பார்ப்பவர்களின் சேவை நிபந்தனைகளும் மாபெருங் கணக்கர்-பரிசோதகரின் நிர்வாகச் சக்திகளும் மாபெருங் கணக்கர்-பரிசோதகருடன் ராஷ்டிரபதி கலந்தாலோசித்த பிறகு செய்யும் விதிகளால் வகுத்தபடி இருக்கவேண்டும்.

பாகம் V.—யூனியன்—பிரிவுகள் 148—151.

(6) மாபெருங் கணக்கர்-பரிசோதகரின் காரியாலயத்தின் நிர்வாகச் செலவுகள்—அக் காரியாலயத்தில் வேலை பார்ப்பவர்களுக்கோ அவர்கள் பொருட்டோ கொடுக்கப்படும் சகல சம்பளங்களும் படிகளும் பென்ஷன்களும் உட்பட—இந்தியாவின்—சஞ்சித நிதியின் பேரில் சார்ட்டப்படவேண்டும்.

மாபெருங் கணக்கர்-பரிசோதகருடைய கடமைகளும் சக்திகளும்.

[1] *149.* யூனியன், ராஜ்யங்கள், வேறேதேனும் அதிகாரி அல்லது நிலையம் இவற்றின் கணக்குகளைப் பற்றிப் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்திலல் அல்லது அதன்கீழ் வகுக்கப்படும் கடமைகளையும் சக்திகளையும் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் செலுத்தவும் பிரயோகிக்கவும் வேண்டும்; இது விஷயமாய் அப்படி ஏற்பாடு செய்யும் வரை, இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்திய டொமினியன், மாகாணங்கள் இவற்றின் கணக்குகளைப் பற்றி இந்தியாவின் மாபெரும்-பரிசோதகருக்குக் கொடுத்திருந்தவையும் அல்லது அவரால் பிரயோகிக்கத்தக்கவையுமான கடமைகளையும் சக்திகளையும் முறையே யூனியன் அல்லது ராஜ்யங்கள் இவற்றின் கணக்குகளைப் பற்றிச் செலுத்தவும் பிரயோகிக்கவும் வேண்டும்.

கணக்குகளைப் பற்றிக் கட்டளைகள் பிறப்பிக்க மாபெருங் கணக்கர்-பரிசோதகரின் சக்தி.

[1] *150.* யூனியன், ராஜ்யங்கள் இவற்றின் கணக்குகள் ராஷ்டிரபதியின் அங்கீகாரத்துடன் இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் நிர்ணயிக்கும் உருவத்தில் வைக்கப்படவேண்டும்.

தணிக்கை அறிக்கைகள்.

151. (1) யூனியன் கணக்குகளைப்பற்றி இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகருடைய அறிக்கைகள் ராஷ்டிரபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்; அவைகளைப் பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னும் வைக்குமாறு அவர் செய்யவேண்டும்.

[2] *(2)* ஒரு ராஜ்யத்தின் கணக்குகளைப் பற்றி இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகரின் அறிக்கைகள் அந்த ராஜ்யத்தின் [3] [ராஜ்யபாலருக்குச்] சமர்ப்பிக்கப்படவேண்டும்; அவைகளை அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் முன்னிலையில் வைக்குமாறு அவர் செய்யவேண்டும்.

---

[1] *149*-வது *150*-வது பிரிவுகளில் ராஜ்யங்களைப் பற்றி குறிக்கும இடங்களில் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தைப் பற்றி குறிக்கும் இடங்கள் அடங்க மாட்டா என அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில *51*-வது பிரிவில், *(2)*-ம் பகுதியைவிட்டு விட வேண்டும்.

[3] "ராஜ்ய பாலருக்காவது ராஜ பிரமுகருக்காவது" என்பதற்குப் பதிலாக *1956*-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் *29*-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக் கொள்ளப்பட்டது.

பாகம் VI

[1] * * * ராஜ்யங்கள்

அத்தியாயம் I

பொது

பிரிவுகள் 152–156

வரைமுறை

152. இப் பாகத்தில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, '' ராஜ்யம் '' [2][என்பதில் ஐம்மு- காஷ்மீர் ராஜ்யம் என்பது அடங்காது].

அத்தியாயம் II

நிர்வாகிகள்

ராஜ்ய பாலர்

ராஜ்யங்களின் ராஜ்ய பாலர்கள்.

153. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு ராஜ்யபாலர் இருத்தல் வேண்டும்.

[3][எனினும், இப் பிரிவில் உள்ளது எதுவும் ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ராஜ்யங்களின் ராஜ்யபாலராக நியமிக்கப்படுவதைத் தடை செய்யாது.]

ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தி.

154. (1) ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தி ராஜ்யபாலரிடம் நிலைபெற்றிருக்கும் ; அது அவரால் நேராகவோ தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களின் மூலமாகவோ இந்த அரசியல் அமைப்பின்படி செலுத்தப்படவேண்டும்.

(2) இப் பிரிவில் உள்ளது எதுவும்—

(அ) இப்போதுள்ள எச் சட்டத்தினாலாவது மற்றோர் அதிகாரிக்கு அளிக்கப்பட்ட அலுவல்களில் எதையும் ராஜ்ய பாலருக்கு மாற்றுவதற்காகக் கருதப்பட மாட்டாது ; அல்லது

(ஆ) ராஜ்யபாலருக்குக் கீழ்ப்பட்ட ஓர் அதிகாரிக்குப் பார்லிமெண்டு அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினால் அலுவல்கள் அளித்தலைத் தடைசெய்யாது.

ராஜ்ய பாலரின் நியமனம்.

155. ராஷ்டிரபதியால் கையெழுத்துச்செய்து முத்திரையிடப்பட்ட அதிபத்திர மூலமாக ஒரு ராஜ்யத்தின் ராஜ்ய பாலர் நியமிக்கப்படவேண்டும்.

ராஜ்ய பாலரின் பதவிக் காலம்.

156. (1) ராஜ்யபாலர் ராஷ்டிரபதிக்கு விருப்பமுள்ள காலம் வரை பதவி வகிப்பார்.

---

[1] ''முதலாவது தபசிலின் அ பாகத்தில் கண்ட '' என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[2] ''என்னும் பதம் முதலாவது தபசிலின் அ பாகத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு ராஜ்யம் என்று பொருள்படும்'' என்பதற்குப் பதிலாக ஷி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொளளப்பட்டது.

[3] ஷி சட்டத்தின் 6-வது பிரிவால் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

(2) ராஜ்யபாலர் தாம் கையெழுத்துச் செய்து ராஷ்டிரபதிக்கு விளாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலம் தமது பதவியை ராஜினாமாச் செய்யலாம்.

(3) இப் பிரிவின் மேற்கண்ட ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ராஜ்யபாலர் ஒருவர் தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஐந்து வருஷ காலம் பதவி வகிப்பார்.

எனினும், ராஜ்யபாலர் ஒருவர் தமது பதவிக்காலம் முடிவடைந்திருந்தாலும், தமக்குப் பின் வருபவர் அவருடைய பதவியை ஏற்கும் வரை தொடர்ந்து பதவி வகித்துவருவார்.

157. இந்தியாவின் குடியாகவும் முப்பத்தைந்து வயது நிரம்பியவராகவும் இல்லாத எவரும் ராஜ்யபாலராக நியமனம் பெற அருகர் ஆகார். ராஜ்ய பாலராக நியமனம் பெறுதற் குரிய தகுதிகள்.

158. (1) ராஜ்யபாலர் பார்லிமெண்டுச் சபை எதிலாகிலும், முதலாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை எதிலாகிலும் அங்கத்தினராக இருத்தலாகாது; மேலும், பார்லிமெண்டுச் சபை எதிலாவது அல்லது அத்தகைய ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை எதிலாவது அங்கத்தினராக உள்ள ஒருவர் ராஜ்யபாலராக நியமிக்கப்பட்டால், அவர் ராஜ்யபாலராகப் பதவி ஏற்கும் தேதியன்று அச் சபையில் தமது ஸ்தானத்தைக் காலி செய்து விட்டதாகக் கருதப்படுவார். ராஜ்ய பாலரின் பதவிக் குரிய ஷரத்துக்கள்.

(2) ராஜ்யபாலர் லாபம் தரும் வேறெந்த உத்தியோகத்தையும் வகித்தலாகாது.

(3) ராஜ்யபாலர் தமது உத்தியோக மாளிகைகளை வாடகையின்றி உபயோகிக்க உரிமை உடையவர் ஆவார்; மேலும், பார்லிமெண்டால் சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் ஊதியங்கள், படிகள், விசேஷ உரிமைகள் ஆகியவற்றிற்கும், அவற்றிற்கென அப்படி ஏற்பாடு செய்யும்வரை, இரண்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட ஊதியங்கள், படிகள், விசேஷ உரிமைகள் ஆகியவற்றிற்கும் உரிமையுடையவர் ஆவார்.

[1][(3அ) ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ராஜ்யங்களின் ராஜ்யபாலராக நியமிக்கப்பட்டால், ராஜ்யபாலருக்குக் கொடுக்கப்படலாகும் ஊதியங்களும் படிகளும் ராஷ்டிரபதி உத்தரவின் மூலம் நிர்ணயிக்கக்கூடிய விகிதாசாரப்படி அந்த ராஜ்யங்களிடையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.]

(4) ராஜ்யபாலரின் ஊதியங்களையும் படிகளையும் அவருடைய பதவிக் காலத்தில் குறைத்தலாகாது.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியலமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 7-வது பிரிவால் இடைச்சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் VI—ராஜ்யங்கள்—பிரிவுகள் 159—162.

ராஜ்ய பாலரின் பிரமாணம் அல்லது உறுதி மொழி.

159. ஒவ்வொரு ராஜ்யபாலரும், ராஜ்யபாலரின் அலுவல்களைச் செய்துவரும் ஒவ்வொருவரும், தமது பதவியை ஏற்பதற்குமுன், அந்த ராஜ்யம் சம்பந்தமாய் விசாரணை-அதிகாரம் செலுத்தும் உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியின், அல்லது அவர் இல்லாவிட்டால் அந்த நீதிமன்றத்து நீதிபதிகளாய் இருப்பவர் எல்லாரிலும் ஸீனியராயுள்ளவரின் முன்னிலையில் கீழ்க்கண்டபடி ஒரு பிரமாணம் அல்லது உறுதி மொழி செய்து அதில் கையெழுத்திடவேண்டும்; அதாவது

> "அ. ஆ. ஆகிய நான் .....ன் (ராஜ்யத்தின் பெயர்) ராஜ்ய பாலரின் பதவியை நெறிமுறையாக நிர்வகிப்பேன் அல்லது ராஜ்யபாலரின் அலுவல்களை நிறைவேற்றுவேன்) என்றும், அரசியல் அமைப்பையும் சட்டங்களையும் என்னுடைய முழுத் திறமையுடன் பேணி, ஆதரித்துப் பாதுகாப்பேன் என்றும்...ன் (ராஜ்யத்தின் பெயர்) மக்களின் சேவைக்கும் நல்வாழ்விற்கும் என்னை அர்ப்பணம் செய்வேன் என்றும்
>
> கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்.
> மனப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்.

எதிர்பாராத சந்தர்ப்பங்களில் ராஜ்ய பாலருடைய அலுவல்களைச் செய்தல்.

160. ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலரின் அலுவல்களைச் செய்வதற்கு இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்படாத சந்தர்ப்பம் எதிலும் ராஷ்டிரபதி தமக்குத் தகுதியெனத் தோற்றும் ஏற்பாட்டைச் செய்யலாம்.

மன்னித்தல் வகையரா அளிக்கவும், குற்றத் தீர்ப்புக்களை நிறுத்தவும், தவிர்க்கவும் அல்லது மாற்றவும் ராஜ்யபாலருக்குள்ள சக்தி.

161. ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தி வியாபிக்கும் ஒரு விஷயத்தைப் பற்றிய சட்டத்தை மீறிய குற்றம் செய்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவருடைய தண்டனையை மன்னித்தல், தடுத்தல், நிறுத்தல் அல்லது தவிர்த்தல் செய்யவும், அவருடைய குற்றத் தீர்ப்பை நிறுத்தவும் தவிர்க்கவும் மாற்றவும் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலர் சக்தி உடையவர் ஆவார்.

ராஜ்யத்தின் நிர்வாகச் சக்திகளின் அளவு.

162. இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு ராஜ்யத்தின் நிர்வாக சக்தி, அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டம் செய்வதற்குச் சக்தியுள்ள விஷயங்களுக்கு வியாபிக்கும்:

எனினும், ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்திற்கும் பார்லிமெண்டிற்கும் சட்டம் செய்யச் சக்தியுள்ள எந்த விஷயத்திலும், ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தி, இந்த அரசியல் அமைப்பிஞல் அல்லது பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்திஞல் யூனியனுக்காவது அல்லது அதன் அதிகாரிகளுக்காவது வெளிப்படையாக அளிக்கப்பட்டிருக்கும் நிர்வாகச் சக்திக்கு உட்பட்டதாகவும், அதஞல் வரையறுக்கப்பட்டதாகவும் இருக்கும்.

பாகம் VI.—ராஜ்யங்கள்.—பிரிவுகள் 163–164.

மந்திரி சபை

ராஜ்ய பாலருக்கு உதவி புரியவும் ஆலோசனை அளிக்கவும் மந்திரி சபை.

163. (1) இந்த அரசியல்அமைப்பிலோ அதன்கீழோராஜ்ய-பாலர் தாம் உசிதம்போல் செய்யவேண்டிய அலுவல்களையும் அல்லது அவற்றுள் எதையும் தவிர மற்றைய அலுவல்களைச் செய்கையில் அவருக்கு உதவி புரியவும் ஆலோசனை அளிக்கவும் பிரதம மந்திரியைத் தலைவராகக்கொண்ட மந்திரி சபை ஒன்று இருக்கவேண்டும்.

(2) இந்த அரசியல் அமைப்பிலோ அதன் கீழோ ஏதேனும் ஒரு விஷயம் ராஜ்யபாலர் தாம் உசிதம்போல் நடத்தவேண்டியதா அல்லவா என்ற ஒரு பிரச்சினை எழுமாறுல், ராஜ்யபாலர் தாம் உசிதம் போல் செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்; ராஜ்யபாலரால் செய்யப்பட்ட எக்காரியத்தின் செல்திறனும் அவர் உசிதம்போல் நடந்திருக்கவேண்டும் அல்லது நடந்திருக்கக்கூடாது என்னும் காரணத்தால் ஆட்சேபிக்கப்படலாகாது.

(3) ராஜ்யபாலருக்கு மந்திரிகளால் ஆலோசனை ஏதேனும் அளிக்கப்பட்டதா, அப்படியானால் அந்த ஆலோசனை யாது என்ற விஷயம் எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படலாகாது.

மந்திரிகளைப் பற்றிய மற்றைய சரத்துக்கள்.

164. (1) பிரதம மந்திரி ராஜ்யபாலரால் நியமிக்கப்படுவார்; மற்றைய மந்திரிகள் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் ராஜ்யபாலரால் நியமிக்கப்படுவார்கள்; ராஜ்யபாலருக்கு விருப்பமுள்ள காலம் வரை மந்திரிகள் பதவி வகிப்பார்கள்:

எனினும், பிஹார், மத்தியப் பிரதேசம், ஓரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களில், மலை-ஜாதியார்களின் நலத்தைக் கவனிக்கும் மந்திரி ஒருவர் இருக்கவேண்டும்; அதோடு அவர் அனுபந்த-ஜாதியார்கள், பிற்பட்ட வகுப்பினர்கள் இவர்களின் நலத்தையும் அல்லது மற்றெந்த வேலையையும் கவனிக்கலாம்.

(2) மந்திரி சபை ராஜ்யத்தின் சட்டசபைக்குக்கூட்டுப் பொறுப்பு உள்ளதாக இருக்கும்.

(3) மந்திரி ஒருவர் பதவி ஏற்பதற்குமுன், அப் பதவியையும் அந்தரங்கத்தையும் பற்றிய பிரமாணங்களை அதற்கென மூன்றாவது தபசிலில் கண்டுள்ள நமூனாக்களின்படி அவருக்கு ராஜ்யபாலர் வழங்கவேண்டும்.

(4) மந்திரி ஒருவர் ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் தொடர்ச்சியாக ஆறு மாதகாலம் அங்கத்தினராயிராவிட்டால், அவர் அந்தக் காலம் முடிவடைந்ததும் மந்திரியாய் இருக்கமாட்டார்.

(5) மந்திரிகளின் சம்பளங்களும் படிகளும் ராஜ்யத்தின் சட்டமன்றம் அவ்வப்போது சட்டத்தினால் நிர்ணயித்தவாறும், அப்படி ராஜ்யத்தின் சட்டமன்றம் நிர்ணயிக்கும்வரை, இரண்டாவது தபசிலில் குறிப்பிட்டவாறும் இருக்கவேண்டும்.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 165–167.

ராஜ்யத்தின் அட்வொகேட்-ஜெனரல்

ராஜ்யத்தின் அட்வொகேட்-ஜெனரல்.

165. (1) ஒவ்வொரு ராஜ்யத்தின் ராஜ்யபாலரும், ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமனம்பெறத் தகுதியுள்ள ஒருவரை அந்த ராஜ்யத்தின் அட்வொகேட்-ஜெனரலாக நியமிக்கவேண்டும்.

(2) அட்வொகேட்-ஜெனரல் அவ்வப்போது ராஜ்யபாலரால் தமக்கு அனுப்பப்படும் சட்ட விஷயங்களைக் குறித்து அந்த ராஜ்யத்தின் சர்க்காருக்கு ஆலோசனை சொல்லவும், தமக்கு இடப்பட்ட சட்ட சம்பந்தமான மற்றைய கடமைகளைச் செய்யவும், இந்த அரசியல் அமைப்பினாலாவது அச்சமயம், அமுலிலிருக்கும் வேறெந்தச் சட்டத்தினாலாவது அல்லது அவற்றின் கீழாவது தமக்கு அளிக்கப்பட்ட அலுவல்களைச் செய்யவும் கடமைப்பட்டவர் ஆவார்.

(3) ராஜ்யபாலருக்கு விருப்பமுள்ள காலம்வரை அட்வொகேட்-ஜெனரல் பதவி வகிப்பார்; அவர் ராஜ்யபாலர் நிர்ணயித்தவாறு சன்மானம் பெறுவார்.

சர்க்கார் அலுவல் நடைமுறை

ஒரு ராஜ்யச் சர்க்காரின் வேலை நடத்தும் முறை.

166. (1) ஒரு ராஜ்யச் சர்க்காரின் நிர்வாகச் செயல்கள் எல்லாம் ராஜ்யபாலரின் பெயரால் நடத்தப்பெறுவனவாகக் கூறப்படவேண்டும்.

(2) ராஜ்யபாலரின் பெயரால் செய்யப்பட்டவும், பிறப்பிக்கப்பட்டவுமான உத்தரவுகளும் மற்றையச் சாசனங்களும் ராஜ்யபாலரால் செய்யப்படும் விதிகளில் குறிப்பிட்ட விதமாக மெய்ப்பிக்கப்படவேண்டும்; அப்படி மெய்ப்பிக்கப்பட்ட உத்தரவு அல்லது சாசனத்தின் செல்திறன் அது ராஜ்யபாலரால் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அல்லது சாசனம் அன்று என்னும் காரணம் பற்றி ஆட்சேபிக்கப்படலாகாது.

(3) ராஜ்யச் சர்க்காரின் அலுவலை மேலும் சௌகரியமாக நடத்தவும், இந்த அரசியல் அமைப்பிலோ அல்லது அதன் கீழோ ராஜ்யபாலர், தாம் உசிதம்போல் செய்யவேண்டிய அலுவலைத் தவிர மற்றைய அலுவலை மந்திரிகளிடையே பகிர்ந்து கொடுக்கவும் ராஜ்யபாலர் விதிகள் செய்யவேண்டும்.

ராஜ்ய பாலருக்குத் தகவல் கொடுத்தல் வகையரா சம்பந்தமாகப் பிரதம மந்திரியின் கடமைகள்.

167. ஒவ்வொரு ராஜ்யத்தின் பிரதம மந்திரியின் கடமைகள்—

(அ) ராஜ்யக் காரிய நடைமுறை, சட்டம் செய்வதற்கான பிரேரணைகள் இவைபற்றிய மந்திரிசபையின் சகல தீர்மானங்களையும் ராஜ்யத்தின் ராஜ்யாலருக்கு அனுப்புதலும்,

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 167-169.

(ஆ) ராஜ்யக் காரிய நடைமுறை, சட்டம் செய்வதற்கான பிரேரணைகள் இவைபற்றி ராஜ்யபாலர் கேட்கும் தகவலைக் கொடுத்தலும்,

(இ) மந்திரி ஒருவரால் முடிவு செய்யப்பட்டதாயும், மந்திரி சபையால் ஆலோசிக்கப்படாததாயும் உள்ள எந்த விஷயத்தையும், ராஜ்யபாலர் கோரினால், அச்சபையின் ஆலோசனைக்குச் சமர்ப்பித்தலும் ஆகும்.

அத்தியாயம் III

ராஜ்யத்தின் சட்டமன்றம்

பொது

ராஜ்யங்களின் சட்டமன்றங்களின் அமைப்பு.

168. (1) ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் சட்டமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும் ; அது ராஜ்யபாலரையும்

(அ) பீஹார், பம்பாய், [1][மத்தியப் பிரதேசம்], மதராஸ்[1] [மைசூர்], பஞ்சாப், [2][உத்தரப் பிரதேசம்], மேற்குவங்காளம் ஆகிய ராஜ்யங்களில், இரண்டு சபைகளையும்,

(ஆ) மற்றைய ராஜ்யங்களில், ஒரு சபையையும் கொண்டதாக இருக்கவேண்டும்.

(2) ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் இரண்டு சபைகள் இருந்தால், ஒன்று சட்டப்பரிஷத்து என்றும் மற்றொன்று சட்டசபை என்றும் பெயர் பெறும் ; ஒரு சபை மட்டும் இருந்தால் அது சட்டசபை என்று பெயர் பெறும்.

ராஜ்யங்களில் சட்டப் பரிஷத்துக்களை நீக்குதல் அல்லது உண்டாக்குதல்.

169. (1). 168-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், சட்டப்பரிஷத்து உள்ள ஒரு ராஜ்யத்தில் அப் பரிஷத்தை நீக்கவோ அல்லது அத்தகைய பரிஷத்து இல்லாத ராஜ்யத்தில் அப் பரிஷத்தை உண்டாக்கவோ, அந்த ராஜ்யத்தின் சட்டசபை, அதன் மொத்த அங்கத்தினர்களில் பெரும்பான்மையோராலும், வந்திருந்து வோட்டுச் செய்யும் சபை அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையோராலும், அதற்கென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால், பார்லிமெண்டு அவ்வாறு சட்டத்தினால் ஏற்பாடு செய்யலாம்.

(2) (1)-ம் பகுதியில் குறிப்பிடப்பட்ட எந்தச் சட்டமும் அச் சட்டத்தின் ஷரத்துக்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான வகையில் இந்த அரசியல் அமைப்பைத் திருத்தம் செய்வதற்கான ஷரத்துக்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்;

---

[1] (அறிக்கையிட்டபோது) 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு(ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 8-வது பிரிவால் இடைச் சேர்ப்பாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] "ஐக்கிய மாகாணங்கள்" என்பதற்குப் பதிலாக (1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 25-ம் தேதியுள்ள C. O 3 ஆகிய) 1950-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதலாம் நான்காம் தபசில்கள் திருத்த) உத்தரவால் அமைத்துக் கொள்ளப்பட்டது.

மேலும், பார்லிமெண்டு அவசியமெனக் கருதும் வகையில் அச் சட்டத்தின் நிறைவாகவும் சார்பாகவும் விளைவாகவும் உள்ள ஷரத்துக்களையும் கொண்டதாயிருக்கலாம்.

(3) மேற்சொன்ன சட்டம் எதுவும் 368-வது பிரிவின் படியுள்ள இந்த அரசியல் அமைப்பின் திருத்தம் எனக் கருதப் படமாட்டாது.

சட்ட சபைகளின் அமைப்பு.

[1][170. (1). 333-வது பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டசபையும் ராஜ்யத்தின் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளிலிருந்து நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் ஐந்நூற்றுக்கு மேற்படாதவர்களையும் அறுபதுக்குக் குறையாதவர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

*(2). (1)-ம் பகுதியின் பொருட்டு, ஒவ்வொரு தேர்வுத் தொகுதியின் ஜனத் தொகைக்கும் அதற்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள ஸ்தானங்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமானது இயன்ற வரையில் ராஜ்யம் எங்கணும் சமமாய் இருக்கும் விதத்தில் ஒவ்வொரு ராஜ்யமும் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளாய்ப் பிரிக்கப்படவேண்டும்.

விளக்கம்.—இப் பகுதியில் ''ஜனத்தொகை'' என்பது பொருத்தமான புள்ளிவிவரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ள அடுத்து முந்திய ஜனசங்கியையில் கண்டறியப்பட்ட ஜனத் தொகை என்று பொருள்படும்.

(3) ஒவ்வொரு ஜனசங்கியையும் முடிவடைந்ததும், ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டசபையிலுள்ள ஸ்தானங்களின் மொத்த எண்ணிக்கையும் ஒவ்வொரு ராஜ்யத்தையும் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளாகப் பிரிப்பதும் பார்லிமெண்டு சட்டத்திஞல் நிர்ணயிக்கும் அதிகாரியாலும் விதத்திலும் திருத்தியமைக்கப்படவேண்டும் :

எனினும், அப்படித் திருத்தியமைப்பது அப்போதுள்ள சட்ட சபையின் கலைப்புவரை அச்சபையிலுள்ள பிரதிநிதித்துவத்தைப் பாதிக்காது.]

---

[1] அசல் பிரிவுக்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 9-வது பிரிவால் அமைத்துக்கொள்ளப்பட்டது.

*குறிப்பு.—அரசியல் அமைப்பு (முட்டுப்பாடுகள் நிவாத்தி) VIII-ம்ஆ உத்தரவின் 2-வது பாராவில் அடியிற்கண்டவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது:—

இந்த அரசியல் அமைப்பின் ஆறுவது தபசிலின் 20-வது பாராவுடன் சேர்த்துள்ள அட்டவணையில் ஆ பாகத்தில குறிப்பிட்ட மலை ஜாதிப் பிரதேசங்களில் அல்லது அவற்றின் எவையேனும் பாகங்கள் அத் தபசிலின் 18-வது பாராவின் (2)-ம் உப பாராவினுல் ராஷ்டிரபதியால் நிர்வகிக்கப்படும் கால அளவில் இந்திய அரசியல அமைப்பு கீழ்க்கண்ட இணக்கத்துக்கு உட்பட்டுச் செல்திறனுள்ளதாகும் :—

170-வது பிரிவின் (2)-ம் பகுதியில், ''பிரிக்கப்பட வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பிறகு, கீழ்க்கண்ட விலக்கு நிபந்தனையை இடைச் சேர்ப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும் ; அதாவது :—

''அஸ்ஸாம் ராஜ்யத்தில் பிரித்துள்ள தேர்வுத் தொகுதிகளில், ஆறுவது தபசிலின் 20-வது பாராவுடன் சேர்த்துள்ள அட்டவணையின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட மலைஜாதிப் பிரதேசங்கள் அடங்கமாட்டா.''

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவு 171.

சட்டப் பரிஷத்துக் களின் அமைப்பு.

171. (1) சட்டப்பரிஷத்து உள்ள ஒரு ராஜ்யத்தில் பரிஷ்திதின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை அந்த ராஜ்யத்தின் சட்டசபை அங்கத்தினர்களின் மொத்த எண் ணிக்கையில் [1]மூன்றில் [ஒரு பங்குக்கு மேற்படலாகாது].

எனினும், ஒரு ராஜ்யத்தின் சட்டப்பரிஷத்தின் அங்கத் தினர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வாற்றானும் நாற்ப துக்குக் குறைவாய் இருத்தலாகாது.

(2) பார்லிமெண்டு சட்டத்தினால் வேறு விதமாக ஏற் பாடு செய்யும்வரை, ஒரு ராஜ்யத்தின் சட்டப்பரிஷத்தின் அமைப்பு (3)-ம் பகுதியில் எற்பாடு செய்துள்ளவாறு இருக்கவேண்டும்.

(3) ஒரு ராஜ்யத்தினுடைய சட்டப்பரிஷத்தின் அங்கத் தினர்களின் மொத்த எண்ணிக்கையில்—

(அ) கிட்டியவரை, மூன்றில் ஒரு பகுதியினர் முனிசி பாலிட்டிகள், ஜில்லா போர்டுகள் பார்லி மெண்டு சட்டத்தினால் குறிப்பிடும் அந்த ராஜ் யத்தின் மற்றைய ஸ்தல அதிகார நிலையங்கள் ஆகிய இவற்றின் அங்கத்தினர்கள் அடங்கிய வாக்காளர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் ;

(ஆ) கிட்டியவரை, பன்னிரண்டில் ஒரு பகுதியினர், அந்த ராஜ்யத்தில் வசிப்பவர்களில் குறைந்தது மூன்று வருஷம் இந்தியாவின் ஆட்சிப்பரப்பி லுள்ள ஒரு சர்வ கலாசாலை பட்டதாரிகள், அல்லது அத்தகைய சர்வ கலாசாலைப் பட்ட தாரிகளின் தகுதிகளுக்குச் சமமானவை எனப் பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத் தினால் அல்லது அதன்கீழ் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைக் குறைந்தது மூன்று வருஷம் உடையவர்கள்—ஆகிய இவர்கள் அடங்கிய வாக்காளர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் ;

(இ) கிட்டியவரை பன்னிரண்டில் ஒரு பகுதியினர். அந்த ராஜ்யத்தில் நடுத்தரப் பாடசாலையின் தரத்துக்குக் குறையாதவையும். பார்லிமெண் டால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தினால் அல்லது அதன்கீழ் நிர்ணயிக்கப்பட்டவையும் ஆன கல்வி ஸ்தாபனங்களில் குறைந்தது மூன்று வருஷம் கல்வி கற்பித்தவர்கள் அடங்கிய வாக்காளர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் ;

(ஈ) கிட்டியவரை, மூன்றில் ஒரு பகுதியினர் அந்த [1] ராஜ்யத்தின் சட்டசபை அங்கத்தினர்களால் அச் சபையின் அங்கத்தினர் அல்லாதவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும் ;

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 10-வது பிரிவால், "நான்கில்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப் பட்டது.

(உ) மீதியுள்ளவர் (5)-ம் பகுதியின் ஷரத்துக்களின் படி ராஜ்யபாலரால் நியமிக்கப்படவேண்டும்.

(4) (3)-ம் பகுதியின் (அ), (ஆ), (இ) உட்பகுதிகளின் கீழ்த் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அங்கத்தினர்கள், பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் நிர்ணயிக்கப்படும் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளால் தெரிந்தெடுக்கப்படவேண்டும்; மேலும், அந்த உட்பகுதிகளின் கீழும் மேற்படி பகுதியின் (ஈ) உட்பகுதியின்கீழும் நடக்க வேண்டிய தேர்தல்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப் படி ஒற்றை மாற்று வோட்டு மூலமாக நடத்தப்படவேண்டும்.

(5) (3)-ம் பகுதியின் (உ) உட்பகுதியின்கீழ் ராஜ்ய பாலரால் நியமிக்கப்படும் அங்கத்தினர்கள் இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு இயக்கம், சமூக சேவை இவை போன்ற விஷயங்களில் விசேஷ அறிவு அல்லது செயல்முறை அனுபவம் வாய்ந்தவர்களாய் இருத்தல்வேண்டும்.

ராஜ்யச் சட்ட மன்றங்கள் நீடித் திருக்கும் காலம்.

172. (1) ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டசபை ஒவ் வொன்றும், அதன் முதல் கூட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருஷகாலம், அதற்கு இடையே கலைக் கப்பட்டாலன்றி, நீடித்திருக்கும்; அதற்குமேல் இருத்த லாகாது; மேற்சொன்ன ஐந்து வருஷ காலத்தின் முடிவே அச்சபையின் கலைப்பை விளைக்கும் திறனுடையதாகும்:

எனினும், மேற்சொன்ன காலத்தை, ஆபத்துநிலைப் பிரகடனம் ஒன்று அமுலில் இருக்கும்போது, ஒரு தடவைக்கு ஒரு வருஷத்திற்கு மேற்படாமலும் அப்பிரகடனம் அமு லற்றுப்போனதிலிருந்து எப்படியும் ஆறு மாத காலத்திற்கு மேற்படாமலும் பார்லிமெண்டு சட்டத்தினுல் நீடித்து வைக்க லாம்.

(2) ஒரு ராஜ்யத்தின் சட்டப்பரிஷத்து கலைக்கப்பட மாட்டாது; ஆனல், பார்லிமெண்டால் இதற்கெனச் சட்டத் தினுல் செய்யப்பட்ட ஏற்பாடுகளின்படி ஒவ்வோர் ஈராண்டின் முடிவிலும் இயன்ற விரைவில் அதன் அங்கத்தினர்களில் கிட்டிய அளவு மூன்றில் ஒரு பகுதியார் விலகிக்கொள்ள வேண்டும்.

ராஜ்யச் சட்ட மன்ற அங்கத் தினரின் பதவிக்குரிய தகுதி.

173. ஒருவர்—

(அ) இந்தியாவின் குடியாகவும்,

(ஆ) சட்டசபையின் ஸ்தானமானுல் இருபத்தைந்து வயதுக்குக் குறையாதவராகவும், சட்டப்பரிஷத் தின் ஸ்தானமானுல் முப்பது வயதுக்குக் குறை யாதவராகவும்,

(இ) பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத் தினுலோ அல்லது அதன் கீழோ இதற்கென வகுக் கப்படும் மற்றையத் தகுதிகளை உடையவராகவும் இருந்தாலன்றி, ஒரு ராஜ்ய சட்டமன்றத்தில் ஸ்தானம் வகிப்பதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவர் ஆகார்.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 174-176.

ராஜ்யச் சட்ட மன்றத்தின் நடைக் காலமும், அதை ஒத்திப் போடுதலும் கலைத்தலும்.

[1][174. (1) ராஜ்ய சட்ட மன்றச் சபையை அல்லது சபை ஒவ்வொன்றையும் ராஜ்யபாலர் தாம் தகுதியெனக் கருதும் காலத்திலும் இடத்திலும் கூடும்படி அவ்வப்போது அழைத்தல் வேண்டும். ஆனால், ஒரு நடைக்காலத்தில் அதன் கடைசிக் கூட்டத்திற்கும் அடுத்த நடைக்காலத்தில் அதன் முதல் கூட்டத்திற்காக நியமிக்கப்படும் தேதிக்கும் நடுவே ஆறு மாத காலம் இடைப்படலாகாது.

(2) ராஜ்யபாலர் அவ்வப்போது—

(அ) அச் சபையையோ எச் சபையையோ கால வரையரையின்றி ஒத்திப் போடலாம் ;

(ஆ) சட்ட சபையைக் கலைக்கலாம்.]

சபையில் அல்லது சபைகளில் உரையாற்றவும் அதற்கு அல்லது அவைகளுக்கு நிருபங்கள் அனுப்பவும் ராஜ்ய பாலருக்குள்ள உரிமை.

175. (1) சட்டசபையிலாவது, சட்டப்பரிஷத்து உள்ள ராஜ்யமாயிருந்தால் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றச் சபை எதிலாவது, அல்லது ஒருங்குகூடிய இரு சபைகளிலுமாவது ராஜ்யபாலர் உரையாற்றலாம் ; அதன்பொருட்டு அங்கத்தினர்கள் வந்திருக்க வேண்டும் என்று அவர் பணிக்கலாம்.

(2) ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் அப்போது முடிவு பெறுதிருக்கும் ஒரு மசோதா விஷயமாகவேனும் மற்றைய வகையிலேனும் சட்டமன்றத்தின் சபைக்காவது சபைகளுக்காவது ராஜ்யபாலர் நிருபங்கள் அனுப்பலாம் ; அப்படி நிருபம் அனுப்பப்பெற்ற சபை அந்நிருபத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று பணித்த எந்த விஷயத்தையும் சௌகரியக் குறைவின்றிய அதி விரைவில் ஆலோசிக்க வேண்டும்.

ராஜ்ய பாலரின் விசேஷ உரையாற்றல்.

176. (1) [2][சட்ட சபைக்காக நடக்கும் ஒவ்வொரு பொதுத்தேர்தலுக்கும் பின்னதான முதல் நடைக்காலத்தின் தொடக்கத்திலும், ஒவ்வொரு வருஷத்தின் முதல் நடைக்காலத்தின் தொடக்கத்திலும்] ராஜ்யபாலர் சட்டசபையிலோ, சட்டப்பரிஷத்து ஒன்று உள்ள ராஜ்யமாயிருந்தால் ஒருங்குகூடிய இரு சபைகளிலுமோ உரையாற்றல் வேண்டும் ; சட்ட மன்றத்தை அழைத்த காரணங்களை அதற்குத் தெரிவிக்கவும் வேண்டும்.

(2) அச் சபையின் அல்லது இரு சபைகளில் எதன் நடைமுறையையும் ஒழுங்குபடுத்தும் விதிகளால், அந்த உரையில் குறித்த விஷயங்களைச் சர்ச்சை செய்வதற்காக [3][நேரம் அளித்தலைப்பற்றி] ஏற்பாடு செய்யவேண்டும்.

---

[1] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவினால், அசல் பிரிவுக்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 9-வது பிரிவினால், ''ஒவ்வொரு நடைக்காலத்தின் தொடக்கத்திலும்'' என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[3] ஷெ சட்டத்தின் அதே பிரிவினால், ''நேரம் அளித்தலைப் பற்றியும் அச் சர்ச்சைக்கு அந்தச் சபையின் மற்றைய அலுவல்களுக்கு முன்னதாக இடம் தருதல் பற்றியும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 177-179.

சபைகள் சம்பந்த மாக மந்திரி களுக்கும் அட்வொ கேட்-ஜென ரலுக்கும் உள்ள உரி மைகள்.

177. ராஜ்யத்தின் ஒவ்வொரு மந்திரியும் அட்வொகேட்-ஜெனரலும் அந்த ராஜ்யத்தின் சட்ட சபையிலோ அல்லது சட்டபரிஷத்து உள்ள ராஜ்யமாயிருந்தால் இரு சபைகளிலுமோ பேசவும், மற்றப்படி அதன் அல்லது அவற்றின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவும், அவர் அங்கத்தினராக நியமிக்கப்படும் சட்டமன்றத்தின் எந்தக் கமிட்டியிலும் பேசவும் மற்றப்படி அதன் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவும் உரிமை உள்ளவர் ஆவார்; ஆனால், இப் பிரிவின் காரணமாக வோட்டுச் செய்ய உரிமை உள்ளவர் ஆகார்.

ராஜ்யச் சட்ட மன்றத்தின் உத்தியோகஸ்தர்கள்.

சட்ட சபையின் சபா நாயகரும் உப-சபா நாயகரும்.

178. ராஜ்யத்தின் சட்டசபை ஒவ்வொன்றும், இயன்ற விரைவில், அச் சபையின் இரண்டு அங்கத்தினர்களை முறையே அதன் சபாநாயகராகவும் உப-சபாநாயகராகவும் தெரிந்தெடுக்கவேண்டும்; சபாநாயகரின் அல்லது உப-சபாநாயகரின் பதவி காலியாகுந்தோறும், அச் சபை மற்றோர் அங்கத்தினரை, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, சபாநாயகராகவோ உப-சபாநாயகராகவோ தெரிந்தெடுக்கவேண்டும்.

சபாநாயகர், உப-சபா நாயகரின் பதவிகளில் காலி ஏற் படுதலும், அப்பதவி களை ராஜி நாமாச் செய்தலும், அவற்றி லிருந்து நீக்கப் படுதலும்.

179. சட்டசபையின் சபாநாயகராகவோ, உப-சபா நாயகராகவோ பதவி வகிக்கும் ஓர் அங்கத்தினர்—

(அ) அச் சபையின் அங்கத்தினராக இல்லாவிட்டால் தமது பதவியைக் காலி செய்யவேண்டும்;

(ஆ) தாம் கையெழுத்துச் செய்து அந்த அங்கத்தினர் சபாநாயகராயிருந்தால் உப-சபாநாயகருக்கும் அந்த அங்கத்தினர் உப-சபாநாயகராயிருந்தால் சபாநாயகருக்கும் விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலமாகத் தமது பதவியை எச் சமயத்திலும் ராஜிநாமாச் செய்யலாம்; மேலும்,

(இ) அச் சபையில் அப்போதுள்ள மொத்த அங்கத்தினரின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட சபையின் தீர்மானம் ஒன்றால் அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாம்;

எனினும், (இ) பகுதியின் பொருட்டு ஒரு தீர்மானத்தைப் பிரேரேபிக்கும் உத்தேசத்தைக் குறித்துக் குறைந்தது பதினான்கு நாள் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் பிரேரேபிக்கப்படலாகாது:

மேலும், சபை கலைக்கப்படும் போதெல்லாம், அக் கலைப்புக்குப் பிறகு அச் சபையின் முதல் கூட்டத்திற்கு அடுத்து முன்னதாக உள்ள காலம்வரை சபாநாயகர் தமது பதவியைக் காலி செய்யலாகாது.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 180-183.

சபாநாயகரின் பதவிக்குரிய கடமைகளைச் செய்யவோ சபாநாயகராகச் செயலாற்றவோ உப-சபாநாயகருக்கு அல்லது வேறு ஒருவருக்கு உள்ள சக்தி.

180. (1) சபாநாயகரின் பதவி காலியாயிருக்கும்போது, அப்பதவிக்குரிய கடமைகள் உப-சபாநாயகராலாவது அல்லது உப-சபாநாயகரின் பதவியும் காலியாயிருந்தால், ராஜ்ய பாலர் அதன்பொருட்டு நியமிக்கும் அச் சபையின் எந்த அங்கத்தினராலாவது செய்யப்படவேண்டும்.

(2) சபையின் எக் கூட்டத்திற்காவது சபாநாயகர் வராதிருந்தால் உப-சபாநாயகரோ, அவரும் வராதிருந்தால் அச் சபையின் நடைமுறை விதிகளால் நிர்ணயிக்கப்படும் ஒருவரோ, அத்தகையவரும் வந்திராவிட்டால், அச் சபையால் தீர்மானிக்கப்படும் மற்றொருவரோ சபாநாயகராகச் செயலாற்ற வேண்டும்.

சபாநாயகரை யாவது உப-சபாநாயகரை யாவது பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஆலோசிக்கப்படும்போது, அவர் அக்கிராசனம் வகித்தலாகாது.

181. (1) சட்டசபையின் கூட்டத்தில், சபாநாயகரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது சபாநாயகரும், உப-சபாநாயகரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது உப-சபாநாயகரும், வந்திருப்பினும், அக்கிராசனம் வகித்தலாகாது; மேலும், அத்தகைய ஒவ்வொரு கூட்டம் சம்பந்தமாகவும் 180-வது பிரிவின் (2)-ம் பகுதியின் ஷரத்துக்கள் சபாநாயகரோ, அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, உப-சபாநாயகரோ வராத ஒரு கூட்டம் சம்பந்தமாகப் பிரயோகப்படுவது போலவே பிரயோகப்படும்.

(2) சபாநாயகரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று சட்டசபையில் ஆலோசிக்கப்படும்போது, சபாநாயகர் அச்சபையில் பேசவும் அதன்நடவடிக்கைகளில் மற்றபடி கலந்துகொள்ளவும் உரிமை உடையவர் ஆவார்; ஆனால், 189-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும் அத்தீர்மானத்தின்பேரிலாவது அந்த நடவடிக்கைகள் நிகழும்போது வேறெந்த விஷயத்தின்பேரிலாவது முதல்முறை மட்டும் வோட்டுச் செய்ய அவருக்கு உரிமை உண்டு; வோட்டுக்கள் சமமாயிருப்பின் வோட்டுச்செய்ய உரிமை இல்லை.

சட்டப் பரிஷத்தின் அக்கிராசனரும் உப-அக்கிராசனரும்.

182. சட்டப்பரிஷத்து உள்ள ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டப்பரிஷத்தும், முறையே அதன் அக்கிராசனராகவும் உப அக்கிராசனராகவும் இருப்பதற்கு அப் பரிஷத்தின் இரண்டு அங்கத்தினர்களை இயன்ற விரைவில் தெரிந்தெடுக்கவேண்டும்; அக்கிராசனருடைய அல்லது உப-அக்கிராசனருடைய பதவி காலியாகுந்தோறும், அப்பரிஷத்து, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அக்கிராசனராகவோ அல்லது உப-அக்கிராசனராகவோ இருப்பதற்கு வேறோர் அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

அக்கிராசனர், உப-அக்கிராசனர், இவர்களின் பதவிகள் காலியாதலும், அவற்றை ராஜிநாமாச் செய்தலும், அவற்றிலிருந்து நீக்கப்படுதலும்.

183. சட்டப்பரிஷத்தின் அக்கிராசனராகவோ உப-அக்கிராசனராகவோ பதவி வகிக்கும் அங்கத்தினர் ஒருவர்—

(அ) அப் பரிஷத்தின் அங்கத்தினராய் இராமற் போனால் தமது பதவியைக் காலி செய்யவேண்டும்;

(ஆ) அந்த அங்கத்தினர் அக்கிராசனராக இருந்தால் உப-அக்கிராசனருக்கும் அந்த அங்கத்தினர் உப-அக்கிராசனராக இருந்தால் அக்கிராசனருக்கும்தாம் கையெழுத்துச் செய்து விலாசமிட்டு அனுப்பிய எழுத்துமூலம் தமது பதவியை எக் காலத்திலும் ராஜிநாமாச் செய்யலாம்; மேலும்,

(இ) அப்பரிஷத்தில் அப்போதுள்ள மொத்த அங்கத்தினரில் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட பரிஷத்தின் தீர்மானம் ஒன்றால் அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாம் ;

எனினும், (இ) பகுதியின் விஷயத்திற்கான தீர்மானத்தைப் பிரேரேபிக்கும் உத்தேசத்தைக் குறித்துக் குறைந்தது பதினான்கு நாள் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் பிரேரேபிக்கப்படலாகாது.

அக்கிராசனருடைய பதவிக்குரிய கடமைகளைச் செய்யவோ, அக்கிராசனராகச் செயலாற்றவோ உப-அக்கிராசனர் அல்லது வேறு ஒருவருக்கு உள்ள சக்தி.

184. (1) அக்கிராசனருடைய பதவி காலியாயிருக்கும் போது, அப்பதவிக்குரிய கடமைகள் உப-அக்கிராசனராலாவது, உப-அக்கிராசனரின் பதவியும் காலியாயிருந்தால் அதன் பொருட்டு ராஜ்யபாலர் நியமிக்கும் அப் பரிஷத்தின் எந்த அங்கத்தினராலாவது செய்யப்படவேண்டும்.

(2) பரிஷத்தின் எக் கூட்டத்திற்காவது அக்கிராசனர் வராதிருந்தால் உப-அக்கிராசனரோ, அவரும் வராதிருந்தால் அப் பரிஷத்தின் நடைமுறை விதிகளால் நிர்ணயிக்கப்படும் எவரோ, அல்லது அத்தகைய எவரும் வந்திராவிட்டால் அப் பரிஷத்தால் தீர்மானிக்கப்படும் மற்றெருவரோ அக்கிராசனராகச் செயலாற்றவேண்டும்.

அக்கிராசனரை யாவது உப-அக்கிராசனரை யாவது பதவியிலிருந்து நீக்குவதற்கான ஒரு தீர்மானம் ஆலோசிக்கப்படும்போது அவர் அக்கிராசனம் வகித்தலாகாது.

185. (1) சட்டப்பரிஷத்தின் கூட்டத்தில், அக்கிராசனரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது அக்கிராசனரும், உப-அக்கிராசனரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்படும்போது உப-அக்கிராசனரும், வந்திருப்பினும், அக்கிராசனம் வகித்தலாகாது ; மேலும், அத்தகைய ஒவ்வொரு கூட்டத்தின் சம்பந்தமாகவும் 184-வது பிரிவின் (2)-ம் பகுதியின் ஷரத்துக்கள் அக்கிராசனரோ, அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப, உப-அக்கிராசனரோ வராத ஒரு கூட்டம் சம்பந்தமாகப் பிரயோகப்படுத்துவதுபோலவே பிரயோகப்படும்.

(2) அக்கிராசனரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று சட்டப்பரிஷத்தில் ஆலோசிக்கப்படும்போது, அக்கிராசனர் அப் பரிஷத்தில் பேசவும் அதன் நடவடிக்கைகளில் மற்றப்படி கலந்துகொள்ளவும் உரிமை உடையவர் ஆவார் ; மேலும், 189-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், அத்தீர்மானத்தின் பேரிலாவது அந்த நடவடிக்கைகள் நிகழும்போது வேறெந்த விஷயத்தின் பேரிலாவது முதல்முறை மட்டும் வோட்டுச்செய்ய அவருக்கு உரிமை உண்டு ; வோட்டுக்கள் சமமாயிருப்பின் வோட்டுச்செய்ய உரிமை இல்லை.

சபாநாயகர், உப-சபாநாயகர், அக்கிராசனர், உப-அக்கிராசனர் இவர்களுடைய சம்பளங்களும், படிகளும்.

186. சட்டசபையின் சபாநாயகருக்கும் உப-சபாநாயகருக்கும், சட்டப்பரிஷத்தின் அக்கிராசனருக்கும் உப-அக்கிராசனருக்கும் முறையே அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் அதற்கென அப்படி ஏற்பாடு செய்யும்வரை இரண்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட சம்பளங்களும், படிகளும் கொடுக்கப்படவேண்டும்.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 187-189.

ராஜ்யச் சட்ட மன்றத்தின் காரியச் சிப்பந்தி.

187. (1) ராஜ்யத்தின் சட்டமன்றச் சபைக்காவது சபை ஒவ்வொன்றுக்குமாவது தனித்தனியான காரியச் சிப்பந்தி இருக்கவேண்டும்:

எனினும், சட்டப்பரிஷத்து உள்ள ராஜ்யத்தின் சட்ட மன்றத்தின் விஷயத்தில், அச் சட்டமன்றத்தின் சபைகள் இரண்டுக்கும் பொதுவாக உள்ள உத்தியோகப்பதவிகளை உண்டாக்குதலை இப்பகுதியில் உள்ளது எதுவும் தடுப்பதாக அர்த்த விளக்கம் செய்யலாகாது.

(2) ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையினுடைய அல்லது சபைகளினுடைய காரியச்சிப்பந்திக்குச் சேவையாளர்களைச் சேர்ப்பது பற்றியும், நியமிக்கப்பட்டவர்களின் சேவை நிபந்தனை பற்றியும் ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினால் முறைப்படுத்தலாம்.

(3) (2)-ம் பகுதியின்கீழ் ராஜ்யச் சட்டமன்றத்தால் வகை செய்யப்படும் வரை, ராஜ்யபாலர், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, சட்டசபையின் சபாநாயகருடன், அல்லது சட்டபரிஷத்தின் அக்கிராசனருடன் கலந்தாலோசித்த பிறகு, அச் சபை அல்லது பரிஷத்தின் காரியச் சிப்பந்திக்குச் சேவையாளரைச் சேர்ப்பதையும் நியமிக்கப்பட்டவர்களின் சேவை நிபந்தனைகளையும் முறைப்படுத்த விதிகள் செய்யலாம்; அப்படிச்செய்யப்பட்ட எவ்விதிகளும் மேற்சொன்ன பகுதியின் கீழ்ச்செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு அமலுடையனவாகும்.

அலுவல் நடைமுறை.

அங்கத்தினர்கள் பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்தல.

188. ராஜ்யத்தின் சட்டசபையின் அல்லது சட்டப்பரிஷத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் தமது ஸ்தானத்தில் அமர்வதற்குமுன், ராஜ்யபாலரின் முன்னிலையிலாவது, அல்லது அதற்கென அவரால் நியாரிக்கப்பட்ட ஒருவரின் முன்னிலையிலாவது, இதன்பொருட்டு மூன்றாவது தபசிலில் கண்ட நமூனாப்படி ஒரு பிரமாணம் அல்லது உறுதிமொழி செய்து கையெழுத்திடவேண்டும்.

சபைகளில் வோட்டுச் செய்தலும், காலி ஸ்தானங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் செயலாற்றச் சபைகளுக்குள்ள சக்தியும், கோரமும்

189. (1) இந்த அரசியல் அமைப்பின் வேறுவிதமாய் ஏற்பாடு செய்திருந்தாலன்றி, ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையின் எக்கூட்டத்திலாவது எழும் பிரச்சினைகள் யாவும், சபாநாயகரோ அல்லது அக்கிராசனரோ அல்லது அவ்வாறு வேலை பார்ப்பவரோ நீங்கலாக, அங்கே வந்திருந்து வோட்டுச் செய்யும் மற்றைய அங்கத்தினர்களின் பெரும்பான்மையான வோட்டுக்களால் நிர்ணயிக்கப்படவேண்டும்.

சபாநாயகராவது, அக்கிராசனராவது, அவ்வாறு வேலை பார்ப்பவராவது முதலில் வோட்டுச்செய்யலாகாது ; ஆனால், வோட்டுக்கள் சமமாயிருப்பின் அவருக்கு நிர்ணய வோட்டு ஒன்று உண்டு; அவர் அதைச் செலுத்தவும் வேண்டும்.

(2) ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையின் அங்கத்தினர் ஸ்தானங்களில் காலி இருந்தபோதிலும், அச் சபை செயலாற்றும் சக்தி உள்ளதாகும்.; மேலும், ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கவோ, வோட்டுச் செய்யவோ,

அல்லது நடவடிக்கைகளில் மற்றப்படி கலந்துகொள்ளவோ உரிமையற்ற ஒருவர் அப்படிச் செய்தார் எனப் பின்பு தெரிய வந்த போதிலும், அந்நடவடிக்கைகள் செல்திறனுள்ளவை யாகும்.

(3) ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினால் வேறு விதமாக ஏற்பாடு செய்யும்வரை, ராஜ்யத்தின் சட்டமன்றத் தின் சபையின் கூட்டம் அமைவதற்கு வேண்டிய கோரம் பத்து அங்கத்தினர்கள் அல்லது அச் சபையின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் பத்திலொருபாகம் ஆகிய இவற்றில் எது அதிகமோ அதுவாக இருக்கும்.

(4) ராஜ்யத்தின் சட்டசபையின் அல்லது சட்டபரிஷத் தின் கூட்டம் ஒன்று நடைபெறும்போது எப்போதாகிலும் கோரம் இல்லாவிட்டால், சபையை ஒத்திப்போடுதல் அல்லது கோரம் ஏற்படும் வரை கூட்டத்தை நிறுத்தி வைத்தல் சபா நாயகர், அக்கிராசனர், அல்லது அவ்வாறு வேலை பார்ப்பவர் இவருடைய கடமையாகும்.

அங்கத்தினர்களின் தகுதியின்மைகள்.

ஸ்தானங்கள் காலியாதல்.

190. (1) எவரும் ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் இரு சபைகளிலும் அங்கத்தினராயிருத்தலாகாது; இரு சபை களுக்கும் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒரு சபையிலோ அல்லது மற்றதிலோ தனது ஸ்தானத்தைக் காலி செய்வதற்காக ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

(2) முதலாவது தபசிலில் குறிப்பிட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்ப்பட்ட ராஜ்யங்களின் சட்டமன்றங்களில் எவ ரும் அங்கத்தினராயிருத்தலாகாது; அத்தகைய இரண்டு அல் லது அதற்கு மேற்ப்பட்ட ராஜ்யங்களின் சட்டமன்றங்களின் அங்கத்தினராக எவராவது தெரிந்தெடுக்கப்பட்டால், அப் போது, ராஷ்டிரபதியால் செய்யப்பட்ட விதிகளில் குறித்த காலம் முடிவடைந்ததும், அந்த ராஜ்யங்களில் ஒன்று தவிர மற்றெல்லாவற்றினுடைய சட்டமன்றங்களிலும் தமது ஸ்தானத்தை முன்னதாகவே அவர் ராஜிநாமாச் செய்திருந் தாலன்றி, அந்த ராஜ்யங்கள் எல்லாவற்றின் சட்டமன்றங் களிலும் அவருடைய ஸ்தானம் காலியாகிவிடும்.

(3) ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் ஒரு சபையின் அங் கத்தினர்—

(அ) 191-வது பிரிவின் (1)-ம் பகுதியில் சொல்லப் பட்ட தகுதியின்மைகளில் எதற்கேனும் உட்படு வாராஞல், அல்லது

(ஆ) சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, சபாநாயகருக்கோ அக்கிராசனருக்கோ தமது கையெழுத்துச் செய்து விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலமாகத் தமது ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்வாராஞல்,

அப்போது அவருடைய ஸ்தாபனம் காலிடும்.

(4) ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையின் அங்கத்தினர் ஒருவர் அச் சபையின் அனுமதியின்றி அறுபது நாள் அளவும் அதன் கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் வராமலிந்தால்; இவருடைய ஸ்தாபனம் காலியாகிவிட்டதென்று அச் சபை அறிவிக்கலாம்.

எனினும், அந்த அறுபது நாள் அளவைக் கணக்கிடுகையில் அச் சபை காலவரையின்றி ஒத்திப் போடப்படும் அல்லது தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்குமேல் ஒத்திவைக்கப் படும் எக் காலத்தையும் கணக்கில் சேர்த்தலாகாது.

அங்கத் தினர் பதவிக்குத் தகுதி யின்மைகள்.

191. (1) ஒருவர்—

(அ) எப் பதவியை வகிப்பதனுல் தகுதியற்றவர் ஆகார் என ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் சட்டத்தினுல் அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அப் பதவி நீங்கலாக, இந்தியச் சர்க்காரின் கீழ் அல்லது முதலாவது தபசிலில் குறிப்பிட்ட ஒரு ராஜ்யச் சர்க்காரின் கீழ் லாபம் தரும் ஒரு பதவியை வகித்தால்,

(ஆ) சித்தவிகாரப்பட்டவராயும் அப்படிப்பட்டவர் என்று தக்க நீதிமன்றம் ஒன்றினுல் அறிவிக்கப்பட்ட வராயும் இருந்தால்,

(இ) திவாலாகி விடுதலே பெறுதவராயிருந்தால்,

(ஈ) இந்தியக் குடியாய் இராவிட்டால், அல்லது ஓர் அந்நிய ராஜ்யத்தின் குடிமையைத் தாமே விரும்பிப் பெற்றிருந்தால், அல்லது ஓர் அந்நிய ராஜ்யத்தின் மீது விசுவாசம் அல்லது பற்று உடையவர் என்று ஒப்புக்கொண்டிருந்தால்,

(உ) பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தினுல் அல்லது அதன்கீழ்த் தகுதியற்றவராக்கப்பட்டிருந்தால்,

அவர் அந்த ராஜ்யத்தின் சட்டசபையிலோ சட்டப் பரிஷத்திலோ அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கும் இருந்துவருவதற்கும் தகுதியற்றவர் ஆவார்.

(2) இப் பிரிவைப் பொறுத்தவரை, ஒருவர் யூனியனின் அல்லது முதலாவது தபசிலில் குறிப்பிட்டிருக்கிற ஒரு ராஜ்யத்தின் மந்திரியாயிருக்கும் காரணத்தினுல் மட்டும் இந்தியச் சர்க்காரின்கீழ் அல்லது அந்த ராஜ்யச் சர்க்காரின்கீழ் லாபம் தரும் பதவி ஒன்றை வகிப்பவராகக் கருதப்படமாட்டார்.

அங்கத்தினர் தகுதி யின்மை சம்பந்தமான பிரச்சினை தீர்த்தல்.

192. (1) ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை ஒன்றின் அங்கத்தினர் 191-வது பிரிவின் (1)-ம் பகுதியில் சொல்லப்பட்ட தகுதியின்மைகளில் ஏதற்கேனும் உள்ளாகிவிட்டாரா என்பது பற்றிய பிரச்சினை ஏதேனும் எழுமானுல், அப்பிரச்சினையை ராஜ்ய பாலரின் தீர்ப்புக்கு அனுப்பவேண்டும்; அவருடைய தீர்ப்பே முடிவானதாகும்.

(2) அத்தகைய பிரச்சினை எதுபற்றியேனும் தீர்ப்பு அளிப்பதற்குமுன், ராஜ்யபாலர் தேர்தல் கமிஷனின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டும்; அதன்படி நடக்கவும் வேண்டும்.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 193-194.

188-வது பிரிவின்கீழ் பிரமாணம் அல்லது உறுதி மொழி செய்வதற்கு முன்னே அல்லது தகுதியற்ற வராக்கப் பட்டிருக் கும்போது அல்லது தகுதியற்ற வராக்கப் படும் போதோ அமர்ந் திருந்து வோட்டுச் செய்தால் அபராதம்.

193. ஒருவர் 188-வது பிரிவின் நிபந்தனைகளின்படி தடப் பதற்கு முன்னுவது, அல்லது ராஜ்யத்தின் சட்டசபையின் அல்லது சட்டப்பரிஷத்தின் அங்கத்தினராயிருக்கத் தமக் குத் தகுதியில்லை என்றேனும், தாம் தகுதியற்றவராக்கப் பட்டிருக்கிறார் என்றேனும், அல்லது அதன் அங்கத்தினராக அமர்ந்திருக்கவாவது வோட்டுச் செய்யவாவது பார்லிமெண்டால் அல்லது அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப் பட்ட சட்டத்தின் ஷரத்துக்களினுல் தடுக்கப்பட்டிருக்கிறார் என்றேனும் தெரிந்திருக்கும்போதாவது, அவ்வாறு அமர்ந் திருந்தாலும் வோட்டுச் செய்தாலும், அப்படி அமர்ந் திருந்த அல்லது வோட்டுச் செய்த ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாய் அபராதம் செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்; அந்த அபராதம் ராஜ்யத்திற்குச் சேரவேண்டிய ஒரு கடனைப்போல் வசூலிக்கப்படும்.

ராஜ்யச் சட்டமன்றங்களுக்கும் அவற்றின் அங்கத்தினர்களுக்கும் உள்ள சக்திகளும் விசேஷ உரிமைகளும் பாதுகாப்புக்களும்.

சட்டமன்றச் சபைகள் அவற்றின் அங்கத் தினர்கள், கமிட்டிகள் ஆகிய இவர்களுக் குள்ள சக்திகள், விசேஷ உரிமைகள் வகையரா.

194. (1) இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கும் சட்டமன்றத்தின் நடைமுறையை ஒழுங்குபடுத்தும் விதி களுக்கும் நிலையுத்தரவுகளுக்கும் உட்பட்டு, ஒவ்வொரு ராஜ் யத்தின் சட்டமன்றத்திலும் பேச்சுச் சுதந்திரம் இருக்க வேண்டும்.

(2) ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் அங்கத்தினர் எவரும் சட்டமன்றத்திலாவது அதன் கமிட்டியிலாவதுபேசிய எந்த பேச்சைப் பற்றியோ கொடுத்த எந்த வோட்டைப்பற் றியோ எந் நீதிமன்றத்திலும் எவ்வித நடவடிக்கைகளுக் கும் உள்ளாக மாட்டார்; மேலும், அப்படிப்பட்ட சட்ட மன்றத்தின் சபை ஒன்றுலாவது அதன் அதிகாரத்தின் கீழாவது எந்த ரிப்போர்ட்டையோ காகிதத்தையோ வோட்டுக் கணக்கையோ பிரசுரம் செய்ததுபற்றி எவரும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் உள்ளாகமாட்டார்.

(3) மற்றைய விஷயங்களில், ராஜ்யத்தின் சட்ட மன்றச் சபைக்கும், அச் சட்டமன்றத்தின் சபையின் அங் கத்தினர்களுக்கும் கமிட்டிகளுக்கும் உள்ள சக்திகளும் விசேஷ உரிமைகளும் பாதுகாப்புக்களும் சட்டமன்றத்தால் சட்டத்தினுல் அவ்வப்போது வரையறுத்தபடி இருக்கும்; அப்படி வரையறுக்குமளவும், இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் யுனைடெட் கிங்டத்துப் பார்லிமெண்டின் காமன்ஸ் சபை, அதன் அங்கத்தினர்கள், கமிட்டிகள் ஆகிய வற்றிற்கு உள்ள சக்திகளும், விசேஷ உரிமைகளும் பாது காப்புக்களும் ஆகியவை இவற்றிற்கும் உள்ளனவாகும்.

(4) (1)-ம் (2)-ம் (3)-ம் பகுதிகளின் ஷரத்துக்கள் ராஜ் யத்தின் சட்டமன்றத்தின் அங்கத்தினர்கள் சம்பந்தமாகப் பிரயோகப்படுவதுபோலவே, இந்த அரசியல் அமைப்பின் காரணமாக அந்தச் சட்டமன்றச் சபை ஒன்றிலோ அதன்

கமிட்டியிலோ பேசவும், மற்றப்படி அதன் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவும் உரிமை உள்ளவர்கள் சம்பந்தமாகவும் பிரயோகப்படும்.

அங்கத்தினர்களின் சம்பளங்களும் படிகளும்.

195. ராஜ்யத்தின் சட்டசபை, சட்டப் பரிஷத்து இவற்றின் அங்கத்தினர்களுக்கு அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் சட்டத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் சம்பளங்களையும் படிகளையும் பெற உரிமை உண்டு; மேலும், அது விஷயமாக அப்படி ஏற்பாடு செய்யும்வரை, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக நிகரான மாகாணத்தின் சட்டசபையின் அங்கத்தினர்கள் விஷயத்தில் பிரயோகித்துவந்த விதங்களின்படியும் ஷரத்துக்களின்பேரிலும் சம்பளங்களையும் படிகளையும் பெற உரிமை உண்டு.

சட்டநிரூபண நடைமுறை.

மசோதாக்களைக் கொணரு தல்பற்றியும் நிறைவேற்றுதல் பற்றியும் ஆன ஷரத்துக்கள்.

196. (1) பண மசோதாக்கள், இதர நிதி மசோதாக்கள் இவை விஷயமாக 198-வது, 207-வது பிரிவுகளின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ராஜ்யப்பரிஷத்து ஒன்று உள்ள ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை எதிலும் ஒரு மசோதா எழலாம்.

(2) 197-வது, 198-வது பிரிவுகளின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு மசோதாவை, சட்டப் பரிஷத்து ஒன்று உள்ள ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் இரு சபைகளும் திருத்தம் இல்லாமலோ இரு சபைகளும் ஒத்துக்கொண்ட திருத்தங்களோடு மட்டுமோ ஒத்துக்கொண்டிருந்தாலன்றி, அச் சபைகளால் அம் மசோதா நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படலாகாது.

(3) ராஜ்யச் சட்டமன்றத்தில் முடிவுபெறுதலின் மசோதா அதன் சபை அல்லது சபைகளைக் காலவரையின்றி ஒத்திப்போட்ட காரணமாகக் கழிந்துபோகாது.

(4) ராஜ்யத்தில் சட்டப்பரிஷத்தின் முடிவு பெறுதலும் சட்டசபையால் நிறைவேற்றப்படாததுமான ஒரு மசோதா அச் சபையின் கலைப்பினால் கழிந்துவிடாது.

(5) ராஜ்யத்தின் சட்டசபையில் முடிவுபெறுமலோ அல்லது சட்டசபையால் நிறைவேற்றப்பட்டுச் சட்டப்பரிஷத்தில் முடிவுபெறுமலோ இருக்கும் ஒரு மசோதா அச் சபையின் கலைப்பினால் கழிந்துவிடும்.

பண மசோதாக்கள் அல்லாத மற்றைய மசோதாக்கள் விஷயமாகச் சட்டப் பரிஷத்தின் சக்திகள் பற்றிய வரையறை.

197. (1) ஒரு மசோதா சட்டப்பரிஷத்து உள்ள ராஜ்யத்தின்சட்ட சபையால் நிறைவேற்றப்பட்டுச் சட்டப்பரிஷத்துக்கு அனுப்பப்பட்ட பிறகு—

(அ) அம் மசோதா அப் பரிஷத்தால் நிராகரிக்கப்பட்டால், அல்லது

(ஆ) அம் மசோதா அப் பரிஷத்தின் முன்னிலையில் வைக்கப்பட்ட தேதியிலிருந்து அது அம் மசோதாவை நிறைவேற்றுமல் மூன்று மாதத்திற்கு மேல் கடந்து விட்டால், அல்லது

(இ) அம் மசோதா அப் பரிஷத்தால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டு அவற்றைச் சட்டசபை ஒத்துக்கொள்ளாவிட்டால்,

அச் சட்டசபை, தன் நடைமுறையை ஒழுங்குபடுத்தும் விதிகளுக்கு உட்பட்டு, அதே நடைக்காலத்திலோ அல்லது பின்வரும் எந்த நடைக்காலத்திலோ சட்டப்பரிஷத்தால் செய்யப்பட்ட அல்லது செய்யலாம் என்று கூறப்பட்ட அல்லது ஒத்துக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் எவையேனும் இருந்தால், அவைகளுடனே அவைகளில்லாமலோ, மசோதாவை மீண்டும் நிறைவேற்றி, அப்படி நிறைவேற்றப்பட்ட மசோதாவைப் பிறகு சட்டப்பரிஷத்திற்கு அனுப்பலாம்.

(2) ஒரு மசோதா சட்டசபையால் அப்படி இரண்டாம் முறை நிறைவேற்றப்படச் சட்டப்பரிஷத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர்—

(அ) அப் பரிஷத்தால் அம் மசோதா நிராகரிக்கப்பட்டால், அல்லது

(ஆ) அம் மசோதா அப் பரிஷத்தின் முன்னிலையில் வைக்கப்பட்ட தேதியிலிருந்து அது அம்மசோதாவை நிறைவேற்றுமல் மூன்று மாதத்திற்கு மேல் கடந்துவிட்டால், அல்லது

(இ) அம் மசோதா அப் பரிஷத்தால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டு அவற்றைச் சட்டசபை ஒத்துக்கொள்ளாவிட்டால்,

சட்டப்பரிஷத்தால் செய்யப்பட்டவையும் அல்லது செய்யலாம் என்று கூறப்பட்டவையும் சட்டசபையால் ஒத்துக் கொள்ளப்பட்டவையுமான திருத்தங்கள் எவையேனும் இருந்தால் அம் மசோதா அத் திருத்தங்களோடு சட்டசபையால் இரண்டாம் முறை நிறைவேற்றப்பட்ட உருவத்தில் ராஜ்யச் சட்டமன்றத்தின் சபைகளால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(3) இப் பிரிவில் உள்ளது எதுவும் பண மசோதாவுக்குப் பிரயோகப்படமாட்டாது.

பண மசோதாக்கள் விஷயத்தில் விசேஷ நடைமுறை.

198. (1) சட்டப்பரிஷத்தில் பண மசோதா எதையும் கொணரலாகாது.

(2) ஒரு பண மசோதா சட்டப்பரிஷத்து ஒன்று உள்ள ராஜ்யத்தின் சட்ட சபையால் நிறைவேற்றப்பட்ட பிறகு, சட்டப்பரிஷத்திற்கு அதன் சிபார்சுகளுக்காக அனுப்பப்பட வேண்டும்; சட்டப்பரிஷத்து அம் மசோதாவைத்தான் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் தன் சிபார்சுகளுடன் மசோதாவைச் சட்ட சபைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்; அதன் பேரில் சட்ட சபை சட்டப் பரிஷத்தின் சிபார்சுகள் எல்லாவற்றையுமோ அல்லது அவைகளில் எதையேனுமோ ஒப்புக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.

(3) சட்டப்பரிஷத்தின் சிபார்சுகளில் எதையேனும் சட்டசபை ஒப்புக்கொண்டால், அந்தப் பண மசோதா

சட்டப்பரிஷத்தால் சிபார்சு செய்யப்பட்டுச் சட்ட சபையால் ஒப்புக்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

(4) சட்டப்பரிஷத்தின் சிபார்சுகளில் எதையேனும் சட்டசபை ஒப்புக்கொள்ளாவிட்டால், அந்தப் பண மசோதா சட்டப்பரிஷத்தால் சிபார்சு செய்யப்பட்ட திருத்தங்களில் எதுவுமின்றிச் சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட உருவத்திலேயே இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

(5) சட்டசபையால் நிறைவேற்றப்பட்டுச் சட்டப் பரிஷத்திற்கு அதன் சிபார்சுகளுக்காக அனுப்பப்பட்ட பண மசோதா ஒன்று மேற்சொன்ன பதினான்கு நாட்களுக்குள் சட்டசபைக்குத் திருப்பியனுப்பப்படாவிட்டால், அக்காலம் முடிவடைந்ததும், அது சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட உருவத்திலேயே இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

199. (1) இந்த அத்தியாயத்தைப் பொறுத்தவரை, அடியிற்கண்ட விஷயங்களில் எல்லாவற்றையுமோ அல்லது எதையேனுமோ பற்றிய ஷரத்துக்கள் மட்டும் ஒரு மசோதாவில் அடங்கியிருந்தால், அது பண மசோதாவாகக் கருதப்படும் ; அவையாவன :— "பண மசோதாக்கள்" என்பதன் வரையறை.

(அ) எந்த வரியையும் விதித்தல், ஒழித்தல், தவிர்த்தல், மாற்றல் அல்லது முறைப்படுத்தல் ;

(ஆ) கடன் கொள்வதை முறைப்படுத்தல், அல்லது அந்த ராஜ்யம்உத்தரவாதம் அளித்தல், அல்லது அந்த ராஜ்யம் ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக் கொள்ளும் நிதிப் பொறுப்புக்களைப் பற்றிய சட்டத்தைத் திருத்துதல் ;

(இ) ராஜ்யத்தின் சஞ்சித நிதியை அல்லது எதிர் பாராச்செலவு நிதியை வைத்திருத்தல், அத்தகையநிதி எதிலும் பணம் போடுதல் அல்லது அதிலிருந்து பணம் எடுத்தல் ;

(ஈ) ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கி வைத்தல் ;

(உ) எச் செலவையும் ராஜ்யத்தின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்பட்ட செலவென்று அறிவித்தல், அல்லது அத்தகைய செலவுத் தொகையை அதிகப் படுத்தல் ;

(ஊ) ராஜ்யத்தின் சஞ்சித நிதிக்காகவோ ராஜ்யத்தின் பொதுக் கணக்குக்காகவே பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது அத்தகைய பணத்தை வைத்திருத்தல் அல்லது கொடுத்தல் ; அல்லது

(எ) (அ) முதல் (ஊ) வரையுள்ள உட்பகுதிகளில் குறிப்பிட்ட விஷயங்களில் எதையும் சார்ந்த ஒரு விஷயம்.

(2) ஒரு மசோதாவானது அபராதங்களையோ மற்றையப் பணத் தண்டனைகளையோ விதிப்பதற்காக, அல்லது லைஸென்சுகளுக்கான கட்டணங்களையோ அல்லது சேவை புரிந்ததற்கான கட்டணங்களையோ கேட்பதற்காக அல்லது கொடுப்பதற்காக ஏற்பாடு செய்துள்ள காரணத்தால் மட்டுமாவது, ஸ்தலக் காரியங்களுக்காக ஒரு ஸ்தல அதிகாரியோ அல்லது நிலையமோ எவ்வரியையேனும் விதித்தல், ஒழித்தல், தவிர்த்தல், மாற்றல் அல்லது முறைப்படுத்தல் இவற்றிற்காக ஏற்பாடு செய்துள்ள காரணத்தாலாவது ஒரு பண மசோதாவாகக் கருதப்படமாட்டாது.

(3) சட்டப்பரிஷத்து உள்ள ராஜ்யத்தின் சட்ட மன்றத்தில் கொணரப்பட்ட ஒரு மசோதா பண மசோதாவா அல்லவா என்பது பற்றிய பிரச்சினை ஏதேனும் எழுமாஞல், அதுபற்றி அந்த ராஜ்யத்தின் சட்ட சபையின் சபாநாயகர் அளிக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

(4) 198-வது பிரிவின்கீழ்ச் சட்டப் பரிஷத்திற்கு அனுப்பப்படும்போதும், 200-வது பிரிவின்கீழ் ராஜ்யபாலரிடம் சம்மதத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும்போதும், பண மசோதா ஒவ்வொன்றின்பேரிலும் அது பண மசோதா என்று சட்டசபையின் சபாநாயகர் கையெழுத்திட்ட சரியொப்பம் எழுதப்படவேண்டும்.

மசோதாக்களுக்குச் சம்மதம்.

200. ஒரு மசோதா ஒரு ராஜ்யத்தின் சட்டசபையால் நிறைவேற்றப்பட்டவுடன், அல்லது சட்டப்பரிஷத்து உள்ள ஒரு ராஜ்யமாயிருந்தால் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் இரு சபைகளினுலும் நிறைவேற்றப்பட்டவுடன், ராஜ்யபாலருக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்; அம் மசோதாவுக்குச் சம்மதம் அளித்ததாகவோ அல்லது அதற்குச் சம்மதம் மறுத்ததாகவோ அல்லது ராஷ்டிரபதியின் ஆலோசனைக்காக அம் மசோதாவை ஒதுக்கிவைத்திருப்பதாகவோ ராஜ்யபாலர் அறிவிக்கவேண்டும்.

எனினும், ராஜ்யபாலரின் சம்மதத்திற்காக ஒரு மசோதா சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அது ஒரு பண மசோதாவாய் இராவிட்டால், இயன்ற விரைவில், அம் மசோதாவையாவது அல்லது குறிப்பிட்ட அதன் எந்த ஷரத்துக்களையாவது புனராலோசனை செய்யும்படியாகவும், குறிப்பாக, தமது நிருபத்தில் தாம் சிபார்சு செய்யும் திருத்தங்கள் எவற்றையேனும் கொணர்தலின் உசிதத்தைப்பற்றி அச்சபை அல்லது சபைகள் ஆலோசிக்கும்படியாகவும் வேண்டிக்கொள்ளும் ஒரு நிருபத்துடன் அம் மசோதாவைத் திருப்பியனுப்பலாம்; அப்படி ஒரு மசோதா திருப்பி அனுப்பப்பட்டால் அச்சபை அல்லது சபைகள் அம் மசோதாவை அவ்வாறே புனராலோசனை செய்யவேண்டும்; மறுமுறை அம் மசோதா திருத்தத்துடனே திருத்தமில்லாமலோ அச்சபை அல்லது சபைகளால் நிறைவேற்றப்பட்டு, ராஜ்யபாலரின் சம்மதித்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டால், ராஜ்யபாலர் அம் மசோதாவிற்குத் தமது சம்மதத்தை மறுத்தலாகாது.

அன்றியும், ஒரு மசோதா சட்டம் ஆவதனுல், உயர் நீதி மன்றத்திற்கு அமைந்திருக்கவேண்டும் என்று இந்த அரசியல் அமைப்பினுல் கருதப்படும் அந்தஸ்துக்கு ஆபத்து விளைவிக்கும்

வகையில் அந்த நீதிமன்றத்தின் சக்திகள் குறைபடும் என்று ராஜ்யபாலர் அபிப்பிராயப்பட்டால், அவர் அம்மசோதாவிற்குச் சம்மதம் அளித்தலாகாது; அதை ராஷ்டிரபதியின் ஆலோசனைக்கு ஒதுக்கிவைக்கவேண்டும்.

ஆலோசனைக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட மசோதாக்கள்.

201. ஒரு மசோதா ராஷ்டிரபதியின் ஆலோசனைக்காக ராஜ்யபாலரால் ஒதுக்கிவைக்கப்பட்டால், ராஷ்டிரபதி தாம் அம் மசோதாவிற்குச் சம்மதம் அளித்ததாகவோ அல்லது சம்மதம் மறுத்ததாகவோ அறிவிக்கவேண்டும்:

எனினும், அம் மசோதா பண மசோதாவாக இராவிட்டால், ராஷ்டிரபதி 200-வது பிரிவின் முதல் விலக்கு நிபந்தனையில் கூறப்பட்டது போன்ற ஒரு நிருபத்துடன், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஜ்யத்தின் சட்டமன்றச் சபைக் காவது அல்லது சபைகளுக்காவது அம் மசோதாவைத் திருப்பி அனுப்புமாறு ராஜ்யபாலருக்குக் கட்டளையிடலாம்; அப்படி ஒரு மசோதா திருப்பி அனுப்பப்பட்டால், அச்சபை அல்லது சபைகள் அந்த நிருபம் வரப்பெற்ற தேதியிலிருந் ஆறுமாத காலத்திற்குள் அதை அவ்வாறே புனராலோசனை செய்ய வேண்டும்; அம்மசோதா திருத்தத்துடனே திருத்தமில்லாமலோ அச்சபை அல்லது சபைகளால் மீண்டும் நிறைவேற்றப் பட்டால், அது ராஷ்டிரபதியின் ஆலோசனைக்காக அவரிடம் மீண்டும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

நிதி விஷயங்களில் நடைமுறை.

வருஷாந்திர நிதி விவரணம்

202. (1) ராஜ்யபாலர் ஒவ்வொரு நிதி வருஷத்திற்கும் அவ்வருஷத்தில் அந்த ராஜ்யத்தின் உத்தேச வரவுகளையும் செலவுகளையும் பற்றிய விவரணம் ஒன்றை அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை அல்லது சபைகளின் முன்னிலையில் வைக்கும்படி செய்யவேண்டும்; அது "வருஷாந்திர நிதி விவரணம்" என்று இப்பாகத்தில் குறிப்பிடப்படும்.

(2) வருஷாந்திர நிதி விவரணத்தில் அடங்கிய செலவுகளின் உத்தேச மதிப்புக்கள்—

(அ) அந்த ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்பேரில் சாட்டப்பட்ட செலவுகள் என்று இந்த அரசியலமைப்பில் விவரிக்கப்பட்ட செலவுகளைச் செய்வதற்கு வேண்டிய தொகைகளையும்,

(ஆ) அந்த ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து செய்யக் கருதிய மற்றையச் செலவுகளைச் செய்வதற்கு வேண்டிய தொகைகளையும்

தனித்தனியாகக் காட்டவேண்டும்; அன்றியும், வருமானக் கணக்கிலிருந்து செய்யப்படும் செலவுகள் மற்றையச் செலவுகளினின்றும் வேறுபடுத்திக் காட்டவேண்டும்.

(3) கீழ்க்கண்ட செலவுகள் ஒவ்வொரு ராஜ்யத்தின் சஞ்சித நிதியின் பேரிலும் சாட்டப்பட்ட செலவுகளாகும்—

(அ) ராஜ்யபாலரின் ஊதியங்களும் படிகளும் அவருடைய பதவி சம்பந்தமான மற்றையச் செலவுகளும்;

(ஆ) சட்டசபையின் சபாநாயகர், உப-சபாநாயகர், சட்டப்பரிஷத்து உள்ள ராஜ்யத்தின் விஷயத்தில் சட்டப்பரிஷத்தின் அக்கிராசனர், உப-அக்கிராசனர் இவர்களின் சம்பளங்களும், படிகளும் ;

(இ) வட்டியும் நிக்ஷேப நிதிச் செலவுகளும் விமோசனச் செலவுகளும் உட்பட, அந்த ராஜ்யம் பொறுப்பாளியாக உள்ள கடன் செலவுகளும் கடனுகப் பணங்கள் திரட்டல், கடனுக்குப் பணம் செலுத்துதல், கடன் விமோசனம் இவற்றைப் பற்றிய மற்றையச் செலவுகளும் ;

(ஈ) உயர் நீதிமன்றத்து நீதிபதிகளின் சம்பளங்கள், படிகள் இவைபற்றிய செலவு ;

(உ) ஒரு நீதிமன்றத்தின் அல்லது மத்தியஸ்த மன்றத்தின் தீர்ப்பு அல்லது டிக்கிரி அல்லது தீர்மானத்தின்படி செலுத்துவதற்கு வேண்டும் தொகைகள் ;

(ஊ) இந்த அரசியல் அமைப்பிஞல் அல்லது ராஜ்யச் சட்டமன்றத்தால் சட்டத்திஞல் அப்படிச் சாட்டப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட மற்றையச் செலவுகள்.

உத்தேச மதிப்புக்கள் விஷயமாய்ச் சட்ட மன்றத்தில் நடைமுறை.

203. (1) அந்த உத்தேச மதிப்புக்களில் ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்பேரில் சாட்டப்பட்ட செலவு சம்பந்தமாயுள்ள பகுதி சட்டசபையின் வோட்டுக்கு உட்படுத்தப்படலாகாது ; ஆஞல், சட்டமன்றத்தில் அந்த உத்தேச மதிப்புக்களில் எதைப்பற்றியும் சர்ச்சை செய்வதை இப் பகுதியில் உள்ளது எதுவும் தடுப்பதாக அர்த்த விளக்கம் செய்யலாகாது.

(2) மேற்சொன்ன உத்தேச மதிப்புக்களில் மற்றையச் செலவுகள் சம்பந்தமாயுள்ள பகுதி சட்டசபைக்குக் கிராண்டுக் கோரிக்கை முறையில் சமர்ப்பிக்கப்படவேண்டும் ; கோரிக்கை எதற்கும் சம்மதி அளிக்கவோ, அல்லது சம்மதி மறுக்கவோ, அல்லது கோரிக்கையில் குறித்த தொகையைக் குறைத்து அதற்குச் சம்மதி அளிக்கவோ சட்டசபைக்குச் சக்தி உண்டு.

(3) ராஜ்யபாலரின் சிபார்சின் பேரிலன்றி, கிராண்டுக் கோரிக்கை எதுவும் செய்யப்படலாகாது.

ஒதுக்க மசோதாக்கள்.

204. (1) அந்தச் சபை 203-வது பிரிவின் கீழ்க் கிராண்களைச் செய்த பிறகு இயன்ற விரைவில்—

(அ) அப்படி அந்தச் சபை செய்த கிராண்டுகளுக்கும்,

(ஆ) ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்பேரில் சாட்டப்பட்டவையும், ஆஞல் முன்னரே சபை அல்லது சபைகளுக்குச் சமர்ப்பித்த விவரணத்தில் கண்ட தொகைக்கு எப்படியும் மேற்படாதவையுமான செலவுகளுக்கும்,

வேண்டிய பணங்களை யெல்லாம் ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து ஒதுக்கிவைக்க ஏற்பாடு செய்வதற்கான மசோதா ஒன்று கொணரப்படவேண்டும்.

(2) அப்படிச் செய்யப்பட்ட கிராண்டின் தொகையை மாற்றும் அல்லது அதன் நோக்கத்தை வேறுக்கும் அல்லது ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்பேரில் சாட்டப்பட்ட ஒரு செலவின் தொகையை மாற்றும் தன்மை வாய்ந்த எத் திருத்தத்தையும் ராஜ்யத்தின் சட்டமன்றச் சபையில் அல்லது சபை எதிலும் அத்தகைய மசோதாவில் பிரேரேபிக்கலாகாது ; ஒரு திருத்தம் இப்பகுதியின்கீழ் வரத் தகுதியற்றதா என்பது பற்றி அக்கிராசனம் வகிப்பவருடைய தீர்ப்பே முடிவான தாகும்.

(3) 205-வது, 206-வது பிரிவுகளின் ஷரத்துகளுக்கு உட்பட்டு, இப் பிரிவின் ஷரத்துக்களின்படி நிறைவேற்றப்பட்ட சட்டத்தினுல் செய்த ஒதுக்கத்தின்படியன்றி, ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து பணம் எதையும் எடுக்கலாகாது.

205. (1) ராஜ்யபாலர்— அனுபந்தமான அல்லது அதிகப்படியான அல்லது கூடுதலான கிராண்டுகள்.

(அ) நடப்பு நிதிவருஷத்தில் குறிப்பிட்ட ஒரு சேவைக்காகச் செலவு செய்வதற்கு 204-வது பிரிவின் ஷரத்துக்களின்படி செய்யப்பட்ட எச் சட்டத்தினுலும் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை அவ் வருஷத்துக் காரியங்களுக்குப் போதாதென்று தெரியவந்தாலும், அவ் வருஷத்துக்குரிய வருஷாந்தர நிதி விவரணத்தில் உத்தேசித்திராத புதிய சேவைக்காக அனுபந்தமாகவோ கூடுதலாகவோ செலவிடுவதற்கான தேவை அந்த நடப்பு நிதி வருஷத்தில் ஏற்பட்டாலும்,

(ஆ) ஒரு நிதி வருஷத்தில் ஏதாவது ஒரு சேவைக்காக அவ்வருஷத்தில் அச் சேவைக்கென அளிக்கப்பட்ட தொகைக்கு அதிகப்படியாக ஏதேனும் பணம் செலவழிக்கப்பட்டிருந்தாலும்,

சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அச் செலவின் உத்தேசத் தொகையைக் காட்டும் மற்றொரு விவரணத்தை ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை அல்லது சபைகளின் முன்னிலையில் வைக்கும்படி செய்யவேண்டும் ; அல்லது அத்தகைய அதிகத் தொகைக்கான கோரிக்கை ஒன்றை ராஜ்யத்தின் சட்டசபையில் கொணருமாறு செய்யவேண்டும்.

(2) வருஷாந்திர நிதி விவரணமும் அதில் சொல்லப்பட்ட செலவுகளும் அல்லது கிராண்டுக் கோரிக்கையும் அச் செலவுகளுக்காவது கிராண்டுகளுக்காவது வேண்டிய பணங்களை ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து ஒதுக்குவதற்கு அதிகாரம் அளிப்பதன் பொருட்டுச் செய்யப்படும் சட்டமும் சம்பந்தமாக 202-வது, 203-வது, 204-வது பிரிவுகளின் ஷரத்துக்கள் பிரயோகப்படுவதுபோலவே, அத்தகைய விவரணமும் செலவுகள் அல்லது கோரிக்கையும் அச் செலவுகளுக்காவது அல்லது அக் கோரிக்கை விஷயமான கிராண்டிலிருந்து ஒதுக்குவதற்கு அதிகாரம் அளிப்பதன் பொருட்டுச் செய்யப்படும் சட்டமும் சம்பந்தமாக அவை பிரயோகப்படும்.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 206-207.

அக்கௌண்ட் வோட்டுக்களும் கிரெடிட் வோட்டுக்களும், அசாதாரண கிராண்டுகளும்.

206. (1) இந்த அத்தியாயத்தின் மேற்சொன்ன ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், ராஜ்யத்தின் சட்டசபை—

(அ) நிதிவருஷத்தின் ஒரு பகுதிக்கு மதிப்புச்செலவு விஷயமாகக் கிராண்டு ஒன்றை வோட்டுச் செய்வதற்கு 203-வது பிரிவில் வகுத்த நடைமுறையைப் பூர்த்தி செய்து, அச் செலவு சம்மந்தமாக 204-வது பிரிவின் ஷரத்துக்களின்படி சட்டம் நிறைவேற்றும்வரை, முன்னதாகவே ஒரு கிராண்டைச் செய்யவும்,

(ஆ) ஒரு சேவையின் மிக்க அளவினுலோ நிர்ணயிக்க இயலாத தன்மையாலோ வருஷாந்தர நிதி விவரணத்தில் சாதாரணமாகக் கொடுக்கப்படும் விபரங்களுடன் கோரிக்கை இன்னதென்று கூற இயலாதபோது ராஜ்யத்தின் பொருட் சாதனங்களின் பேரில் ஏற்படும் எதிர்பாராப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஒரு கிராண்டைச் செய்யவும்,

(இ) நிதி வருஷத்தின் நடப்புச் சேவையின் பகுதியல்லாத அசாதாரணக் கிராண்டைச் மெய்யவும் சக்தி வாய்ந்ததாகும்; மேலும், மேற்சொன்ன கிராண்டுகளின் காரியங்களுக்காக ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து பணங்களை எடுப்பதற்குச் சட்டத்தினுல் அதிகாரம் கொடுக்க ராஜ்யத்தின் சட்ட மன்றம் சக்தி வாய்ந்ததாகும்.

(2) வருஷாந்தர நிதி விவரணத்தில் சொல்லப்பட்ட செலவின் பொருட்டு ஒரு கிராண்டைச் செய்வது சம்பந்தமாகவும் அச் செலவுக்கு வேண்டிய பணங்களை ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து ஒதுக்க அதிகாரம் கொடுப்பதன் பொருட்டுச் செய்யப்படும் சட்டம் சம்மந்தமாகவும் 203-வது, 204-வது பிரிவுகளின் ஷரத்துக்கள் பிரயோகப்படுவது போலவே (1)-ம் பகுதியின்கீழ் ஒரு கிராண்டைச் செய்தல் சம்பந்தமாகவும் அப்பகுதியின்கீழ்ச் செய்யப்படும் சட்டம் சம்பந்தமாகவும் அவை பிரயோகப்படும்.

நிதி மசோதாக்கள் பற்றிய விசேஷ ஷரத்துக்கள்.

207. (1) 199-வது பிரிவின் (1)-ம் பகுதியின் (அ) முதல் (ஊ) வரையிலுள்ள உட்பகுதிகளில் குறிப்பிட்ட விஷயங்களில் எதற்காகவேனும் ஏற்பாடு செய்யும் ஒரு மசோதாவையாவது திருத்தத்தையாவது ராஜ்யபாலரின் சிபார்சின்பேரிலன்றிக் கொணரவோ பிரேரேபிக்கவோ கூடாது; அவ்வாறு ஏற்பாடு செய்யும் ஒரு மசோதாவைச் சட்டப்பரிஷத்தில் கொணரலாகாது:

எனினும், வரி ஒன்றைக் குறைப்பதற்காவது ஒழிப்பதற்காவது ஏற்பாடு செய்யும் ஒரு திருத்தத்தைப் பிரேரேபிப்பதற்கு இப்பகுதியின்கீழ்ச் சிபார்சு வேண்டுவதில்லை.

(2) ஒரு மசோதாவில் அல்லது திருத்தத்தில், அபராதங்களை அல்லது மற்றையப் பணத் தண்டனைகளை விதிப்பதற்காக, அல்லது லைஸென்சுகளுக்கான கட்டணங்களையோ அல்லது சேவை புரிந்ததற்கான கட்டணங்களையோ கேட்பதற்காக அல்லது கொடுப்பதற்காக ஏற்பாடு செய்துள்ள காரணத்தால் மட்டுமாவது அல்லது ஸ்தலக் காரியங்களுக்காக ஒரு

ஸ்தல அதிகாரியோ அல்லது நிலையமோ எவ்வரியையேனும் விதித்தல், ஒழித்தல், தவிர்த்தல், மாற்றல் அல்லது முறைப்படுத்தல் இவற்றிற்காக ஏற்பாடு செய்துள்ள காரணத்தாலாவது அம் மசோதா அல்லது திருத்தம் மேற்சொன்ன விஷயங்களில் எதற்காகவேனும் ஏற்பாடு செய்வதாகக் கருதப்படமாட்டாது.

(3) மசோதா ஒன்றைச் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவந்தமையால் ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து செலவு செய்யவேண்டி வருமாஞல் அம் மசோதாவை ஆலோசனை செய்யவேண்டும் என ராஜ்யபாலர் அதற்குச் சிபார்சு செய்திருந்தாலன்றி, ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை எதனுலும் அம் மசோதா நிறைவேற்றப்படலாகாது.

பொதுவான நடைமுறை

நடைமுறை விதிகள்.

208. (1). ராஜ்யத்தின் சட்ட மன்றத்தின் சபை இந்த அரசியலமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, தனது நடைமுறையையும் காரிய முறையையும் ஒழுங்குபடுத்த விதிகள் செய்யலாம்.

(2) (1)-ம் பகுதியின்கீழ் விதிகள் செய்யப்படும்வரை, இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அதற்கு நிகரான மாகாணத்திற்குரிய சட்டமன்றம் சம்பந்தமாக அமுலிலிருந்த நடைமுறை விதிகளும், நிலையுத்தரவுகளும் சட்டசபையின் சபாநாயகரால் அல்லது சட்டப் பரிஷத்தின் அக்கிராசனரால் அவற்றில், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப செயலான மாறுதல்களுக்கும் இணக்கங்களுக்கும் உட்பட்டு அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் சம்பந்தமாகப் பிரயோகப்படும்.

(3) சட்டபரிஷத்து உள்ள ராஜ்யத்தில் ராஜ்யபாலர் சட்டசபையின் சபாநாயகரையும் சட்டபரிஷத்தின் அக்கிராசனரையும் கலந்தாலோசித்த பிறகு, இரு சபைகளினிடையே நிகழும் செய்திப் போக்கு வரவுகளைப்பற்றிய நடைமுறை விஷயமாக விதிகள் செய்யலாம்.

நிதிக்காரியங்கள் சம்பந்தமாக ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் நடைமுறையைச் சட்டத்தினுல் முறைப்படுத்துதல்.

209. நிதிக் காரியங்கள் உரிய காலத்தில் முடிவடையும் பொருட்டு நிதி விஷயமோ அல்லது ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து பணங்களை ஒதுக்குவதற்கான ஒரு மசோதாவோ சம்பந்தமாக, ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை அல்லது சபைகளின் நடைமுறையையும் காரிய முறையையும் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினுல் முறைப்படுத்தலாம்; அப்படி செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்து எதுவும் 208-வது பிரிவின் (1)-ம் பகுதியின் கீழ் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையினுல் அல்லது சபை ஒன்றுல் செய்யப்பட்ட எந்த விதிக்காவது அல்லது அப் பிரிவின் (2)-ம் பகுதியின்கீழ் ராஜ்யத்தின் சட்டமன்றம் சம்பந்தமாகப் பிரயோகப்படும் எந்த விதி அல்லது நிலை-யுத்தரவுக்காவது பொருத்தமற்றதாயிருந்தால், அந்த அளவுக்கு அத்தகைய ஷரத்தே மேலோங்கும்.

சட்டமன்றத்தில் உபயோகிக்கப்பட வேண்டிய பாஷை.

210. (1). XVII-வது பாகத்தில் எவ்வாறு இருப்பினும் ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் அலுவல்களை 348-வது பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, அந்த ராஜ்யத்தின் ராஜாங்க பாஷையில் அல்லது பாஷைகளில் அல்லது இந்தியில் அல்லது இங்கிலீஷில் நடத்த வேண்டும் :

எனினும், அங்கத்தினர் ஒருவர் தமது கருத்தை மேற் சொன்ன பாஷைகளில் ஒன்றில் வெளியிடப் போதிய திறமை யற்றவராயிருந்தால், அச் சபையில் தமது தாய் மொழியில் உரையாற்றுவதற்கு, சட்டசபையின் சபாநாயகரோ, சட்ட பரிஷத்தின் அக்கிராசனரோ அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அப்படி வேலை பார்க்கும் ஒருவரோ அவருக்கு அனுமதி கொடுக்கலாம்.

(2) ராஜ்யத்தின் சட்டமன்றம் வேறு விதமாகச் சட்டத்தினால் ஏற்பாடு செய்தாலன்றி, இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பதினைந்து வருஷகாலம் முடிவடைந்த பின்னர், இப் பிரிவிலிருந்து "அல்லது இங்கிலீஷில்" என்னும் சொற்கள் விடப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே இப்பிரிவு பிரயோகப்படும்.

சட்டமன்றத்தில் நடைபெறும் சர்ச்சையைப் பற்றிய வரையறை.

211. உச்ச நீதிமன்றத்தின் அல்லது ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் தம்முடைய கடமைகளை நிறைவேற்றுகையில் நடந்துகொண்ட முறையைக் குறித்து ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் எவ்விதமான சர்ச்சையும் நிகழலாகாது.

சட்டமன்றத்தின் நடவடிக்கைகளைக் குறித்து நீதிமன்றங்கள் விசாரித்தல் கூடாது.

212. (1) நடைமுறையில் ஒழுங்குப்பிசகு இருப்பதாகக் கூறும் காரணத்தால் ராஜ்யத்தின் சட்டமன்ற நடவடிக்கைகளின் செல்திறன் ஆட்சேபிக்கப்படலாகாது.

(2) ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் நடைமுறையையோ காரியமுறையையோ நெறிப்படுத்துவதற்காவது, அல்லது ஒழுங்கை நிறுவுவதற்காவது இந்த அரசியலமைப்பினுல் அல்லது அதன்கீழ்ச் சக்திகள் கொடுக்கப்பெற்றசட்டமன்றத்தின் ஓர் உத்தியோகஸ்தர் அல்லது அங்கத்தினர் அந்த சக்திகளைச் செலுத்துதல் சம்பந்தமாக, எந்த நீதிமன்றத்தின் விசாரணை-அதிகாரத்திற்கும் உள்ளாக்கப்படலாகாது.

அத்யாயம் IV.—சட்டம் இயற்ற ராஜ்ய பாலருக்கு உள்ள சக்தி

சட்டமன்றத்தின் கூட்டங்கள் நடைபெறுத இடைக்காலத்தில் அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்ய ராஜ்யபாலருக்குள்ள சக்தி.

213. (1) ராஜ்யத்தின் சட்டசபையின் நடைக்காலம் தவிர வேறெந்தக் காலத்திலும் அல்லது ராஜ்யத்தில் சட்டப் பரிஷத்து இருந்தால், சட்டமன்றத்தின் இரு சபைகளின் நடைக்காலம் தவிர வேறெந்தக் காலத்திலும் தாம் அவசியமாய் உடனடியான நடவடிக்கை நடத்தவேண்டிய சந்தர்ப்பங்கள் இருப்பனவாக ராஜ்யபாலருக்கு விளங்கினுல், அவர் அச் சந்தர்ப்பங்களுக்குத் தேவையாகத் தோற்றும் அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்யலாம் :

எனினும்—

(அ) ஒத்த ஷரத்துக்கள் அடங்கிய மசோதா ஒன்று சட்டமன்றத்தில் கொணரப்படுவதற்கு இந்த அரசியலமைப்பின் கீழ் ராஷ்டிரபதியின் முன்-அனுமதி தேவையாயிருக்குமானுல், அல்லது

(ஆ) ஒத்த ஷரத்துக்கள் அடங்கிய மசோதா ஒன்றை ராஷ்டிரபதியின் ஆலோசனைக்காக ஒதுக்கிவைத்தல் அவசியம் என்று ராஜ்யபாலர் கருதியிருப்பாராஞல், அல்லது

(இ) அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒத்த ஷரத்துக்கள் அடங்கிய சட்டம் ஒன்று, ராஷ்டிரபதியின் ஆலோசனைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டு ராஷ்டிரபதியின் சம்மதம் பெற்றிருந்தாலன்றி, இந்த அரசியல் அமைப்பின்கீழ்ச் செல்லுபடியற்றதாய்ப் போய்விடுமாஞல்

ராஷ்டிரபதியின் உத்தரவின்றி அத்தகைய அவசரச் சட்டத்தை ராஜ்யபாலர் பிரகடனம் செய்யலாகாது.

(2) இப்பிரிவின் கீழ்ப் பிரகடனம் செய்யப்பட்ட அவசரச் சட்டம் ராஜ்யபாலர் சம்மதித்த அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சட்டத்தையொத்த திறனும் பயனும் உடையதாகும்; ஆஞல் அத்தகைய ஓர் அவசரச் சட்டம்—

(அ) ராஜ்யத்தின் சட்டசபையின், அல்லது அந்த ராஜ்யத்தில் சட்டப்பரிஷத்து ஒன்று இருந்தால் இரு சபைகளின் முன்னிலையிலும் வைக்கப்பட வேண்டும்; சட்டமன்றம் மறுமுறை கூடுவதிலிருந்து ஆறு வாரம் முடிவடைந்தவுடன், அல்லது அக்காலம் முடிவடைவதற்குமுன் அதை ஒத்துக்கொள்ளலாகாது என்னும் தீர்மானம் சட்டசபையால் நிறைவேற்றப்பட்டும் சட்டப் பரிஷத்து ஒன்றிருந்தால் அதனுல் ஒத்துக் கொள்ளப்பட்டும் இருந்தால், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அத்தீர்மானம் நிறைவேற்றப்படும்போதோ அல்லது அத் தீர்மானம் பரிஷத்தால் ஒத்துக் கொள்ளப்படும் போதோ அது அமுலற்றுப் போகும்;

(ஆ) எச்சமயத்திலும் ராஜ்யபாலரால் வாபீஸ் செய்யப்படலாம்.

விளக்கம்.—சட்டப்பரிஷத்து உள்ள ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபைகள் வெவ்வேறு தேதிகளில் மறுமுறை கூடுமாறு அழைக்கப்பட்டால், அந்த ஆறு வாரகாலம் இப்பகுதியைப் பொறுத்த வரை அத்தேதிகளில் பிந்தியிலாவது கணக்கிடப்படவேண்டும்.

(3) ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்டு ராஜ்யபாலரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டத்தில் எந்த ஷரத்தை அமைத்திருந்தால் அது செல்லுபடியாகாதோ அந்த ஷரத்தை இப்பிரிவின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட ஓர் அவசரச் சட்டத்திலே அமைத்தால் அந்த அளவுக்கு அது வியர்த்தமாகும்.

எனினும், கூட்டு ஜாபிதாவில் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப்பற்றிப் பார்லிமெண்டு செய்த சட்டத்திற்கோ அல்லது ஏற்கெனவேயுள்ள சட்டத்திற்கோ விரோதமாய் ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தின் அமுல் சம்பந்தமாக இந்த அரசியல் அமைப்பில் உள்ள ஷரத்துக்களின்

பொருட்டு, ராஷ்டிரபதியின் உத்தரவை அனுசரித்து இப் பிரிவின்கீழ்ப் பிரகடனம் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்ட மானது ராஷ்டிரபதியின் ஆலோசனைக்காக ஒதுக்கிவைக்கப் பட்டு அவர் சம்மதத்தைப் பெற்ற அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தால் செய்யப்பட்ட சட்டம் எனக் கருதப்படும்.

அத்தியாயம் V—ராஜ்யங்களிலுள்ள உயர் நீதிமன்றங்கள்

ராஜ்யங்களுக்கு உயர் நீதி மன்றங்கள்.

214. [1]* * * ராஜ்யம் ஒவ்வொன்றுக்கும் ஓர் உயர் நீதிமன்றம் இருக்கவேண்டும்.

[2]* * * * * * * *

உயர் நீதி மன்றங்கள் ரிக்கார்டு நீதிமன்றங்கள் ஆகும்.

215. உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரிக்கார்டு நீதிமன்றமாகும்; அது, தன்னே அவமதித்ததற்காகத் தண்டிக்கும் சக்தி உட்பட, அத்தகைய நீதிமன்றத்திற்குரிய சகல சக்திகளையும் உடையதாகும்.

உயர் நீதி மன்றங்களின் அமைப்பு.

216. உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும் பிரதம நீதிபதி ஒருவரையும், ராஷ்டிரபதி அவ்வப்போது நியமித்தல் அவசியம் என்று கருதும் மற்றைய நீதிபதிகளையும் கொண்டதாய் இருக்கவேண்டும்:

[2]* * * * * * * *

ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியின் நியமனமும் அவருடையுத்தியோகத்திற்குரிய நிபந்தனைகளும்.

217. (1) ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒவ்வொருவரும், இந்தியாவின் பிரதம நீதிபதியோடும் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலரோடும் கலந்தாலோசித்த பின்னரும், பிரதம நீதிபதியல்லாத வேறொரு நீதிபதியின் நியமன விஷயத்தில் அந்த உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியோடும் கலந்தாலோசித்த பின்னரும் ராஷ்டிரபதியின் கையெழுத்தும் முத்திரையும் கொண்ட அதிபத்திரத்தினுல் நியமிக்கப்படவேண்டும்; [3][அன்னவர் அதிகப்படியான அல்லது பதிலாக வேலே பார்க்கும் நீதிபதியாக இருந்தால் 224-வது பிரிவில் ஏற்பாடு செய்துள்ளவாறும், மற்றைய விஷயத்தில் அறுபது வயது நிரம்பும் வரையும் பதவி வகிப்பார்:]

எனினும்—

(அ) ஒரு நீதிபதி தாம் கையெழுத்திட்டு ராஷ்டிரபதிக்கு விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலமாகத் தமது பதவியை ராஜிநாமாச் செய்யலாம்;

---

1. "(1)" என்னும் நகவளேவுக் குறிகளும் இலக்கமும் (2)-ம், (3)-ம் பகுதிகளும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

2. விலக்கு நிபந்தனே மேற்படி சட்டத்தின் 11-வது பிரிவினுல் விட்டுவிடப் பட்டது.

3. மேி சட்டத்தின் 12-வது பிரிவினுல், "அன்னவர் அறுபது வயது நிரம்பும் வரை பதவி வகிப்பார்." என்னும் சொற்களுக்குப் பதிலாக மேற்படி சட்டத்தின் 12-வது பிரிவினுல் அமைத்துக் கொள்ளப்பட்டது.

பாகம் VI—ராஜ்யங்கள்—பிரிவுகள் 217—218.

(ஆ) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை நீக்குவதற்கு 124-வது பிரிவின் (4)-ம் பகுதியில் ஏற்பாடுசெய்த விதமாக ராஷ்டிரபதியால் நீதிபதி ஒருவர் தமது பதவியிலிருந்து நீக்கப்படலாம்;

(இ) ஒரு நீதிபதியின் பதவி, அவர் ராஷ்டிரபதியால் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்படுவதால் அல்லது ராஷ்டிரபதியால் இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள வேறெந்த உயர் நீதிமன்றத்திற்காவது மாற்றப்படுவதால் காலிபடும் .

(2) ஒருவர் இந்தியாவின் குடியாயிருந்து—

(அ) இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் குறைந்தது பத்து வருஷமாவது நீதிப்பதவி ஒன்றை வகித்திருந்தாலன்றியும்,

(ஆ) குறைந்தது பத்து வருஷமாவது [1]* * * * * * * * * * ஓர் உயர் நீதிமன்றத்திலோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அத்தகைய நீதிமன்றங்களிலோ தொடர்ச்சியாக அட்வொகேட்டாக இருந்தாலன்றியும்,

ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெறத் தகுதியுள்ளவர் ஆகார்.

விளக்கம்.—இப்பகுதியைப் பொறுத்தவரை—

(அ) ஒருவர் ஓர் உயர் நீதிமன்றத்தின் அட்வொகேட்டாயிருந்த காலத்தைக் கணக்கிடுகையில், அவர் அட்வொகேட் ஆன பிறகு நீதிப்பதவியை வகித்து வந்த காலமும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்

(ஆ) ஒருவர் இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் நீதிப் பதவி வகித்திருந்த அல்லது ஓர் உயர் நீதிமன்றத்தின் அட்வொகேட்டாக இருந்துள்ள காலத்தைக் கணக்கிடுகையில், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன், 1935-ம் வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு உள்ள இந்தியாவின் உள்ளே 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதிக்குமுன் அடங்கியிருந்த எப்பிரதேசத்திலாவது அவர் நீதிப்பதவி வகித்திருந்த அல்லது அப்படிப்பட்ட ஒரு பிரதேசத்திலுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் அட்வொகேட்டாக இருந்துவந்த காலமும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

உச்சநீதிமன்றம் பற்றிய சில ஷரத்துக்களை உயர் நீதிமன்றங்களுக்குப் பிரயோகப்படுத்துதல்.

218. 124-வது பிரிவின் (4)-ம், (5)-ம் பகுதிகளின் ஷரத்துக்கள் உச்ச நீதிமன்றம் சம்பந்தமாகப் பிரயோகப்படுவது போலவே ஓர் உயர் நீதிமன்றம் சம்பந்தமாகவும் பிரயோகப்படும் ; அவற்றில் உச்ச நீதிமன்றத்தைக் குறிக்கும் இடங்களுக்குப் பதிலாக உயர் நீதிமன்றத்தைக் குறிக்கும் இடங்கள் எனக் கொள்ளவேண்டும்.

[1] "முதலாவது தபசிலில் குறிப்பிட்ட ராஜ்யத்திலுள்ள" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

பாகம் VI—ராஜ்யங்கள்—பிரிவுகள் 219—222.

உயர் நீதி மன்றங் களின் நீதி பதிகள் பிரமாணம் அல்லது உறுதி மொழி செய்தல்.

219.[1] [ஒர்] உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப் பட்ட ஒவ்வொருவரும் தமது பதவியை ஏற்பதற்குமுன், அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலரின் அல்லது அதற்கென அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரின் முன்னிலையில், அதன் பொருட்டு மூன்றுவது தபசிலில் காட்டப்பட்டுள்ள நமூனாப்பிரகாரம், ஒரு பிரமாணம் அல்லது ஓர் உறுதிமொழி செய்து கையெழுத் திடவேண்டும்.

ஒரு நிலை யான நீதிபதி யாக இருந்த பிறகு நியாய வாதம் செய் வதற்குக் கட்டுப்பாடு.

[2][220. ஓர் உயர் நீதிமன்றத்தின் நிலையான நீதிபதியாகப் பதவி வகித்திருந்த எவரும் இந்த அரசியலமைப்பின் தொடக் கத்திற்குப் பிறகு உச்ச நீதி மன்றத்திலும் இதர உயர் நீதி மன்றங்களிலுமன்றி இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலாவது எந்த அதிகாரியின் முன்னிலையிலாவது வாதிக்கவோ செயல் புரியவோ கூடாது.

விளக்கம்.—இப் பிரிவில் "உயர் நீதி மன்றம்" என்னும் பதத்தில் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம்திருத்தச்) சட்டத்தின் [3]தொடக்கத்திற்குமுன் இருந்த முதலாவது தபசிலின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட ஒரு ராஜ்யத் தின் உயர் நீதிமன்றம் என்பது அடங்காது.]

நீதிபதி களின் சம் பளங்கள் வகையரா.

221. (1) ஒவ்வொரு உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக் கும் இரண்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட சம்பளங்கள் கொடுக்கப்பட்டவேண்டும்.

(2) நீதிபதி ஒவ்வொருவரும் பார்லிமெண்டால் செய்யப் படும் சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் அவ்வப்போது நிர்ண யிக்கப்படும் படிகளையும் ரஜா, பென்ஷன் இவைகளைப் பற் றிய உரிமைகளையும் பெறுவதற்கும், அப்படி நிர்ணயிக்கப் படும்வரை, இரண்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட படிகளை யும் உரிமைகளையும் பெறுவதற்கும் பாத்தியதை உள்ளவர் ஆவார்:

எனினும், ஒரு நீதிபதியின் படிகளையாவது ரஜா, பென்ஷன் இவைபற்றிய உரிமைகளையாவது அவருடைய நியமனத்திற்குப் பிறகு அவருக்குப் பாதகமாக மாற்றலாகாது.

உயர் நீதி மன்றத்தி லிருந்து மற்றொன் றுக்கு மாற்று தல்.

222. (1) ராஷ்டிரபதி இந்தியாவின் பிரதம நீதிபதியுடன் கலந்தாலோசித்த பிறகு, ஒரு நீதிபதியை [4]* * * * ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து வேறெந்த உயர் நீதி மன்றத் திற்கும் மாற்றலாம்.

[5]* * * *

---

[1] "ஒரு ராஜ்யத்திலுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] அசல் 220-வது பிரிவிற்குப் பதிலாக, மேற்படி சட்டத்தின் 13-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக் கொள்ளப்பட்டது.

[3] 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதி.

[4] "இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 14-வது பிரிவினுல் விட்டு விடப்பட்டன.

[5] (2)-ம் பகுதி மேற்படி சட்டத்தின் அதே பிரிவினுல் விட்டுவிடப்பட்டது.

பாகம் VI—ராஜ்யங்கள்—பிரிவுகள் 223—225.

பதிலாக வேலை பார்க்கும் பிரதம நீதி பதியின் நியமனம்.

223. ஓர் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியின் பதவி காலியாயிருக்கும்போதும், அல்லது அத்தகைய ஒரு பிரதம நீதிபதி தமது இடத்தில் இல்லாமையாலாவது வேறு காரணத் தாலாவது, தம்முடைய உத்தியோகக் கடமைகளை நிறை வேற்ற இயலாதவராயிருக்கும்போதும், அதன்பொருட்டு ராஷ் டிரபதியால் நியமிக்கப்படும் அந்நீதிமன்றத்தின் மற்றைய நீதிபதிகளில் ஒருவரால் அந்த உத்தியோகக் கடமைகள் நிறை வேற்றப்படவேண்டும்.

அதிகப்படி யான நிதிபதி களையும் பதிலாக வேலை பார்க்கும் நீதிபதி களையும் நியமித்தல்.

[1][224. (1) ஓர் உயர் நீதிமன்றத்தின் அலுவல் தாற்கா லிகமாக அதிகரித்திருப்பது அல்லது அதில் வேலை பார்க்கியா யிருப்பது காரணமாக அந்த நீதிமன்றத்திலுள்ள நீதிபதி களின் எண்ணிக்கையை அக்கால அளவில் அதிகப்படுத்தவேண்டு மென ராஷ்டிரபதிக்குத் தோன்றினால் ராஷ்டிரபதி கிறம மாய்த் தகுதியுள்ளவர்களைத் தாம் குறிப்பிடக்கூடியவாறு இரண்டு வருஷ கால அளவுக்கு மேற்படாமல் அந்த நீதிமன் றத்தின் அதிகப்படியான நீதிபதிகளாக நியமிக்கலாம்.

(2) ஓர் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி அல்லாத வேறு யாதொரு நீதிபதி ஸ்தலத்தில் இராத காரணத்தினால் அல்லது வேறு யாதொரு காரணத்தினால் தமது பதவியின் கடமைகளைச் செய்யமுடியாதவராயிருந்தால் அல்லது அவர் தற்காலிகமாகப் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந் தால், ராஷ்டிரபதி நியமன அந்த நீதிபதி தமது கடமைகளை மீண்டும் செய்யத் தொடங்குகிறவரையில் கிரமமாய்த் தகுதி யுள்ளவர் ஒருவரை அந்த நீதிமன்றத்தின் நீதிபதியாகச் செய லாற்ற நியமிக்கலாம்.

(3) ஓர் உயர் நீதி மன்றத்தின் அதிகப்படியான நீதிபதி யாக அல்லது பதிலாக வேலைபார்க்கும் நீதிபதியாக நியமிக்கப் பட்ட எவரும் அறுபது வயது நிரம்பிய பிறகு பதவி வகித்த லாகாது].]

ஏற்கெனவே யுள்ள உயர் நீதி மன்றங்களின் விசாரணை அதிகாரம்.

225. இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கும், இந்த அரசியல் அமைப்பினால் உரியசட்டமன்றத்திற்குஅளிக்கப்பட்ட சக்திகளின் மூலமாக அச்சட்ட மன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, ஏற்கெனவேயுள்ள ஓர் உயர் நீதிமன்றத்தின் விசாரணை-அதிகாரமும், அதில் வழங் கப்படும் சட்டமும், நீதிமன்ற விதிகளைச் செய்யவும், நீதி மன்றத்தின் இருப்புமுறைகளையும், அதன் அங்கத்தினர் தனித் தனியாகவேனும், பிரிவு-நீதிமன்றங்களிலேனும் இருத்தலையும் ஒழுங்குபடுத்துவதற்குமான சக்தி உட்பட அந்நீதிமன்றத் தில் நீதி நிர்வாகம்பற்றி அதன் நீதிபதிகளுக்கு முறையே உள்ள சக்திகளும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இருந்தபடியே இருக்கும் :

எனினும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக, வருமானத்தைக் குறித்தோ அல்லது அதை வசூலிப்பதில் உத்தரவிட்ட அல்லது செய்யப்பட்ட எச் செய்கையைக் குறித்தோ உள்ள எந்த விஷயத்தைப்பற்றி

[1] அசல் 224-வது பிரிவிற்குப் பதிலாக 1956-ம்ஜ்ஜித்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 15-வது பிரிவினால் அமைத்துக் கொள்ளப் பட்டது.

பாகம் VI—ராஜ்யங்கள்—பிரிவுகள் 225—227.

யாவது உயர் நீதிமன்றங்களில் எதிலுலேனும் பிரயோகிக்கப் படும் அசல் விசாரணை-அதிகாரத்திற்கு ஏற்படுத்திய கட்டுப் பாடு எதுவும் அத்தகைய விசாரணை-அதிகாரத்தைச் செலுத்து வதற்கு இனிப் பிரயோகப்படமாட்டாது.

குறிப்பிட்ட தாக்கீது களைப் பிறப் பிக்க உயர் நீதிமன்றங் களுக்கு உள்ள சக்தி.

226. (1) 32-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும், அது விசாரணை-அதிகாரம் செலுத் தும் பிரதேசங்கள் முழுவதிலும், III-ம் பாகத்திலுல் அளிக்கப் பட்ட உரிமைகளில் எதையேனும் நிறைவேற்றுவதற்காகவும் மற்றெந்தக் காரியத்திற்காகவும், அப்பிரதேசங்களுக்குள் உரிய இடங்களில், எவருக்கோ எந்தச் சர்க்காரும் உட்பட, எந்த அதிகாரிக்கோ, ஹேபியஸ் கார்ப்பஸ், மாண்டேமஸ், ப்ரொஸபிஷன், கோ-வாரண்டோ, லெர்ஷியோரேரை போன்ற தாக்கீதுகள் உள்ளிட்ட கட்டளைகளையாவது, உத்தரவுகளை யாவது, தாக்கீதுகளையாவது அல்லது அவைகளில் எவற்றை யாவது பிறப்பிக்கச் சக்தி உடையதாகும்.

(2) (1)-ம் பகுதியில் ஓர் உயர் நீதிமன்றத்திற்கு அளித் துள்ள சக்தி 32-வது பிரிவின் (2)-ம் பகுதியில் உச்ச நீதிமன் றத்திற்கு அளித்துள்ள சக்தியைக் குறைப்படுத்துவதாகாது.

உயர் நீதி மன்றத் திற்கு எல்லா நீதி மன்றங் களின் மீதும் மேற் பார்வை அதிகாரம்.

227. (1) உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றும் எப்பிரதேசங் கள் சம்பந்தமாக விசாரணை-அதிகாரம் செலுத்துகிறதோ அப் பிரதேசங்கள் முழுவதிலுமுள்ள நீதிமன்றங்கள், நியாயசபை கள் எல்லாவற்றின் மீதும் மேற்பார்வை அதிகாரம் உடைய தாகும்.

(2) மேற்கண்ட ஷரத்தின் பொதுஇயல்புக்குப் பாதக மின்றி, அந்த உயர் நீதிமன்றம்—

(அ) அத்தகைய நீதிமன்றங்களிலிருந்து விவரக்குறிப் புக்களை அனுப்பும்படி கேட்கலாம்;

(ஆ) அத்தகைய நீதிமன்றங்களின் காரிய முறையை யும் நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துவதற் காகப் பொது விதிகள் செய்யலாம், அல்லது பிறப் பிக்கலாம்; நமூனுக்களையும் வகுக்கலாம்,

(இ) அத்தகைய நீதிமன்றங்களின் உத்தியோகஸ்தர் கள் தங்கள் புத்தகங்கள், பதிவுகள், கணக்குகள் இவற்றை வைக்க வேண்டியதற்கான முறைகளை நிர்ணயிக்கலாம்.

(3) அத்தகைய நீதிமன்றங்களின் ஷெரிப்புக்கும், குமாஸ் தாக்கள், உத்தியோகஸ்தர்கள் எல்லாருக்கும் அங்கே வாதத் தொழில் புரியும் அட்டர்னிகள், அட்வொகேட்டுகள், பிளீடர் கள், ஆகிய இவர்களுக்கும் கொடுக்கத்தக்க கட்டணங்களைப் பற்றிய அட்டவணைகளையும் மேற்படி உயர் நீதிமன்றம் திட்டப் படுத்தலாம்:

எனினும், (2)-ம் அல்லது (3)-ம் பகுதியின்கீழ்ச் செய்யப் பட்ட விதிகளும், வகுக்கப்பட்ட நமூனுக்களும், திட்டப்படுத் தப்பட்ட அட்டவணைகளும் அப்போது அமுலிலிருக்கும் ஒரு சட்டத்தின் ஷரத்திற்கு முரண்படலாகாது; மேலும், அவைகள் ராஜ்யபாலரின் முற்சம்மதம் பெறவும் வேண்டும்.

(4) இப்பிரிவில் உள்ளது எதுவும் ஆயுதப் படையினரைப்பற்றிய ஒரு சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அமைக்கப்பட்ட ஒரு நீதி மன்றம் அல்லது நியாய சபையின்மீது ஓர் உயர் நீதிமன்றத்திற்கு மேற்பார்வைச் சக்திகள் அளிப்பதாகக் கருதப்படலாகாது.

குறிப்பிட்ட வழக்குகளை உயர் நீதி மன்றத்திற்கு மாற்றுதல்.

228. தனக்குக் கீழ்ப்பட்ட ஒரு நீதிமன்றத்தில் முடிவு பெறுமலிருக்கும் ஒரு வழக்கில் இந்த அரசியலமைப்பிற்கு அர்த்த விளக்கம் செய்வது சம்பந்தமாகச் சாரமான சட்டப் பிரச்சினை ஒன்று அடங்கி இருக்கிறது என்றும், அவ்வழக்கை முடிவு செய்வதற்கு அப்பிரச்சினையைத் தீர்மானிப்பது அவசியம் என்றும் ஓர் உயர் நீதிமன்றத்திற்கு நன்கு விளங்கினால் அது அவ்வழக்கை அந்த மன்றத்திலிருந்து எடுத்துக்கொண்டு,

(அ) அவ்வழக்கைத் தானே முடிவு செய்யலாம் ;

(ஆ) அச் சட்டப் பிரச்சினையைத் தீர்த்து, அப்பிரச்சினை பற்றிய தன் தீர்ப்பின் நகலுடன் அவ்வழக்கு எந்த நீதிமன்றத்திலிருந்து மேற்சொன்னவாறு எடுத்துக் கொள்ளப்பட்டதோ அதற்கே அவ்வழக்கைத் திருப்பி அனுப்பலாம் ; அந்நீதிமன்றம் அவற்றைப் பெற்றவுடன் அந்தத் தீர்ப்புக்கு இணங்க அவ்வழக்கைத் தீர்மானிக்கத் தொடங்கவேண்டும்.

உயர் நீதி மன்றங்களின் உத்தியோகஸ்தர்களும் சேவையாளர்களும் அவற்றின் செலவுகளும்.

229. (1) ஓர் உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாவது அல்லது அவர் குறிப்பிடும் அந்நீதிமன்றத்தின் வேறு நீதிபதியாவது உத்தியோகஸ்தராவது அந்நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்களையும் சேவையாளர்களையும் நியமனம் செய்யவேண்டும் ;

எனினும், [1] * * * * அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலர் ஒரு விதி செய்து அதில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், ஏற்கெனவே அந்நீதிமன்றத்தைச் சேர்ந்திராத எவரையும், அந்நீதிமன்றத்தைச் சேர்ந்த பதவிக்கு ராஜ்யப் பப்ளிக் செர்விஸ் கமிஷனுடன் கலந்தாலோசித்த பின்னரேயன்றி நியமிக்கலாகாது என்று அவ்விதியின் மூலமாகக் கட்டளையிடலாம்.

(2) ராஜ்யச் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, அந்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியினாலோ அல்லது இதன் பொருட்டு விதிகள் செய்ய அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற அந்நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியினாலோ அல்லது உத்தியோகஸ்தராலோ செய்யப்படும் விதிகளில் வகுக்கப்பட்டபடி ஓர் உயர் நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்கள், சேவையாளர்கள் இவர்களின் சேவை முறைகள் இருக்கவேண்டும் :

எனினும், சம்பளங்கள், படிகள், ரஜா, பென்ஷன் இவைகளைப் பொறுத்தவரை, இப்பகுதியின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகள், [2][அந்த ராஜ்யத்தின்] ராஜ்யபாலரின் அங்கீகாரம் பெறவேண்டும்.

---

[1] "அந்த உயர் நீதிமன்றத்தின் தலைமையிடம் எந்த ராஜ்யத்தில் உள்ளதோ" என்னும் சொற்கள், 1956-ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[2] "அந்த உயர்நீதி மன்றத்தின் தலைமையிடம் எந்த ராஜ்யத்தில் உள்ளதோ அதன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக் கொள்ளப்பட்டது.

(3) ஓர் உயர்நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்களுக்கோ சேவையாளர்களுக்கோ அல்லது அவர்களின் பொருட்டோ கொடுக்கவேண்டிய சகல சம்பளங்களும் படிகளும் பென்ஷன்களும் உட்பட, அந்நீதிமன்றத்தின் நிர்வாகச் செலவுகள் ராஜ்யத்தின் சஞ்சித நிதியின் பேரில் சாட்டப்படவேண்டும்; மேலும், அம்மன்றம் பெற்றுக்கொள்ளும் கட்டணங்களும் வேறு பணங்களும் அந்நிதியில் ஒரு பாகமாகச் சேரும்.

உயர்நீதிமன்றங்களின் விசாரணை அதிகாரத்தை யூனியன் ஆட்சிப் பரப்புகளுக்கு விஸ்தரித்தல்.

[1][230. (1) பார்லிமெண்டு சட்டத்தினால் யாதொரு யூனியன் ஆட்சிப் பரப்பிற்கு ஓர் உயர் நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரம் வியாபிக்குமாறு செய்யலாம் அல்லது அந்த ஆட்சிப்பரப்பிலிருந்து அந்த உயர் நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரத்தை நீக்கலாம்.

(2) ஓர் உயர் நீதிமன்றம் யாதொரு யூனியன் ஆட்சிப் பரப்பு சம்பந்தமாக விசாரணை அதிகாரம் செலுத்துமானால்—

(அ) இந்த அரசியல் அமைப்பில் உள்ளது எதுவும் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்திற்கு அவ்விசாரணை அதிகாரத்தைக் கூட்டவோ கட்டுப்படுத்தவோ அல்லது நீக்கவோ அதிகாரம் அளித்ததாக அர்த்தவிளக்கம் செய்யலாகாது ;

(ஆ) அந்த ஆட்சிப் பரப்பில் கீழ் நீதிமன்றங்களுக்கான விதிகள், நமூனாக்கள், அட்டவணைகள் இவை சம்பந்தமாய் 227-வது பிரிவில் ராஜ்ய பாலரைக் குறிக்கும் இடத்தில் ராஷ்டிரபதியைக் குறிக்கும் இடம் என்று அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.]

ண் அல்லது அதற்கு மேற்பட்ட ராஜ்யங்களுக்குப் பொதுவான ஓர் உய நீதிமன்றத்தை தல்.

[1][231. (1) இப்பாகத்தின் முந்திய ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டு சட்டத்தினால், இரண்டு அல்லது பல ராஜ்யங்களுக்காக அல்லது இரண்டு அல்லது பல ராஜ்யங்களுக்காகவும் ஒரு யூனியன் ஆட்சிப்பரப்பிற்காகவும் பொதுவான ஓர் உயர் நீதி மன்றத்தை நிறுவலாம்.

(2) அந்த உயர் நீதிமன்றம் சம்பந்தமாய்—

(அ) 217-வது பிரிவில் அந்த ராஜ்யத்தின் ராஜ்ய பாலரைக் குறிக்கும் இடத்தில், அந்த உயர் நீதிமன்றம் எந்த ராஜ்யங்கள் விஷயமாய் விசாரணை அதிகாரம் செலுத்துகிறதோ அந்த ராஜ்யங்களின் ராஜ்யபாலர்களைக் குறிக்கும் இடம் என்று அர்த்த விளக்கம் செய்யவேண்டும் ;

(ஆ) கீழ் நீதிமன்றங்களுக்கான விதிகள், நமூனாக்கள், அட்டவணைகள் இவை சம்பந்தமாய் 227-வது பிரிவில் ராஜ்ய பாலரைக் குறிக்கும் இடத்தில் கீழ் நீதிமன்றங்கள் இருக்கும் ராஜ்யத்தின் ராஜ்ய பாலரைக் குறிக்கும் இடம் என்று அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

[1] அசல் 230-வது, 231-வது, 232-வது பிரிவுகளுக்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 16-வது பிரிவினால் அமைத்துக்கொள்ளப்பட்டன.

பாகம் VI.—ராஜ்யங்கள்—பிரிவுகள் 231—235.

(இ) 219-வது, 229-வது பிரிவுகளில் ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்களில் அந்த உயர் நீதிமன்றத்தின் முக்கிய இருப்பிடம் எந்த ராஜ்யத்திலிருக்கிறதோ அந்த ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.]

எனினும், அத்தகைய இருப்பிடம் ஒரு யூனியன் ஆட்சிப் பரப்பில் இருந்தால், 219-வது, 229-வது பிரிவுகளில், ராஜ்ய பாலர், பப்ளிக் சேர்வீஸ்க மிஷன், சட்ட மன்றம், ராஜ்யத்தின் சஞ்சித நிதி இவர்களைக் குறிக்கும் இடங்களில் முறையே ராஷ்டிரபதி, யூனியன் பப்ளிக் சேர்வீஸ் கமிஷன், பார்லிமெண்டு, இந்தியாவின் சஞ்சித நிதி இவர்களைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்.]

232. [ரத்து செய்யப்பட்டது]

அத்தியாயம் VI—கீழ் நீதிமன்றங்கள்

ஜில்லா நீதிபதிகளின் நியமனம்.

233. (1) ஒரு ராஜ்யத்தின் ஜில்லா நீதிபதிகளை நியமித்தலும், அவர்களுடைய வேலையிடங்களைக் குறித்தலும், அவர்களுக்கு உத்தியோக உயர்வு அளித்தலும் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலரால் அந்த ராஜ்யம் சம்பந்தமாய் விசாரணை-அதிகாரம் செலுத்தும் உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்துச் செய்யப்படவேண்டும்.

(2) ஏற்கெனவே யூனியனின் அல்லது அந்த ராஜ்யத்தின் சேவையில் இல்லாத ஒருவர் ஏழு வருஷத்திற்குக் குறையாமல் அட்வொகேட்டாகவோ பிளீடராகவோ இருந்து, நியமனம் பெறுதற்கு அந்த உயர் நீதிமன்றத்தால் சிபார்சு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே அவர் ஜில்லா நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு அருகர் ஆவார்.

நீதித்துறைச் சேவை வர்க்கத்திற்கு ஜில்லா நீதிபதிகள் அல்லாத வர்களை நியமித்தல்.

234. ஒரு ராஜ்யத்தின் நீதித்துறைச் சேவை வர்க்கத்தில் ஜில்லா நீதிபதிகளைத் தவிர மற்றவர்கள் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலரால் அந்த ராஜ்யத்தின் பப்ளிக் சேர்விஸ் கமிஷனுடனும் அந்த ராஜ்யம் சம்பந்தமாக விசாரணை-அதிகாரம் செலுத்தும் உயர் நீதிமன்றத்துடனும் கலந்தாலோசித்த பிறகு, அதற்கென அவரால் செய்யப்படும் விதிகளின்படி, நியமிக்கப்படவேண்டும்.

கீழுள்ள நீதிமன்றங்களின்மீது செலுத்தும் அதிகாரம்.

235. ஒரு ராஜ்யத்தின் நீதித்துறைச் சேவை வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் ஜில்லா நீதிபதிப் பதவிக்குக் கீழ்ப்பட்ட எப் பதவியையும் வகிப்பவர்களுமான உத்தியோகஸ்தர்களின் வேலையிடங்களைக் குறித்தல், அவர்களுக்கு உத்தியோக உயர்வு அளித்தல், ரஜாக் கொடுத்தல் இவைகள் உட்பட ஜில்லா நீதிமன்றங்கள்மீதும் அவைகளுக்குக் கீழுள்ள நீதிமன்றங்களின் மீதும் செலுத்தும் மேல் அதிகாரம் அந்த உயர் நீதிமன்றத்தினிடம் நிலைபெற்றிருக்கும்; ஆனால், இப் பிரிவில் உள்ளது எதுவும் அத்தகையவருடைய சேவை முறைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி அப்பீல் செய்துகொள்ள அவருக்குள்ள உரிமையை நீக்குவதாகவோ அல்லது அச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட அவருடைய சேவைமுறைகளின்படியன்றி வேறு விதமாக அவரை நடத்துவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளித்ததாகவோ அர்த்த விளக்கம் செய்யப்படலாகாது.

பாகம் VI—ராஜ்யங்கள்—பிரிவுகள் 236—238.

236. இந்த அத்தியாயத்தில்—

அர்த்த விளக்கம்.

(அ) "ஜில்லா நீதிபதி" என்னும் பதத்தில் நகர சிவில் நீதிமன்றத்தின் நீதிபதி, அதிகப்படியான ஜில்லா நீதிபதி, கூட்டு ஜில்லா நீதிபதி, உதவி ஜில்லா நீதிபதி, ஸ்மால்காஸ் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி, பிரஸிடென்ஸி பிரதம மாஜிஸ்ட்ரேட்டு, அதிகப்படியான மாகாணப் பிரதம மாஜிஸ்ட்ரேட்டு, செஷன்ஸ் நீதிபதி, அதிகப்படியான செஷன்ஸ் நீதிபதி, உதவி செஷன்ஸ் நீதிபதி ஆகியவைகளும் அடங்கும்;

(ஆ) "நீதித்துறைச் சேவைவர்க்கம்" என்னும் பதம் ஜில்லா நீதிபதிப் பதவியிலும் ஜில்லா நீதிபதிப் பதவிக்குக் கீழ்ப்பட்ட மற்றைய சிவில் நீதித்துறைப் பதவிகளிலும் நியமிக்கப்படுவதற்காகக் கருதப் பட்டவர்கள் மட்டும் அடங்கிய ஒரு சேவைவர்க்கம் என்று பொருள்படும்.

இந்த அத்தியாயத்தின் ஷரத்துக்கள் குறிப்பிட்ட வகை அல்லது வகைகளைச் சேர்ந்த மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குப் பிரயோகப்படுதல்.

237. இந்த அத்தியாயத்தின் மேற்கண்ட ஷரத்துக்களும் அவைகளின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும் ராஜ்யத்தின் நீதித்துறைச் சேவை வர்க்கத்தில் நியமிக்கப்படுபவர்களைப் பற்றிப் பிரயோகப்படுவது போலவே, அந்த ராஜ்யத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுகளின் வகை அல்லது வகைகளைப்பற்றியும் அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்படும் விலக்குகளுக்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டு அதற்கெனத் தம்மால் நிர்ணயிக்கப் படும் தேதியிலிருந்து பிரயோகப்படவேண்டும் என ராஜ்ய பாலர் பொது விளம்பரத்தினால் உத்தரவிடலாம்.

238. [ரத்து செய்யபபட்டது]

பாகம் VII

[முதலாவது தபசிலின் (ஆ) பாகத்தில் கண்ட ராஜ்யங்கள்.]

1956–ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் ரத்துச் செய்யப்பட்டது.

238. [ரத்து செய்யப்பட்டது.]

பாகம் VIII

[யூனியன் ஆட்சிப் பரப்புகள்]

பிரிவுகள் 239-241

யூனியன் ஆட்சிகளின் நிர்வாகம்.

[2][239. (1) பார்லிமெண்டு சட்டத்தினால் மற்றப்படி ஏற்பாடு செய்திருந்தாலொழிய, யூனியன் ஆட்சிப்பரப்பு ஒவ்வொன்றையும் ராஷ்டிரபதி தாம் குறிப்பிடலாகும் உத்தியோகப் பெயருடன் தாம் நியமிக்கக்கூடிய நிர்வாகிமூலம், தமக்குத் தகுதியாகத் தோன்றும் அளவுக்கு, செயலாற்றி நிர்வகிக்க வேண்டும்.

(2) VI-வது பாகத்தில் எவ்வாறிருப்பினும், ராஷ்டிரபதி ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலர் அடுத்துள்ள யூனியன் ஆட்சிப்பரப்பின் நிர்வாகியாக நியமிக்கலாம். ஒரு ராஜ்யபாலர் அவ்வாறு நியமிக்கப்பட்டால், அவர் அந்த நிர்வாகியின் அலுவல்களைத் தமது மந்திரி சபைக்குச் சம்பந்தமின்றித் தாமே நிறைவேற்ற வேண்டும்.

குறிப்பிட்ட யூனியன் ரெகுலேஷன்கள் செய்ய ராஷ்டிரபதிக்குள்ள சக்தி.

240. (1) ராஷ்டிரபதி—

(அ) அந்தமான், நிகோபார் தீவுகள்;

(ஆ) லக்ஷத் தீவுகள், மினிகாய், அமிந்திவி தீவுகள் ஆகிய யூனியன் ஆட்சிப் பரப்புகளின் அமைதிக்காகவும் அபிவிருத்திக்காகவும் நல்லாட்சிக்காகவும் ரெகுலேஷன்கள் செய்யலாம்.

(2) அப்படிச் செய்யப்படும் ரெகுலேஷன் பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தையாவது அந்த யூனியன் ஆட்சிப்பரப்பிற்கு அக்காலத்தில் பிரயோகப்படும் ஏற்கெனவேயுள்ள ஒரு சட்டத்தையாவது ரத்துச் செய்யலாம் அல்லது திருத்தலாம்; ராஷ்டிரபதியால் பிரகடனம் செய்யப்பட்டபொழுது, அது அந்தப் ஆட்சிப்பரப்பிற்குப் பிரயோகப்படும் பார்லிமெண்டுச் சட்டத்தைப் போலவே அமுலும் பயனும் உடையதாகும்.

யூனியன் ஆட்சிப் பரப்புக்களுக்கான உயர் நீதிமன்றங்கள்.

241. (1) பார்லிமெண்டு சட்டத்தினால் ஒரு [3][யூனியன் ஆட்சிப்பரப்பிற்காக] உயர் நீதிமன்றத்தை அமைக்கலாம், அல்லது [3][அத்தகைய ஆட்சிப்பரப்பிலுள்ள] ஒரு நீதிமன்றம் இந்த அரசியல்அமைப்பின் சகல காரியங்களுக்குமாவது அல்லது அவற்றுள் எதற்காவது ஓர் உயர் நீதிமன்றம் ஆகும் என அறிவிக்கலாம்.

---

[1] [1]1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 17-வது பிரிவினால், "முதலாவது தபசிலின் (இ) பாக ராஜ்யங்கள்" என்னும் அசல் தலைப்பிற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] மேற்படி சட்டத்தின் அதே பிரிவினால், 239-வது, 240-வது அசல் பிரிவுகளுக்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டன.

[3] மேற்படி சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு ராஜ்யத்திற்காக" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொளளப்பட்டது.

[4] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "அத்தகைய ஒரு ராஜ்யத்திலுள்ள" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

(2) VI-ம் பாகத்தின் V-ம் அத்தியாயத்தின் ஷரத்துக்கள் 214-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஓர் உயர் நீதிமன்றம் சம்பந்தமாகப் பிரயோகப்படுவதுபோலவே பார்லிமெண்டு சட்டத்தினுல் ஏற்படுத்தும் மாறுதல்களுக்காவது விலக்குகளுக்காவது உட்பட்டு (1)-ம் பகுதியில் குறிப்பிடப்பட்ட ஒவ்வோர் உயர்நீதிமன்றம் சம்பந்தமாகவும் பிரயோகப்படும்.

[1][(3) இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கும், இந்த அரசியல அமைப்பினுல் அல்லது அதன்கீழ்ப் பொருத்தமான சட்டமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சக்திகளின் மூலமாகச் செய்யப்பட்ட அச்சட்ட மன்றத்தின் சட்டத்தின் ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, ஒரு யூனியன் ஆட்சிப்பரப்பு சம்பந்தமாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக விசாரணை அதிகாரம் செலுத்திவந்த உயர்நீதிமன்றம் ஒவ்வொன்றும் அத்தொடக்கத்திற்குப் பிறகும் அந்த ஆட்சிப் பரப்பு சம்பந்தமாக அத்தகைய விசாரணை-அதிகாரத்தைத் தொடர்ந்து செலுத்திவரும்.

(4) ஒரு ராஜ்யத்திற்கான ஓர் உயர் நீதிமன்றத்தின் விசாரணை-அதிகாரத்தை ஒரு யூனியன் ஆட்சிப்பரப்பிற்காவது அதன் பாகத்திற்காவது வியாபிக்கச் செய்யவோ அல்லது அந்த ஆட்சிப் பரப்பு அல்லது அதன் பாகத்திலிருந்து அந்த அதிகாரத்தை நீக்கிவிடவோ பார்லிமெண்டுக்குள்ள சக்தியை இப்பிரிவில் உள்ளது எதுவும் குறைப்படுத்தமாட்டாது.]

242. [குடகு]. 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் ரத்துச் செய்யப்பட்டது.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருதசச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் (3)-ம், (4)-ம் அசல் பகுதிகளுக்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டன.

பாகம் IX

[முதலாவது தபசிலின் (ஈ) பாகத்தின் பிரதேசங்களும் அத்தபசிலில் குறிப்பிடப்படாத மற்றையப் பிரதேசங்களும்.] 1956-ம் ஆண்டிய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் ரத்துச் செய்யப்பட்டன.

243. [ரத்து செய்யபட்டது]

பாகம் X[1]

அனுபந்தப் பிரதேசங்களும், மலைஜாதிப் பிரதேசங்களும்

பிரிவு 244

அனுபந்தப் பிரதேசங்கள், மலை ஜாதிப் பிரதேசங்கள் இவற்றின் நிர்வாகம்.

244. (1) அஸ்ஸாம் ராஜ்யத்தைத் தவிர, [2] * * * * * * * * எந்த ராஜ்யத்திலும் உள்ள அனுபந்தப் பிரதேசங்கள், அனுபந்த மலைஜாதிகள் இவற்றின் நிர்வாகத்திற்கும் மேல் அதிகாரத்திற்கும் ஐந்தாவது தபசிலின் ஷரத்துக்கள் பிரயோகப்படும்.

(2) ஆறுவது தபசிலின் ஷரத்துக்கள் அஸ்ஸாம் ராஜ்யத்திலுள்ள மலைஜாதிப் பிரதேசங்களின் நிர்வாகத்திற்குப் பிரயோகப்படும்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] "முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது குறிப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

பாகம் XI

யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகள்

அத்தியாயம் I—சட்ட நிருபண உறவுகள்

சட்ட நிருபண சக்திகளின் பங்கீடு

பிரிவுகள் 245—246

பார்லிமெண்டாலும் ராஜ்யங்களின் சட்ட மன்றங்களாலும் செய்யப்படும் சட்டங்களின் வியாபகம்.

245. (1) இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, பார்லிமெண்டு இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுவதற்குமோ, அல்லது அதன் ஒரு பாகத்திற்கோ சட்டங்கள் செய்யலாம்; ஒரு ராஜ்யத்தின் சட்ட மன்றம் அந்த ராஜ்யம் முழுமைக்குமோ அல்லது அதன் ஒரு பாகத்திற்கோ சட்டங்கள் செய்யலாம்.

(2) ஆட்சிப் பரப்பிற்கு அப்பால் பிரயோகப்படும் என்ற காரணத்தால் பார்லிமெண்டால் செய்யப்பட்ட எச் சட்டமும் செல்லுபடியற்றதெனக் கருதப்படலாகாது.

பார்லிமெண்டாலும் ராஜ்யங்களின் சட்ட மன்றங்களாலும் செய்யப்படும் சட்டங்களின் விஷயங்கள்.

[1] 246. (1). (2)-ம் (3)-ம் பகுதிகளில் எவ்வாறு இருப்பினும் ஏழாவது தபசிலில் (இந்த அரசியல் அமைப்பில் "யூனியன் ஜாபிதா" என்று குறிக்கப்படும்) I-ம் ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங்களில் எதைப் பற்றியேனும் சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்கு மட்டுமே சக்தி உண்டு.

(2) (3)-ம் பகுதியில் எவ்வாறு இருப்பினும், ஏழாவது தபசிலில் (இந்த அரசியல் அமைப்பில் "கூட்டு ஜாபிதா" என்று குறிக்கப்படும்) III-ம் ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங்களில் எதைப் பற்றியேனும் பார்லிமெண்டும், (1)-ம் பகுதிக்கு உட்பட்டு, [2] * * * * * * ஒரு ராஜ்யத்தின் சட்ட மன்றமும் சட்டங்கள் செய்யச் சக்தி உடையனவாகும்.

(3) ஏழாவது தபசிலில் (இந்த அரசியல் அமைப்பில் "ராஜ்ய ஜாபிதா" என்று குறிக்கப்படும்) II-ம் ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங்களில் எதைப் [2] * * * * * * * * * * * * ஒரு ராஜ்யத்தின் சட்ட மன்றத்திற்கு மட்டுமே (1)-ம், (2)-ம் பகுதிகளுக்கு உட்பட்டு, அந்த ராஜ்யத்திற்காகவோ அதன் எப்பாகத்திற்காகவோ சட்டங்கள் செய்யச் சக்தி உண்டு.

(4) இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் [3] [ஒரு ராஜ்யத்தில்] அடங்காத எப் பாகத்திற்கும் எவ் விஷயத்தைப் பற்றியும், அது ராஜ்ய ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயமாயிருப்பினும் சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்குச் சக்தி உண்டு.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 246-வது பிரிவில் "(1)-ம் பகுதியில் (2)-ம், (3)-ம் பகுதிகளில் எவ்வாறு இருப்பினும்" என்னும் நகவளைவுக் குறிகளும் இலக்கங்களும் சொற்களும், (2)-ம், (3)-ம், (4)-ம் பகுதிகளும் விட்டுவிடப்பட வேண்டும்.

[2] "முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது குறிப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[3] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலின் (அ) பாகத்தில் அல்லது (ஆ) பாகத்தில்" எனபதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

பாகம் XI.—யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகள்—பிரிவுகள் 247—249.

அதிகப்படியான நீதிமன்றங்களை நிறுவ ஏற்பாடு செய்யப் பார்லிமெண்டுக்குள்ள சக்தி.

247. இந்த அத்தியாயத்தில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டால் செய்யப்படும் சட்டங்களை அல்லது யூனியன் ஜாபிதாவில் குறிக்கப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றி ஏற்கனவேயுள்ள ஒரு சட்டத்தை மேலும் நன்முகப் பரிபாலனம் செய்யும் பொருட்டு அதிகப்படியான நீதிமன்றங்களை நிறுவுவதற்குப் பார்லிமெண்டு சட்டத்தினால் ஏற்பாடு செய்யலாம்.

எஞ்சிய சட்ட நிரூபண சக்திகள்.

[1] 248. (1) கூட்டு ஜாபிதாவிலாவது ராஜ்ய ஜாபிதாவிலாவது குறிக்கப்படாத எந்த விஷயத்தைப் பற்றியும் சட்டம் செய்யப் பார்லிமெண்டுக்கு மட்டுமே சக்தி உண்டு.

(2) அச்சக்தியில் இரு ஜாபிதாக்களில் எதிலும் கூறப்படாத ஒரு வரியை விதிப்பதற்குச் சட்டம் செய்யும் சக்தியும் அடங்கும்.

தேச மக்களின் சமுதாய நலத்திற்காக ராஜ்ய ஜாபிதாவிலுள்ள ஒரு விஷயம் பற்றிச் சட்டம் செய்யப் பார்லிமெண்டுக்குள்ள சக்தி.

249. (1) இந்த அத்தியாயத்தின் மேற்கூறிய ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், ராஜ்யப்பரிஷத்தில் வந்திருந்து வோட்டுச் செய்யும் அங்கத்தினர்களில் மூன்றில், இரண்டு பங்குக்குக் குறையாதவர்கள் ஆதரித்த தீர்மானத்தினால், அத்தீர்மானத்தில் குறிப்பிட்டதும் ராஜ்ய ஜாபிதாவில் குறிக்கப்பட்டதுமான ஒரு விஷயத்தைப் பற்றி தேசமக்களின் சமுதாய நலனை முன்னிட்டுப் பார்லிமெண்டு சட்டங்கள் செய்தல் அவசியமென்றோ, உசிதமென்றோ ராஜ்யப்பரிஷத்து அறிவித்தால், அத்தீர்மானம் அமுலிலிருக்கையில் அவ்விஷயத்தைப் பற்றி இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுமைக்குமாவது அதன் எப்பாகத்திற்காவது பார்லிமெண்டு சட்டங்கள் செய்தல் சட்ட சம்மதமாகும்.

(2) (1)-ம் பகுதியின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு வருஷத்திற்கு மேற்படாமல் அதில் குறிப்பிடப்படும் காலத்திற்கு அமுலிலிருக்கும்:

எனினும், அத்தகைய தீர்மானம் தொடர்ந்து அமுலிலிருப்பதை ஒப்புக்கொள்ளும் தீர்மானம் (1)-ம் பகுதியில் கண்டவிதமாக நிறைவேற்றப்பட்டால், அப்படி நிறைவேற்றப்படுந்தோறும், அத்தீர்மானம் இப்பகுதியின்கீழ் மற்றப்படி அமுலற்றுப் போகும் தேதியிலிருந்து மேலும் ஒரு வருஷம் தொடர்ந்து அமுலிலிருக்கும்.

(3) பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டம் (1)-ம் பகுதியின் கீழ் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலன்றிப் பார்லிமெண்டுக்கு அதைச் செய்ய சக்தியில்லாதிருந்தால், அவ்வாறு சக்தியில்லாத அளவுக்கு, அத்தீர்மானம் அமுலற்றுப்போனதிலிருந்து ஆறு மாத காலம் முடிவடைந்தும், அக்காலம் முடிவடையுமுன் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட காரியங்கள் சம்பந்தமாகவன்றி, அமுலற்றுப்போகும்.

---

[1] 248-வது, 249-வது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படமாட்டா.

பாகம் XI.—யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகள்—பிரிவுகள் 250–252.

ஆபத்து நிலைப் பிரகடனம் ஒன்று அமுலிலிருந்தால் ராஜ்ய ஜாபிதாவில் கண்ட ஒரு விஷயம் சம்பந்தமாகச் சட்டம் செய்யப் பார்லிமெண்டுக்குள்ள சக்தி.

[1] 250. (1) இந்த அத்தியாயத்தில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டு, ஆபத்துநிலை பிரகடனம் ஒன்று அமுலிலிருக்கையில், ராஜ்ய ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங்களில் எதைப் பற்றியேனும் இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுமைக்குமாவது அதன் எப்பாகத்திற்காவது சட்டங்கள் செய்யச் சக்தி உடையதாகும்.

(2) பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டம் ஆபத்து நிலைப் பிரகடனம் ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தாலன்றி பார்லிமெண்டுக்கு அதைச் செய்ய சக்தியில்லாதிருந்தால், அவ்வாறு சக்தியில்லாத அளவுக்கு, அமுலற்றுப்போன திலிருந்து ஆறுமாத காலம் முடிவடைந்ததும், அக்காலம் முடிவடையுமுன் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட காரியங்கள் சம்பந்தமாகவன்றி, அமுலற்றுப் போகும்.

249-வது, 250-வது பிரிவுகளின் கீழ்ப் பார்லிமெண்டு செய்த சட்டங்களுக்கும் ராஜ்யங்களின் சட்டமன்றங்கள் செய்த சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு.

[2] 251. இந்த அரசியல் அமைப்பின்கீழ் ஒரு சட்டம் செய்வதற்கு ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்திற்கு உள்ள சக்தியை 249-வது, 250-வது பிரிவுகளில் உள்ளது எதுவும் குறைப்படுத்தாது; ஆனால், ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் ஷரத்து பார்லிமெண்டால் செய்யப்பட்டதும், மேற்சொன்ன பிரிவுகளில் ஒன்றின் கீழ்ப் பார்லிமெண்டு செய்யச் சக்தியுடையதுமான சட்டத்தின் ஷரத்திற்கு விரோதமாயிருந்தால், பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம், ராஜ்யத்தின் சட்டமன்றம் செய்த சட்டத்திற்கு முன்னே, பின்னே நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அதுவே, மேலோங்கும். ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டம் அப்படி விரோதப்படும் அளவுக்கு, பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம் அமுலிலுள்ள காலத்திற்கு மட்டுமே, செயலற்றதாகும்.

இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட ராஜ்யங்களின் சம்மதத்தின் பேரில் அவற்றிற்காகச் சட்டம் செய்யப் பார்லிமெண்டுக்குள்ள சக்தியும், அச்சட்டத்தை வேறெருராஜ்யம் ஏற்றுக்கொள்ளலும்.

252. (1). 249-வது, 250-வது பிரிவுகளில் ஏற்பாடு செய்துள்ளவாறு அன்றி, ராஜ்யங்கள் சம்பந்தமாகச் சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்குச் சக்தியில்லாத எவ்விஷயத்தைப் பற்றி அந்த ராஜ்யங்களில் பார்லிமெண்டு சட்டத்தினுல் ஒழுங்குபடுத்துதல் உசிதமென இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட ராஜ்யங்களின் சட்டமன்றங்களுக்குத் தோன்றினுல், அக்கருத்துக் கொண்ட தீர்மானங்கள் அந்த ராஜ்யங்களின் சட்டமன்றங்களின் எல்லாச் சபைகளாலும் நிறைவேற்றப்பட்டால் அவ்விஷயத்தை அவ்வண்ணமே ஒழுங்குபடுத்தப் பார்லிமெண்டு ஒரு சட்டம் செய்தல் சட்ட சம்மதமாகும். அப்படிச் செய்யப்பட்டச் சட்டம் அந்த ராஜ்யங்களுக்கும், வேறெந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபையாலும், அல்லது இரண்டு சபைகளிருந்தால் அவைகளில் ஒவ்வொன்றினுலும், அதற்கென நிறைவேற்றப்படும் தீர்மானத்தினுல் பின்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அந்த ராஜ்யத்திற்குப் பிரயோகப்படும்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில் 250-வது பிரிவில், "ராஜ்ய ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங்களில் எதைப்பற்றியேனும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "யூனியன் ஜாபிதாவில் குறிக்கப்படாத விஷயங்கள் பற்றியும்" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 251-வது பிரிவில், "249-வது, 250-வது பிரிவுகளில்" என்னும் இலக்கங்களுக்கும் சொற்களுக்கு பதிலாக, "250-வது பிரிவில்" என்னும் சொல்லையும் இலக்கங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும். "இந்த அரசியல் அமைப்பின் கீழ்" என்னும் சொற்களை விட்டுவிட வேண்டும்; "மேற் சொன்ன பிரிவுகளின் ஒன்றின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேற்சொன்ன பிரிவின் கீழ்" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

பாகம் XI.—யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகள்—பிரிவுகள் 252—254.

பார்லிமெண்டால் அப்படி நிறைவேற்றப்பட்ட எச் சட்டமும் அதைப் போலவே நிறைவேற்றப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பார்லிமெண்டுச் சட்டம் ஒன்றினால் திருத்தப்படலாம் அல்லது ரத்துச் செய்யப்படலாம்; ஆனால், அது பிரயோகப்படும் எந்த ராஜ்யம் சம்பந்தமாகவும், அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சட்டத்தினால் திருத்தப்பட லாகாது அல்லது ரத்துச் செய்யப்படலாகாது.

சர்வதேசக் கருர்களை நிறை வேற்றுவ தற்காகச் சட்டம் செய்தல்

[1]253. இந்த அத்தியாயத்தின் மேற்கூறிய ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், மற்றெந்தத் தேசத்தோடு அல்லது தேசங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கை, கருர் அல்லது உடம்பாட்டையாவது ஒரு சர்வதேச மகாநாடு அல்லது சங்கம் அல்லது வேறு நிலையத்தில் செய்யப்பட்ட ஒரு முடிவையாவது நிறைவேற்றுவதற்காக இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுமைக்குமோ அதன் ஒரு பாகத்திற்கோ சட்டம் செய்யப் பார்லிமெண்டு சக்தி உடையதாகும்.

பார்லி மெண்டால் செய்யப் பட்டசட்டங் களுக்கும் ராஜ்யங் களின் சட்ட மன்றங் களால் செய்யப் பட்டசட்டங் களுக்கும் இடையேமுரணபாடு.

[2]254. (1) ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப் பட்ட சட்டத்தின் ஷரத்தானது பார்லிமெண்டு இயற்று வதற்குச் சக்தியுடையதும் பார்லிமெண்டால் செய்யப்பட்டது மான ஒரு சட்டத்தின் ஷரத்திற்கோ கூட்டு ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்றைப்பற்றி ஏற்கெனவே யுள்ள ஒரு சட்டத்தின் ஷரத்திற்கோ விரோதமாயிருந்தால், அப்போது, (2)-ம் பகுதியின் ஷரத்துக்களுக்கு உட்பட்டுப் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்திற்கு முன்னேப் பின்னே நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அச் சட்டமாவது, அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஏற்கெனவேயுள்ள சட்ட மாவது மேலோங்கும்; மேலும், அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தால் செய்யப்பட்ட சட்டம் அவ்வாறு விரோதப்படும் அளவுக்கு வியர்த்தமாகும்.

(2) கூட்டு ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்றைப்பற்றி * * * * * * ஒரு ராஜ்யத்

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில் 253-வது பிரி வுடன் கீழ்க்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் :—

" எனினும், 1954-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுவது) பற்றிய உத்தரவின் தொடக்கத் திற்குப் பிறகு, ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தின் நிலையைப் பாதிக்கலாகும் எத்தீர்ப்பையும் இந்திய அரசாங்கம் அந்த ராஜ்ய அரசாங்கத்தின் சம்மத மின்றிச் லாகாது ".

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 254-வது பிரிவில், " ஒரு சட்டத்தின் ஷரத்திற்கோ கூட்டு ஜாபிதாவில் குறிக்கப்பட்ட விஷயங் களில் ஒன்றைப்பற்றி ஏற்கெனவேயுள்ள ஒரு சட்டத்தின் ஷரத்திற்கோ விரோத மாயிருந்தால், அப்போது, (2)-ம் பகுதியின் ஷரத்துக்களுக்கு உட்பட்டுப் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம் அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்திற்கு முன்னே பின்னே நிறைவேற்றப்பட் டிருந்தாலும், அச்சட்டமாவது, அல்லது சந்தர்ப்பத்துக்கு ஏற்ப, ஏற்கெனவேயுள்ள சட்ட மாவது " என்னும் சொற்களுக்கும் நக வளவுக் குறிகளுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, " ஒரு சட்டத்தின் ஷரத்திற்கு விரோதமாயிருந்தால், பார்லிமெண் டால் செய்யப்பட்ட சட்டம் அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தால் செய்யப் பட்ட சட்டத்திற்கு முன்னே பின்னே நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அச் சட்டம் " என்னும் சொற்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

[3] " முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது, குறிப் பிடப்பட்ட " என்னும் சொற்களும் எழுத்துக்களும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலா லும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XI.—யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகள்—பிரிவுகள் 25 —25 .

தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டமானது அவ் விஷயத்தைப்பற்றிப் பார்லிமெண்டால் முன்னரே செய்யப் பட்ட ஒரு சட்டத்திலாவது ஏற்கெனவேயுள்ள ஒரு சட்டத் திலாவது உள்ள ஷரத்துக்களுக்கு விரோதமான ஷரத்து ஒன்றைக் கொண்டதாயிருந்தால், அப்போது, அந்த ராஜ்யத் தின் சட்டமன்றத்தால் அப்படி செய்யப்பட்ட சட்டம் ராஷ் டிரபதியின் ஆலோசனைக்காகவென்று ஒதுக்கிவைக்கப்பட்டு அவர் அனுமதியைப் பெற்றிருந்தால், அதுவே அந்த ராஜ்யத் தில் மேலோங்கும் :

எனினும், அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் அப் படி செய்யப்பட்ட சட்டத்துடன் எதையேனும் சேர்க்கும் அல்லது அதைத் திருத்தும், மாற்றும் அல்லது ரத்துச் செய் யும் சட்டம் ஒன்று உட்பட, அவ்விஷயத்தைப்பற்றிப் பார்லிமெண்டு எச் சமயத்திலும் ஒரு சட்டம் இயற்றுவதை இப் பகுதியில் உள்ளது எதுவும் தடை செய்யாது.

சிபார்சுகளும் முன் அனுமதிகளும் பற்றிய நிபந்தனைகள் நடைமுறை விஷயங்களாகவே கருதப்பட வேண்டும்.

[1]255. பார்லிமெண்டின் சட்டம் அல்லது [2] * * * * * ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சட்டம் எதுவும், அத் தகைய சட்டத்தின் ஷரத்து எதுவும், இதனடியிற் கண்டவ ரால் அச் சட்டத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் இந்த அரசியல் அமைப்பின்படி பெறவேண்டிய ஒரு சிபார்சோ முன்-அனுமதியோ அளிக்கப்படவில்லை என்னும் காரணத்தால் மட்டுமே செல்லுபடியற்றன ஆகமாட்டா—

(அ) பெறவேண்டிய சிபார்சு ராஜ்யபாலருடையதா யிருந்தால், ராஜ்யபாலர், ராஷ்டிரபதி இவர்களில் ஒருவர் ;

(ஆ) பெறவேண்டிய சிபார்சு ராஜப்பிரமுகருடைதா யிருந்தால், ராஜ்யப்பிரமுகர், ராஷ்டிரபதி இவர் களில் ஒருவர் ;

(இ) பெறவேண்டிய சிபார்சு அல்லது முன்-அனுமதி ராஷ்டிரபதியுடையதாயிருந்தால், ராஷ்டிரபதி.

அத்தியாயம் II.— நிர்வாக உறவுகள்

பொது

ராஜ்யங்கள், யூனியன் இவற்றின் பொறுப்பு.

[3]256. பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டங்களோடும் அந்த ராஜ்யத்தில் பிரயோகப்படும் ஏற்கெனவேயுள்ள சட் டங்களோடும் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்தும் வகை

---

[1] 255-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] "முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது குறிப் பிடப்பட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும், 1956-ம் வருஷத்தின் அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலா லும் விட்டு விடப்பட்டன.

[3] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 256-வது பிரிவிற்கு அப் பிரிவைச் சேர்ந்த (1)-ம் பகுதி என்று மீண்டும் இலக்கமிட்டு, அத்துடன் கீழ்க்கண்ட பிரிவைப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் :—

"(2) ஜம்மு-காஷ்மீர் ராஜ்யம் விஷயமாக அரசியல் அமைப்பின் கீழ் யூனியனுக்குள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் யூனியன் நிறைவேற்று வதற்குகந்த வகையில் அந்த ராஜ்யம் தன் நிர்வாகச் சக்தியைச் செலுத்த வேண்டும் ; குறிப்பாக யூனியன் அவ்வாறு கேட்டுக்கொண்டால், யூனியன் சார்பாகவும் அதன் செலவிலும் சொத்திணைப் பெறவும் தாற்காலிகமாகக் கைப் பற்றவும் வேண்டும் ; அல்லது அச் சொத்து அந்த ராஜ்யத்தைச் சேர்ந்ததா யிருந்தால், ஒப்புக் கொள்ளப்படலாகும், அல்லது கருர்நாமா ஏற்படவில்லை யானால் இந்தியாவின் பிரதம நீதிபதி நியமிக்கும் மத்தியஸ்தர் நிர்ணயிக்க லாகும் நிபந்தனைகளின்பேரில் யூனியனுக்கு மாற்றவேண்டும்."

பாகம் XI.—யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகள்—பிரிவுகள் 25o—258.

யில் ஒவ்வொரு ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தியும் செலுத்தப் படவேண்டும்; மேலும், யூனியனின் நிர்வாகச் சக்தி இந்தியச் சர்க்காருக்கு அதற்கென அவசியமென்று தோன்றும் கட்டளைகளை ஒரு ராஜ்யத்திற்கு இடுவதற்கும் வியாபிக்கும்.

குறிப்பிட்ட விஷயங்களில் ராஜ்யங்களின் மீது யூனியன் அதிகாரம் செலுத்துதல்.

257. (1) ஒவ்வொரு ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தியும் யூனியனின் நிர்வாகச் சக்தியைச் செலுத்துவதற்குத் தடையோ பாதகமோ ஏற்படாதபடி செலுத்தப்படவேண்டும். யூனியனின் நிர்வாகச் சக்தி இந்தியச் சர்க்காருக்கு அதற்கென அவசியமென்று தோன்றும் கட்டளைகளை ஒரு ராஜ்யத்திற்கு இடுவதற்கும் வியாபிக்கும்.

(2) யூனியனின் நிர்வாகச் சக்தி, தேசீய சமுதாய அல்லது ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது என்று யூனியன் கட்டளையில் அறிவிக்கப்படும் போக்குவரவுச் சாதனங்களை அமைத்தல், பராமரித்தல் இவை பற்றி ஒரு ராஜ்யத்திற்குக் கட்டளைகளை இடுவதற்கும் வியாபிக்கும்:

எனினும், இப் பகுதியில் உள்ளது எதுவும் பொதுப் பாதைகளையாவது நீர்ப்பாதைகளையாவது தேசீயப் பொதுப் பாதைகள் என்றே தேசீய நீர்ப்பாதைகள் என்றே அறிவிக்கப் பார்லிமெண்டுக்குள்ள சக்தியையாகிலும், அப்படி அறிவிக்கப் பட்ட பொதுப் பாதைகள் அல்லது நீர்ப்பாதைகளைப் பற்றிய யூனியனின் சக்தியையாகிலும், கடற்படை, நிலப்படை, ஆகாயப்படை இவற்றின் கட்டடப் பணிகளைப்பற்றிய யூனியன் வேலைகளின் பகுதியாகப் போக்குவரவுச் சாதனங்களை அமைக்கவும் பராமரிக்கவும் யூனியனுக்குள்ள சக்தியையாகிலும் குறைப்படுத்துவதாகக் கருதப்படலாகாது.

(3) யூனியனின் நிர்வாகச் சக்தி ஒரு ராஜ்யத்தினுள் இருக்கும் இருப்புப்பாதைகளைப் பாதுகாப்பதற்கான செயல்களைப்பற்றி அந்த ராஜ்யத்திற்குக் கட்டளைகளை இடுவதற்கும் வியாபிக்கும்.

(4). (2)-ம் பகுதியின்கீழ் ஒரு போக்குவரவுச் சாதனத்தை அமைத்தல் அல்லது பராமரித்தல் பற்றியோ (3)-ம் பகுதியின்கீழ் ஓர் இருப்புப்பாதையைப் பாதுகாப்பதற்கான செயல்களைப்பற்றியோ ஒரு ராஜ்யத்திற்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுகையில், அக் கட்டளை இடப்படாதிருந்தால் அந்த ராஜ்யத்தின் சாதாரணக் கடமைகளைச் செய்வதற்குச் செலவாயிருக்கக்கூடிய தொகைகளைக் காட்டிலும் அதிகம் செலவானால், ராஜ்யத்திற்கு அவ்வாறு அதிகப்படியாக ஏற்பட்ட செலவுகளைப் பற்றி ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு தொகையோ, அல்லது ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் இந்தியாவின் பிரதம நீதிபதியால் நியமிக்கப்படும் ஒரு மத்தியஸ்தரால் நிர்ணயிக்கப்படும் ஒரு தொகையோ, இந்தியச் சர்க்காரால் அந்த ராஜ்யத்திற்குக் கொடுக்கப்படவேண்டும்.

குறிப்பிட்ட விஷயங்களில் ராஜ்யங்களுக்குச் சக்திகள் வகையறா அளிக்க யூனியனுக்குள்ள சக்தி.

258. (1) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், ராஷ்டிரபதி ஒரு ராஜ்யச் சர்க்காரின் சம்மதத்துடன், யூனியனின் நிர்வாகச் சக்தி வியாபிக்கும் எவ்விஷயத்தைப் பற்றிய அலுவல்களையும் அந்தச் சர்க்காரிடமாவது அதன் உத்தியோகஸ்தர்களிடமாவது, நிபந்தனையின் பேரிலோ அல்லது நிபந்தனையின்றியோ, ஒப்புவிக்கலாம்.

(2) பார்லிமெண்டால் செய்யப்பட்டதும் ஒரு ராஜ்யத்தில் பிரயோகப்படுவதுமான சட்டம், அந்த ராஜ்யத்தின்

பாகம் XI.—யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகள்—பிரிவுகள் 258—261.

சட்டமன்றம் சட்டங்கள் செய்வதற்குச் சக்தியற்றதான ஒரு விஷயத்தைக் குறித்ததாயிருந்தபோதிலும், அந்த ராஜ்யத்திற்கோ அதன் உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகாரிகளுக்குமோ சக்திகளை அளிக்கலாம், கடமைகளை விதிக்கலாம், அல்லது சக்திகளை அளிப்பதற்கும் கடமைகளை விதிப்பதற்கும் அதிகாரம் கொடுக்கலாம்.

(3) இப் பிரிவின் காரணமாக ஒரு ராஜ்யத்திற்காவது, அதன் உத்தியோகஸ்தர்களுக்காவது, அதிகாரிகளுக்காவது சக்தி அளிக்கப்பட்டிருந்தாலும், கடமைகள் விதிக்கப்பட்டிருந்தாலும், அச் சக்திகளையும், கடமைகளையும் செலுத்துதல் சம்பந்தமாக அந்த ராஜ்யத்திற்கு அதிகப்படியாக ஏற்பட்ட நிர்வாகச் செலவுகளைப்பற்றி ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு தொகையோ, அல்லது ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் இந்தியாவின் பிரதம நீதிபதியால் நியமிக்கப்படும் ஒரு மத்தியஸ்தரால் நிர்ணயிக்கப்படும் ஒரு தொகையோ இந்தியச் சர்க்காரால் அந்த ராஜ்யத்திற்குக் கொடுக்கப்படவேண்டும்.

யூனியனுக்கு அலுவல்களை ஒப்படைக்க ராஜ்யங்களுக்குள்ள சக்தி.

[1][258 (அ) இந்த அரசியலமைப்பில் எவ்வாறிருப்பினும், ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலர், இந்தியச் சர்க்காரின் சம்மதத்துடன், அந்த ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தி வியாபிக்கிறதாகிய விஷயம் பற்றி அலுவல்களை நிபந்தனையுடனே, நிபந்தனையில்லாமலோ அந்தச் சர்க்காரிடம் அல்லது அதன் உத்தியோகஸ்தர்களிடம் ஒப்புவிக்கலாம்.]

259. [முதலாவது தபசிலின் (ஆ) பாகத்தில் கண்ட ராஜ்யங்களின் ஆயுதப்படைகள்.] 1956-ம் வருஷத்திய அரசியலமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் ரத்துச் செய்யப்பட்டது.

இந்தியாவிற்குப் புறம்பாக உள்ள பிரதேசங்கள் சம்பந்தமாக யூனியனுக்குள்ள விசாரணை-அதிகாரம்.

260. இந்தியச் சர்க்கார் இந்தியாவின் ஆட்சிப்பரப்பின் பாகமல்லாத ஒரு பிரதேசத்தின் சர்க்காருடன் கரூர்நாமாவினுல் அப் பிரதேசத்தின் சர்க்காரிடம் நீலேபெற்றிருக்கும் எந்த நிர்வாக, சட்ட நிரூபண, அல்லது நீதிபரிபாலன வேலைகளையும் மேற்கொள்ளலாம்; ஆனால் அத்தகைய கரூர்நாமாவில் ஒவ்வொன்றும் அயல்நாட்டில் அதிகாரம் செலுத்துதல் சம்பந்தமாக அக்காலத்தில் அமுலிலிருக்கும் சட்டத்திற்கு உட்பட்டும் அதனுல் ஆளப்பட்டும் இருக்கவேண்டும்.

சர்க்கார்ச் செயல்களும் தஸ்தவேசுக்களும் நீதி பரிபாலன டவடிக்கைகளும்.

261. (1) யூனியன், ஒரு ராஜ்யம் இவற்றின் ராஜாங்கச் செய்கைகள், தஸ்தவேசுக்கள், நீதி பரிபாலன நடவடிக்கைகள் இவற்றிற்கு இந்தியாவின் ஆட்சிப்பரப்பு முழுவதிலும் பூரணமான நம்பிக்கையும் மதிப்பும் அளிக்கப்படவேண்டும்.

[2](2) (1)-ம் பகுதியில் குறிப்பிடப்பட்ட செய்கைகள் தஸ்தவேசுக்கள், நடவடிக்கைகள் இவற்றை மெய்ப்பிப்பதற்கும், இவற்றின் பயன்களை நிர்ணயிப்பதற்கும் உரிய முறையும் நிபந்தனைகளும் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தினுல் ஏற்பாடு செய்தவாறே இருக்கவேண்டும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 18-வது பிரிவால் இடைச்சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 261-வது பிரிவின் (2)-ம் பகுதியில், "பார்லிமெண்டால் செய்யப்பட்ட" என்னும் சொற்களை விட்டு விடவேண்டும்.

(3) இந்தியாவின் ஆட்சிப்பரப்பின் எப்பாகத்திலும் உள்ள சிவில் நீதிமன்றங்களால் முடிவாகக் கூறப்பட்ட தீர்ப்புக்கள் அல்லது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் அந்த ஆட்சிப் பரப்பிற்குள் எந்த இடத்திலும் சட்டப்படி நிறைவேற்றத் தக்கவை ஆகும்.

நீரைப்பற்றிய விவாதங்கள்

பல ராஜ்யங்களிலுள்ள ஆறுகளில் அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் உள்ள நீரைப் பற்றிய விவாதங்களில் தீர்ப்பளித்தல்.

262. (1) பல ராஜ்யங்களிலுள்ள ஓர் ஆற்றில் அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள நீரின் உபயோகம், பங்கீடு அல்லது கட்டுப்பாடு இவைபற்றிய விவாதத்திலோ அல்லது பிராதிலோ தீர்ப்பு அளிப்பதற்காகப் பார்லிமெண்டுச் சட்டத்திஞல் ஏற்பாடு செய்யலாம்.

(2) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், (1)-ம் பகுதியில் குறிப்பிடப்பட்ட விவாதம் அல்லது பிராதைப்பற்றி உச்ச நீதி மன்றமாவது வேறெந்த நீதிமன்றமாவது விசாரணை-அதிகாரம் செலுத்தலாகாது எனப் பார்லிமெண்டு சட்டத்திஞல் ஏற்பாடு செய்யலாம்.

ராஜ்யங்களிணிடையே ஒருமைப்பாடு

சர்வ-ராஜ்ய பரிஷத்தைப் பற்றிய ஷரத்துக்கள்.

263. எப்போதாவது ராஷ்டிரபதிக்கு—

(அ) ராஜ்யங்களினிடையே ஏற்பட்டிருக்கக்கூடிய விவாதங்களைப்பற்றி விசாரணை செய்து ஆலோசனை கூறவும்,

(ஆ) ராஜ்யங்களில் சிலவோ அல்லது எல்லாமோ, அல்லது யூனியனும் ராஜ்யங்களில் ஒன்றுமோ அல்லது பலவுமோ ஒன்றுபட்ட அக்கறையுடைய விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும் சர்ச்சை செய்யவும், அல்லது

(இ) அத்தகைய விஷயத்தைப்பற்றிச் சிபார்சுகள் செய்யவும், முக்கியமாக, அவ்விஷயத்தைப்பற்றிய கொள்கையையும் செயலையும் மேலும் நன்முக ஒருமைப்படுத்தச் சிபார்சுகள் செய்யவும்

கடமையாற்றும் பொறுப்புடைய பரிஷத்து ஒன்றை நிறுவுவதஞல் பொதுமக்களின் நலங்கள் பேணப்படும் என்று தோன்றிஞல், ராஷ்டிரபதி தம் உத்தரவிஞல் அத்தகைய பரிஷத்து ஒன்றை அமைத்தலும், அது ஆற்றவேண்டிய கடமைகளின் தன்மை, அதன் அமைப்பு, நடைமுறை இவற்றை வரையறுத்தலும் சட்டசம்மதமாகும்.

பாகம் XII

நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்.

அத்தியாயம் I.—நிதி.

பொது

பிரிவுகள் 264—266

அர்த்த விளக்கம்.

[1][264. இப் பாகத்தில் (அ) "நிதிக் கமிஷன்" என்பது 280-வது பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட ஒரு நிதிக் கமிஷன் என்று பொருள்படும்.]

(ஆ) "ராஜ்யம்" என்பதில் முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு ராஜ்யம் அடங்காது;

(இ) முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ராஜ்யங்களைக் குறிக்கும் இடங்களில், முதலாவது தபசிலின் (ஈ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட எப் பிரதேசத்தையும் இந்தியாவின் ஆட்சிபரப்பிற்குள் அடங்கியதும் அந்தத் தபசிலில் குறிப்பிடப்படாததுமான மற்றெந்தப் பிரதேசத்தையும் குறிக்கும் இடங்களும் அடங்கும்.

சட்டத்தின் அதிகார மூலமாக அன்றி வரிகளை விதித்தல் கூடாது.

265. சட்டத்தின் அதிகார மூலமாக அன்றி, எந்த வரியும் விதிக்கப்படவோ வசூலிக்கப்படவோ கூடாது.

இந்தியா, ராஜ்யங்கள் இவற்றின் சஞ்சித நிதிகளும் அரசாங்கக் கணக்குகளும்.

[2]266. (1). 267-வது பிரிவின் ஷரத்துக்களுக்கும், குறிப்பிட்ட சில வரிகளிலிருந்தும் தீர்வைகளிலிருந்தும் கிடைக்கும் நிகர வருவாய் முழுவதையுமோ அல்லது ஒரு பாகத்தையோ ராஜ்யங்களுக்கு அளிப்பது பற்றிய இந்த அத்தியாயத்தின் ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, இந்தியச் சர்க்கார் பெற்றுக் கொள்ளும் சகல அரசிறைகளும், அச் சர்க்காரால் கஜானு பத்திரங்கள், கடன்கள் அல்லது செலவுக்கான முன் பணத் தொகைகள் ஆகிய இவற்றின் மூலமாகத் திரட்டப்பட்ட சகல கடன்களும் கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படுவதால் அந்தச் சர்க்கார் பெற்றுக்கொள்ளும் சகல பணங்களும் "இந்தியாவின் சஞ்சித நிதி" என்று கூறப்படும் ஒரு சஞ்சித நிதியாக அமையும். ஒரு ராஜ்யத்தின் சர்க்கார் பெற்றுக் கொள்ளும் சகல அரசிறைகளும், அச் சர்க்காரால் கஜானு பத்திரங்கள், கடன்கள் அல்லது செலவுக்கான முன்பணத் தொகைகள் அகிய இவற்றின் மூலமாகத் திரட்டப்பட்ட சகல கடன்களும், கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படுவதால் அந்தச் சர்க்கார் பெற்றுக்கொள்ளும் சகல பணங்களும் "ராஜ்யத்தின் சஞ்சித நிதி" என்று கூறப்படும் ஒரு சஞ்சித நிதியாக அமையும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், 264-வது அசல் பிரிவுக்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 266-வது பிரிவில், ராஜ்யங்களை அல்லது ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்களில் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்யப்படுகாது.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்.—பிரிவுகள் 266—268.

(2) இந்திய சர்க்காரால் அல்லது ஒரு ராஜ்ய சர்க்காரால் அல்லது அவற்றுள் ஒன்றன் சார்பாகப் பெற்றுக்கொள்ளப்படும் மற்றையச் சர்க்கார்ப் பணங்கள் எல்லாம், சந்தர்ப்பத்திற்கேற்ப, இந்தியாவின் சர்க்கார்க் கணக்கிலாவது, அந்த ராஜ்யத்தின் சர்க்கார்க் கணக்கிலாவது வரவு வைக்கப்பட வேண்டும்.

(3) சட்டப்படியும் இந்த அரசியல் அமைப்பில் ஏற்படுத்திய விஷயங்களுக்காகவும் முறையின்படியும் அன்றி இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்தாவது ஒரு ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்தாவது எந்தப் பணங்களையும் ஒதுக்கி வைத்தலாகாது.

எதிர்பாராச் செலவு நிதி.

267. (1) "இந்தியாவின் எதிர்பாராச் செலவு நிதி" என்று கூறப்படும் வசக்கட்டுத் தன்மை வாய்ந்த எதிர்பாராச் செலவு நிதி ஒன்றைப் பார்லிமெண்டு சட்டத்தினால் ஏற்படுத்தலாம்; அச்சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் தொகைகள் அந்நிதியில் அவ்வப்போது சேர்க்கப்படவேண்டும்; அத்தகைய எதிர்பாராச் செலவுக்காக 115-வது பிரிவின் கீழோ, 116-வது பிரிவின் கீழோ பார்லிமெண்டு சட்டத்தினால் அனுமதி அளிக்கும் வரை அச்செலவு செய்வதற்கு அந்நிதியிலிருந்து முன் பணத் தொகைகள் கொடுப்பதற்காக ராஷ்டிரபதியிடம் அந்நிதி விட்டு வைக்கப்பட வேண்டும்.

[1] (2) "ராஜ்யத்தின் எதிர்பாராச் செலவு நிதி" என்னும் பெயருள்ள வசக்கட்டுத் தன்மை வாய்ந்த எதிர்பாராச் செலவு நிதி ஒன்றை ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினால் ஏற்படுத்தலாம்; அச்சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் தொகைகள் அந்நிதியில் அவ்வப்போது சேர்க்கப்படவேண்டும்; அத்தகைய எதிர்பாராச் செலவுக்காக 205-வது பிரிவின் கீழோ 206-வது பிரிவின் கீழோ அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினால் அனுமதி அளிக்கும் வரை, அச் செலவு செய்வதற்கு அந்நிதியிலிருந்து முன் பணத் தொகைகள் கொடுப்பதற்காக [2][ராஜ்யபாலரிடம்] அந்நிதி விட்டு வைக்கப்படவேண்டும்.

யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே அரசிறைப் பங்கீடு

யூனியனால் விதிக்கப்பட்டு ராஜ்யங்களால் வசூலித்து உபயோகிக்கப்படும் தீர்வைகள்.

268. (1) யூனியன் ஜாபிதாவில் சொல்லப்பட்ட முத்திரைத் தீர்வைகளும் மருந்துப் பொருள்கள் வண்ண நறும் பொருள்கள் இவற்றின்மீது கலால் தீர்வைகளும் இந்தியச் சர்க்காரால் விதிக்கப்படும்; ஆனால்—

(அ) அத்தகைய தீர்வைகள் [3][யாதொரு யூனியன் ஆட்சிப் பரப்பிற்குள்] விதிக்கக் கூடியனவாயிருந்தால், இந்தியச் சர்க்காராலும்,

---

[1] இப்பகுதி ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] "ராஜ்யபாலர் அல்லது ராஜப் பிரமுகரிடம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

[3] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு ராஜ்யத்திற்குள்" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 268—269.

(ஆ) மற்றவைகளில், எந்த ராஜ்யங்களுக்குள் அத்தகைய தீர்வைகள் முறையே விதிக்கப்படக்கூடியனவோ அந்த ராஜ்யங்களாலும்

அவை வசூலிக்கப்பட வேண்டும்.

(2) ஒரு ராஜ்யத்திற்குள் விதிக்கக் கூடிய அத்தகைய ஒரு தீர்வையிலிருந்து ஒரு நிதிவருஷத்தில் கிடைக்கும் வருவாய் இந்தியாவின் சஞ்சித நிதியைச் சேராது ; ஆனால் அது அந்த ராஜ்யத்திற்கு அளிக்கப்படவேண்டும்.

யூனியனால் விதித்து வசூலித்து ஆனால் ராஜ்யங்களுக்கு அளிக்கும் வரிகள்.

269. (1) அடியிற்கண்ட தீர்வைகளும் வரிகளும் இந்தியச் சர்க்காரால் விதித்து வசூலிக்கப்படவேண்டும் ; ஆனால், (2)-ம் பகுதியில் ஏற்பாடு செய்த விதமாக அவை ராஜ்யங்களுக்கு அளிக்கப்படவேண்டும் ; அவையாவன :—

(அ) விவசாய நிலம் அல்லாத மற்றையச் சொத்துக்கு வாரிசுரிமை பற்றிய தீர்வைகள் ;

(ஆ) விவசாய நிலம் அல்லாத மற்றையச் சொத்து எதப் பற்றிய எஸ்டேட்டுத் தீர்வை ;

(இ) ரயில், கடல் அல்லது ஆகாயம் இவற்றின் வழியாக ஏற்றிச்செல்லப்படும் சாமான்கள் அல்லது பிரயாணிகளின் மீதுள்ள எல்லா வரிகள் ;

(ஈ) ரயில் பிரயாணக் கட்டணங்கள், கேவுகள் இவற்றின் மீது வரிகள் ;

(உ) பங்கு மார்க்கெட்டு, வாய்தா மார்க்கெட்டு இவைகளில் நடக்கும் வியாபாரங்களின் மீது முத்திரைத் தீர்வைகளைத் தவிர மற்றைய வரிகள் ;

(ஊ) சமாசாரப் பத்திரிகைகளை விற்றல் அல்லது வாங்குதல், அவற்றில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் இவற்றைப் பற்றிய வரிகள்.

[1][(எ) சமாச்சாரப் பத்திரிகைகள் நீங்கலாகப் பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல் ராஜ்யங்களிடையே வியாபாரம் அல்லது வர்த்தகம் நடைபெறுகையில் நிகழ்ந்தால் அப்படி விற்றல் அல்லது வாங்குதல் பற்றிய வரிகள்].

(2) ஒரு நிதிவருஷத்தில் அத்தகைய தீர்வை அல்லது வரியிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயானது, அது [2][யூனியன் ஆட்சிப் பரப்புக்களிலிருந்து] கிடைத்ததாகக் கொள்ளத்தகும் வருவாயைக் குறிப்பிடும் அளவுக்கன்றி, இந்தியாவின் சஞ்சித நிதியில் சேராது ; ஆனால் அத்தகைய தீர்வை அல்லது வரி அவ்வருஷத்தில் எந்த ராஜ்யங்களுக்குள் விதிக்கப்படலாகுமோ அவற்றிற்கே அளிக்கப்படவேண்டும் ; மேலும் பார்லிமெண்டு சட்டத்தினால் வகைப்படுத்தும் பங்கீட்டுக் கோட்பாடுகளின்படி அவை அந்த ராஜ்யங்களினிடையே பிரித்துக் கொடுக்கப்படவேண்டும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஆறும் திருத்தச்) சட்டத்தின் 5-வது பிரிவால் இடைச்சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] 1956-ம் வருஷத்தி அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிட்ட ராஜ்யங்களிலிருந்து" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 268-270.

[1][(3) ராஜ்யங்களிடையே வியாபாரம் அல்லது வர்த்தகம் நடைபெறுகையில் பண்டங்களின் விற்றல் அல்லது வாங்குதல் எப்போது நிகழ்கிறதென்பதை நிர்ணயிப்பதற்காகப் பார்லிமெண்டு சட்டத்தினுல் கோட்பாடுகளை வகுக்கலாம்.

யூனியனுல் விதித்து வசூலிக்கப்பட்டு, யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் வரிகள்.

270. (1) விவசாய வருமானம் அல்லாத மற்றைய வருமானத்தின் மீது வரிகள் இந்தியச் சர்க்காரால் விதித்து வசூலிக்கப்படவேண்டும்; அவை (2)-ம் பகுதியில் ஏற்பாடு செய்துள்ள விதமாக யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே பிரித்துக் கொடுக்கப்படவேண்டும்.

(2) அத்தகைய வரியிலிருந்து ஒரு நிதி வருஷத்தில் கிடைக்கும் நிகர வருவாய் [2][யூனியன் ஆட்சிப் பரப்புக்களிலிருந்தோ] யூனியனின் ஊதியங்கள் சம்பந்தமாய்ச் செலுத்த வேண்டிய வரிகளிலிருந்தோ கிடைத்ததாகக் கொள்ளத்தகும் வருவாயைக் குறிப்பிடும் அளவுக்கன்றி, அந்த நிகர வருவாயில் நிர்ணயிக்கப்படும் சதவீதமானது இந்தியாவின் சஞ்சித நிதியில் சேராது; ஆனுல் அச் சதவீதம், அவ் வரி அந்த வருஷத்தில் எந்த ராஜ்யங்களுக்குள் விதிக்கப்படுகிறதோ அந்த ராஜ்யங்களுக்கே அளிக்கப்படவேண்டும்; மேலும், அது அந்த ராஜ்யங்களின் இடையே, வகுக்கப்படும் விதத்திலும் காலத்திலிருந்தும், பிரித்துக் கொடுக்கப்படவேண்டும்.

(3) (2)-ம் பகுதியைப் பொறுத்தவரை ஒவ்வொரு நிதி வருஷத்திலும் யூனியனின் ஊதியங்கள் சம்பந்தமாய்ச் செலுத்த வேண்டிய வரிகளிலிருந்து கிடைக்கும் நிகர வருவாய் நீங்கலாக உள்ள வருமான வரிகளிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயில் வகுக்கப்படும் சதவீதமானது [2][யூனியன் ஆட்சிப் பரப்புக்களிலிருந்து] கிடைத்ததாகக் கொள்ளத்தகும் வருவாயைக் குறிப்பதாகக் கருதப்படவேண்டும்.

(4) இப் பிரிவில்—

(அ) "வருமான வரிகள்" என்பதில் கார்ப்பொரேஷன் வரி அடங்காது;

(ஆ) "வகுக்கப்படும்" என்பது—

(i) நிதிக் கமிஷன் அமைக்கப்படும் வரை, ராஷ்டிரபதியின் உத்தரவினுல் வகுக்கப்படும் என்றும்,

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஆறும் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவால் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிட்ட ராஜ்யங்களிலிருந்தோ" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[3] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் "முதலாவது தபசிலின் (இ) பாகத்தில் குறிப்பிட்ட ராஜ்யங்களிலிருந்து" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

(ii) நிதிக் கமிஷன் அமைக்கப்பட்ட பிறகு, அதன் சிபார்சுகளைக் கவனித்தாராய்ந்த பிறகு ராஷ்டிரபதியின் உத்தரவினால் வகுக்கப்படும் என்றும்

பொருள்படும் ;

(இ) "யூனியனின் ஊதியங்கள்" என்பதில் இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டியனவும் வருமான வரிக்கு உட்பட்டனவுமான சகல ஊதியங்களும் பென்ஷன்களும்

அடங்கும்.

யூனியன் விஷயங்களுக்காக தீர்வைகளுக்கும் வரிகளுக்கும் மேல்-வரி.

271. 269-வது, 270-வது பிரிவுகளில் எவ்வாறு இருப்பினும், யூனியன் விஷயங்களுக்காக அப் பிரிவுகளில் குறிப்பிட்ட தீர்வைகளில் அல்லது வரிகளில் எதையேனும் பார்லிமெண்டு மேல்-வரி மூலமாக எச் சமயத்திலும் அதிகப்படுத்தலாம் ; அத்தகைய மேல்-வரியிலிருந்து கிடைக்கும் வருவாய் முழுவதும் இந்தியாவின் சஞ்சித நிதியின் பாகமாகும்.

யூனியனால் விதித்து வசூலிக்கப்படுபவையும் யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படக்கூடியவையுமான வரிகள்.

272. யூனியன் ஜாபிதாவில் கூறப்பட்டிருக்கும் மருந்துப் பொருள்கள், வண்ணநறும் பொருள்கள் இவற்றின்மீது விதிக்கப்படும் கலால் தீர்வைகளைத் தவிர மற்றைய யூனியன் கலால் தீர்வைகள் இந்தியச் சர்க்காரால் விதித்து வசூலிக்கப்பட வேண்டும் ; ஆனால், பார்லிமெண்டு சட்டத்தினால் ஏற்பாடு செய்தால், அத் தீர்வையை விதிக்கும் சட்டம் எந்த ராஜ்யங்களுக்குப் பிரயோகப்படுகிறதோ அந்த ராஜ்யங்களுக்கு, அத் தீர்வையின் நிகர வருவாய் முழுவதற்குமோ அல்லது அதன் ஒரு பாகத்திற்கோ நிகரான தொகைகள் இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும் ; மேலும், அத்தகைய சட்டத்தால் வகைப்படுத்தப்பட்ட பங்கீட்டுக் கோட்பாடுகளின்படி அந்த ராஜ்யங்களினிடையே அத் தொகைகள் பிரித்துக் கொடுக்கப்படவேண்டும்.

சணல், சணற் பொருள்கள் இவற்றின்மீது ஏற்றுமதித் தீர்வைக்குப் பதிலாக நன்கொடைகள்.

[1]273. (1) அஸ்ஸாம், பீகார், ஓரிஸ்ஸா, மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்களுக்குச் சணல், சணற் பொருள்கள் இவற்றின்மீது விதிக்கப்படும் ஏற்றுமதித் தீர்வையிலிருந்து ஒவ்வொரு வருஷத்திலும் கிடைக்கும் நிகர வருவாயில் ஒரு பங்கு கொடுப்பதற்குப் பதிலாக, அந்த ராஜ்யங்களின் அரசிறைகளுக்குச் சகாய நன்கொடைகளாக வகுக்கப்படும் தொகைகள் ஒவ்வொரு வருஷத்திலும் இந்தியாவின் சஞ்சித நிதியின்மீது சாட்டப்படவேண்டும்.

(2) அப்படி வகுக்கப்படும் தொகைகள், இந்தியச் சர்க்கார் சணல் அல்லது சணற் பொருள்களின்மீது ஏற்றுமதித் தீர்வை ஒன்று தொடர்ச்சியாக விதித்துவரும் காலம் அல்லது இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்து வருஷம் முடிவடையும் காலம் இவற்றில் எது முந்துகிறதோ அது வரையில், இந்தியாவின் சஞ்சித நிதியின்மீது தொடர்ந்து சாட்டப்பட்டு வரவேண்டும்.

(3) இப் பிரிவில், "வகுக்கப்படும்" என்னும் பதம் 270-வது பிரிவில் சொல்லப்பட்ட பொருளையே உடையதாகும்.

[1] 273-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 27 .—275.

ராஜ்யங்களுக்குச் சம்பந்தமுள்ள வரி விதிப்பைப் பொறுத்த மசோதாக்களுக்கு ராஷ்டிரபதியின் முன் சிபார்சு வேண்டும்.

274. (1) ராஜ்யங்களுக்குச் சம்பந்தமுள்ள ஒருவரியையோ தீர்வையையோ விதித்தல் அல்லது மாற்றுதல், அல்லது இந்திய வருமான வரி சம்பந்தமான சட்டங்களின் பொருட்டு "விவாசய வருமானம்" என்னும் பதத்திற்கு வரையறை செய்த பொருளை மாற்றுதல், அல்லது இந்த அத்தியாயத்தில் முன் சொல்லிய ஷரத்துக்களில் எதன்கீழும் ராஜ்யங்களுக்குப் பணங்களைப் பிரித்துக் கொடுக்கும் அல்லது பிரித்துக்கொடுக்கலாம் கோட்பாடுகளைப் பாதித்தல் அல்லது யூனியன் விஷயங்களுக்காக இந்த அத்தியாயத்தின் முன் சொல்லிய ஷரத்துக்களில் கூறப்பட்ட எத்தகைய மேல்வரியையும் விதித்தல். இவை பற்றிய எந்த மசோதாவையும் அல்லது திருத்தத்தையும் ராஷ்டிரபதியின் சிபார்சின்பேரிலன்றி பார்லிமெண்டுச் சபை எதிலும் கொணரவாவது பிரேரேபிக்கவாவது கூடாது.

(2) இப் பிரிவில் "ராஜ்யங்களுக்குச் சம்பந்தமுள்ள ஒரு வரி அல்லது தீர்வை" என்னும் பதம்—

(அ) ஒரு வரி அல்லது தீர்வையின் நிகர வருவாய் முழுவதுமாவது அல்லது அதன் ஒரு பாகமாவது ஒரு ராஜ்யத்திற்கு அளிக்கப்பட்டால் அந்த வரி அல்லது தீர்வை ; அல்லது

(ஆ) ஒரு வரி அல்லது தீர்வையின் நிகர வருவாயை அனுசரித்து இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து ஒரு ராஜ்யத்திற்கு அக்காலத்தில் தொகைகள் கொடுத்த வேண்டியிருந்தால் அந்த வரி அல்லது தீர்வை

என்று பொருள்படும்.

யூனியனிலிருந்து ராஜ்யங்களுக்கு நன்கொடைகள்.

275. (1) எந்த ராஜ்யங்களுக்கு உதவியளித்தல் அவசியம் என்று பார்லிமெண்டு நிர்ணயிக்கிறதோ அந்த ராஜ்யங்களின் அரசிறைகளுக்குச் சகாய நன்கொடைகளாகப் பார்லிமெண்டு சட்டத்திலுல் வித்தித்த தொகைகள் ஒவ்வொரு வருஷத்திலும் இந்தியாவின் சஞ்சித நிதியின்மீது சாட்டப்படவேண்டும் ; வெவ்வேறு ராஜ்யங்களுக்கு வெவ்வேறு தொகைகள் நிர்ணயிக்கப்படலாம் :

எனினும், ஒரு ராஜ்யத்திலுள்ள அனுபந்த மலை ஜாதியார்களின் நலத்தைப் பேணி வளர்க்கும் பொருட்டோ அல்லது அந்த ராஜ்யத்திலுள்ள அனுபந்தப் பிரதேசங்களின் பரிபாலனத் தரத்தை அந்த ராஜ்யத்தின் மற்றையப் பாகத்தின் பரிபாலனத் தரத்தின் அளவிற்கு உயர்த்தும் பொருட்டோ இந்திய சர்க்காரின் அங்கீகாரத்துடன் அந்த ராஜ்யம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவுகளை அந்த ராஜ்யம் செய்வதற்கு இயலும் வண்ணம் அவசியமான மூலதனத் தொகைகளும், மடக்குத் தொகைகளும், அந்த ராஜ்யத்தின் அரசிறைகளுக்குச் சகாய நன்கொடைகளாக, இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும் :

அன்றியும், இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து அஸ்ஸாம் ராஜ்யத்தின் அரசிறைகளுக்குச் சகாய நன்கொடைகளாக—

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்— பிரிவுகள் 275-276.

(அ) ஆறுவது தபசிலின் 20-ம் பாராவுடன் இணைக்கப்பட்ட அட்டவணையின் (அ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட மலைஜாதியினரின் பிரதேசங்களின், நிர்வாக விஷயமாக இந்த அரசியல்அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முந்திய இரண்டு வருஷ காலம் அரசிறைகளுக்கு மேற்பட்ட செலவின் சராசரிக்கும்,

(ஆ) மேற்சொல்லிய பிரதேசங்களின் பரிபாலனத் தரத்தை அந்த ராஜ்யத்தின் மற்றையப் பிரதேசங்களின் பரிபாலனத் தரத்தின் அளவிற்கு உயர்த்தும் பொருட்டு, இந்தியச் சர்க்காரின், அங்கீகாரத்துடன் அந்த ராஜ்யம் மேற்கொள்ளும் அபிவிருத்தி திட்டங்களுக்கான செலவுகளுக்கும்

நிகரான மூலதனத் தொகைகளும், மடக்குத் தொகைகளும் கொடுக்கப்படவேண்டும்.

(2) (1)-ம் பகுதியின்கீழ்ப் பார்லிமெண்டு ஏற்பாடு செய்யும்வரை அப் பகுதியின்கீழ் பார்லிமெண்டுக்கு அளிக்கப்பட்ட சக்திகளை ராஷ்டிரபதி தமது உத்தரவினால் செலுத்தலாம்; மேலும் இப் பகுதியின்கீழ் ராஷ்டிரபதியால் செய்யப்பட்ட எந்த உத்தரவும் பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஏறபாட்டிற்கு உட்பட்டே பிரயோகப்படும்:

எனினும், நிதிக் கமிஷன் அமைக்கப்பட்ட பிறகு அதன் சிபார்சுகளை கவனித்தாராய்ந்த பிறகன்றி இப் பகுதியின்கீழ் ராஷ்டிரபதி எந்த உத்தரவையும் செய்யலாகாது.

தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள் மீது வரிகள்.

276. (1) 246-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள் அல்லது வேலைகள் சம்பந்தமாக ஒரு ராஜ்யத்தின் பொருட்டோ அல்லது அதிலுள்ள ஒரு முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, ஸ்தல ஸ்தாபனம் அல்லது மற்றைய ஸ்தல அதிகார நிலையம் இவற்றின் பொருட்டோ விதித்த வரிகள் விஷயமான அந்த ராஜ்யச் சட்டமன்றத்தின் சட்டம் எதுவும் அது வருமான வரியைப் பற்றியது என்னும் காரணத்தால் செல்லுபடியற்றதாகாது.

(2) அந்த ராஜ்யத்திற்காவது அந்த ராஜ்யத்திலுள்ள யாதொரு முனிசிபாலிடி, ஜில்லா போர்டு, ஸ்தல ஸ்தாபனம் அல்லது மற்ற ஸ்தல அதிகார நிலையத்திற்காவது தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள் இவற்றின் மீதுள்ள வரிகளின்பொருட்டு யாராகிலும் ஒருவர் சம்பந்தமாகச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை வருஷம் ஒன்றுக்கு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படலாகாது:

எனினும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முந்திய நிதி வருஷத்தில் ஏதேனும் ஒரு ராஜ்யத்திலாவது அல்லது அத்தகைய ஒரு முனிசிபாலிட்டி, போர்டு, ஸ்தாபனம் அல்லது அதிகார நிலையத்திலாவது தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள் அல்லது வேலைகள் இவற்றின் மீது ஒரு வரி அமுலிலிருந்து அதனுடைய வீதமோ, அல்லது உச்ச வீதமோ, வருஷம் ஒன்றுக்கு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படுமானால், பார்லிமெண்டு சட்டத்தினால் அதற்கு மாறுக ஏற்பாடு செய்யும்வரை, அவ் வரியைத்

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 276—279.

தொடர்ந்து விதித்து வரலாம்; அப்படிப் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம் பொதுவாகவேனும், அல்லது குறிப்பிட்ட ராஜ்யங்கள், முனிசிபாலிட்டிகள், ஸ்தாபனங்கள் அல்லது அதிகார நிலையங்களைப் பற்றியேனும் செய்யப்படலாம்.

(3) மேற்சொன்னபடி தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள் இவற்றின்மீது விதிக்கப்படும் வரிகள் சம்பந்தமாகச் சட்டங்கள் செய்வதற்கு ஒரு ராஜ்யச் சட்ட மன்றத்திற்கு உள்ள சக்தி, தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள் இவற்றிலிருந்து விளையும் அல்லது எழும் வருமானத்தின்மீது விதிக்கலான வரிகள்சம்பந்தமாகச் சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்குள்ள சக்தியை எவ்வாற்றானும் கட்டுப்படுத்துவதாக அர்த்த விளக்கம் செய்யலாகாது.

[1]277. இந்த அரசியல் அமைப்பில், தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக ஒரு ராஜ்யத்தின் சர்க்கார், அல்லது ஒரு முனிசிபாலிடி, அல்லது மற்றைய ஸ்தல அதிகார நிலையம், அல்லது ஸ்தாபனம் இவற்றுல் அந்தராஜ்யம், முனிசிபாலிட்டி, ஜில்லா அல்லது மற்றைய ஸ்தலப்பரப்பு இவற்றின் பொருட்டுச் சட்டபூர்வமாக விதிக்கப்பட்டுவரும் வரிகள், தீர்வைகள், இறைகள் அல்லது பீசுகள்—அவ் வரிகள், தீர்வைகள், இறைகள் அல்லது பீசுகள் யூனியன் ஜாபிதாவில் கூறப்பட்டிருந்த போதிலும் பார்லிமெண்டு சட்டத்தினுல் இதற்கு மாறுன ஏற்பாடு செய்யும் வரை அதே விஷயங்களுக்காகத் தொடர்ச்சியாக விதிக்கப்பட்டும், உபயோகிக்கப்பட்டும் வரவேண்டும். நிவாரணங்கள்.

278. [நிதி விஷயங்கள் சம்பந்தமாக முதலாவது, தபசிலின் (ஆ) பாகத்தில் கண்ட ராஜ்யங்களுடன் கருர்நாமா. 1959-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் ரத்து செய்யப்பட்டது.

279. (1) இந்த அத்தியாயத்தின் மேற்கூறிய ஷரத்துக்களில், "நிகர வருவாய்" என்பது ஒரு வரி அல்லது தீர்வை சம்பந்தமான இடங்களில் அதன் வசூல் செலவைக் குறைத்த பிறகு எஞ்சியுள்ள வருவாய் என்று பொருள்படும்; மேலும், அந்த ஷரத்துக்களின் பொருட்டு ஒரு பிரதேசத்திலிருந்து வந்ததும் அல்லது வந்ததாகக் கொள்ளலாவதும் ஆன ஒரு வரி அல்லது தீர்வை அல்லது ஒரு வரியின் அல்லது தீர்வையின் பாகம் இவற்றின் நிகர வருவாய் இன்னதென்பதை இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் கண்டறிந்து சரி யாப்பம் செய்யவேண்டும்; அவருடைய சரியொப்பமே முடிவானதாகும். "நிகர வருவாய்" வகையராவைக் கணக்கிடுதல்.

(2) மேற்கூறியவைகளுக்கும் இந்த அத்தியாயத்தில் வெளிப்படையாகக் கூறிய மற்றெந்த ஷரத்திற்கும் உட்பட்டு பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டமானது அல்லது ராஷ்டிரபதியின் உத்தரவானது, ஒரு தீர்வை அல்லது வரியிலிருந்து

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில் அரசியல் அமைப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் இடங்களில், அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படுவது) பற்றிய 1954-ம் வருஷத்திய உத்தரவை அதாவது 1954-ம் வருஷம் மே மாதம் 14-ம் தேதியைக் குறிக்கும் இடங்கள் எனறு அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்— பிரிவுகள் 279—281.

கிடைக்கும் வருவாய் இப் பாகத்தின்கீழ் ஒரு ராஜ்யத்திற்கு அளிக்கப்படும் அல்லது அளிக்கப்படக்கூடிய விஷயத்தில், அவ் வருவாயைக் கணக்கிடவேண்டிய விதத்தைப் பற்றியும், இன்ன தொகைகளை, இன்ன காலத்திலிருந்து, அல்லது இன்ன காலத்தில், இன்ன விதமாகச் செலுத்தவேண்டும் என்பதைப் பற்றியும், ஒரு நிதிவருஷத்திற்கும் மற்றொன்றுக்கும் இடையில் சரிப்பாடுகள் செய்தல் பற்றியும், சார்பாக அல்லது துணையாக உள்ள மற்றெந்த விஷயங்களைப் பற்றியும் ஏற்பாடு செய்யலாம்.

நிதிக் கமிஷன்.

280. (1) ராஷ்டிரபதியின் உத்தரவினால் நியமிக்கப்பட்ட அக்கிராசனர் ஒருவரும் மற்றைய நான்கு அங்கத்தினர்களும் கொண்ட நிதிக் கமிஷன் ஒன்றை இந்த அரசியல்அமைப்பின் தொடக்கத்திலிருந்து இரண்டு வருஷத்திற்குள்ளும், அதற்குப் பிறகு ஒவ்வோர் ஐந்து வருஷம் முடிவடைந்த பிறகும் அல்லது தாம் அவசியமெனக்கருதும் அதற்கு முந்திய எக்காலத்திலும் ராஷ்டிரபதி அமைக்கலாம்.

(2) அக் கமிஷனின் அங்கத்தினர்களாக நியமிக்கப்படுவதற்கு அவசியமான தகுதிகளையும் அவர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டிய முறையையும் பார்லிமெண்டு சட்டத்தினால் நிர்ணயிக்கலாம்.

(3) அடியிற்கண்டவைகளைக் குறித்து ராஷ்டிரபதிக்குச் சிபார்சுகள் செய்தல் அக் கமிஷனின் கடமையாகும் :—

(அ) இந்த அத்தியாயத்தின் கீழ் யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே பிரித்துக்கொடுக்கப்பட வேண்டிய அல்லது பிரித்துக்கொடுக்கப்படலாகும் வரிகளின் நிகர வருவாயை அவைகளுக்குப் பங்கீடுசெய்தலும் அத்தகைய வருவாயை முறையே அந்த ராஜ்யங்களுக்கிடையே பங்கு பிரித்துக் கொடுத்தலும் ;

(ஆ) இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து ராஜ்யங்களின் அரசிறைகளுக்குச் சகாய நன்கொடைகள் அளிக்கும் விஷயத்தில் பின்பற்றவேண்டிய கோட்பாடுகள் ;

[1] * * * * * * * * * * * * * *

[2] [(இ)] சீரான நிதி நிலையின் பொருட்டு ராஷ்டிரபதியால் கமிஷனின் ஆலோசனைக்கு அனுப்பப்படும் வேறெந்த விஷயமும்.

(4) அக் கமிஷன் தமது நடைமுறையை நிர்ணயிக்க வேண்டும் ; மேலும் தம்முடைய அலுவல்களைச் செய்கையில் பார்லிமெண்டு சட்டத்தினால் தமக்கு அளிக்கும் சக்திகளை உடையனவாயிருக்கும்.

நிதிக் கமிஷனின் சிபாரிசுகள்.

281. ராஷ்டிரபதி இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களின்கீழ் நிதிக் கமிஷனால் செய்யப்பட்ட சிபார்சு ஒவ்வொன்றையும், அது பற்றி எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையை விளக்கும் ஒரு யாதாஸ்துடன், பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னரும் சமர்ப்பிக்கும்படி செய்யவேண்டும்.

---

[1] (இ) உட்பகுதி 1956-ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[2] (ஈ) உட்பகுதி (இ) உட்பகுதியென மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் மீண்டும் இலக்கமிடப்பட்டது.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 282—283.

நாஞ்விதி ஷரத்துக்கள்.

யூனியனது ஒரு ராஜ்யமாவது தனது அரசிறைகளிலிருந்து செய்யத்தக்க செலவுகள்.

[1] 282. ஒரு பொதுக்காரியம் பார்லிமெண்டோ அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யத்தின் சட்டமன்றமோ சட்டங்கள் செய்யக்கூடியதாயில்லாவிட்டாலும், யூனியன் அல்லது ஒரு ராஜ்யம் அதன் பொருட்டு நன்கொடைகள் அளிக்கலாம்.

சஞ்சித நிதிகள், எதிர்பாராச் செலவு நிதிகள், பொதுக் கணக்குகளில் வரவு வைக்கப் பட்டணங்கள் இவற்றின் பாதுகாப்பு வகையரா.

283. (1) இந்தியாவின் சஞ்சித நிதி, இந்தியாவின் எதிர்பாராச் செலவு நிதி இவற்றின் பாதுகாப்பும், இவைகளில் பணங்கள் செலுத்துதலும், இவைகளிலிருந்து பணங்களை எடுத்தலும், இந்தியச் சர்க்காரால் அல்லது அவர்கள் சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்டு இந்த நிதிகளில் வரவு வைக்கப்பட்டவை தவிர மற்றையப் பொதுப் பணங்களின் பாதுகாப்பும் இந்தியாவின் பொதுக் கணக்கில் அவற்றைச் செலுத்துதலும், அக்கணக்கிலிருந்து பணங்களை எடுத்தலும், மேற்சொன்ன விஷயங்களுக்குச் சம்பந்தமான அல்லது துணையாக உள்ள மற்றெல்லா விஷயங்களும் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தினால் முறைப்படுத்தப்படவேண்டும்; அதற்கென அப்படி ஏற்பாடு செய்யும்வரை, ராஷ்டிரபதியால் செய்யப்பட்ட விதிகளினால் முறைப்படுத்தப்படவேண்டும்.

[2] (2) ஒரு ராஜ்யத்தின் சஞ்சித நிதி, ஒரு ராஜ்யத்தின் எதிர்பாராச் செலவு நிதி இவற்றின் பாதுகாப்பும், இவைகளில் பணங்கள் செலுத்துதலும், இவைகளிலிருந்து பணங்களை எடுத்தலும், அந்த ராஜ்யச் சர்க்காரால் அல்லது அவர்கள் சார்பில் பெற்றுக் கொள்ளப்பட்டு இந்த நிதிகளில் வரவு வைக்கப்பட்டவை தவிர மற்றையப் பொதுப் பணங்களின் பாதுகாப்பும் அந்த ராஜ்யத்தின் பொதுக்கணக்கில் அவற்றைச் செலுத்துதலும், அக் கணக்கிலிருந்து பணங்களை எடுத்தலும், மேற்சொன்ன விஷயங்களுக்குச் சம்பந்தமான அல்லது துணையாக உள்ள மற்றெல்லா விஷயங்களும் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தினால் முறைப்படுத்தப்பட வேண்டும்; அதற்கென அப்படி ஏற்பாடு செய்யும்வரை, அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாவரால் [3] * * * * செய்யப்பட்ட விதிகளினால் முறைப்படுத்தப்படவேண்டும்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், "ராஜ்யத்தைக்" குறிக்கும் இடங்களில், ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் என்று விர்த்த அளக்கம் செய்யக்கூடாது.

[2] இப் பகுதி ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[3] "அல்லது ராஜப்பிரமுகரால்" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவினாலும் தபிலாலும் விட்டு விடப்பட்டன.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்— பிரிவுகள் 284—286.

கட்சிக் காரரின் டிபாசிட்டுகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாலும் நீதிமன்றங்களாலும் பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றையப் பணங்கள் இவற்றின் பாதுகாப்பு.

[1] 284. இந்தியாவின் பொதுக் கணக்கில் அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஒரு ராஜ்யத்தின் பொதுக்கணக்கில்—

(அ) இந்தியச் சர்க்காரால் அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யத்தின் சர்க்காரால், திரட்டப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட அரசிறைகள் அல்லது பொதுப் பணங்கள் தவிர, யூனியனின் அல்லது அந்த ராஜ்யத்தின் அலுவல்கள் சம்பந்தமாய் வேலை பார்த்துவரும் ஓர் உத்தியோகஸ்தரால் உத்தியோக ஹோதாவில் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது அவரிடம் ஒப்படைக்கப்பட்ட சகல பணங்களும்,

(ஆ) ஒரு வியாஜ்யம், விஷயம், கணக்கு இவற்றுள் ஒன்றின் வரவில் அல்லது நபர்களின் வரவில் இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள்ளிருக்கும் ஒரு நீதிமன்றத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அதனிடம் ஒப்படைக்கப்பட்ட சகல பணங்களும் செலுத்தப்பட வேண்டும்.

யூனியனின் சொத்திற்கு ராஜ்ய வரி விதிப்பினின்றும் விலக்கு.

285. (1) பார்லிமெண்டு சட்டத்தினால் வேறுவிதமாய் ஏற்பாடு செய்யும் அளவுக்கன்றி, யூனியன் சொத்து, ஒரு ராஜ்யத்தினால் அல்லது ஒரு ராஜ்யத்திலுள்ள ஓர் அதிகாரியினால் விதிக்கப்படும் சகல வரிகளினின்றும் விலக்குப் பெற்றதாயிருக்கும்.

(2) பார்லிமெண்டு சட்டத்தினால் வேறுவிதமாய் ஏற்பாடு செய்யும்வரை, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக, யூனியன் சொத்து எதுவும் எவ்வரிக்கும் உட்பட்டோ அல்லது உட்பட்டதாகக் கருதப்பட்டோ இருந்தால், அவ்வரி அந்த ராஜ்யத்தில் தொடர்ச்சியாக விதிக்கப்பட்டுவரும் காலத்தில், அதை அந்த ராஜ்யத்திலுள்ள அதிகாரி விதிப்பதற்கு (1)-ம் பகுதியில் உள்ளது எதுவும் தடை செய்யாது.

பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின் பேரில் வரி விதித்தல் பற்றிய வரையறைகள்.

286. (1) பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல்—

(அ) ஒரு ராஜ்யத்திற்கு வெளியே, அல்லது

(ஆ) இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்கு உள்ளே அல்லது வெளியே பண்டங்களை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்கையில்

நடைபெற்றால், அவ்வாறு பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின் பேரில் ஒரு வரியை அந்த ராஜ்யத்தின் எந்தச் சட்டமும் விதிக்கவோ, விதிக்க அதிகாரம் கொடுக்கவோ கூடாது.

[2] * * * * * * * * *

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், (ராஜ்யத்தை)க் குறிக்கும் இடங்களில் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்யக்கூடாது.

[2] (1)-ம் பகுதியின் விளக்கம் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஆறும் திருத்தச்) சட்டத்தின் 4-வது பிரிவினால் விட்டு விடப்பட்டது.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்— பிரிவுகள் 286—283.

[1][(2). (1)-ம் பகுதியில் சொல்லப்பட்ட எவ்விதத் திலேனும் பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல் எப்போது நிகழ்கிறதென்பதை நிர்ணயிப்பதற்காகப் பார்லிமெண்டு சட்டத்தினால் கோட்பாடுகளை வகுக்கலாம்.

(3) ராஜ்யங்களிடையே வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தவையெனப் பார்லிமெண்டு சட்டத்தினால் அறிவித்த பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதலின் பேரில் வரி விதிக்கிற அல்லது அவ்வாறு விதிக்க அதிகாரம் கொடுக்கிற அளவுக்கு ஒரு ராஜ்யச் சட்டம் வரிவிதிப்பு முறை, வீதங்கள், அதைச் சார்ந்துள்ளவை பிற இவைப்பற்றி பார்லிமெண்டு சட்டத்தினால் குறிப்பிடக்கூடிய கட்டுப்பாடுகளுக்கும் ஷரத்துக்களுக்கும் உட்பட்டதாகும்.

287. பார்லிமெண்டு சட்டத்தினால் வேறு விதமாக ஏற்பாடு செய்யும் அளவுக்கன்றி, (ஒரு சர்க்காரால் அல்லது மற்றவர்களால் உற்பத்தி செய்யப்படும்) மின்சாரம்— *மின்சாரத்தின் மீதுள்ள வரிகளினின்றும் விலக்கு.*

(அ) இந்தியச் சர்க்காரால் உபயோகிக்கப்பட்டாலும் அல்லது இந்தியச் சர்க்காரின் உபயோகத்திற்காக அச் சர்க்காருக்கு விற்கப்பட்டாலும், அல்லது

(ஆ) ஒரு ரெயில்வேயை அமைத்தல், பராமரித்தல் அல்லது நடத்திவருதல் இவற்றில் இந்தியச் சர்க்காரால் அல்லது அந்த ரெயில்வேயை நடத்திவரும் ஒரு ரெயில்வே கம்பனியால் உபயோகிக்கப்பட்டாலும், அல்லது ஒரு ரெயில்வேயை அமைத்தல், பராமரித்தல் அல்லது நடத்திவருதல் இவற்றில் உபயோகிக்கப்படுவதற்காக அச் சர்க்காருக்கு அல்லது அத்தகைய ரெயில்வேக் கம்பெனிக்கு விற்கப்பட்டாலும்,

அம்மின்சாரத்தின் உபயோகம் அல்லது விற்பனையின்மீது ராஜ்யத்தின் சட்டம் எதுவும் வரி விதிக்கவோ விதிக்க அதிகாரம் கொடுக்கவோ கூடாது; மேலும் மின்சார விற்பனையின்மீது வரியை விதிக்கும் அல்லது அவ்வாறு விதிக்க அதிகாரம் கொடுக்கும் அத்தகைய சட்டமானது, இந்தியச் சர்க்காரின் உபயோகத்திற்காக அச் சர்க்காருக்காவது அல்லது ஒரு ரெயில்வேயை அமைத்தல், பராமரித்தல் அல்லது நடத்திவருவதல் இவற்றில் உபயோகிக்கப்படுவதற்காக மேற்சொன்ன எந்த ரெயில்வேக் கம்பெனிக்காவது விற்கப்பட்ட மின்சாரத்தின் விலை, மிக அதிகமாக மின்சாரத்தை உபயோகிக்கும் மற்றவர்களுக்கு விதிக்கப்படும் விலையினும் மேற்படி வரித்தொகையின் அளவாகக் குறைந்திருக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

288. (1) ராஷ்டிரபதி உத்தரவினால் வேறு விதமாக ஏற்பாடு செய்யும் அளவுக்கன்றி, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக ஒரு ராஜ்யத்தில் அமுலிலிருந்த சட்டம் எதுவும் பல ராஜ்யங்களிலுள்ள ஓர் ஆற்றையாவது அல்லது ஆற்றுப் பள்ளத்தாக்கையாவது முறைப்படுத்தவோ அல்லது அபிவிருத்தி செய்யவோ ஏற்கனவேயுள்ள ஒரு சட்டத்தினால் அல்லது பார்லிமெண்டு செய்த ஒரு சட்டத்தினால் நிறுவப்பட்ட ஓர் அதிகார நிலையத்தால் *குறிப்பிட்ட விஷயங்களில் தண்ணீர் அல்லது மின்சாரம் சம்பந்தமாக ராஜ்யங்களின் வரி விதிப்பினின்றும் விலக்கு.*

[1](1)-ம் பகுதியை விளக்கும் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஆறும் திருத்தம்) சட்டத்தின் 4-வது (பிரிவால் (2)-ம் (3)-ம் அசல் பகுதிகளுக்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டன.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 283—290.

சேகரித்து வைக்கப்படும், உற்பத்தி செய்யப்படும், உபயோகிக்கப்படும், வழங்கப்படும் அல்லது விற்கப்படும் தண்ணீர் அல்லது மின்சாரம் விஷயமாய் வரி ஒன்றை விதிக்கவோ விதிக்க அதிகாரம் கொடுக்கவோ கூடாது.

விளக்கம்.—இப் பகுதியில் " ஒரு ராஜ்யத்தில் அமுலிலிருந்த சட்டம் " என்னும் பதத்தில் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன்னதாக நிறைவேற்றப்பட்டு அல்லது செய்யப்பட்டு, முந்தியே ரத்துச் செய்யப்பட்டிராத ஒரு ராஜ்யத்தின் சட்டம்—அது அல்லது அதன் பாகங்கள் அக் காலத்தில் எல்லாப் பிரதேசங்களிலும் அல்லது குறிப்பிட்ட பிரதேசங்களில் அமுலிலிராதபோதிலும்—அடங்கும்.

(2) ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றம் (1)-ம் பகுதியில் கூறியதைப் போன்ற ஒரு வரியைச் சட்டத்தினால் விதிக்கலாம் அல்லது விதிக்க அதிகாரம் கொடுக்கலாம்; ஆனால், அத்தகைய ஒரு சட்டம், ராஷ்டிரபதியின் ஆலோசனைக்காக என்று ஒதுக்கிவைத்த பிறகு, அவருடைய சம்மதம் பெற்றிருந்தாலன்றிப் பயனுள்ளதாகாது; மேலும், அத்தகைய சட்டத்தில் ஓர் அதிகார நிலையத்தால் அச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட வேண்டிய விதிகளின் அல்லது உத்தரவுகளின் மூலமாக அத்தகைய வரியின் வீதங்களும் அதைச் சார்ந்துள்ளவை பிறவும் நிச்சயிக்கப்படுவதற்காக ஏற்பாடு செய்திருந்தால் அப்படிப்பட்ட ஒரு விதி அல்லது உத்தரவைச் செய்வதற்கு ராஷ்டிரபதியின் முற்சம்மதம் பெறுவதற்கான ஏற்பாடு அச் சட்டத்தில் செய்திருக்கவேண்டும்.

ஒரு ராஜ்யத்தின் சொத்திற்கும் வருமானத்திற்கும் யூனியனின் வரி விதிப்பினின்றும் விலக்கு.

289. (1) ஒரு ராஜ்யத்தின் சொத்தும் வருமானமும் யூனியன் வரி விதிப்பினின்றும் விலக்கப்பட்டவையாகும்.

(2) ஒரு ராஜ்யத்தின் சர்க்காரால் அல்லது அதன் சார்ப்பில் நடத்தப்படும் எவ்வித வியாபாரமும் அல்லது தொழிலும், அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எந்த நடவடிக்கைகளும் அல்லது அத்தகைய வியாபாரம் அல்லது தொழிலின் பொருட்டு உபயோகிக்கப்படும் அல்லது அனுபோகத்தில் இருந்துவரும் ஒரு சொத்து அல்லது அது சம்பந்தமாய் வீளையும் அல்லது எழும் ஒரு வருமானம் இவைகள் விஷயமாக, பார்லிமெண்டு சட்டத்தினால் ஏற்பாடு செய்யுமானால் அந்த அளவுக்கு, யூனியன் ஒரு வரியை விதிப்பதற்கோ விதிக்க அதிகாரம் கொடுப்பதற்கோ (1)-ம் பகுதியில் உள்ளது எதுவும் தடை செய்யாது.

(3) அரசாங்கத்தின் சாதாரண அலுவல்களுக்குச் சார்பானவை என்று பார்லிமெண்டு சட்டத்தினால் அறிவிக்கும் வியாபாரம் அல்லது தொழில் அல்லது ஒரு வியாபாரவகை அல்லது தொழில்வகை இவற்றிற்கு (2)-ம் பகுதியில் உள்ளது எதுவும் பிரயோகப்படமாட்டாது.

குறிப்பிட்ட செலவுகள் பென்ஷன்கள் இவை விஷயமாய் சரிப்பாடு.

[1]290. இந்த அரசியலமைப்பின் ஷரத்துக்களின்கீழ் ஒரு நீதிமன்றம் அல்லது கமிஷனின் செலவுகளாவது, அல்லது இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன் இந்தியாவின் முடியரசின் கீழாவது அத் தொடக்கத்திற்குப் பிறகு யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் காரியங்கள் சம்பந்தமாகவா

[1] 290-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

வது சேவை செய்துள்ள ஒருவருக்கு அல்லது அவர்பொருட்டுக் கொடுக்கப்படத்தக்க பென்ஷனுவது இந்தியாவின் சஞ்சித நிதியின் மீது அல்லது ஒரு ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்மீது சாட்டப்பட்டால், அப்போது—

(அ) அது இந்தியாவின் சஞ்சித நிதியின் மீது சாட்டிய பாரமாயிருந்தால், அந்நீதிமன்றம் அல்லது கமிஷன் ஒரு ராஜ்யத்தின் தனிப்பட்ட தேவைகளில் எதற்கேனும் உதவிஞல், அல்லது மேற்சொன்னவர் ராஜ்யத்தின் காரியங்கள் சம்பந்தமாக முழுவதுமோ ஓரளவோ சேவை செய்திருந்தாலும்,

(ஆ) ஒரு ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்மீது சாட்டிய பாரமாயிருந்தால், அந்த நீதிமன்றம் அல்லது கமிஷன் யூனியனின் அல்லது மற்றொரு ராஜ்யத்தின் தனிப்பட்ட தேவைகளில் எதற்கேனும் உதவினுல், அல்லது மேற்சொன்னவர் யூனியனின் அல்லது மற்றொரு ராஜ்யத்தின் காரியங்கள் சம்பந்தமாக முழுவதுமோ ஓரளவோ சேவை செய்திருந்தாலும்,

அச் செலவுகள் அல்லது பென்ஷன் விஷயமாய் ஒப்புக்கொள்ளப்படும் அல்லது ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் இந்தியாவின் பிரதம நீதிபதியால் நியமிக்கப்படும் மத்தியஸ்தர் ஒருவரால் நிர்ணயிக்கப்படும் பங்குப் பணம் அந்த ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்மீதாவது, அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, இந்தியாவின் சஞ்சித நிதியின்மீது அல்லது மற்றெந்த ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்மீதாவது சாட்டப்பட்டு அதிலிருந்து செலுத்தப்படவேண்டும்.

சில தேவஸ்வம் நிதிகளுக்கு வருஷா வருஷம் தொகை கொடுத்தல்.

[1][290. (அ) நாற்பது லக்ஷத்து ஐம்பதாயிரம் ரூபாய் கேரள ராஜ்யச் சஞ்சித நிதிக்குச் சாட்டப்பட்டு அதிலிருந்து அத்தொகை திருவாங்கூர் தேவஸ்வம் நிதிக்குக் கொடுக்கப்படவேண்டும்; திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதியன்று சென்னை ராஜ்யத்திற்கு மாற்றப்பட்ட பிரதேசங்களிலுள்ள ஹிந்து கோயில்களையும் ஆலயங்களையும் பராமரிப்பதற்காகச் சென்னை ராஜ்யத்தில் அமைக்கப்பட்டுள்ள தேவஸ்வம் நிதிக்கு பதிமூன்று லக்ஷத்து ஐம்பதாயிரம் ரூபாய் சென்னைராஜ்ய சஞ்சித நிதிக்குச் சாட்டப்பட்டு அத்தொகை அதிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

அதிபதிகளின் சொத்துச் செலவுப் பணத் தொகைகள்.

[2][291][3] * * * * இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு முன்னதாக ஓர் இந்தியச் சமஸ்தானத்தின் அதிபதியால் செய்துகொள்ளப்பட்ட ஒரு ஷரா அல்லது கரூர்நமாவின் கீழ் அந்தச் சமஸ்தானத்தின் அதிபதிக்குச் சொந்தச் செலவுச்

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 19-வது பிரிவினுல் அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] 291-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[3] "(1)" என்னும் நக வலேவுக் குறிகளும், இலக்கமும் 1956-ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழரம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் நபலிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 291-293.

பணமாக வரியின்றி எத் தொகைகளையாவது கொடுப்பதாக இந்திய டொமினியன் சர்க்கார் உத்தரவாதம் செய்திருந்தால் அல்லது உறுதி கூறியிருந்தால்—

(அ) அத் தொகைகள் இந்தியாவின் சஞ்சித நிதியின் மீது சாட்டப்படவேண்டும், அதிலிருந்து கொடுக்கப் படவும் வேண்டும் ;

(ஆ) சமஸ்தான அதிபதி ஒருவருக்கு அப்படிக் கொடுக்கப்படும் தொகைகள் வருமானத்தின் மீது விதிக்கப் படும் சகல வரிகளிலிருந்தும் விலக்கப்பட்டிருக்கும்.

1 * * * * * * * * *

அத்தியாயம் II—கடன வாங்குதல்.

இந்தியச் சர்க்கார் கடன் வாங்குதல்.

292. பார்லிமெண்டு சட்டத்தினுல் அவ்வப்போது வரம்புகள் எவையேனும் ஏற்படுத்தியிருந்தால், அவற்றிற்கு உட்பட்டு, இந்தியாவின் சஞ்சித நிதியின் ஜாமீனின் பேரில் கடன் வாங்குவதற்கும், அப்படி வரம்புகள் எவையேனும் ஏற்படுத்தப்பட்டிருந்தால், அவற்றிற்கு உட்பட்டு, உத்தரவாதங்கள் செய்வதற்கும் யூனியனின் நிர்வாக சக்தி வியாபிக்கும்.

ராஜ்யங்கள் கடன் வாங்குதல்.

293. (1) இப் பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினுல் அவ்வப்போது வரம்புகள் எவையேனும் ஏற்படுத்தியிருந்தால், அவற்றிற்கு உட்பட்டு, அந்த ராஜ்யத்தின் சஞ்சிதநிதியின் ஜாமீனின்பேரில் இந்தியாவின் ஆட்சிப்பரப்பிற்குள் கடன் வாங்குவதற்கும், அப்படி வரம்புகள் எவையேனும் ஏற்படுத்தப்பட்டிருந்தால், அவற்றிற்கு உட்பட்டு, உத்தரவாதங்கள் செய்வதற்கும் அந்த ராஜ்யத்தின் நிர்வாக சக்தி வியாபிக்கும்.

(2) பார்லிமெண்டு செய்த ஒரு சட்டத்தினுல் அல்லது அதன் கீழ் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்தியச் சர்க்கார் ஒரு ராஜ்யத்திற்குக் கடன்கள் கொடுக்கலாம், அல்லது 292-வது பிரிவின் கீழ் ஏற்படுத்திய வரம்புகளைக் கடவாதிருக்கும்வரை, ஒரு ராஜ்யத்தால் திரட்டப்படும் கடன்கள் விஷயமாக உத்தரவாதங்கள் செய்யலாம் ; அக் கடன்கள் கொடுப்பதற்கு வேண்டிய தொகைகள் இந்தியாவின் சஞ்சித நிதியின்மீது சாட்டப்படவேண்டும்.

(3) ஒரு கடன் இந்தியச் சர்க்காராலோ அல்லது அதற்கு முந்திய சர்க்காராலோ ஒரு ராஜ்யத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அல்லது ஒரு கடன் விஷயமாய் இந்தியச் சர்க்காராலோ அல்லது அதற்கு முந்திய சர்க்காராலோ உத்தரவாதம் செய்யப்பட்டிருந்தால், அக் கடனில் எப் பகுதியாவது இன்னும் கொடுபடாமல் இருந்தால், அந்த ராஜ்யம் இந்தியச் சர்க்காரின் சம்மதமின்றிக் கடன் வாங்கலாகாது.

(4) இந்தியச் சர்க்கார் உசிதம் எனக் கருதி ஏற்படுத்திய நிபந்தனைகள் எவையேனுமிருந்தால், அவற்றிற்கு உட்பட்டு, (3)-ம் பகுதியின் கீழ்ச் சம்மதம் அளிக்கப்படலாம்.

[1] (2)-ம் பகுதி மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும், தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—
பிரிவுகள் 294-295.

அத்தியாயம் III—சொத்துக்கள், ஒப்பந்தங்கள், உரிமைகள், கடப்பாடுகள், பொறுப்புக்கள், வியாஜ்யங்கள்.

குறிப்பிட்ட விஷயங்களில் சொத்துக்கள், ஆஸ்திகள், உரிமைகள், கடப்பாடுகள், பொறுப்புக்கள் இவற்றிற்கு வாரிசுரிமை.

294. இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன் பாகிஸ்தான் டொமினியனே, அல்லது மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம், மேற்குப் பஞ்சாப், கிழக்குப் பஞ்சாப் ஆகிய மாகாணங்களே உண்டாக்கியது காரணமாகச் செய்த அல்லது செய்யலாகும் சரிப்பாட்டுக்கு உட்பட்டு இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து,—

(அ) இந்திய டொமினியன் சர்க்கார் விஷயங்களுக்காக மாட்சிமை தங்கிய மன்னர் பிரானிடம் அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னே நிலை பெற்றிருந்த சகல சொத்துக்களும் ஆஸ்திகளும், ராஜ்யபாலரின் மாகாணம் ஒவ்வொன்றின் சர்க்கார் விஷயங்களுக்காக மாட்சிமை தங்கிய மன்னர் பிரானிடம் அத் தொடக்கத்திற்கு அடுத்து முன் நிலைபெற்றிருந்த சகல சொத்துக்களும் ஆஸ்திகளும் முறையே யூனியனிடமும், நிகரான ராஜ்யத்தினிடமும் நிலைபெற்றிருக்கும் ; மேலும்,

(ஆ) இந்திய டொமினியன் சர்க்கார், ஒவ்வொரு ராஜ்யபாலருடைய மாகாணத்தின் சார்க்கார் இவற்றின் சகல உரிமைகளும் கடப்பாடுகளும் பொறுப்புக்களும், அவை ஓர் ஒப்பந்தத்திலிருந்தோ அல்லது வேறு விதமாகவோ விளைந்திருந்தால், முறையே இந்தியச் சர்க்கார் நிகரான ராஜ்யம் ஒவ்வொன்றின் பொறுப்புக்களாகவும் இருக்கும்.

மற்றைய விஷயங்களில் சொத்துக்கள், ஆஸ்திகள், உரிமைகள், கடப்பாடுகள். பொறுப்புக்கள் இவற்றிற்கு வாரிசுரிமை.

[1] 295. (1) முதலாவது தபசிலின் (ஆ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு ராஜ்யத்திற்கு நிகரான ஓர் இந்தியச் சமஸ்தானச் சர்க்காருடன் இந்தியச் சர்க்கார் இது விஷயமாய்ச் செய்துகொண்ட ஒரு கரூர்நாமாவுக்கு உட்பட்டு இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து,—

(அ) அத் தொடக்கத்திற்குமுன் அந்த சமஸ்தானத்தினிடம் நிலைபெற்றிருந்த சகல சொத்துக்களும் ஆஸ்திகளும் அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னே எவ் விஷயங்களுக்காகக் கைக்கொள்ளப்பட்டிருந்தனவோ அவ் விஷயங்கள் அதற்குப் பிறகு யூனியன் ஜாபிதாவில் குறிப்பிடப்பட்ட பொருள்களில் எவை சம்பந்தமாக வேனும் யூனியனின் விஷயங்கள் ஆகிவிடுவதாயிருந்தால், அச் சொத்துக்களும் ஆஸ்திகளும் யூனியனிடம் நிலைபெற்றிருக்கும் ; மேலும்,

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், அரசியல் அமைப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் இடங்களில், அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படுவது) பற்றிய 1954-ம் வருஷத்திய உத்தரவை அதாவது 1954-ம் வருஷம் மே மாதம் 14-ம் தேதியைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாழ்யங்கள்— பிரிவுகள் 295-296.

(ஆ) அச் சமஸ்தானச் சர்க்காரின் உரிமைகளும் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் ஓர் ஒப்பந்தத்திலிருந்தோ அல்லது வேறு விதமாகவோ விளைந்திருந்தால்; எவ் விஷயங்களுக்காக அத் தொடக்கத்திற்கு முன்னே அத்தகைய உரிமைகள் பெற்றுக்கொள்ளப்பட்டனவோ அல்லது அத்தகைய கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அவ் விஷயங்கள் அதற்குப் பிறகு யூனியன் ஜாபிதாவில் குறிப்பிடப்பட்ட பொருள்களில் எவை சம்மந்தமாகவேனும் இந்தியச் சர்க்காரின் விஷயங்கள் ஆகிவிடுவதாயிருந்தால், அத்தகைய சகல உரிமைகளும் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் இந்தியச் சர்க்காரின் உரிமைகளாகவும் கடப்பாடுகளாகவும் பொறுப்புக்களாகவும் இருக்கும்.

(2) மேற்சொன்னவைகளுக்கு உட்பட்டு, முதலாவது தபசிலி (ஆ) பாகத்தில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு ராஜ்யத்தின் சர்க்காரும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து, (1)-ம் பகுதியில் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக உள்ள சகல சொத்துக்களும் ஆஸ்திகளும் சகல உரிமைகளும் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் ஓர் ஒப்பந்தத்திலிருந்தோ அல்லது வேறு விதமாகவோ விளைந்திருந்தால், அவற்றின் விஷயமாய் அதற்கு நிகரான இந்தியச் சமஸ்தானச் சர்க்காரின் வாரிசாக இருக்கும்.

வாரிசின்மையாலோ, நிபந்தனை நிறைவேறுமையாலோ, வெற்றுப் பொருளாய் விட்டதாலோ சேர்ந்துள்ள சொத்து.

296. இதற்குப் பின்னர் ஏற்பாடு செய்திருப்பதற்கு உட்பட்டு, இந்த அரசியல் அமைப்பு அமுலுக்கு வந்திராவிட்டால், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிலுள்ள எந்தச் சொத்தாவது வாரிசு இல்லாமையாலோ, நிபந்தனை நிறைவேறுமையாலோ, உரிமையாளர் இல்லாத காரணத்தால் வெற்றுப்பொருளாய் விட்டதாலோ மாட்சிமை தங்கிய மன்னர் பிரானிடமாவது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஓர் இந்தியச் சமஸ்தானத்தின் அதிபதியிடமாவது சேர்ந்துள்ள சொத்து ஒரு ராஜ்யத்திலிருக்கும் சொத்தாயிருந்தால், அது அந்த ராஜ்யத்தினிடம் நிலைபெறும். மற்றப்படி யூனியனிடம் அது நிலைபெறும் :

எனினும், எச் சொத்தேனும் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானிடமோ ஓர் இந்தியச் சமஸ்தானத்தின் அதிபதியிடமோ அப்படிச் சேர்ந்திருக்கக்கூடிய தேதியன்று இந்தியச் சர்க்காருடைய அல்லது ஒரு ராஜ்யத்தின் சர்க்காருடைய சுவாதீனத்திலாவது மேலதிகாரத்திற்கு உட்பட்டாவது இருந்தால், அது அப்போது உபயோகிக்கப்பட்ட அல்லது கைக்கொள்ளப்பட்ட காரியங்கள் யூனியனின் காரியங்களாயிருந்தால் யூனியனிடமும் ஒரு ராஜ்யத்தின் காரியங்களாயிருந்தால் அந்த ராஜ்யத்தினிடமும் நிலைபெற்றிருக்கும்.

விளக்கம்.—இப் பிரிவில், "அதிபதி", "இந்தியச் சமஸ்தானம்" என்னும் பதங்கள் 363-வது பிரிவில் அவற்றிற்கு உள்ள பொருள்களையே உடையனவாகும்.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 297–299.

ஆட்சிப் பரப்பு-நீர்களில் அமைந்த விலைமதிப்புள்ள பொருள்கள் யூனியனிடம் நிலை பெறும்.

297. இந்தியாவின் ஆட்சிப்பரப்பு-நீர்களுக்கு உட்பட்ட சமுத்திரத்தின் கீழேயுள்ள சகல நிலங்களும் கனிப் பொருள்களும் விலை மதிப்புள்ள மற்றையப் பொருள்களும் யூனியனிடம் நிலைபெற்று, யூனியன் விஷயங்களுக்காகக் கைக்கொள்ளப் படும்.

வியாபாரம் வகையாவை நடத்தச் சக்தி.

[1][298. யூனியனின் நிர்வாகச் சக்தியும் ஒவ்வொரு ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தியும் ஒரு வியாபாரம் அல்லது வேலையை நடத்துவதற்கும் சொத்தைப் பெறுவது, வைத்திருப்பது, ஒரு வகைசெய்வது இவற்றிற்கும், எக்காரியத்திற்காகவும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கும் பிரயோகப்படும். விஸ்தரிக்கப்படும்.

எனினும்,—

(அ) மேற்சொன்ன யூனியனின் நிர்வாகச் சக்தி அந்த வியாபாரம், வேலை அல்லது காரியம் பார்லிமெண்டு சட்டங்கள் செய்யக்கூடியதாய் இராத வரையில், ஒவ்வொரு ராஜ்யத்திலும் அந்த ராஜ்யம் சட்டம் செய்வதற்கு உட்பட்டதாகும்;

(ஆ) மேற்சொன்ன ஒவ்வொரு ராஜ்யத்தின் நிர்வாகச் சக்தி அந்த வியாபாரம், வேலை அல்லது காரியம் அந்த ராஜ்யச் சட்டமன்றம் சட்டங்கள் செய்யக்கூடியதாய் இராதவரையில் பார்லிமெண்டு சட்டம் செய்வதற்கு உட்பட்டதாகும்.]

ஒப்பந்தங்கள்.

[2] 299. (1) யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் நிர்வாக சக்தியைச் செலுத்துகையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஷ்டிரபதியால் அல்லது அந்த ராஜ்யத்தின் [ராஜ்யபாலரால்] செய்யப்பட்டனவாகக் கூறப்படவேண்டும்; மேலும், அச் சக்தியைக் கொண்டு செய்யப்படும் அத்தகைய சகல ஒப்பந்தங்களும் சொத்தின் சகல அஷ்யூரன்சுகளும் ராஷ்டிரபதியின் அல்லது ராஜ்யபாலரின் அல்லது ராஜப்பிரமுகரின் சார்பாக, அவர் கட்டளையிடும் அல்லது அதிகாரம் கொடுக்கும் நபர்களாலும் விதமாகவும், பிறப்பிக்கப்படவேண்டும்.

(2) இந்த அரசியல் அமைப்பின் விஷயங்களுக்காகாவது இதற்கு முன்னதாக அமுலிலிருந்த இந்திய அரசாங்க சம்பந்த

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 20-வது பிரிவால், 298-வது அசல் பிரிவிற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப் பட்டது.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், ராஜ்யம் அல்லது ராஜ்யங்களைக் குறிக்கும் இடங்களில், அந்த ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்யக் கூடாது.

[3] "ராஜ்யபாலர் அல்லது ராஜப் பிரமுகரால்" என்பதற்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XII.—நிதி, சொத்து, ஒப்பந்தங்கள், வியாஜ்யங்கள்—பிரிவுகள் 299—300.

மான எச் சட்டத்தின் விஷயங்களுக்காகவாவது செய்து கொள்ளப்பட்ட அல்லது இயற்றப்பட்ட எந்த ஒப்பந்தம் அல்லது அஷ்யூரன்சு விஷயமாயும் ராஷ்டிரபதியாவது ராஜ்ய பாலராவது [1] * * * சொந்த ஹோதாவில் பொறுப் புள்ளவர் ஆகார் ; அன்றியும், அவர்களில் எவர் சார்பி லாவது அத்தகைய ஒப்பந்தம் அல்லது அஷ்யூரன்சு எதையும் செய்துகொள்ளும் அல்லது பிறப்பிக்கும் எவரும் அது விஷய மாய்ச் சொந்த ஹோதாவில் பொறுப்புள்ளவர் ஆகார்.

வியாஜ்யங்களும் நடவடிக்கைகளும்.

[2] 300. (1) இந்திய யூனியன் என்னும் பெயரால் இந்தியச் சர்க்கார் வியாஜ்யம் தொடரலாம், அல்லது அதன்மீது வியாஜ்யம் தொடரப்படலாம் ; மேலும், ராஜ்யச் சர்க்கார் என்னும் பெயரால் ஒரு ராஜ்யத்தின் சர்க்கார் வியாஜ்யம் தொடரலாம், அல்லது அதன்மீது வியாஜ்யம் தொடரப் படலாம் ; அன்றியும், அவை இந்த அரசியல் அமைப்பினுல் அளிக்கப்பட்ட சக்திகளினுல் பார்லிமெண்டால் அல்லது அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தினுல் செய்யப்படும் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இந்த அரசியல் அமைப்பு சட்டமாக்கப்பட்டிராவிட்டால் இந்திய டொமினி யனும் நிகரான மாகாணங்களும் அல்லது நிகரான இந்தியச் சமஸ்தானங்களும் எவ் விஷயங்களில் வியாஜ்யம் தொடர்ந் திருப்பார்களோ அல்லது தொடரப்பட்டிருப்பார்களோ அவ் விஷயங்களில் தத்தம் காரியங்கள் பற்றி வியாஜ்யம் தொடரலாம் அல்லது தொடரப்படலாம்.

(2) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில்—

(அ) இந்திய டொமினியன் ஒரு கட்சியாயிருக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைகளேனும் முடிவு பெறு மலிருந்தால், அந்த நடவடிக்கைகளில் இந்திய யூனியன் அந்த டொமினியனுக்குப் பதிலாக்கப் பட்டதாகக் கருதப்படவேண்டும் ; மேலும்,

(ஆ) ஒரு மாகாணமோ ஓர் இந்தியச் சமஸ்தானமோ ஒரு கட்சியாயிருக்கும் எந்தச் சட்ட நடவடிக்கை களேனும் முடிவு பெறுமலிருந்தால், அந்த நட வடிக்கைகளில் அதற்கு நிகரான ராஜ்யம் அம் மாகாணத்திற்கு அல்லது இந்தியச் சமஸ்தானத் திற்குப் பதிலாக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

---

[1] "ராஜப்பிரமுகராவது" என்னும் சொல் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டது.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், ராஜ்யம் அல்லது ராஜ்யங்களைக் குறிக்கும் இடங்களில் அந்த ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விவகம் செய்யக்கூடாது.

பாகம் XIII

இந்தியாவின் ஆட்சிப்பரப்பிற்குள் வியாபாரமும் வாணிபமும் போக்குவரத்தும்.

பிரிவுகள் 301—304.

தடையற்ற வியாபாரமும் வாணிபமும் போக்குவரத்தும்.

301. இப்பாகத்தின் மற்றைய ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இந்தியாவின் ஆட்சிப்பரப்பு முழுவதிலும் வியாபாரமும் வாணிபமும் போக்குவரத்தும் தடையற்றதாய் இருத்தல் வேண்டும்.

வியாபாரம் வாணிபம் போக்குவரத்து இவை பற்றித் தடைகள் விதிக்கப் பார்லிமெண்டுக்குள்ள சக்தி.

302. ராஜ்யம் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையேயாவது அல்லது இந்தியாவின் ஆட்சிப்பரப்பின் எந்தப் பாகத்திற்குள்ளாவது வியாபாரம் வாணிபம் அல்லது போக்குவரத்து இவை சுயேச்சையாய் நடைபெறுவதில் பொதுநலத்திற்கு அவசியமாயுள்ள தடைகளைப் பார்லிமெண்டு சட்டத்தினுல் விதிக்கலாம்.

வியாபாரம் வாணிபம் போக்குவரத்து இவைபற்றி யூனியனும் ராஜ்யங்களும் சட்டம் செய்யும் சக்திகளின் மீது தடைகள்.

[1] *303.* (1) *302*-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், ஏழாவது தபசிலில் கண்ட ஜாபிதாக்களில் எதிலேனும் வியாபாரம் வாணிபம் இவை பற்றிய எப் பதிவு காரணமாகவும் ஒரு ராஜ்யத்திற்கு மற்றொன்றைக் காட்டிலும் அதிகச் சலுகை காட்டவோ அல்லது காட்ட அதிகாரம் அளிக்கவோ அல்லது ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையே எவ் வேற்றுமையும் பாராட்டவோ அல்லது பாராட்ட அதிகாரம் அளிக்கவோ ஒரு சட்டம் செய்யப் பார்லிமெண்டாவது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றமாவது சக்தி உடையதாகாது.

(2) இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் எப் பாகத்திலேனும் பண்டங்கள் கிடைத்தல் அரிதாகிய காரணத்தால் ஏற்படும் ஒரு நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டுச் சலுகை காட்டவோ அல்லது காட்ட அதிகாரம் அளிக்கவோ அல்லது வேற்றுமை பாராட்டவோ அல்லது பாராட்ட அதிகாரம் அளிக்கவோ ஒரு சட்டம் செய்தல் அவசியம் என்று அச் சட்டத்தில் அறிவிக்கப்படுமானுல் பார்லிமெண்டு அத்தகைய சட்டம் செய்தலே (1)-ம் பகுதியில் உள்ளது எதுவும் தடை செய்ய மாட்டாது.

ராஜ்யங்களுக்கிடையே வியாபாரம் வாணிபம் போக்குவரத்து இவற்றின் மீது தடைகள்.

304. *301*-வது பிரிவில் அல்லது *303*-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினுல்—

(அ) அந்த ராஜ்யத்தில் உண்டாக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் அதே மாதிரியான

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், " ஏழாவது தபசிலில் கண்ட ஜாபிதாக்களில் எதிலேனும் வியாபாரம், வாணிபம் இவை பற்றிய ளப் பதிவு காரணமாகவும் " என்னும் சொற்களை விட்டுவிட வேண்டும்.

பாகம் XIII.—இந்தியாவின் ஆட்சிப்பரப்பிற்குள் வியாபாரமும் வாணிபமும் போக்குவரத்தும்—பிரிவுகள் 304—307.

பண்டங்களுக்கு விதிக்கப்படும் வரியை, மற்ற ராஜ்யங்களிலிருந்து [1][யூனியன் ஆட்சிப் பரப்புக்களிலிருந்து] இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது—அப்படி இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கு ராஜ்யத்தில் உண்டாக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பண்டங்களுக்கும் இடையே வேற்றுமை பாராட்டாத வகையில்—விதிக்கலாம்; மேலும்,

(ஆ) அந்த ராஜ்யத்துடன் அல்லது அந்த ராஜ்யத்திற்குள் வியாபாரம் வாணிபம் அல்லது போக்குவரத்து சுயேச்சையாய் நடைபெறுவதில் பொது நலத்திற்கு அவசியமாயுள்ள நியாயமான தடைகளை விதிக்கலாம்:

எனினும், (ஆ) பகுதியைப் பொறுத்தவரை எந்த மசோதாவையும் அல்லது திருத்தத்தையும் ராஷ்டிரபதியின் முன்னனுமதியின்றி ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் கொணரவோ பிரேரேபிக்கவோ கூடாது.

ஏற்கெனவேயுள்ள சட்டங்களுக்கும் ராஜ்ய ஏகபோக உரிமைகளுக்காக ஏற்பாடு செய்யும் சட்டங்களுக்கும் நிவாரணம்.

[2][305. ராஷ்டிரபதி உத்திரவினால் வேறுவிதமாய் கட்டளையிடக்கூடிய அளவுக்கன்றி, 301-வது, 303-வது பிரிவுகளில் உள்ளது எதுவும், ஏற்கெனவேயுள்ள எச்சட்டத்தின் ஷரத்துக்களையும் பாதிக்காது; 301-வது பிரிவில் உள்ளது எதுவும், 1955-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (நான்காம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத்திற்குமுன் செய்யப்பட்ட ஒரு சட்டம் 19-வது பிரிவின் (6)-ம் பகுதியைச் சேர்ந்த (ii)-ம் உட் பகுதியில் குறிப்பிட்டுள்ள ஒரு விஷயத்துக்குச் சம்பந்தப் படுகிறவரையில் அச் சட்டத்தின் பிரயோகத்தைப் பாதிக்காது; மேலும், அது, அவ்விஷயம் பற்றிப் பார்லிமெண்டு அல்லது ஒரு ராஜ்யச் சட்ட மன்றம் சட்டம் செய்வதையும் தடை செய்யாது.]

306. [வியாபாரம் வாணிபம், இவற்றின் மீது தடைகளை விதிக்க முதலானவது தபசிலின் (ஆ) பாகத்தில் குறிப்பிட்ட ராஜ்யங்களின் சக்தி] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் ரத்துச் செய்யப்பட்டது.

301 முதல் 304 வரையிலுள்ள பிரிவுகளின் காரியங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரியின் நியமனம்.

307. பார்லிமெண்டு சட்டத்தினால், 301-வது, 302-வது, 303-வது, 304-வது பிரிவுகளின் காரியங்களை நிறைவேற்றுவதற்குத் தக்கதென்று தான் கருதும் அதிகாரியை நியமித்து, அப்படி நியமிக்கப்பட்ட அதிகாரிக்குத்தான் அவசியமெனக் கருதும் சக்திகளையும் கடமைகளையும் அளிக்கலாம்.

---

[1]1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப் பட்டது.

[2] 1955-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (நான்காம் திருத்தச்) சட்டத்தினால் அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XIV

யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்.

அத்தியாயம் I—சேவை வர்க்கங்கள்.

பிரிவுகள் 308—310

அர்த்த விளக்கம்.

308. இப் பாகத்தில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, "ராஜ்யம்" என்னும் [1][பதத்தில் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யம் அடங்காது.]

யூனியனுக்கு அல்லது ஒரு ராஜ்யத்திற்குச் சேவை செய்பவர்களைத் தெரிந்தெடுத்தலும் அவர்களுடைய சேவை முறைகளும்.

309. இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, பொருத்தமான சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்கள் யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் காரியங்கள் சம்பந்தமாகப் பொதுச் சேவை வர்க்கங்களுக்கும் உத்தியோகங்களுக்கும் நியமிக்கப்படவேண்டியவர்களைத் தெரிந்தெடுத்தலையும் அப்படி நியமிக்கப்பட்டவர்களின் சேவை முறைகளையும் ஒழுங்குபடுத்தலாம் :

எனினும், யூனியனின் காரியங்கள் சம்பந்தமான சேவைகள் உத்தியோகங்கள் இவை விஷயத்தில் ராஷ்டிரபதியோ அல்லது அவர் குறிப்பிடும் ஒருவரோ, ஒரு ராஜ்யத்தின் காரியங்கள் சம்பந்தமான சேவைகள் உத்தியோகங்கள் இவை விஷயத்தில் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலரோ [2] * * * * அல்லது அவரால் குறிப்பிடப்படும் ஒருவரோ, இப் பிரிவின்கீழ்ப் பொருத்தமான சட்டமன்றத்தின் ஒரு சட்டத்தினால் அல்லது அதன்கீழ், அதற்கென ஏற்பாடு செய்யப்படும் வரை அச் சேவைவர்க்கங்களுக்கும் அந்த உத்தியோகங்களுக்கும் நியமிக்கப்படவேண்டியவர்களைத் தெரிந்தெடுத்தலையும் அப்படி நியமிக்கப்பட்டவர்களின் சேவை முறைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக விதிகள் செய்ய அதிகாரம் உடையவர்கள் ஆவார்கள் ; அப்படிச் செய்யப்படும் விதிகள் அத்தகைய சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டுப் பிரயோகப்படும்.

யூனியனுக்காவது ஒரு ராஜ்யத்திற்காவது சேவை செய்பவர்களின் பதவிக் காலம்.

310. (1) இந்த அரசியல்அமைப்பினால் வெளிப்படையாக ஏற்பாடு செய்துள்ளபடியன்றி, பாதுகாப்புச் சேவைவர்க்கத்தின் அல்லது யூனியனின் ராணுவ சம்பந்தமில்லாத சேவைவர்க்கத்தின் அல்லது ஓர் அகில-இந்தியச் சேவைவர்க்கத்தின் அங்கத்தினராய் இருக்கும் அல்லது பாதுகாப்புச் சம்பந்தமான எப்பதவியையாவது அல்லது யூனியனின்கீழ் ராணுவ சம்பந்தமில்லாத எப்பதவியையாவது வகிக்கும் ஒவ்வொருவரும் ராஷ்டிரபதிக்கு விருப்பமுள்ள காலம் வரை உத்தியோகம் வகித்துவருவார் ; மேலும், ஒரு ராஜ்யத்தின் ராணுவ சம்பந்தமல்லாத சேவைவர்க்கத்தின் அங்கத்தினரான அல்லது ஒரு ராஜ்யத்தின்கீழ் ராணுவ சம்பந்தமல்லாத

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் "பதம் முதலாவது தபசிலின் அ பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது குறிப்பிட்ட ஒரு ராஜ்யம் என்று பொருள்படும். என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] "அல்லது ராஜப்பிரமுகரோ" என்னும் சொற்கள் மேற்படி சட்டத்தில் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவுகள் 310—311.

ஓர் உத்தியோகத்தை வகிக்கும் ஒவ்வொருவரும் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலருக்கு விருப்பமுள்ள காலம்வரை உத்தியோகம் வகித்துவருவார்.

(2) யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின்கீழ் ராணுவ சம்பந்தமல்லாத ஓர் உத்தியோகம் வகிக்கும் ஒருவர் ராஷ்டிரபதிக்கு அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலருக்கு [1] * * * விருப்பமுள்ள காலம் வரை உத்தியோகம் வகிப்பவராய் இருந்தபோதிலும், பாதுகாப்புச் சேவை வர்க்கத்தின் அல்லது ஓர் அகில-இந்தியச் சேவை வர்க்கத்தின் அல்லது யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் ராணுவ சம்பந்தமல்லாத சேவை வர்க்கத்தைச் சார்ந்தவரல்லாத ஒருவர் ஓர் ஒப்பந்தத்தின்படி இந்த அரசியலமைப்பின் கீழ் அத்தகைய உத்தியோகம் வகிப்பதற்காக நியமிக்கப்பட்டால், விசேஷத் தகுதிகளையுடைய ஒருவரைச் சேவையில் அமர்த்திக்கொள்ளுதல் அவசியம் என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஷ்டிரபதியோ அல்லது ராஜ்யபாலரோ [2] * * * * கருதினால், அந்த ஒப்பந்தத்தில் உடம்பாடு செய்துகொள்ளப்பட்ட காலம் முடிவடைவதற்கு முன் அந்த உத்தியோகத்தை எடுத்துவிட்டால், அல்லது துர்நடத்தை சம்பந்தமாகவன்றி, வேறு காரணங்களுக்காக அவர் அந்த உத்தியோகத்தைக் காலி செய்யவேண்டி இருந்தால், அவருக்கு நஷ்டஈடாகப் பணம் கொடுக்க அந்த ஒப்பந்தம் ஏற்பாடு செய்யலாம்.

யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் கீழ் ராணுவ சம்பந்தமில்லாத ஹோதாக்களில் வேலையில் அமர்ந்திருப்பவர்களை வேலையிலிருந்து தள்ளுதல், நீக்குதல் அல்லது அந்தஸ்தில் குறைத்தல்.

311. (1) யூனியனின் ராணுவ சம்பந்தமல்லாத சேவை வர்க்கத்தின் அல்லது அகில இந்திய சேவை வர்க்கத்தின் அல்லது ஒரு ராஜ்யத்தின் ராணுவ சம்பந்தமல்லாத சேவை வர்க்கத்தைச் சார்ந்தவராயிருக்கும் அல்லது யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின்கீழ் ராணுவ சம்பந்தமல்லாத ஓர் உத்தியோகத்தை வகித்துவரும் எவரும், எந்த அதிகாரியால் அவர் நியமிக்கப்பட்டாரோ அவருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரி எவராலும் வேலையிலிருந்து தள்ளப்படவோ நீக்கப்படவோ கூடாது.

(2) மேற்சொன்ன எவரும், அவர்மீது அதற்கென எடுக்க உத்தேசித்த நடவடிக்கையை எடுக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்ட அவருக்கு நியாயமான வாய்ப்புக் கொடுக்கப்படும் வரை, வேலையிலிருந்து தள்ளப்படவோ, அல்லது நீக்கப்படவோ அல்லது அந்தஸ்தில் குறைக்கப்படவோ கூடாது ;

எனினும், இப்பகுதி—

(அ) எந்த நடத்தையால் ஒருவருக்குக் குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளித் தீர்ப்பு ஏற்பட்டதோ அந்த நடத்தையின் காரணமாக அவரை வேலையிலிருந்து தள்ளினால் அல்லது நீக்கினால் அல்லது அந்தஸ்தில் குறைத்தால்,

---

[1] "அல்லது ராஜப்பிரமுகருக்கு" என்னும் சொற்கள் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[2] "ராஜப்பிரமுகரோ" என்னும் சொல், மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள், இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவுகள் 311—313.

(ஆ) ஓர் உத்தியோகஸ்தரை வேலையிலிருந்து தள்ளவோ நீக்கவோ அல்லது அந்தஸ்தில் குறைக்கவோ சக்தியுள்ள அதிகாரிக்கு எழுத்து மூலம் பதிவு செய்த ஒரு முகாந்திரத்தினுல் அந்த உத்தியோகஸ்தருக்குக் காரணம் காட்டுவதற்கு வாய்ப்புக் கொடுத்தல் அனுபவ சாத்தியமில்லை என்று தெளிவாகத் தோற்றினுல்; அல்லது

(இ) ராஜ்யத்தின் பந்தோபஸ்து நிலையை முன்னிட்டு அத்தகைய வாய்ப்பை அவருக்குக் கொடுத்தல் உசிதமன்று என்று, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ராஷ்டிரபதிக்கோ ராஜ்ய பாலருக்கோ[1] * * * தெளிவாகத் தோற்றினுல்; பிரயோகப் படமாட்டாது.

(3). (2)-ம் பகுதியின் கீழ்க் காரணம் காட்ட ஒருவருக்கு வாய்ப்புக் கொடுத்தல் அனுபவ சாத்தியமானதா என்பது பற்றி ஒரு பிரச்சினை எழுந்தால், அதன் பேரில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அவரை வேலையிலிருந்து தள்ளவோ, அல்லது நீக்கவோ, அல்லது அந்தஸ்தில் குறைக்கவோ சக்தியுள்ள அதிகாரியின் தீர்மானமே முடிவானதாகும்.

அகில இந்தியச் சேவை வர்க்கங்கள்.

312. (1) XI-ம் பாகத்தில் எவ்வாறு இருப்பினும், ராஜ்ய பரிஷத்து வந்திருந்து வோட்டுச் செய்யும் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மானத்தால் தேச சமுதாயத்தின் நலத்திற்காக அப்படிச் செய்தல் அவசியமென்றே உசிதமென்றே அறிவித்திருந்தால், பார்லிமெண்டு சட்டத்தினுல் யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் பொதுவான அகில-இந்தியச் சேவை வர்க்கம் ஒன்றையோ பலவற்றையோ உண்டாக்குவதற்கு ஏற்பாடு செய்யலாம்; மேலும், இந்த அத்தியாயத்தின் மற்றைய ஷரத்துக்களுக்கு உட்பட்டு, அத்தகைய ஒரு சேவை வர்க்கத்திற்கு நியமிக்கப்பட வேண்டியவர்களைத் தெரிந்தெடுத்தலையும் அப்படி நியமிக்கப்படுபவர்களின் சேவை முறைகளையும் ஒழுங்குபடுத்தலாம்.

(2) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில், இந்திய நிர்வாகச் சேவை வர்க்கம் என்றும், இந்தியப் போலீஸ் சேவை வர்க்கம் என்றும் சொல்லப்படும் சேவை வர்க்கங்கள் இப் பிரிவின் கீழ்ப் பார்லிமெண்டால் உண்டாக்கப்பட்ட சேவை வர்க்கங்கள் எனக் கருதப்படும்.

இடைக்கால ஏற்பாடு கள்.

313. இந்த அரசியல் அமைப்பின் கீழ் இதற்கென வேறு ஏற்பாடு செய்யும்வரை, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அமுலிலிருந்தவையும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்குப் பிறகு அகில-இந்தியச் சேவை வர்க்கமாகவோ யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் கீழ் உள்ள சேவை வர்க்கமாகவோ உத்தியோகமாகவோ தொடர்ந்து இருந்துவரும் ஒரு பொதுச் சேவை வர்க்கத்திற் காவது ஓர் உத்தியோகத்திற்காவது பிரயோகப்படக்கூடிய

[1] "ராஜப்பிரமுகருக்கோ" என்னும் சொல், 1956-ம் வருடத்திய அரசியல் அமைப்பு (7-ம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டது.

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவுகள் 310—315.

வையுமான எல்லாச் சட்டங்களும் இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்குப் பொருத்தமாயிருக்கும் அளவுக்குத் தொடர்ந்து அமுலிலிருந்துவரும்.

இவ் சேவை வர்க்கங்களில் ஏற்கெனவே யுள்ள உத்தியோகங்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு.

314. இந்த அரசியல் அமைப்பினுல் வெளிப்படையாக வேறு விதமாக ஏற்பாடு செய்திருந்தாலன்றி, செக்ரடரி ஆப் ஸ்டேட்டாலோ அல்லது கௌன்ஸிலோடு கூடிய செக்ரெடரி ஆப் ஸ்டேட்டாலோ இந்தியாவில் முடியரசின் ராணுவ சம்பந்தமல்லாத சேவைவர்க்கம் ஒன்றிற்கு நியமிக்கப்பட்டு இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலும் அதன் பின்னும் இந்தியச் சர்க்காரின் அல்லது ஒரு ராஜ்யச் சர்க்காரின்கீழ்த் தொடர்ந்து சேவை செய்துவரும் ஒவ்வொருவரும், அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அவருக்கு ஊதியம், ரஜா, பென்ஷன் இவை பற்றி என்ன சேவை முறைகள் இருந்தனவோ அந்தச் சேவை முறைகளையும், ஒழுங்கு முறை விஷயங்கள் பற்றி என்ன உரிமைகள் இருந்தனவோ அந்த உரிமைகளையும், அல்லது மாறுபட்ட சந்தர்ப்பங்கள் இடம் கொடுக்கும் அளவுக்கு அச்சேவை முறைகளையும் உரிமைகளையும் போன்ற பாத்தியதைகளையும், அவ்வப்போது அவர் உத்தியோகம் பார்க்கும் இந்திய சர்க்காரிடமிருந்தோ அல்லது ராஜ்ய சர்க்காரிடமிருந்தோ பெற உரியவர் ஆவார்.

அத்தியாயம் II.—பப்ளிக் செர்வீஸ் கமிஷன்கள்

யூனியன், ராஜ்யங்கள் இவற்றிற்கான பப்ளிக் செர்வீஸ் கமிஷன்கள்.

315. (1) இப் பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, யூனியனுக்கு ஒரு பப்ளிக் செர்வீஸ் கமிஷனும் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு பப்ளிக் செர்வீஸ் கமிஷனும் இருத்தல் வேண்டும்.

(2) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட ராஜ்யங்கள் அந்த ராஜ்யங்களைக் கொண்ட ஒரு தொகுதிக்காக ஒரே பப்ளிக் செர்வீஸ் கமிஷன் இருத்தல் வேண்டும் என்று ஒத்துக் கொள்ளலாம்; அவ்வாறு தீர்மானம் ஒன்று அந்த ராஜ்யங்கள் ஒவ்வொன்றின் சட்டமன்றத்தின் சபையினுல் அல்லது சட்டமன்றத்தில் இரண்டு சபைகள் இருந்தால் அவைகள் ஒவ்வொன்றினுலும் நிறைவேற்றப்பட்டால், பார்லிமெண்டு சட்டத்தினுல் அந்த ராஜ்யங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு (இந்த அத்தியாயத்தில் கூட்டுக் கமிஷன் எனக் குறிப்பிடப்படும்) கூட்டு ராஜ்யப் பப்ளிக் செர்வீஸ் கமிஷன் ஒன்றை நியமனம் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

(3) மேற்சொன்ன எவ்வகைச் சட்டமும் அச்சட்டத்தின் ஷரத்துக்களை நிறைவேற்றும் பொருட்டு அவசியமானவை என்றே விரும்பத்தக்கவை என்றே தோன்றும் சார்பான ஷரத்துக்களையும் விசேஷமான ஷரத்துக்களையும் கொண்டதாய் இருக்கலாம்.

(4) ஒரு ராஜ்யத்தின் தேவைகளை எல்லாவற்றையுமோ அல்லது அவற்றுள் எவற்றையுமோ நிறைவேற்றும்படி அந்த

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவுகள் 315–316.

ராஜ்யத்தின் [1][ராஜ்யபாலர்] கேட்டுக்கொண்டால், யூனியனுடைய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ராஷ்டிரபதியின் அங்கீகாரம் பெற்று அவ்வாறே நிறைவேற்ற உடன்படலாம்.

(5) இந்த அரசியல் அமைப்பில், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனையாவது ஒரு ராஜ்யத்தின் பப்ளிக் சர்வீஸ் கமிஷனையாவது, குறிக்கும் இடங்களுக்கு, சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, பிரச்சினை எழும் விஷயத்தைப் பற்றி யூனியனின் அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யத்தின் தேவைகளை நிறைவேற்றும் கமிஷனைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்யப்பட வேண்டும்.

அங்கத்தினர்களின் நியமனமும் பதவிக் காலமும்.

316. (1) பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் அக்கிராசனரும் மற்றைய அங்கத்தினர்களும் யூனியன் கமிஷன் அல்லது ஒரு கூட்டுக் கமிஷன் விஷயத்தில் ராஷ்டிரபதியாலும், ஒரு ராஜ்யக் கமிஷன் விஷயத்தில் அந்த ராஜ்யத்தின் [2][ராஜ்யபாலராலும்] நியமிக்கப்பட வேண்டும்:

எனினும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஒவ்வொன்றினுடைய அங்கத்தினர்களில் கிட்டிய அளவு ஒரு பாதியினர் தத்தம் நியமனத் தேதிகளில் இந்திய சர்க்காரின் கீழாவது ஒரு ராஜ்யத்தின் சர்க்காரின் கீழாவது குறைந்தது பத்து வருஷம் உத்தியோகம் வகித்திருந்திருத்தல் வேண்டும்; மேற் சொன்ன பத்து வருஷ காலத்தைக் கணக்கிடுகையில், இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு முன் ஒருவர் இந்தியாவில் முடியரசின் கீழாவது அல்லது ஓர் இந்தியச் சமஸ்தானத்தின் சர்க்காரின் கீழாவது உத்தியோகம் வகித்திருந்த காலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(2) பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் அங்கத்தினர் தாம் பதவி ஏற்கும் தேதியிலிருந்து ஆறு வருஷ காலம் வரையிலோ அல்லது யூனியன் கமிஷனுயிருந்தால் அறுபத்தைந்து வயது நிரம்பும் வரையிலோ, ராஜ்யக் கமிஷன் அல்லது கூட்டுக் கமிஷனுயிருந்தால் அறுபது வயது நிரம்பும் வரையிலோ, இவைகளில் எது முந்துகிறதோ அதுவரை, பதவி வகிக்கலாம்:

எனினும்—

(அ) பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஒன்றின் அங்கத்தினர் தாம் கையெழுத்திட்டு யூனியன் கமிஷன் அல்லது ஒரு கூட்டுக் கமிஷனுயிருந்தால் ராஷ்டிரபதிக்கும், ராஜ்யக் கமிஷனுயிருந்தால் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலருக்கும் [* * * * *] விலாசமிட்டு அனுப்பிய எழுத்து மூலம் தமது பதவியை ராஜிநாமாச் செய்யலாம்;

---

1 "ராஜ்யபாலரோ ராஜப்பிரமுகரோ" என்பதற்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

2 "ராஜ்யபாலர் அல்லது ராஜப்பிரமுகராலும்" என்பதற்குப் பதிலாக மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப் பட்டது.

3 "அல்லது ராஜப்பிரமுகருக்கும்" என்னும் சொற்கள் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

(ஆ) பப்ளிக் சொர்வீஸ் கமிஷன் ஒன்றின் அங்கத்தினர் 317-வது பிரிவின் (1)-ம் பகுதியிலாவது (3)-ம் பகுதியிலாவது ஏற்பாடு செய்துள்ள விதமாக அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

(3) பப்ளிக் சொர்வீஸ் கமிஷன் ஒன்றின் அங்கத்தினராகப் பதவி வகிக்கும் ஒருவர் தமது பதவிக்காலம் முடிவடைந்ததும் அப்பதவிக்கு மீண்டும் நியமிக்கப்பட அருகர் ஆகார்.

பப்ளிக் சொர்வீஸ் கமிஷன் ஒன்றின் அங்கத்தினரின் நீக்கமும் தாற்காலிக நீக்கமும்.

317. (1) (3)-ம் பகுதியின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, உச்ச நீதி மன்றம், ராஷ்டிரபதி கேட்டுக்கொண்டதன் பேரில் அதற்கென 145-வது பிரிவின் கீழ் வகுக்கப்பட்ட நடைமுறையின்படி விசாரணை செய்து, ஒரு பப்ளிக் சொர்வீஸ் கமிஷன் அக்கிராசனரோ மற்றைய அங்கத்தினரோ அவருடைய நடத்தைதத் தவறு காரணமாக நீக்கப்பட வேண்டும் என்று அறிக்கை செய்த பிறகே, அத்தகைய காரணத்திற்காக ராஷ்டிரபதியின் உத்திரவினுல் அந்த அக்கிராசனர் அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, மற்றைய அங்கத்தினர் அவருடைய பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

(2) யூனியன் கமிஷன் அல்லது ஒரு கூட்டுக் கமிஷன் விஷயத்தில் ராஷ்டிரபதியும், ஒரு ராஜ்யக் கமிஷன் விஷயத்தில் [1][ராஜ்யபாலரும்] அக் கமிஷனின் எந்த அக்கிராசனர் அல்லது மற்றைய அங்கத்தினரைக் குறித்து (1)-ம் பகுதியின் கீழ் உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அவரை, உச்ச நீதிமன்றம் அவ்வாறு கேட்டுக் கொண்டதன் பேரில் அனுப்பிய அறிக்கையைப் பெற்று ராஷ்டிரபதி உத்திரவிடும் வரை, அவருடைய பதவியிலிருந்து தாற்காலிகமாக நீக்கி வைக்கலாம்.

(3) (1)-ம் பகுதியில் எவ்வாறு இருப்பினும், பப்ளிக் சொர்வீஸ் கமிஷன் ஒன்றின் அக்கிராசனராவது மற்றோர் அங்கத்தினராவது—

(அ) திவால் ஆனர் என்று தீர்ப்பளிக்கப்பட்டால், அல்லது

(ஆ) அவருடைய பதவிக் காலத்தில் அப் பதவியின் கடமைகளுக்குப் புறம்பாக ஊதியமுள்ள எவ் வேலையிலாவது ஈடுபட்டால், அல்லது

(இ) மனத்தின் அல்லது உடலின் தளர்ச்சி காரணமாகத் தொடர்ந்து பதவியிலிருந்து வரத் தகுதியற்றவர் என்று ராஷ்டிரபதி அபிப்பிராயப்பட்டால்,

ராஷ்டிரபதி அந்த அக்கிராசனரையோ அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த மற்றைய அங்கத்தினரையோ தமது உத்தரவினுல் பதவியிலிருந்து நீக்கலாம்.

---

1 "ராஜ்யபாலர் அல்லது ராஜப்பிரமுகரும்" என்பதற்குப் பதிலாக 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவினுலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவுகள் 317—319.

(4) பப்ளிக் சொர்வீஸ் கமிஷனின் அக்கிராசனராவது மற்றைய அங்கத்தினராவது சட்டப்படி இணைக்கப்பட்ட ஒரு கம்பெனியின் அங்கத்தினர் என்ற முறையிலும் அதன் மற்றைய அங்கத்தினர்களோடு பொதுவான முறையிலும் அன்றி, இந்தியச் சர்க்காரால் அல்லது ஒரு ராஜ்யத்தின் சர்க்காரால் அல்லது அவர்கள் சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம் அல்லது கரூர் நாமாவில் எவ்வகையிலாவது சம்பந்தமோ பற்றோ உள்ளவராயிருந்தாலும் அல்லது உள்ளவராகிவிட்டாலும், அல்லது அவற்றின் லாபத்திலோ அவற்றிலிருந்து எழும் எந்த நலத்திலோ எந்த ஊதியத்திலோ எவ்வகையிலாவது பங்குள்ளவராயிருந்தாலும், அவர் (1)-ம் பகுதியின் காரியங்களுக்காக நடத்தை தவறியதாகக் கருதப் படுவார்.

கமிஷனின் அங்கத்தினர்கள், சிப்பந்திகள் இவர்களின் சேவை முறைகள் பற்றி ரெகுலேஷன்கள் செய்யச் சக்தி.

318. யூனியன் கமிஷன் அல்லது ஒரு கூட்டுக் கமிஷன் விஷயத்தில் ராஷ்டிரபதியும், ஒரு ராஜ்யக் கமிஷன் விஷயத்தில் அந்த ராஜ்யத்தின் [1][ராஜ்யபாலரும்] ரெகுலேஷன்களால்—

(அ) அக்கமிஷனின் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையையும் அவர்களுடைய சேவை முறைகளையும் நிர்ணயிக்கவும் ; மேலும்,

(ஆ) அக்கமிஷனின் சிப்பந்தியினுடைய எண்ணிக்கை விஷயமாகவும் அவர்களுடைய சேவை முறைகள் விஷயமாகவும் ஏற்பாடு செய்யலாம் :

எனினும், பப்ளிக் சொர்வீஸ் கமிஷன் ஒன்றின் அங்கத்தினருடைய சேவை முறைகளை அவருடைய நியமனத்திற்குப் பிறகு அவருக்குப் பாதகமாக மாற்றலாகாது.

கமிஷன் அங்கத்தினர்கள் பதவியற்றதும் அவர்கள் பதவிகள் வகித்தல் பற்றிய தடை.

319. பதவியற்றுப்போனதும்—

(அ) யூனியன் பப்ளிக் சொர்வீஸ் கமிஷன் அக்கிராசனர் இந்திய சர்க்காரின் கீழாவது ஒரு ராஜ்ய சர்க்காரின் கீழாவது மேற்கொண்டும் வேலை பார்க்க அருகர் ஆகார் ;

(ஆ) ஒரு ராஜ்யப் பப்ளிக் சொர்வீஸ் கமிஷனின் அக்கிராசனர் யூனியன் பப்ளிக் சொர்வீஸ் கமிஷனின் அக்கிராசனராகவோ மற்றோர் அங்கத்தினராகவோ வேறொரு ராஜ்யப் பப்ளிக் சொர்வீஸ் கமிஷனின் அக்கிராசனராகவோ நியமிக்கப்பட அருகர் ஆவார்; ஆனால் இந்திய சர்க்காரின் கீழாவது ஒரு ராஜ்ய சர்க்காரின் கீழாவது வேறெந்த வேலையும் பார்க்க அருகர் ஆகார் ;

(இ) யூனியன் பப்ளிக் சொர்வீஸ் கமிஷனின் அக்கிராசனரல்லாத வேறோர் அங்கத்தினர் யூனியன் பப்ளிக் சொர்வீஸ் கமிஷனின் அக்கிராசனராகவோ ஒரு ராஜ்யப் பப்ளிக் சொர்வீஸ் கமிஷனின் அக்கிராசனராகவோ நியமிக்கப்பட அருகர் ஆவார் ; ஆனால்,

[1] "ராஜ்யபாலர் அல்லது ராஜப்பிரமுகரும்" என்பதற்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவினால் அப்படியே அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XIV.—யூனியன் ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவுகள் 319–320.

இந்தியச் சர்க்காரின் கீழாவது ஒரு ராஜ்யச் சர்க்காரின் கீழாவது வேறெந்த வேலையும் பார்க்க அருகர் ஆகார் ;

(ஈ) ஒரு ராஜ்யப் பப்ளிக் சேர்விஸ் கமிஷனின் அக்கிராசனரல்லாத அங்கத்தினர் ஒருவர் யூனியன் பப்ளிக் சேர்விஸ் கமிஷனின் அக்கிராசனராகவோ வேறோர் அங்கத்தினராகவோ அல்லது அந்த ராஜ்யத்தின் அல்லது வேறொரு ராஜ்யத்தின் பப்ளிக் சேர்விஸ் கமிஷனின் அக்கிராசனராகவோ நியமிக்கப்பட அருகர் ஆவார் ; ஆனால், இந்தியச் சர்க்காரின்கீழாவது ஒரு ராஜ்யச் சர்க்காரின்கீழாவது வேறெந்த வேலையும் பார்க்க அருகர் ஆகார்.

பப்ளிக் சேர்விஸ் கமிஷன்களின் வேலைகள்.

320. (1) யூனியன் சேவைவர்க்கங்களுக்கும் ராஜ்யத்தின் சேவைவர்க்கங்களுக்கும் நியமனம் செய்வதற்காகப் பரீட்சைகள் நடத்துதல், முறையே யூனியன், ராஜ்யம் இவற்றின் பப்ளிக் சேர்விஸ் கமிஷன்களின் கடமையாகும்.

(2) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட ராஜ்யங்களால் வேண்டிக் கொள்ளப்பட்டால், விசேஷத் தகுதிகள் வாய்ந்த அபேட்சகர்கள் தேவையாயிருக்கும் சேவைவர்க்கங்களுக்குக் கூட்டுத் தெரிந்தெடுப்புத் திட்டங்களை அமைத்து அமுலுக்குக் கொண்டுவருவதில் அந்த ராஜ்யங்களுக்கு உதவி புரிதலும் யூனியன் பப்ளிக் சேர்விஸ் கமிஷனின் கடமையாகும்.

(3) யூனியன் பப்ளிக் சேர்விஸ் கமிஷனையோ அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஜ்யத்தின் பப்ளிக் சேர்விஸ் கமிஷனையோ—

(அ) ராணுவ சம்மந்தமல்லாத சேவைவர்க்கங்களுக்கும் பதவிகளுக்கும் தெரிந்தெடுப்புமுறைகளைக் குறித்த எல்லா விஷயங்களைப் பற்றியும்,

(ஆ) ராணுவ சம்மந்தமல்லாத சேவைவர்க்கங்களுக்கும் பதவிகளுக்கும் நியமனங்கள் செய்யும்போதும் ஒரு சேவை வர்க்கத்திலிருந்து மற்றொன்றுக்கு உயர்த்தும்போதும் மாற்றும்போதும் அனுசரிக்கப்பட வேண்டிய கோட்பாடுகளைப் பற்றியும், அத்தகைய நியமனங்கள் உயர்வுகள் அல்லது மாற்றங்கள் இவற்றிற்கு அபேட்சகர்களின் தகுதியைப்பற்றியும்,

(இ) ராணுவ சம்மந்தமல்லாத ஹோதாவில் இந்தியச் சர்க்காரின்கீழாவது ஒரு ராஜ்யச் சர்க்காரின்கீழாவது சேவை செய்யும் ஒருவரைப் பாதிக்கும் ஒழுங்குமுறை சம்பந்தமான, விஞ்ஞாபனங்கள் அல்லது மனுக்கள் உட்பட, சகல விஷயங்களைப்பற்றியும்,

(ஈ) இந்தியச் சர்க்காரின்கீழாவது ஒரு ராஜ்யச் சர்க்காரின்கீழாவது இந்தியாவின் முடியரசின்கீழாவது ஓர் இந்தியச் சமஸ்தானத்தின்கீழாவது ராணுவ சம்பந்தமல்லாத ஹோதாவில் சேவை செய்யும்

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவு 320.

அல்லது செய்த ஒருவர் தமது கடமையை நிறை வேற்றுகையில் செய்த அல்லது செய்ததாகச் சொல் லப்படும் காரியங்கள் விஷயமாய் அவர் மீது எடுத்துக்கொண்ட சட்ட நடவடிக்கைகளில் எதிர்வாதம் செய்தலில் ஏற்படும் செலவுகள் இந் தியாவின் சஞ்சித நிதியிலிருந்தோ அல்லது, சந் தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஜ்யத்தின் சஞ்சித நிதி யிலிருந்தோ கொடுக்கப்படவேண்டும் என அவ ரால் அல்லது அவர் பொருட்டுச் செய்யப்படும் கோரிக்கையைப் பற்றியும்,

(உ) ஒருவர் இந்தியச் சர்க்காரின்கீழாவது ஒரு ராஜ் யச் சர்க்காரின்கீழாவது இந்தியாவின் முடியர சின்கீழாவது ஓர் இந்தியச் சமஸ்தானத்தின் சர்க் காரின்கீழாவது ராணுவ சம்மந்தமல்லாத ஹோ தாவில் வேலை செய்து கொண்டிருக்கையில் அவ ருக்கு நேர்ந்த உடற்சேதங்கள் விஷயமாய்ப் பென்ஷன் கொடுப்பதற்கான கோரிக்கையைப் பற்றியும் அப்படிக் கொடுக்கப்படும் தொகையைக் குறித்த பிரச்சினையைப்பற்றியும்

கலந்தாலோசித்தல்வேண்டும் ; அப்படி அனுப்பப்படும் எவ் விஷயத்தையும், ராஷ்டிரபதியாவது அல்லது, சந்தர்ப்பத் திற்கு ஏற்ப, ஒரு ராஜ்யத்தின் [1] [ராஜ்யபாலராவது] அவர் களுக்கு அனுப்பிய வேறெந்த விஷயத்தையும் பற்றி ஆலோசனை கூறுதல் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் கடமை யாகும் ;

எனினும், அகில-இந்தியச் சேவைவர்க்கங்களைப்பற்றி யும், யூனியன் காரியங்களில் சம்மந்தமுள்ள மற்றையச் சேவைவர்க்கங்கள் உத்தியோகங்கள் இவை பற்றியும் ராஷ் டிரபதியும், ஒரு ராஜ்யத்தின் காரியங்களில் சம்பந்தமுள்ள மற்றையச் சேவைவர்க்கங்கள் உத்தியோகங்கள் இவைபற்றி ராஜ்யபாலரும் [2] * * * பொதுவாகவா வது குறிப்பிட்ட வகையான விஷயங்கள் எதிலாவது அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் எவைகளிலாவது பப்ளிக் சர்விஸ் கமிஷனுடன் கலந்தாலோசித்தல் அவசியமில்லை என்று வரையறுக்கும் விதிகளைச் செய்யலாம்.

(4) (3)-ம் பகுதியில் உள்ளது எதனாலும் 16-வது பிரி வின் (4)-ம் பகுதியில் குறிப்பிட்ட ஓர் ஏற்பாட்டை இன்ன விதமாகச் செய்யலாம் என்பதைப்பற்றியாவது 335-வது பிரிவின் ஷரத்துக்களை எவ்விதமாக அமலுக்குக் கொண்டு வரலாம் என்பதைப்பற்றியாவது ஒரு பப்ளிக் சர்விஸ் கமி ஷனுடன் கலந்தாலோசித்தல் அவசியமாகாது.

---

[1] "ராஜ்ய பாலர் அல்லது ராஜப்பிரமுகராவது" என்பதற்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] "அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஜப்பிரமுகருக்கும்" என்னும் சொற்கள் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப் பட்டன.

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவுகள் 320—323.

(5) (3)-ம் பகுதியின் விலக்குநிபந்தனையின்கீழ் ராஷ்டிரபதியால் அல்லது ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலரால் [1] * * * * செய்யப்பட்ட சகல விதிகளும், அவை செய்யப்பட்டதற்குப்பின் கூடிய விரைவில், சந்தர்ப்பத்துக்கு ஏற்ப, பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் அல்லது ராஜ்யத்தின் சட்டமன்ற சபைகளுக்கு முன்னிலையிலும் அல்லது சட்டமன்றச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் வைக்கப்படவேண்டும்; மேலும் அவை அப்படி வைக்கப்படும் நடைக்காலத்தில் பார்லிமெண்டின் இரு சபைகளும் அல்லது ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபை அல்லது இரு சபைகளும் ரத்துச் செய்தோ திருத்தம் செய்தோ அமைக்கக்கூடிய மாறுதல்களுக்கு உட்பட்டவையாயிருக்கும்.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்களின் வேலைகளை விஸ்தரிக்கச் சக்தி.

321. பார்லிமெண்டால் அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டம், யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் சேவைவர்க்கங்களைப்பற்றியும், சட்டத்தினால் நிறுவப்பட்ட ஸ்தல அதிகாரியின் அல்லது இணைக்கப்பட்ட வேறு நிலையத்தின் அல்லது பொது ஸ்தாபனத்தின் சேவைவர்க்கங்களைப் பற்றியும் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அல்லது அந்த ராஜ்யப் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அதிகப்படியான அலுவல்களைச் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்களுக்கு ஆகும் செலவுகள்.

322. யூனியனின் அல்லது ஒரு ராஜ்யப் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் அங்கத்தினர்களுக்கோ அல்லது அக் கமிஷனின் சிப்பந்திக்கோ அவர்கள் சம்பந்தமாகவோ கொடுக்கப்பட வேண்டிய சம்பளங்கள், படிகள், பென்ஷன்கள் உட்பட அக் கமிஷனுக்கு ஆகும் செலவுகள், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, இந்தியாவின் சஞ்சித நிதியின்பேரில் அல்லது அந்த ராஜ்யத்தின் சஞ்சித நிதியின்பேரில் சாட்டப்பட்டவேண்டும்.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்களின் அறிக்கைகள்.

323. (1) யூனியன் கமிஷன் செய்த வேலையைக் குறித்த ஓர் அறிக்கையை வருஷந்தோறும் ராஷ்டிரபதியிடம் சமர்ப்பித்தல் அக்கமிஷனின் கடமையாகும்; அந்த அறிக்கையைப் பெற்றதும் ராஷ்டிரபதி அதன் நகல் ஒன்றை, எவ் விஷயங்களிலாவது கமிஷனின் ஆலோசனை ஒப்புக்கொள்ளப்படாமலிருந்தால் அப்படி ஒப்புக்கொள்ளாததன் காரணங்களை விளக்கும் யாதாஸ்துடன் பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கும்படி செய்யவேண்டும்.

(2) ஒரு ராஜ்யக் கமிஷன் செய்த வேலையைக் குறித்த ஓர் அறிக்கையை வருஷந்தோறும் அந்த ராஜ்யத்தின் [2] [ராஜ்யபாலரிடம்] சமர்ப்பித்தல் அக்கமிஷனின் கடமையாகும்; மேலும், எந்த ராஜ்யங்களின் தேவைகள் ஒரு கூட்டுக் கமிஷனால் பூர்த்தி செய்யப்படுகின்றனவோ அந்த ராஜ்யங்கள்

---

[1] "அல்லது ராஜப்பிரமுகரால்" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவால்லும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[2] "ராஜ்யபாலரிடமாவது ராஜப்பிரமுகரிடமாவது" என்பதற்குப் புதிதாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XIV.—யூனியன், ராஜ்யங்கள் இவற்றின்கீழ்ச் சேவை வர்க்கங்கள்—பிரிவு 323.

ஒவ்வொன்றினுடைய [1][ராஜ்யபாலரிடம்] அந்த ராஜ்யம் சம்பந்தமாக அக் கமிஷன் செய்த வேலையைக் குறித்த ஓர் அறிக்கையை வருஷந்தோறும் சமர்ப்பித்தல் அக்கமிஷனுடைய கடமையாகும் ; மேற்சொன்ன விஷயம் எதிலும், [2][ராஜ்யபாலர்] அந்த அறிக்கையைப் பெற்றதும், அதன் நகல் ஒன்றை, எவ்விஷயங்களிலாவது கமிஷனின் ஆலோசனை ஒப்புக்கொள்ளப்படாமலிருந்தால், அப்படி ஒப்புக்கொள்ளாததற்குக் காரணங்களை விளக்கும் யாதாஸ்துடன், அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் முன்னிலையில் வைக்கும்படி செய்யவேண்டும்.

---

[1] "ராஜ்ய பாலரிடமாவது ராஜப்பிரமுகரிடமாவது" என்பதற்குப் பதிலாவது 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] "சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஜ்யபாலரோ ராஜப்பிரமுகரோ" என்பதற்குப் பதிலாக, மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XV

தேர்தல்கள்

பிரிவு 324:

தேர்தல்களின் மேற்பார்வையும் மேலதிகாரமும் மேலாதிக்கமும் ஒரு தேர்தல் கமிஷனிடம் நிலைபெற்றிருக்கும்.

[1]324. *(1)* பார்லிமெண்டுக்கும் ராஜ்யங்களின் சட்டமன்றங்களுக்கும் நடத்தப்படும் தேர்தல்களிலிருந்து, அல்லது அவை சம்பந்தமாக, எழும் சந்தேகங்களையும் விவாதங்களையும் தீர்ப்பதற்கான தேர்தல்-நியாயசபைகளை நியமிக்கும் விஷயம் உட்பட, பார்லிமெண்டு, ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டமன்றம் இவற்றின் சகல தேர்தல்களுக்கான வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரித்தலைப் பற்றியும், அத்தேர்தல்களை நடத்துதலைப் பற்றியும் ராஷ்டிரபதிப் பதவிக்கும் உப-ராஷ்டிரபதிப் பதவிக்கும் இந்த அரசியல் அமைப்பின்கீழ் நடத்தப்படும் தேர்தல்களைப் பற்றியும் ஆன மேற்பார்வை, மேல்-அதிகாரம், மேல்-ஆதிக்கம் இவைகள் (இந்த அரசியல் அமைப்பில் தேர்தல்-கமிஷன் என்று குறிப்பிடப்படும்) ஒரு கமிஷனிடம் நிலைபெற்றிருக்கும்.

(2) தேர்தல்-கமிஷன், தலைமைத் தேர்தல்-கமிஷனரையும் ராஷ்டிரபதி நிர்ணயித்தால், அவ்வப்போது அவர் நிர்ணயிக்கும் தொகையினராகிய மற்றையத் தேர்தல்-கமிஷனர்களையும், கொண்டதாகும்; தலைமைத் தேர்தல்-கமிஷனர், மற்றையத் தேர்தல் கமிஷனர்கள் இவர்களின் நியமனம் பார்லிமெண்டால் அதற்கென இயற்றப்படும் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ராஷ்டிரபதியால் செய்யப்பட வேண்டும்.

(3) மற்றையத் தேர்தல்-கமிஷனர் எவராவது அப்படி நியமிக்கப்படும்பொழுது, தலைமைத் தேர்தல்-கமிஷனர் அக்கி ராசனராகப் பணியாற்றுவார்.

(4) மக்கட்சபைக்கும் ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டசபைக்கும் நடைபெறும் பொதுத் தேர்தல் ஒவ்வொன்றின் முன்னும், சட்ட பரிஷத்துள்ள ஒவ்வொரு ராஜ்யத்தின் பரிஷத்திற்கும் முதலாவது பொதுத் தேர்தலுக்கு முன்னும் அதற்குப் பிறகு ஈராண்டுக் கொருமுறை நிகழும் தேர்தலுக்கு முன்னும், ராஷ்டிரபதி தேர்தல்-கமிஷனுடன் கலந்தாலோசித்தபிறகு *(1)*-ம் பகுதியில் அக் கமிஷனுக்கு அளிக்கப்பட்ட அலுவல்களைச் செய்கையில் தேர்தல் கமிஷனுக்கு உதவிபுரிவதற்காகத் தாம் அவசியமெனக் கருதும் பிரதேசக் கமிஷனர்களையும் நியமிக்கலாம்.

(5) பார்லிமெண்டால் செய்யப்படும் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, தேர்தல்-கமிஷனர்கள் பிரதேசக் கமிஷனர்கள் இவர்களுடைய சேவை முறைகளும் பதவிக் காலமும் ராஷ்டிரபதி விதியினால் நிர்ணயிக்குமாறு இருத்தல் வேண்டும்:

---

[1] *324-வது பிரிவு பார்லிமெண்டுக்கும் ராஷ்டிரபதி பதவிக்கும் உப ராஷ்டிரபதி பதவிக்கும் நடத்தப்படும் தேர்தல்களுக்குச் சம்பந்தப்படுகிற வரையில் மட்டுமே ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படும்.*

பாகம் XV.—தேர்தல்கள்—பிரிவுகள் 324-325.

எனினும், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை சட்டவிதமாகவும் அல்லது எக் காரணங்களுக்காகவும் நீக்கலாமோ அவ்விதமாகவும் அக் காரணங்களுக்காகவும் அன்றி, தலைமைத் தேர்தல்-கமிஷனர் அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாகாது ; மேலும், தலைமைத் தேர்தல்-கமிஷனரின் சேவைமுறைகளை அவருடைய நியமனத்திற்குப் பிறகு அவருக்குப் பாதகமாக மாற்றலாகாது :

அன்றியும், மற்றெந்தத் தேர்தல்-கமிஷனராவது பிரதேசக் கமிஷனராவது, தலைமைத் தேர்தல்-கமிஷனருடைய சிபார்சின் பேரிலன்றி, தம் பதவியிலிருந்து நீக்கப்படலாகாது.

(6) தேர்தல் கமிஷனுல் கேட்டுக்கொள்ளப்பட்டால், ராஷ்டிரபதி அல்லது ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலர்[1]* * * * * (1)-ம் பகுதியினுல் தேர்தல்-கமிஷனுக்கு அளிக்கப்பட்ட அலுவல்களைச் செய்வதற்கு அவசியமான சிப்பந்தியைத் தேர்தல்-கமிஷனுக்கோ ஒரு பிரதேசக் கமிஷனருக்கோ தந்துதவவேண்டும்.

[2]326. பார்லிமெண்டுச் சபை எதற்கோ, ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சபைக்கோ, அல்லது சபை எதற்கோ தேர்தல் நடைபெறுவதற்காகப் பிரதேசத் தேர்வுத் தொகுதி ஒவ்வொன்றிற்கும் பொதுவாக்காளர் ஜாபிதா ஒன்று இருத்தல்வேண்டும்; மேலும், எவரும், சமயம் இனம் ஜாதி பால் இவைமட்டும் காரணமாக, அல்லது இவற்றுள் ஒன்று காரணமாக அத்தகைய ஒரு ஜாபிதாவில் சேர்க்கப்படுவதற்கு அருகதையற்றவர் ஆகார் ; அன்றியும், அத்தகைய தேர்வுத் தொகுதியொன்றுக்குரிய ஒரு விசேஷ வாக்காளர் ஜாபிதாவில் சேர்க்கவேண்டுமென்று அவர் கோரலாகாது.

சமயம், இனம், ஜாதி அல்லது பால் இக் காரணங்களைக் கொண்டு வாக்காளர் ஜாபிதாவில் சேர்க்கப்பட எவரும் அருகதையற்றவர் ஆக மாட்டார், அல்லது ஒரு விசேஷ வாக்காளர் ஜாபிதாவில் சேர்க்க வேண்டுமென்று கோரலாகாது.

---

1 "அல்லது ராஜப்பிரமுகர்" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

2 325-வது, 326-வது, 327-வது, 328-வது, 329-வது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படமாட்டா.

பாகம் XV.—தேர்தல்கள்—பிரிவுகள் 326–329.

மக்கட் சபைக்கும் ராஜ்யங்களின் சட்டசபைகளுக்கும் வயது வந்தவர் வாக்குரிமையை ஆதாரமாகக் கொண்டு தேர்தல்கள் நடத்துதல்.

[1]326. மக்கட்சபைக்கும் ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டசபைக்கும் நடைபெறும் தேர்தல்கள் வயதுவந்தவர் வாக்குரிமையை ஆதாரமாகக் கொண்டிருத்தல்வேண்டும்; அதாவது, இந்தியாவின் குடியாகவும் உரிய சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தினுல் அல்லது அதன் கீழ் அதற்கென நிச்சயிக்கப்படும் தேதியன்று இருபத்தொன்றுக்குக் குறையாத வயதுடையவராகவும், குடியிருப்பின்மை சித்தவிகாரம் குற்றமான அல்லது லஞ்ச சம்பந்தமான அல்லது சட்டவிரோதமான செய்கை இவை காரணத்தால் இந்த அரசியல் அமைப்பின்கீழ் அல்லது உரிய சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் வேறு விதமாகத் தகுதியற்றவராக ஆக்கப்படாதவராகவும் உள்ள ஒவ்வொருவரும் அத்தகைய தேர்தலில் வாக்காளராகப் பதிவு பெறப் பாத்தியதை உள்ளவர் ஆவார்.

சட்டமனறங்களுக்குத் தேர்தல்கள் விஷயமாக ஏற்பாடு செய்யப் பார்லிமெண்டுக்குள்ள சக்தி.

1327. இந்திய அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரித்தல், தேர்வுத் தொகுதிகளை வரையறுத்தல் பார்லிமெண்டுச் சபை ஒன்றை அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றச் சபையை அல்லது சபை ஒன்றைக் கிரமப்படி அமைப்பதற்கு அவசியமான மற்றைய விஷயங்களை எல்லாம் செய்தல் இவை உட்பட அச் சபைக்குத் தேர்தல்கள் பற்றிய அல்லது அவை சம்பந்தமான சகல விஷயங்களையும் குறித்துப் பார்லிமெண்டு சட்டத்தினுல் அவ்வப்போது ஏற்பாடு செய்யலாம்.

ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் சம்பந்தமாக ஏற்பாடு செய்ய அச் சட்டமன்றத்திற்குள்ள சக்தி.

1328. இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டும், பார்லிமெண்டால் அதற்கென ஏற்பாடு செய்யப்படாமலிருக்கும் அளவுக்கும், வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரித்தல், அந்த ராஜ்யத்தின் சட்டமன்றச் சபையை அல்லது சபை ஒன்றைக் கிரமப்படி அமைப்பதற்கு அவசியமான மற்றைய விஷயங்கள் எல்லாம் செய்தல் இவை உட்பட அச் சபைக்குத் தேர்தல்கள் பற்றிய, அல்லது அவை சம்பந்தமான, சகல விஷயங்களையும் குறித்து ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினுல் அவ்வப்போது ஏற்பாடு செய்யலாம்.

தேர்தல் விஷயங்களில் நீதிமன்றங்களின் தலையீட்டிற்குத் தடை.

1329. இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும்—

(அ) தேர்வுத் தொகுதிகளை வரையறுத்தல் அல்லது அத் தொகுதிகளுக்கு ஸ்தானங்களைப் பகிர்ந்தளித்தல் பற்றி 327-வது அல்லது 328-வது பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் சட்டத்தின் செல்லுபடி எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கப்படலாகாது;

(ஆ) பார்லிமெண்டுச் சபை ஒன்றுக்கு அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றச் சபைக்கு அல்லது சபை ஒன்றுக்கு நடத்தப்பட்ட தேர்தலை, உரிய சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியினிடம் நிர்ணயிக்கப்பட்ட விதமாகக் கொடுத்த ஒரு தேர்தல் மனுவின் மூலமாகவன்றி, ஆட்சேபிக்கலாகாது.

---

1 மூன் பக்கத்திலுள்ள 2-வது அடிக் குறிப்பைப் பார்க்கவும்.

பாகம் XVI

சில வகுப்பினர்களைப் பற்றிய விசேஷ ஷரத்துக்கள்

பிரிவுகள் 330—331.

மக்கட் சபையில் அனுபந்த ஜாதியார்களுக்கும் அனுபந்த மலைஜாதியார்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தல்.

[1]330. (1) மக்கட் சபையில்—

(அ) அனுபந்த ஜாதியார்கள்,

(ஆ) அஸ்ஸாமில் மலைஜாதிப் பிரதேசங்களிலிருக்கும் அனுபந்த மலைஜாதியார்களைத் தவிர மற்றைய அனுபந்த மலைஜாதியார்கள்,

(இ) அஸ்ஸாமின் சுய நிர்வாக ஜில்லாக்களிலிருக்கும் அனுபந்த மலைஜாதியார்கள்

இவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டும்.

(2) (1)-ம் பகுதியின்கீழ் ஒரு ராஜ்யத்தில் [2][அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பில்] அனுபந்த ஜாதியார்களுக்காக அல்லது அனுபந்த மலைஜாதியார்களுக்காக ஒதுக்கிவைக்கப் படும் ஸ்தானங்களின் எண்ணிக்கைக்கும் மக்கட்சபையில் அந்த ராஜ்யத்திற்கு [2][அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பிற்கு] அளிக்கப்பட்ட ஸ்தானங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமும் அப்படி ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்ட அந்த ராஜ்யத்தின் [2][அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பின்] அனுபந்த ஜாதியார்கள் அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யத்தில் [2][அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பில்] அல்லது அந்த ராஜ்யத்தின் [2][அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பின்] பாகத்தில் உள்ள அனுபந்த மலைஜாதியார் களின் ஜனத்தொகைக்கும் அந்த ராஜ்யத்தின் [2][அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பின்] மொத்த ஜனத்தொகைக்கும் உள்ள விகிதமும் கிட்டிய அளவு ஒன்றாய் இருத்தல் வேண்டும்.

மக்கட் சபையில் ஆங்கில-இந்தியச் சமுதாயத்திற்குப் பிரதிநிதித்துவம்.

[3]331. 81-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், மக்கட் சபையில் ஆங்கில-இந்தியச் சமுதாயம் போதுமான அளவில் ஸ்தானம் பெற்றிருக்கவில்லை என்று ராஷ்டிரபதி அபிப்பிராயப் பட்டால், அவர் அச் சமுதாயத்திலிருந்து இருவருக்கு மேற் படாத அங்கத்தினர்களை மக்கட் சபைக்கு நியமனம் செய்ய லாம்.

---

1 ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 330-வது பிரிவில், "அனுபந்த மலை ஜாதியர்களைக்" குறிக்கும் இடங்களை விட்டுவிட வேண்டும்.

2 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப் பட்டது.

3 331-வது, 332-வது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப் படமாட்டா.

பாகம் XVI.—சில வகுப்பினர்களைப்பற்றிய விசேஷ ஷரத்துக்கள் —பிரிவுகள் 332–333.

ராஜ்யங்களின் சட்ட சபைகளில் அனுபந்த ஜாதியார்களுக்கும் அனுபந்த மலைஜாதியார்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்தல்.

[1]*332. (1) [2][* * * * *] ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்டசபையிலும் அனுபந்த ஜாதியார்களுக்கும், அஸ்ஸாம் மலைஜாதிப் பிரதேசங்களிலுள்ள அனுபந்த மலைஜாதியார்களைத் தவிர மற்றைய அனுபந்த மலைஜாதியார்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படவேண்டும்.

(2) அஸ்ஸாம் ராஜ்யத்தின் சட்டசபையில் சுய நிர்வாக ஜில்லாக்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படவேண்டும்.

(3) (1)-ம் பகுதியின்கீழ் அனுபந்த ஜாதியார்களுக்காக அல்லது அனுபந்த மலைஜாதியார்களுக்காக ஒரு ராஜ்யத்தின் சட்ட சபையில் ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்களின் எண்ணிக்கைக்கும் அச் சபையிலுள்ள ஸ்தானங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமும், அப்படி ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்ட அந்த ராஜ்யத்தின் அனுபந்த ஜாதியார்கள் அல்லது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யத்தில் அல்லது அந்த ராஜ்யத்தின் பாகத்தில் உள்ள அனுபந்த மலைஜாதியார்களின் ஜனத்தொகைக்கும் அந்த ராஜ்யத்தின் மொத்த ஜனத்தொகைக்கும் உள்ள விகிதமும் கிட்டிய அளவு ஒன்றாய் இருத்தல்வேண்டும்.

(4) அஸ்ஸாம் ராஜ்யத்தின் சட்டசபையில் சுய நிர்வாக ஜில்லா ஒன்றுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களின் எண்ணிக்கைக்கும் அச் சபையிலுள்ள ஸ்தானங்களின் மொத்த எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் அந்த ஜில்லாவின் ஜனத்தொகைக்கும் அந்த ராஜ்யத்தின் மொத்த ஜனத்தொகைக்கும் உள்ள விகிதத்திற்குக் குறையாததாக இருத்தல்வேண்டும்.

(5) அஸ்ஸாமில் சுய நிர்வாக ஜில்லா எதற்காவது ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களுக்கான தேர்வுத் தொகுதிகள், ஷில்லாங் கன்டோன்மெண்டும் முனிசிபாலிட்டியும் அடங்கிய தொகுதியின் விஷயத்தில் தவிர, அந்த ஜில்லாவிற்கு வெளியிலுள்ள எப் பிரதேசத்தையும் கொண்டவையாய் இருத்தலாகாது.

(6) அஸ்ஸாம் ராஜ்யத்தின் ஒரு சுய நிர்வாக ஜில்லாவிலுள்ள அனுபந்த மலைஜாதியார் அல்லாதவரான எவரும், ஷில்லாங் கன்டோன்மெண்டும் முனிசிபாலிட்டியும் அடங்கியதான தேர்வுத் தொகுதியிலிருந்தன்றி, அந்த ஜில்லாவின் மற்றெந்தத் தேர்வுத் தொகுதியிலிருந்தும் அந்த ராஜ்யத்தின் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட அருகர் ஆகார்.

ராஜ்யங்களின் சட்ட சபைகளில் ஆங்கில-இந்தியச் சமுதாயத்திற்குப் பிரதிநிதித்துவம்.

[1]*333. 170-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், ஒரு ராஜ்யத்தின் சட்டசபையில் ஆங்கில-இந்தியச் சமுதாயம் ஸ்தானம் பெற்றிருத்தல் அவசியம் என்றும் அச் சபையில் போதுமான அளவில் ஸ்தானம் பெற்றிருக்கவில்லை என்றும்

[1] 331-வது 332-வது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப் படாது.

[2] "முதலாவது தபசிலின் (அ) பாகத்தில் அல்லது (ஆ) பாகத்தில் குறப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு ஏழாம் திருத்தச் சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XVI—சில வகுப்பினர்களைப்பற்றிய விசேஷ ஷரத்துக்கள்—பிரிவுகள் 333—336.

அந்த ராஜ்யத்தின் [1][ராஜ்யபாலர்] அபிப்பிராயப்பட்டால், அவர் தமக்கு உசிதம் என்று தோன்றும் தொகையினரான அங்கத்தினர்களை அச் சமுதாயத்திலிருந்து அச் சபைக்கு நேமகம் செய்யலாம்.

ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தலும் விசேஷப் பிரதிநிதித்துவமும் பத்து வருஷங்களுக்குப் பிறகு அற்றுப் போகும்.

[2]334. இப் பாகத்தின் மேற்சொன்ன ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், இந்த அரசியல் அமைப்பில்—

(அ) அனுபந்த ஜாதியார்களுக்கும் அனுபந்த மலைஜாதியார்களுக்கும் மக்கட்சபையிலும் ராஜ்யங்களின் சட்டசபைகளிலும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்தல்,

(ஆ) மக்கட்சபையிலும் ராஜ்யங்களின் சட்டசபைகளிலும் நேமகத்தினால் ஆங்கில-இந்தியச் சமுதாயத்திற்குப் பிரதிநிதித்துவம் கொடுத்தல்,

இவை பற்றிய ஷரத்துக்கள் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்து வருஷ காலம் முடிவடைந்ததும் அமுலற்றுப் போகும் :

எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அப்போதுள்ள மக்கட்சபையாவது ஒரு ராஜ்யத்தின் சட்டசபையாவது கலைக்கப்படும் வரை அச்சபையில் ஏற்பட்டுள்ள பிரதிநிதித்துவ முறையை இப் பிரிவில் உள்ளது எதுவும் பாதிக்காது.

சேவைவர்க்கங்கள், உத்தியோகங்கள் இவைபற்றி அனுபந்த ஜாதியார்களுக்கும் அனுபந்த மலைஜாதியார்களுக்கும் உள்ள உரிமைகள்.

[2]335. யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் காரியங்கள் பொருட்டுள்ள சேவைவர்க்கங்களுக்கும் உத்தியோகங்களுக்கும் நியமனங்கள் செய்கையில், நிர்வாகத் திறனின் சீர்நிலைக்கு ஏற்றவாறு அனுபந்த ஜாதி, அனுபந்த மலைஜாதி இவற்றைச் சேர்ந்தவர்களின் உரிமைகள் விஷயத்தில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட சேவைவர்க்கங்களில் ஆங்கில-இந்தியச் சமுதாயத்திற்கு விசேஷ ஏற்பாடு.

[3]336. (1) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்குப் பிறகு முதல் இரண்டு வருஷங்களில், யூனியனைச் சேர்ந்த ரெயில்வே, சுங்கம், தபால், தந்தி ஆகிய சேவைவர்க்கங்களிலுள்ள உத்தியோகங்களுக்கு ஆங்கில-இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நியமித்தல் 1947-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் பதினைந்தாம் தேதிக்கு அடுத்தமுன்னதாக அமுலிலிருந்த முறைப்படியே இருத்தல்வேண்டும்.

---

1 "ராஜ்யபாலரோ, ராஜப்பிரமுகரோ" என்பதற்குப் பதிலாக, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துக்கொள்ளப்பட்டது.

2 ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 334-வது, 335-வது பிரிவுகளில் ராஜ்யம் அல்லது ராஜ்யங்களைக் குறிக்கும் இடங்களில் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் அடங்கமாட்டா என்று அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்.

3 336-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

பாகம் XVI.—சில வகுப்பினர்களைப் பற்றிய விசேஷ ஷரத்துக்கள்—பிரிவுகள் 336–337.

பின்வரும் ஒவ்வோர் ஈராண்டுக் காலத்திலும் அச் சேவைவர்க்கங்களில் மேற்சொன்ன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட உத்தியோகங்களின் எண்ணிக்கை அதற்கு அடுத்து முந்திய ஈராண்டுக் காலத்தில் அப்படி ஒதுக்கிவைக்கப்பட்ட எண்ணிக்கைகளைவிடச் சாத்தியமான வரையில் பத்துச் சத வீதம் குறைந்திருத்தல்வேண்டும் :

எனினும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்து வருஷ கால இறுதியில் அத்தகைய ஒதுக்கிவைப்புக்கள் எல்லாம் அற்றுப்போகும்.

(2) (1)-ம் பகுதியின்கீழ் ஆங்கில-இந்தியச் சமுதாயத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்ட உத்தியோகங்களைத்தவிர மற்றைய உத்தியோகங்களுக்கோ, அப்படி ஒதுக்கிவைக்கப்பட்ட உத்தியோகங்களுக்கு அதிகப்படியாயுள்ள உத்தியோகங்களுக்கோ அச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மற்றையச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது யோக்கியதையினால் நியமனம் பெறத் தகுதி உடையவர்களாயிருந்தால், அப் பகுதியில் உள்ளது எதுவும் ஆங்கில இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் நியமனத்தைத் தடைப்படுத்தாது.

ஆங்கில-இந்தியச் சமுதாயத்தின் நலத்திற்காகக் கல்வி விஷயத்தில் நன்கொடைகள் அளிப்பதற்கு விசேஷ ஏற்பாடு.

[1] 337. இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்குப் பிறகு முதல் மூன்று நிதி வருஷங்களில், கல்வி சம்பந்தமாக ஆங்கில-இந்தியச் சமுதாயத்தின் நலத்திற்காக 1948-ம் வருஷம் மார்ச்சு மாதம் முப்பத்தொன்றும் தேதியோடு முடிவடையும் நிதி வருஷத்தில் நன்கொடைகள் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த நன்கொடைகள் யூனியனாலும் [2] [* * * *] ஒவ்வொரு ராஜ்யத்தாலும் கொடுக்கப்படவேண்டும்.

பின்வரும் ஒவ்வோர் மூவாண்டுக் காலத்திலும், அந்த நன்கொடை அதற்கு அடுத்து முந்திய மூவாண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்ட நன்கொடைகளைவிடப் பத்துச் சத வீதம் குறைந்திருக்கலாம் :

எனினும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்து வருஷ கால இறுதியில் அத்தகைய நன்கொடைகள்—அவை ஆங்கில-இந்தியச் சமுதாயத்திற்கு விசேஷச் சலுகை காட்டும் அளவிற்கு—அற்றுப்போகும் :

அன்றியும், கல்வி ஸ்தாபனம் எதுவும், அதில் வருஷந்தோறும் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் குறைந்தது நாற்பது சத வீதம் ஆங்கில-இந்தியச் சமுதாயம் தவிர மற்றையச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்க வசதி அளித்தாலன்றி, இப் பிரிவின்கீழ் எந்த நன்கொடையையும் பெறுவதற்கு உரிமை உள்ளதாகாது.

---

[1] 337-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] "முதலாவது தபசிலின் (அ) பாகத்திலாவது (ஆ) பாகத்திலாவது குறிப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XVI.—சில வகுப்பினர்களைப்பற்றிய விசேஷ ஷரத்துக்கள்—பிரிவுகள் 338–339.

அனுபந்த ஜாதியார்கள் அனுபந்த மலைஜாதியார் வகையாவுக்கான விசேஷ உத்தியோகஸ்தர்.

338. (1) அனுபந்த ஜாதியார்களுக்காகவும் அனுபந்த மலைஜாதியார்களுக்காகவும் ராஷ்டிரபதியால் நியமிக்கப்பட்ட ஒரு விசேஷ உத்தியோகஸ்தர் இருத்தல் வேண்டும்.

(2) அனுபந்த ஜாதியார்களுக்காகவும் அனுபந்த மலைஜாதியார்களுக்காகவும் இந்த அரசியல் அமைப்பின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்புக்கள் பற்றிய எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்து, அப் பாதுகாப்புகளின் பிரயோக முறையைப் பற்றி ராஷ்டிரபதி உத்தரவிடும் கால அளவு முடிவடையும்போது, ராஷ்டிரபதிக்கு அறிவித்தல் அவ் விசேஷ உத்தியோகஸ்தரின் கடமையாகும்; ராஷ்டிரபதி அத்தகைய அறிக்கைகளை எல்லாம் பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கும்படி செய்யவேண்டும்.

(3) இப் பிரிவில், அனுபந்த ஜாதியார்களையும் அனுபந்த மலைஜாதியார்களையும் குறிக்கும் இடங்களில், 340-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனின் அறிக்கையைப் பெற்றதும் ராஷ்டிரபதி உத்தரவினால் குறிப்பிடும் மற்றையப் பிற்பட்ட வகுப்பினர்களையும் ஆங்கில-இந்தியச் சமுதாயத்தையும் குறிக்கும் இடங்களும் அடங்கியவாக அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

அனுபந்தப் பிரதேசங்களின் நிர்வாகம் அனுபந்த மலைஜாதியார்களின் நலன் இவைபற்றி யூனியனுக்குள்ள மேலதிகாரம்.

[1] *339.* (1) ராஷ்டிரபதி, [2] * * * * * ராஜ்யங்களில் உள்ள அனுபந்தப் பிரதேசங்களின் நிர்வாகத்தைப்பற்றியும் அனுபந்த மலைஜாதியார்களின் நலத்தைப்பற்றியும் அறிக்கை செய்வதற்காக ஒரு கமிஷனைத் தம் உத்தரவினால் எச் சமயத்திலும் நியமிக்கலாம்; இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்து வருஷம் முடிவடைந்ததும் அத்தகைய கமிஷனை நியமித்தல் வேண்டும்.

அந்த உத்தரவானது கமிஷனின் அமைப்பு, சக்திகள், நடைமுறை இவற்றை வரையறுக்கலாம்; மேலும், ராஷ்டிரபதி அவசியமானவை என்றோ விரும்பத்தக்கவை என்றோ கருதும் சார்பான அல்லது துணையான ஷரத்துக்களையும் அது கொண்டதாயிருக்கலாம்.

(2) [3] * * * * ஒரு ராஜ்யத்திலுள்ள அனுபந்த மலைஜாதியார்களின் நலத்திற்கு அத்தியாவசியமானவை என்று உத்தரவில் குறிப்பிடப்பட்ட திட்டங்களைத் தயாரித்தலைக் குறித்தும் நிறைவேற்றுதலைக் குறித்தும் அந்த ராஜ்யத்திற்குக் கட்டளைகள் இடும் அளவிற்கு யூனியனின் நிர்வாக சக்தி வியாபிக்கும்.

---

[1] *339*-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] "முதலாவது தபசிலின் அ பாகத்திலாவது ஆ பாகத்திலாவது குறிப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[3] "அத்தகைய" என்னும் சொல் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XVI.—சில வகுப்பினர்களைப்பற்றிய விசேஷ ஷரத்துக்கள்—பிரிவுகள் 340—341.

பிற்பட்ட வகுப்பார்களின் நிலைமைகளைக் குறித்து ஆராய்வதற்காகக் கமிஷனை நியமித்தல்.

340. (1) இந்தியாவின் ஆட்சிப்பரப்பிற்குள் சமூக அந்தஸ்திலும் கல்வியிலும் பிற்பட்ட வகுப்பினர்களின் நிலைமைகளைப்பற்றியும் அவர்கள் படும் கஷ்டங்களைப் பற்றியும் ஆராய்வதற்கும், அத்தகைய கஷ்டங்களை நீக்கி அவர்களுடைய நிலைமையை மேம்படுத்த யூனியனே அல்லது ஒரு ராஜ்யமோ செய்யவேண்டிய காரியங்களைப் பற்றியும் அதன் பொருட்டு யூனியனே அல்லது ஒரு ராஜ்யமோ கொடுக்க வேண்டிய நன்கொடைகளைப்பற்றியும் அந்த நன்கொடைகளைக் கொடுப்பதற்குரிய நிபந்தனைகளைப் பற்றியும் சிபார்சுகள் செய்வதற்கும், ராஷ்டிரபதி தகுதிவாய்ந்தவர் எனத் தமக்குத் தோற்றுபவர்கள் அடங்கிய கமிஷன் ஒன்றைத் தம் உத்தரவினால் நியமிக்கலாம்; அத்தகைய கமிஷனை நியமிக்கும் உத்தரவானது கமிஷன் பின்பற்ற வேண்டிய நடைமுறையை வரையறுக்கவேண்டும்.

(2) அப்படி நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் தமக்கு அனுப்பப்பட்ட விஷயங்களைக் குறித்து ஆராய்ந்து, தம்மால் கண்டறியப்பட்ட விஷயங்களை எடுத்துக்காட்டுவதாயும் தமக்கு உசிதமெனத் தோற்றும் சிபார்சுகள் அடங்கியதுமான ஓர் அறிக்கையை ராஷ்டிரபதியிடம் சமர்ப்பித்தல்வேண்டும்.

(3) அப்படிச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் நகல் ஒன்றை அதன் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையை விளக்கும் யாதாஸ்துடன், ராஷ்டிரபதி பார்லிமெண்டு சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கும்படி செய்ய வேண்டும்.

அனுபந்த ஜாதியார்கள்.

341. (1) ராஷ்டிரபதி, [1][எந்த ராஜ்யம் [2](அல்லது யூனியன் ஆட்சிப்பரப்பு) சம்பந்தமாகவேனும், அது [3] * * * * * ஒரு ராஜ்யமாயிருந்தால், அதன் [4](ராஜ்யபாலருடன்) கலந்தாலோசித்த பிறகு], பொது [5]விளம்பரத்தினால், இன்ன ஜாதியார்கள், இனத்தினர்கள் அல்லது மலைஜாதியார்களா

---

[1] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 10-வது பிரிவால், "ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலருடனே அல்லது ராஜப் பிரமுகருடனே கலந்தாலோசித்த பிறகு" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[3] "முதலாவது தபசிலின் அ பாகத்திலாவது ஆ பாகத்திலாவது குறிப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்துக்களும் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[4] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் "ராஜ்யபாலருடனே அல்லது ராஜப்பிரமுகருடனே" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[5] சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1950-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதியன்று பிறந்த ஜி.ஓ. 19-ம் நெ. விளம்பரத்துடன் இந்தியா கெஜட் அதிசேஷ வெளியீட்டின் II-ம் பாகத்தில் கண்ட 3-வது பிரிவைச் சேர்ந்த 163-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு (அனுபந்த ஜாதியார்கள்) பற்றிய 1950-ம் வருஷத்திய உத்தரவையும், சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1951-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 20-ம் தேதியன்று பிறந்த ஜி. ஓ. 51-ம் நெ. விளம்பரத்துடன் இந்தியா கெஜட் II-ம் பாகத்தில் கண்ட 3-வது பிரிவைச்சேர்ந்த 1198-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு (அனுபந்த மலை ஜாதியார்கள்) (இரு பாக ராஜ்யங்கள்) பற்றிய 1951-ம் வருஷத்திய உத்தரவையும் பார்க்கவும்.

பாகம் XVI.—சில வகுப்பினர்களைப்பற்றிய விசேஷ ஷரத்துக்கள்.—பிரிவுகள் 341 342.

வது அல்லது அந்த ஜாதியார்கள் இனத்தினர்கள் அல்லது மலைஜாதியார்கள் இவர்களில் உள்ள பிரிவினர்களாவது, தொகுதியினர்களாவது, இந்த அரசியல் அமைப்பைப்பொறுத்த வரை அந்த ராஜ்யம் [1] [அல்லது, சந்தர்ப்பத்திற்கேற்ப யூனியன் ஆட்சிப் பரப்பு] சம்பந்தமாக, அனுபந்த ஜாதியார்கள் என்று கருதப்பட வேண்டும் எனக் குறிப்பிடலாம்.

(2) (1)-ம் பகுதியின்கீழ் பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்ட அனுபந்த ஜாதியார்களின் ஜாபிதாவில் பார்லிமெண்டு சட்டத்தினால் ஒரு ஜாதியார் இனத்தினர் அல்லது மலைஜாதியாரையாவது, அந்த ஜாதியார் இனத்தினர் அல்லது மலைஜாதியார் இவர்களிலுள்ள ஒரு பிரிவினரையாவது தொகுதியினரையாவது சேர்க்கலாம் அல்லது ஜாபிதாவிலிருந்து நீக்கலாம்; ஆனால், மேற்சொன்னபடியன்றி, அப் பகுதியின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட விளம்பரம் பின் செய்த விளம்பரம் எதனாலும் மாற்றப்படலாகாது.

[2] 342. (1) ராஷ்டிரபதி, [எந்த ராஜ்யம்[1] (அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பு) சம்பந்தமாகவேனும், அது [3] * * * * ஒரு ராஜ்யமாயிருந்தால், அதன் [5] (ராஜ்ய பாலருடன்) கலந்தாலோசித்த பிறகு], பொது [6] விளம்பரத்தினால், இன்ன மலைஜாதியார்கள் அல்லது மலைஜாதிச் சமுதாயங்களாவது அல்லது அந்த மலைஜாதியார்கள் அல்லது மலைஜாதிச் சமுதாயங்கள் இவர்களில் உள்ள பிரிவினர்களாவது, தொகுதியினர்களாவது இந்த அரசியல் அமைப்பைப் பொறுத்தவரை, அந்த ராஜ்யம் [1] [அல்லது, சந்தர்ப்பத்திற் கேற்ப யூனியன் ஆட்சிப் பரப்பு] சம்பந்தமாக, அனுபந்த மலைஜாதியார்கள் என்று கருதப்படவேண்டும் எனக் குறிப்பிடலாம். அனுபந்த மலைஜாதியார்கள்.

(2) (1)-ம் பகுதியின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்ட அனுபந்த மலைஜாதியார்களின் ஜாபிதாவில் பார்லிமெண்டு சட்டத்தினால் ஒரு மலைஜாதியார் அல்லது மலைஜாதி சமுதாயத்தையாவது அந்த மலைஜாதியார் அல்லது மலைஜாதிச் சமுதாயம் இவர்களிலுள்ள ஒரு பிரிவினரையாவது தொகுதியினரையாவது சேர்க்கலாம் அல்லது ஜாபிதாவிலிருந்து நீக்கலாம்; ஆனால், மேற்சொன்னபடியன்றி, அப் பகுதியின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட விளம்பரம் பின் செய்த விளம்பரம் எதனாலும் மாற்றப்படலாகாது.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] 342-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[3] 1951-ம்ஞ்ரு அரசியல் அமைப்பு (முதல்திருத்தச்) சட்டத்தின் 10-வது பிரிவால், "ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலருடனே அல்லது ராஜப் பிரமுகருடனே கலந்தாலோசித்த பிறகு" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[4] "முதலாவது தபசிலின் அ பாகத்திலாவது ஆ பாகத்திலாவது குறிப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்துகளும் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[5] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் "ராஜயபாலருடனே அல்லது ராஜ்யப் பிரமுகருடனே" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[6] சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1956-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதியன்று பிறந்த ஜி.ஒ, 19-ம் நெ. விளம்பரத்துடன் இந்தியா கெஜட் விசேஷ வெளியிட்டின் II-ம் பாகத்தில் கண்ட 3-வது பிரிவை சேர்ந்த 163-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு (அனுபந்த ஜாதியாகள்) பற்றிய 1950-ம் வருஷத்திய உத்திரவையும், சட்டமந்திரிக் காரியாலயத்தில் 1951-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 20-ம் தேதியன்று பிறந்த ஜி. ஒ. 32-ம் நெ. விளம்பரத்துடன் இந்தியா கெஜட் II-ம் பாகத்தில் கண்ட 3-வது பிரிவைச் சேர்ந்த 1198-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு (அனுபந்த மலைஜாதியார்கள்) (இ பாக ராஜ்யங்கள்) பற்றிய 1951-ம் வருஷத்திய உத்தரவைப்பார்க்கலாம்.

பாகம் XVII [1]

ராஜாங்க பாஷை

அத்தியாயம் I—யூனியனின் பாஷை

பிரிவுகள் 343–344.

யூனியனின் ராஜாங்க பாஷை.

343. (1) யூனியனின் ராஜாங்க பாஷை தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட இந்தியாக இருத்தல்வேண்டும்.

யூனியனின் ராஜாங்கக் காரியங்களுக்காக உபயோகிக்கப்படவேண்டிய இலக்கங்களின் வடிவம் இந்திய இலக்கங்களின் சர்வதேச வடிவமாக இருத்தல்வேண்டும்.

(2) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இங்கிலீஷ் பாஷை உபயோகிக்கப்பட்டு வந்த யூனியன் ராஜாங்கக் காரியங்களுக்கெல்லாம் (1)-ம் பகுதியில் எவ்வாறு இருப்பினும் இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து பதினைந்து வருஷ காலத்திற்கு அந்தப் பாஷையே தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வரவேண்டும் :

எனினும், மேற்சொன்ன காலத்தில் யூனியனின் ராஜாங்கக் காரியங்களில் எவைகளுக்கேனும் இங்கிலீஷ் பாஷையோடு இந்தி பாஷையையும், இந்திய இலக்கங்களின் சர்வதேச வடிவத்தோடு தேவநாகரி வடிவத்தையும் உபயோகிப்பதற்கு ராஷ்டிரபதி உத்தரவினால் அதிகாரம் அளிக்கலாம்.

(3) இப் பிரிவில் எவ்வாறு இருப்பினும், மேற்சொன்ன பதினைந்து வருஷ காலத்திற்குப் பிறகு பார்லிமெண்டு சட்டத்தினால்—

(அ) இங்கிலீஷ் பாஷையை, அல்லது

(ஆ) இலக்கங்களின் தேவநாகரி வடிவத்தை

அச் சட்டத்தில் குறிப்பிடப்படும் காரியங்களுக்காக உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

ராஜாங்க பாஷையைப் பற்றி கமிஷனும் பார்லிமெண்டுக் கமிட்டியும்.

344. (1) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து ஐந்து வருஷம் முடிவடைந்ததும், அதற்கு அப்பால் அத் தொடக்கத்திலிருந்து பத்து வருஷம் முடிவடைந்ததும், ராஷ்டிரபதி தமது உத்தரவினால் ஓர் அக்கிராசனரையும் எட்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு பாஷைகளின் பிரதிநிதிகளாக ராஷ்டிரபதி நியமிக்கும் மற்றைய அங்கத்தினர்களையும் கொண்டதாயுள்ள ஒரு கமிஷனை அமைத்தல் வேண்டும் ; மேலும், அந்த உத்தரவு அக் கமிஷன் பின்பற்ற வேண்டிய நடைமுறையை வரையறுத்தல்வேண்டும்.

---

[1] இப் பாகத்தின் ஷரத்துக்கள்—

(i) யூனியனின் ராஜாங்க பாஷை,

(ii) ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையே அல்லது ஒரு ராஜ்யத்திற்கும் யூனியனுக்கும் இடையே வழங்கி வர வேண்டிய ராஜாங்க பாஷை,

(iii) உச்ச நீதிமன்றத்தில் நடவடிக்கைகளின் பாஷை இவற்றைப் பற்றிய வரையில் மட்டுமே ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படும்.

பாகம் XVII.—ராஜாங்க பாஷை.—பிரிவு 344.

(2) ராஷ்டிரபதிக்கு—

(அ) யூனியனின் ராஜாங்கக் காரியங்களுக்காக இந்தி பாஷையை மேன்மேலும் உபயோகித்தல் ;

(ஆ) யூனியனின் ராஜாங்கக் காரியங்கள் எல்லாவற்றிற்குமோ அல்லது எவற்றிற்கோ இங்கிலீஷ் பாஷையை உபயோகித்தலைக் கட்டுப்படுத்தல் ;

(இ) 348-வது பிரிவில் கூறப்பட்ட காரியங்கள் எல்லாவற்றிற்குமோ அல்லது அவைகளில் எவற்றிற்கோ உபயோகிக்கப்பட வேண்டிய பாஷை ;

(ஈ) யூனியனின் காரியங்களில் ஏதாவது குறிப்பிட்ட ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ உபயோகிக்கப்படவேண்டிய இலக்கங்களின் வடிவம் ;

(உ) யூனியனின் ராஜாங்க பாஷையையும், யூனியனுக்கும் ஒரு ராஜ்யத்திற்கும் இடையிலோ ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையிலோ வழங்கவேண்டிய பாஷையையும், அவற்றின் உபயோகத்தையும் பற்றி ராஷ்டிரபதியால் அக்கமிஷனுக்கு அனுப்பப்படும் மற்றைய விஷயம்

இவை குறித்துச் சிபார்சுகள் செய்தல் அக் கமிஷனின் கடமையாகும்.

(3) அக் கமிஷன் (2)-ம் பகுதியின் கீழ்த் தம்முடைய சிபார்சுகளைச் செய்கையில், கைத்தொழில், பண்பாடு, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் இந்தியாவின் முன்னேற்றத்தையும், அரசாங்கச் சேவை வர்க்கங்கள் சம்பந்தமாக இந்தி பேசும் பிரதேசங்களல்லாத பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் நியாயமான உரிமைகள் பாத்தியதைகள் இவற்றையும் பற்றி உரிய அளவிற்குக் கவனம் செலுத்தவேண்டும்.

(4) விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வோட்டினுல் முறையே மக்கட்சபையின் அங்கத்தினர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கட்சபையின் அங்கத்தினர்கள் இருபது பேரும் ராஜ்யபரிஷத்தின் அங்கத்தினர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ராஜ்யபரிஷத்தின் அங்கத்தினர்கள் பத்துப் பேரும் ஆக முப்பது அங்கத்தினர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று அமைக்கப்படவேண்டும்.

(5) (1)-ம் பகுதியின் கீழ் அமைக்கப்பட்ட கமிஷனின் சிபார்சுகளைப் பரிசீலனை செய்து அவற்றைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை ராஷ்டிரபதிக்கு அறிவித்தல் அக் கமிட்டியின் கடமையாகும்.

(6) 343-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும், (5)-ம் பகுதியில் குறிப்பிட்ட அறிக்கையை ராஷ்டிரபதி கவனித்தாராய்ந்த பிறகு அந்த அறிக்கை முழுவதையுமோ அதன் ஒரு பாகத்தையோ அனுசரித்துக் கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

பாகம் XVII.—ராஜாங்க பாஷை—பிரிவுகள்—345–348.

அத்தியாயம் II.—பிரதேச பாஷைகள்

ஒரு ராஜ்யத்தின் ராஜாங்க பாஷை அல்லது பாஷைகள்.

345. 346-வது, 347-வது பிரிவுகளின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினுல் அந்த ராஜ்யத்தில் வழங்கிவரும் பாஷைகளில் ஒன்றையோ பலவற்றையோ அல்லது இந்தியையோ அந்த ராஜ்யத்தின் ராஜாங்கக் காரியங்கள் எல்லாவற்றிற்குமாவது அல்லது எவற்றிற்குமாவது உபயோகப்படவேண்டிய பாஷை அல்லது பாஷைகளாகக் கொள்ளலாம் :

எனினும், அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் சட்டத்தினுல் வேறு விதமாய் ஏற்பாடு செய்யும்வரை அந்த ராஜ்யத்தினுள் எந்த ராஜாங்கக் காரியங்களுக்கு இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இங்கிலீஷ் பாஷை உபயோகிக்கப்பட்டு வந்ததோ அந்தக் காரியங்களுக்கு அந்தப் பாஷை தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வரவேண்டும்.

ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையே அல்லது ஒரு ராஜ்யத்திற்கும் யூனியனுக்கும் இடையே வழங்கிவர வேண்டிய ராஜாங்க பாஷை.

346. யூனியனில் ராஜாங்கக் காரியங்களுக்காக உபயோகிக்கலாம் என அப்போது அதிகாரபூர்வமாய் நிர்ணயிக்கப்பட்ட பாஷையே, ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையேயும் ஒரு ராஜ்யத்திற்கும் யூனியனுக்கும் இடையேயும் வழங்கிவரவேண்டிய ராஜாங்க பாஷையாகும்.

எனினும், இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட ராஜ்யங்கள் தமக்கிடையே இந்தி பாஷை ராஜாங்க பாஷையாக வழங்க வேண்டுமென்று ஒத்துக் கொண்டால், அந்தப் பாஷை அவ்வாறு வழங்கப்படலாம்.

ஒரு ராஜ்யத்தின் ஜனங்களில் ஒரு பகுதியினர் பேசும் பாஷையைப் பற்றிய விசேஷ ஏற்பாடு.

347. ஒரு ராஜ்யத்தின் ஜனங்களில் கணிசமான விகிதத்தினர் தாங்கள் பேசும் பாஷையின் வழக்காற்றை அந்த ராஜ்யம் அங்கீகரிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என அதன்பொருட்டுச் செய்து கொண்ட கோரிக்கையின் பேரில், ராஷ்டிரபதிக்கு நன்கு விளங்கினுல், அவர் தாம் குறிப்பிடும் காரியத்திற்கு அந்த ராஜ்யம் முழுவதிலுமோ அல்லது அதன் ஒரு பாகத்திலோ அந்தப் பாஷையையும் அதிகார பூர்வமாக அங்கீகரித்தல் வேண்டும் என உத்தரவிடலாம்.

அத்தியாயம் III.—உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் வகையராவின் பாஷை

உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றங்களிலும் சட்டங்கள், மசோதாக்கள் வகையராவுக்காகவும் உபயோகிக்கப்பட வேண்டிய பாஷை.

348. (1) இப் பாகத்தின் மேற்கூறிய ஷரத்துக்களில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டு சட்டத்தினுல் வேறு விதமாக ஏற்பாடு செய்யும்வரை—

(அ) உச்ச நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றமு ஒவ்வொன்றிலும் நிகழும் சகல நடவடிக்கைகளும்,

(ஆ) (i) பார்லிமெண்டுச் சபை ஒன்றிலாவது, ஒருராஜ்யத்தின் சட்டமன்றச் சபையிலாவது சபை ஒன்றிலாவது கொணரப்படும் சகல மசோதாக்களும அவற்றிற்குப் பிரேரேபிக்கப்படும் சகலதிருத்தங்களும்,

பாகம் XVII.—ராஜாங்க பாஷை பிரிவு 348.

(ii) பார்லிமெண்டால் அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சகல சட்டங்களும் ராஷ்டிரபதியால் அல்லது ஒரு ராஜ்யத்தின் ராஜ்ய பாலரால்[1] * * * பிரகடனம் செய்யப்பட்ட சகல அவசரச் சட்டங்களும்,

(iii) இந்த அரசியல் அமைப்பின்கீழாவது பார்லிமெண்டால் அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் கீழாவது பிறப்பிக்கப்பட்ட சகல உத்தரவுகளும், விதிகளும், ரெகுலேஷன்களும், துணை விதிகளும்

இவற்றின் அதிகார ரீதியான வாசகங்களும்

இங்கிலீஷ் பாஷையில் இருத்தல் வேண்டும்.

(2) (1)-ம் பகுதியின் (அ) உட்பகுதியில் எவ்வாறு இருப்பினும், ஒரு ராஜ்யத்தின் [2][ராஜ்யபாலர்] ராஷ்டிரபதியின் முற்சம்மதத்துடன் அந்த ராஜ்யத்தில் பிரதான இடமுடைய உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் இந்தி பாஷையையாவது அந்த ராஜ்யத்தின் ராஜாங்கக் காரியங்கள் எவற்றிற்காகவேனும் உபயோகிக்கப்படும் மற்றெந்தப் பாஷையையாவது உபயோகிப்பதற்கு அதிகார பூர்வமாக அனுமதி அளிக்கலாம் :

எனினும், அத்தகைய உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஒரு தீர்ப்பு, டிக்கிரி அல்லது உத்தரவிற்கு இப்பகுதியில் உள்ளது எதுவும் பிரயோகப்படமாட்டாது.

(3) (1)-ம் பகுதியின் (ஆ) உட்பகுதியில் எவ்வாறு இருப்பினும், ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தில் கொணரப்படும் மசோதாக்களிலாவது, அல்லது அச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்களிலாவது, அந்த ராஜ்யத்தின் [3][ராஜ்யபாலரால்] பிரகடனம் செய்யப்படும் அவசரச் சட்டங்களிலாவது, அந்த உட்பகுதியின் (iii)-ம் பாராவில் குறிப்பிட்ட உத்தரவு, விதி, ரெகுலேஷன் அல்லது துணை விதி எதிலாவது உபயோகிப்பதற்காக இங்கிலீஷ் பாஷையல்லாத வேறொரு பாஷையை அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் விதித்திருந்தால், அந்த ராஜ்யத்தின் ராஜாங்கக் கெஜட்டில் அந்த ராஜ்யத்தின் ராஜ்யபாலருடைய [4] * * * அதிகாரத்தின்கீழ்

---

[1] "அல்லது ராஜ்யப் பிரமுகர்கள்" என்னும் சொற்கள் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[2] மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "ராஜ்யபாலரோ ராஜ்ய பிரமுகரோ" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[3] மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் "ராஜ்யபாலர் அல்லது ராஜப் பிரமுகரால்" என்பதற்கு பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[4] "அல்லது ராஜப் பிரமுகருடைய" என்னும் சொற்கள் மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XVII.—ராஜாங்க பாஷை—பிரிவுகள் 348-350.

இங்கிலீஷ் பாஷையில் பிரசுரிக்கப்படும் அதன் மொழிப் பெயர்ப்பே இப்பிரிவின்கீழ் இங்கிலீஷ் பாஷையில் அதன் அதிகார ரீதியான வாசகமாகக் கருதப்படவேண்டும்.

பாஷையைப் பற்றிச் சில சட்டங்களை இயற்று வதற்கான விசேஷ நடைமுறை.

349. இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து பதினைந்து வருஷ காலத்திற்கு, 348-வது பிரிவின் (1)-ம் பகுதியில் சொல்லப்பட்ட காரியங்களில் எதற்காக வேனும் உபயோகிக்கவேண்டிய பாஷையைப் பற்றி ஏற்பாடு செய்யும் மசோதா அல்லது திருத்தம் எதையும், ராஷ்டிரபதியின் முன்னனுமதியின்றிப் பார்லிமெண்டுச் சபை எதிலும் கொணரவோ பிரேரேபிக்கவோ கூடாது; மேலும், ராஷ்டிரபதி 344-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ் அமைக்கப்பட்ட கமிஷனின் சிபார்சுகளையும் அப் பிரிவின் (4)-ம் பகுதியின் கீழ் அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையையும் கவனித் தாராய்ந்த பிறகன்றி, அந்தகைய மசோதா எதையாவது கொணருதற்கோ அத்தகைய திருத்தம் எதையாவது பிரேரேபிப்பதற்கோ தமது அனுமதியை அளித்தலாகாது.

அத்தியாயம் IV.—விசேஷக் கட்டளைகள்

மனக்குறைகளைத் தீர்க்கும் பொருட்டுச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களில் உபயோகிக்கப்பட வேண்டிய பாஷை.

350. ஒவ்வொருவரும் தம் மனக்குறையைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரி ஒருவருக்கு, சந்தர்ப்பத் திற்கு ஏற்ப, யூனியனிலாவது அந்த ராஜ்யத்திலாவது உப யோகிக்கப்படும் பாஷைகளில் எதிலேனும் விண்ணப்பம் சமர்ப்பிக்க உரிமை உள்ளவர் ஆவார்.

ஆரம்ப தசையில் தாய்பாஷையில் போதிப்பதற்கான வசதிகள்.

(அ) பாஷைச் சிறுபான்மைத் தொகுதியினர்களின் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வித் தசையில் தாய்ப் பாஷையில் போதிப்பதற்காகப் போதுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க ஒவ்வொரு ராஜ்யமும் ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு ஸ்தல அதிகார நிலையமும் முயல வேண்டும்; அந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அவசியமானதென்றே அல்லது தகுதியானதென்றே தாம் கருதும் உத்தரவுகளை ராஷ்டிரபதி ஒரு ராஜ்யத்திற்குப் பிறப்பிக்கலாம்.

(ஆ) (1) பாஷை சிறுபான்மையினருக்காக ராஷ் டிரபதியால் நியமிக்கப்பட்ட ஒரு விசேஷ உத்தியோகஸ்தர் இருத்தல் வேண்டும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் இடைச்சேர்பாக அமைத்துக்கொள்ளப் பட்டன.

பாகம் XVII.—ராஜாங்க பாஷை—பிரிவுகள் 350-351.

பாஷைச் சிறுபான்மையினருக்கு விசேஷ உத்தியோகஸ்தர்.

(இ) பாஷை சிறுபான்மையினருக்காக இந்த அரசியலமைப்பின்கீழ், ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்புக்கள் பற்றிய எல்லா விஷயங்களையும் ஆராய்ந்துபார்த்து, அவ் விஷயங்களைப் பற்றி ராஷ்டிரபதி உத்தரவிடும் கால அளவு முடிவடையும்போது, ராஷ்டிரபதிக்கு அறிவித்தல் அவ்விசேஷ உத்தியோகஸ்தரின் கடமையாகும் ; ராஷ்டிரபதி அத்தகைய அறிக்கைகளை எல்லாம் பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையில் வைக்கும்படியும் சம்பந்தப்பட்ட ராஜ்ய சர்க்கார்களுக்கு அனுப்பும்படியும் செய்யவேண்டும்.

இந்தி பாஷையை அபிவிருத்தி செய்வதற்கான கட்டளை.

351. இந்தி பாஷை பரவுவதற்கு ஆவன செய்தலும், இந்தியாவின் பலகூறுடைய பண்பாட்டின் சகல அம்சங்களையும் வெளியிடுவதற்கேற்ற கருவியாகப் பயன்படுமாறு அதை அபிவிருத்தி செய்தலும், அதனுடைய தனிப் பண்பிற்கு இடையூறின்றி இந்துஸ்தானியிலும் எட்டாவது தபசிலிற் குறிப்பிட்ட மற்றைய இந்திய பாஷைகளிலும் வழங்கும் வடிவங்களையும் நடையையும் சொற்றொடர்களையும் கிரகித்துக் கொள்வதன் மூலமாகவும், அதனுடைய சொல் வளத்திற்கு அவசியமாகவோ உசிதமாகவோ உள்ள இடங்களில், முதலாவது சமஸ்கிருதத்திலிருந்தும் அடுத்தபடியாக மற்றையப் பாஷைகளிலிருந்தும் சொற்களை எடுத்துக் கொள்வதன் மூலமாகவும் இந்தி பாஷையைச் செழிப்புறச் செய்தலும் யூனியனின் கடமையாகும்.

பாகம் XVIII

ஆபத்துநிலைக்கான ஏற்பாடுகள்

பிரிவு 352.

ஆபத்து நிலைப் பிரகடனம்.

[1] 352. (1) யுத்தத்தினாலாவது வெளி ஆக்ரமிப்பினாலாவது உட் குழப்பத்தினாலாவது பேராபத்து நிலை ஒன்று ஏற்பட்டு அதனால் இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிப் பரப்பிலுள்ள ஒரு பாகத்தின் பாதுகாப்பிற்கு அபாயம் நேரும் என்று ராஷ்டிரபதிக்கு நன்கு விளங்கினால், அவர் அந்த நிலை வந்துள்ளதென்று பிரகடனத்தினால் அறிக்கை செய்யலாம்.

(2) (1)-ம் பகுதியின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட ஒரு பிரகடனம்—

(அ) பின்செய்த பிரகடனம் ஒன்றால் ரத்துச் செய்யப்படலாம் ;

(ஆ) பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன் னிலையிலும் வைக்கப்படவேண்டும் ;

(இ) இரண்டு மாதம் முடிவடைவதற்கு முன் பார்லி மெண்டின் இரு சபைகளின் தீர்மானங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டாலன்றி அக் காலம் முடி வடைந்ததும் அழலற்றுப் போகும் :

எனினும், மக்கட்சபை கலைக்கப்பட்டிருக்கும் காலத்தில் அத்தகைய ஒரு பிரகடனம் பிறப்பிக்கப்பட்டிருந்து, அல்லது (இ) உட்பகுதியில் குறிப்பிட்ட இரண்டு மாத காலத்திற்குள் மக்கட்சபையின் கலைப்பு நேரிட்டிருந்து, அதனோடு அப் பிரகட னத்தை ஒப்புக்கொள்ளும் தீர்மானம் ஒன்று ராஜ்யபரிஷத் தால் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அக் காலம் முடிவடைவதற்குள் அப் பிரகடனத்தைப் பற்றி மக்கட் சபையால் எத் தீர்மானமும் நிறைவேற்றப்படாமலிருந்தால், மக்கட்சபை மறுபடியும் அமைக்கப்பட்ட பிறகு முதலில் கூடும் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடையுமுன் அப் பிரகடனத்தை ஒப்புக்கொள்ளும் தீர்மானம் ஒன்று மக்கட் சபையாலும் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அக் காலம் முடிவடைந்ததும், அப் பிரகடனம் அழலற்றுப்போகும்.

(3) இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிப்பரப்பின் ஒரு பாகத்தின் பாதுகாப்பிற்கு யுத்தத்தினாலோ வெளி ஆக்ரமிப்பினாலோ உட்குழப்பத்தினாலோ அபாயம் நேரும் என அறிவிக்கும் ஆபத்து நிலைப்பிரகடனம்—அந்த அபாயம் மிக நெருங்கிவிட்டது என்று ராஷ்டிரபதிக்கு நன்கு விளங் கினால் யுத்தம் அல்லது அத்தகைய ஆக்ரமிப்பு அல்லது குழப்பம் நிகழ்வதற்கு முன்னரே—செய்யப்படலாம்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், கீழ்க்கண்ட புதிய பகுதி 352-வது பிரிவுடன் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

"(4) உட் குழப்பம் அல்லது அது வெகுவாக ஏற்படக்கூடிய நிலை காரண மாக மட்டுமே செய்யப்பட்ட ஆபத்து நிலைப் பிரகடனம் எதுவும் ஜம்மு-காஷ்மீர் ராஜ்ய அரசாங்கத்தார் கேட்டுக்கொள்வதன்பேரிலோ அல்லது அவர்கள் சம்மதத்துடனே செய்யப்பட்டாலன்றி (354-வது பிரிவு நீங்கலாக) அது அந்த ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது".

பாகம் XVIII.—ஆபத்துநிலைக்கான ஏற்பாடுகள்—பிரிவுகள் 353-356.

ஆபத்து நிலைப் பிரகடனத்தின் பயன்.

353. ஆபத்துநிலைப் பிரகடனம் ஒன்று அமுலிலிருந்தால் அப்போது—

(அ) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும் ஒரு ராஜ்யத்தின் நிர்வாக சக்தி செலுத்தப்பட வேண்டிய விதத்தைப் பற்றி அதற்குக் கட்டளைகள் இடுவதற்கும் யூனியனின் நிர்வாக சக்தி வியாபிக்கும் ;

(ஆ) ஒரு விஷயத்தைப் பற்றிச் சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்குள்ள சக்தியில், அவ்விஷயம் யூனியன் ஜாபிதாவில் குறிக்கப்படாததாக இருந்த போதிலும் அது பற்றி யூனியனுக்கு அல்லது யூனியனின் உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சக்திகளை அளிப்பதற்காவது கடமைகளை இடுவதற்காவது அல்லது சக்திகளை அளிப்பதற்கும் கடமைகளை இடுவதற்கும் அதிகாரம் கொடுப்பதற்காவது சட்டங்கள் செய்யும் சக்தியும் அடங்கியிருக்கும்

ஆபத்து நிலைப் பிரகடனம் ஒன்று அமுலிலிருக்கையில் அரசிறைகளின் பங்கீடு பற்றிய ஷரத்துக்களின் பிரயோகம்.

354. (1) ஆபத்துநிலைப் பிரகடனம் ஒன்று அமுலிலிருந்து வருகையில், ராஷ்டிரபதி உத்தரவினால் 268 முதல் 279 வரை யுள்ள பிரிவுகளின்ஷரத்துக்கள் அனைத்துமோ அல்லது அவை களில் எவையேனுமோ, அப் பிரகடனம் அமுலற்றுப்போகும் நிதிவருஷம் முடிவடையும் காலத்திற்கு எப்படியும் மேற் போகாமல் அந்த உத்தரவில் குறிப்பிடப்படும் காலத்திற்கு, தமக்குத் தகுதியாகத் தோற்றும் விலக்குகள் அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டு, பிரயோகப்பட வேண்டும் என்று கட்டளையிடலாம்.

(2) (1)-ம் பகுதியின்கீழ்ச் செய்த உத்தரவு ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பிறகு கூடிய சீக்கிரம் பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கப்பட வேண்டும்.

வெளி ஆக்கிரமிப்பிலிருந்தும் உட்குழப்பத்திலிருந்தும் ராஜ்யங்கட்குப் பாதுகாத்தல் பற்றி யூனியனின் கடமை.

355. ஒவ்வொரு ராஜ்யத்தையும் வெளி ஆக்ரமிப்பிலிருந்தும் உட்குழப்பத்திலிருந்தும் பாதுகாத்தலும், ஒவ்வொரு ராஜ்யத்தின் ஆட்சியையும் இந்த அரசியலமைப்பின் ஷரத்துக்களின்படி நிச்சயமாய் நடைபெறச் செய்தலும் யூனியனின் கடமையாகும்.

ராஜ்யங்களில் அரசியல் அமைப்புத திட்டம் முறிந்து போனால் ஏற்பாடுகள்.

[1]**356.** (1) ஒரு ராஜ்யத்தின் [2][ராஜ்யபாலரிடமிருந்து] அறிக்கை ஒன்றைப் பெற்றதன்பேரில் அல்லது வேறு வகையில், அந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களின்படி அந்த

---

[1] 356-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், " ராஜ்யபாலரிடமிருந்தோ, ராஜப் பிரமுகரிடமிருந்தோ " என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XVIII.—ஆபத்துநிலைக்கான ஏற்பாடுகள்—பிரிவு 356.

ராஜ்யத்தின் ஆட்சியை நடத்த முடியாத நிலை ஒன்று ஏற் பட்டுள்ளது என்று ராஷ்டிரபதிக்கு நன்கு வினங்கினால், ராஷ்டிரபதி பிரகடனத்தினால்—

(அ) அந்த ராஜ்யத்தின் சர்க்காரின் அலுவல்கள் எல்லாவற்றையும் அல்லது அவைகளில் எவற்றை யும் [1][அந்த ராஜ்ய பாலரிடம்] அல்லது அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் அல்லாத அந்த ராஜ்யத்திலுள்ள மற்றெந்த நிலையம் அல்லது அதிகாரியிடம் நிலை பெற்றிருக்கும் அல்லது அவர் களால் செலுத்தப்படத்தக்க சக்திகள் எல்லா வற்றையும் அல்லது அவைகளில் எவற்றையும் தாமே மேற்கொள்ளலாம் ;

(ஆ) அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சக்தி கள் பார்லிமெண்டாலோ அல்லது அதன் அதிகார ரத்தின் கீழோ செலுத்தப்படத்தக்கவையாகும் என்று அறிவிக்கலாம் ;

(இ) அந்த ராஜ்யத்திலுள்ள ஒரு நிலையம் அல்லது அதிகாரி சம்பந்தமாக இந்த அரசியலமைப்பின் எந்த ஷரத்துக்களின் பிரயோகத்தையேனும் முழுவதுமோ அல்லது ஒரு பாகத்தையோ தாற் காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான ஷரத்துக்கள் உட்பட, அப் பிரகடனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமானவை என்றே விரும்பத் தக்கவை என்றே ராஷ்டிரபதிக்குத் தோற்றும் சார்பானவையும் விளைவானவையுமான ஷரத்துக்களைச் செய்யலாம் ;

எனினும், இப் பகுதியில் உள்ளது எதுவும் ஓர் உயர் நீதி மன்றத்தினிடம் நிலைபெற்றிருக்கும் அல்லது அதனால் செலுத் தப்படலாகும் சக்திகளில் எவற்றையேனும் தாமே மேற் கொள்ளவாவது, உயர் நீதிமன்றங்கள் சம்பந்தமான இந்த அரசியலமைப்பின் எந்த ஷரத்தின் பிரயோகத்தையேனும் முழுவதுமோ அல்லது ஒரு பாகத்தையோ தாற்காலிகமாக நிறுத்தி வைக்கவாவது ராஷ்டிரபதிக்கு அதிகாரம் கொடுக்க மாட்டாது.

(2) அத்தகைய பிரகடனம் எதுவும் பின்னர்ச் செய்ய படும் பிரகடனம் ஒன்றால் ரத்துச் செய்யப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

(3) இப் பிரிவின் கீழ்ச் செய்த ஒவ்வொரு பிரகடனமும் பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கப்படவேண்டும் ; மேலும், அப்பிரகடனம் முந்திச் செய்த பிரகடனம் ஒன்றை ரத்துச் செய்வதாயிருந்தாலன்றி, இரண்டு மாதம் முடிவடைவதற்கு முன் பார்லிமெண்டின் இரு சபைகளின் தீர்மானங்களினால் அது ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தாலன்றி அக் காலம் முடிவடைந்ததும் அமலற்றுப் போகும் :

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், "சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்ய பாலர் அல்லது ராஜப் பிரமுகரிடம்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

பாகம் XVIII.—ஆபத்துநிலைக்கான ஏற்பாடுகள்— பிரிவுகள் 356 357.

எனினும், (முந்திச் செய்த பிரகடனம் ஒன்றை ரத்துச் செய்யும் பிரகடனமல்லாத) அத்தகைய பிரகடனம் ஒன்று மக்கட்சபை கலைக்கப்பட்டிருக்கும் காலத்தில் பிறப்பிக்கப் பட்டிருந்து, அல்லது இப் பகுதியில் குறிப்பிட்ட இரண்டு மாத காலத்திற்குள் மக்கட் சபையின் கலைப்பு நேரிட்டிருந்து, அதனோடு அப் பிரகடனத்தை ஒப்புக் கொள்ளும் தீர்மானம் ஒன்று ராஜ்ய பரிஷத்தால் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அக் காலம் முடிவடைவதற்குள் அப் பிரகடனத்தைப் பற்றி மக்கட் சபையால் எத் தீர்மானமும் நிறைவேற்றப் படாமலிருந்தால், மக்கட் சபை மறுபடியும் அமைக்கப்பட்ட பிறகு முதலிற் கூடும் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடி வடையுமுன் அப் பிரகடனத்தை ஒப்புக் கொள்ளும் தீர்மானம் ஒன்று மக்கட் சபையாலும் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அக் காலம் முடிவடைந்ததும், அப் பிரகடனம் அமுலற்றுப் போகும்.

(4) அப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பிரகடனம் ரத்துச் செய்யப்பட்டாலன்றி, (3)-ம் பகுதியின்கீழ் அப்பிரகடனத்தை ஒப்புக்கொள்ளும் தீர்மானங்களில் இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலம் முடி வடைந்ததும் அமுலற்றுப் போகும் :

எனினும், அத்தகைய பிரகடனம் தொடர்ந்து அமுலி லிருந்து வருவதை ஒப்புக் கொள்ளும் தீர்மானம் பார்லி மெண்டின் இரு சபைகளால் நிறைவேற்றப்பட்டால், அப்படி நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தடவையிலும், அப்பிரகடனம் ரத்துச் செய்யப்பட்டாலன்றி, மற்றப்படி இப் பகுதியின்கீழ் அது அமுலற்றுப்போயிருக்கக் கூடிய தேதியிலிருந்து மேலும் ஆறு மாத காலம் தொடர்ந்து அமுலிலிருந்து வரும்; ஆனால், அத்தகைய பிரகடனம் எதுவும் எவ்வாற்றானும் மூன்று வருஷங்களுக்கு மேற்பட்டு அமுலிலிருத்தலாகாது :

அன்றியும், மக்கட்சபையின் கலைப்பு அத்தகைய ஆறு மாத காலத்தில் நேரிட்டிருந்து, அதனோடு அப் பிரகடனம் தொடர்ந்து அமுலிலிருந்து வருதலை ஒப்புக்கொள்ளும் தீர்மா மானம் ஒன்று ராஜ்ய பரிஷத்தால் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அக் காலத்தில் அப் பிரகடனம் தொடர்ந்து அமுலிலிருந்து வருதல் பற்றி மக்கட் சபையால் எத் தீர்மான மும் நிறைவேற்றப்படாமலிருந்தால், மக்கட்சபை மறுபடி யும் அமைக்கப்பட்ட பிறகு முதலிற் கூடும் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடையுமுன் அப்பிரகடனம் தொடர்ந்து அமுலிலிருந்து வருதலை ஒப்புக்கொள்ளும் தீர்மானம் ஒன்று மக்கட்சபையாலும் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அக் காலம் முடிவடைந்ததும், அப் பிரகடனம் அமுலற்றுப் போகும்.

[1] 357. (1) 356-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ் பிறப் பிக்கப்பட்ட ஒரு பிரகடனத்தினுல் ராஜ்யத்தின் சட்ட மன்றத்தின் சக்திகள் பார்லிமெண்டால் அல்லது அதன் அதி காரத்தின்கீழ்ச் செலுத்தப்படக்கூடியனவாகும் என்று அறி விக்கப்பட்டிருந்தால்— 356-வது பிரிவின் கீழ்ப் பிறப் பிக்கப்பட்ட பிரகடனத் தின்கீழ்ச் சட்ட நிருபண சக்திகளின் செயற்பாடு.

(அ) சட்டங்கள் செய்ய அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத் திற்குள்ள சக்தியை ராஷ்டிரபதிக்கு அளிக்கவும்,

[1] 357-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

அப்படி அனிக்கப்பட்ட சக்தியை ராஷ்டிரபதி தக்கவையெனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதற்கென அவரால் குறிப்பிடப்படும் வேறெந்த அதிகாரிக்கேனும் பிரதிநிதித்துவ அதிகாரம் கொடுக்க ராஷ்டிரபதிக்கு அதிகாரமளிக்கவும் பார்லிமெண்டுக்குச் சக்தி உண்டு ;

(ஆ) யூனியனுக்கோ அதன் உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகள் இவர்களுக்கோ சக்திகளை அளிப்பதற்காவது கடமைகளை இடுவதற்காவது அல்லது சக்திகளை அளிப்பதற்கும் கடமைகளை இடுவதற்கும் அதிகாரம் கொடுப்பதற்காவது சட்டங்களைச் செய்யப் பார்லிமெண்டுக்கேனும் (அ) உட்பகுதியின்கீழ்ச் சட்டங்கள் செய்யச் சக்திகள் வாய்ந்த ராஷ்டிரபதிக்கேனும் மற்றைய அதிகாரிக்கேனும் சக்தி உண்டு.

(இ) மக்கட்சபையின் நடைக்காலம் அல்லாத காலத்தில் அந்த ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து செலவு செய்வதைப் பார்லிமெண்டு அனுமதிக்கும் வரை அத்தகைய செலவிற்கு அனுமதி அளிக்க ராஷ்டிரபதிக்குச் சக்தி உண்டு.

(2) அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் சக்தியைச் செலுத்திப் பார்லிமெண்டால் அல்லது (1)-ம் பகுதியின் (அ) உட்பகுதியில் குறிப்பிட்ட ராஷ்டிரபதியால் அல்லது மற்றைய அதிகாரியால் செய்யப்பட்ட எச் சட்டத்தையும், 356-வது பிரிவின் கீழ் பிரகடனம் ஒன்று பிறப்பிக்கப்பட்டிராவிட்டால் பார்லிமெண்டோ ராஷ்டிரபதியோ அத்தகைய மற்ற அதிகாரியோ செய்யச் சக்தியற்றவர்களாய் இருந்திருப்பாராஞல் அச்சட்டம் அப்படிச் சக்தியற்றிருக்கும் அளவுக்கு அப் பிரகடனம் அமுலற்றுப்போய் ஒரு வருஷ காலம் முடிவடைந்தும்—அக் காலம் முடிவடைவதற்குமுன் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட காரியங்கள் சம்பந்தமாகவன்றி அப்படி அமுலற்றுப் போகும் ஷரத்துகள் அதற்குமுன் உரிய சட்டமன்றத்தின் சட்டத்தினுல் ரத்துச் செய்யப்பட்டிருந்தால் அல்லது மாறுதலுடனே மாறுதல் இல்லாமலோ மீண்டும் சட்டமாக இயற்றப்பட்டிருந்தால் அன்றி—அமுலற்றுப் போகும்.

ஆபத்து நிலைகளின் போது 19-வது பிரிவின் ஷரத்துக்களைத் தாற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

358. ஆபத்துநிலைப் பிரகடனம் ஒன்று அமுலிலிருக்கையில், 19-வது பிரிவில் உள்ளது எதுவும் III-ம் பாகத்தில் அடங்கியிருக்கும் ஷரத்துக்கள் இல்லாவிட்டால் அப்பாகத்தில் வரையறுக்கப்பட்டவாறு எந்தச் சட்டத்தையும் செய்யவோ எந்த நிர்வாக நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளவோ ஒரு ராஜ்யத்திற்கு உள்ள சக்தியைத் தடைப்படுத்தாது; ஆனல், அப்படிச் செய்யப்பட்ட சட்டம் எதுவும் அப்படிச் சக்தியற்றிருக்கும் அளவிற்கு அப் பிரகடனம் அமுலற்றுப் போனவுடன்—அச் சட்டம் அப்படி அமுலற்றுப் போவதற்குமுன் செய்யப்பட்டவை அல்லது செய்யாமல் விடப்பட்டவை இவை சம்பந்தமாக அன்றி—அமுலற்றுப்போகும்.

பாகம் XVIII.—ஆபத்து நிலைக்கான ஏற்பாடுகள்—பிரிவுகள் 359—360.

ஆபத்து நிலைகளின் போது III-ம் பாகத்தினால் அளிக்கப்பட்ட உரிமைகளை நிறைவேற்று தலைத் தாற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

359. (1) ஆபத்துநிலைப் பிரகடனம் ஒன்று அமுலிலிருக்கும் காலத்தில், ராஷ்டிரபதி உத்தரவினால் III-ம் பாகத்தில் அளிக்கப்பட்ட உரிமைகளில் அந்த உத்தரவில் கூறப்பட்டவைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதற்குள்ள உரிமையும், அப்படிக் கூறப்பட்ட உரிமைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு நீதிமன்றத்தில் முடிவு வருமலிருக்கும் சகல நடவடிக்கைகளும் அப்பிரகடனம் அமுலிலிருக்கும் காலத்திற்காவது அந்த உத்திரவில் குறிப்பிடப்படும் அதற்குக் குறைந்த காலத்திற்காவது தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும் என்று அறிவிக்கலாம்.

(2) மேற்சொன்னவாறு செய்யப்பட்ட ஓர் உத்தரவு இந்தியாவின் ஆட்சிப்பரப்பு முழுவதிலுமாவது அதன் எப் பாகத்திலாவது வியாபிக்கலாம்.

(3) (1)-ம் பகுதியின் கீழ்ச் செய்யப்பட்ட உத்தரவு ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பிறகு இயன்ற விரைவில், பார்லிமெண்டுச் சபை ஒவ்வொன்றின் முன்னிலையிலும் வைக்கப்படவேண்டும்.

நிதிநெருக்கடி பற்றிய ஏற்பாடுகள்.

[1] 360. (1) இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிப்பரப்பிலுள்ள ஒரு பாகத்தின் நிதி சம்பந்தமான உறுதிப்பாடு அல்லது உயர்ந்த மதிப்பிற்கு அபாயம் நேரிடலாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று ராஷ்டிரபதிக்கு நன்கு விளங்கினால், அவர் ஒரு பிரகடனத்தால் அந்நிலை ஏற்பட்டுள்ளதென அறிக்கை செய்யலாம்.

(2) 352-வது பிரிவின் (2)-ம் பகுதியின் ஷரத்துக்கள் 352-வது பிரிவின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆபத்துநிலைப் பிரகடனம் சம்பந்தமாகப் பிரயோகப்படுவதுபோலவே இப் பிரிவின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட ஒரு பிரகடனம் சம்பந்தமாகவும் பிரயோகப்படும்.

(3) (1)-ம் பகுதியில் கூறப்பட்ட அத்தகைய பிரகடனம் ஒன்று அமுலிலிருக்கும் காலத்தில், கட்டளைகளில் குறிப்பிடப்படும் நிதி முறைமைபற்றிய கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு ஒரு ராஜ்யத்திற்கு அவ்வாறு கட்டளைகள் பிறப்பிப்பதற்கும், இது விஷயமாக ராஷ்டிரபதி அவசியமானவை என்னும் போதுமானவை என்று கருதும் மற்றையக் கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும் யூனியனின் நிர்வாக அதிகாரம் வியாபிக்கும்.

(4) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும்—

(அ) அத்தகைய கட்டளை ஒன்றில்—

(i) ஒரு ராஜ்யத்தின் காரியங்கள் சம்பந்தமாகச் சேவை செய்பவர்கள் எல்லாருடைய அல்லது அவர்களில் ஒரு வகுப்பினருடைய சம்பளங்களையும் படிகளையும் குறைக்கவேண்டும் என்னும் ஷரத்தும்,

---

[1] 360-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

பாகம் XVIII.—ஆபத்துநிலைக்கான ஏற்பாடுகள்—பிரிவு 360.

(ii) சகல நிதி மசோதாக்களும் அல்லது 207-வது பிரிவின் ஷரத்துக்கள் பிரயோகப்படும் மற்றைய மசோதாக்களும் அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிறகு அவைகள் ராஷ்டிரபதி கவனித்தாராய்வதற்காக ஒதுக்கிவைக்கப்பட வேண்டும் என்னும் ஷரத்தும்

அடங்கியிருக்கலாம் ;

(ஆ) இப் பிரிவின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட பிரகடனம் ஒன்று அமுலிலிருக்கும் காலத்தில், உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றங்கள் இவற்றின் நீதிபதிகள் உட்பட யூனியனின் காரியங்கள் சம்பந்தமாகச் சேவை செய்பவர்கள் எல்லாருடைய அல்லது அவர்களில் ஒரு வகுப்பினருடைய சம்பளங்களையும் படிகளையும் குறைப்பதற்காகக் கட்டளைகள் பிறப்பிக்க ராஷ்டிரபதி சக்தி உடையவர் ஆவார்.

பாகம் XIX

பலவகை

பிரிவு 361

ராஷ்டிரபதி, ராஜ்ய பாலர்கள், ராஜப்பிரமுகர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு.

[1]361. (1) ராஷ்டிரபதி அல்லது ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலர் அல்லது ராஜப்பிரமுகர் அவருடைய பதவிக்குரிய சக்திகளைச் செலுத்துதல் கடமைகளைச் செய்தல் இவை விஷயமாகவும், அச்சக்திகளைச் செலுத்துதலிலும் கடமைகளைச் செய்தலிலும் அவரால் செய்யப்படும் அல்லது அவரால் செய்யப்பட்டதாகக் கொள்ளலாகும் காரியத்தைப்பற்றியும் எந்த நீதிமன்றத்திற்கும் உத்தரவாதி ஆகமாட்டார்:

எனினும், 61-வது பிரிவின்கீழ் ஒரு குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்காகப் பார்லிமெண்டுச் சபை ஒன்றினால் நியமிக்கப்படும் அல்லது நேமகம் செய்யப்படும் ஒரு நீதிமன்றம், நியாயசபை அல்லது நிலையத்தால் ராஷ்டிரபதியின் நடத்தை பரிசீலனை செய்வதற்குக் கொணரப்படலாம்:

அன்றியும், இப் பகுதியில் உள்ளது எதுவும் இந்தியச் சர்க்காரின் மீதோ ஒரு ராஜ்யத்தின் சர்க்காரின்மீதோ ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள எவருக்கும் உள்ள உரிமையைக் கட்டுப்படுத்துவதாக அர்த்த விளக்கம் செய்யலாகாது.

(2) ராஷ்டிரபதியின்மீதோ அல்லது ஒரு ராஜ்யத்தின் [2][ராஜ்யபாலரின் மீதோ] அவர் பதவியிலுள்ள காலத்தில் எந்த நீதிமன்றத்திலேனும் எவ்விதமான குற்ற நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவோ தொடர்ந்து நடத்தவோ கூடாது.

(3) ராஷ்டிரபதியை அல்லது ஒரு ராஜ்யத்தின் [3][ராஜ்யபாலரை] அவர் பதவிக் காலத்தில் கைது செய்வதற்கோ அல்லது சிறைப்படுத்துவதற்கோ கட்டளை எதுவும் எந்த நீதிமன்றத்திலிருந்தும் பிறத்தலாகாது.

(4) ராஷ்டிரபதியின்மீது அல்லது ஒரு ராஜ்யத்தின் [4][ராஜ்யபாலரின்மீது] பரிகாரம் கோரிய சிவில் நடவடிக்கைகள் எவற்றையும், ராஷ்டிரபதியாக அல்லது அந்த அந்த

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 361-வது பிரிவில் (4)-ம் பகுதியுடன் கீழ்க்கண்ட பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் :—

"(5) ஜம்மு-காஷ்மீரின் ஸதர்-இ-ரியசத் விஷயமாய், இப் பிரிவின் ஷரத்துக்கள் ஒரு ராஜப் பிரமுகருக்குப் பிரயோகப்படும் விதமாகவும் அந்த ராஜ்யத்தின் அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு முரண்படாமலும் பிரயோகப்படும்."

[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், "ராஜ்யபாலர் அல்லது ராஜபிரமுகரின் மீதோ" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[3] மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் "ராஜ்யபாலர் அல்லது ராஜப்பிரமுகரை" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[4] மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "ராஜ்யபாலர் அல்லது ராஜப் பிரமுகரின்மீது" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

ராஜ்யத்தின் ராஜ்யபாலராக[1] * * * * அவர் பதவி ஏற்பதற்கு முன்னே பின்னே, சுய ஹோதாவில் அவரால் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளலாகும் எக் காரியம் சம்பந்தமாகவும், அந்த நடவடிக்கைகளின் இயல்பு அவற்றிற்கான வியாஜ்யமூலம், அந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளப்போகும் கட்சிக்காரரின் பெயர், விவரம், வாசஸ்தலம், அவர் கோரும் பரிகாரம் இவற்றைத் தெரிவிக்கும் எழுத்துமூலமான அறிக்கை, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஷ்டிரபதியிடமோ அல்லது ராஜ்ய பாலரிடமோ[1] * * * * கொடுக்கப்பட்ட பிறகு, அல்லது அவருடைய காரியாலயத்தில் சேர்க்கப்பட்ட பிறகு அடுத்துவரும் இரண்டு மாதம் முடிவடையும்வரை அவர் பதவிக்காலத்தில் எந்த நீதிமன்றத்திலும் எடுக்கப்படலாகாது.

இந்தியச் சமஸ்தானங்களின் அதிபதிகளின் உரிமைகளும் விசேஷ உரிமைகளும்.

[2]362. சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்கோ அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்திற்கோ உள்ள சக்தியைச் செலுத்துகையில் அல்லது யூனியனின் அல்லது ஒரு ராஜ்யத்தின் நிர்வாக சக்தியைச் செலுத்துகையில், ஓர் இந்தியச் சமஸ்தான அதிபதிக்குச் சுய ஹோதாவிலுள்ள உரிமைகள் விசேஷ உரிமைகள் கௌரவங்கள் இவைபற்றி 291-வது [3][பிரிவில்] குறிப்பிட்ட ஒரு ஷரா அல்லது கரூரின்கீழ்ச் செய்துள்ள உத்தரவாதம் அல்லது உறுதிமொழி தக்கவாறு கவனிக்கப்படவேண்டும்.

சில ஒப்பந்தங்கள் கரூர்கள் வகையராவிலிருந்து எழும் விவாதங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவதற்குத் தடை.

363. (1)இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், 143-வது பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன் ஓர் இந்தியச் சமஸ்தானத்தின் அதிபதி ஒருவரால் செய்யப்பட்டதும் அல்லது இயற்றப்பட்டதும், இந்திய டொமினியன் சர்க்காராவது அல்லது அதற்கு முன்னிருந்த எந்தச் சர்க்காராவது ஒரு தரப்பாயிருந்ததும், அத்தொடக்கத்திற்குப் பிறகும் அமுலிலிருந்து வருவதும் அல்லது இருந்துவரச் செய்யப்பட்டதும் ஆன ஓர் ஒப்பந்தம், கரூர், ஷரா, உடன்படிக்கை, சன்னது அல்லது அவைபோன்ற மற்றையச் சாசனத்தின் எந்த ஷரத்திலிருந்தாவது எழும் விவாதத்திலோ, அல்லது அத்தகைய ஒப்பந்தம், கரூர், ஷரா, உடன்படிக்கை, சன்னது அல்லது அவை போன்ற மற்றையச் சாசனம் சம்பந்தமாக இந்த அரசியலமைப்பின் ஷரத்துக்களில் எதிலிருந்தும் எழும் உரிமை அல்லது கடப்பாடு அல்லது பொறுப்பு இவைபற்றிய ஒரு விவாதத்திலோ உச்ச நீதிமன்றமும் மற்றெந்த நீதிமன்றமும் விசாரணை-அதிகாரம் உடையதாகாது.

(2) இப் பிரிவில்—

(அ) "இந்தியச் சமஸ்தானம்" என்பது அத்தகைய ஒரு சமஸ்தானம் என்று இந்த அரசியல்

---

[1] "அல்லது ராஜப்பிரமுகரிடமோ" என்னும் சொற்கள், 1956ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[2] 362-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[3] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், "பிரிவின் (1)-ம் பகுதியில்" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XIX.—பலவகை—பிரிவுகள் 363—364.

அமைப்பின் தொடக்கத்திற்குமுன் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுல் அல்லது இந்திய-டொமினியன் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதேசம் என்று பொருள்படும் ; மேலும்,

(ஆ) " அதிபதி " என்பதில் அத் தொடக்கத்திற்கு முன்பு ஓர் இந்தியச் சமஸ்தானத்தின் அதிபதி என்று மாட்சிமை தங்கிய மன்னர்பிரானுல் அல்லது இந்திய டொமினியன் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட ராஜகுமாரர், முதன்மையாளர் அல்லது மற்றையவர் என்பதும் அடங்கும்.

பெருந் துறை முகங்கள், விமான நிலையங்கள் பற்றிய விசேஷ சரத்துக்கள்.

364. (1) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், ராஷ்டிரபதி பொது விளம்பரத்தினுல் அதில் குறிப்பிட்ட தேதியிலிருந்து—

(அ) பார்லிமெண்டால் அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டம் ஒரு பெருந் துறைமுகத்திற்கு அல்லது விமான நிலையத்திற்குப் பிரயோகப்படமாட்டாது என்றுவது, அவ் விளம்பரத்தில் குறிப்பிடப்படும் விலக்குகளுக்கு அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டு அதற்குப் பிரயோகப்படவேண்டும் என்றுவது கட்டளை யிடலாம் ; அல்லது

(ஆ) ஏற்கனவேயுள்ள ஒரு சட்டம், அத் தேதிக்கு முன் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விட்டு விடப்பட்ட காரியங்கள் சம்மந்தமாகவன்றி, ஒரு பெருந் துறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் அமுலுற்றுப்போகவேண்டும் என்றுவது, அது அத்தகைய துறைமுகம் அல்லது விமான நிலையத்திற்குப் பிரயோகப்படுகையில் அவ் விளம்பரத்தில் குறிப்பிடப்படும் விலக்குகளுக்கு அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டுப் பிரயோகப்பட வேண்டும் என்றுவது கட்டளையிடலாம்.

(2) இப் பிரிவில்—

(அ) " பெருந் துறைமுகம் " என்பது பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தினுலாவது ஏற்கனவேயுள்ள ஒரு சட்டத்தினுலாவது அல்லது அவற்றின்கீழாவது பெருந்துறைமுகம் என்று அறிவிக்கப்பட்ட ஒரு துறைமுகம் என்று பொருள்படும் ; மேலும், அச் சமயத்தில் அத்தகைய துறைமுகத்தின் எல்லைக்குள் சேர்க்கப்பட்டிருக்கும் எல்லாப் பிரதேசங்களும் அதில் அடங்கியிருக்கும் ;

(ஆ) " விமான நிலையம் " என்பது ஆகாய மார்கங்கள், ஆகாய விமானங்கள், ஆகாயப் போக்குவரத்து இவைபற்றிய சட்டங்களுக்காக வரைக்யறுக்கப்பட்ட விமானநிலையம் என்று பொருள்படும்.

பாகம் XIX.—பலவகை.—பிரிவுகள் 365-366.

யூனியன் பிறப்பித்த கட்டளைகளுக்கு அடங்கி நடக்கவோ அவற்றை நிறைவேற்றவோ தவறுவதால் விளையும் பயன்.

[1] 365. இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களில் எதன் கீழும் யூனியனின் நிர்வாக சக்தியைச் செலுத்துகையில் பிறப்பிக்கப்பட்ட எக்கட்டளைகளுக்கேனும் ஒரு ராஜ்யம் அடங்கி நடக்கவோ அல்லது அவற்றை நிறைவேற்றவோ தவறினால், ராஷ்டிரபதி இந்த அரசியலமைப்பின் ஷரத்துக்களின்படி, அந்த ராஜ்யத்தின் ஆட்சியை நடத்த இயலாத நிலை ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்று தீர்மானித்தல் சட்ட சம்மதமாகும்.

வரையறைகள்.

366. இந்த அரசியல் அமைப்பில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, பின்வரும் பதங்கள் இதன் மூலமாக அவைகளுக்கு முறையே அளிக்கப்பட்டிருக்கும் பொருள்களை உடையனவாகும்; அவையாவன :—

(1) "விவசாய வருமானம்" என்பது இந்திய வருமான வரியைப்பற்றிய சட்டங்களின் பொருட்டு வரையறுக்கப்பட்ட விவசாய வருமானம் என்று பொருள்படும்;

(2) "ஓர் ஆங்கில-இந்தியர்" என்பது ஒருவருடைய தகப்பனாராவது அல்லது ஆண் வழியில் அவருடைய மற்றைய மூதாதைகளில் எவராவது ஐரோப்பிய மரபில் உள்ளவராய் அல்லது இருந்தவராயும், எனினும் இந்தியாவின் ஆட்சிப்பரப்பிற்குள் நிலையாக வசித்து வருபவராயும், அந்த ஆட்சிப்பரப்பில் வழக்கமாக வசித்துவந்தவர்களும் அங்கே தாற்காலிகக் காரியங்களுக்காக மட்டும் குடியிருப்பவரல்லாதவர்களுமான பெற்றோர்களுக்கு அந்த ஆட்சிபரப்பிற்குள் பிறந்திருப்பவராயும் அல்லது பிறந்திருந்தவராயும் உள்ள ஒருவர் என்று பொருள்படும்;

(3) "பிரிவு" என்பது இந்த அரசியலமைப்பின் ஒரு பிரிவு என்று பொருள்படும்;

(4) "கடன் வாங்கு" தல் என்பதில் வருஷாந்தரத் தொகைகளை அளிப்பதன் மூலமாகப் பணம் திரட்டுதல் என்பதும் அடங்கும்; மேலும், "கடன்" என்பதையும் அவ்வாறே அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்;

(5) "பகுதி" என்பது அப் பதம் வரும் பிரிவின் ஒரு பகுதி என்று பொருள்படும்;

(6) "கார்ப்பொரேஷன் வரி" என்பது கம்பெனிகளால் செலுத்தப்படவேண்டியதாயும் கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டனவாயும் உள்ள அளவிற்கு வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி என்று பொருள்படும் :—

(அ) அது விவசாய வருமானத்தின் மீது விதிக்கப்படக்கூடியதாக இருத்தலாகாது;

[1] 365-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

பாகம் XIX.—பலவகை—பிரிவு 366.

(ஆ) கம்பெனிகளால் கொடுக்கப்படும் அந்த வரி விஷயமாக, தனிப்பட்டவர்களுக்கு அக் கம்பெனி களால் கொடுக்கப்படவேண்டிய ஈவுத் தொகை களிலிருந்து யாதொரு தொகையையும் குறைத் துக்கொடுப்பதற்கு அந்த வரிக்குப் பிரயோகப் படக்கூடிய சட்டங்களில் எவற்றாலாவது அதி காரம் அளித்திருத்தலாகாது ;

(இ) இந்திய வருமான வரியின் பொருட்டு அத் தகைய ஈவுத் தொகைகளைப் பெறும் தனிப் பட்டவர்களின் மொத்த வருமானத்தைக் கணக் கிடுகையில் அல்லது அத்தகைய தனிப்பட்டவர் களால் கொடுக்கப்படவேண்டிய அல்லது அவர் களுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டிய இந்திய வருமான வரியைக் கணக்கிடுகையில் அப்படிக் கொடுத்த வரியைக் கணக்கில் எடுத்துக் கொள் வதற்கான ஷரத்து எதுவும் இருத்தலாகாது ;

(7) "நிகரான மாகாணம்", "நிகரான இந்தியச் சமஸ்தானம்" அல்லது "நிகரான ராஜ்யம்" என் பது சந்தேகம் எழும்போது குறிப்பிட்ட பிரஸ்தாப காரியத்திற்காக, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, நிகரான மாகாணம் என்றே நிகரான இந்தியச் சமஸ்தானம் என்றே அல்லது நிகரான ராஜ்யம் என்றே ராஷ்டிர பதி நிர்ணயிக்கும் மாகாணம், இந்தியச் சமஸ்தா னம் அல்லது ராஜ்யம் எனப் பொருள்படும் ;

(8) "கடன்" என்பதில் வருஷாந்தரத் தொகைகள் மூலமாக மூலதனத் தொகைகளைத் திருப்பிக் கொடுக் கும் கடப்பாடுபற்றிய பொறுப்பும், ஓர் உத்தர வாதத்தின் காரணமாக வரும் பொறுப்பும் அடங்கு கும் ; மேலும், "கடன் பொறுப்புக்கள்" என் பதற்கும் அவ்வாறே அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்.

(9) "எஸ்டேட்டுத் தீர்வை" என்பது மரணத்தால் பிறருக்குச் செல்லும் அல்லது பார்லிமெண்டாலோ அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தாலோ அத் தீர்வை சம்பந்தமாகச் செய்யப்பட்ட சட்டங் களின் ஷரத்துக்களின்கீழ் அவ்வாறு செல்வதாகக் கருதப்படும் சகல சொத்து விஷயமாகவும் அச் சட் டங்களினுல் அல்லது அவற்றின்கீழ் வகுக்கப்படும் விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட மூல மதிப்பின் மீதாவது அதையொட்டியாவது விதிக்கப்படும் ஒரு தீர்வை என்று பொருள்படும் ;

(10) "ஏற்கெனவேயுள்ள சட்டம்" என்பது இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு முன் யாதொரு சட்டம், அவசரச்சட்டம், உத்தரவு, துணைவிதி, விதி அல்லது ரெகுலேஷனைச் செய்யச் சக்தி வாய்ந்த ஒரு சட்டமன்றம் அதிகாரி அல்லது ஒருவரால் நிறைவேற்றப்பட்ட அல்லது செய்யப் பட்ட ஒரு சட்டம், அவசரச் சட்டம், உத்தரவு, துணைவிதி அல்லது ரெகுலேஷன் என்று பொருள் படும் ;

பாகம் XIX.—பலவகை—பிரிவு 366.

(11) "பெடரல் நீதிமன்றம்" என்பது 1935-ம் வரு ஷத்திய இந்தியச் சர்க்கார்ச் சட்டத்தின்கீழ் அமைக் கப்பட்ட பெடரல் நீதிமன்றம் என்று பொருள்படும்;

(12) "பண்டங்கள்" என்பதில் சகல பொருள்களும் சரக்குகளும் சாமான்களும் அடங்கும்;

(13) "உத்தரவாதம்" என்பதில் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன்னதாக ஒரு ஸ்தாபனத்தின் லாபங்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு குறைவாகயிருந்தால் பணங்கள் கொடுப் பதாக ஏற்றுக்கொண்ட ஒரு பொறுப்பு என்பதும் அடங்கும்;

(14) "உயர் நீதிமன்றம்" என்பது இந்த அரசியல் அமைப்பின் காரியங்களுக்காக ஒரு ராஜ்யத்திற்குரிய உயர் நீதிமன்றம் எனக் கருதப்படும் நீதிமன்றம் என்று பொருள்படும்; மேலும் அதில்—

(அ) இந்த அரசியல் அமைப்பின்கீழ் ஓர் உயர்நீதி மன்றம் என்று இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் அமைக்கப்பட்ட அல்லது மீண்டும் அமைக்கப் பட்ட ஒரு நீதிமன்றமும்,

(ஆ) இந்த அரசியலமைப்பின் காரியங்கள் எல்லா வற்றிற்குமோ அல்லது எவற்றிற்குமோ ஓர் உயர் நீதிமன்றம் என்று பார்லிமெண்டு சட்டத்தினால் அறிவித்த இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலுள்ள மற் றெந்த நீதிமன்றமும்
அடங்கியிருக்கும்;

(15) "இந்தியச் சமஸ்தானம்" என்பது இந்திய டொமினியன் சர்க்காரால் அத்தகைய சமஸ்தானம் என்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதேசம் என்று பொருள்படும்;

(16) "பாகம்" என்பது இந்த அரசியல் அமைப்பின் ஒரு பாகம் என்று பொருள்படும்;

(17) "பென்ஷன்" என்பது ஒருவருக்கோ அல்லது அவர் சம்பந்தமாகவோ—அவர் பணம் உதவியிருந் தாலும் இல்லாவிட்டாலும்—கொடுக்கலாகும் எவ் வகைப்பட்ட பென்ஷனையும் குறிக்கும்; மேலும், அதில் அப்படிக் கொடுக்கலாகும் ஓய்வுச் சம்பளம், அப்படிக் கொடுக்கலாகும் ஒரு நன்கொடை, பிராவி டெண்டு பண்டுக்குச் செலுத்தப்பட்ட கட்டணங் களை வட்டி அல்லது மற்றையக் கூட்டுத் தொகை களுடனே அல்லது அவை இல்லாமலோ திருப்பிக் கொடுக்கும் வகையில் அப்படிக் கொடுக்கலாகும் எத்தொகை அல்லது தொகைகளும்—இவை அடங்கி யிருக்கும்;

(18) "ஆபத்துநிலைப் பிரகடனம்" என்பது 352-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட பிரகடனம் என்று பொருள்படும்;

பாகம் XIX.—பலவகை—பிரிவு 366.

(19) "விளம்பரம்" என்பது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, இந்தியாவின் கெஜட்டிலோ ஒரு ராஜ்யத்தின் ராஜாங்கக் கெஜட்டிலோ உள்ள ஒரு விளம்பரம் என்று பொருள்படும் ;

(20) "ரெயில்வே" என்பதில்—

(அ) முழுமையும் ஒரு முனிசிபல் பிரதேசத்திற்குள் இருக்கும் ஒரு ட்ராம்வே, அல்லது

(ஆ) முழுமையும் ஒரே ராஜ்யத்தில் இருப்பதும் பார்லிமெண்டு சட்டத்தினுல் ரெயில்வேயல்லாதது என்று அறிவித்ததுமான மற்றெந்தப் போக்குவரவு மார்க்கம்
அடங்காது ;

* * * * * *

[1] (22) ஓர் இந்தியச் சமஸ்தானம் சம்பந்தமாக "அதிபதி" என்பது 291-வது பிரிவின் (1)-வது பகுதியில் குறிப்பிட்ட யாதொரு ஷராவோ அல்லது கருரோ செய்துகொண்டவரும் அந்த சமஸ்தானத்தின் அதிபதி என்று அச்சமயத்தில் ராஷ்டிரபதியால் ஒப்புக்கொள்ளப்பட்டவருமான ராஜகுமாரர், முதன்மையாளர் அல்லது மற்றையவர் என்று பொருள்படும் ; மேலும், அது அந்த அதிபதிக்கு வாரிசு என்று அச்சமயத்தில் ராஷ்டிரபதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருவர் என்பதும் அடங்கியதாயிருக்கும்;

(23) "தபசில்" என்பது இந்த அரசியலமைப்புக்கான ஒரு தபசில் என்று பொருள்படும் ;

(24) "அனுபந்த ஜாதியார்கள்" என்பது இந்த அரசியல் அமைப்பின் பொருட்டு அனுபந்த ஜாதியார்கள் என்று 341-வது பிரிவின்கீழ்க் கருதப்படும் ஜாதியார்கள், இனத்தார்கள் அல்லது மலைஜாதியார்கள் அல்லது அத்தகைய ஜாதியார்கள், இனத்தார்கள் அல்லது மலைஜாதியார்களின் பகுதியினர்கள் அல்லது தொகுதியினர்கள் என்று பொருள்படும் ;

(25) "அனுபந்த மலைஜாதியார்கள்" என்பது இந்த அரசியல் அமைப்பின் பொருட்டு அனுபந்த மலைஜாதியார்கள் என்று 342-வது பிரிவின்கீழ்க் கருதப்படும் மலைஜாதியார்கள் அல்லது மலைஜாதிச் சமுதாயங்கள் அல்லது அந்த மலைஜாதியார்கள் அல்லது மலைச் சமுதாயங்களின் பிரிவினர்கள் அல்லது தொகுதியினர்கள் என்று பொருள்படும் ;

(26) "ஈடுகள்" என்பதில் மூலதனம் (ஸ்டாக்) என்பதும் அடங்கும் ;

(27) "உட்பகுதி" என்பது அப் பதம் வரும் பகுதியின் ஓர் உட்பகுதி என்று பொருள்படும் ;

---

[1] (21)-ம் பகுதி, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டது.

பாகம் XIX.—பலவகை—பிரிவுகள் 366—367.

(28) " வரிவிதித்தல் " என்பதில் பொதுவான அல்லது ஒரு பிரதேசத்திற்கு உரிய அல்லது பிரத்தியேகமான ஒரு வரியையேனும் தீர்வையையேனும் விதித்தல் என்பதும் அடங்கும் ; மேலும், " வரி " என்பதற்கு அவ்வாறே அர்த்த விளக்கம் செய்ய வேண்டும் ;

(29) " வருமானத்தின்மீது வரி " என்பதில் அமிதலாபவரியின் இயல்புள்ள ஒரு வரியும் அடங்கும் ;

[1][(30) " யூனியன் ஆட்சிப்பரப்பு " என்பது முதலாவது ஆட்சிப் பரப்பில் குறிப்பிட்ட ஒரு யூனியன் ஆட்சிப்பரப்பு என்று பொருள்படும்; மேலும் அதில், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்கு உட்பட்டதும் அந்த தபசில் குறிப்பிடாததுமான வேறு பிரதேசம் என்பதும் அடங்கும்.]

அர்த்த விளக்கம்.

367. (1) சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, இந்திய டொமினியன் சட்டமன்றத்தின் சட்டத்திற்கு அர்த்த விளக்கம் செய்வதற்கு பிரயோகப்படுதல் போலவே 1897-ம் வருஷத்திய ஜெனரல் க்ளாஸஸ் சட்டமானது 372-வது பிரிவின்கீழ் அதில் செய்யப்படும் இணக்கங்கள் மாறுதல்கள் எவற்றிற்கேனும் உட்பட்டு, இந்த அரசியலமைப்பிற்கு அர்த்த விளக்கம் செய்வதற்கும் பிரயோகப்படும் ;

(2) இந்த அரசியல் அமைப்பில் பார்லிமெண்டின் அல்லது அதனுல் செய்யப்பட்ட சட்டங்கள் அல்லது விதிகள், [2] * * * * * ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் அல்லது அதனுல் செய்யப்பட்ட சட்டங்கள் அல்லது விதிகள் இவற்றைக் குறிக்கும் எந்த இடத்திலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ராஷ்டிரபதியால் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டத்தை அல்லது [3][ராஜ்ய பாலரால்] செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டத்தைக் குறிக்கும் இடமும் அடங்கியதாக அர்த்தவிளக்கம் செய்ய வேண்டும்.

(3) இந்த அரசியல் அமைப்பைப் பொறுத்தவரை " அந்நிய ராஜ்யம் " என்பது இந்தியா அல்லாத மற்றெந்த ராஜ்யமும் எனப் பொருள்படும் :

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், அசல் (30-ம்) பகுதிக்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] " முதலாவது தபசினின் (அ) பாகத்திலேனும் (ஆ) பாகத்திலேனும் குறிப்பிட்ட " என்னும் சொற்களும் எழுத்துக்களும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[3] மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் " ராஜ்யபாலர் அல்லது ராஜப்பிரமுகரால் " என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப் பட்டது.

பாகம் XIX.—பலவகை—பிரிவு 367

எனினும், பார்லிமெண்டால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் ஷரத்துகளுக்கு உட்பட்டு, ராஷ்டிரபதி தம் [1] உத்தரவினால் அந்த [2] உத்தரவில் குறிப்பிடப்படும் காரியங்களுக்காக ஒரு ராஜ்யம் அந்நிய ராஜ்யம் அன்று என்று அறிவிக்கலாம்.

---

[1] சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 25-ம் தேதியன்று பிறந்த . . 2-ம் நம்பர், விளம்பரத்துடன் இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் N.80-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு (அந்நிய நாடுகள் என்று அறிவிப்பது) பற்றிய 1950-ம் வருஷத்திய உத்தரவைப் பார்க்கவும்.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 367-வது பிரிவுடன் கீழ்க்கண்ட பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் :—

"(4) ஜம்மு-காஷ்மீர் ராஜ்யம் விஷயமாய் இந்த அரசியல் அமைப்பு பிரயோகப்படுகையில் அதன் காரியங்களுக்காக—

(அ) இந்த அரசியல் அமைப்பையோ அதன் ஷரத்துக்களையோ குறிக்கும் இடங்களில், அந்த ராஜ்யம் விஷயமாகப் பிரயோகப்படுகிறபடியுள்ள அரசியலமைப்பையோ அதன் ஷரத்துக்களையோ குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்ய வேண்டும் ;

(ஆ) அந்த ராஜ்யச் சர்க்காரைக குறிக்கும் இடங்களில் தம்முடைய மந்திரிச் சபையின் ஆலோசனையின்பேரில் செயலாற்றுகிற ஸதர்-இ-ரியசத்தைக் குறிக்கும் இடங்களும் அடங்குவதாக அர்த்த விளக்கம் செய்யவேண்டும் ;

(இ) ஓர் உயர் நீதி மன்றத்தைக் குறிக்கும் இடங்களில் ஜம்மு-காஷ்மீர் உயர் நீதிமன்றத்தைக் குறிக்கும் இடங்களும் அடங்குவதாக அர்த்த விளக்கம் செய்யவேண்டும் ;

(ஈ) அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தை அல்லது சட்ட சபையைக் குறிக்கும் இடங்களில் அந்த ராஜ்யத்தின் அரசியல் நிர்ணயச் சபையைக் குறிக்கும் இடங்களும் அடங்குவதாக அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

(உ) அந்த ராஜ்யத்தின் நிலையான வாசிகளைக் குறிக்கும் இடங்களில், அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படுவது பற்றிய) 1954-ம் வருஷத்திய உத்தரவின் தொடக்கத்திற்கு முன் அந்த ராஜ்யத்தில் அமுலிலிருந்த சட்டங்களின்கீழ் ராஜ்யக் குடிகளென்று அங்கீகரிக்கப்பெற்றவர்களை அல்லது அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தால் செய்யப்பட்ட சட்டத்தால் அந்த ராஜ்யத்தின் நிலையானவாசிகளென அங்கீகரிக்கப் பெறுகிறவர்களைக் குறிப்பாக அர்த்த விளக்கம் செய்யவேண்டும் ;

(ஊ) ராஜப் பிரமுகரைக் குறிக்கும் இடங்களில், ஜம்மு-காஷ்மீரின் ஸதர்-இ-ரியசத் என்று அச் சமயத்தில் ராஷ்டிரபதியால் ஒப்புக்கொள்ளப்பட்டவரைக் குறிக்கும் இடங்கள் என்றும், ஸதர்-இ-ரியசத்தின் சக்திகளைச் செலுத்தத் தகுதியுள்ளவரென அச் சமயத்தில் ராஷ்டிரபதியால் ஒப்புக்கொள்ளப்பட்டவரைக் குறிக்கும் இடங்களும் அடங்குவனவாகவும் அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்."

பாகம் XX

அரசியல் அமைப்பின் திருத்தம்

பிரிவு 368

அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கான நடைமுறை.

[1] 368. இந்த அரசியல் அமைப்பின் திருத்தம் அதற்கென பார்லிமெண்டுச் சபை ஒன்றில் ஒரு மசோதாவைக் கொணருவதால் மட்டுமே ஆரம்பிக்கப் படலாம்; அச் சபை ஒவ்வொன்றிலும் அம் மசோதா அச் சபையின் மொத்த அங்கத்தினர்களில் பெரும்பான்மையோராலும், வந்திருந்து வோட்டுச் செய்யும் அச் சபையின் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையோராலும் நிறைவேற்றப்பட்டால், அது ராஷ்டிரபதியிடம் அவர் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்; அம் மசோதாவிற்கு அவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டதும், இந்த அரசியலமைப்பு அம் மசோதாவின் ஷரத்துக்களின்படி திருத்தம் பெற்றதாகும்:

எனினும், அத்தகைய திருத்தம்—

(அ) 54-வது பிரிவு, 55-வது பிரிவு, 73-வது பிரிவு, 162-வது பிரிவு அல்லது 241-வது பிரிவு, அல்லது

(ஆ) V-ம் பாகத்தின் IV-ம் அத்தியாயம், VI-ம் பாகத்தின் V-ம் அத்தியாயம், அல்லது XI-ம் பாகத்தின் I-ம் அத்தியாயம், அல்லது

(இ) ஏழாவது தபசிலில் உள்ள ஜாபிதாக்களில் எதுவேனும் அல்லது

(ஈ) பார்லிமெண்டில் ராஜ்யங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரதிநிதித்துவம், அல்லது

(உ) இப் பிரிவின் ஷரத்துக்கள்

இவற்றில் மாறுதல் செய்வதாயிருந்தால், அத்திருத்தத்தைச் செய்வதற்கான மசோதா ராஷ்டிரபதியிடம் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படுமுன் [2] * * * * ராஜ்யங்களில் பாதிக்குக் குறையாத ராஜ்யங்களின் சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்டவையும் அப்பயன் கொண்டவையுமான தீர்மானங்களின் மூலமாக அச் சட்டமன்றங்களாலும் அங்கீகரிக்கப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 368-வது பிரிவுடன் கீழ்க்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்:—

அன்றியும், அத்தகைய திருத்தம் எதுவும், 370-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ் ராஷ்டிரபதியின் உத்தரவின் மூலம் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யம் விஷயமாகப் பிரயோகப்படுத்தினாலன்றி, அந்த ராஜ்யம் விஷயமாகச் செல்லுதல் உள்ளதாகாது.

[2] "அ, ஆ பாகங்களில் குறிப்பிட்ட" என்னும் எழுத்துக்களும் சொற்களும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

பாகம் XXI

பிரிவு 369

தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்

[1] *369.* இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், பார்லிமெண்டு இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திலிருந்து ஐந்துவருஷ காலத்திற்குப் பின்வரும் விஷயங்கள் பற்றி, அவை கூட்டு ஜாபிதாவில் குறிக்கப்பட்டிருந்தாற் போலவே, சட்டங்கள் செய்யச் சக்தி உடையதாகும் ; அவை யாவன :—

ராஜ்ய ஜாபிதாவிலுள்ள சில விஷயங்கள் பற்றி— அவை கூட்டு ஜாபிதாவிலுள்ள விஷயங்களாய் இருந்தாற் போலவே சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்குள்ள தாற்காலிகச் சக்தி.

(அ) பருத்தித் துணிகள், கம்பளத் துணிகள், கச்சா-பருத்தி (விதை எடுக்கப்பட்ட பருத்தியும் விதை எடுக்கப்படாத பருத்தியும் அல்லது கப்பாஸும் உட்பட), பருத்தி விதை, காகிதம் (செய்தித்தாள் காகிதம் உட்பட), உணவுப் பொருள்கள் (உட்கொள்ளத்தகும் எண்ணெய் வித்துக்களும், எண்ணெயும் உட்பட), கால்நடைத் தீனிப் பொருள்கள் (பிண்ணாக்குகளும் இதர செறிவுப் பொருள்களும் உட்பட), நிலக்கரி (கல்கரியும் நிலக்கரியிலிருந்து கிடைக்கும் பொருள்களும் உட்பட), இரும்பு, எஃகு, அப்பிரகம் —இவைகளில் ஒரு ராஜ்யத்திற்குள் நடைபெறும் வியாபாரமும் வர்த்தகமும், இவைகளை உற்பத்தி செய்தலும் வினியோகம் செய்தலும் ;

(ஆ), (அ) பகுதியில் கூறப்பட்ட எந்த விஷயங்களைப் பற்றிய சட்டங்களுக்கும் விரோதமாகச் செய்யப்படும் குற்றங்கள், அவ்விஷயங்களில் எதையும் குறித்து உச்ச நீதிமன்றத்தைத் தவிர மற்றெல்லா நீதிமன்றங்களின் விசாரணை-அதிகாரமும் சக்திகளும், எந்த நீதிமன்றத்திலும் வாங்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக அவ் விஷயங்களில் எவை பற்றியேனும் வாங்கப்படும் கட்டணங்கள் ;

[2]ஆனால், பார்லிமெண்டால் செய்யப்பட்டதாயும் இப் பிரிவின் ஷரத்துக்கள் இல்லாவிட்டால் பார்லிமெண்டுக்குச் செய்யச் சக்தியில்லாததுமான ஒரு சட்டம், அவ்வாறு அது சக்தியற்றதாய் உள்ள அளவிற்கு மேற்சொன்ன காலம் முடிவடைந்ததும்—அப்படி முடிவடைவதற்கு முன்னர்ச் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விட்டுவிடப்பட்ட காரியங்கள் சம்பந்தமாகவன்றி—அமுலற்றுப்போகும்.

---

[1] *369-வது* பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] இப் பிரிவில் கொடுத்துள்ள சக்திகளைக் கொண்டும் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தின் அரசியல் நிர்ணயச் சபையின் சிபார்சின் பேரிலும், 370-வது பிரிவின் (1)-ம் பகுதியிலுள்ள விளக்கத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட விளக்கத்தை அமைத்துக்கொண்டு அப்பிரிவு 1952-ம் வருஷம் நவம்பர் மாதம் 17-ம் தேதி முதற் கொண்டு பிரயோகப்படும் என்று ராஷ்டிரபதி அறிவித்தார் ; அவ் விளக்கமாவது :—

"விளக்கம்.—இப் பிரிவைப் பொறுத்தவரை அந்த ராஜ்ய சர்க்கார் என்பது அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தின் சிபார்சின் பேரில், ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தின் ஸதர்-இ-ரியஸத் என்று ராஷ்டிரபதியால் அக் காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு அச் சமயத்தில் அந்த ராஜ்யத்தில் பதவியிலிருக்கும் மந்திரி பரிஷத்தின் ஆலோசனையின்படிச்செயலாற்றுபவர் என்று பொருள்படும்"

(சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1952-ம் வருஷம் நவம்பர் மாதம் 15-ம் தேதியன்று பிறந்த C.O. 44-ம் நெ. உத்தரவு.)

பாகம் XXI.—தாற்காலிக, இடைக்கால ஏற்பாடுகள்— பிரிவு 370.

ஜம்மு-காஷ்மீர் ராஜ்யம் பற்றிய தாற்காலிக ஏற்பாடுகள்.

370. (1) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும்-,

(அ) 238-வது பிரிவின் ஷரத்துக்கள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யம் சம்பந்தமாகப் பிரயோகப்படமாட்டா ;

(ஆ) மேற்சொன்ன ராஜ்யத்திற்காகச் சட்டங்கள் செய்யப் பார்லிமெண்டுக்கு உள்ள சக்தி—

(i) யூனியன் ஜாபிதாவிலும் கூட்டு ஜாபிதாவிலும் உள்ள எவ் விஷயங்கள் ராஷ்டிரபதியால் அந்த ராஜ்யத்தின் சர்க்காருடன் கலந்தாலோசித்து, இந்திய டொமினியனுடன் அந்த ராஜ்யம் சேர்வதற்குச் சம்பந்தப்படும் சேர்வுச் சாஸனத்தில், டொமினியன் சட்டமன்றம் அந்த ராஜ்யத்திற்காகச் சட்டங்கள் செய்யக்கூடிய விஷயங்கள் என்று குறிப்பிட்ட விஷயங்களுக்கு நிகரானவை என அறிவிக்கப்படுமோ அவ் விஷயங்களுக்கும்,

(ii) மேற்சொன்ன ஜாபிதாக்களில் உள்ளவையும் அந்த ராஜ்யத்தின் சர்க்காருடைய உடன்பாட்டுடன் ராஷ்டிரபதி உத்தரவினுல் குறிப்பிடுபவையும் ஆன மற்றைய விஷயங்களுக்கும்

மட்டுமே பிரயோகப்படத்தக்கதாகும்.

விளக்கம்.—இப் பிரிவைப் பொறுத்தவரை, அந்த "ராஜ்யச் சர்க்கார்" என்பது ஜம்மு-காஷ்மீர் மகாராஜா என்று ராஷ்டிரபதியால் அச் சமயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு 1948-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஐந்தாம் தேதியில் பிறப்பித்த மகாராஜாவின் பிரகடனத்தின்கீழ் அச் சமயத்தில் பதவியிலிருக்கும் மந்திரிபரிஷத்தின் ஆலோசனையின்படி செயலாற்றுபவர் என்று பொருள்படும் ;

(இ). 1-வது பிரிவிலும் இப் பிரிவிலும் உள்ள ஷரத்துக்கள் அந்த ராஜ்யம் சம்பந்தமாகப் பிரயோகப்படும் ;

(ஈ) இந்த அரசியல் அமைப்பின் மற்றைய ஷரத்துக்கள், ராஷ்டிரபதி [1] உத்தரவினுல் குறிப்பிடும் விலகுகளுக்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டு, அந்த ராஜ்யம் சம்பந்தமாகப் பிரயோகப்படும் :

எனினும், (ஆ) உட்பகுதியின் (i)-ம் பாராவில் குறிப்பிட்ட ராஜ்யத்தின் சேர்வுச் சாஸனத்தில் சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றிய அத்தகைய உத்தரவு எதுவும் அந்த ராஜ்யத்தின் சர்க்காருடன் கலந்தாலோசித்த பிறகன்றிப் பிறப்பிக்கப்படலாகாது :

அன்றியும், அடுத்து முந்திய விலக்கு நிபந்தனையில் கூறப்பட்டவையல்லாத விஷயங்களைப் பற்றிய அத்தகைய உத்தரவு எதுவும் அந்தச் சர்க்காருடைய உடன்பாடின்றிப் பிறப்பிக்கப்படலாகாது.

---

[1] சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1954-ம் வருஷம் மே மாதம் 14-ம் தேதியன்று பிறந்த C.O. 48-ம் நீ உத்தரவுடன் 1954-ம்ஷ மே மாதம் 14-ம் தேதியுள்ள இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் 831-வது பக்கத்தில் பிரகரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீருக்குப் பிரயோகப்படுவது) பற்றிய 1954-ம் வருஷத்திய உத்தரவைப் பார்க்கவும்.

பாகம் XXI.—தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்— பிரிவுகள் 370—371.

(2). (1)-ம் பகுதியின் (ஆ) உட்பகுதியின் (ii)-ம் பாரா விலாவது அப் பகுதியின் (ஈ) உட்பகுதியின் இரண்டாவது விலக்கு நிபந்தனையிலாவது குறிப்பிட்ட ராஜ்யத்தின் சர்க்கா ருடைய உடன்பாடு அந்த ராஜ்யத்தின் அரசியல் அமைப்பை இயற்றுவதற்கான அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவதற்கு முன் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த உடன்பாடு அதுபற்றி அச் சபை ஒரு தீர்மானம் செய்வதன் பொருட்டு அதன் முன்னிலையில் வைக்கப்படவேண்டும்.

(3) இப் பிரிவின் முற்சொல்லிய ஷரத்துக்கள் எவ் வாறு இருப்பினும், ராஷ்டிரபதி, பொது விளம்பரத்தினால், இப் பிரிவு அமுலற்றுப் போகும் என்றோ அல்லது அவர் குறிப் பிடும் விலக்குகள் மாறுதல் இவற்றுடன் அவர் அப்படிக் குறிப்பிடும் தேதியிலிருந்தும் மட்டுமே அமுலிலிருக்கும் என்றோ அறிவிக்கலாம் :

எனினும், ராஷ்டிரபதி அத்தகைய விளம்பரம் ஒன்றைப் பிறப்பிக்கு முன்னர் (2)-ம் பகுதியில் குறிப்பிட்ட ராஜ்யத் தின் அரசியல் நிர்ணசபையின் சிபார்சு அவசியமானதாகும்.

ஆந்திரப் பிரதேசம், பஞ்சாப், பம்பாய் ராஜ்யங்கள் பற்றிய விசேஷ ஏற்பாடு.

[1][371. (1) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறிருப்பினும், ராஷ்டிரபதி, ஆந்திரப் பிரதேசம் அல்லது பஞ்சாப் ராஜ்யம் குறித்துச் செய்யப்பட்ட உத்தரவு மூலம், அந்த ராஜ்யச் சட்ட சபையின் பிரதேசக் கமிட்டிகளின் அமைப்பு, அலுவல் கள், சர்க்காரின் அலுவல் விதிகளிலும் அந்த ராஜ்யத்தின் சட்ட சபையின் நடைமுறை விதிகளிலும் செய்யப்படவேண் டிய மாறுதல்கள், பிரதேசக் கமிட்டிகள் சரிவரச் செயற்படு மாறு செய்யும் பொருட்டு ராஜ்யபாலருக்கு விசேஷ பொறுப்பு இவற்றிற்காக ஏற்பாடு செய்யலாம்.

(2) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், ராஷ்டிரபதி பம்பாய் ராஜ்யம் விஷயமாக உத்தரவு பிறப் பித்து—

(அ) இச் சபைகள் செயற்படுவது குறித்து ஒவ்வொரு வருஷமும் அறிக்கை ஒன்று ராஜ்யச் சட்டசபையில் சமர்ப் பிக்க வேண்டுமென்ற ஷரத்துடன் விதர்ப்பா, மராத்வாடா, எஞ்சிய மகாராஷ்டிரம், சௌராஷ்டிரம், கட்ச், எஞ்சிய குஜரத் இவற்றிற்காகத் தனித்தனி அபிவிருத்தி சபைகள் அமைத்தல் ;

(ஆ) ராஜ்யம் முழுவதன் தேவைகளுக்குட்பட்டு, அத் தகைய பிரதேசங்களில் அபிவிருத்திச் செலவுக்காக நிதிகளைச் சமமாக பகிர்ந்து அளித்தல் ;

(இ) ராஜ்யம் முழுவதன் தேவைகளுக்குட்பட்டு, தொழிற்கல்வி, வேலைப்பயிற்சி இவற்றில் போதிய வசதிகள், ராஜ்யச் சர்க்காரின் ஆதிக்கத்தின் கீழுள்ள சேவை

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 22-வது பிரிவினால் 371-வது அசல் பிரிவுக்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப் பட்டது.

பாகம் XXI.—தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்— பிரிவுகள் 371-372.

வர்க்கங்களில் வேலைபார்ப்பதற்காகப் போதிய வாய்ப்புகள் இவற்றை அத்தகைய பிரதேசங்களில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சமநீதியான ஏற்பாடு

இவை விஷயமாய் ராஜ்யபாலரின் விசேஷப் பொறுப்புக்காக ஏற்பாடு செய்யலாம்.

ஏற்கெனவே யுள்ள சட்டங்கள் தொடர்ந்து அமுலிலிருந்து வரும்படி செய்வதும் அவற்றின் இணக்கமும்.

[1] *372. (அ) (1). 395-வது பிரிவில் குறிப்பிட்ட சட்டங்கள் இந்த அரசியல் அமைப்பினுல் ரத்துச் செய்யப்பட்டிருப்பினும், இந்த அரசியல் அமைப்பின் மற்றைய ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் அமுலிலிருந்த சட்டமெல்லாம் சக்திவாய்ந்த ஒரு சட்ட மன்றத்தாலோ அல்லது மற்றைய அதிகாரியாலோ மாற்றப்படும்வரை, அல்லது ரத்துச் செய்யப்படும் அல்லது திருத்தப்படும் வரை அங்கே தொடர்ந்து அமுலிலிருந்துவரும்.*

(2) இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் அமுலிலிருக்கும் ஒரு சட்டத்தின் ஷரத்துக்களை இந்த அரசியல்அமைப்பின்ஷரத்துக்களோடு இணங்கச் செய்யும் பொருட்டு, ராஷ்டிரபதி [2] உத்தரவினுல், அச் சட்டத்தில் ரத்துச் செய்தல் அல்லது திருத்தல் இவற்றின் மூலமாக அவசியம் அல்லது உசிதம் என்று தோற்றம் இணக்கங்களையும் மாறுதல்களையும் செய்யலாம்; மேலும் அச் சட்டம் அந்த உத்தரவில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து அப்படிச் செய்யப்பட்ட இணக்கங்களுக்கும் தல்களுக்கும் உட்பட்டு அமுலிலிருக்கும் என்று ஏற்படுத்தமாறுலாம்; அத்தகைய இணக்கமோ அல்லது மாறுதலோ எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கப்படலாகாது.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 372-வது பிரிவில்—

(i) (2)-ம், (3)-ம் பகுதிகளை விட்டு விட வேண்டும்.

(ii) இந்தியாவின் ஆட்சிப் பரப்பில் அமுலிலிருந்த சட்டங்களைக் குறிக்கும் இடங்களில், ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்தின் ஆட்சிப் பரப்பில் ஹிதாயத்துக்கள், ஜூலாளகார் இஸ்தியார்கள், சுற்றறிக்கைகள், ரோப்கார்கள், இர்ஷத்துக்கள், யாதாஸ்துக்கள், ராஜ்யப் பரிஷித்துத் தீர்மானங்கள், அரசியல் நிர்ணய சபையின் தீர்மானங்கள், சட்டச் செல் திறன் உள்ள இதர தஸ்தாவேஜுகள் இவற்றைக் குறிக்கும் இடங்கள் அடங்கும்;

(iii) அரசியல் அமைப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் இடங்களில், அரசியல் அமைப்பு ஜம்மு-காஷ்மீர்ருக்கு ப்ரபியோகப்படுவது) பற்றிய 1954-ம் வருஷத்திய உத்தரவை, அதாவது 1954-ம் வருஷம் மே மாதம் 14-ம் தேதியை குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

[2] 1950-ம் வருஷம் ஜூன் மாதம் 5-ம் தேதியன்று பிறந்து இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் II-ம் பாகத்தைச் சேர்ந்த 3-வது (பிரிவின் 51-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட S.R.O. 115-ம் நீ விளம்பரத்தாலும் 1950-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ம் தேதியன்று பிறந்து இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் II-ம் பாகத்தைச் சேர்ந்த 3-வது பிரிவின் 903-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட S.R.O. 870-ம் விளம்பரத்தாலும் 1951-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 4-ம் தேதியன்று பிறந்து இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டு II-ம் பாகத்தைச் சேர்ந்த 3-வது பிரிவின் 287-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட S.R.O. 508-ம் நீ விளம்பரத்தாலும், 1952-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ம் தேதியன்று பிறந்து இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் II-ம் பாகத்தைச் சேர்ந்த 3-வது பிரிவின் 616 11-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட 1140 II ஆம் நீ விளம்பரத்தாலும் திருத்தப்பட்டுள்ளதும் 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ம் தேதியன்று பிறந்து இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் 449-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டதுமான 1950-ம் வருஷத்திய இணக்கச் சட்ட உத்தரவைப் பார்க்கவும்.

பாகம் XXI.—தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்—
பிரிவு 372.

(3). (2)-ம் பகுதியில் உள்ளது எதுவும்—

(அ) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து [1] *[மூன்று வருஷம்] முடிவடைந்த பிறகு எச் சட்டத்திலும். ஒரு இணக்கத்தையோ மாறுதலையோ செய்வதற்கு ராஷ்டிரபதிக்குச் சக்தியளிப்பதாக வாவது.*

(ஆ) மேற்சொன்ன பகுதியின்கீழ் ராஷ்டிரபதியால் இணக்கம் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட எச் சட்டத்தையும் ரத்துச் செய்யவோ, திருத்தவோ, சக்தியுள்ள எந்தச் சட்டமன்றத்தையாகிலும் அல்லது மற்றெந்த அதிகாரியையாகிலும் தடைப்படுத்துவதாகவாவது

கருதப்படலாகாது.

விளக்கம் I.—இப் பிரிவில் "அமுலிலிருக்கும் சட்டம்" என்னும் பதத்தில் இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்குமுன் இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலிருக்கும் ஒரு சட்டமன்றத்தால் அல்லது சக்தியுள்ள மற்றைய அதிகாரியால் நிறைவேற்றப்பட்டு அல்லது செய்யப்பட்டு, ஏற்கெனவே ரத்துச் செய்யப்பட்டிராத, ஒரு சட்டம்—அதுவோ அதன் பாகங்களோ சகல பிரதேசங்களிலும் அல்லது குறிப்பிட்ட பிரதேசங்களில் அப்போது அமுலிலிராவிட்டாலும்—அடங்கும்.

விளக்கம் II.—இந்தியாவின் ஆட்சிப்பரப்பிலிருக்கும் ஒரு சட்டமன்றத்தால் அல்லது சக்தியுள்ள மற்றைய அதிகாரியால் நிறைவேற்றப்பட்டதும் அல்லது செய்யப்பட்டதும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்தியாவின் ஆட்சிப்பரப்பில் பிரயோகப்படுவது தவிர அதற்கு வெளியிலும் பிரயோகப்பட்டதுமான எச்சட்டமும், முற்சொல்லிய இணக்கங்களுக்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டு, அத்தகைய ஆட்சிப்பரப்பிற்கு வெளியிலும் தொடர்ந்து பிரயோகப்பட்டுவரும்.

விளக்கம் III.—இப் பிரிவில் உள்ளது எதுவும், தாற்காலிகமாக உள்ள சட்டம் எதுவும் அது முடிவடைய வேண்டும் என்று குறித்த தேதிக்கோ அல்லது இந்த அரசியல் அமைப்பு அமுலுக்கு வராவிட்டால் அது முடிவடைந்திருக்கும் தேதிக்கோ அப்பால் தொடர்ந்து அமுலிலிருக்கும்படி செய்வதாக அர்த்த விளக்கம் செய்யப்படலாகாது.

விளக்கம் IV.—*1935-ம் வருஷத்திய இந்தியச் சர்க்கார்ச் சட்டத்தின் 88-வது பிரிவின்கீழ் ஒரு மாகாண ராஜ்யபாலரால் பிரகடனம் செய்யப்பட்டு, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அமுலிலிருக்கும் ஓர் அவசரச் சட்டமானது, 382-வது பிரிவின்*

[1] *1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 12-வது பிரிவினால், "இரண்டு வருஷம்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.*

பாகம் XXI.—தாற்காலிக, இடைக்கால ஏற்பாடுகள்— பிரிவுகள் 372—373.

(1)-ம் பகுதியின் கீழ்ச் செயலாற்றும் அந்த ராஜ்யத்தின் சட்ட சபையின் அத் தொடக்கத்திற்குப் பிறகு நடக்கும் முதல் கூட்டத்திலிருந்து ஆறு வாரம் முடிவடைந்ததும், அதற்குமுன் நிகரான ராஜ்யத்தின் ராஜ்யபாலரால் வாபஸ் செய்யப்பட்டாலன்றி, அமுலற்றுப் போகும்; மேலும், இப் பிரிவில் உள்ளது எதுவும் அத்தகைய ஒரு அவசரச் சட்டத்தை மேற் சொன்ன காலத்திற்கு அப்பாலும் தொடர்ந்து அமுலிலிருந்து வரச் செய்வதாக அர்த்த விளக்கம் செய்யலாகாது.

சட்டங்களை இணக்கம் செய்ய ராஷ்டிரபதிக்குள்ள சக்தி.

[1][372. ஆ. (1). 1956-ம் வருஷத்திய அரசியலமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன் இந்தியாவில் அல்லது அதன் ஒரு பகுதியில் அமுலில் இருந்த ஒரு சட்டத்தின் ஷரத்துக்களை அந்தச் சட்டத்தினுல் திருத்தப்பட்டுள்ள இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களோடு இணங்கச் செய்யும் காரியங்களுக்காக, ராஷ்டிரபதி 1957-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதிக்கு முன் செய்த உத்தரவினுல், அச் சட்டத்தில் ரத்து செய்தல் அல்லது திருத்தல் இவற்றின் மூலமாக அவசியம் அல்லது உசிதம் என்று தோற்றும் இணக்கங்களையும் மாறுதல்களையும் செய்யலாம்; மேலும் அச் சட்டம் அந்த உத்தரவில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து அப்படிச் செய்யப்பட்ட இணக்கங்களுக்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டு அமுலிலிருக்கும் என்று ஏற்படுத்தலாம்; அத்தகைய இணக்கமோ அல்லது மாறுதலோ எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்கப்படலாகாது.

(2). (1)-ம் பகுதியில் உள்ளது எதுவும் மேற்சொன்ன பகுதியின் கீழ் ராஷ்டிரபதியால் இணக்கம் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட எச் சட்டத்தையும் ரத்து செய்யவோ, திருத்தவோ, சக்தியுள்ள எந்தச் சட்ட மன்றத்தையாகிலும் அல்லது மற்ற எந்த அதிகாரியையாகிலும் தடைப்படுத்துவதாகக் கருதப்படலாகாது.

குறிப்பிட்ட விஷயங்களில் தடைப் பாதுகாவலுக்கு உட்பட்டவர்களைப்பற்றி உத்தரவு செய்ய ராஷ்டிரபதிக்குள்ள சக்தி.

[2]373. 22-வது பிரிவின் (7)-ம் பகுதியின்கீழ்ப் பார்லிமெண்டு ஏற்பாடு செய்தல் அல்லது இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலிருந்து ஒரு வருஷம் முடிவடைதல் இவற்றுள் எது முந்தியதோ அது வரை, அப் பிரிவு அதன் (4)-ம், (7)-ம் பகுதிகளில் பார்லிமெண்டைக் குறிக்கும் இடத்திற்குப் பதிலாக ராஷ்டிரபதியைக் குறிக்கும் இடமாகவும், அப் பகுதிகளில் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்தைக் குறிக்கும் இடத்திற்குப் பதிலாக ராஷ்டிரபதியால் செய்யப்பட்ட உத்தரவைக் குறிக்கும் இடமாகவும் மாற்றப்பட்டாற்போலவே பிரயோகப்படும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 23-வது பிரிவினுல் இடைச் சேர்ப்பாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] 373-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்கு பிரயோகப்படாது.

பாகம் XXI.—தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்—

பிரிவு 374.

பெடரல் நீதிமன்ற நீதிபதிகளைப்பற்றியும் பெடரல் நீதிமன்றத்திலாவது கௌன்ஸிலோடு கூடிய மாட்சிமைதங்கிய மன்னர் பிரான் முன்பாவது முடிவுறுத நடவடிக்கைகள் பற்றியும் ஆன ஷரத்துக்கள்.

[1] 374. (1) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாகப் பதவி வகித்த பெடரல் நீதிமன்றத்தின் நீதிபதிகள், வேறுவிதமாகத் தீர்மானித்திருந்தாலன்றி, அத் தொடக்கத்தில் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஆவார்கள்; அப்போது உச்ச நீதி மன்றத்தின் நீதிபதிகள் சம்பந்தமாக 125-வது பிரிவின்கீழ் ஏற்பாடு செய்துள்ள சம்பளங்கள் இவைகளுக்கும், ரஜா பென்ஷன் பற்றிய உரிமைகளுக்கும் அவர்கள் பாத்தியதை உள்ளவர்கள் ஆவார்கள்.

(2) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் பெடரல் நீதிமன்றத்தில் முடிவுறுத வியாஜ்யங்கள் அப்பீல்கள் சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கைகள் எல்லாம் உச்ச நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டவையாகும்; உச்ச நீதிமன்றம் அவற்றைக் கேட்டு நிர்ணயிக்க விசாரணை-அதிகாரம் உடைய தாகும்; மேலும், இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு முன்பு சொல்லப்பட்ட அல்லது செய்யப்பட்ட பெடரல் நீதி மன்றத் தீர்ப்புக்களும் உத்தரவுகளும் உச்ச நீதிமன்றத்தால் சொல்லப்பட்டிருந்தால் அல்லது செய்யப்பட்டிருந்தாற் போலவே திறனும் பயனும் உடையனவாயிருக்கும்.

(3) இந்தியாவின் ஆட்சிப்பரப்பிற்குள் இருக்கும் ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு, டிக்கிரி அல்லது உத்தரவிலிருந்து அல்லது அது விஷயமாகச் செய்யப்படும் அப்பீல்களையும் மனுக்களையும் முடிவு செய்வதற்காகக் கௌன்ஸிலோடு கூடிய மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் விசாரணை-அதிகாரத்தைச் செலுத்துதலை, அவ்வாறு செலுத்துதல் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, இந்த அரசியலமைப்பில் உள்ளது எதுவும், செல்லாததாக ஆக்காது; மேலும், இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்குப் பிறகு அத்தகைய ஓர் அப்பீல் அல்லது மனுவின்பேரில் கௌன்ஸிலோடு கூடிய மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுல் செய்யப்பட்ட ஓர் உத்திரவு; இந்த அரசியல் அமைப்பினுல் உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட விசாரணை-அதிகாரத்தைச் செலுத்துகையில் அம் மன்றத்தால் செய்யப்பட்ட ஓர் உத்தரவு அல்லது டிக்கிரியாக இருந்தாற் போலவே எல்லா விஷயங்களிலும் பிரயோகப்படும்.

(4) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திலும் அத் தொடக்கத்திலிருந்தும், முதலாவது தபசிலின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட ஒரு ராஜ்யத்தில் பிரிவு கௌன்ஸிலாகச் செயலாற்றும் அதிகாரிக்கு அந்த ராஜ்யத்திற்குள்ளிருக்கும் ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு, டிக்கிரி அல்லது உத்தரவின் பேரில் அல்லது அது விஷயமாகச் செய்து கொள்ளப்படும் அப்பீல்

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 374-வது பிரிவில்,—

(i) (1)-ம், (2)-ம், (3)-ம், (5)-ம் பகுதிகளை விட்டு விட வேண்டும்.

(ii) (4)-ம் பகுதியில் ஒரு ராஜ்யத்தில் பிரிவி கௌன்ஸிலாகச் செயலாற்றுகிறதும் அதிகாரியைக் குறிக்கும் இடத்தில் 1896-ம்ஞ்சுத்திய ஜம்மு-காஷ்மீர் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைச் சபையைக் குறிக்கும் இடம் என்றும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தை குறிக்கும் இடங்களில் அரசியல் அமைப்பு (ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்துக்குப் பிரயோகப்படுவது) பற்றிய 1954-ம் வருஷத்திய உத்தரவை அதாவது 1954-ம் வருஷம் மே மாதம் 14-ம் தேதியைக் குறிக்கும் இடங்கள் என்றும் அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

பாகம் XXI.—தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்— பிரிவுகள் 374–376.

கூலியும் மனுக்கூலியும் ஏற்றுக்கொண்டு தீர்ப்பதற்கான அதிகாரம் அற்றுப்போகும்; அத் தொடக்கத்தில் அந்த அதிகாரியின்முன் முடிவு பெறுதிருந்த எல்லா அப்பீல்களும் மற்றைய நடவடிக்கைகளும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப் பட்டு அதனால் தீர்க்கப்படவேண்டும்.

(5) இப் பிரிவின் ஷரத்துக்கூ அமுலுக்குக் கொண்டு வருவதற்காகப் பார்லிமெண்டு சட்டத்தினால் மேலும் ஏற்பாடு செய்யலாம்.

நீதிமன்றங்களும் அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டுத் தொடர்ந்து செயலாற்ற வேண்டும்.

375. இந்தியாவின் ஆட்சிப் பரப்பு முழுமையிலும் சிவில், கிரிமினல் ரெவின்யூ விசாரணை-அதிகாரம் உள்ள சகல நீதி மன்றங்களும் சகல அதிகாரிகளும், நீதி இலாகாவைச் சார்ந்த வராயோ நிர்வாக இலாகாவைச் சார்ந்தவராயோ உதவிப் பணி புரிபவர்களாயோ உள்ள சகல உத்தியோகஸ்தர்களும், முறையே தத்தம்அலுவல்கூ, இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, தொடர்ந்து செய்துவரவேண்டும்.

உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளைப் பற்றிய ஷரத்துக்கள்.

[1] 376. (1) 217-வது பிரிவின் (2)-ம் பகுதியில் எவ்வாறு இருப்பினும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக ஒரு மாகாணத்தின் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளாகப் பதவி வகிப்பவர்கள், வேறு விதமாகத் தீர்மானித்திருந்தாலன்றி, அத் தொடக்கத்தில் அதற்கு நிகரான ராஜ்யத்திலுள்ள உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஆவார்கள்; அப்போது அந்த உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் சம்பந்தமாக 221-வது பிரிவின்கீழ் ஏற்பாடு செய்துள்ள சம்பளங்கள் படிகள் இவைகளுக்கும், ரஜா பென்ஷன் இவை பற்றிய உரிமைகளுக்கும் அவர்கள் பாத்தியதை உள்ளவர்கள் ஆவார்கள்.

[2][அத்தகைய ஒரு நீதிபதி, அவர் இந்தியக் குடி அல்லாதவ ராயினும் அத்தகைய உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியாகவோ மற்றெந்த உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி அல்லது மற்றைய நீதிபதியாகவோ நியமிக்கப்பட அருகர் ஆவார்].

(2) முதலாவது தபசிலின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட ஒரு ராஜ்யத்திற்கு நிகரான ஓர் இந்தியச் சமஸ்தானத்தில் உள்ள ஓர் உயர் நீதிமன்றத்தில் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக நீதிபதிகளாகப் பதவி வகிப்பவர்கள் வேறு விதமாகத் தீர்மானித்திருந்தாலன்றி, அத் தொடக்கத்தில் அப்படிக் குறிப்பிட்ட ராஜ்யத்தின் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஆவார்கள்; மேலும், 217-வது பிரிவின் (1)-ம், (2)-ம் பகுதிகளில் எவ்வாறு இருப்பினும், அப் பிரிவின் (1)-ம் பகுதியின் விலக்கு நிபந்தனைக்கு

[1] 376-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[2] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்)சட்டத்தின் 13-வது பிரிவினால் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

பாகம் XXI.—தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்— பிரிவுகள் 376–378.

உட்பட்டு, அவர்கள் ராஷ்டிரபதி உத்தரவினால் நிர்ணயிக்கும் காலம் முடிவடையும்வரை தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

(3) இப் பிரிவில், "நீதிபதி" என்னும் பதம் பதிலாக வேலை பார்க்கும் நீதிபதியோ அல்லது அதிகப்படியான நீதிபதியோ அடங்கியதாகாது.

இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் பற்றிய ஷரத்துக்கள்.

[1] 377. இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாகப் பதவி வகித்த இந்தியாவின் மாபெரும் பரிசோதகர், வேறு விதமாகத் தீர்மானித்திருந்தாலன்றி, அத் தொடக்கத்தில் இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் ஆவார்; அப்போது இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் சம்பந்தமாக 148-வது பிரிவின் (3)-ம் பகுதியின்கீழ் ஏற்பாடு செய்துள்ள சம்பளங்களுக்கும், ராஜா பென்ஷன் இவைபற்றிய உரிமைகளுக்கும் அவர் பாத்தியதை உள்ளவர் ஆவார்; மேலும் அவர் அத் தொடக்கத்திற்கு அடுத்துமுன்னதாகத் தமக்குப் பிரயோகப்படத்தக்கவையாயிருந்த ஷரத்துக்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட தமது பதவிக் காலம் முடிவடையும்வரை தொடர்ந்து பதவி வகிக்கப் பாத்தியதை உள்ளவர் ஆவார்.

பப்ளிக் சர்விஸ் கமிஷன் களைப் பற்றிய ஷரத்துக்கள்.

[1] 378. (1) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாகப் பதவி வகித்த இந்திய டொமினியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் அங்கத்தினர்கள், வேறு விதமாகத் தீர்மானித்திருந்தாலன்றி, அத் தொடக்கத்தில் யூனியனின் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அங்கத்தினர்கள் ஆவார்கள்; மேலும், 316-வது பிரிவின் (1)-ம், (2)-ம் பகுதிகளில் எவ்வாறு இருப்பினும், அப் பிரிவின் (2)-ம் பகுதியின் விலக்கு நிபந்தனைக்கு உட்பட்டும், அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அத்தகைய அங்கத்தினர்களுக்குப் பிரயோகப்படத் தக்கவையாயிருந்த விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தங்கள் பதவிக்காலம் முடிவடையும் வரை தொடர்ந்து பதவி வகித்துவர வேண்டும்.

(2) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக ஒரு மாகாணத்தின் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அல்லது மாகாணங்களின் தொகுதி ஒன்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு பப்ளிக் சர்விஸ் கமிஷனின் அங்கத்தினர்கள், வேறு விதமாகத் தீர்மானித்திருந்தாலன்றி, அத் தொடக்கத்தில், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, நிகரான ராஜ்யத்தின் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் அங்கத்தினர்கள் ஆவார்கள், அல்லது நிகரான ராஜ்யங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கூட்டு ராஜ்யப் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் அங்கத்தினர்கள் ஆவார்கள்; மேலும், 316-வது பிரிவின் (1)-ம், (2)-ம் பகுதிகளில் எவ்வாறு இருப்பினும், அப் பிரிவின் (2)-ம் பகுதியின் விலக்கு நிபந்தனைக்கு உட்பட்டும், அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அத்தகைய அங்கத்தினர்களுக்குப் பிரயோகப்படத் தக்கவையாயிருந்த விதிகளின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட தங்கள் பதவிக்காலம் முடிவடையும்வரை தொடர்ந்து பதவி வகித்துவரவேண்டும்.

[1] 377-வது, 378-வது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படா.

பாகம் XXI.—தாற்காலிக இடைக்கால ஏற்பாடுகள்— பிரிவுகள் 378–392.

ஆந்திரப் பிரதேசச் சட்ட சபையின் ஆயுட் காலம் பற்றிய விசேஷ ஏற்பாடு.

[1] *378.(அ.) 172-வது பிரிவில் எவ்வாறு இருப்பினும் பாதகமின்றி, 1956-ம் ஔத்திய ராஜ்யச் சீரமைப்புச் சட்டத்தின் 28-வது, 29-வது பிரிவுகளின் ஷரத்துக்களின்கீழ் அமைக்கப்பட்ட ஆந்திரப்பிரதேச ராஜ்ய சட்டசபை உரிய காலத்திற்கு முன் கலைக்கப்பட்டாலன்றி, மேற்சொன்ன 29-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து ஐந்து வருஷ காலம் வரையிலும் அதற்கு மேற்படாமலும் தொடர்ந்து இருந்து வரும்; அக்கால அளவு கழிந்து போவதன் பேரில் அச் சட்டசபை கலைந்து போகும்.*

379-391. 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவினாலும் தபசினாலும் ரத்துச் செய்யப்பட்டன.

முட்டுப்பாடு களை நிவர்த்தி செய்ய ராஷ்டிர பதிக்குள்ள சக்தி.

[2] *392. (1) எந்த முட்டுப்பாடுகளையேனும் நிவர்த்தி செய்யும் பொருட்டும், முக்கியமாக, 1935-ம் வருஷத்திய இந்தியச் சர்க்கார்ச் சட்டத்தின் ஷரத்துக்களிலிருந்து இந்த அரசியல் அமைப்பின் ஷரத்துக்களுக்கு மாறும்காலம் சம்பந்தமாகவும், ராஷ்டிரபதி தாம் அவசியமெனவோ உசிதமெனவோ கருதும் மாற்றல், சேர்த்தல் அல்லது விடுதல் ஆகிய இணக்கங்களுக்கு உட்பட்டு இந்த அரசியலமைப்பை தமது உத்தரவில் குறிப்பிடும் காலத்திற்கும் பிரயோகப்பட வேண்டும் என்று கட்டளை இடலாம்:*

எனினும், V-ம் பாகத்தின் II-ம் அத்தியாயத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்ட பார்லிமெண்டின் முதல் கூட்டத்திற்குப் பிறகு அத்தகைய உத்தரவு எதுவும் செய்யப்படலாகாது.

(2) (1)-ம் பகுதியின் கீழ்ச் செய்யப்பட்ட உத்தரவு ஒவ்வொன்றும் பார்லிமெண்டின் முன்னிலையில் வைக்கப்பட வேண்டும்.

(3) இப் பிரிவினாலும், 324-வது பிரிவினாலும், 367-வது பிரிவின் (3)-ம் பகுதியினாலும், 391-வது பிரிவினாலும் ராஷ்டிரபதிக்கு அளிக்கப்பட்ட சக்திகள், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன் இந்திய டொமினியனின் கவர்னர்-ஜெனரலால் செலுத்தப்படலாகும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 14-வது பிரிவினால் இடைச் சேர்ப்பாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] 392-வது பிரிவு ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

பாகம் XXII.

சிறு பெயர், தொடக்கம், ரத்துக்கள்

சிறு பெயர்.

393. சிறு பெயர்.—இந்த அரசியல் அமைப்பு இந்திய அரசியல் அமைப்பு என்று பெயர் பெறும்.

தொடக்கம்.

[1] 394. தொடக்கம்.—இப்பிரிவும், 5, 6, 7, 8, 9, 60, 324, 366, 367, 379, 380, 388, 391, 392, 393-வது பிரிவுகளும் இப்பொழுதே அமுலுக்கு வரும்; இந்த அரசியல் அமைப்பின் தொடக்கம் என இந்த அரசியலமைப்பில் குறிப்பிட்டிருக்கும் நாளாகிய 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் இருபத்தாரும் தேதியன்று இந்த அரசியலமைப்பின் மற்றைய ஷரத்துக்கள் அமுலுக்கு வரும்.

ரத்துக்கள்.

[1] 395.—1947-ம் வருஷத்திய இந்தியச் சுதந்திரச் சட்டமும் 1935-ம் வருஷத்திய இந்தியச் சர்க்கார்ச் சட்டமும் பின் சொல்லியச் சட்டத்தைத் திருத்தம் செய்தலும் பூர்த்தி செய்தலுமான சகல சட்டங்களுடனும், 1949-ம் வருஷத்திய பிரிவி கவுன்சில் விசாரணை அதிகாரத்தை ரத்து செய்யும் சட்டம் நீங்கலாக—இதனால் ரத்துச் செய்யப்படுகின்றன.

---

[1] 394-வது, 395-வது பிரிவுகள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படமாட்டா.

[1] முதலாவது தபசில்

(பிரிவுகள் 1, 4).

இந்தியாவின் ராஜ்யங்களும், பிரதேசங்களும்.

I. ராஜ்யங்கள்.

பெயர்.	பிரதேசங்கள்.
1 ஆந்திரப் பிரதேசம்.	1953-ம் வருஷத்திய ஆந்திர ராஜ்யச் சட்டத்தின் 3-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களும் 1956-ம்வுத்திய ராஜ்யச் சீரமைப்புச் சட்டத்தின் 3-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களும்.
2 அஸ்ஸாம்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அஸ்ஸாம் மாகாணம், காசி சமஸ்தானங்கள், அஸ்ஸாம் மலைச் சாதியார் வாழுமிடங்கள் இவற்றிலடங்கிய பிரதேசங்கள்; ஆனால், 1951-ம் வருஷத்திய அஸ்ஸாம் (எல்லைகள் மாறுதல்) சட்டத்தின் தபசிலில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள் நீங்கலாக.
3 பீஹார்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக பீஹார் மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அம்மாகாணத்தின் பாகமாய் இருந்தாற்போல் நிர்வகிக்கப்பட்டுவந்த பிரதேசங்கள்; ஆனால், 1956-ம் வருஷத்திய பீஹார்-மேற்கு வங்காளம் (எல்லைகள் மாறுதல்) சட்டத்தின் 3-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள் நீங்கலாக.
4 பம்பாய்.	1956-ம் வருஷத்திய ராஜ்யச் சீரமைப்புச் சட்டத்தின் 8-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள்.
5 கேரளம்.	1956-ம் வருஷத்திய ராஜ்யச் சீரமைப்புச் சட்டத்தின் 5-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள்.
6 மத்தியப் பிரதேசம்.	1956-ம் வருஷத்திய ராஜ்யச் சீரமைப்புச் சட்டத்தின் 9-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள்.

[1] முதலாவது தபசில் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் சட்டத்தின் 2-வது பிரிவினால் மாற்றியமைத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவது தபசில்

பெயர்.	பிரதேசங்கள்.
7 மதராஸ்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத் திற்கு அடுத்து முன்னதாக மதராஸ் மாகாணத்தில் அடங்கி யிருந்த அல்லது அம் மாகாணத்தில் அடங்கியிருந்தாற்போல் நிர் வகிக்கப்பட்டு வந்த பிரதேசங் களும் 1956-ம் வருஷத்திய ராஜ் யச் சீரமைப்புச் சட்டத்தின் 4-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங் களும்; ஆனல், 1953-ம் வருஷத் திய ஆந்திர ராஜ்யச் சட்டத்தின் 3-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவி லும், 4-வது பிரிவின் (1)-ம் உட் பிரிவிலும் குறிப்பிட்டுள்ள பிரதே சங்களும், 1956-ம் வருஷத்திய ராஜ்யச் சீரமைப்புச் சட்டத்தின் 5-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் கண்ட (ஆ) பகுதியிலும் 6-வது பிரிவிலும் 7-ம் பிரிவின் (1)-ம் உட் பிரிவில் கண்ட (ஈ) பகுதியிலும் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களும் நீங்கலாக.
8 மைசூர்.	1956-ம் வருஷத்திய ராஜ்யச் சீர மைப்புச் சட்டத்தின் 7-வது பிரி வின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட் டுள்ள பிரதேசங்கள்.
9 ஓரிஸ்ஸா.	இந்த அர்சியல் அமைப்பின் தொடக்கத் திற்கு அடுத்து முன்னதாக ஓரிஸ் ஸா மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அம் மாகாணத்தில் அடங் கியிருந்தாற்போல் நிர்வகிக்கப் பட்டு வந்த பிரதேசங்கள்.
10 பஞ்சாப்.	1956-ம் வருஷத்திய ராஜ்யச் சீர மைப்புச் சட்டத்தின் 11-வது பிரி வில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள்.
11 ராஜஸ்தானம்.	1956-ம் வருஷத்திய ராஜ்ய சீர மைப்புச் சட்டத்தின் 10-வது பிரி வில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்கள்.
12 உத்திரப் பிர தேசம்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத் திற்கு அடுத்து முன்னதாக ஐக்கிய மாகாணங்கள் என பெயர்பெற்ற மாகாணத்தில் அடங்கியிருந்த அல் லது அம் மாகாணத்தில் அடங்கி யிருந்தாற் போல் நிர்வகிக்கப்பட்டு வந்த பிரதேசங்கள்.

முதலாவது தபசில்

பெயர்.	பிரதேசங்கள்.
13 மேற்கு வங்காளம்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக மேற்கு வங்காள மாகாணத்தில் அடங்கியிருந்த அல்லது அம் மாகாணத்தில் அடங்கியிருந்தாற்போல் நிர்வகிக்கப்பட்டுவந்த பிரதேசங்களும் 1954-ம் வருஷத்திய சந்திரநாகூர் (இணைப்புச்) சட்டத்தின் 2-வது பிரிவின்(இ) பகுதியில் அர்த்தம் சொல்லப்பட்டுள்ள சந்திர நாகூர் பிரதேசமும் 1956-ம் வருஷத்திய பிஹார்-மேற்கு வங்காள (எல்லைகள் மாறுதல்) சட்டத்தின் 3-வது பிரிவின் (1)-ம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களும்.
14 ஜம்மு-காஷ்மீர்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக ஜம்மு-காஷ்மீர் இந்திய சமஸ்தானத்தில் அடங்கியிருந்த பிரதேசங்கள்.

II யூனியன் பிரதேசங்கள்

பெயர்.	விஸ்தீரணம்.
1 டெல்லி.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக டெல்லி என்னும் பிரதம கமிஷனருடைய மாகாணத்தில் அடங்கியிருந்த பிரதேசம்.
2 ஹிமாசலப் பிரதேசம்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக, ஹிமாசலப் பிரதேசம், பிலாஸ்பூர் என்னும் பெயர்களின்கீழ் பிரதம கமிஷனர்களுடைய மாகாணங்களாக இருந்தாற் போல் நிர்வகிக்கப்பட்டு வந்த பிரதேசங்கள்.
3 மணிபூர்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக மணிபூர் என்னும் பெயரின்கீழ்ப் பிரதம கமிஷனர் மாகாணமாக இருந்தாற்போல் நிர்வகிக்கப்பட்டு வந்த பிரதேசம்.
4 திரிபுரா.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக திரிபுரா என்னும் பெயரின்கீழ் பிரதம கமிஷனர் மாகாணமாக இருந்தாற் போல் நிர்வகிக்கப்பட்டு வந்த பிரதேசம்.

முதலாவது தபசில்

பெயர்.	விஸ்தீரணம்.
5 அந்தமான், நிக்கோபார் தீவுகள்.	இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அந்தமான், நிக்கோபார் தீவுகள் என்னும் பிரதம கமிஷனருடைய மாகாணத்தில் அடங்கியிருந்த பிரதேசம்.
6 லக்ஷத் தீவுகள், மினிகாய், அமிந்திவித் தீவுகள்.	1956-ம் வருஷத்திய ராஜ்யச் சீரமைப்புச் சட்டத்தின் 6-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரதேசம்.

இரண்டாவது தபசில்

[பிரிவுகள் 59 (3), 65 (3), 75 (6), 97, 125, 148 (3), 158 (3), 164 (5), 186, 221.]

பாகம் அ

ராஷ்டிரபதியைப் பற்றியும்[1] * * * * ராஜ்யங்களின் ராஜ்யபாலர்களைப் பற்றியும் ஆன ஷரத்துக்கள்

1. ராஷ்டிரபதிக்கும் [1] * * * * * * ராஜ்யங்களின் ராஜ்யபாலர்களுக்கும் மாதம் ஒன்றுக்குப் பின் வரும் ஊதியங்கள் கொடுக்கப்படவேண்டும்; அவையாவன:—

ராஷ்டிரபதி	;	10,000 ரூபாய்
ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலர்	;	5,500 ரூபாய்

2. இந்திய டொமினியன் கவர்னர்-ஜெனரலுக்கும் [2] * * * * * * * * * * * ராஜ்யங்களுக்கு நிகரான மாகாணங்களின் கவர்னர்களுக்கும் இந்திய அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக முறையே கொடுக்கப்படத்தக்க படிகள் எவையோ அவைகளும் ராஷ்டிரபதிக்கும் அந்த ராஜ்யபாலர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும்.

3. இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாகக் கவர்னர்-ஜெனரலும் [3] [ராஜ்யங்களுக்கு] நிகரான மாகாணங்களின் ராஜ்யபாலர்களும் முறையே எந்த விசேஷ உரிமைகளைப் பெறப் பாத்தியதை உள்ளவர்களாய் இருந்தார்களோ அவற்றையே ராஷ்டிரபதியும் அந்த ராஜ்யங்களின் ராஜ்யபாலர்களும் தத்தம் பதவிக்காலங்கள் முழுமையிலும்பெறப் பாத்தியதை உள்ளவர்கள் ஆவார்கள்.

4. உப-ராஷ்டிரபதியோ வேறு ஒருவரோ ராஷ்டிரபதியின் வேலையைச் செய்துவரும்போது அல்லது ராஷ்டிரபதியாக வேலைபார்க்கும்போது, அல்லது எவர் ஒருவராவது ராஜ்ய பாலருடைய அலுவல்களைச் செய்துவரும்போது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, எவருடைய அலுவல்களைச் செய்கிறாரோ அல்லது எவருக்காக வேலை பார்க்கிறாரோ அந்த ராஷ்டிரபதிக்குரிய அல்லது ராஜ்யபாலருக்குரிய ஊதியங்களையும் படிகளையும் விசேஷ உரிமைகளையும் பெறப் பாத்தியதை உள்ளவர் ஆவார்.

பாகம் ஆ [ரத்து செய்யப்பட்டது].

---

[1] "முதலாவது தபசிலின் அ பாகத்தில் குறிப்பிட்ட" என்னும் சொற்களும் எழுத்தும் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

[2] "மேற்கண்டவாறு குறிப்பிட்ட" என்னும் சொற்கள் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[3] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் "அத்தகைய ராஜ்யங்களுக்கு" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது தபசில்.

பாகம் இ

[1] * * * * * * * * * * * * * * *

மக்கட்சபையின் சபாநாயகர், உப-சபாநாயகர், ராஜ்ய பரிஷத்தின் அக்கிராசனர், உப-அக்கிராசனர்,[2] * * * * ஒரு ராஜ்யத்தின் சட்[3] சபையின் சபாநாயகர், உப-சபாநாயகர், [3][ஒரு ராஜ்யத்தின்] சட்ட பரிஷத்தின் அக்கிராசனர் உப-அக்கிராசனர், இவர்களைப் பற்றிய ஷரத்துக்கள்.

7. இந்திய டொமினியனின் அரசியல் நிர்ணய சபையின் சபாநாயகருக்கு இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக கொடுக்கப்படத்தக்க சம்பளங்களும் படிகளும் எவையோ அவைகளும் மக்கட் சபையின் சபாநாயகருக்கும் ராஜ்யபரிஷத்தின் அக்கிராசனருக்கும் கொடுக்கப்பட வேண்டும்; இந்திய டொமினியனின் அரசியல் நிர்ணய சபையின் உப-சபாநாயகருக்கு அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாகக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்களும் படிகளும் எவையோ அவைகளும் மக்கட்சபையின் உப-சபாநாயகருக்கும் ராஜ்ய பரிஷத்தின் உப-அக்கிராசனருக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

8. [4][ஒரு] ராஜ்யத்திற்கு நிகரான மாகாணத்தின் சட்ட சபையின் சபாநாயகருக்கும் உப-சபாநாயகருக்கும் சட்ட பரிஷத்தின் தலைவருக்கும் உப-தலைவருக்கும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக முறையே கொடுக்கப்படத்தக்க சம்பளங்களும் படிகளும் எவையோ அவைகளும் [5][அந்த ராஜ்யத்தின்] சட்டசபையின் சபாநாயகருக்கும் உப-சபாநாயகருக்கும் ராஜ்யத்தின் சட்டபரிஷத்தின் அக்கிராசனருக்கும் உப-அக்கிராசனருக்கும் கொடுக்கப்பட வேண்டும்; அத்தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அதற்கு நிகரான மாகாணத்திற்குச் சட்ட பரிஷத்து எதுவும் இல்லாவிட்டால், அந்த ராஜ்யத்தின் சட்ட பரிஷத்தின் அக்கிராசனருக்கும் உப-அக்கிராசனருக்கும் அந்த ராஜ்யத்தின் ராஜ்ய பாலர் நிர்ணயிக்கும் சம்பளங்களும் படிகளும் கொடுக்கப்பட வேண்டும்.

---

[1] பாகம் ஆ, 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டது.

[2] "முதலாவது தபசிலின் அ பாகத்திலுள்ள" என்னும் சொற்களும் எழுத்தும் மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[3] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "அததகைய ஒரு ராஜ்யத்தின்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[4] மேற்படி சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலின் அ பாகத்தில் குறிப்பிட்ட" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[5] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் "அத்தகைய ஒரு ராஜ்யத்தின்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது தபசில்.

பாகம் ஈ

உச்ச நீதிமன்றம், [1]* * * * * உயர் நீதி மன்றங்கள் இவற்றின் நீதிபதிகளைப் பற்றிய ஷரத்துக்கள்.

[2] 9. (1) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கு அவர்கள் சேவையில் ஈடுபட்ட காலத்தில் மாதம் ஒன்றுக்குப் பின்வரும் விகிதங்களின்படி சம்பளம் கொடுக்கப்படவேண்டும் ; அவை யாவன :—

பிரதம நீதிபதி	..	5,000 ரூபாய்
மற்றைய நீதிபதி	..	4,000 ரூபாய்

எனினும், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் தமது நியமனக் காலத்தில் இந்தியச் சர்க்காரின்கீழாவது அதற்கு முன்னிருந்த சர்க்கார்களில் எதன்கீழாவது, அல்லது ஒரு ராஜ்யத்தின் சர்க்காரின்கீழாவது அதற்கு முன்னிருந்த சர்க்கார்களில் எதன்கீழாவது முன்னேசெய்த சேவை சம்பந்த மாக (அசக்தராணது பற்றியோ அல்லது காயமுற்றது பற்றியோ அளித்த பென்ஷன் அல்லாத) பென்ஷன் ஒன்றைப் பெற்றுவந்தால், உச்ச நீதிமன்றத்தின் சேவை சம்பந்தமாக அவர் பெறும் சம்பளத்திலிருந்து—

[3] (அ) அப் பென்ஷன் தொகையும்,

(ஆ) அவர் அத்தகைய நியமனத்திற்கு முன் மேலே குறிப்பிட்ட முந்தையச் சேவைக்காக அவருக்குச்

---

[1] "முதலாவது தபசிலின் அ பாகத்தில் கண்ட ராஜ்யங்களில் உள்ள" என்னும் சொற்களும் எழுத்தும் மேற்படி சட்டத்தின் 25-வது பிரிவினால் விடப்பட்டன.

[2] இந்திய அரசியல் அமைப்பின் இரண்டாவது தபசில் 1951-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதியிலிருந்து எட்டு வருஷ கால அளவுக்கு கீழ்க்கண்ட இணக்கத்துக்கு உட்பட்டு செல் திறன் உள்ளதாகும் என்று அரசியல் அமைப்பு (மூட்டுப்பாடுகள் நிவர்த்தி) பற்றிய XI-ம் உத்தரவின் 2-வது பாராவில் அமைப்பு செய்திருக்கிறது ; அவ் விணக்கமாவது :—

"9-வது பாராவில் (3)-ம் உப பாராவிற்குப் பதிலாக கீழ்க்கண்ட உப-பாராவை அமைத்துக்கொள்ள வேண்டும் ; அதாவது :—

(3) இப் பாராவின் (2)-ம் உப பாராவில் உள்ளது எதுவும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக பெடரல் நீதி மன்றத்தின் நீதிபதிப் பதவியை வகித்து வந்து அத் தொடக்கத்தில் 374-வது பிரிவின (1)-ம் பகுதியின் கீழ் நீதிபதியாகியுள்ள ஒரு நீதிபதிக்கு அவர் அந்த நீதி மன்றத்தின் பிரதம நீதிபதி அல்லாத மற்றைய நீதிபதி பதவியை வகிக்கும் காலத்தில் பிரயோகப்படாது. அத்தகைய நீதிபதி ஒவ்வொருவரும் பிரதம நீதிபதியல்லாத மற்றைய நீதிபதியாக பதவி வகித்த காலத்திற்கு அல்லது அவர் பிரதம நீதிபதியாக அல்லது பிரதம நீதிபதிக்குப் பதிலாக நியமிக்கப் பட்டால் அவர் பிரதம நீதிபதியாகப் பதவி வகித்த காலத்திற்கு இப் பாராவின் (1)-ம் உப பாராவில் குறிப்பிட்டுள்ள சம்பளத்தோடு, அப்படிக் குறிப்பிட்ட சம்பளத்திற்கும் இந்தஅரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்ன தாக பெடரல் நீதி மன்றத்தின் நீதிபதி என்ற முறையில் அவருக்குக் கொடுக்கப் படத்தக்க சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசத்திற்கும் சமமான தொகையை விசேஷச் சம்பளமாகப் பெறுவதற்கு உரியவராவார்.

[3] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 25-வது பிரிவினால், "அப்பென்ஷன் தொகை குறைக்கப்பட வேண்டும்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது"

இரண்டாவது தபசில்.

சேரவேண்டிய பென்ஷனின் ஒரு பகுதிக்குப் பதிலாக அதன் மாற்றிக்கொண்ட மதிப்புள்ள தொகை பெற்றுக்கொண்டிருந்தால், அப்பென்ஷனின் அப்பகுதித் தொகையும்,

(இ) அவர், அத்தகைய நியமனத்திற்கு முன், மேலே குறிப்பிட்ட முந்தைய சேவைக்காக ஓய்வு பெறும் காலத்தில் கொடுக்கப்படும் நன்கொடையைப் பெற்றுக்கொண்டிருந்தால், அந்த நன்கொடைக்குச் சமமான பென்ஷன் தொகையும்,

குறைக்கப்பட வேண்டும்.

(2) உச்ச நீதிமன்ற நீதிபதி ஒவ்வொருவருக்கும் சர்க்கார் அளிக்கும் மாளிகை ஒன்றை வாடகையின்றி உபயோகிக்க உரிமை உள்ளவர் ஆவார்.

(3) இப் பாராவின் (2)-ம் உப-பாராவில் உள்ளது எதுவும், இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக—

(அ) பெடரல் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதிப் பதவியை வகித்துவந்து அத்தொடக்கத்தில் 374-வது பிரிவின் (1)-ம் பகுதியின்கீழ் உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாகியுள்ள, அல்லது

(ஆ) பெடரல் நீதிமன்றத்தின் மற்றொரு நீதிபதிப் பதவியை வகித்துவந்து அத் தொடக்கத்தில் மேற்சொன்ன பகுதியின்கீழ் உச்ச நீதிமன்றத்தின் (பிரதம நீதிபதி அல்லாத வேறு) ஒரு நீதிபதியாகியுள்ள

நீதிபதி ஒருவர் அத்தகைய பிரதம நீதிபதியாகவோ மற்றைய நீதிபதியாகவோ பதவிவகிக்கும் காலத்தில் பிரயோகப்படாது ; அப்படி உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாகியுள்ள அல்லது மற்றைய நீதிபதியாகியுள்ள நீதிபதி ஒவ்வொருவருக்கும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அத்தகைய பிரதம நீதிபதியாக அல்லது மற்றைய நீதிபதியாகச் சேவையில் ஈடுபட்ட காலத்திற்கு, இப் பாராவின் (1)-ம் உப-பாராவில் குறிப்பிட்ட சம்பளத்தோடு, அப்படிக் குறிப்பிட்ட சம்பளத்திற்கும் அத்தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அவர் பெற்றுவந்த சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசத்திற்குச் சமமான தொகையை விசேஷச் சம்பளமாகப் பெறுவதற்கு உரியவர் ஆவார்.

(4) உச்ச நீதிமன்ற நீதிபதி ஒவ்வொருவரும், இந்தியாவின் ஆட்சிப் பரப்பிற்குள் உத்தியோக முறையில் பிரயாணம் செய்கையில், அவர் செய்த செலவுகளுக்கு ஈடு செய்யும் பொருட்டு, ராஷ்டிரபதி அவ்வப்போது நிர்ணயிக்கும் நியாயமான படிகளைப் பெறுவார்; மேலும், பிரயாணம் சம்பந்தமாக ராஷ்டிரபதி அவ்வப்போது நிர்ணயிக்கும் நியாயமான வசதிகளையும் அந்த நீதிபதிக்கு அளித்தல் வேண்டும்.

(5) உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ரஜா (ரஜாப் படிகள் உட்பட) பென்ஷன் இவை விஷயமாக உள்ள உரிமைகள் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாகப் பெடரல் நீதிமன்ற நீதிபதிகளுக்குப் பிரயோகப்பட்டுவந்த ஷரத்துகளினால் முறைப்படுத்தப்படும்.

இரண்டாவது தபசில்.

10. [1] [(1) உயர் நீதி மன்றத்தின் நீதிபதிகளுக்கு அவர்கள் சேவையில் ஈடுபட்ட காலத்தில் மாதம் ஒன்றுக்குப் பின்வரும் விகிதங்களின்படி சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; அவை யாவன:—

பிரதம நீதிபதி	4,000 ரூபாய்;
மற்றைய நீதிபதி	3,500 ரூபாய்:

எனினும், உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் தமது நியமனக் கர்லத்தில் இந்தியச் சர்க்காரின் கீழாவது அதற்கு முன்னிருந்த சர்க்கார்களில் எதன் கீழாவது அல்லது ஒரு ராஜ்யத்தின் சர்க்காரின் கீழாவது அதற்கு முன் னிருந்த சர்க்கார்களில் எதன் கீழாவது முன்னே செய்த சேவை சம்பந்தமாக (அசக்தரானதுபற்றியோ அல்லது காய முற்றது பற்றியோ அளித்த பென்ஷன் அல்லாத) பென்ஷன் ஒன்றைப் பெற்றுவந்தால், உயர் நீதிமன்றத்தின் சேவை சம்பந்தமாக அவர் பெறும் சம்பளத்திலிருந்து—

(அ) அப்பென்ஷன் தொகையும்,

(ஆ) அவர், அத்தகைய நியமனத்திற்கு முன், மேலே குறிப்பிட்ட முந்தையச் சேவைக்காக அவருக்குச் சேர வேண்டிய பென்ஷனின் ஒரு பகுதிக்குப் பதிலாக அதன் மாற்றிக் கொண்ட மதிப் புள்ள தொகையை பெற்றுக் கொண்டிருந்தால் அப்பென்ஷனின் அப்பகுதித் தொகையும்,

(இ) அவர், அத்தகைய நியமனத்திற்கு முன் மேலே குறிப்பிட்ட முந்தையச் சேவைக்காக ஓய்வு பெறும் காலத்தில் கொடுக்கப்படும் நன்கொடை யைப் பெற்றுக் கொண்டிருந்தால், அந்த நன் கொடைக்குச் சமமான பென்ஷன் தொகையும்

குறைக்கப்படவேண்டும்.

(2) இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக—

(அ) ஒரு மாகாணத்திலுள்ள ஓர் உயர் நீதிமன்றத் தின் பிரதம நீதிபதிப் பதவியை வகித்து வந்து அத் தொடக்கத்தில் 376-வது பிரிவின் (1)-ம் பகுதி யின்கீழ் நிகரான ராஜ்யத்திலுள்ள உயர் நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியாகியுள்ள, அல்லது

(ஆ) ஒரு மாகாணத்திலுள்ள ஓர் உயர் நீதிமன்றத் தின் மற்றொரு நீதிபதியாகப் பதவி வகித்துவந்து அத் தொடக்கத்தில் அப்பகுதியின்கீழ் நிகரான ராஜ்யத்திலுள்ள உயர் நீதிமன்றத்தின் (பிரதம நீதிபதி அல்லாத) ஒரு நீதிபதியாகியுள்ள

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத் தின் 25-வது பிரிவினால் அசல் (1)-ம் உப பாராவிற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது தபசில்

[1]ஒருவர், அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக, இப் பாராவில் (1)-ம் உப-பாராவில் குறிப்பிட்ட விகிதத்தைக் காட்டிலும் அதிக விகிதப்படியுள்ள சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தால், அத்தகைய ஒவ்வொருவரும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அத்தகைய பிரதம நீதிபதியாக அல்லது மற்றைய நீதிபதியாகச்சேவையில் ஈடுபட்டுச் செலவழித்த காலத்திற்கு விசேஷச் சம்பளமாக மேற் சொன்ன உப-பாராவில் குறிப்பிட்ட சம்பளத்தோடு, அப்படிக் குறிப்பிட்ட சம்பளத்திற்கும் அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக அவர் பெற்றுவந்த சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசத்திற்குச் சமமான தொகையைப் பெறுவதற்கு உரியவர் ஆவார்.

[2][(3). 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன், முதலாவது தபசிலின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட ஒரு ராஜ்யத்தின் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாக ஒருவர் பதவி வகித்திருந்து, அத் தொடக்கத்திற்குப் பிறகு அச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட ஷ்டி தபசிலில் குறிப்பிட்ட ஒரு ராஜ்யத்தின் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாகியிருந்து அவர் அத் தொடக்கத்திற்கு முன் தமது சம்பளத்துடன்அதிகப் படியான தொகையைப் படியாகப் பெற்று வந்தால், அவர் அத்தகைய பிரதம நீதிபதியாகச் சேவையில் ஈடுபட்டு வந்த காலத்திற்கு, இப் பாராவின் (1)-ம் உப-பாராவில் குறிப்பிட்டுள்ள சம்பளத்துடன்கூட அதே தொகையைப் படியாகப் பெறுவதற்கு அவர் உரிமையுள்ளவர் ஆவார்.]

11. இப் பாகத்தில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி,—

(அ) "பிரதம நீதிபதி" என்னும் பாகத்தில் தாற்காலிகமாக வேலை பார்க்கும் ஒரு பிரதம நீதிபதி என்பதும் அடங்கும் ; மேலும் "நீதிபதி" என்பதில் நியமித்த நீதிபதி ஒருவர் என்பதும் அடங்கும் ;

(ஆ) " ஈடுபட்ட சேவை " என்பதில்—

(i) ஒரு நீதிபதி நீதிபதியாகக் கடமை ஆற்றுவதில் அல்லது ராஷ்டிரபதியின் வேண்டுகோளின்பேரில் செய்ய ஏற்றுக்கொண்ட மற்றைய அலுவல்களைச் செய்கையில் கழிந்த காலமும்,

---

[1] இந்திய அரசியல் அமைப்பின் இரண்டாவது தபசில் கீழ்க்கண்ட இணக்கத்திற்கு உட்பட்டு செல்திறன் உள்ளதாகும் என்று அரசியல் அமைப்பு (முட்டுப்பாடுகள் நிவர்த்தி) பற்றிய IV-ம் உத்தரவின் 2-வது பாராவில் ஏற்பாடு செய்திருகிறது ; அவ் விணக்கமாவது :—

(2) 10-வது பாராவில் (2)-ம் உப பாராவில், (ஆ) பகுதிக்குப் பிறகுள்ள சகல சொற்களுக்கும் பதிலாக அடியிற்கண்டவற்றை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

* * * *

ஒருவர் சந்தர்ப்பத்திற்கேற்ப பிரதம நீதிபதியாக அல்லது மற்றைய நீதிபதியாகப் பதவி வகித்த காலத்திற்கு இப் பாராவின் (1)-ம் உப பாராவில் குறிப்பிட்டுள்ள சம்பளத்தோடு, அந்தச் சம்பளத்திற்கும் அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக மேற்படி மாகாணத்தின் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதிக்கு அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மற்றைய நீதிபதிக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பள வீதத்திற்கும் உள்ள வித்தியாசத்திற்குச் சமமான தொகையை விசேஷ சம்பளமாகப் பெறுவதற்கு உரியவராவார்.

[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 25-வது பிரிவினுல் அசல் (3)-ம்,(4)-ம் உப-பாராக்களுக்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது தபசில்.

(ii) அந்த நீதிபதி ரஜாவிலிருக்கும் காலம் நீங்கலாக விடுமுறைக்காலங்களும்,

(iii) ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதி மன்றத்திற்காவது ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றிற்காவது மாற்றப் படுவதன் பேரில் புதிய வேலையை ஏற்பதற்கு அளித்த காலமும் அடங்கும்.

பாகம் உ

இந்தியாவின் மாபெருங் கணக்கர்–பரிசோதகரைப்பற்றிய ஷரத்துக்கள்.

12. (1) இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகருக்கு மாதம் ஒன்றுக்கு நாலாயிரம் ரூபாய் வீதம் சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

(2) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்தியாவின் மாபெரும் - பரிசோதகராகப் பதவி வகித்துவந்து, அத் தொடக்கத்தில் 377-வது பிரிவின் கீழ் இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகர் ஆகியிருந்த ஒருவர் இப் பாராவின் (1)-ம் உப-பாராவில் குறிப்பிட்ட சம்பளத்தோடு அப்படிக் குறிப்பிட்ட சம்பளத்திற்கும் அத் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்தியாவின் மாபெரும்-பரிசோதகராக அவர் பெற்று வந்த சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசத்திற்குச் சமமான தொகையைவி சேஷச் சம்பளமாகப் பெறுவதற்கு உரியவர் ஆவார்.

(3) இந்தியாவின் மாபெருங் கணக்கர்–பரிசோதகரின் ரஜா, பென்ஷன் இவை விஷயமாக உள்ள உரிமைகளும் அவருடைய மற்றையச் சேவை முறைகளும் இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக இந்தியாவின் மாபெரும்-பரிசோதகருக்குப் பிரயோகப்பட்டுவந்த ஷரத்துக்களிஞல், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, முறைப்படுத்தப் படும் அல்லது தொடர்ந்து முறைப்படுத்தப்பட்டுவரும்; மேலும், அந்த ஷரத்துக்களில் கவர்னர்-ஜெனரலைக் குறிக்கும் சகல இடங்களுக்கும் ராஷ்டிரபதியைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்.

மூன்றுவது தபசில்[1]

[பிரிவுகள் 75 (4), 99, 124 (6), 148 (2), 164 (3), 188, 219]

பிரமாணங்கள் அல்லது உறுதிமொழிகளின் நமூனாக்கள்

I

யூனியன் மந்திரியின் பதவி பிரமாண நமூனா:—

" அ. ஆ. என்னும் நான் சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசியல்அமைப்பில் உண்மையான நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பேன் என்றும், யூனியன் மந்திரியாக என் கடமைகளை நேர்மையுடனும் மனச்சாட்சியின்படியும் நிறைவேற்றுவேன் என்றும், அரசியல்அமைப்பிற்கும் சட்டத்திற்கும்இணங்க, அச்சமோ அபிமானமோ, விருப்போ வெறுப்போ இன்றி நானு வகையினரான மக்களுக்கும் நியாயம் வழங்குவேன் என்றும்

கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன். "

மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

II

யூனியன் மந்திரியின் அந்தரங்கப் பிரமாண நமூனா :—

" அ. ஆ. என்னும் நான் யூனியன் மந்திரி என்ற ஹோதாவில் என்னுடைய ஆலோசனைக்குக் கொண்டு வரப்படும் அல்லது எனக்குத் தெரியவரும் எவ் விஷயத்தையும், அத்தகைய மந்திரியாக என்னுடைய கடமைகளைக் கிரமப்படி நிறைவேற்றுவதற்கு அவசியமான அளவுக்கன்றி, எவருக்காவது அல்லது எவர்களுக்காவது நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் தெரிவிக்கவோ வெளிப்படுத்தவோ மாட்டேன் என்று

கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன். "

மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

III

பார்லிமெண்டின் அங்கத்தினர் செய்ய வேண்டிய பிரமாணம் அல்லது உறுதிமொழி நமூனா:—

" அ. ஆ. என்னும் நான் ராஜ்யபரிஷத்தின் (அல்லது மக்கட் சபையின்) ஓர் அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறபடியால் (அல்லது நேமகம் செய்யப்பட்டிருக்கிறபடியால்), சட்டத்தினால் ஏற்

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், V-ம் VI-ம் VII-ம் VIII-ம், B-நமூனாக்களை விட்டு விட வேண்டும்.

மூன்றுவது தபசில்

படுத்தப்பட்ட இந்திய அரசியல் அமைப்பில் உண்மையான நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பேன் என்றும், நான் இப்போது ஏற்கப்போகும் கடமையை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்றும் கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன். ,,

மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

IV

உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளும் இந்தியாவின் மாபெருங் கணக்கர்-பரிசோதகரும். செய்யவேண்டிய பிரமாணம் அல்லது உறுதி மொழி நமூனா:—

" அ. ஆ. என்னும் நான் இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாக (அல்லது ஒரு நீதிபதியாக) (அல்லது இந்தியாவின் மாபெருங் கணக்கர்—பரிசோதகராக) நியமிக்கப்பட்டிருக்கிறபடியால், சட்டத்திஞல் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசியல் அமைப்பில் உண்மையான நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பேன் என்றும், கிரமமாகவும் நேர்மையாகவும் என் முழுத்திறமையுடனும் அறிவுடனும் விவேகத்துடனும் என்னுடைய பதவிக்குரிய கடமைகளே அச்சமோ, அபிமானமோ, விருப்போ வெறுப்போ இன்றிச் செய்வேன் என்றும், அரசியல் அமைப்பையும் சட்டங்களையும் ஆதரித்து நிற்பேன் என்றும் கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன். "

மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

V

ஒரு ராஜ்யத்தின் மந்திரியின் பதவிப் பிரமாண நமூனா:—

" அ. ஆ. என்னும் நான் சட்டத்திஞல் ஏற்படுத்தப்பட்ட இந்தியஅரசியல்அமைப்பில்உண்மையான நம்பிக்கையும், பக்தியும் கொண்டிருப்பேன் என்றும், ... ராஜ்யத்தின் மந்திரியாக என் கடமைகளே நேர்மையுடனும் மனச்சாட்சியின் படியும் நிறைவேற்றுவேன் என்றும், அரசியல் அமைப்பிற்கும் சட்டத்திற்கும் இணங்க அச்சமோ, அபிமானமோ, விருப்போ வெறுப்போ இன்றி நாலுவகையினரான மக்களுக்கும் நியாயம் வழங்குவே என்றும் கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன் ,,

மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

VI

ஒரு ராஜ்யத்தின் மந்திரியின் அந்தரங்க பிரமாண நமூனா :—

" அ. ஆ. என்னும் நான் . . . . . ராஜ்யத்தின் மந்திரி என்ற ஹோதாவில் என்னுடைய ஆலோசனைக்குக் கொண்டுவரப்படும் அல்லது எனக்குத் தெரியுவரும் எவ் விஷயத்தையும் அத்தகைய மந்திரியாக என்னுடைய கடமைகளைக் கிரமப்படி

மூன்றுவது தபசில்

நிறைவேற்றுவதற்கு அவசியமான அளவுக்கன்றி எவருக்காவது அல்லது எவர்களுக்காவது நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் தெரிவிக்கவோ வெளிப்படுத்தவோ மாட்டேன் என்று கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்.,,
மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

VII

ஒரு ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் அங்கத்தினர் செய்ய வேண்டிய பிரமாணம் அல்லது உறுதிமொழி நமூனா :—

" அ. ஆ. என்னும் நான் சட்டசபையின் (அல்லது சட்டபரிஷத்தின்) ஓர் அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறபடியால் (அல்லது நேமகம் செய்யப்பட்டிருக்கிறபடியால்) சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசியல் அமைப்பில் உண்மையான நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பேன் என்றும், நான் இப்போது ஏற்கப்போகும் கடமையை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்றும்
கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்.,,
மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

VIII

ஓர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் செய்யவேண்டிய பிரமாணம் அல்லது உறுதிமொழி நமூனா :—

" அ. ஆ. என்னும் நான் . . . . .ல் உள்ள (அல்லது . . . . ன்) உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாக (அல்லது ஒரு நீதிபதியாக) நியமிக்கப்பட்டிருக்கிறபடியால், சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசியல்அமைப்பில் உண்மையான நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பேன் என்றும், கிரமமாகவும்நேர்மையாகவும் என்முழுத்திறமையுடனும் அறிவுடனும் விவேகத்துடனும் என்னுடைய பதவிக்குரிய கடமைகளை அச்சமோ அபிமானமோ, விருப்போ வெறுப்போ இன்றிச் செய்வேன் என்றும், அரசியல் அமைப்பையும் சட்டங்களையும்ஆதரித்து நிற்பேன் என்றும்
கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்.,,
மனப் பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

நான்காவது தபசில்[1]

[பிரிவுகள் 4(1), 80 (2)]

ராஜ்யப் பரிஷத்தில் ஸ்தானங்களின் பங்கீடு

கீழ்க் கண்ட அட்டவணையின் மூதற்பத்தியில் குறிப்பிட்ட ராஜ்யம் அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பு ஒவ்வொன்றிற்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யத்திற்கு அல்லது யூனியன் ஆட்சிப் பரப்பிற்கு நேரே அந்த அட்டவணையின் இரண்டாவது பத்தியில் குறிப்பிட்ட ஸ்தானங்களின் எண்ணிக்கை பங்கீடு செய்யப்படவேண்டும்.

அட்டவணை

1	ஆந்திரப் பிரதேசம்	18
2	அஸ்ஸாம்	7
3	பீஹார்	22
4	பம்பாய்	27
5	கேரளா	9
6	மத்தியப் பிரதேசம்	16
7	மதராஸ்	17
8	மைசூர்	12
9	ஒரிஸ்ஸா	10
10	பஞ்சாப்	11
11	ராஜஸ்தானம்	10
12	உத்தரப் பிரதேசம்	34
13	மேற்கு வங்காளம்	16
14	ஜம்மு-காஷ்மீர்	4
15	டெல்லி	3
16	ஹிமாசலப் பிரதேசம்	2
17	மணிபூர்	1
18	திரிபுரா	1
	மொத்தம் ..	220

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 3-வது பிரிவினால் அமைத்துக் கொள்ளப்பட்டது.

ஐந்தாவது தபசில்[1]

[பிரிவு 244 (1)]

அனுபந்தப் பிரதேசங்கள் அனுபந்தமலை ஜாதியார்கள்—நிர்வாகமும், மேலதிகாரமும் பற்றிய ஷரத்துக்கள்

பாகம் அ

பொது

1. அர்த்த விளக்கம்.—இந்தத் தபசிலில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, ''ராஜ்யம்'' என்னும் பதம் [2] * * * * * * * .அஸ்ஸாம் ராஜ்யத்தைக் கொண்டதாகாது.

2. அனுபந்தப் பிரதேசங்களில் ஒரு ராஜ்யத்தின் நிர்வாக சக்தி.—இத் தபசிலின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு ராஜ்யத்தின் நிர்வாக சக்தி அதிலிருக்கும் அனுபந்தப் பிரதேசங்களுக்கும் வியாபிக்கும்.

3. அனுபந்தப் பிரதேசங்களின் நிர்வாகத்தைக் குறித்து ராஷ்டிரபதிக்கு ராஜ்யபாலர் [3] * * * * * * * * * செய்யும் அறிக்கை.—அனுபந்தப் பிரதேசங்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு ராஜ்யத்தினுடைய ராஜ்யபாலர் [3] * * * * * அந்த ராஜ்யத்திலிருக்கும் அனுபந்தப் பிரதேசங்களின் நிர்வாகத்தைக் குறித்து ராஷ்டிரபதிக்கு வருஷந்தோறும் அல்லது ராஷ்டிரபதி கேட்டபோதெல்லாம் அறிக்கை செய்ய வேண்டும்; யூனியனின் நிர்வாக சக்தி அப் பிரதேசங்களின் நிர்வாகத்தைப் பற்றி அந்த ராஜ்யத்திற்குக் கட்டளைகள் இடுவதற்கும் வியாபிக்கும்.

பாகம் ஆ

அனுபந்தப் பிரதேசங்கள் அனுபந்த மலை ஜாதியார்கள்—நிர்வாகமும் மேலதிகாரமும்

4. மலைஜாதியார் ஆலோசனைச் சபை.—(1) அனுபந்தப் பிரதேசங்கள் அடங்கிய ஒவ்வொரு ராஜ்யத்திலும், ராஷ்டிரபதி அப்படிக் கட்டளை இட்டால், அனுபந்தப் பிரதேசங்கள் அல்லாமல் அனுபந்த மலைஜாதிகளைக் கொண்டுள்ள ஒரு ராஜ்யத்திலும், இருபதிற்கு மேற்படாத அங்கத்தினர்கள் கொண்ட மலைஜாதியார்-ஆலோசனைச்சபை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்; இவர்களில் இயன்றவரை முக்கால் பாகத்தினர் அந்த ராஜ்யத்தின் சட்ட சபையில் அனுபந்த மலை ஜாதியார்களின் பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும்:

---

1 ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

2 ''முதலாவது தபசிலின் அ பாகத்திலாவது ஆ பாகத்திலாவது குறிப்பிட்ட ஒரு ராஜ்யம் என்று பொருள்படும்; ஆனால்'' என்னும் சொற்களும் எழுத்துக்களும் 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

3 ''அல்லது ராஜப் பிரமுகர்'' என்னும் சொற்கள் மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

ஐந்தாவது தபசில்

எனினும், அந்த ராஜ்யத்தின் சட்டசபையில் அனுபந்த மலைஜாதியார்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மலைஜாதியார்-ஆலோசனைச் சபையில் அப் பிரதிநிதிகளால் நிரப்பப் படவேண்டிய ஸ்தானங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவாயிருந்தால், பாக்கியுள்ள ஸ்தானங்களை அந்த மலை ஜாதியினரில் மற்றவர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும்.

(2) அந்த ராஜ்யத்திலிருக்கும் அனுபந்த மலைஜாதியார்களின் நலத்தைப் பற்றியும் முன்னேற்றத்தைப் பற்றியும் [1][ராஜ்யபாலர்] தங்கள் ஆலோசனைக்கு அனுப்பலாகும் விஷயங்களைக் குறித்து ஆலோசனை சொல்வது மலைஜாதியார்-ஆலோசனைச் சபையின் கடமையாகும்.

(3) ராஜ்யபாலர் [2] * * * * *

(அ) அச்சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அவர்களை நியமிக்கும் விதம், அச் சபையின் அக்கிராசனர், அதன் உத்தியோகஸ்தர்கள், சேவையாளர்கள் ஆகியவர்களின் நியமனம் இவற்றையும்,

(ஆ) அதன் கூட்டங்களை நடத்தல், பொதுவாக அதன் நடைமுறை இவற்றையும்,

(இ) தொடர்பான மற்றெல்லா விஷயங்களையும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, நிர்ணயிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் விதிகள் செய்யலாம்.

5. அனுபந்தப் பிரதேசங்களுக்குப் பிரயோகப்படத்தக்க சட்டம்.—(1) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும், [1][ராஜ்யபாலர்] பொது விளம்பரத்தினால் பார்லிமெண்டின் அல்லது அந்த ராஜ்யத்தினுடைய சட்டமன்றத்தின் குறிப்பிட்ட எச் சட்டமும் அந்த ராஜ்யத்தின் ஓர் அனுபந்தப் பிரதேசத்திற்காவது அல்லது அதன் ஒரு பாகத்திற்காவது பிரயோகமாகாது என்றேனும், அல்லது அவ் விளம்பரத்தில் தாம் குறிப்பிடும் விலக்குகளுக்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டு அந்த ராஜ்யத்திலுள்ள ஓர் அனுபந்தப் பிரதேசத்திற்காவது அல்லது அதன் ஒரு பாகத்திற்காவது பிரயோகமாகும் என்றேனும் உத்தரவிடலாம்; இந்த உப-பாராவின் கீழ்ச் செய்யப்பட்ட ஓர் உத்தரவை அதற்கு முன்னுள்ள காலத்திலிருந்து அமுலுறச் செய்யலாம்.

(2) [1][ராஜ்யபாலர்] ஒரு ராஜ்யத்தில் அச் சமயத்தில் அனுபந்தப் பிரதேசமாயிருக்கும் எப்பிரதேசத்தின் அமைதிக்காகவும் நல்லாட்சிக்காகவும் ரெகுலேஷன்கள் செய்யலாம்.

முக்கியமாகவும் மேற்கூறிய சக்தியின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமலும், அந்த ரெகுலேஷன்கள்—

(அ) அத்தகைய பிரதேசத்திலிருக்கும் அனுபந்த மலைஜாதியார்களால் அல்லது அவர்களுக்குள் நிலம் மாற்றுதலைத் தடுக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம்;

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் "சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ராஜ்யபாலர் அல்லது ராஜப் பிரமுகர்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது

[2] "அல்லது ராஜப் பிரமுகர்" என்னும் சொற்கள் மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும் விட்டுவிடப்பட்டன.

ஐந்தாவது தபசில்

(ஆ) அத்தகைய பிரதேசத்தில் அனுபந்த மலைஜாதியினர்களுக்கு நிலம் கொடுத்தலை முறைப்படுத்தலாம் ;

(இ) அத்தகைய பிரதேசத்தில் அனுபந்த மலைஜாதியினர்களுக்குக் கடன் கொடுப்பவர்களால் கடன் கொடுக்கும் தொழில் நடத்தப்பட்டு வருதலை முறைப்படுத்தலாம்.

(3) இப்பாராவின் (2)-ம் உப-பாராவில் குறிப்பிட்ட ஒரு ரெகுலேஷனைச் செய்கையில், ராஜ்யபாலர் [1] * * * அச் சமயத்தில் பிரஸ்தாபப் பிரதேசத்திற்குப் பிரயோகப்படலான பார்லிமெண்டின் அல்லது அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றத்தின் எச் சட்டத்தையாவது அல்லது ஏற்கனவேயுள்ள எச் சட்டத்தையாவது ரத்துச் செய்யலாம் அல்லது திருத்தலாம்.

(4) இப் பாராவின்கீழ்ச் செய்யப்பட்ட எல்லா ரெகுலேஷன்களும் உடனேயே ராஷ்டிரபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ; அவர் அங்கீகரிக்கும் வரை அவை பயனுள்ளவை ஆகா.

(5) இப் பாராவின்கீழ்ச் செய்த எந்த ரெகுலேஷனும் அந்த ரெகுலேஷனைச் செய்யும் ராஜ்யபாலர் [1] * * * * * அந்த ராஜ்யத்திற்காக மலைஜாதியார்-ஆலோசனைச் சபை ஒன்று இருந்தால் அச் சபையைக் கலந்தாலோசித்திருந்தாலன்றி—செய்யலாகாது.

பாகம் இ.

அனுபந்தப் பிரதேசங்கள்

6. அனுபந்தப் பிரதேசங்கள்.—(1) இந்த அரசியல் அமைப்பில், "அனுபந்தப் பிரதேசங்கள்" என்னும் பதம் அனுபந்தப் பிரதேசங்கள் என ராஷ்டிரபதியால் [2]உத்தரவினால் அறிவிக்கப்படும் பிரதேசங்கள் எனப் பொருள்படும்.

(2) ராஷ்டிரபதி எச் சமயத்திலும் உத்தரவினால்—

(அ) ஓர் அனுபந்தப் பிரதேசம் முழுவதுமாவது அதில் குறிப்பிட்ட ஒரு பாகமாவது அனுபந்தப் பிரதேசமாகவோ அல்லது அத்தகைய பிரதேசத்தின் ஒரு பாகமாகவோ இனி இருக்கமாட்டாது என்று உத்தரவிடலாம்.

---

[1] "அல்லது ராஜப் பிரமுகர்" என்னும் சொற்கள், 1956-ம் வருஷத்திய அரசியல்அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[2] (1) சட்ட மந்திரி காரியாலயத்தில் 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ம் தேதியன்று பிறந்த C.O. 9-ம் நே உத்தரவுடன் இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் 670-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட, தபசிலில் குறிப்பிட்ட பிரதேசங்கள் (அ பாக ராஜ்யங்கள்) பற்றிய 1950-ம் வருஷத்திய உத்தரவையும் ;

(2) சட்ட மந்திரிக் காரியாலயத்தில் 1950-ம் வருஷம் டிஸம்பர் மாதம 7-ம் தேதியன்று பிறந்த C.O. 26-ம் நே விளம்பரத்துடன் இந்தியா கெஜெட் விசேஷ வெளியீட்டின் II-ம் பாகத்தின் 3-வது பிரிவிலுள்ள 975-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட, தபசிலில் குறிப்பிட்ட பிரதேசங்கள் (ஆ பாக ராஜ்யங்கள்) பற்றிய 1950-ம் வருஷத்திய உத்தரவையும் பார்க்கவும்.

ஐந்தாவது தபசில்

(ஆ) எந்த அனுபந்தப் பிரதேசத்தையும்—எல்லை களைத் திருத்தி அமைப்பதால் மட்டுமே—மாற்ற லாம்.

(இ) ஒரு ராஜ்யத்தின் எல்லைகளை மாற்றியதன்பேரில் அல்லது ஒரு புதிய ராஜ்யத்தை யூனியனுக்குள் சேர்த்ததன்பேரிலோ அல்லது ஒரு புதிய ராஜ் யத்தை ஸ்தாபித்ததன் பேரிலோ, எந்த ராஜ் யத்திலும் முன்னமே சேர்க்கப்பட்டிராத ஒரு பிர தேசத்தை அனுபந்தப் பிரதேசமாக உள்ளது என்றோ அல்லது அதில் ஒரு பாகமாக உள்ளது என்றோ அறிவிக்கலாம் ;

அத்தகைய ஓர் உத்தரவில் அவசியமென்றும் தக்கவை என் றும் ராஷ்டிரபதிக்குத் தோன்றும் தொடர்பானவையும் விளை வானவையும் ஆன ஷரத்துக்கள் அடங்கியிருக்கலாம் ; ஆனால் மேலே சொல்லியபடியன்றி, இப்பாராவின் (1)-ம் உப-பாரா வின்கீழ்ச் செய்யப்பட்ட உத்தரவுபின்செய்த எந்த உத்தரவி னாலும் மாற்றப்படலாகாது.

பாகம் ஈ

தபசிலின் திருத்தம்

7. தபசிலின் திருத்தம்.—(1) பார்லிமெண்டு இத் தபசி லின் ஷரத்துக்களில் ஒன்றை—சேர்க்கை, மாற்றுதல் அல்லது ரத்து மூலமாக—அவ்வப்போது சட்டத்தினால் திருத்தலாம் ; தபசில் அப்படி திருத்தப்பட்டபோது இந்த அரசியல் அமைப் பில் இத் தபசிலைக் குறிக்கும் இடத்திற்கு அப்படித் திருத்தப் பட்ட தபசிலைக் குறிக்கும் இடம் என அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

(2) இப் பாராவின் (1)-ம் உப-பாராவில் கூறிய சட்டம் எதுவும் 368-வது பிரிவைப் பொறுத்தவரை, இந்த அரசியல் அமைப்பிற்கு ஒரு திருத்தம் என்று கருதப்படலாகாது.

ஆறுவது தபசில்[1]

[பிரிவுகள் 244 (2), 275 (1)]

அஸ்ஸாமில் மலைஜாதிப் பிரதேசங்களின் நிர்வாகம் பற்றிய ஷரத்துக்கள்

1. சுய நிர்வாக ஜில்லாக்களும் சுய நிர்வாகப் பிரதேசங்களும்.—(1) இப் பாராவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இத் தபசிலில் 20-வது பாராவுடன் சேர்க்கப்பட்டிருக்கும் அட்டவணையின் அ பாகத்தில் கண்ட இனம் ஒவ்வொன்றிலும் உள்ள மலை ஜாதிப் பிரதேசங்கள் ஒரு சுய நிர்வாக ஜில்லா வாக இருக்கும்.

(2) சுய நிர்வாக ஜில்லா ஒன்றில் வெவ்வேறு அனுபந்த மலைஜாதிகள் இருந்தால், ராஜ்யபாலர் பொது விளம்பரம் மூலமாக அவர்கள் வசிக்கும் பிரதேசம் அல்லது பிரதேசங்களைச் சுய நிர்வாகப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம்.

(3) ராஜ்யபாலர் பொது விளம்பரத்தினால்,—

(அ) மேற்சொன்ன அட்டவணையின் அ பாகத்தில் எப் பிரதேசத்தையும் சேர்க்கலாம் ;

(ஆ) மேற்சொன்ன அட்டவணையின் அ பாகத்திலிருந்து எப் பிரதேசத்தையும் நீக்கலாம் ;

(இ) ஒரு புதுச் சுய நிர்வாக ஜில்லாவை உண்டாக்கலாம் ;

(ஈ) ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் பிரதேசத்தை அதிகப்படுத்தலாம் ;

(உ) ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் பிரதேசத்தைக் குறைக்கலாம் ;

(ஊ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுய நிர்வாக ஜில்லாக்கள் அல்லது அவற்றின் பாகங்களை ஒரு சுய நிர்வாக ஜில்லாவாக அமையுமாறு ஒன்று சேர்க்கலாம் ;

(எ) ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் எல்லைகளை வரையறுக்கலாம் :

எனினும், இத் தபசிலின் 14-வது பாராவின் (1)-ம் உப-பாராவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனுடைய அறிக்கையைக் கவனித்தாராய்ந்த பிறகன்றி இந்த உப-பாராவின் (இ), (ஈ), (உ) (ஊ) பகுதிகளின் கீழ் ராஜ்யபாலர் எந்த உத்தரவையும் பிறப்பித்தலாகாது.

2. ஜில்லாச் சபைகளையும் பிரதேசச் சபைகளையும் அமைத்தல்.—(1) சுய நிர்வாக ஜில்லா ஒவ்வொன்றிற்காகவும் இருபத்து நான்குக்கு மேற்படாத அங்கத்தினர்களைக் கொண்ட ஜில்லாச் சபை ஒன்று இருத்தல் வேண்டும் ; அவர்களில்

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

ஆறுவது தபசில்

முக்கால் பங்குக்குக் குறையாதவர்கள் ''வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை'' என்னும் தோட்பாட்டின் பேரில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(2) இத் தபசிலின் 1-வது பாராவின் (2)-ம் உப-பாராவின்கீழ் ஒரு சுய நிர்வாகப் பிரதேசமாக அமைக்கப்படும் பிரதேசம் ஒவ்வொன்றுக்காகவும் பிரத்யேகமாக ஒரு பிரதேசச் சபை இருத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு ஜில்லாச் சபையும் ஒவ்வொரு பிரதேசச் சபையும் முறையே ''(ஜில்லாவின் பெயர்) ஜில்லாச் சபை'', ''(பிரதேசத்தின் பெயர்) பிரதேச சபை'' என்னும் பெயரால் சட்டப்படி இணைக்கப்பட்ட ஒரு நிலையமாக இருத்தல் வேண்டும்; அது சாசுவதமான தொடர்ச்சியும் ஒரு பொது முத்திரையும் உடையதாகவும் இருக்கும்; மேலும் அப் பெயரால் வியாஜ்யம் தொடரவும் தொடரப்படவும் வேண்டும்.

(4) இத் தபசிலின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் நிர்வாகம், இத் தபசிலின் கீழ் அத்தகைய ஜில்லாவிற்குள்ளிருக்கும் ஒரு பிரதேசச் சபையினிடம் நிலைபெற்றிராதிருக்கும் அளவுக்கு, அந்த ஜில்லாவின் ஜில்லாச் சபையினிடம் நிலைபெற்றிருக்கும்; மேலும் ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்தின் நிர்வாகம் அப் பிரதேசத்தின் பிரதேசச் சபையினிடம் நிலைபெற்றிருக்கும்.

(5) பிரதேசச் சபைகள் உள்ள சுய நிர்வாக ஜில்லா ஒன்றில், ஜில்லாச் சபையானது, அப் பிரதேசச் சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்கள் சம்பந்தமாக இத் தபசிலில் அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் சக்திகளுடன் கூட, அப் பிரதேசங்கள் சம்பந்தமாய் அப் பிரதேசச் சபையால் அதற்குக் கொடுக்கப்படக் கூடிய பிரதிநிதித்துவ சக்திகளை மட்டும் உடையதாயிருக்கும்.

(6) ராஜ்யபாலர் சம்பந்தப்பட்ட சுய நிர்வாக ஜில்லாக்களுக்குள் அல்லது பிரதேசங்களுக்குள் ஏற்கனவேயுள்ள மலைஜாதியார்களின் ஆலோசனைச் சபைகளுடன் அல்லது மற்றையப் பிரதிநிதித்துவம் வாய்ந்த மலைஜாதியார்களின் ஸ்தாபனங்களுடன் கலந்தாலோசித்து, ஜில்லாச் சபைகளையும் பிரதேசச் சபைகளையும் முதன் முதலாக அமைப்பதன்பொருட்டு விதிகள் செய்யலாம்; அவ் விதிகள்—

(அ) ஜில்லாச் சபைகள், பிரதேசச் சபைகள் இவற்றின் அமைப்பும், அவற்றின் ஸ்தாபனப் பங்கீடும்;

(ஆ) அச் சபைகளுக்குத் தேர்தல்களின் பொருட்டுப் பிரதேசத் தேர்வுத் தொகுதிகளை வரையறுத்தல்;

(இ) அத்தகைய தேர்தல்களில் வோட்டுச் செய்வதற்கான தகுதிகளும், அவற்றிற்கான வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரித்தலும்;

(ஈ) அத்தகைய தேர்தல்களில் அச் சபைகளின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுதற்கான தகுதிகள்;

ஆறுவது தபசில்

(உ) அச் சபைகளின் அங்கத்தினர்களின் பதவிக் காலம் ;

(ஊ) அச் சபைகளுக்குத் தேர்தல்கள் அல்லது நேமகங்கள் பற்றியோ அல்லது அவை சம்பந்த மாகவோ உள்ள மற்றெந்த விஷயமும் ;

(எ) ஜில்லாச் சபைகள், பிரதேசச் சபைகள் இவற் றின் நடைமுறையும் இவற்றில் அலுவல் நடத்துத லும் ;

(ஏ) ஜில்லாச் சபைகளுக்கும் பிரதேசச் சபைகளுக் கும் உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள் இவர் களின் நியமனம்

இவைகளைப் பற்றி ஏற்பாடு செய்யலாம்.

(7) ஜில்லா அல்லது பிரதேசச் சபை முதன் முதலில் அமைக்கப்பட்டதன் பிறகு, இப் பாராவின் (6)-ம் உப-பாரா வில் குறிப்பிட்ட விஷயங்களைக் குறித்து விதிகள் செய்யலாம் : மேலும்,—

(அ) தமக்குக் கீழ்ப்பட்ட ஸ்தல சபைகளையாவது ஸ்தாபனங்களையாவது உண்டாக்குதலும், அவற் றின் நடைமுறையும், அலுவல் நடத்துதலும்,

(ஆ) பொதுவாக, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஜில்லா வின் அல்லது பிரதேசத்தின் நிர்வாகம் பற்றிய அலுவலை நடத்துதலைக் குறித்த சகல விஷயங் களும்

இவற்றை முறைப்படுத்துவதற்காகவும் விதிகள் செய்யலாம் ;

எனினும் இந்த உப-பாராவின்கீழ் ஜில்லா அல்லது பிரதேச சபையால் விதிகள் செய்யப்படும் வரை இப் பாரா வின் (6)-ம் உப-பாராவின் கீழ் ராஜ்யபாலரால் செய்யப் படும் விதிகள் அத்தகைய ஒவ்வொரு சபைக்கும் நடத்தப் படும் தேர்தல்கள், அதன் உத்தியோகஸ்தர்களும் சிப்பந்தி களும், அதன் நடைமுறை, அதில் அலுவல் நடத்துதல் இவை சம்பந்தமாகப் பிரயோகப்படும் ;

அன்றியும், வடக்குக் கச்சார், மிக்கீர் குன்றுகள் இவற் றிற்கு, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப டெபுடி கமிஷனராக அல்லது ஸப்-டிவிஷனல் ஆபீஸராக இருப்பவர், இத் தபசிலின் 20-வது பாராவுடன் சேர்க்கப்பட்டுள்ள அட்டவணையின் அ பாகத்தின் 5-வது, 6-வது இனங்களில் முறையே சேர்க்கப் பட்டிருக்கும் பிரதேசங்கள் சம்பந்தமாக ஜில்லாச் சபைக்குத் தமது உத்தியோக முறையில் அக்கிராசனராக இருப்பார் ; மேலும் அந்த ஜில்லாச் சபையின் முதல் அமைப்புக்குப்பிறகு ஆறு வருஷ காலம் ராஜ்யபாலருடைய மேலதிகாரத்திற்கு உட்பட்டு, தாம் தகுதியெனக் கருதியவாறு ஜில்லாச் சபை யின் ஏத் தீர்மானத்தையேனும் முடிவையேனும் ரத்துச் செய்யவோ மாற்றவோ அல்லது ஜில்லாச் சபைக்கு உத்தரவு கள் இடவோ சக்தி உடையவர் ஆவார் ; அந்தச் ஜில்லாச் சபையானது அவ்வாறு இடப்பட்ட ஒவ்வோர் உத்தரவின் படியும் நடத்தல் வேண்டும்.

ஆறுவது தபசில்

8. சட்டங்கள் செய்ய ஜில்லாச் சபைகளுக்கும் பிரதேசச் சபைகளுக்கும் உள்ள சக்திகள்.—*(1)* ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்தின் உள்ளிருக்கும் சகல பிரதேசங்களைப் பற்றியும் அப் பிரதேசத்தின் பிரதேசச் சபையும், சுய நிர்வாக ஜில்லாவிற்குள் பிரதேசச் சபைகள் எவையேனுமிருந்தால் அவைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டிருப்பவை நீங்கலாக அந்த ஜில்லாவிற்குள்ளிருக்கும் எல்லாப் பிரதேசங்களைப்பற்றியும் அந்த ஜில்லாவின் ஜில்லாச் சபையும் பின்வரும் விஷயங்களைக் குறித்துச் சட்டங்கள் செய்யச் சக்தி உடையன ஆகும்—

(அ) விவசாயம் அல்லது மேய்ச்சல் விஷயங்களுக்கோ, குடியிருத்தல் அல்லது விவசாயம் அல்லாத மற்றெந்த விஷயங்களுக்கோ, ஒரு கிராம அல்லது பட்டண வாசிகளின் நலனை அபிவிருத்தி செய்யலாகும் மற்றெந்தக் காரியத்திற்தோ ரிஸர்வுக் காடாக இருக்கும் நிலம் அல்லாத மற்றைய நிலத்தைப் பங்கீடு செய்தல், அனுபோகத்தில் வைத்துக்கொள்ளுதல் அல்லது உபயோகித்தல் அல்லது ஒதுக்கி வைத்தல் :

எனினும், அச் சட்டங்களில் உள்ளது எதுவும் அனுபோகத்தில் இருப்பதோ அல்லது இல்லாததோ ஆன ஒரு நிலத்தை வலிந்து கைக்கொள்வதை அனுமதிப்பதற்காக அச் சமயத்தில் அமுலிலுள்ள சட்டத்தின் பிரகாரம் அஸ்ஸாம் சர்க்கார் பொதுக் காரியங்களுக்காக அவ்வாறு கைக்கொள்ளுதலை தடை செய்யாது ;

(ஆ) ரிஸர்வுக் காடு அல்லாத எக் காட்டின் நிர்வாகமும் ;

(இ) விவசாயத்தின் பொருட்டு ஒரு கால்வாய் அல்லது நீர் ஓடையின் உபயோகம் ;

(ஈ) ஜூம் அல்லது மற்றைய விதமான மாற்று நில விவசாயம் எதையும் முறைப்படுத்தல் ;

(உ) கிராம அல்லது பட்டணக் கமிட்டிகளை அல்லது சபைகளை ஏற்படுத்துதலும் அவற்றின் சக்திகளும் ;

(ஊ) கிராம அல்லது பட்டணப் போலீஸும் பொது ஆரோக்கியமும் சுகாதாரமும் உட்பட, கிராம அல்லது பட்டண நிர்வாகம் பற்றிய மற்றெந்த விஷயமும் ;

(எ) அதிபர்களின் அல்லது தலைமையாளர்களின் நியமனம் அல்லது அவர்களின் வாரிசு முறை ;

(ஏ) சொத்திற்கு வாரிசு பாத்தியதை ;

(ஐ) விவாகம் ;

(ஒ) சமூக வழக்கங்கள் ;

(2) இந்தப் பாராவில் "ரிஸர்வுக் காடு" என்பது 1891-ம் வருஷத்திய அஸ்ஸாம் காட்டு ரெகுலேஷன் கீழோ அல்லது அச் சமயத்தில் பிரஸ்தாப பிரதேசத்தில் அமுலிலிருக்கும் மற்றெந்தச் சட்டத்தின் கீழோ ரிஸர்வுக் காடாக உள்ள ஒரு பிரதேசம் என்று பொருள்படும்.

(3) இந்தப் பாராவின் கீழ்ச் செய்யப்படும் எல்லாச் சட்டங்களும் உடனேயே ராஜ்யபாலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அவரால் அனுமதி அளிக்கப்படும் வரை அவை அமுலுடையன ஆக மாட்டா.

4. சுய நிர்வாக ஜில்லாக்களிலும் சுய நிர்வாகப் பிரதேசங்களிலும் நீதி பரிபாலனம்.—(1) ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்திற்குள்ளிருக்கும் பிரதேசங்கள் சம்பந்தமாய் அப் பிரதேசத்தின் பிரதேசச் சபையும், ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்குள் பிரதேசச் சபைகள் எவையேனும் இருந்தால் அச் சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டிருப்பவை தவிர அந்த ஜில்லாவிற்குள்ளிருக்கும் மற்றையப் பிரதேசங்கள் விஷயமாய் அந்த ஜில்லாவின் ஜில்லாச் சபையும், எக் கட்சிக்காரர்கள் அப் பிரதேசங்களுக்குள்ளிருக்கும் அனுபந்த மலை ஜாதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அத்தகைய சகல கட்சிக்காரர்களுக்கிடையேயும் இத் தபசிலின் 5-வது பாராவின் (1)-ம் உப-பாராவின் ஷரத்துக்கள் பிரயோகப்படும் வியாஜ்யங்களும் வழக்குகளும் நீங்கலாக மற்ற வியாஜ்யங்களையும் வழக்குகளையும் விசாரிப்பதற்காக, அந்த ராஜ்யத்திலுள்ள ஒரு நீதிமன்றத்திற்குப் புறம்பான கிராமச் சபைகளையாவது நீதிமன்றங்களையாவது அமைக்கலாம்; மேலும் அந்தக் கிராமச் சபைகளின் அங்கத்தினர்களாகவோ அல்லது அத்தகைய நீதிமன்றங்களில் அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர்களாகவோ தக்கவர்களை நியமிக்கலாம்; மேலும் இத் தபசிலின் 3-வது பாராவின் கீழ்ச் செய்யப்படும் சட்டங்களின் நிர்வாகத்திற்கு அவசியமான உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கலாம்.

(2) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும் ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்திற்கான பிரதேசச் சபையாவது அதற்கென அப் பிரதேசச் சபையால் அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றமாவது, ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்குள்ளிருக்கும் ஒரு பிரதேசம் சம்பந்தமாகப் பிரதேசச் சபை எதுவும் இராவிட்டால் அந்த ஜில்லாவிற்கான ஜில்லாச் சபையாவது ஜில்லாச் சபையால் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றமாவது, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அப் பிரதேசத்திற்குள் அல்லது விஸ்தீர்ணத்திற்குள் இப் பாராவின் (1)-ம் உப-பாராவின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு கிராமச் சபையால் அல்லது நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படத் தக்க இத் தபசிலின் 5-வது பாராவின் (1)-ம் உப-பாராவின் ஷரத்துக்கள் பிரயோகப்படுபவை நீங்கலான மற்றெல்லா வியாஜ்யங்கள், வழக்குகள் இவை விஷயமாக ஒரு அப்பீல் நீதிமன்றத்திற்குள்ள சக்திகளைச் செலுத்த வேண்டும்; உயர் நீதிமன்றமும் உச்ச நீதி மன்றமும் தவிர வேறெந்த நீதிமன்றமும் அத்தகைய வியாஜ்யங்கள் அல்லது வழக்குகளின் மீது விசாரணை அதிகாரம் உடையதாகாது.

ஆறுவது தபசில்

(3) அஸ்ஸாம் உயர் நீதிமன்றம் இப் பாராவின் (2)-ம் உப-பாராவின் ஷரத்துக்கள் பிரயோகப்படும் வியாஜ்யங்கள் வழக்குகள் இவற்றின் மீது, உத்தரவிஞல் அவ்வப்போது ராஜ்யபாலர் குறிப்பிடும் விசாரணை-அதிகாரம் உடையதா யிருக்கும் ; அது அதைச் செலுத்தவும் வேண்டும்.

(4) சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஒரு பிரதேசச் சபையா வது ஜில்லாச் சபையாவது ராஜ்யபாலருடைய முன் சம்மதத் துடன்—

(அ) கிராமச் சபைகள், நீதிமன்றங்கள் இவைகளின் அமைப்பும், இப் பாராவின் கீழ் அவைகள் செலுத் தக் கூடும் சக்திகளும் ;

(ஆ) இப் பாராவின் (1)-ம் உப-பாராவின் கீழ் வியாஜ்யங்களையும், வழக்குகளையும் விசாரிக்கை யில் கிராமச் சபைகள் அல்லது நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை ;

(இ) இப் பாராவின் (2)-ம் உப-பாராவின் கீழ்ச் செய்யும் அப்பீல்களிலும் இதர நடவடிக்கை களிலும் பிரதேசச் சபையாவது ஜில்லாச் சபை யாவது அச் சபையால் அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றமாவது பின்பற்ற வேண்டிய நடை முறை;

(ஈ) அத்தகைய சபைகள் நீதிமன்றங்கள் இவற்றின் முடிவுகளையும் உத்தரவுகளையும் நிறைவேற்றுதல்;

(உ) இப் பாராவின் (1), (2)-ம் உப-பாராக்களின் ஷரத்துக்கள் நிறைவேற்றுவதற்குத் துணையான மற்றெல்லா விஷயங்களும் ;

இவைகளை முறைப்படுத்த விதிகள் செய்யலாம்.

5. சில வியாஜ்யங்களையும் வழக்குகளையும் குற்றங்களையும் விசாரிப்பதற்காக, 1908-ம் வருஷத்திய சிவில் நடவடிக்கைச் சட்டத் தின் கீழும் 1898-ம் வருஷத்திய கிரிமினல் நடவடிக்கைச்சட்டத்தின் கீழும் ஏற்பட்டுள்ள சக்திகளை பிரதேஜில்லாச் சபைகளுக்கும் சில நீதிமன்றங்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அளித்தல்.— (1) ராஜ்யபாலர் ஒரு சுயநிர்வாக ஜில்லாவிலாவது பிரதேசத் திலாவது அமுலிலிருப்பதும் ராஜ்யபாலரால் அதற்கெனக் குறிப்பிடப் பட்ட ஒருசட்டமாக இருப்பதுமான ஒரு சட்டத்திலிருந்து எழும் வியாஜ்யங்களை அல்லது வழக்குகளை விசாரிப்பதற்காக, அல்லது இந்தியப் பீனல் சட்டத்தின் கீழேனும் அந்த ஜில்லா அல்லது பிரதே சத்திற்கு அச் சமயத்தில் பிரயோகப்படத் தக்க மற்றெந்தச் சட்டத்தின் கீழேனும் மரண தண்டனை, தீவாந்தர ஆயுள் தண்டனை அல்லது ஐந்து வருஷத்திற்குக் குறையாத ஒரு காலத்திற்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படத் தக்க குற்றங் களை விசாரிப்பதற்காக, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, 1908-ம் வருஷத்திய சிவில் நடவடிக்கைச் சட்டத்தின் கீழாகிலும் 1898-ம் வருஷத்திய கிரிமினல் நடவடிக்கைச் சட்டத்தின் கீழாகிலும் உள்ளவையும் அவர் பொருத்தமானவையென்று கருதுபவையுமான சக்திகளை, அத்தகைய ஜில்லா அல்லது பிரதேசம் விஷயமாக அதிகாரமுள்ள ஜில்லாச் சபைக்காயினும்

ஆறுவது தபசில்

பிரதேசச் சபைக்காயினும் அத்தகைய ஜில்லாச் சபையால் அமைக்கப்பட்ட நீதி மன்றங்களுக்காயினும் அதற்கென ராஜ்யபாலரால் நியமிக்கப்படும் ஓர் உத்தியோகஸ்தருக்காயினும் அளிக்கலாம்; அப்போது மேற்சொன்ன சபை, நீதி மன்றம் அல்லது உத்தியோகஸ்தர் அப்படித் தமக்கு அளிக்கப்பட்ட சக்திகளைச் செலுத்தி, அவ் வியாஜ்யங்கள், வழக்குகள் அல்லது குற்றங்களை விசாரித்தல் வேண்டும்.

(2) ராஜ்யபாலர் இப் பாராவின் (1)-ம் உப-பாராவின் கீழ் ஒரு ஜில்லாச் சபை, பிரதேசச் சபை, நீதிமன்றம் அல்லது உத்தியோகஸ்தருக்கு அளிக்கப்பட்ட சக்திகளில் எதையேனும் வாபஸ் வாங்கலாம் அல்லது மாற்றலாம்.

(3) இப் பாராவில் வெளிப்படையாக ஏற்பாடு செய்துள்ளபடியன்றி, இப் பாராவின் ஷரத்துக்கள் பிரயோகப்படும் ஒரு சுய நிர்வாக ஜில்லா அல்லது ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்தில் வியாஜ்யங்கள், வழக்குகள் அல்லது குற்றங்கள் இவற்றின் விசாரணை பற்றி 1908-ம் வருஷத்திய சிவில் நடவடிக்கைச் சட்டமும் 1898-ம் வருஷத்திய கிரிமினல் நடவடிக்கைச் சட்டமும் பிரயோகப்படமாட்டா.

6. ஆரம்பப் பாடசாலைகள் வகையராவை நிறுவ ஜில்லாச் சபைகளுள்ள சக்திகள்.—ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் ஜில்லாச் சபை அந்த ஜில்லாவில் ஆரம்பப் பாடசாலைகள், டிஸ்பென்ஸரிகள், மார்க்கெட்டுகள், கால்நடைத் தொழுவங்கள், ஓடத் துறைகள், மீன் பண்ணைகள், பாட்டைகள், நீர்ப் பாதைகள் இவற்றை நிறுவலாம், கட்டலாம் அல்லது நிர்வகிக்கலாம்; முக்கியமாக அந்த ஜில்லாவிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி போதிக்கப்பட வேண்டிய பாஷையையும் விதத்தையும் நிர்ணயிக்கலாம்.

7. ஜில்லா நிதிகளும் பிரதேச நீதிகளும்.—(1) சுய நிர்வாக ஜில்லா ஒவ்வொன்றுக்கும் ஜில்லா நிதியொன்றும் சுய நிர்வாகப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் பிரதேச நிதியொன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும்; இந்த அரசியல்அமைப்பின் ஷரத்துக்களின்படி, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ஜில்லா அல்லது பிரதேசம் நிர்வகிக்கப்பட்டு வருகையில் அந்த ஜில்லாவின் ஜில்லாச் சபையும் அப் பிரதேசத்தின் பிரதேசச் சபையும் முறையே பெற்றுக்கொண்ட சகல பணங்களும் அந் நிதிகளில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(2) ராஜ்யபாலருடைய அங்கீகாரத்திற்கு உட்பட்டு, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஜில்லா நிதியின் அல்லது பிரதேச நிதியின் நிர்வாகத்தைக் குறித்து ஜில்லாச் சபையும் பிரதேசச் சபையும் விதிகள் செய்யலாம்; அப்படிச் செய்யப்படும் விதிகள், அந் நிதியில் பணம் செலுத்துதல், அதிலிருந்து பணங்களை எடுத்தல், அதில் பணங்களின் பாதுகாப்பு இவை சம்பந்தமாய் அனுசரிக்க வேண்டிய நடைமுறையையும், மேற் சொன்ன விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்ட அல்லது துணையான மற்றெந்த விஷயத்தையும் நிர்ணயிக்கலாம்.

8 நில வரியைப போடுவதற்கும், வசூலிப்பதற்கும் வரி தீர்வை விதிப்பதற்குமான சக்திகள்.—(1) ஒரு சுய நிர்வாகப்

ஆறுவது தபசில்

பிரதேசத்திற்குள்ளிருக்கும் நிலங்கள் எல்லாவற்றின் விஷயமாக அப் பிரதேசத்தின் பிரதேசச் சபையும், ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்குள் பிரதேசச் சபைகள் எவையேனுமிருந்தால் அச் சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் இருப்பவை தவிர, அந்த ஜில்லாவிற்குள்ளிருக்கும் மற்றைய நிலங்கள் சம்பந்தமாக அந்த ஜில்லாவிற்கான ஜில்லாச் சபையும், பொதுவாக அஸ்ஸாம் ராஜ்யத்தில் நில வரி விஷயமாக நிலங்களுக்கு வரி போடுகையில் அஸ்ஸாம் சர்க்காரால் அச் சமயத்தில் பின்பற்றப்படும் கொள்கைகளை அனுசரித்து அந்த நிலங்கள் சம்பந்தமாக நில வரி போடவும் வசூலிக்கவும் சக்தி உடையனவாகும்.

(2) ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்திற்குள்ளிருக்கும் பிரதேசங்கள் சம்பந்தமாக அப் பிரதேசத்திற்கான பிரதேசச் சபையும், ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்குள் பிரதேசச் சபைகள் எவையேனுமிருந்தால் அச் சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருப்பவை தவிர அந்த ஜில்லாவிலுள்ள மற்றெல்லா நிலங்கள் சம்பந்தமாகவும் அந்த ஜில்லாவின் ஜில்லாச் சபையும் நிலங்களுக்கும் கட்டடங்களுக்கும் வரிகள் போட்டு வசூலிக்கவும் அப் பிரதேசங்களில் வசிப்பவர்களின் மீது சுங்கங்கள் விதித்து வசூலிக்கவும் சக்தி உடையனவாகும்.

(3) ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் ஜில்லாச் சபை அந்த ஜில்லாவிற்குள் பின் வரும் வரிகள் எல்லாவற்றையுமாவது அவைகளில் எதையேனுமாவது விதித்து வசூலிக்கச் சக்தி உடையதாகும்; அவையாவன :—

(அ) உத்தியோகங்கள், வியாபாரங்கள், ஜீவனோபாயங்கள், வேலைகள் இவைகளின் மீது வரிகள்;

(ஆ) பிராணிகள், வாகனங்கள், படகுகள் இவைகளின் மீது வரிகள்;

(இ) ஒரு மார்க்கெட்டுக்குள் அதில் விற்பனை செய்யப்படுவதற்காகப் பண்டங்களின் வருகையின் மீது வரிகளும், ஓடத்துறைகளில் ஏற்றிக் கொண்டு போகப்படும் பிரயாணிகள், பண்டங்கள் இவைகளின் மீது சுங்கங்களும்; மேலும்,

(ஈ) பாடசாலைகள், டிஸ்பென்ஸரிகள் அல்லது பாட்டைகளைப் பரிபாலிப்பதற்கான வரிகள்.

(4) சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒரு பிரதேசச் சபையாவது ஜில்லாச் சபையாவது இப் பாராவின் (2)-ம், (3)-ம் உபபாராக்களில் குறிப்பிடப்பட்ட வரிகளில் எதையேனும் விதித்து வசூலிப்பதற்காக ஏற்பாடு செய்ய ரெகுலேஷன்கள் செய்யலாம்.

9. கனிப் பொருள்களைத் தேடியறிதல் அல்லது அவைகளை எடுக்கும் காரியத்திற்கான லைஸென்சுகள் அல்லது குத்தகைகள்.—(1) ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்திற்குள்ளிருக்கும் ஒரு பிரதேசம் சம்பந்தமாய்க் கனிப் பொருள்களைத் தேடியறியும் அல்லது அவைகளை எடுக்கும் காரியத்திற்காக அஸ்ஸாம் சர்க்காரால் கொடுக்கப்படும் லைஸென்சுகள் அல்லது குத்தகைகளிலிந்து ஒவ்வொரு வருஷமும் சேர்ந்து வரும்

ஆருவது தபசில்

ராயல்டிகளில் அஸ்ஸாம் சர்க்காரும் அந்த ஜில்லாவின் ஜில்லாச் சபையின் ஒப்புக்கொள்ளும் பாகம் அந்த ஜில்லாச் சபையிடம் ஒப்புவிக்க வேண்டும்.

(2) ஒரு ஜில்லாச்சபையிடம் ஒப்புவிக்கப்படவேண்டிய அந்தகைய ராயல்டிகளின் பாகத்தைப்பற்றி விவாதம் ஏதேனும் எழுந்தால், அது நிர்ணயிக்கப்படுவதற்காக ராஜ்யபாலரிடம் அனுப்பப்பட வேண்டும்; ராஜ்யபாலர் தமது உசிதப்படி நிர்ணயிக்கும் தொகை இப் பாராவின் (1)-ம் உப-பாராவின் கீழ் அந்தச் ஜில்லாச் சபைக்குச் செலுத்தப்படத்தக்க தொகையென்று கருதப்படும்; ராஜ்யபாலருடைய தீர்ப்பே முடிவானதாகும்.

10. மலை ஜாதியினரல்லாதவர்கள் பணம் கடன் கொடுத்தல் விஷயமாகவும் வியாபாரம் செய்தல் விஷயமாகவும் மேலதிகாரம் செலுத்துவதற்காக ரெகுலேஷன்கள் செய்ய ஜில்லாச் சபைக்குள்ள சக்தி.—(1) ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் ஜில்லாச் சபை அந்த ஜில்லாவில் வசிக்கும் அனுபந்த மலைஜாதியினர்கள் நீங்கலாக மற்றவர்கள் அந்த ஜில்லாவிற்குள் பணம் கடன் கொடுத்தல் அல்லது வியாபாரம் செய்தல் விஷயமாய் முறைப்படுத்துவதற்காகவும் மேலதிகாரம் செலுத்துவதற்காகவும் ரேகுலேஷன்கள் செய்யலாம்.

(2) முக்கியமாகவும் முன் சொன்ன சக்தியின் பொதுத்தன்மைக்குப் பாதகமில்லாமலும், அந்த ரெகுலேஷன்கள்—

(அ) அதற்கெனக் கொடுக்கப்படும் லைசென்சு ஒன்றை வைத்திருப்பவரைத் தவிர வேறெவரும் பணம் கடன் கொடுக்கும் தொழிலைச் செய்யலாகாதென நிர்ணயிக்கலாம்;

(ஆ) கடன்கொடுப்பவர் ஒருவர் வாங்கலாகும் அல்லது வசூலிக்கலாகும் உச்ச வட்டி வீதத்தை நிர்ணயிக்கலாம்;

(இ) கடன் கொடுப்பவர்கள் கணக்குகள் வைத்து வருவதற்காகவும் ஜில்லாச் சபையால் அதற்கென நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களால், அக்கணக்குகள் பரிசோதிக்கப்படுவதற்காகவும் ஏற்பாடு செய்யலாம்;

(ஈ) அந்த ஜில்லாவில் வசிக்கும் அனுபந்த மலை ஜாதியினரல்லாத மற்ற எவரும் அதற்கென ஜில்லாச் சபையால் கொடுக்கப்படும் ஒரு லைசென்சின் கீழ் அன்றி ஒரு சரக்கில் மொத்தமாகவோ, சில்லறையிலோ வியாபாரம் செய்யலாகாது என நிர்ணயிக்கலாம் :

எனினும், இப்பாராவின் கீழ் எந்த ரேகுலேஷன்களும் அந்த ஜில்லாச் சபையிலுள்ள மொத்த அங்கத்தினர்களில் முக்கால் பாகத்திற்குக் குறையாத பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டாலன்றிச் செய்யப்படலாகாது :

ஆறுவது தபசில்

அன்றியும், அத்தகைய ரெகுலேஷன்கள் செய்யப்பட்ட காலத்திற்கு முன்பிருந்தே அந்த ஜில்லாவிற்குள் தொழில் நடத்தி வந்திருக்கும் கடன் கொடுப்பவர் அல்லது வியாபாரி ஒருவருக்கு லைஸென்சு கொடுத்தலை மறுத்தற்கு அத்தகைய ரெகுலேஷன்கள் எவற்றின்கீழும் சக்தியிராது.

(3) இப் பாராவின்கீழ்ச் செய்யப்படும் ரேகுலேஷன்கள் எல்லாம் உடனே ராஜ்யபாலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்; அவரால் அனுமதி அளிக்கப்படும் வரை அவை அமுலுடையன ஆகமாட்டா.

11. இத் தபசிலின்கீழ்ச் செய்யப்படும் சட்டங்களையும், விதிகளையும், ரெகுலேஷன்களையும் பிரசுரம் செய்தல்.—இத் தபசிலின்கீழ் ஒரு ஜில்லாச் சபையால் அல்லது பிரதேசச் சபையால் செய்யப்படும் எல்லாச் சட்டங்களும் விதிகளும் ரெகுலேஷன்களும் அந்த ராஜ்யத்தின் ராஜாங்கக் கெஜட்டில் உடனேயே பிரசுரிக்கப்படவேண்டும்; அவ்வாறு பிரசுரமானதும் அவை சட்டத்தின் சக்தி வாய்ந்தனவாகும்.

12. பார்லிமெண்டின் சட்டங்களும், ராஜ்யத்தின் சட்ட மன்றத்தின் சட்டங்களும் சுய நிர்வாக ஜில்லாக்களுக்கும், சுய நிர்வாகப் பிரதேசங்களுக்கும் பிரயோகம்.—(1) இந்த அரசியல் அமைப்பில் எவ்வாறு இருப்பினும்—

(அ) எவ் விஷயங்களைக் குறித்து ஒரு ஜில்லாச் சபையாவது பிரதேசச் சபையாவது சட்டங்கள் செய்யலாமோ அவ் விஷயங்களென்று இத் தபசிலின் 3-வது பாராவின் குறிப்பிட்ட விஷயங்களில் எது சம்பந்தமாகவேனும் ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் எச் சட்டமும், காய்ச்சி வடிக்கப்படாத மதுசாரப் பானத்தை உபயோகிக்கலாகாதெனத் தடுக்கும் அல்லது அந்த உபயோகத்தைக் கட்டுப்படுத்தும் ராஜ்யத்தின் சட்ட மன்றத்தின் எச் சட்டமும் மேற்சொன்ன எந்த விஷயத்திலாகிலும் ஒரு சுய நிர்வாக ஜில்லாவின் அல்லது ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்தின் மீது விசாரணை-அதிகாரமுள்ள ஜில்லாச் சபை பொது விளம்பரத்தினுல் அப்படிக் கட்டளையிட்டாலன்றி அந்த ஜில்லாவிற்கோ பிரதேசத்திற்கோ பிரயோகப் படமாட்டா; ஜில்லாச் சபை ஒரு சட்டத்தைக் குறித்து அத்தகைய கட்டளை பிறப்பிக்கையில், அச் சட்டம் அந்த ஜில்லாவிற்கேனும் பிரதேசத்திற்கேனும் அவற்றின் எப் பாகத்திற்கேனும் பிரயோகப் படுகையில் அதற்கு உசிதம் எனத் தோற்றும் விலக்குகளுக்கு அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டு அமுலுடையன ஆகும் என உத்தரவிடலாம்;

(ஆ) ராஜ்யபாலர் பொது விளம்பரத்தினுல் இந்த உப-பாராவின் (அ) பகுதியின் ஷரத்துக்கள் பிரயோகப்படாத பார்லிமெண்டின் அல்லது ராஜ்யச் சட்ட மன்றத்தின் சட்டம் எதுவும் ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்கேனும் ஒரு சுய நிர்வாகப் பிரதேசத்திற்கேனும் பிரயோகப்படலாகாது என்றுகிலும், அவ் விளம்பரத்தில் அவர் குறிப்பிடும் விலக்குகளுக்கு

ஆறுவது தபசில்

அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டு, அத்தகைய ஜில்லாவிற்கேனும் பிரதேசத்திற்கேனும் அதன் எப் பாகத்திற்கேனும் பிரயோகப்படவேண்டும் என்றும் கிலும் உத்திரவிடலாம்.

(2) இப் பாராவின் (1)-ம் உப-பாராவின்கீழ் இடப் பட்ட ஓர் உத்தரவை அதற்கு முந்திய காலத்திலிருந்து அமுலிலிருந்துவரும்படி செய்யலாம்.

13. சுய நிர்வாக ஜில்லாக்களுக்குச் சம்பந்தப்பட்ட உத்தேச வரவுகளையும் செலவுகளையும் வருஷாந்தர நிதி விவரத்தில பிரத்தியேகமாகக் காட்டவேண்டும்.—அஸ்ஸாம் ராஜ்யத்தின் சஞ்சித நிதியில் வரவு வைக்கவேண்டியவையும் அல்லது அதிலிருந்து எடுக்கப்படவேண்டியவையுமான ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்குச் சம்பந்தப்பட்ட உத்தேச வரவு களையும் செலவுகளையும் முதலில் சர்ச்சை செய்வதற்காக ஜில்லாச் சபைக்கு முன்னிலையில் வைக்கப்படவேண்டும்; அச் சர்ச்சைக்குப் பின்னர் 202-வது பிரிவின்கீழ் ராஜ்யச் சட்ட மன்றத்திற்கு முன்னிலையில் வைக்கப்படவேண்டிய ராஜ்ய வருஷாந்தர நிதி விவரத்தில் பிரத்தியேகமாகக் காட்டப் படவேண்டும்.

14. சுய நிர்வாக ஜில்லாக்கள், சுய நிர்வாகப் பிரதேசங்கள் இவற்றின் நிர்வாகம்பற்றி விசாரணைசெய்து அறிக்கையிடக் கமிஷனின் நியமனம்.—(1) ராஜ்யபாலர் ராஜ்யத்திலுள்ள சுய நிர்வாக ஜில்லாக்கள், சுயநிர்வாகப் பிரதேசங்கள் இவற்றின் நிர்வாகம் பற்றி இத் தபசிலின் 1-ம்பாராவின் (3)-ம்உப-பாராவின் (இ), (ஈ), (உ), (ஊ) பகுதிகளில் குறிப்பிட்ட விஷயங்கள் உட்படத் தாம் குறிப்பிடும் எந்தவிஷயத்தையும் பரிசீலனைசெய்துஅதைப் பற்றி அறிக்கையிடக் கமிஷன் ஒன்றை எச் சமயத்திலும் நியமிக்கலாம், அல்லது பொதுவாக ராஜ்யத்திலுள்ள சுய நிர்வாக ஜில்லாக்கள் சுய நிர்வாகப் பிரதேசங்கள் இவற் றின் நிர்வாகத்தைக் குறித்தும், அதிலும் முக்கியமாக—

(அ) அத்தகைய ஜில்லாக்களிலும், பிரதேசங்களிலும் கல்வி வைத்தியம் இவற்றின் வசதிகளுக்கும், போக்குவரத்திற்கும் ஆன ஏற்பாடு,

(ஆ) அத்தகைய ஜில்லாக்கள் பிரதேசங்கள் சம்பந்த மாகப் புதிய அல்லது விசேஷமான ஒரு சட்டம் செய்வதன் அவசியம்,

(இ) ஜில்லாச் சபைகளாலும், பிரதேசச் சபைகளாலும் செய்யப்பட்ட சட்டங்கள், விதிகள், ரெகுலேஷன் கள் இவற்றின் நிர்வாகம்.

இவைபற்றி விசாரணைசெய்து அவ்வப்போது அறிக்கை யிடக் கமிஷன் ஒன்றை நியமிக்கலாம்; மேலும் அவர் அத்தகைய கமிஷன் பின்பற்றவேண்டிய நடைமுறையை வரை யறுக்கலாம்.

(2) அத்தகைய கமிஷன் ஒவ்வொன்றின் அறிக்கையும் அதுபற்றிய ராஜ்யபாலரின் சிபார்சுகளுடன் சம்பந்தப்பட்ட மந்திரியால் அஸ்ஸாம் சர்க்கார் அவைகளைப் பற்றி எடுத்துக் கொள்ள உத்தேசிக்கும் நடவடிக்கையை விளக்கும் யாதாஸ் துடன் ராஜ்யச் சட்டமன்றத்திற்கு முன்னிலையில் வைக்கப்பட வேண்டும்.

ஆருவது தபசில்

(3) ராஜ்யத்தின் சர்க்காரின் அலுவலத்தம்முடைய மந்திரிகளிடையில் பங்கிடுகையில் ராஜ்யபாலர் அந்த ராஜ்யத்திலுள்ள சுய நிர்வாக ஜில்லாக்கள் சுய நிர்வாகப் பிரதேசங்கள் இவற்றின் சேமத்தைப்பற்றிப் பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்குத் தமது மந்திரிகளில் ஒருவரை அதற்கெனவே நியமிக்கலாம்.

15. ஜில்லாச் சபைகள், பிரதேசச் சபைகள் இவற்றின் காரியங்களையும் தீர்மானங்களையும் ரத்துச் செய்தல் அல்லது தாற்காலிகமாக நிறுத்திவைத்தல்.—(1) ஒரு ஜில்லா சபையின் அல்லது ஒரு பிரதேசச் சபையின் ஒரு காரியம் அல்லது தீர்மானத்தினால் இந்தியாவின் பந்தோபஸ்துக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று ராஜ்யபாலருக்கு எப்போதேனும் நன்கு விளங்கினால், அவர் அக் காரியம் அல்லது தீர்மானத்தை ரத்துச் செய்யலாம் அல்லது தாற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்; மேலும் அவர் அக் காரியம் செய்யப்படுதலை அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலை அல்லது அத் தீர்மானம் நிறைவேற்றப்படுதலைத் தடுக்கும் பொருட்டு (அச் சபையை நிறுத்திவைத்து அச் சபையிடம் நிலைபெற்றிருக்கும் அல்லது அதனால் செலுத்தப்படத்தக்க சக்திகள் எல்லாவற்றையுமாவது அவைகளில் எவற்றையாவது தாமே மேற்கொள்வது உட்பட) தாம் அவசியம் எனக் கருதும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம்.

(2) இப் பாராவின் (1)-ம் உப-பாராவின் கீழ் ராஜ்ய பாலரால் செய்யப்பட்ட உத்தரவும் அதன் காரணங்களும் இயன்ற விரைவில் ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் முன்னிலையில் வைக்கப்படவேண்டும்; அந்த உத்தரவு, ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது அப்படிச் செய்யப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாத காலம் தொடர்ந்து அமுலிலிருந்துவரும்:

எனினும், அத்தகைய உத்தரவு தொடர்ந்து அமுலிலிருத்தலை அங்கீகரிக்கும் தீர்மானம் ஒன்று ராஜ்யத்தின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டால், அப்படி நிறைவேற்றப்படுந்தோறும் அந்த உத்தரவு ராஜ்யபாலரால் ரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது இப் பாராவின் கீழ் மற்றப்படி அமுலற்றுப்போயிருக்கும் தேதியிலிருந்து மேற்கொண்டு பன்னிரண்டு மாத காலம் தொடர்ந்து அமுலிலிருந்துவரும்.

16. ஒரு ஜில்லா அல்லது பிரதேசச் சபையின் கலைப்பு.—ராஜ்யபாலர் இத் தபசின் 14-வது பாராவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனின் சிபார்சின் பேரில் பொது விளம்பரத்தினால் ஒரு ஜில்லா அல்லது ஒரு பிரதேசச் சபை கலைக்கப்பட வேண்டும் என உத்தரவு இடலாம்; மேலும் அவர்—

(அ) அச் சபையை மீண்டும் அமைப்பதற்காக உடனே புதிதாக ஒரு பொதுத் தேர்தல் நடத்துமாறு உத்தரவு இடலாம்; அல்லது

(ஆ) அந்த ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் முற்சம்மதத்திற்கு உட்பட்டு, பன்னிரண்டு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு அச் சபையின் அதிகாரத்தின்கீழ் உள்ள பிரதேசத்தின் நிர்வாகத்தைத் தாமே

ஆறுவது தபசில்

மேற்கொள்ளலாம் ; அல்லது அப் பிரதேசத்தின் நிர்வாகத்தை அப் பாராவின் கீழ் நியமிக்கப்பட்ட கமிஷனுக்கோ அல்லது தாம் தகுதியுள்ளது என்று கருதும் மற்றெந்த நிலையத்திற்கோ உட்படுத்தி வைக்கலாம் :

எனினும், இப் பாராவின் (அ) பகுதியின்கீழ் ஓர் உத்தரவு செய்யப்பட்டிருந்தால், ராஜ்யபாலர், பிரஸ்தாப பிரதேசத்தின் நிர்வாகம் சம்பந்தமாக, புதிதாகப் பொதுத் தேர்தல் நடந்து அந்தச் சபை மீண்டும் அமைக்கப்படும் வரை இப் பாராவின் (ஆ) பகுதியில் குறிப்பிட்ட நடவடிக்கையை எடுத்துக்கொள்ளலாம் :

அன்றியும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஜில்லா அல்லது பிரதேசச் சபை தம்முடைய கருத்துக்களை ராஜ்யச் சட்ட மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்க அதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்காமல், இந்தப் பாராவின் (ஆ) பகுதியின்கீழ் எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளலாகாது.

17. **சுய நிர்வாக ஜில்லாக்களின் தேர்வுத் தொகுதிகளை ஏற்படுத்துகையில் அந்த ஜில்லாக்களிலிருந்து சில பிரதேசங்களை நீக்குதல்.**—அஸ்ஸாம் சட்டசபைக்குத் தேர்தல்களின் பொருட்டு, ராஜ்யபாலர் உத்தரவினால் ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்குள்ளிருக்கும் ஒரு பிரதேசம் அத்தகைய ஜில்லாவிற்கென்று அச் சபையில் ஒதுக்கி வைக்கப்பட்ட ஸ்தானம் அல்லது ஸ்தானங்களை நிரப்புவதற்காக ஒரு தேர்வுத் தொகுதியின் பாகமாக இராது என்றும், ஆனால் அச் சபையில் அப்படி ஒதுக்கிவைக்கப்பட்டிராதவையும் அந்த உத்தரவில் குறிப்பிட்டவையுமான ஒரு ஸ்தானம் அல்லது ஸ்தானங்களை நிரப்புவதற்கான ஒரு தேர்வுத் தொகுதியின் பாகமாய் இருக்கும் என்றும் அறிவிக்கலாம்.

18. **20-வது பாராவுடன் சேர்த்துள்ள அட்டவணையின் (ஆ) பாகத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு இத் தபசிலின் ஷரத்துக்களின் பிரயோகம்.**—(1) ராஜ்யபாலர்—

(அ) ராஷ்டிரபதியின் முற்சம்மதத்திற்கு உட்பட்டு, பொது விளம்பரத்தினால், இத் தபசிலின் 20-வது பாராவுடன் சேர்த்துள்ள அட்டவணையின் (ஆ) பாகத்தில் குறிப்பிட்ட ஒரு மலைஜாதிப் பிரதேசத்திற்காவது அத்தகையப் பிரதேசத்தின் ஒரு பாகத்திற்காவது இத்தபசிலின் முற்சொல்லிய ஷரத்துக்கள் எல்லாவற்றையுமேனும் அவைகளின் எவற்றையேனும் பிரயோகப்படுத்தலாம் ; அதன்பேரில் அந்தப் பிரதேசம் அல்லது அதன் பாகம் அத்தகைய ஷரத்துக்களின்படி நிர்வகிக்கப்படவேண்டும் ; மேலும்,

(ஆ) அது போன்ற சம்மதத்துடன், பொது விளம்பரத்தினால், அந்த அட்டவணையின் (ஆ) பாகத்தில் குறிப்பிட்ட ஒரு மலைஜாதிப் பிரதேசம் அல்லது அதன் பாகத்தை மேற்சொன்ன அட்டவணையிலிருந்து நீக்கலாம்.

(2) மேற்சொன்ன அட்டவணையின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட ஒரு மலை ஜாதி பிரதேசம் அல்லது அத்தகைய பிரதேசத்தின் ஒரு பாகம் பற்றியோ இப் பாராவின் (1)-ம் உப-பாராவின்கீழ் விளம்பரம் ஒன்று பிறப்பிக்கப்படும் வரை, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அத்தகைய பிரதேசத்தின் அல்லது அதன் பாகத்தின் நிர்வாகம் ராஷ்டிரபதியால் அஸ்ஸாம் ராஜ்யபாலரைத் தமது ஏஜெண்டாகக் கொண்டு அவர் மூல மாக நடத்தப்படவேண்டும்; [1][240-வது பிரிவின்] ஷரத்துக்கள் அத்தகைய பிரதேசம் அல்லது அதன் பாகம் [2][அப் பிரிவில் குறிப்பிட்ட யூனியன் ஆட்சிப் பரப்பாய்) இருந்தாற் போலவே அதற்குப் பிரயோகப்படும்.

(3) இப் பாராவின் (2)-ம் உப-பாராவின்கீழ் ராஜ்யபாலர் ராஷ்டிரபதியின் ஏஜெண்டாகத் தம்மூடைய அலுவல்களைச் செய்கையில் தமக்கு ஏற்றதென்று தோற்றியபடியே செயலாற்ற வேண்டும்.

19. **இடைக்கால ஏற்பாடுகள்.**—(1) இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்குப் பிறகு இயன்ற விரைவில், ராஜ்யபாலர் இத் தபசிலின்கீழ் ராஜ்யத்திலுள்ள சுய நிர்வாக ஜில்லா ஒவ்வொன்றிற்காகவும் ஜில்லாச் சபை ஒன்றை அமைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யவேண்டும்; ஒரு சுய நிர்வாக ஜில்லாவிற்காக ஜில்லாச் சபை ஒன்று அப்படி அமைக்கப்படும் வரை, அத்தகைய ஜில்லாவின் நிர்வாகம் ராஜ்ய பாலரிடம் நிலைபெற்றிருக்கும்; அந்த ஜில்லாவிற்குள் இருக்கும் பிரதேசங்களின் நிர்வாகத்திற்கு இத் தபசிலின் முற் சொல்லிய ஷரத்துக்களுக்குப் பதிலாகப் பின்வரும் ஷரத்துக்கள் பிரயோகப்படும்; அவையாவன :—

(அ) ராஜ்யபாலர் பொது விளம்பரத்தினால் அப்படிக் கட்டளை இட்டாலன்றி, பார்லிமெண்டின் அல்லது ராஜ்யச் சட்டமன்றத்தின் எச்சட்டமும் அத் தகையப் பிரதேசம் எதற்கும் பிரயோகப் படமாட்டாது; மேலும் ராஜ்யபாலர் ஒரு சட்டம் விஷயமாய் அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்கும் போது, அச் சட்டம் அப் பிரதேசத்திற்காவது குறிப்பிட்ட அதன் ஒரு பாகத்திற்காவது பிரயோகப் படும் அளவிற்குத் தமக்குத் தகுதியாகத் தோற்றும் விலக்குகளுக்கு அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டுப் பிரயோகப் படவேண்டும் என்று உத்தரவு இடலாம்;

(ஆ) ராஜ்யபாலர் அத்தகைய ஒரு பிரதேசத்தின் அமைதிக்காகவும் நல்லாட்சிக்காகவும் ரெகுலேஷன்கள் செய்யலாம்; அவ்வாறு செய்த ரெகுலேஷன்கள் அச் சமயத்தில் அப் பிரதேசத்திற்குப் பிரயோகப்படலாகும் பார்லிமெண்டின் அல்லது

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும், "IX-ம் பாகத்தின்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவாலும் தபசிலாலும், "முதலாவது தபசிலின் இ பாகத்தில் குறிப்பிட்ட ஒரு பிரதேசமாய்" என்பதற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

ஆருவது தபசில்

ராஜ்யச் சட்டமன்றத்தின் எச் சட்டத்தையாவது ஏற்கெனவேயுள்ள எச் சட்டத்தையாவது ரத்துச் செய்யலாம் அல்லது திருத்தலாம்.

(2) இப் பாராவின் (1)-ம் உப-பாராவின் (அ) பகுதியின்கீழ் ராஜ்ய பாலரால் இடப்பட்ட ஓர் உத்தரவை அதற்கு முந்திய காலத்திலிருந்து அமுலிலிருந்துவரும்படி செய்யலாம்.

(3) இப் பாராவின் (1)-ம் உப-பாராவின் (ஆ) பகுதியின்கீழ்ச் செய்யப்படும் ரெகுலேஷன்கள் எல்லாம் உடனே ராஷ்டிரபதியிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்; அவரால் அனுமதி அளிக்கப்படும் வரை, அவை அமுலுடையன ஆகா.

20. மலேஜாதிப் பிரதேசங்கள்.—(1) அடியிற்கண்ட அட்டவணையின் அ, ஆ பாகங்களில் குறிப்பிட்டப் பிரதேசங்கள் அஸ்ஸாம் ராஜ்யத்திற்குள் மலேஜாதிப் பிரதேசங்களாக இருக்கும்.

(2) ஐக்கிய காசி-ஜயிந்தியா மலே ஜில்லா, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு முன்பு காசி ராஜ்யங்கள் என்றும் காசி-ஜயிந்தியா மலே ஜில்லா என்றும் வழங்கி வந்த பிரதேசங்கள் அடங்கியதாகும்— ஷில்லாங் கன்டோன்மெண்டுக்குள்ளும் முனிசிபாலிட்டிக்குள்ளும் பிரஸ்தாப காலத்தில் அடங்கிய பிரதேசங்கள் நீங்கலாகவும், ஆனால் மில்லேம் காசி ராஜ்யத்தின் எப் பகுதி ஷில்லாங் முனிசிபாலிட்டிக்குள் அடங்கி இருந்ததோ அப் பாகத்தையும் கொண்டதாகும்:

எனினும், இத் தபசிலின் 3-வது பாராவின் (1)-ம் உப-பாராவின் (உ), (ஊ) பகுதிகள், 4-வது பாரா, 5-வது பாரா, 6-வது பாரா, 8-வது பாராவின் (2)-ம் உப-பாரா, (3)-ம் உப-பாராவின் (அ), (ஆ), (இ) பகுதிகள், (4)-ம் உப-பாரா, 10-வது பாராவின் (2)-ம் உப-பாராவின் (ஈ) பகுதி இவற்றைப் பொறுத்த வரை, ஷில்லாங் முனிசிபாலிட்டிக்குள் அடங்கியுள்ள பிரதேசத்தின் எப் பாகமும் அந்த ஜில்லாவிற்குள் இருப்பதாகக் கருதப்படலாகாது.

[1][(2அ) மிஜோ ஜில்லா, இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தின்போது லூஷேய் மலே ஜில்லா என வழங்கி வந்த பிரதேசம் அடங்கியதாகும்.]

[2][(2ஆ) நாகா மலேகள்-டுன்சாங் பிரதேசம், இந்த அரசியல்அமைப்பின் தொடக்கத்தின்போது நாகா மலே ஜில்லா என்னும் நாகா மலே ஜாதிப் பிரதேசம் என்றும் வழங்கிவந்த பிரதேசங்கள் அடங்கியதாகும்.]

(3) அடியிற்கண்ட அட்டவணையில் (ஐக்கிய காசி-ஜயிந்தியா மலே ஜில்லா [1][அல்லது மிஜோ ஜில்லா] அல்லாத வேறு) ஜில்லாவையாவது [2][நாகா மலேகள்-டுன்சாங் பிரதேசம் அல்லாத வேறு] ஒரு நிர்வாக பிரதேசத்தையாவது குறிக்கும்

---

[1] (1954-ம்ஞ்டு 18-ம் சட்டமாகிய) 1954-ம் வருஷத்திய லூஷேய் மலே ஜில்லா (பெயர் மாற்றச்) சட்டத்தின் 3-வது பிரிவினால் இடைச் சேர்ப்பாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] (1957-ம்ஞ்டு 42-ம் மத்தியச் சட்டமாகிய) 1957-ம் வருஷத்திய நாகா மலேகள்—டுன்சாங் பிரதேசச் சட்டத்தின் 3-வது பிரிவினால் இடைச் சேர்ப்பாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

ஆருவது தபசில்

இடத்திற்கு இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் அந்த ஜில்லா அல்லது பிரதேசத்தைக் குறிக்கும் இடம் என்று அர்த்த விளக்கம் செய்யவேண்டும் :

எனினும், அடியிற்கண்ட அட்டவணையின் ஆ பாகத்தில் குறிப்பிட்ட மலைஜாதிப் பிரதேசங்களில், சமவெளிகளில் இருப்பவையும் ராஷ்டிரபதியின் முற்சம்மதத்துடன் அதற்கென அஸ்ஸாம் ராஜ்யபாலரால் விளம்பரம் செய்யப் பட்டவையுமான எப் பிரதேசங்களும் அடங்கமாட்டா.

அட்டவணை.

பாகம் அ.

1. ஐக்கிய காசி-ஜயிந்தியா மலை ஜில்லா.
2. காரோ மலை ஜில்லா.
3. [1][மிஜோ ஜில்லா.]
4. [2] * * * * * *
5. வடக்குக் கச்சார் மலைகள்.
6. மிக்கீர் மலைகள்.

பாகம் ஆ.

1. பலீபாரா எல்லைப்புறப் பிரதேசம், திராப் எல்லைப் புறப் பிரதேசம், அபோர் மலை ஜில்லா மிஸிமி மலை ஜில்லா இவை உள்ளிட்ட வட கிழக்கு எல்லைப்புறப் பிரதேசம்.

[3] [நாகா மலைகள்—டுன்சாங் பிரதேசம்]

21. தபசிலின் திருத்தம்.—(1) பார்லிமெண்டு இத் தபசிலின் ஷரத் துக்களில் ஒன்றை—சேர்க்கை மாறுதல் அல்லது ரத்து மூலமாக—அவ்வப்போது சட்டத்தினல் திருத்தலாம் ; தபசில் அப்படித் திருத்தப்பட்டபோது இந்த அரசியல் அமைப் பில் இத் தபசிலைக் குறிக்கும் இடத்திற்கு அப்படித் திருத்தப் பட்ட தபசிலைக் குறிக்கும் இடம் என அர்த்த விளக்கம் செய்யவேண்டும்.

(2) இப் பாராவின் (1)-ம் உப-பாராவில் கூறிய சட்டம் எதுவும் 368-வது பிரிவைப் பொறுத்தவரை, இந்த அரசியல் அமைப்பிற்கு ஒரு திருத்தம் என்று கருதப்படலாகாது.

---

[1] (1954-ம்ஜூத்து 18-ம் சட்டமாகிய) 1954-ம் வருஷத்திய லுஷேய் மலை ஜில்லா (பெயர் மாற்றச்) சட்டத்தின் 3-வது பிரிவினுல், "லுஷேய் மலை ஜில்லா" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

[2] "நாகா மலை ஜில்லா" என்னும் இலக்கமும் சொற்களும் (1957-ம் ஜூத்து 42-ம் சட்டத்தின் மத்தியச் சட்டமாகிய) 1957-ம் வருஷத்திய நாகா மலைகள்—டுன்சாங் பிரதேசச் சட்டத்தின் 3-வது பிரிவினுல் விட்டு விடப் பட்டன.

[3] மேற்படி சட்டத்தின் அதே பிரிவினுல், 2-வது அசல் இனத்திற்கும் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

ஏழாவது தபசில்

[பிரிவு 246]

ஜாபிதா I—யூனியன் ஜாபிதா

1. இந்தியாவின் பாதுகாப்பும் அதன் ஒவ்வொரு பாகத்தின் பாதுகாப்பும்—பாதுகாப்பிற்கு ஆயத்தம் செய்தலும், யுத்த காலங்களில் யுத்தத்தை நடத்துவதற்கும் யுத்தம் முடிந்த பிறகு படைகளைச் செவ்வனே கலைத்தற்கும் சாதகமாயுள்ள சகல காரியங்களும் உட்பட.

2. கடற் படைகள், ராணுவப் படைகள், விமானப் படைகள், யூனியனின் மற்றெந்த ஆயுதப்படைகளும்.

[1]3. கன்டோன்மெண்டுப் பிரதேசங்களின் எல்லைகளை வரையறுத்தலும் அத்தகைய பிரதேசங்களில் ஸ்தல சுயாட்சியும், அத்தகைய பிரதேசங்களுக்குள் கன்டோன்மெண்டு அதிகார நிலையங்களின் அமைப்பும் சக்திகளும், அத்தகைய பிரதேசங்களில் (வாடகைகளின் கட்டுப்பாடு உட்பட) வீட்டு வசதியை முறைப்படுத்தலும்.

4. கடற்படை, ராணுவப்படை, ஆகாயவிமானப்படை இவற்றின் மராமத்து வேலைகள்.

5. ஆயுதங்கள், சுடுபடைக்கலங்கள், வெடிமருந்து, வெடிகுண்டுகள்.

6. அணுவின் சக்தியும் அதை உற்பத்தி செய்வதற்கு அவசியமாயுள்ள கனிப்பொருட் சாதனங்களும்.

7. பாதுகாப்பின் பொருட்டு அல்லது யுத்தம் நடத்துவதற்காக அவசியம் எனச் சட்டத்திலுல் பார்லிமெண்டு அறிவித்த தொழில்கள்.

[2] 8. துப்பறிதல், துப்பாராய்ச்சி இவற்றிற்கான மத்தியக் காரியாலயம்.

[2] 9. பாதுகாப்பு, அந்நிய நாட்டு விவகாரங்கள் அல்லது இந்தியாவின் பந்தோபஸ்து இவை பற்றிய காரியங்களுக்காகத் தடைப் பாதுகாவல் ; அத்தகைய பாதுகாவலுக்கு உட்பட்டவர்கள்.

10. அந்நிய நாட்டு விவகாரங்களும், ஓர் அந்நிய நாட்டுடன் யூனியனைச் சம்பந்தப்படுத்தும் சகல விஷயங்களும்.

11. ராஜதந்திரம், ராஜரீகம், வியாபாரம் இவைபற்றிய பிரதி நிதித்துவம்.

12. ஐக்கிய நாட்டு ஸ்தாபனம்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், கீழ்க் கண்டதை 3-வது பிரிவிற்குப் பதிலாக அமைத்துக் கொள்ள வேண்டும்.—

"3. கன்டோன்மெண்டுகளின் நிர்வாகம்."

[2] இந்த இனங்கள் ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

ஏழாவது தபசில்

13. சர்வதேச மகாநாடுகளிலும் கழகங்களிலும் இதர நிலையங்களிலும் கலந்துகொள்ளுதலும் அவைகளில் செய்யப்பட்ட தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவருதலும்.

14. அந்நிய நாடுகளுடன் சமாதான ஒப்பந்தங்களையும் கரூர்களையும் செய்துகொள்ளுதலும், அந்நிய நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தங்களையும் கரூர் களையும் உடன்பாடுகளையும் அமுலுக்குக் கொண்டுவருதலும்.

15. யுத்தமும் சமாதானமும்.

16. அயல் நாட்டில் விசாரணை-அதிகாரம்.

17. குடிமையும், குடியாதலும், அந்நியர்களும்.

18. எக்ஸ்டிராடிஷன்.

19. இந்தியாவிற்குள் வர அனுமதித்தலும் இந்தியா விலிருந்து குடியேறுதலும் வெளியேற்றுதலும்; பாஸ்போர்ட்டு கள், வீசாக்கள்.

20. இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு யாத் திரைகள்.

21. மகாசமுத்திரங்களில் அல்லது ஆகாயத்தில் நிகழும் கொள்ளைகளும் குற்றங்களும் ; நிலத்தில் அல்லது மகா சமுத்திரங்களில் அல்லது ஆகாயத்தில் சர்வதேசச் சட்டத் திற்கு விரோதமாக நிகழும் குற்றங்கள்.

22. ரயில்வேக்கள்.

23. தேசிய ராஜபாட்டைகள் என்று பார்லிமெண்டால் செய்த சட்டத்திலோ அல்லது அதன்கீழோ அறிவிக்கப்படும் ராஜபாட்டைகள்.

24. யந்திர சக்தியினுல் ஓட்டப்படும் மரக்கலங்கள் சம்பந்தமாக, தேசிய நீர்ப்பாதைகள் எனப் பார்லிமெண்டு சட்டத்தினுல் அறிவித்த உள் நாட்டு நீர்ப்பாதைகளில் செல்லும் கப்பல்களும் அவற்றைச் செலுத்தலும் ; அத்தகைய பாதைகளின் வழியைப் பற்றிய விதி.

25. ஏற்றவற்ற நீர்களில் செல்லும் கப்பல்களும் அவற் றைச் செலுத்தலும் உட்பட, சமுத்திரங்களில் செல்லும் கப்பல்களும் அவற்றைச் செலுத்தலும் ; வியாபாரக் கப்பல் களை ஓட்டுபவர்களின் கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடு செய் தலும், ராஜ்யங்களாலும் மற்றைய ஸ்தாபனங்களாலும் ஏற்படுத்தப்பட்ட அத்தகைய கல்வியையும் பயிற்சியையும் முறைப்படுத்தலும்.

26. கலங்கரை விளக்குக் கப்பல்கள் உட்பட எச்சரிக்கை ஒளிகள், கப்பல்கள் விமானங்கள் இவற்றின் பாதுகாப்பிற் கான மற்றைய ஏற்பாடுகள்.

ஏழாவது தபசில்

27. பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்திஞல் அல்லது ஏற்கெனவே உள்ள சட்டத்திஞல் அல்லது அதன் கீழ்ப்பெருந் துறைமுகங்கள் என்று அறிவிக்கப்படும் துறை முகங்கள்—அவைகளின் எல்லேகளே வரையறுத்தலும், அவற் றில் துறைமுக அதிகாரிகளே அமைத்தலும், அந்த அதிகாரி களின் அதிகாரங்களும் உட்பட.

28. துறைமுகத் தொத்துநோய் ஒதுக்கம், அது பற்றிய ஆஸ்பத்திரிகள் உட்பட ; கப்பலோட்டிகளின் ஆஸ்பத்தி ரிகள், கடற்கரை ஆஸ்பத்திரிகள்.

29. ஆகாயப் பாதைகள் ; விமானங்களும் விமானங்களேச் செலுத்தலும் ; விமான நிலேயங்களே ஏற்படுத்தல் ; விமானப் போக்கு வரத்தையும் விமான நிலேயங்களேயும் முறைப்படுத் தலும் ஏற்படுத்தலும் ; விமானம் செலுத்துவதற்கான கல் விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்தலும், ராஜ்யங்களாலும் மற்றைய ஸ்தாபனங்களாலும் ஏற்படுத்தப்பட்ட அத்தகைய கல்வியையும் பயிற்சியையும் முறைப்படுத்தலும்.

30. ரயில், கடல் அல்லது ஆகாய வழியே அல்லது யந்திர சக்தியினுல் செலுத்தப்படும் மரக்கலங்களில் தேசிய நீர்ப்பாதை வழியே பிரயாணிகளேயும் பண்டங்களேயும் ஏற் றிச் செல்லல்.

31. தபால்களும், தந்திகளும் ; டெலிபோன்கள், கம்பி யில்லாத்தந்தி, ஒலிபரப்பு இவை போன்ற மற்றையச் செய் திப் போக்கு வரத்துச் சாதனங்கள்.

32. யூனியனின் சொத்தும் அதிலிருந்து கிடைக்கும் வரு வாயும்—ஆனல்[1] * * * * * * * * * * * * ஒரு ராஜ்யத்திலுள்ள சொத்தைப் பற்றி, பார்லிமெண்டு சட்டத்திஞல் வேறு விதமாய் ஏற்பாடு செய்யும் வரையன்றி, அந்த ராஜ்யம் சட்டம் செய்வதற்கு உட்பட்டு.

[2] * * * * * * * * * * * * * * * *

[3] 34. இந்தியச் சமஸ்தானங்களின் அதிபதிகளுடைய எஸ் டேட்டுகளுக்கான பரிபாலன நிலேயங்கள் (கோர்ட் ஆப் வார்ட்ஸ்கள்).

35. யூனியனின் தேசியக் கடன்.

36. பணச் செலாவணியும் நாணயம் செய் முறையும் சட்டம் ஒப்பிய செலாவணியும் ; அந்நிய நாட்டுச் செலா வணிப் பரிவர்த்தனே.

37. அந்நியக் கடன்கள்.

38. இந்தியாவின் ரிஸர்வ் பாங்க்.

39. தபால் ஆபீஸ் ஸேவிங்ஸ் பாங்க்.

---

[1] "முதலாவது தபசிலின் அ பாகத்திலாவது ஆ பாகத்திலாவது குறிப் பிட்ட" என்னும் சொற்களும், எழுத்துக்களும், 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் விட்டு விடப்பட்டன.

[2] 33-வது பதிவு மேற்படி சட்டத்தின் 26-வது பிரிவினுல் விட்டு விடப் பட்டது.

[3] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

ஏழாவது தபசில்

40. இந்தியச் சர்க்காரால் அல்லது ஒரு ராஜ்யத்தின் சர்க்காரால் தொடங்கி நடத்தப்படும் லாட்டரிகள்.

41. அந்நிய நாடுகளுடன் வியாபாரமும் வாணிபமும் சுங்க எல்லைகளைக் கடக்கும் இறக்குமதியும் ஏற்றுமதியும்; சுங்க எல்லைகளை வரையறுத்தல்.

42. ராஜ்யங்களிடையே வியாபாரமும் வாணிபமும்.

[1]43. வியாபாரக் கம்பெனிகளைச் சட்டப்படி இணைத்தலும் முறைப்படுத்தலும் கலைத்தலும்—பாங்கிங், இன்ஷூரன்ஸ், நிதிக் கம்பெனிகள் உட்படவும் ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாகவும்.

[2] 44. ஒரு ராஜ்யத்திற்கு மட்டுமே பிரயோகப்படாதாவையான நோக்கங்களையுடைய—வியாபாரம் செய்யும் அல்லது செய்யாதவையான—கம்பெனிகளைச் சட்டப்படி இணைத்தலும் முறைப்படுத்தலும் கலைத்தலும்; சர்வகலாசாலைகள் நீங்கலாக.

45. பாங்க் நடவடிக்கைகள்.

46. மாற்று உண்டியல்கள் செக்குகள் ப்ராமிஸரி நோட்டுகள் இவை போன்ற மற்றையச் சாசனங்கள்.

47. இன்ஷூரன்ஸ்.

48. பங்கு மார்க்கெட்டுகள், வாய்தா மார்க்கெட்டுகள்.

49. பேடென்டுகளும், இன்வென்ஷன்களும் டிஸைன்களும்; காபிரைட்; வியாபார அடையாளங்களும் வர்த்தகப் பண்ட அடையாளங்களும்.

[2] 50. எடைகளுக்கும் அளவைகளுக்கும் அலகுகளை ஏற்படுத்தல்.

51. இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்வதற்காக அல்லது ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்கு அனுப்புவதற்கான பண்டங்களின் தரத்தின் அலகுகளை ஏற்படுத்தல்.

[2] 52. பொது நலனுக்காக எக் கைத்தொழில்களை யூனியனின்மேல் அதிகாரத்திற்கு உட்படுத்துதல் உசிதமாயிருக்கும் எனப் பார்லிமெண்டு சட்டத்தினால் அறிவிக்கிறதோ அக் கைத்தொழில்கள்.

53. எண்ணெய்ப் புலங்கள், கனி எண்ணெய்ப் பொருட் சாதனங்கள் இவற்றை முறைப்படுத்தலும் விருத்தி செய்தலும்; பெட்ரோலியமும் பெட்ரோலியப் பொருள்களும், அபாயகரமாகத் தீப்பற்றக்கூடியவை எனப் பார்லிமெண்டால் சட்டத்தினால் அறிவிக்கப்பட்ட மற்றையத் திரவங்களும் பொருள்களும்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 43-வது இனத்திற்குப் பதிலாக கீழ்க்கண்டவற்றை அமைத்துக்கொள்ளவெண்டும்:—

"43. கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக பாங்கிங், இன்ஷூரன்ஸ், நிதிக் கம்பெனிகளைச் சட்டப்படி இணைத்தலும், முறைப்படி கலைத்தலும்."

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

ஏழாவது தபசில்

54. யூனியனின் மேல் அதிகாரத்திற்குக் கழப்பட்டுப் பொது நலனின் பொருட்டு உசிதம் எனப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அறிவிக்கப்படும் அளவிற்குச் சுரங்கங்களை முறைப்படுத்தலும் கனிப் பொருள்களை அபிவிருத்தி செய்தலும்.

[1]55. சுரங்கங்களிலும் எண்ணெய்ப் புலங்களிலும் வேலை செய்தலையும் பாதுகாப்பையும் முறைப்படுத்தல்.

56. யூனியனின் மேல் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டுப் பொது நலத்தின் பொருட்டு உசிதம் எனப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அறிவிக்கப்படும் அளவிற்குப் பல ராஜ்யங்களிலுள்ள ஆறுகளையும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் முறைப்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

57. ஆட்சிப்பரப்பின் நீர்களுக்கு அப்பால் மீன் பிடித்தலும் மீன் பண்ணைகளும்.

58. யூனியன் அதிகாரத்திற்குட்பட்ட நிலையங்கள் உப்பை உற்பத்தி செய்தலும் சப்ளை செய்தலும் வினியோகித்தலும்; மற்றைய நிலையங்கள் உப்பை உற்பத்தி செய்தல் சப்ளை செய்தல் வினியோகித்தல் இவற்றை முறைப்படுத்தலும் மேல் அகார்த்திற்கு உட்படுத்தலும்.

59. அபினியின் சாகுபடியும் உற்பத்தியும் ஏற்றுமதிக்கான விற்பனையும்.

[1]60. சினிமாப் படங்களைக் காட்டுவதற்கு அனுமதி கொடுத்தல்.

61. யூனியனின் வேலையாட்களைப் பற்றிய தொழில் விவாதங்கள்.

62. இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் தேசியப் புத்தக நிலையம், இந்திய மியூஸியம், இம்பீரியல் யுத்த மியூஸியம், விக்டோரியா மெமோரியல், இந்திய யுத்த மெமோரியல் என வழங்கும் ஸ்தாபனங்களும் முழுவதுமோ ஒரு பாகமோ இந்தியச் சர்க்காரின் செலவில் நடைபெறுவனவும் தேசீய முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தாபனம் எனப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அறிவிக்கப்படுவதுமான அவை போன்ற மற்றெந்த ஸ்தாபனமும்.

63. இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் பெனரஸ் ஹிந்து யூனிவெர்ஸிட்டி, அலிகார் முஸ்லிம் யூனிவெர்ஸிட்டி, டெல்லி யூனிவெர்ஸிட்டி என வழங்கும் ஸ்தாபனங்களும், தேசீய முக்கியத்துவம் வாய்ந்தது எனப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அறிவிக்கப்பட்ட மற்றெந்த ஸ்தாபனமும்.

64. விஞ்ஞான அல்லது கைத்தொழில் பயிற்சிக் கல்விக்காக என்று ஏற்படுத்தப்பட்டவையும் முழுவதுமோ ஒரு பாகமோ இந்தியச் சர்க்காரின் செலவில் நடைபெறுபவையும் தேசீய முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தாபனங்கள் எனப் பார்லிமெண்டால் சட்டத்தினுல் அறிவிக்கப்படுபவையும் ஆன ஸ்தாபனங்கள்.

[1]ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

ஏழாவது தபசில்

65. (அ) உத்தியோகம், வேலை அல்லது கைத்தொழில் இவைபற்றிய பயிற்சி—போலீஸ் உத்தியோகஸ்தர்களின் பயிற்சி உட்பட ; அல்லது

(ஆ) விசேஷப் படிப்புக்களை அல்லது ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தல் ; அல்லது

(இ) குற்றத்தை ஆராய்தல் அல்லது கண்டுபிடித்தல் இவற்றில் விஞ்ஞான அல்லது தொழில் முறையில் உதவி புரிதல் இவற்றிற்கான யூனியனின் நிலையங்களும் ஸ்தாபனங்களும்.

66. உயர்தரக் கல்வி அல்லது ஆராய்ச்சிக்கான ஸ்தாபனங்கள் விஞ்ஞான ஸ்தாபனங்கள் தொழில் பயிற்சி ஸ்தாபனங்கள் இவற்றின் தரங்களை ஒருமைப்படுத்துதலும் நிர்ணயித்தலும்.

[1]67. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பார்லிமெண்டு சட்டத்தினால் [2][அல்லது அதன்கீழ்] அறிவிக்கும் புராதனமானவையும் சரித்திர சம்பந்தமானவையும் ஆன ஞாபகச் சின்னங்களும் தஸ்தவேசுக்களும், பழம் பொருள் இடங்களும் சிதைவுகளும்.

68. இந்தியாவின் சர்வே இலாகா, இந்தியாவின் நிலநூல், தாவர நூல், விலங்கு நூல், மானிட நூல் இவை பற்றிய இந்தியாவின் சர்வே இலாகாக்கள் ; வானிலை ஆராய்ச்சி ஸ்தாபனங்கள்.

[3]69. ஜனசங்கியை.

70. யூனியனின் பொதுச் சேவை வர்க்கங்கள் ; அகில-இந்தியச் சேவை வர்க்கங்கள் ; யூனியனின் பப்ளிக் சொர்விஸ் கமிஷன்.

71. யூனியன் பென்ஷன்கள், அதாவது, இந்தியச் சர்க்காரால் அல்லது இந்தியாவின் சஞ்சித நிதியிலிருந்து கொடுக்கலாகும் பென்ஷன்கள்.

[4]72. பார்லிமெண்டுக்கும் ராஜ்யங்களின் சட்டமன்றங்களுக்கும் ராஷ்டிரபதி, உப-ராஷ்டிரபதி இவர்களின் பதவிகளுக்கும் தேர்தல்கள் ; தேர்தல் கமிஷன்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 67-வது பதிவிற்குப் பதிலாக, கீழ்க்கண்ட பதிவை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

"67. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பார்லிமெண்டு சட்டத்தினால் அறிவிக்கும் புராதனமானவையும், சரித்திர சம்பந்தமானவையும் ஆன ஞாபகச் சின்னங்களும், பழம் பொருள் இடங்களும் சிதைவுகளும்."

[2] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 27-வது பிரிவினால், "பார்லிமெண்டு சட்டத்தினால்" என்னும் சொற்களுக்குப் பிறகு இடைச்சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டன.

[3] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[4] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், ராஜ்யங்களைக் குறிக்கும் இடங்களில் அந்த ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்களில் என்று அர்த்த விளக்கம் செய்யக்கூடாது.

ஏழாவது தபசில்

73. பார்லிமெண்டின் அங்கத்தினர்கள், ராஜ்யப் பரிஷத்தின் அக்கிராசனர், உப-அக்கிராசனர், மக்கட் சபையின் சபாநாயகர், உப-சபாநாயகர் இவர்களின் சம்பளங்களும் படிகளும்.

74. ஒவ்வொரு பார்லிமெண்டுச் சபை, ஒவ்வொரு சபையின் அங்கத்தினர்கள் கமிட்டிகள் இவற்றின் சக்திகளும் விசேஷ உரிமைகளும் பாதுகாப்புக்களும்; பார்லிமெண்டுக் கமிட்டிகளின் முன்னிலையிலோ பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட கமிஷன்களின் முன்னிலையிலோ சாட்சியம் கொடுப்பதற்கோ தஸ்தவேசுக்கள் கொணருதற்கோ நபர்கள் வந்திருக்கும்படிச் செய்தல்.

75. ராஷ்டிரபதி ராஜ்யப்பாலர்கள் இவர்களின் ஊதியங்களும் படிகளும் விசேஷ உரிமைகளும் ரஜாபற்றிய உரிமைகளும்; யூனியன் மந்திரிகளுடைய சம்பளங்களும் படிகளும்; மாபெருங். கணக்கர்-பரிசோதகருடைய சம்பளங்களும் படிகளும் ரஜா உரிமைகளும், மற்றையச் சேவை நிபந்தனைகளும்.

[1] 76. யூனியன், ராஜ்யங்கள் இவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்தல்.

77. உச்ச நீதிமன்றத்தின் அமைப்பும் ஒழுங்கும் விசாரணை-அதிகாரமும் சக்திகளும் (அம் மன்றத்தின் அவமதிப்பு உட்பட), அங்கே வாங்கப்படும் பீசுகளும்; உச்ச நீதிமன்றத்தின் முன்னிலையில் வாதம் செய்ய உரிமை உடையவர்கள்.

[2] 78. உயர் நீதிமன்றங்களின் உத்தியோகஸ்தர்களைப் பற்றியும் சேவையாளர்களைப் பற்றியுமான ஷரத்துக்கள் நீங்கலாக, உயர் நீதிமன்றங்களின் அமைப்பும் ஒழுங்கும்; உயர் நீதிமன்றங்களின் முன்னிலையில் வாதம் செய்ய உரிமை உடையவர்கள்.

[3] [79. ஓர் உயர் நீதிமன்றத்தின் விசாரணை-அதிகாரத்தை ஒரு யூனியன் ஆட்சிப்பரப்பிற்கு வியாபிக்கச் செய்தலும் அப்பரப்பிலிருந்து விலக்குதலும்.]

80. ஒரு ராஜ்யத்திற்குரிய போலீஸ் படை ஒன்றைச் சேர்ந்தவர்களின் சக்திகளையும் விசாரணை-அதிகாரத்தையும் அந்த ராஜ்யத்திற்கு வெளியேயுள்ள ஒரு பிரதேசத்திற்கு—ஆனால் ஒரு ராஜ்யத்தின் போலீஸார் அந்த ராஜ்யத்திற்கு வெளியேயுள்ள ஒரு பிரதேசம் உள்ள ராஜ்யத்தின் சர்க்காருடைய சம்மதமின்றி அப் பிரதேசத்தில் சக்திகளையும் விசாரணை-அதிகாரத்தையும் செலுத்த முடியாமலிருக்கும்படியாக—வியாபிக்கச் செய்தல்; ஒரு ராஜ்யத்தைச் சேர்ந்த போலீஸ் படைகளில் உள்ளவர்களின் சக்திகளையும் விசாரணை-அதிகாரத்தையும் அந்த ராஜ்யத்திற்கு வெளியேயுள்ள ரெயில்வேப் பிரதேசங்களுக்கு வியாபிக்கச் செய்தல்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், ராஜ்யங்களைக் குறிக்கும் இடங்களில், அந்த ராஜ்யத்தைக் குறிக்கும் இடங்கள் என்று அர்த்தம் விளக்கம் செய்யக் கூடாது.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

[3] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 29-வது பிரிவாலும் தபசிலாலும் அமைத்துகொள்ளப்பட்டது.

ஏழாவது தபசில்

[1] 81. ராஜ்யங்களிடையே மக்களின் இடமாற்றம் ; ராஜ்யங்களிடையே குவாரன்டைன்.

82. விவசாய வருமானம் அல்லாத மற்றைய வருமானதின்மீது வரிகள்.

83. ஏற்றுமதித் தீர்வைகள் உட்படச் சுங்கத் தீர்வைகள்.

84. (அ) மனிதர்கள் உட்கொள்ளும் மதுபானங்களும்,

(ஆ) அபினியும் இந்தியச் சணலும் போதை உண்டாக்கும் இதர மருந்துச் சரக்குகளும் போதைப் பொருள்களும்,

தவிரவும்—ஆனல் மதுசாரம் அல்லது இப் பதிவின் (ஆ) உபபாராவில் சேர்த்துள்ள ஒரு வஸ்து அடங்கியுள்ள மருந்துப் பொருள்களும் வண்ண நறும் பொருள்களும் உட்படவும்—இந்தியாவில் தயார் செய்யப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் புகையிலை, மற்றப் பண்டங்கள் இவற்றின் மீது கலால் தீர்வைகள்.

85. கார்ப்பொரேஷன் வரி.

86. தனி மனிதர்களுடையவும் கம்பெனிகளுடையவும் ஆன ஆஸ்திகளின், விவசாய நிலம் நீங்கலாக, மூலதன மதிப்பின்மீது வரிகள் ; கம்பெனிகளின் மூலதனத்தின்மீது வரிகள்.

87. விவசாய நிலமல்லாத மற்றைய சொத்து விஷயமாய் எஸ்டேட்டுத் தீர்வை.

88. விவசாய நிலமல்லாத மற்றைய சொத்திற்கு வாரிசு பாத்தியம் பற்றிய தீர்வைகள்.

89. ரெயில், கடல் அல்லது ஆகாய மார்க்கமாக ஏற்றிக் கொண்டு போகப்படும் பண்டங்கள் அல்லது பிரயாணிகளின் மீது ஆதி-அந்த வரி ; ரெயில்வேக் கட்டணங்கள் கேவுகளின் மீது வரிகள்.

90. பங்கு மார்க்கெட்டுகளிலும் வாய்தா மார்க்கெட்டுகளிலும் நடைபெறும் காரியங்களின்மீது ஸ்டாம்புத் தீர்வைகளல்லாதவையான மற்றைய வரிகள்.

91. மாற்று உண்டியல்கள் செக்குகள் பிராமிஸரி நோட்டுகள் வார் நாமாக்கள் பண அனுமதிச் சீட்டுகள் இன்ஷூரன்ஸ் பாலிஸிகள் பங்குகளின் மாற்றம், டிபெஞ்சர்கள் பிரதிநிதிச் சீட்டுகள் ரசீதுகள் இவை பற்றிய ஸ்டாம்புத் தீர்வை விகிதங்கள்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படுகையில், 81-வது இனத்தில், "ராஜ்யங்களிடையே குவாரன்டைன்" என்னும் சொற்களை விட்டு விவேண்டும்.

ஏழாவது தபசில்

92. சமாச்சாரப் பத்திரிகைகளின் விற்றல் அல்லது வாங்குதல் மீதும், அவைகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் மீதும் வரிகள்.

[1] [92. (அ) சமாச்சாரப் பத்திரிகைகள் நீங்கலாகப் பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல் ராஜ்யங்களிடையே வியாபாரம் அல்லது வர்த்தகம் நடைபெறுகையில் நிகழ்ந்தால் அப்படி விற்றல் அல்லது வாங்குதல் பற்றிய வரிகள்.]

93. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எதுபற்றியேனும் செய்த சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள்.

94. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எதன் பொருட்டும் விசாரணைகளும் சர்வேக்களும் புள்ளி விவரங்களும்.

95. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எது பற்றியேனும் எல்லா நீதி மன்றங்களின்—உச்ச நீதிமன்றம் தவிர—விசாரணை - அதிகாரமும் சக்திகளும் ; அட்மிரல்ட்டி விசாரணை - அதிகாரம்.

96. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எதுபற்றியேனும் கட்டணங்கள், ஆனால் ஒரு நீதிமன்றத்திலே வாங்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

[2] 97. II-வது ஜாபிதாவிலாவது III-வது ஜாபிதாவிலாவது குறிக்கப்படாத மற்றெந்த விஷயமும்—அந்த இரண்டு ஜாபிதாக்களில் எதிலும் கூறப்படாத எந்த வரியும் உட்பட.

ஜாபிதா II—ராஜ்ய ஜாபிதா

1. பொது அமைதி (ஆனால் சிவில் அதிகாரத்திற்கு உதவி புரியும் யூனியனின் கடற்படைகளின் அல்லது ராணுவப் படைகளின் அல்லது விமானப் படைகளின் அல்லது மற்றெந்த ஆயுதப் படைகளின் உபயோகம் இதில் அடங்காது).

2. போலீஸ் - ரயில்வே போலீஸும் கிராமப் போலீஸும் உட்பட.

3. நீதிநீர்வாகம் ; உச்ச நீதிமன்றத்தையும் உயர்நீதி மன்றத்தையும் தவிர மற்றெல்லா நீதிமன்றங்களின் அமைப்பும் ஒழுங்கும் ; உயர் நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்களும் சேவையாளர்களும் ; வாடகை அல்லது குத்தகைக் கோர்ட்டுகள் ரெவின்யூ கோர்ட்டுகள் இவற்றின் நடைமுறையில் உச்ச நீதிமன்றம் தவிர மற்றெல்லா நீதிமன்றங்களிலும் வாங்கப்படும் பீசுகள்.

4. சிறைச்சாலைகளும் சீர்திருத்தச் சாலைகளும், பார்ஸ்டல் ஸ்தாபனங்களும் அவற்றைப் போன்ற இதர ஸ்தாபனங்களும், அவற்றில் வைக்கப்பட்டிருப்பவர்களும் ; சிறைச்சாலைகளையும் இதர ஸ்தாபனங்களையும் உபயோகித்தலைப் பற்றிய மற்றைய ராஜ்யங்களுடன் ஏற்பாடுகள்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஆறும் திருத்தச்) சட்டத்தின் 2-வது பிரிவினால் இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

ஏழாவது தபசில்

5. ஸ்தல ஆட்சி, அதாவது, ஸ்தல சுயாட்சி அல்லது கிராம நிர்வாகக் காரியத்திற்காக நகராட்சி ஸ்தாபனங்கள் அபிவிருத்தி ஸ்தாபனங்கள் ஜில்லா போர்டுகள் சுரங்கக் குடியேற்ற அதிகாரிகள் மற்ற ஸ்தல அதிகாரிகள் இவற்றின் அமைப்பும் சக்திகளும்.

6. பொது ஆரோக்கியமும் சுகாதாரமும்; ஆஸ்பத்திரிகளும் டிஸ்பென்ஸரிகளும்.

7. இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்களுக்குச் செய்யப்படும் யாத்திரைகளல்லாதனவான மற்ற யாத்திரைகள்.

8. போதை தரும் மதுசாரங்கள், அதாவது, போதை தரும் மது சாரங்களை உற்பத்தி செய்தல் தயாரித்தல் வைத்திருத்தல் அனுப்புதல் வாங்குதல் விற்பனை செய்தல்.

9. ஊனமுற்றோருக்கும் வேலைக்குத் தகுதியற்றவருக்கும் வசதி அளித்தல்.

10. புதைத்தலும் இடுகாடுகளும்; தகனம் செய்தலும் சுடுகாடுகளும்.

11. I-வது ஜாபிதாவின் 63, 64, 65, 66-வது பதிவுகளிலும் III-வது ஜாபிதாவின் 25-வது பதிவிலும் உள்ள ஷரத்துகளுக்கு உட்பட்டு—சர்வ கலாசாலைகள் உட்பட—கல்வி.

12. ராஜ்யத்தின் மேல் அதிகாரத்திற்கு உட்பட்ட அல்லது அதன் செலவில் நடைபெறும் புத்தக நிலையங்களும் மியூஸியங்களும் அவைபோன்ற மற்றைய ஸ்தாபனங்களும்; தேசீய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று பார்லிமெண்டால் சட்டத்தினுல் [1][அல்லது அதன்கீழ்] அறிவிக்கப்படுபவை அல்லாத மற்றையப் பூர்வீகமானவையும் சரித்திரப் பிரசித்தி பெற்றவையுமான ஞாபகச் சின்னங்களும் தஸ்தவேசுக்களும்.

13. போக்குவரத்து மார்க்கங்கள், அதாவது, பாட்டைகள், பாலங்கள் ஓடத்துறைகள், I-வது ஜாபிதாவில் குறிப்பிட்டிராத மற்றையப் போக்கு வரத்து மார்க்கங்கள்; முனிசிபல் டிராம்வேக்கள்; ரோட்வேக்கள்; உள்நாட்டு நீர்ப் பாதைகளும் அந்த நீர்ப்பாதைகள் சம்பந்தமாக I-வது ஜாபிதாவிலும் III-வது ஜாபிதாவிலும் உள்ள ஷரத்துக்களுக்கு உட்பட்டு அவைகளில் நடைபெறும் போக்குவரத்தும்; யந்திர சக்தியினுல் செலுத்தப்படும் வண்டிகளல்லாத மற்றைய வண்டிகள்.

14. விவசாயம்—விவசாயக் கல்வியும் ஆராய்ச்சியும் தாவரத் தொத்து நோய்ப் பாதுகாப்பு, தாவர நோய்த் தடை உட்பட.

15. கால்நடைகளைப் பேணுதலும் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும், பிராணி நோய்களைத் தடுத்தலும்; மிருக வைத்தியப் பயிற்சியும் வைத்தியமும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 27-வது பிரிவினுல், "பார்லிமெண்டால் சட்டத்தினுல்" என்னும் சொகளுக்குப் பிறகு இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

ஏழாவது தபசில்

16. கால்நடைப் பவுண்டுகளும், கால்நடைகள் அத்து மீறுவதைத் தடைப்படுத்துதலும்.

17. தண்ணீர், அதாவது, I-வது ஜாபிதாவின் 56-வது பதிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, தண்ணீர் சப்ளை, நீர்ப் பாசனமும் கால்வாய்களும், வடிகால்களும், கரைகளும் தண்ணீர்த் தேக்கமும் நீர்ச்சக்தியும்.

18. நிலம், அதாவது, நிலத்திலோ, நிலத்தின்மீதோ உள்ள உரிமைகள் நிலச் சுவான்தாருக்கும் குடியானவனுக்கும் உள்ள சம்பந்தம் உட்படக் காணியாட்சி முறைகளும் குத்தகை வசூலும்; விவசாய நிலத்தை மாற்றுதலும் பராதீனம் செய்தலும்; நில அபிவிருத்தியும் விவசாயக் கடன்களும்; குடியேற்றம்.

19. காடுகள்.

20. காட்டு மிருகங்களையும் பறவைகளையும் பாதுகாத்தல்

21. மீன் பண்ணைகள்.

22. I-வது ஜாபிதாவின் 34-வது பதிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டுக் கோர்ட் ஆப் வார்ட்ஸ்கள்; வில்லங்கத்திற்கு உட்பட்டவைகளும் ஜப்தி செய்யப்பட்டவைகளுமான எஸ்டேட்டுகள்.

23. யூனியனின் மேல் அதிகாரத்திற்கு உட்பட்டு முறைப்படுத்துதல் சம்பந்தமாகவும் அபிவிருத்தி செய்தல் சம்பந்தமாகவும் I-வது ஜாபிதாவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு சுரங்கங்களை முறைப்படுத்துதலும் கனிப்பொருளை அபிவிருத்தி செய்தலும்.

24. I-வது ஜாபிதாவின் [1][7-வது, 52-வது பதிவுகளின்] ஷரத்துக்களுக்கு உட்பட்டு தொழில்கள்.

25. எரிவாயு, எரிவாயு உற்பத்திச்சாலைகள்.

26. III-வது ஜாபிதாவின் 33-வது பதிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ராஜ்யத்திற்குள் வியாபாரமும் வாணிபமும்.

27. III-வது ஜாபிதாவின் 33-வது பதிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, பண்டங்களின் உற்பத்தி, ஸப்ளை, வினியோகம்.

28. மார்க்கெட்டுகளும் சந்தைகளும்.

29. எடைகளும் அளவைகளும்—அலகுகளை ஏற்படுத்துதல் தவிர.

30. கடன் கொடுக்கும் தொழிலும் கடன் கொடுப்பவர்களும்; விவசாயிகளின் கடன் நிவாரணம்.

31. விடுதிகளும் விடுதிக்காரர்களும்.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 28-வது பிரிவினால், "52-வது பதிவின்" என்பதற்குப் பதிலாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

ஏழாவது தபசில்

32. I-வது ஜாபிதாவில் குறிப்பிட்டிருப்பவையல்லாதன வான மற்றையக் கார்ப்பொரேஷன்களையும் சர்வகலாசாலை களையும் சட்டப்படி இணைத்தலும் முறைப்படுத்துதலும் கலைத் தலும்; சட்டப்படி இணைக்கப்பட்டிராத வியாபார, இலக் கிய, விஞ்ஞான, சமய சங்கங்களும் கழகங்களும், மற்றையச் சங்கங்களும் கழகங்களும்; கூட்டுறவுச் சங்கங்கள்.

33. நாடகச் சாலைகளும் நாடக ஆட்டங்களும்; I-வது ஜாபிதாவின் 60-வது பதிவின் ஷரத்துக்களுக்கு உட் பட்டுச் சினிமாக்கள்; விளையாட்டுக்கள் வேடிக்கைகள் கேளிக்கைகள்.

34. பந்தயம் ஒட்டுதலும் சூதாடுதலும்.

35. ராஜ்யத்தினிடம் நிலைபெற்றிருக்கும் அல்லது அதன் ஸ்வாதீனத்திலுள்ள பணிகளும் நிலங்களும் கட்டங்களும்.

1 * * * * * *

37. பார்லிமெண்டால் செய்யப்படும் ஒரு சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ராஜ்யத்தின் சட்டமன்றத்திற் குத் தேர்தல்கள்.

38. ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் அங்கத்தினர்கள், சட்டசபையின் சபாநாயகர் உப-சபாநாயகர், சட்டபரிஷத்து ஒன்று இருந்தால் அதன் அக்கிராசனர் உப அக்ராசனர் இவர் களின் சம்பளங்களும் படிகளும்.

39. சட்டசபை, அதன் அங்கத்தினர்கள் கமிட்டிகள், சட்டபரிஷத்து ஒன்று இருந்தால் அப் பரிஷத்து அதன் அங்கத் தத்தினர்கள் கமிட்டிகள் இவற்றின் சக்திகளும் விசேஷ உரி மைகளும், பாதுகாப்புகளும்; ராஜ்யத்தின் சட்டமன்றத்தின் கமிட்டிகளின் முன்னிலையில் சாட்சியம் கொடுப்பதற்கோ தஸ்தவேசுக்கள் கொணருதற்கோ நபர்கள் வந்திருக்கும்படி செய்தல்.

40. ராஜ்யத்தின் மந்திரிகளுடைய சம்பளங்களும் படி களும்.

41. ராஜ்யத்தின் பொதுச் சேவைவர்க்கங்கள்; ராஜ் யத்தின் பப்ளிக் சொர்விஸ் கமிஷன்.

42. ராஜ்யப் பென்ஷன்கள், அதாவது, ராஜ்யத்தினுல் அல்லது ராஜ்யத்தின் சஞ்சித நிதியிலிருந்து கொடுக்கலாகும் பென்ஷன்கள்.

43. ராஜ்யத்தின் பொதுக் கடன்.

44. புதையல்.

45. நிலவருமானம்—வரி விதித்தலும் வசூலித்தலும் நில தஸ்தவேசுக்களைப் பதிந்து வைத்தல், அரசிறை விஷயங் களுக்கான சர்வே, நில உரிமைகள் ரிக்கார்டுகள், அரசிறை களைப் பராதீனம் செய்தல் இவை உட்பட.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் -வது பிரிவினுல் 36-வது பதிவு விட்டுவிடப்பட்டது.

ஏழாவது தபசில்

46. விவசாய வருமானத்தின்மீது வரிகள்.

47. விவசாய நிலத்திற்கு வாரிசு பாத்தியம் பற்றிய தீர்வைகள்.

48. விவசாய நிலம் விஷயமாய் எஸ்டேட்டுத் தீர்வை.

49. நிலங்கள் கட்டடங்கள் இவற்றின்மீது வரிகள்.

50. கனிப்பொருள் பற்றிய உரிமைகளின்மீது வரிகள்—கனிப்பொருள் அபிவிருத்தி பற்றிப் பார்லிமெண்டு சட்டத்திஞல் விதிக்கும் எந்த வரையறைகளுக்கேனும் உட்பட்டு.

51. ராஜ்யத்தில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பின்வரும் பண்டங்களின்மீது கலால் தீர்வைகளும், இந்தியாவில் வேறெங்கேனும் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் அதே மாதிரியான பண்டங்களின் மீது அந்த விகிதங்களின்படியோ அல்லது குறைந்த விகிதங்களின்படியோ எதிர்த்தீர்வைகள்:—

(அ) மனிதர்கள் உட்கொள்ளும் மதுபானங்கள்;

(ஆ) அபினியும் இந்தியச் சணலும் போதை உண்டாக்கும் இதர மருந்துச் சரக்குகளும் போதைப் பொருள்களும்;

ஆனல் மதுசாரம் அல்லது இப் பதிவின் (ஆ) உப-பாராவில் சேர்த்துள்ள ஒரு வஸ்து அடங்கியுள்ள மருந்துப் பொருள்களும் வண்ணநறும் பொருள்களும் நீங்கலாக.

52. ஸ்தலப்பிரதேசத்திற்குள் செலவழிப்பதற்கோ உபயோகிப்பதற்கோ அல்லது விற்பனே செய்வதற்கோ பண்டங்களேக் கொண்டுவருகையின்மீது வரிகள்.

53. மின்சாரத்தின் உபயோகம் அல்லது விற்பனேயின் மீது வரிகள்.

[1][54. சமாச்சாரப் பத்திரிகைகள் அல்லாதனவான மற்றையப் பண்டங்களின் விற்றல் அல்லது வாங்குதல் மீது I-ம் ஜாபிதாவின் 92 (அ) பதிவிலுள்ள ஷரத்துக்களுக்குட்பட்டு வரிகள்.]

55. சமாச்சாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் அல்லாதனவான மற்றைய விளம்பரங்கள் மீது வரிகள்.

56. ரஸ்தா மார்க்கமாக அல்லது உள்நாட்டு நீர்ப் பாதைகள் மூலமாக ஏற்றிக் கொண்டு போகப்படும் பண்டங்களின் மீதும் பிரயாணிகளின்மீதும் வரிகள்.

57. ரஸ்தாக்களில் உபயோகிக்கப்படத்தக்க வாகனங்களின் மீது—டிராம் வண்டிகள் உட்பட—யந்திர சக்தியினுல் செலுத்தப்பட்டாலும் செலுத்தப்படாவிட்டாலும்—வரிகள், III-வது ஜாபிதாவின் 35-வது பதிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஆறும் திருத்தச்) சட்டத்தின் 2-வது பிரிவினுல், 54-வது அசல் பதிவிற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

ஏழாவது தபசில்

58. பிரயாணிகளின்மீதும் படகுகளின்மீதும் வரிகள்.

59. சுங்கங்கள்.

60. தொழில்கள் வியாபாரங்கள் அலுவல்கள் வேலைகள் இவைகளின் மீது வரிகள்.

61. தலைக்கட்டு வரிகள்.

62. போக்கியப் பொருள்களுக்கு வரிகள்—வேடிக்கைகள் கேளிக்கைகள் பந்தயம் ஓட்டுதல் சூதாட்டம் இவைகளின்மீது விதிக்கப்படும் வரிகள் உட்பட.

63. ஸ்டாம்புத் தீர்வை விதிதங்கள் சம்பந்தமாய் 1-வது ஜாபிதாவின் ஷரத்துக்களில் குறிப்பிட்டிருப்பவையல்லாதன வான மற்றைய தஸ்தவேசுக்கள் விஷயமாய் ஸ்டாம்புத் தீர்வை விதிதங்கள்.

64. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எதுபற்றியேனும் செய்த சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள்.

65. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எதுபற்றியேனும் எல்லா நீதிமன்றங்களின்—உச்ச நீதிமன்றம் தவிர—விசாரணை அதிகாரமும் சக்திகளும்.

66. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எதுபற்றியேனும் கட்டணங்கள், ஆனால் ஒரு நீதிமன்றத்தில் வாங்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

ஜாபிதா III—கூட்டு ஜாபிதா

1. கிரிமினல் சட்டம்—இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் இந்தியப் பீனல் கோடில் சேர்க்கப்பட்ட சகல விஷயங்களும் உட்படவும் ஆனால் I-வது ஜாபிதா அல்லது II-வது வது ஜாபிதாவில் குறிப்பிட்ட விஷயங்களில் எதுபற்றியேனும் செய்த சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள் நீங்கலாக சிவில் சக்திக்குத் துணையாக யூனியனின் கடற்படைகள் ராணுவப்படைகள் அல்லது விமானப்படைகளையாவது மற்றெந்த ஆயுதப்படைகளையாவது உபயோகித்தல் நீங்கலாகவும்.

2. கிரிமினல் வழக்குமுறை—இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த சகல விஷயங்களும் உட்பட.

3. ஒரு ராஜ்யத்தின் பந்தோபஸ்து, பொது, அமைதியைப் பாதுகாத்தல் அல்லது சமுதாயத்திற்கு அவசியமான சப்ளைகளையும் சேவைகளையும் பாதுகாத்தல் இவை பற்றிய காரியங்களுக்காகத் தடைப் பாதுகாவல்[1] அத்தகைய பாதுகாவலுக்கு உட்பட்டவர்கள்.

4. கைதிகளையும் குற்றம் சாட்டப்பட்டவர்களையும் இந்த ஜாபிதாவின் 3-வது பதிவில் குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தடைப் பாதுகாவலுக்கு உட்படுத்தப்பட்டவர்களையும் ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்கு அகற்றுதல்.

---

[1] ஜம்மு-காஷ்மீர் ராஜ்யத்திற்குப் பிரயோகப்படாது.

ஏழாவது தபசில்

5. விவாகமும் விவாக ரத்தும், சிசுக்களும், மைனர் களும் ; ஸ்வீகாரம் ; உயில், உயிலற்ற வாரிசுரிமை, வாரிசுரிமை ; அவிபக்த குடும்பமும் பாகப் பிரிவினையும் ; இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக நீதிமன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட கட்சிக் காரர்கள் எந்தெந்த விஷயங்களில் தம்மினச் சட்டத்திற்கு உட்பட்டிருந்தார்களோ அவ் விஷயங்கள் எல்லாம்.

6. விவசாய நிலம் அல்லாத மற்றையச் சொத்தை மாற்றுதல் ; பத்திரங்களையும் தஸ்தவேசுக்களையும் பதிவு செய்தல்.

7. ஒப்பந்தங்கள்—கூட்டுப்பங்கு ஏஜென்ஸி, பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தங்கள், மற்றைய வகை விசேஷ ஒப்பந்தங்கள் உட்படவும்—விவசாய நிலம் பற்றிய ஒப்பந்தங்கள் நீங்கலாகவும்.

8. வழக்குத் தொடரலாகும் தவறுகள்.

9. வியாபார முறிவும் திவாலாவும்.

10. டிரஸ்டும் டிரஸ்டிகளும்.

11. அட்மினிஸ்ட்ரேட்டர்-ஜெனரல்களும், அபிஷல் டிரஸ்டிகளும்.

12. சாட்சியமும் பிரமாணங்களும் ; சட்டங்களையும் பொதுக்காரியங்களையும் ரிக்கார்டுகளையும் நீதிமன்ற நடவடிக்கைகளையும் அங்கீகரித்தல்.

13. சிவில் வழக்கு முறை—இந்த அரசியல் அமைப்பின் தொடக்கத்தில் சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் சேர்க்கப் பட்ட சகல விஷயங்களும் உட்பட; காலாவதி; மத்தியஸ்தம்

14. நீதிமன்ற அவமதிப்பு ; ஆனல் உச்ச நீதிமன்ற அவமதிப்பு நீங்கலாக.

15. நாடோடிகளாகத் திரிதல் ; நிலையற்றவராயும் நாடு மாறியவராயும் உள்ள ஜாதியார்கள்.

16. பைத்தியமும் சித்த சுவாதீனமின்மையும் ; பைத்தியக்காரர்களையும் சித்த சுவாதீனமற்றவர்களையும் ஏற்றுக் கொள்வதற்கோ அவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கோ ஆன இடங்கள் உட்பட.

17. மிருக இம்சைத் தடுப்பு.

18. உணவுப் பொருள்கள் மற்றையப் பண்டங்கள் இவற்றின் கலப்படம்.

19. மருந்துச் சரக்குகளும் விஷங்களும்—அபினி சம்பந்தமாக I-வது ஜாபிதாவின் 59-வது பதிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு.

20. பொருளாதார விஷயத்திலும் சமூக விஷயத்திலும் திட்டங்கள் அமைத்தல்.

21. வாணிப விஷயமாகவும் தொழில் விஷயமாகவும் உள்ள ஏகபோக உரிமைகளும் கூட்டு ஸ்தாபனங்களும் டிரஸ்டுகளும்.

ஏழாவது தபசில்

22. தொழிற் சங்கங்கள் ; தொழிற் பற்றியும் தொழில் செய்தல் பற்றியும் ஏற்படும் தகராறுகள்.

23. சமூகப் பாதுகாப்பும் சமூக இன்ஷூரன்ஸும் ; வேலையில் இருத்தலும் வேலையில் இல்லாமையும்.

24. தொழிலாளர்களின் க்ஷேமம்— சேவை முறைகள், பிராவிடண்டு பண்டுகள். எஜமானர்களின் கடப்பாடு, வேலை யாட்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்ட ஈடு, தேக அசக்தம் காரணமாகவும் முதுமை காரணமாகவும் கொடுக்கப்படும் பென்ஷன்கள், கருத்தரித்தவர்களுக்குச் சகாயம் இவை உட் பட.

25. தொழிலாளர்களுக்கு வேலை சம்பந்தமான பயிற்சி யும் தொழில் முறைப் பயிற்சியும்.

26. சட்டம், வைத்தியம் மற்றெய்த தொழில்கள்.

27. இந்தியா பாகிஸ்தானம் ஆகிய டொமினியன்களை நிலைநாட்டியதன் காரணமாகத் தங்களுடைய ஆதி வாசஸ் தலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பவர்களுக்குப் பரிகார மும் புனர்வாழ்விப்பும்.

28. தருமங்களும் தரும ஸ்தாபனங்களும், தருமம் மதம் இவை பற்றிய நிதிகளும் மத ஸ்தாபனங்களும்.

29. தொத்து வியாதிகளும் அல்லது ஒட்டு வியாதிகளும் மனிதர்களையோ பிராணிகளையோ அல்லது தாவரங்களையோ பாதிக்கும் பரவு நோய்களும் ஒரு ராஜ்யத்திலிருந்து மற் றொரு ராஜ்யத்திற்கு வியாபிக்காமல் தடுத்தல்.

30. ஜனன மரணப் புள்ளி விவரங்கள்—ஜனனங்களை யும் மரணங்களையும் பதிவு செய்தல் உட்பட.

31. பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டத்திஞல் அல் லது ஏற்கனவேயுள்ள சட்டத்திஞல் அல்லது அதன்கீழ்ப் பெருந்துறைமுகங்கள் என்று அறிவிக்கப்பட்டவை அல்லாத மற்றைய துறைமுகங்கள்.

32. யந்திர சக்தியிஞல் ஓட்டப்படும் மரக்கலங்கள் சம் பந்தமாக மட்டும் உள்நாட்டு நீர்ப்பாதைகளில் கப்பல்களும் அவற்றைச் செலுத்துதலும் ; அத்தகைய நீர்ப்பாதைகளில் வழியைப் பற்றிய விதி ; தேசிய நீர்ப்பாதைகள் சம்பந்தமாய் 1-வது ஜாபிதாவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு உள் நாட்டு நீர்ப்பாதைகளில் பிரயாணிகளையும் பண்டங்களையும் ஏற்றிச் செல்லுதல்.

[1][33. (அ) பொது நலனின் பொருட்டு ஒரு தொழிலை யூனியனின் மேல் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட் டிருக்கும்படிச்செய்தல் உசிதமாய் இருக்கு மெனப் பார்லிமெண்டு சட்டத்திஞல் அறிவித்தால் அத்தொழிலின் உற்பத்திப் பொருள்கள், அப்பொருள்களைப் போலவே இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள்.

(ஆ) உட் கொள்ளலாகும் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்கள் உட்பட உணவுப் பொருள்கள்,

[1] 1954-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (மூன்றும் திருத்தச்) சட்டத்திஞல் அமைத்துக்கொள்ளப்பட்டது.

ஏழாவது தபசில்

(இ) பிண்ணுக்கு இறுக்கப்பட்ட மற்றைய பொருள்கள் உட்பட கால் நடைத் தீவனம்,

(ஈ) விதை எடுத்த அல்லது எடுக்காத கச்சாப் பருத்தி பருத்தி விதை,

(உ) கச்சாச் சணல்

இவற்றில் வியாபாரமும் வாணிபமும் அப்பொருள் களின் உற்பத்தியும் சப்ளையும் வினியோகமும்.

34. விலைக் கட்டுப்பாடு.

35. யந்திர சக்தியினுல் செலுத்தப்படும் வண்டிகள்— அத்தகைய வண்டிகளின்மீது வரிகள் விதிப்பதற்கான கோட் பாடுகள் உட்பட.

36. தொழிற்சாலைகள்.

37. கொதிகலங்கள்.

38. மின்சாரம்.

39. சமாச்சாரப் பத்திரிகைகளும் புத்தகங்களும் அச்சகங் களும்.

[1]40. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பார்லி மெண்டுச் சட்டத்தினுல் [2][அல்லது அதன்கீழ்] அறிவிப்பவை அல்லாதனவான மற்றையப் பழம்பொருள் இடங்களும் சிதைவுகளும்.

41. அகதிச் சொத்து என்று சட்டத்தினுல் தெரிவிக்கப் பட்ட சொத்தை (விவசாய நிலம் உட்பட) பத்திரமாகப் பாதுகாத்தல் நிர்வகித்தல் பட்டுவாடா செய்தல்.

[2][42. சொத்தினை நிரந்தரமாக அல்லது தாற்காலிகமாகக் கைப்பற்றுதல்.]

43. வரிகள், மற்றைய பொதுக் கோரிக்கைகள் இவற் றைப் பற்றிய தாவாத் தொகைகளை ஒரு ராஜ்யத்தில் வசூலித் தல்—அந்த ராஜ்யத்திற்கு வெளியே எழும் நிலவரிப் பாக்கி களும் அத்தகைய பாக்கிகளைப்போல் வசூலிக்கலாகும் தொகைகளும் உட்பட.

44. நீதிமன்ற ஸ்டாம்புகள் ரூபமாக வசூலிக்கப்படும் தீர்வைகள் அல்லது பீசுகள் அல்லாத மற்றைய ஸ்டாம்புத் தீர்வைகள்; ஆனல் ஸ்டாம்புத் தீர்வை விதிதங்கள் நீங்கலாக.

45. II-வது ஜாபிதாவிலாவது III-வது ஜாபிதாவிலாவது குறிப்பிட்ட விஷயங்களில் எதன் பொருட்டும் விசாரணை களும் புள்ளி விவரங்களும்.

46. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்களில் எதுபற்றி யேனும் எல்லா நீதிமன்றங்களின்—உச்ச நீதிமன்றம் தவிர —விசாரணை-அதிகாரமும் சக்திகளும்.

47. இந்த ஜாபிதாவில் உள்ள விஷயங்களில் எது பற்றியேனும் கட்டணங்கள், ஆனல் ஒரு நீதிமன்றத்தில் வாங்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

---

[1] 1956-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (ஏழாம் திருத்தச்) சட்டத்தின் 27-வது பிரிவினுல், "பார்லிமெண்டுச சட்டத்தினுல்" என்னும் சொற்களுக்குப் பிறகு இடைச் சேர்ப்பாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

[2] மேற்படிச் சட்டத்தின் 26-வது பிரிவினுல் 42-வது அசல் பதிவிற்குப் பதி லாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

எட்டாவது தபசில்

[பிரிவுகள் 344 (1). 351]

பாஷைகள்,

1. அஸ்ஸாமியம்.
2. வங்காளி.
3. குஜராத்தி,
4. இந்தி.
5. கன்னடம்.
6. காஷ்மீரி.
7. மலையாளம்.
8. மராத்தி.
9. ஒரியா.
10. பஞ்சாபி.
11. சமஸ்கிருதம்.
12. தமிழ்.
13. தெலுங்கு.
14. உருது.

[1]ஒன்பதாவது தபசில்

[பிரிவு 31 (ஆ).]

குறிப்பிட்ட சட்டங்களையும் ரெகுலேஷன்களையும் செல்லுபடியாக்குதல்

1. பீஹார் நிலச் சீர்திருத்தச் சட்டம், 1950 (பீஹார் 1950-ம்வருத்து XXX-ம் சட்டம்).

2. பம்பாய் குடிவார—விவசாய நிலச் சட்டம், 1948 (பம்பாய் 1948-ம்வருத்து LXVII-ம் சட்டம்).

3. பம்பாய் மலேகி உரிமைத் திட்ட ஒழிப்புச் சட்டம், 1949 (பம்பாய் 1949-ம்வருத்து LXI-ம் சட்டம்).

4. பம்பாய்த் தாலுக்தாரி உரிமைத் திட்ட ஒழிப்புச் சட்டம், 1949 (பம்பாய் 1949-ம்வருத்து LXII-ம் சட்டம்).

5. பாஞ்ச் மஹல்கள் மேஹவாஸி உரிமைத் திட்ட ஒழிப்புச் சட்டம், 1949 (பம்பாய் 1949-ம்வருத்து LXIII-ம் சட்டம்).

6. பம்பாய் கோதி ஒழிப்புச் சட்டம், 1950 (பம்பாய் 1950-ம்வருத்து VI-ம் சட்டம்.

7. பம்பாய்ப் பர்காஞ—குல்கர்ணி வதன் ஒழிப்பு சட்டம், 1950 (பம்பாய் 1950-ம்வருத்து LX-ம் சட்டம்).

8. மத்தியப் பிரதேசச் சொந்த உரிமைகள் (எஸ்டேட்டுகள், மஹல்கள், பராதீன நிலங்கள்) ஒழிப்புச் சட்டம், 1950 (மத்தியப் பிரதேச 1951-ம்வருத்து I-ம் சட்டம்).

9. மதராஸ் எஸ்டேட்டுகள் (ஒழிப்பதையும் ரயத்துவாரியாக மாற்றுவதையும் பற்றிய) சட்டம், 1948 (மதராஸ் 1948-ம்வருத்து XXVI-ம் சட்டம்).

10. மதராஸ் எஸ்டேட்டுகள் (ஒழிப்பதையும் ரயத்துவாரியாக மாற்றுவதையும் பற்றிய) திருத்தச் சட்டம் 1950 (மதராஸ் 1950-ம்வருத்து I-ம் சட்டம்).

11. உத்தரப் பிரதேச ஜமீன்தாரி ஒழிப்பும்—நிலச் சீர் திருத்தமும் பற்றிய சட்டம், 1950 (உத்தரப் பிரதேச 1951-ம்வருத்து I-ம் சட்டம்).

12. ஹைதராபாத் (ஜாகீர் ஒழிப்பு) ரெகுலேஷன், 1358-ம் பசலி (1358-ம் பசலியின் XIX-ம் நம்பர்).

---

[1] 1951-ம் வருஷத்திய அரசியல் அமைப்பு (முதல் திருத்தச்) சட்டத்தின் 14-வது பிரிவினால் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

ஒன்பதாவது தபசில்

13. ஹைதராபாத் ஜாகீர் (மாற்ற) ரெகுலேஷன், 1359-ம் பசலி (1359-ம் பசலியின் XXV-ம் நம்பர்).[1]

[2][14. பீஹார் இடம் பெயர்ந்தோர் புனர்வாழ்வு (நிலம் பெறுதல் பற்றிய) சட்டம் 1950 (பீஹார் 1950-ம்ஹுத்து XXIII சட்டம்).

15. ஐக்கிய மாகாணங்கள் நிலம் பெறுதல் (அகதிகள் புனர் வாழ்வுபற்றிய சட்டம், 1948 (ஐ. மா. 1948-ம் ஹுத்து XXVI-ம் சட்டம்).

16. இடம் பெயர்ந்தோரை மீண்டும் குடியேற்றுதல் (நிலம் பெறுதல் பற்றிய) சட்டம், 1948 (1948-ம்ஹுத்து LX-ம் சட்டம்).

